கம்பர் தரும்

# ராமாயணம்

இரண்டாம் பாகம்

ஆரணிய - கிஷ்கிந்தா காண்டங்கள்

டி. கே. சி.

# கம்பர் தரும்

# ராமாயணம்

## இரண்டாம் பாகம்

ஆரணிய – கிஷ்கிந்தா காண்டங்கள்

பதிப்பாசிரியர்:

டி. கே. சிதம்பரநாத முதலியார்

MADRAS

பொதிகைமலைப் பதிப்பு
திருக்குற்றாலம் - தென்காசி
1954

1954-ம் வருஷப் பதிப்பு

விலை ரூபா ஆறு

பதிப்புரிமை பெற்றது

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| | முகவுரை | i |
| | கடவுள் தத்துவம் | vii |
| | ஆரணிய காண்டம் | |
| 1. | கடவுள் வாழ்த்து | .... 3 |
| 2. | அகத்தியப் படலம் | .... 6 |
| 3. | சடாயு காண்படலம் | ... 59 |
| 4. | சூர்ப்பனகைப் படலம் | ... 100 |
| 5 | கரன் வதைப்படலம் | .. 172 |
| 6. | மாரீசன் வதைப்படலம் | ... 257 |
| 7. | சடாயு உயிர்நீத்த படலம் | .... 329 |

பக்கம்

## கிஷ்கிந்தா காண்டம்

1. கடவுள் வாழ்த்து ... 417

2. மராமரப் படலம் ... 423

3. வாலி வதைப்படலம் ... 469

அனுபந்தம - 1. கதைக் குறிப்பு .... 529

அனுபந்தம - 2. திருத்தங்கள் ... 533

பாட்டு முதற்குறிப்பு அகராதி .... 543



1882 — 1954

# முகவுரை

முதலில் நாம் அயோத்தி நகரத்திலிருந்தோம். அங்கிருந்து ராம லக்ஷ்மணர் விஸ்வாமித்திரர் ஆகிய மூவரோடும் புறப்பட்டோம். ராமன் தாடகையை வதஞ் செய்தான் [illegible] த்தோம். விஸ்வாமித்திர [illegible] சிறப்பாய் நடந்தது. அதன்பின் அகலிகை கௌதமரோடு [illegible] பார்த்தோம். கடைசியாக மிதிலா நகரத்துக்கு வந்தோம். ராமனுக்கும் சீதைக்கும் கலியாணம் நடந்தது. மிதிலா நகரத்தை விட்டுப் புறப்பட்டு, அயோத்திக்குத் திரும்புகிறோம்.

பூர்வ கதை

அங்கே கைகேசியின் சூழ்ச்சி நிறைவேறுகிறது. ராமன் காட்டுக்குப் போகிறதென்று ஏற்பட்டு விடுகிறது. சித்திரகூட பர்வதமே போய்ச் சேருகிறான் அவன்; சீதை லக்ஷ்மணன் இருவரோடும் அங்கே சுகமாக இருக்கிறான்.

சிலநாள் கழியவும் சித்திரகூடத்துக்கே வந்துவிட்டான் பரதன் - அயோத்தி மக்களோடு. பரதன் ராமனை அழைக்கிறான், பட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படியாக. ராமன் பரதனைப் பார்த்துச் சொல்லுகிறான்: "தந்தையின் வார்த்தையை நீயும் காப்பாற்ற

கன்னித் தமிழேபோல்
கம்பன் கவியேபோல்

மன்னும் பொதிகை
மலையேபோல் — பன்னுநம்

நாடு மகிழச்
சிதம்பர நாதநண்பா

நீடுநீ வாழ்க
நிலத்து!

— கவிமணி

# முகவுரை

முதலில் நாம் அயோத்தி நகரத்திலிருந்தோம். அங்கிருந்து ராம லக்ஷ்மணர் விஸ்வாமித்திரர் ஆகிய மூவரோடும் புறப்பட்டோம். ராமன் தாடகையை வதஞ் செய்தான்; அதைப் பார்த்தோம். விஸ்வாமித்திரருடைய வேள்வி சிறப்பாய் நடந்தது. அதன்பின், அகலிகை கௌதம ரிஷியோடு ஒத்து வாழுவதைப் பார்த்தோம். கடைசியாக மிதிலா நகரத்துக்கு வந்தோம். ராமனுக்கும் சீதைக்கும் கலியாணம் நடந்தது. மிதிலா நகரத்தை விட்டுப் புறப்பட்டு, அயோத்திக்குத் திரும்புகிறோம்.

பூர்வ கதை

அங்கே கைகேசியின் சூழ்ச்சி நிறைவேறுகிறது. ராமன் காட்டுக்குப் போகிறதென்றும் ஏற்பட்டு விடுகிறது. சித்திரகூட பர்வதமே போய்ச் சேருகிறான் அவன்; சீதை லக்ஷ்மணன் இருவரோடும் அங்கே சுகமாக இருக்கிறான்.

சிலநாள்க் கழியவும் சித்திரகூடத்துக்கே வந்துவிட்டான் பரதன் - அயோத்தி மக்களோடு. பரதன் ராமனை அழைக்கிறான், பட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படியாக. ராமன் பரதனைப் பார்த்துச் சொல்லுகிறான்: ''தந்தையின் வார்த்தையை நீயும் காப்பாற்ற

வேண்டியதுதானே? பதினான்கு வருஷம் வனவாசஞ் செய்துவிட்டு அயோத்திக்கு வருகிறேன். அதுவரை ராஜ்ய பரிபாலனத்தை நீயே செய்யவேண்டும்" என்பதாக. வேறு வழியில்லாமல் பரதன் ராமனது பாதுகைகளை, அயோத்திக்குக் கொண்டு போகிறான்; அந்தப் பாதுகைகளுக்குப் பட்டமும் கட்டிவிடுகிறான்.

**வனவாச ஆரம்பம்**

ராமன் பார்த்தான்: சித்திரகூட பர்வதத்திலிருந்தால் வனவாசம் என்றெல்லாம் ஆகாது, அயோத்தி நகரத்தார் அடுக்கடுக்காய் வந்துகொண்டிருப்பார்கள். மிதிலை நகரத்தார் வரவேண்டியதுதான் பாக்கி என்று எண்ணிச் சித்திரகூட பர்வதத்தை விட்டுப் புறப்படுகிறான். நகர சம்பந்தம் இப்போதுதான் விட்டு நீங்குகிறது. வனவாசம் என்பது இனிமேல்த்தான். இங்கே ஆரம்பிக்கிறது ஆரணிய காண்டம்.

**தண்ட காரண்யம்**

தண்டகாரண்யம் என்று வளம் பொருந்திய விசாலமான வனம். அயோத்தியை விட்டு எட்டி சௌகரியமாக வெகு தூரத்திலிருக்கிறது. அங்கே போகிறோம் நாம் — ராம லக்ஷ்மணர் சீதையோடு.

இதிகாசத்தின் வித்து

ராமாயண இதிகாசத்தின் லக்ஷ்யத்துக்கு இங்கேதான் வித்து விதைத்தாகிறது.

உலகத்தில் ஒவ்வொரு கூட்டத்திலும் உயர்ந்த லக்ஷயங்களோடு கேடான லக்ஷயங்களும் கலந்து கிடக்கக் காணலாம். உயர்ந்த லக்ஷயங்கள், கேடான லக்ஷயங்களைத் தொலைக்கப் பார்க்கும். அப்படியே கேடான லக்ஷயங்கள் உயர்ந்த லக்ஷியங்களை அழிக்கப் பார்க்கும். இன்றும் நாம் கண்கூடாகப் பார்க்கிற காரியங்கள் தான் அவை. பூர்வமான காலத்தில் இருந்தவர்களும் இதைக் கண்டார்கள். கம்பரும் ஆயிர வருஷத்துக்கு முன் சமூகத்திலிருந்த மேலே சொன்ன முரண்பாடான லக்ஷயங்களைக் கண்டார். "இதென்ன அநுதியான தத்துவமாக இருக்கிறதே!" என்று ரொம்ப ரொம்ப அனுபவித்தார்.

கம்பர் லக்ஷயங்களைக் கண்டார்

தம் பண்பாட்டுக்கு ஒத்த லக்ஷயங்களைக் குறிக்கும்போது, வானவர் என்றும், தேவர்கள் என்றும், அந்தணர் என்றும், வேதம் என்றும், ஸ்தூலமாக ஆக்கிப் பாராட்டிப் பேசுவார் கம்பர். தம்முடைய பண்பாட்டுக்கு முரணான விஷயங்களைப்பற்றிப் பேசும்போது,

லக்ஷயங்களுக்கு உருவம்

அவைகளையும் ஸ்தூலமாக்கிப் பேசவேண்டியதுதானே? அரக்கர் என்றும், அவுணர் என்றும், ராவணன் என்றும் பெயர் கொடுத்துப் பேசுவார். இப்படியெல்லாம் பேசுவதில் யாதொரு சந்தேகமும் ஏற்படாது. வலிந்து பொருள் கொள்ளுவதும் ஏற்படாது. லக்ஷ்யங்களும் உண்மைகளும் தாமாகவே, பாத்திரங்களாக உருவெடுத்துக்கொள்ளும்.

**தமிழ் நாட்டில் கண்ட லக்ஷ்யங்களே**

உண்மைகள் உருவெடுத்துக் கொள்ளுகின்றன என்று சொல்லும்போது, தமிழ் நாட்டில் கம்பர் கண்ட உண்மைகள்தான். ஏதோ நம்முடைய பூமி சாஸ்திரத்துக்குள் வராத தேவ லோகம், இந்திர லோகம், அரக்க உலகம் அல்லது கோசலம், தண்டகாரண்யம் ஆகிய பாவனைப் பிரதேசங்களுக்குள் குறுக்கும் நெடுக்குமாகப் போய்க் கண்டவைகளல்ல அவை. இதெல்லாம் காரணமாக, கம்பர் காட்டும் காட்சிகள், ஆட்டிவைக்கிற பாத்திரங்கள், எல்லாம் ஒரு உண்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஏன், நாமே அனுபவித்த காட்சிகளையும் பார்த்துப் பேசிய மக்களையும்தான், கவிஞர் எடுத்து விளக்குகிறாரோ என்று எண்ணத் தோன்றும்.

**பாத்திரங்களின் தொனி** பாத்திரங்கள் என்றால் உண்மையான மக்களது அனுபவங்கொண்ட பாத்திரங்களே.

தண்டகாரண்யத்து ரிஷிகள், அகத்திய முனி, சடாயு, சூர்ப்பனகை, கரன், தூஷணன், ராவணன் என்றெல்லாம் பாத்திரங்கள். ஒவ்வொன்றும், தனியான நாதத்தோடும் வேகத்தோடும் பேசும். பாத்திரங்களை இனங்கண்டு, மனசில் பதியவைத்துக்கொள்ள வேண்டியது மிக்க அவசியம். அப்படிப் பதிய வைத்துக் கொண்டால்த்தான் கட்டங்கள் (வெகு அற்புதமான கட்டங்கள்) விளங்கும். செய்யுள்களின், நாடகப் பண்பும் தெய்விகமான கவிப்பண்பும் விளங்கும். அப்போதுதான், வார்த்தை தாளங்களாலாகிய இறக்கைகள் கொண்டு, செய்யுள்கள் நம்மை அப்படியே தூக்கிக் கொண்டு போகும்.* அதி அற்புதமான உணர்ச்சி உலகங்களுக்குள் நம்மைக் கொண்டு போய்விடும்; பிரும்ம சிருஷ்டியோடு, ஒத்துச் சொல்லக்கூடிய, பாவ ரூபங்களை அனுபவிக்கச்

---

* கம்பர் எழுதிய இதிகாசத்தை எப்படிப் பார்க்க வேண்டும், அவரது கவியிடம் எப்படி நெருங்கவேண்டும் என்பதைப் பற்றி, பாலகாண்டம், அயோத்தியா காண்டம் சேர்ந்த முதல் புஸ்தகத்தின் முகவுரையில் விளக்கியிருக்கிறது.

பாடலுக்குக் கொடுத்திருக்கிற சந்தத்தையும், பாடலை அலகிட்டு வைத்திருக்கிற முறையையும் பார்த்தாலே போதும், எந்தப் பாடலையும் பாடிவிடலாம். ஆனால் ஒன்று: சாவகாசமாகப் பாடவேண்டும்; பாடித்தான் ஆக வேண்டும்.

செய்யும். தமிழர் ஆனந்த பரவசமாய் அனுப விப்பதற்கு இதைப்போல் வேறொரு சாதன மும் உண்டோ.†

டி. கே. சிதம்பரநாத முதலியார்

---

† தன் இதயத்தோடு ஒட்டிய அனுபவங்களையும், பாத்திரங்களையும் அவைகளின் உணர்ச்சிகளையும் வெளியிட வந்த கருவிதான் கம்பரது ராமாயணக் கவிதை. இது காரணமாகவே பாத்திரங்களும் கதையும், மூலத்திலிருந்து வேறுபட்டு அமைந்திருக்கின்றன. இதை நன்றாய்த் தெரிந்து கொள்வதற்காக, வால்மீகி ராமாயணம் மூலத்திலோ அல்லது பண்டித நடேச சாஸ்திரியார் தமிழ் மொழி பெயர்ப்பிலோ கீழ்க்கண்ட சருக்கங்களை உதாரணத்துக்காக வாசித்துப் பார்த்தால் போதும்.


| சருக்கம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 9 | இராக்கதர்களை வதைக்க இராகவர் செய்த பிரதிக்ஞை விஷயமாகச் சீதை செய்து கொண்ட விண்ணப்பம் | 25 |
| 10 | சரணமென்று தம்மையடைந்த முனிவர்களைக் காப்பாற்றும் பொருட்டு அவர்களுக்கு உபத்திரவம் பண்ணும் அரக்கர்களை வதைப்பதில் தருமவழு வில்லை என்று இராமர் சொல்லுதல். | 29 |
| 45 | சீதை இராமரைத் தேட லக்ஷ்மணரை அனுப்புதல் | 142 |
| 46 | இராவணன் சந்நியாசி வேடம் பூண்டு சீதை இருந்த விடம் சென்றது. | 146 |
| 47 | இராவணன் கெட்ட எண்ணங் கொண்டதைச் சீதை தெரிந்து கொண்டு நிந்தித்தல். | 149 |
| 48 | சீதையிடம் இராவணன் தனது மகிமையை உரைத்தல் | 154 |
| 67 | இராவணனால் வெட்டப்பட்டு விழுந்த சடாயுவை இராமர் காணல். | 200 |
| 68 | சடாயுவைத் தகனஞ் செய்தல். | 211 |

# கடவுள் தத்துவம்

தமிழில் பகதிப் பாடல்கள் மிக உயர்ந்தனவாய் எத்தனையோ இருக்கின்றன. சமய சம்பந்தமான கமபரது பாடல்கள தனித்த உணர்ச்சியும் பாவமும் கொண்டுள்ளன. மூல தத்துவங்களைக் கசடற அறிந்து, பரம்பொருளோடு ஒன்றித் திளைத்தவர் கம்பர். காப்புச் செய்யுள்களிலும் ஆங்காங்கு பக்தியில் கரைநது பேசும் கட்டங்களிலும் கம்பரது பக்திமயமான கவிகள் எப்படி யிருக்கின்றன என்று நாம் தெரிந்துகொள்ளலாம்.*

விராதன் ராமனைப் பார்த்துத் துதிப்பதாக விஷயம்.

---

* விராதன் வதைப்படலம் சரபங்கர் பிறப்பு நீங்குபடலம் என்று ஆரம்பத்தில் பெய்துவைத்திருக்கிற இரண்டு படலங்களிலும் சில அபூர்வமான பக்தி வாய்ந்த கவிகளைக் காண்கிறோம். கதையும், கதையைச் சொல்லுகிற செய்யுள்களும் கம்பரது சிருஷ்டி தத்துவத்துக்கு ஒவ்வாதனவாய் இருக்கின்றன, கதைப் போக்கு எப்படியிருக்கிறதென்று அனுபந்தம் 1-ல் பார்த்தால் தெரியவரும். ஆனால், நாம் குறிக்கிற பக்தி ரசமான செய்யுள்கள் கவிச்சக்ரவர்த்தி கம்பரது ராஜமுத்திரையுடன் இருப்பதாகத் தெரிகிறது. அதுகாரணமாக அந்தப் பாடல்களை இங்கே கொடுக்கிறோம்.

"நீயோ, இறுதியில்லாத பேரண்ட முழுவதும் வியாபித்துள்ளவன். உன்னுடைய பாதங்கள் நாங்கள் காணும் சிருஷ்டி தத்துவத்தை யெல்லாம் அடக்கிககொண்டிருக கின்றன.

"வேதங்கள் இநத உனது திருவடிகளைப் பாடுகின்றன. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் பொதிந்து கொண்டிருக் கினறன இதே திருவடிகள். அத்தனை விரிவானவை இவை. பாதங்கள் இப்படி யிருந்தால் உனது முழு உருவம், அடடா, எவ்வளவு பெரிதாய் இருககும்! இன்னொரு அதிசயம். கடலில நிறைந்திருககிறாய். அது மாத்திரமா? பஞ்ச பூதஙகள் ஒவ்வொன்றிலுமே நிறைந்திருககிறாய். அந்தப் பஞ்ச பூதங்களின் ஒவ்வொரு அணுவிலுமே நிறைந்தவனாய்த் தங்கியிருககிறாய்."

வேதங்கள் அறைகின்ற,
உலகெங்கும் விரிந்தன, உன்

பாதங்கள் இவைஎன்னில் -
படிவங்கள் எப்படியோ!

---

வேதங்கள் அறைகின்ற - வேதங்கள் ஆனந்தமாய்ப் பாடுகிற பாடலுக்கு லக்ஷ்யமாயுள்ள. உலகெங்கும் விரிந்தன - உலகம் முழுவதையும் பொதிந்தனவாயுமிருக்கிற

ஓதங்கொள் கடலன்றி
ஒன்றினே(டு) ஒன்ருெவ்வாப்

பூதங்கள் தொறும்உறைந்தால்
அவையுன்னைப் பொறுக்குமோ!

அணுக்களுக்குள் எல்லாம் நீ இருக்கிறுய் என்பது மாத்திரமல்ல. எல்லா உயிருக்குள்ளும் உணர்ச்சிக்குள்ளுமே இருக்கிறுய். உயிரையும் உணர்வையும் அறிந்துகொண்டுதான் இருக்கிறுய். அவைகளைப் பாதுகாத்து வளர்க்கவுஞ் செய்கிறுய். ஆனுலும் அந்த உயிர் உணர்வு இரண்டையுங் கொண்ட, பிராணிகளுக்கோ உன்னைத் தெரியாது. என்ன விசித்திரம்!

தாய்தன்னை அறியாத
கன்றில்லை; தன்கன்றை

ஆயும் அறியும்;
உலகின்தாய் ஆகி,ஐய!

---

ஓதங்கொள் கடலன்றி - சதா சப்தித்துக் கொண்டிருக்கிற கடல் மாத்திரமேயல்லாமல். ஒன்றினேடு ஒன்று ஒவ்வா பூதங்கள் தொறும் உறைந்தால் — ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லை என்று சொல்லும்படியாக, அவ்வளவு வேறுபாடு கொண்ட - கடல், நீர், சுடர், வாயு அதைவிட நுண்ணியதான ஆகாயம் ஆகிய - ஐந்து பூதங்களிலும் அவைகளின் ஒவ்வொரு அணுவிலேயும் நீ பூரணமாய் நிறைந்திருக்கிறுய். இந்த விதமாக ஒவ்வொரு அணுவிலும் நீ நிலைகொண்டு நின்ருல் அவை உன் பளுவை எப்படித் தாங்கும்? சொல்லி அருளுவாயாக.

ஆயும் அறியும் – தாய்ப்பசுவும் அறியத்தானே செய்யும்.

நீயறிதி எப்பொருளும்;
அவையுன்னை நிலையறியா;

மாயை இ(து) என்கொலோ?
வாராதே வரவல்லாய்!

கடவுள் எல்லாப் பொருள்களிலும், அணுவுக்கு அணுவான பொருள்களிலும் தோய்ந்திருக்கிறார். ஆனாலும் ஒட்டாமலே இருக்கிறார். மரத்தின் இலையூடாக வந்த சூரிய கிரணம், கீழேயுள்ள தெளிந்த நீரில் பாய்ந்து பிரகாசிக்கிறது; நீரின் ஒவ்வொரு அணுவிலுமே தோய்ந்து பிரகாசிக்கிறது; ஆனாலும் ஒட்டுவதில்லை. அது போலவே கடவுளும் எல்லாப் பொருள்களிடத்தும் தோய்ந்தும் தோயாமலுமே நின்று பிரகாசிக்கிறான்.

ஏதோ நாம் துன்பத்துக்கு உள்ளாயிருக்கிறோம் என்று சாமான்யமாய் எண்ணுகிறோம். உண்மையில் அந்தத் துன்பங்களையெல்லாம் அனுபவிக்கிறது இறைவனேதான். நமக்கும் துன்பத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

---

நீ அறிதி எப்பொருளும் - நீ அறிகிறாய் எப்பொருளையுமே. அவை உன்னை நிலை அறியா - அந்தப் பொருள்கள் உன்னுடைய நிலை இன்னது என்று சிறிதும் அறியமாட்டா. வாராதே வரவல்லாய் - எல்லா இதயத்துக்குள்ளும் நீ இருக்கிறாய்; ஆனால் ஞானமுண்டான போதுதான், ஞானிகளுக்குத் தென்படுகிறாய். அதனால் ஞானிகளின் இதயத்துக்கு வந்தாய் என்று சொல்ல முடியுமா? அறியாத காலத்திலும் இதயத்துக்குள் இருக்கத்தானே செய்கிறாய். இந்த உண்மை பற்றித்தான், வாராதே வரவல்லவன் நீ.

ஏன், கடவுளை உணர்ந்த மாத்திரத்தில் இறுதியில்லாத ஒரே ஆனந்த மயமாக ஆகிவிடுகிறோம். அப்படியானால் அவனைக் கருணை வெள்ளம் பெருகி நிற்கும் சமுத்திரம் என்று தானே சொல்லவேண்டும்.

உலகப் பற்றையெல்லாம் துறந்தவர்களுக்கு ஆதாரமாய் நிற்பவன் கடவுள்.

வேதமானது, நேரான வழியில் கடவுளைத் தேடி ஆராய்ந்து அனுபவிக்கிறது. அந்த அனுபவத்துக்குள் அனுபவமாய் உணர்ந்து நிற்பதும் அவன் தான்.

* * * *

தேவர்கள் கஷ்டப்பட்டு விட்டார்கள். அதன் பேரில் வைகுண்டத்துக்குப் போய் விஷ்ணுமூர்த்தியைத் தொழுதார்கள். அந்த மூர்த்தியும் தேவர்களைக் காப்பதாக வரம் கொடுத்தார். அந்த வரத்தைப் பூர்த்தி செய்வதற்காக நெடுந்தூரம் நடந்து வந்திருக்கிறார்: செய்யுளின் குறிப்பு இது.

தோய்ந்தும் பொருள் அனைத்தும்
தோயாது நின்ற
சுடரே! தொடக்கறுத்தோர்
சுற்றமே! பற்றி

---

தொடக்கறுத்தோர் - ஆணவப்பற்றை அறுத்தோர்.

நீந்த அரிய
நெடுங்கருணைக்(கு) எல்லாம்
நிலையமே! வேதம்
நெறிமுறையின் நேடி

ஆய்ந்த உணர்வின்
உணர்வே! பகையால்
அலைப்புண்(டு) அடியேம்
அடிபோற்ற அந்நாள்

ஈந்த வரம்உதவ
எய்தினையே எந்தாய்!
இருநிலத்த வோ? நின்
இணையடித்தா மரைதாம்.

* * * *

கடவுள், எங்கும் ஒரேபடியாய் நிறைந்த வஸ்து. அவனுடைய உணர்ச்சியும் எங்கும் வியாபித்துள்ளது. இது காரணமாகக் காலங் கடந்தவன் எனறும் ஆகிறான். ஆதி என்றும் நிகழ்காலம் என்றும் முடிவு காலம் என்றும் சொல்லுகிற மூக்காலத்தையும் ஒரு விநாடியிலே உணர்கிறவன் அவன். இனி,

---

பற்றி நீக்த அரிய' ஏதோ மிதப்பு ஒன்றைப்பற்றி நீந்துதல் என்பது முடியாது என்று சொல்லத்தக்க கருணை சமுத்திரம். நேடி - தேடி. நிலையமே - சமுத்திரமே. பகையால் அலைப்புண்டு - பகைவர்களால் மொத்துண்டு. அடியேம் அடி போற்ற - நாங்கள் உன் திருவடிகளைப்போற்ற. இருநிலத்தவோ - இந்தப் பூமியில் பட்டு நிற்பவைதானோ அந்த அடிகள், பரமபதத்தில இருப்பவை அல்லவா அவை!

அவனைப் பொருந்தாதவரில்லை, பொருந்தினவருமில்லை. அறிவுடைமை அறிவின்மை என்கிற வேறுபாடில்லை. மேல் கீழுமில்லை என்றெல்லாம் ஏற்பட்டு வருகிறது.

மேவா தவர்இல்லை,
மேவினரும் இல்லை,
வெளியோ டிருள்இல்லை,
மேல்கீழும் இல்லை,

மூவாமை இல்லை,
மூத்தமையும் இல்லை,
முதல்இடையோ டீறில்லை,
முன்னொடுபின் இல்லை;

தேவா! இங்(கு) இவ்வோ நீ
சென்றநிலை என்றால்,—
சிலையேந்தி வந்தெம்மைச்
சேவடிகள் நோவக்

காவா தொழியிற்
பழிபெரிதோ? அன்றேல்க்
கருங்கடலிற் கண்வளர்வாய்!
கைம்மாறும் உண்டோ?

* * * *

வெளியோடு இருளில்லை - ஞானம் அஞ்ஞானமில்லை. மூவாமை இல்லை - மூப்பாகாமை இல்லை. முதலிடையோடீறில்லை - முதல் என்றும் இடை என்றும் கடை என்றும் இல்லை. முன்னொடு பின் இல்லை — முற்காலமும் பிற்காலமும் ஒன்றாய்த் தெரிவதால் முன் என்றும் பின் என்றும் இல்லை. இவ்வோ நீ சென்ற நிலை என்றால் - இவ்வாறாக உன் காரியம் நிகழ்கிறது என்றால், உன்மேல் குற்றம் கற்பிப்பதற்கு இடமுண்டா, பிறர் கைம்மாறு செய்கிறதுமுண்டா, நீ அதை எதிர் பார்ப்பதும் உண்டா.

சாதாரணமாக, ஒரு புல்லை எடுத்துக் கொண்டால் எண்ணிறந்த தத்துவங்கள் அதனிடத்தில் இருக்கின்றன.

உலகத்தில் ஜடப் பொருள்களாய் எத்தனையோ இருக்கின்றன. கல்லானாலும் சரி, மண்ணானாலும் சரி, வெள்ளி பொன் முதலான லோகங்களானாலும் சரி, அவைகளின் அமைப்பும் வேறுபாடும் அற்புதமே. புற்பூண்டுகளின் வேறுபாட்டையும் அதிசயித்து முடியாது. பிராணிகளை (நம்மையும் சேர்த்து)ப் பார்த்தாலோ தத்துவ வேறுபாடுகள் நம்முடைய அறிவைச் சிதற அடித்து விடுகின்றன. வானத்தை எட்டிப் பார்ப்போமானால் கிரகங்கள் சூரிய சந்திரர்கள் கோடிக் கணக்கான நக்ஷத்திரங்கள் அவைகளுடைய பிரமாண்டமான உருவம், அவைகள் ஓடும் வேகம் எல்லாம் நம்முடைய அறிவுக்கு அப்பாற்பட்டவை. எத்தனை எத்தனை தத்துவங்கள் இந்தப் பேரண்டத்தில் என்று கையை நெறிக்கத் தோன்றும்.

பேரண்டத்திலுள்ள இத்தனைத் தத்துவங்களையும் சேர்த்து, அளக்கவைத்த ஒரு நாழியாகக் கொண்டு, இறுதியில்லாத கடவுள்

தத்துவத்தை அளக்கவேண்டுமாம். அளந்தால் எப்படியிருக்கும்! ஒரு உதாரணம்:

பத்துமைல் நீளம் பத்துமைல் அகலம் பத்துமைல் உயரமும் கொண்டதான களஞ்சியம் ஒன்று. அதில் தானியம் நிறைந்திருக்கிறது. அவ்வளவு தானியத்தையும் அளப்பதற்குக் கருவி ஒன்றும் இல்லை. இரும்பினால் செய்த சின்னஞ்சிறு மாகாணிப் படிதான் இருக்கிறது. அந்த ஒரு மாகாணிப் படியைக் கொண்டு தானியம் முழுவதையும் அளக்க முயன்றால் எப்படி யிருக்கும்? இடை விடாது இராப்பகலாய் அளக்கிறதாக வைத்துக் கொள்ளுவோம்; வருஷங்களே ஆகட்டும், களஞ்சியத்தில் தானியம் கொஞ்சமாவது குறைந்து விட்டது என்று சொல்லமுடியுமா? இனி:

கடவுள் தத்துவம் அளவற்றது. இறுதி இல்லாதது. பேரண்டத்தையே அளவு கருவியாக (நாழியாக) வைத்துப் பிரமனே அளக்கட்டும், இடைவிடாது ஊழி ஊழி காலம் அளந்து கொண்டே இருக்கட்டும். கடவுள் தத்துவம் கொஞ்சமாவது குறைந்தது என்று சொல்லமுடியுமா? முடியாது.

இத்தகைய அளப்பரும் கடவுள் தத்துவத்தின் நேர்சாயலாய் இருக்கிறான் ராமன்.

அதோடு ஒன்றிய ஞானமூர்த்தி அல்லவா அவன்?

நாழி நவைதீர்
உலகெலாம் ஆக,
நளினத்து நீதந்த
நான்முகனார் தாமே

ஊழி பலபலவும்
நின்றளந்தால் ஒன்றும்
உலவாப் பெருங்குணத்(த)
உத்தமனே! மேல்நாள்

தாழி தரையாகத்
தண்தயிர் நீ ராகத்
தடவரையே மத்தாகத்
தாமரைக்கை நோவ

ஆழி கடைந்தமுதம்
எங்களுக்கே ஈந்தாய்:
அவுணர்கள்தாம் நின்அடிமை
ஆகாமை உண்டோ?

---

நவைதீர் உலகெலாம் - யாதொரு பழுதும் இல்லாது இயங்கும் சிருஷ்டி தத்துவம் அடங்கிய பேரண்டம் முழுதும். நளினத்து - உனது உந்தித் தாமரையிலிருந்து. நின்றளந்தால் – இடைவிடாது அளந்துகொண்டே இருந்தாலும் உலவா - கொஞ்சமும் குறையாத. மேல் நாள் - ஆதியான பூர்வகாலத்தில். தாழி தரையாக – இந்தப் பூமியே தயிர் கடையும் பானையாக தண் தயிர் நீர் ஆக – சமுத்திரமே தயிராக தடவரையே மத்தாக - மேருமலையே மத்தாக. ஆழி கடைந்து – பாற்கடலைக் கடைந்து. அவுணர்கள் – அசுரர்கள். நின் அடிமை ஆகாமை உண்டோ. எல்லாரும் உன் ஆணைக்கு உட்பட்டவர்கள் ஆயிற்றே; எப்படி அரக்கர்கள் மாத்திரம் உட்படாதிருக்கக் கூடும்!

# ஆரணிய காண்டம்

# கடவுள் வாழ்த்து

## என் அறிவுக்கு அறிவு, அவ்வளவுதான்

1. கடவுளுடைய தன்மையை அறிவது ரொம்ப ரொம்பக் கஷ்டம். ஏதோ மரமென்றும், மனுஷ்யன் என்றும், மலையென்றும் தனித்த உருவங்களோடு வஸ்துக்கள் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். இந்த உருவ பேதம் ஒன்று. இதோடு, புல்ப் பூண்டு முதல் ஞானி வரையும் பலதிறப்பட்ட உணர்ச்சித் தன்மைகளைப் பார்த்தால், அவைகளும் எண்ணுக்கு அடங்காதன. ஆகவே, ஜட உருவங்களும் உணர்ச்சி பேதங்களும் எண்ணிறந்தனவாய் இருக்கின்றன. அப்படியிருந்தபோதிலும் அவைகளெல்லாம் பேதமற்ற கடவுளின் அம்சங்களே. எதுபோல்? சமுத்திரத்தில் கோடிகோடியான அலைகள் எழுகின்றன. மலைபோல் எழுகின்றன. எழுந்தால் என்ன, சமுத்திரத்தை விட்டுப் பிரிந்தா நிற்கின்றன? இல்லை.

எவ்வளவாக நிமிர்ந்துநின்ற போதிலும் அலைகள் சமுத்திரத்தை விட்டு எப்படிப் பிறழ்ந்து நிற்கவில்லையோ அப்படியே, இயற்கையில்க் காண்கிற உருவங்களும் உணர்ச்சிகளும் எவ்வளவாக நிமிர்ந்து நின்ற போதிலும், அவைகள் கடவுள் தத்துவத்தை விட்டுப் பிறழ்ந்து நிற்கவில்லை.

இப்படிப் பேதியாயலும் பேதித்தும் நிற்கிற கடவுளின் நிலையை அறிவது கஷ்டந்தான்.

வேதங்களில் மேலே சொன்ன கடவுள் தத்துவமானது விவரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி விவரிக்கப்பட்ட கடவுள் தத்துவம், இறுதியில்லாதபடி விரிவும்

ஆழமும் பெற்றதாய் இருக்கிறது. அது காரணமாக ஆராய ஆராயப் புதிய உணர்ச்சிகளைத் தந்து கொண்டே இருக்கின்றன அந்த வேதங்கள். வேதங்களில் ஈடுபட்டு ஆராய்ந்த நிபுணர்கள்,வேதியர். இந்த நிபுணத்துவத்தை உயர்த்திச் சொல்லவேண்டுமானால், சிருஷ்டிகளையெல்லாம் செய்து வகுத்த நான்முகனது அறிவைத்தான் சொல்லவேண்டும். ஆனாலும், வேதம் வேதியர் விரிஞ்சன் (—நான்முகன்) இவர்களுக்குத் தெரியாத வஸ்து அந்த ஆதிதேவன்.

இப்படியெல்லாம்அவர்களால் அறிவதற்கு அரிய வஸ்துவாய் இருந்தாலும் 'நான் அறிந்துவிட்டேன்' என்று மார்பு தட்டுகிறார் கம்பர்.

சந்தம்

தான தன்னதன
தன்னதன தன்னதன
தன்

**பேதி யாதுநிமிர்**
**பேதஉரு வம்பிறழ்கி**
**லா,—**

**ஓதி ஓதிஉணா**
**ரும்தொறும் உணர்ச்சிஉத**
**வும்**

---

1. **பேதியாது நிமிர பேத உருவம்** – ஒரு தன்மையாய இருக்கிற கடவுள்த் தத்துவத்திலிருந்து நிமிர்ந்து நின்று பேதப்பட்டவைகள்போல் இருக்கிற உருவங்கள் **பிறழ்கிலா** – வேறுபட்டில்லாத (ஆதிதேவர்). **ஓதி ஓதி உணரும் தொறும** – பாடிப்பாடி ஆராய்ச்சி செய்யச் செய்ய. **உணர்ச்சி உதவும்** – புதிய உணர்ச்சியை எழச் செய்கிற-வேதம். **விரிஞ்சன் முதலோர்** – நான் முகனுக்கே

வேதம், வேதியர்
விரிஞ்சன்முத லோர்தெரிகி
லா,-

ஆதி தேவர்அவர்
எம்அறிவி னுக்கறிவ
ரோ!

---

சமானமான தத்துவ ஞானிகள். தெரிகிலா ஆதிதேவர்அவர் — அறியமுடியாத ஆதியாகிய அந்தப் பரம்பொருள். எம் அறிவினுக்கு அறிவரோ'--ஒரு புஸ்தகத்தை யெடுத்து வாசிக்கப் பார்க்கிறோம். எழுததுககள் தெளிவாய் இல்லை. கண்ணாடியைப் போட்டுப் பார்க்கிறோம், எழுத்துக்கள் தெளிவாகிவிடுகின்றன. அப்போது, கண்ணின் பார்வைக்குக் கண்ணாடி, கருவியென்று எண்ணுகிறோம்

இனி, கண்ணைக்கொண்டு பார்க்கிறோம் என்று சொல்லும்போது கண் ஒரு கருவி என்றும், அதைக்கொண்டு பார்ப்பது அறிவு என்றும் ஏறபடுகிறது. இந்த முறையில் ஆராய்நது அறிவுத் தத்துவத்துக்குப் போவோமானால் அதுவும் ஒரு கருவிதான் எனறு முடியும். அந்த அறிவாகிய கருவியை உபயோகிப்பது எது? எங்கும் நிறைந்த அறிவு மயமாய இருக்கிற கடவுள்தான். ஆகவே, கண்ணுக்கு எப்படி என்னுடைய ஆணவ அறிவு அமைந்திருக்கிறதோ, அப்படியே தான என்னுடைய ஆணவ அறிவுக்குக் கடவுளாகிய பேரறிவு அமைந்திருக்கிறது.

குறிப்பு :— நம்முடைய ஆணவ அறிவு அறிவல்ல, வெறும் ஜட தத்துவத்தோடு ஒத்ததுதான், கடவுளுக்கு மாததிரமே அறிவுத் தத்துவம் உண்டு, என்பதை வின்னியாசமாக ஹாஸ்ய பாவத்தோடு சொல்லுகிறார் கவிஞர் யாருக்குந் தெரியாதது தமக்குத் தெரிநதுவிட்டதாகச் சொல்வதில் ஹாஸ்ய பாவம்.

# 2. அகத்தியப் படலம்

ராமன் சீதை லக்ஷ்மணன் ஆகிய மூவரும் அயோத்தியை விட்டுச் சித்திரகூட பருவதத்தில் வந்து தங்கினார்கள். அங்கே யாதொரு தொந்தரவுமில்லாமல் வாழ்க்கை நடத்தி வந்தார்கள், அந்த நிலைமையில், பரதனும் அவனுடன் அயோத்தி ஜனங்கள் பலருமே வந்து, ராமனை அயோத்திக்குத் திரும்பி வந்து ராஜ்ய பரிபாலனம் செய்யும்படியாக ரொம்பவும் வற்புறுத்தினார்கள்.

பதினாலு வருஷம் வனவாசம் செய்துவிட்டுத் தான் அயோத்திக்குத் திரும்புவதாக ராமன் சொல்லி விட்டான். அதன் பேரில் பரதன் ராமனுடைய பாதுகைகளைச் சுமந்துகொண்டு மிக்க வருத்தத்துடன் அயோத்தியை நோக்கித் திரும்புகிறான். அவனோடு அயோத்தியிலிருந்து வந்தவர்கள் எல்லாரும், குகனும் உள்பட, திரும்பிப் போய்விடுகிறார்கள்.

ராமன் பார்த்தான். சித்திரகூடத்திலிருந்தால் அயோத்தியிலுள்ளவர்கள் அடிக்கடி வரத்தான் செய்வார்கள், தொந்தரவும் செய்வார்கள், என்று எண்ணிச் சித்திரகூடத்தைவிட்டு, சீதை லக்ஷ்மணர்களுடன் புறப்படுகிறான்.

எத்தனையோ மலைகளையும் காடுகளையும் ஆறுகளையும் கடந்து போகிறார்கள். பலநாள்ச் சென்று, கடைசியாகத் தண்டகாரண்யத்துக்குள் பிரவேசித்தார்கள்.

## தொழுந்தொறும் ஆசி சொல்லுவார்

1. தண்டகாரண்யம் என்றால், மிகப் பூர்வமான ரிஷி பரம்பரைகள் வசிக்கும் ஆசிரமங்களை உடைய காடு. யோக சித்திகளால் நூற்றுக்கணக்கான வருஷங்கள் தவஞ்செய்து, நீண்டு வளர்ந்த ரோமத்தால் பொதிந்துள்ளவர்கள் அங்கே சிலர். அவர்களுடைய வயசைக் கணக்கிட முடியாது. வேறு சிலருக்கு ரோமம் வளராமல் மழுங்கலாகவே இருந்தது, யோகம் காரணமாகத்தான். வேறு சிலர் மௌனம் சாதித்த வண்ணமாய்த் தவஞ் செய்து கொண்டிருந்தார்கள். இவர்களோடு முனிவர்களும் எண்ணிறந்த ஆசிரமங்களில் இருந்தார்கள்.

சந்தம்

தானன தானன
தான தன்னன

**பண்(டு)அயன் பயந்தருள்**
**பால கில்லரும்,**

**முண்டரும் மோனரும்**
**முனிவ ரும்எனத்**

---

1. பண்டு அயன் பயந்து அருள பால கில்லர் – பிரமனே பெறறான் எனறு சொல்லும்படி அத்தனை நெடுங்காலம் தவம் செய்து வந்த பாலகில்லர். பால கில்லர் – பகவானது ரோமததினின்று தோன்றியவர்எனபது பொருள். முண்டர் – ரோமம் முளையாதவர். மோனர் – மனம், வாக்கு, காயம் எல்லாம் கடவுளிடத்தில் சென்ற காரணத்தால், பேச இயலாதிருந்த யோகிகள். முனிவர் – மனைவி மக்களோடு வாழ்ந்து தவத்தில் ஈடுபட்டவர்.

தண்டக வனத்(து)உறை
தவத்து ளோர்கள்தாம்,

கண்டனர் இராமனைக்
களிக்கும் சிந்தையார். (2)

2. தண்டகாரண்யம் வளமுள்ளதுதான். தவஞ் செய்ய அங்கே எவ்வளவோ வசதிகள் இருந்தாலும் அரக்கர்களுடைய கொடுமை காரணமாக, முனிவர்கள் சொல்லமுடியாத கஷ்டத்துக்கு உள்ளாகியிருந்தார்கள். தங்களால் செய்யக்கூடிய செயல் ஒன்றுமில்லை. உள்ளம் வெதும்பி அப்படியே அழுங்குகிறார்கள். அவர்களில்ச் சிலர் ராமனைத் தூரத்தே கண்டார்கள். கண்டவுடன் அவர்களுக்குப் புத்துயிர் வருகிறது.

கனைவரு கடுஞ்சினத்(து)
அரக்கர் காய,ஓர்

வினைபிறி(து) இன்மையின்
வெதும்பு கின்றனர்;-

---

1. தண்டக வனத்து உறை – தண்டகாரண்யத்தில் வசிக்கும். களிக்கும் சிநதையார் – ஒரே ஆனந்தக் களிப்பினராய்.

2 கனைவரு கடுருசினத்து அரக்கர் – மிக்க ஆர்ப்பாட்டத்தோடு தங்கள் கோபத்தைச் செலுத்தும் அரக்கர்கள் காய – ஹிம்சைசெய்ய. வினை – செயல்.

அனல்வரு கானகத்(து)
அமு(து)அ ளாவிய

புனல்வர உயிர்வரும்
உலவை போல்கின்றார். (3)

3. அரக்கர்களுடைய பலம் நாளுக்கு நாள் விருத்தியாகி வருகிறது. அவர்களுடைய பெயரை அகஸ்மாத்தாய் வாய் சொல்ல நேர்ந்துவிட்டால், அப்படியே நடுங்கிவிடுவார்கள் முனிவர்கள். ராம னுடைய வருகையால் அந்தப் பயம் எல்லாம் நீங்கி விட்டது அவர்களுக்கு.

ஆய்வரும் பெருவலி
அரக்கர் நாமமே

வாய்வர அலமரும்
மறுக்கம் நீங்கினர் ;-

தீவரு வனத்திடை
விட்டுத் தீர்ந்ததோர்

தாய்வர நோக்கிய
கன்றின் தன்மையார். (4)

---

2. அனல் வரு கானகம் – கோடையினால் அக்கினி மயமாயுள்ள காடு அமுது அளாவிய புனல் – இனிமை கலந்த நன்னீர். உயிர்வரும் உலவை – தளிர்த்துவரும் உலர்ந்த மரஞ்செடிகள். உலவை – உலர்ந்துபோன பூண்டுகள்.

3. ஆய்வரும் – விருத்தியாய் வரும். அலமரும் மறுக்கம் – வருந்தி அதன் காரணமாக அடையும் மயக்கம். தீவரு வனத்திடை விட்டுத் தீர்ந்ததோர் தாயவர நோக்கிய கன்றின் தன்மையார்: ஒரு காட்டில் நெருப்புப் பற்றிக்கொண்டது ; நாலா பக்கமும் சூழ்ந்து கொண்டது ;

4. ராமனுடைய அரிய குணத்தையும் நன்றாய் உணர்ந்து அனுபவித்தார்கள். அந்த அனுபவம் மோக்ஷ வீடு அடையும் அனுபவத்துக்குத்தான் ஒத்ததாயிருந்தது.

தெரிஞ்(சு)உற நோக்கினர்,–
செய்த செய்தவம்

அருஞ்சிறப்(பு) உதவ,நல்
அறிவு கைதர,

---

நெருங்கி நெருங்கியும் வருகிறது, வெக்கையும் சுவாலையும் வந்து தாக்குகின்றன, அகப்பட்டுக்கொண்ட ஜீவப்பிராணிகள் அங்கு மிங்குமாக ஓடுகின்றன, சுற்றிச் சுற்றி வருகின்றன, பிழைப்பதற்கு வழியொன்றுமில்லை யென்று ஒரே வெறியில் நெருப்புகளுள்ளேயே பாய்ந்து ஓடுகின்றன. ஒரு மானும் கன்றும் அந்த அச்ச வெறியில் நெருப்புகளுள் பாய்ந்து, தாய் ஒரு பக்கமாகவும் கன்று வேறு ஒரு பக்கமாகவும் ஓடிவிட்டன. நெருப்புப் படலத்தைக் கடந்து தப்பிப்போய்விட்டன கன்றானது மிகவும் அலமலந்து, நா வறண்டு, அங்கு மிங்குமாக ஓடுகிறது தாயைக் காண முடியவில்லை. நெடுநேரங்கழித்துத் தூரத்தில் தாயவருவதைககண்டு கொள்ளுகிறது. கன்றின் ஆனந்தம் எப்படியிருக்கும்!

ராமன் வருகையால், முனிவர்களுடைய ஆனந்தம், அந்தக் கன்றின் ஆனந்தத்தைப் போலிருந்தது.

4. தெரிஞ்சு உற நோக்கினர் – ராமனுடைய குணாதிசயங்களை நன்றாய்த் தெரிந்து அனுபவித்தார்கள். செய்த செய்தவம்: நாம் உண்மையில கடவுளோடு ஒன்று பட்டுக் கடவுள் மயமாகவே இருக்கிறோம். ஆனாலும், இந்த உடலோடு ஒட்டிப் பிறந்த காரணமாக நாம் தனியாக

விரிஞ்சுறப் பற்றிய
பிறவி வெந்துயர்ப்

பெருஞ்சிறை வீடுபெற்(று)
அனைய பெற்றியார். (5)

---

இருக்கிறோம், கடவுளுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை, கடவுளே இல்லை என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

இதைக் குறித்துச் சொல்லும்போது, இருள்பட்ட சிறையிலிருக்கிறோம் என்று சொல்லலாம். இதை விட்டு நம்மை மீட்டுக்கொள்ள வேண்டுமானால், இரண்டு உபாயந் தேவை ஒன்று, சதா கடவுளைப்பற்றித் தியானிக்கிறது; அதாவது, நம்முடைய செயல் ஒவ்வொன்றும் கடவுள் செயல்தான் என்று தியானிக்கிறது. இந்தச் சாதனத்துக்குத் தவம் என்று பெயர். இரண்டாவதான உபாயம்: தத்துவங்களின் நிலை இன்னது என்று ஆராய்ந்து அதன்படி அறிவைச்செலுத்தி மார்க்கத்தைக் கண்டு கொள்ளுவதுதான். ஆகவே, தவத்தாலும், அறிவினாலும், பிறவியாகிய பெருஞ் சிறையைக்கடந்து, பேரானந்த நிலையை அடையலாம் என்பது தெரிகிறது.

அருஞ்சிறப்பு உதவ – அரிய நிலைகளைக் காட்ட. நல் அறிவு கைதர – உயர்ந்த அறிவு நமக்குத் துணைசெய்ய. விரிஞ்சுறப் பற்றிய – வாழ்க்கையில் எல்லாத் துறையிலும் நம்மை அழுத்திய, பிறவி வெந்துயர்ப் பெருஞ் சிறை – இந்தப் பிறவியினால் ஏற்பட்ட பலவிதத் துன்பத்தையும் கொடுக்கக் கூடிய அஞ்ஞானமாகிய சிறையில் நின்றும். வீடுபெற்று அனைய பெற்றியார் – விடுதலை பெற்றதற்குச் சமானமான தன்மை யுடையார்; ஜீவன் முக்தர்கள். இவர்கள் தெரிஞ்சு உற நோக்கினர்.

5. ராமனைத் தூரத்தே வரக் கண்டார்கள் முனிவர்கள்; கூர்ந்து நோக்கினார்கள்; அப்படியே எழுந்து ஓடினார்கள். ஒரே படியாய் வழிய வழிய ஊறிவரும் கண்ணீர்ப் பெருக்கோடு ராமனைக் கிட்டினார்கள்.

எழுந்தனர், ஓடினர்;
இருண்ட மேகத்தின்

கொழுந்தென நின்றஅக்
குரிசில் வீரனைப்,

பொழிந்தெழு காதலிற்
பொருந்தினர்,—அவன்

தொழுந்தொறும் தொழுந்தொறும்
ஆசி சொல்லுவார். (6)

---

5. குரிசில வீரனை – அரசிளங் குமரனை ராமனை. பொழிந்தெழு காதலின் - ஆனந்தக் கண்ணீர் பொழியப் பொழிய ஊறி வரும்படியான அன்போடு. பொருந்தினா – கிட்டினார்கள். ஆசி சொல்லுவார் – வாழ்த்துக் கூறினார்கள்.

குறிப்பு :— முனிவர்களுடைய ஆனந்தம் துள்ளித் துள்ளிப் பெருக்கெடுத்துப் போவதைச் செய்யுளின் ஓசையிலேயே பார்க்கலாம்.

## உன் அபயம் நாங்கள்

6. ராமனை ஒரு அழகிய பர்ண சாலைக்கு அழைத்துப் போய், 'இங்கேயே சௌகரியமாய் இருக்க வேணும்' என்று மரியாதையாய்ச் சொல்லிவிட்டு, வேறொரு தனியான பர்ணசாலைக்குப் போய்விட்டார்கள் அவர்கள்.

சந்தம்

தானன தானன
தான தன்னன

இனியதோர் சாலைகொண்(டு)
ஏகி, 'இவ்வயின்

நனியுறை' என்(று)அவற்(கு)
அமைய நல்கித்,தாம்

தனியிடஞ் சார்ந்தனர்,
பின்னர்த் தாபதர்

அனைவரும் எய்தினர்
அல்லல் சொல்லுவான். (7)

---

6. இவ்வயின் – இந்த இடத்தில. நனியுறை என்று – சௌகரியமாகத் தங்குவாய என்று. அவற்கு அமைய நல்கி – ராமனுக்குச் சௌகரியமாக அமைத்துவிட்டு. பின்னர்த்தாபதர் அனைவரும் – சிறிது நேரங்கழித்து மற்றுமுள்ள எல்லா முனிவர்களும். எய்தினர் அல்லல சொல்லுவான் – தங்கள் கஷ்டங்களைச் சொல்லும் பொருட்டு ராமனிடம் வந்துசேர்ந்தார்கள்.

7. வந்து சேர்ந்த முனிவர்களை ராமன் வணங்கி, அவர்களுடைய வாழ்த்துக்களை அனுபவித்தவனாய் உட்கார்ந்தான். ரிஷிகளைப் பார்த்து 'உங்கள் கட்டளை எதுவோ, சொல்லவேண்டும்' என்றான்.

எய்திய முனிவரை
இறைஞ்சி, ஏத்(து)உவந்(து)
ஐயனும் இருந்தனன்
'அருள்என்?' என்றலும், –
'வையகங் காவலன்
மைந்த! வந்ததோர்
வெய்யவெங் கொடுந்தொழில்
விளைவு கேள்'என. (8)

8. முனிவர்கள் சொல்லுகிறார்கள்: 'அரக்கர் என்று பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அறத்துக்கும் வெகுதூரம். அவர்கள் எங்களை ரொம்பவும் ஹிம்சை செய்து தீய ஒழுக்கங்களில் புகுத்திவிட்டார்கள்.

'இரக்கமென்(று) ஒருபொருள்
இலாத நெஞ்சினர்
அரக்கர்என்(று) உளர்பலர்;
அறத்தின் நீங்கினர்

---

7. இறைஞ்சி - வணங்கி. ஏத்து உவந்து – வாழ்த்துக்களை அனுபவித்தவனாய். அருள் என் என்றலும் – நீங்கள் இடும் கட்டளை எதுவோ, என்று ராமன் சொல்லவும். வையகம் காவலன் மைந்த - சக்கரவர்த்தித் திருமகனே. வந்ததோர் வெய்ய வெம்கொடுந் தொழில் விளைவு - பூர்வத்தில் நாங்கள் ஏதோ செய்த மகா பாதகங்களினால் இப்போது நேர்ந்த கேட்டை. கேள் என - கேட்க வேணும் என்று.

நெருக்கவும், யாம்படர்
நெறிய லாநெறி

துரக்கவும், – அருந்தவத்
துறையின் நீங்கினேம். (9)

9. 'தவத்தை விட்டு நீங்கிவிட்டோம். அதனால் என்ன என்ன ஏற்பட்டது? கேட்பாயாக. வேதங்கள் ஓதுவதையே விட்டுவிட்டோம். வேதங்களை யாருக்கு இனி நாங்கள் கற்பிக்கமுடியும்? பிறருடைய நன்மைக்காக வாடாதஅக்கினி வளர்த்துவந்தோம். இப்போது அதெல்லாம் இல்லை.

'மாதவத்(து) ஒழுகலெம்,
மறைகள் யாவையும்

ஓதலெம், ஓதுவார்க்(கு)
உதவல் ஆற்றலெம்,

மூஎரி வளர்க்கிலெம்,
முறையின் நீங்கினேம்,

ஆதலின் அந்தண
ரேயும் ஆகிலேம்! (10)

---

8. நெருக்கவும் – தொந்தரவு செய்யவும். யாம்படர் நெறியலா நெறி – நாங்கள் ஒழுகுவதற்கு என்று ஏற்பட்ட ஒழுக்கங்கள் பல, அவைகளுக்கு மாறான ஒழுக்கங்களில். துரக்கவும் – அரக்கர்கள் எங்களைச் செலுத்தவும். அருந்தவத் துறையின் நீங்கினேம் – எங்களுக்கு ஏற்பட்ட உயர்ந்த தவ ஒழுக்கங்களைவிட்டு விலகிவிட்டோம். ராமனே, இது எங்கள் விருத்தாந்தம்.

9. அந்தணரேயும் ஆகிலேம் – எங்களை முனிவர் என்றும் சொல்லமுடியாது; அவ்வளவு கேட்டுக்கு உள்ளாகி விட்டோம்.

10. 'இந்திரனுக்குச் சமானமான சக்தி ஒழுக்கம் எல்லாம் வாய்ந்த பிரமுகர்கள் இருக்கிறார்கள். இருந்து என்ன செய்ய? அவர்களும் அரக்கர் ஏவிய அக்கிரமக் காரியங்களை யெல்லாம் அங்கீகரித்துச் செய்கிறவர்களாய்ப் போய்விட்டார்கள்!

'இந்திரன் எனில், அவன்
அரக்கர் ஏயின,

சிந்தையில்ச் சென்னியில்க்
கொள்ளுஞ் செய்கையான்;

எந்தைமற்(று) யாருளர்
இடுக்கண் நீக்குவார்?

வந்தனை யாம்செய்த
தவத்தின் மாட்சியால். (11)

---

10. இந்திரன் – செல்வாக்கிலும், ஒழுக்கத்திலும், இந்திரனைப்போல மதிப்புக்கு உரியவர்கள். ஏயின – ஏவின காரியங்களை. சிந்தையில்ச் சென்னியில்க் கொள்ளும் – மனசினால் அங்கீகரித்துத் தலையால் பணிந்து செய்யும். எந்தை – என் அப்பனே. வந்தனை - எங்களிடம் வந்து சேர்ந்தாய்.

குறிப்பு:—உயர்ந்த லக்ஷ்யத்தோடு கூடியவர்கள், நல்ல நிலையம் ஒன்றை வகுப்பார்கள். பலரையும் தீய வாழ்க்கையைவிட்டு நல்ல வாழ்க்கைக்குக் கொண்டுவந்து ஒழுகச் செய்வார்கள். இத்தகைய நிலையங்கள் எத்தனையோ உற்பத்தியாகின்றன. பிறகு, அந்த லக்ஷ்யங்கள் எல்லாம் மறைந்துபோய், அந்த நிலையங்கள் அக்கிரமங்களுக்கு உறைவிடமாகி விடுவதைச் சரித்திரத்தில் பார்க்கிறோம். நேரிலுமே பார்க்கிறோம். மேல்நாடுகளானாலும் சரி, கீழ்நாடுகளானாலும் சரி, ஆரிய வர்த்தமானாலும் சரி, தமிழ் நாடேயானாலும் சரி, எங்குமே, மேலே சொன்னபடி உயர்ந்த லக்ஷ்யங்களோடு ஒழுகிவந்த நிலையங்கள் கீழான நிலைக்கு வந்திருப்பது வெளிப்படை. இந்தச் சரித்திர உண்மையைக் குறித்தே கம்பர் பேசுகிறார்.

*11.* முனிவர்கள் கடைசியாகச் சொல்லுகிறார்கள். தசரத சக்கரவர்த்தியின் புதல்வனே நாங்கள் திக்குத் திசை தெரியாது இருளில் அகப்பட்டுக் கொண்டோம், எங்களைப் பார்த்துக்கொள்.'

'உருளுடை நேமியால்
உலகை ஓம்பிய

பொருளுடை மன்னவன
புதல்வ! போக்கிலா

இருளிடை வைகினேம்:
இரவி தோன்றினாய்!

அருளுடை வீர, நின்
அபயம் யாம்' என்றார். (12)

---

*11.* உருளுடை நேமியால் – சுற்றிக்கொண்டிருக்கும் சக்கராயுதத்தினால். சக்கராயுதம் என்பது கூரிய முனையோடு கூடிய உருக்கால் அமைந்த வட்டு. நடுவிலுள்ள துவாரத்தில் 'ஆள்க்காட்டி .விரலைப்' புகுத்தி வேகமாகச்சுறறி வீசிவிட்டால், எதிரிகள் கழுததை அறுத்துவிடும். இந்தச் சக்கராயுதத்தைப் பிரயோகிப்பதில் மிக்க வல்லவர் சிலர் பூர்வகாலத்திலிருந்தார்கள் அந்த வல்லமை 'காரணமாக அவர்கள் எதிரிகளை வென்று ஜனங்களைப் பாதுகாத்து வந்தார்கள். இதிலிருநதுதான் சக்கரவர்ததி . யென்ற பெயர் வந்தது. பொருளுடை மன்னவன் புதலவ – அழியாச் செலவததனுன தசரதனுடைய 'புதல்வனே. இரவி தோன்றினாய் – இருளிலுள்ள எங்களுக்குச் சூரியனாகத் தோன்றினாய். அபயம்-பயமில்லாமல் இருப்பதறகு உரிய புகலிடம்.

## பாபநாசத்தை அடைந்தார்கள்

12. இந்த விதமாகத் தண்டகாரண்யத்து ரிஷிகள் ராமனிடம் முறையிட்டார்கள். ராமனுக்கு முனிவர்களிடத்தில் மிக்க பரிவுண்டாகி, 'இனி உங்களுக்கு யாதொரு பயமும் வேண்டாம். அரக்கர்கள் வெகு சீக்கிரத்தில் என்னிடம் சரணுகதி புகப் போகிருர்கள்' என்று உத்ஸாகம் ஊட்டுகிருன்.

சந்தம்

தானன தன்னன
தன்னன தனனன

'புகல்பு குந்தில
ரேல்ப்,புறத்(து) அண்டத்தின்

அகல்வர் ஏனும்என்
அம்பொடும் வீழ்வரால்;

தகவில் துன்பம்
தவிருதிர் நீர்' எனுப்

பகல வன்குல
மைந்தன்ப ணிக்கின்ருன். (13)

---

12. புகல் புகுந்திலரேல — அரக்கர் வந்து என் காலில் விழாமல்ப் போனுல். புறதது அண்டத்தில் அகல்வரேனும் — மேலே வெட்ட வெளியாயுள்ள வானத்துக்கே போனுலும். தகவில துன்பம் — தங்களுடைய உயர்ந்த லக்ஷ்யங்களுககு ஒவ்வாத துன்பம். பகலவன் குல மைந்தன் — சூரிய குலத் தவனுன ராமன். பணிக்கின்ருன் — அதிகாரத் தோரணையில்ச் சொல்லுகிருன்.

*13.* ஏதோ கேடென்று சொல்லுகிற காரியங்கள், எல்லாம் கொஞ்சம் கூர்ந்து பார்த்தால், நன்மைக்கான காரியங்கள் என்றே சொல்லத்தோன்றும். கேடாக நேர்ந்தவைகள் ராமனுக்கு எப்படித் தோன்றுகிறது, பாருங்கள்.

> 'வேந்தன் வீயவும்,
> யாய்வரம் ஏவவும்,
>
> ஏந்தல் எம்பி
> வருந்தவும, என் நகர்
>
> மாந்தர் வன்துயர்
> கூரவும், யான்வனம்
>
> போந்த(து)—என்னுடைப்
> புண்ணியத் தால்'என்றான். *(14)*

*14.* வனம் வந்தது காரணமாகப் பலருக்கும் கஷ்டம் நேர்ந்தது உண்மைதான். தந்தையே இறக்க நேர்ந்தது. அதுகூட ஒரு விஷயமாய்த் தோன்றவில்லை. காரணம் என்ன? முனிவர்களின் உயர்ந்த லக்ஷ்யங்கள் மறுபடியும் உயிர்பெற்றுவிளங்குவதற்கு, தான் காரணபூதமாய் ஆவதுதான். இந்தவிதமாக

---

*13.* வேநதன வீயவும் – தசரத சக்கரவர்த்தியாகிய தந்தை உயிர்விடவும். யாய் வரம் ஏவவும் – என் அன்னையாகிய கைகேசி தந்தையிடம் வரம்பெற்று அதன்படி எனக்குக் கட்டளையிடவும். ஏந்தல எம்பி – அரசனாகிய என் தம்பி பரதன். வன துயர் கூரவும் – பெருந்துயர் அடையவும். யான் வனம் போந்தது – இவ்வளவுக்கும் காரணமாய் நான் இங்கே வனவாசம் செய்யவந்தது-

உறுதி கூறிவிட்டான் ராமன். முனிவர்களுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்லுவானேன்! பதி நாலு வருஷங்களையும் தங்களுடன் தண்டகாரண்யத் திலேயே கழிக்க வேண்டுமென்று ராமனைக் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

'அன்ன(து) ஆதலின்,
ஏயின ஆண்டெலாம்

இன்னல் காத்திங்(கு)
இனி(து)உறை வாய்!' எனச்

சொன்ன மாதவர்
பாதம்தொ ழு(து), உயர்

மன்னர் மன்னவன்
மைந்தனும் வைகினன். (15)

*15.* பத்து வருஷங்கள் தண்டகாரண்யத் திலேயே இராமனும் லக்ஷ்மணனும் தங்கினார்கள். சௌகரியமாகவே தங்கினார்கள். பிறகு முனிவர்கள் யோசனை பண்ணி, 'பத்து வருஷம் ஆகிவிட்டது.

---

*14.* ஏயின ஆண்டெலாம் — வனவாசத்துக்கு ஏற்பட்ட பதிநாலு வருஷங்களும். இன்னல் காத்து — முனிவர்களுக்கு அரக்கர்களால் ஏற்பட்ட கஷ்டங்களையெல்லாம் நிவர்த்தி செய்து. உறைவாய் - தங்குவாய். உயர் மன்னர் மன்னவன் மைந்தனும் வைகினன் — ராஜாதி ராஜனான சக்கரவர்த்தித் திருமகனாயிருந்தும், ராமன் அந்த வனத்தில் தங்கினான்.

நம்முடைய காரியம் பூரணசித்தி பெறவேண்டு மானல், அகத்திய முனிவரைக் கண்டுதான் கேட்க வேண்டும்' என்று ராமனிடம் சொன்னுர்கள்.

ஐந்தும் ஐந்தும்
அமைந்துள ஆண் (டு), அவண்

மைந்தர் தீதிலர்
வைகினர்; மாதவர்

சிந்தை எண்ணி,
'அகத்தியற் சேர்கெ'ன,-

இந்து நல்நுதல்
தன்னெடும் ஏகினர். (16)

---

15. ஐந்தும் ஐநதும் அமைந்துள ஆண்டு — பத்து வருஷங்கள். அவண் — அந்தவன ததிலேயே. மைந்தர் தீதிலர் வைகினர் — வீரர்களான ராம லக்ஷமணர்கள் அரக்கர்களால் ஏற்படும் தொந்தரவு யாதுமின்றித தங்கினர்கள். மாதவர் சிந்தை யெணணி — முனிவர்கள் மிக்க ஆலோசனை செயது. அகத்தியன் சேர்க என — அகத்தியனை அணுகவேண்டும் என்று முனிவர்கள் சொல்ல. இநது நல்நுதல தனனெடும் — பிறைச் சந்திரனை ஒத்த நெறறியையுடைய சீதையோடும் புறப்பட்டார்கள்.

குறிப்பு:— வீரர்கள் காட்டு வழியாகப் போகிருர் கள். வீரர் மாததிரமா போகிருர்கள்? மெலலியலாள் சீதையும் காட்டினூடே நடந்து போகிருள் எனபதை நமக்கு நினைவூட்ட வேணடாமா? அதறகாகததான் நாலா வது அடியில் வருகிருள் சீதை

16. அகத்திய முனிவர் தங்குமிடத்துக்கு வழி கூறி, பலவிதமான ஆசிமொழிகளும் கூறி நின்றுவிட்டார்கள் முனிவர்கள். ராம லக்ஷ்மணர்கள் அப்படியே போய், வெகு விரைவிலேயே அகத்திய முனிவர் தங்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

வழியும் கூறி,
வரம்பகல் ஆசியின்

மொழியும் கூறி
முனிவரர் நின்றிட,-

பிழியும் தேனிற்ப்
பிறங்(கு)அரு வித்திரள்

பொழியும் சாரல்
விரைவினிற்ப் போயினர். (17)

---

16. வரம்பு அகல் – அளவிலலாதபடி. பிழியும்தேனிற்ப் பிறங்கு அருவிததிரள பொழியும் சாரல்: இன்றைக்கும் அகத்தியர் ஆசிரமமெனறு திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாவநாசத்துக்கு மேலே மலையில் ஒரு ஆசிரமம் இருக்கிறது. ஆசிரமத்துக்கு அருகாமையில் ஒரு நீண்ட அருவித்துறை, திரள்திரளாக அருவிபொழிவதை வெகு தூரத்தில் நின்றே பார்க்கமுடியும். அந்த அருவி நீரைப பருகினவர்களுக்குத் தான, தேனடையிலிருந்து அப்போது பிழிந்த தேன்போல ருசியுள்ளதென்று தெரியவரும். இப்படியெல்லாம் அருவி பொழியும் மலைச்சாரலை வந்து அடைந்தார்கள் ராம லக்ஷமணர்.

குறிப்பு:— பாவநாசத்து அருவியைப் பற்றிச் சொல்லியிருக்கிற வர்ணனையிலிருந்து, அந்த இடத்தைக் கண்ணாரப் பார்த்துக் களித்திருக்கிறார் கம்பர் என்று உறுதி சொல்லலாம்.

## உலகு சமன் பெற்றது

17. அகத்திய முனிவர் எத்தனையோ துறைகளில்-ரசாயனம் வைத்தியம், ஆயுதம் வடித்தல், அணைகட்டி நீர் வளத்தைப் பெருக்குதல், சமய ஞானம் முதலிய எத்தனையோ துறைகளில்-மேதாவியாயிருந்தார். அவருடைய உயர்ந்த பண்பாட்டினால், உலகத்தார், எவ்வளவோ தொலைவில் உள்ளவரும், பயன்பெற்று வளம்பட வாழ நேர்ந்தது.

இத்தகைய அகத்திய முனிவர், தன் ஆசிரமத்தைக் கிட்டி ராம லக்ஷ்மணர்கள் வருகிறார்கள் என்பதை அறிந்து, தானே எதிர் வந்தார். மரியாதை முறைப்படி தான் தன் ஆசிரமத்திலேயே இருக்க வேண்டும். ராம லக்ஷ்மணர்கள், தான் தங்கியிருக்கும் ஆசிரமத்துக்கு வந்து தன் பாதத்தை வணங்கவேண்டும். இந்த மரியாதை முறைகளைப் பொருட்படுத்தாமல், வருகிற வழியிலேயே அவர்கள் வணங்கட்டுமே யென்று எதிர் செல்லுகிறார்; ராமனிடம் அவ்வளவு மரியாதை அகத்திய முனிவருக்கு. அகத்திய முனிவர் சாமானியப்பட்டவரா!

**சந்தம்**

தான தன
தன்ன தன
தன்ன தன
தன் ன

**ஆண் தகையர்
அவ்வ யின்
அடைந்த மைஅ-
றிந் தான்**

---

17. ஆண்தகையா - வீரர்களான ராம லக்ஷ்மணர். அவ்வயின் அடைந்தமை அறிந்தான - அங்கே வந்து சேர்ந்ததை அறிந்து கொண்டவனாய்.

ஈண(டு)உ வகை
வேலை, துணை
ஏழு லகும
எய் த
மாண்ட வர
தன்:ச ரண்
வழங்க எதிர்
வந் தான்,
நீண்ட தமி
ழால்உ லகை
நேமி யின்
அளந் தான (18)

---

17. ஈண்டு உவகை வேலை – நிறைந்த ஆனந்த சமுத்திரத்தை (உயர் வாழ்க்கையை) துணை ஏழுலகும் எய்த – பதினாலு உலகங்களும் இனிதநுபவிக்கும்படி. மாண்ட வரதன – கடாக்ஷம் பெற்ற மேதாவியான அகத்திய முனி. சரண் வழங்க எதிர் வந்தான – ராமலக்ஷ்மணர்கள் தன் பாதங்களை வணங்குவதற்காகத் தானாகவே எழுந்தருளி எதிர் வந்தான. நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான – அகத்திய முனிவர் காலத்திலேயே தமிழ்ப் பண்பாடு வெகு விரிவாக இருந்தது. பேரண்டத்திலுள்ள பெரிய பெரிய கலைகள், அதனுள் அடங்கியிருந்தன. திருமாலின் இரண்டு அடிகளுக்குள் பேரண்டம் ஒடுங்கியதுபோல உலகத்திலுள்ள கலைகள் எல்லாம் தமிழுக்குள் அடங்கி யிருந்தன. நேமி – சக்கராயுதத்தை ஏந்திய திருமால. குறிப்பு:— சாமான்ய மக்கள்கூட ஒரு விஷயத்திலீடுபட்டு அதை எடுத்துச் சொல்ல வரும்போது உருவக அலங்காரங்களோடு பேசுகிறார்கள். பூர்வத்திலுள்ளவர்களோ, உருவக அலங்காரங்களையே பாஷையாகக் கொண்டிருந்தார்கள் விரிவான பயனில் சொற்களுக்குள் உண்மை மறைந்து விட்டதெனறால், செல்வத்தை யெடுத்துக்கொண்டு கருங்கடலுக்குள் புகுந்தார்கள் என்று தானே சொல்லத்தோன்றும் தமிழ்ப் பண்பாடு ஆயிரக்கணக்கான வருஷங்களாக வளர்ந்து சகலவிதப் பண்பாட்டையும் தன்னுள் அடக்கியிருந்தது என்பதைச் சொல்லக் கம்பருக்கு ஒரே ஆத்திரம். அந்த ஆத்திர பாவம 'நீண்ட தமி ழால்உலகை நேமியின் அளந்தான' என்ற கடைசி அடியில் அருமையாய்த் துலங்குகிறது

அகஸ்தியரை இரு தடவை மடக்கி உயர்த்தியிருக்கிறது அதிசய பாவம்.

*18. மேலைநாட்டுக் கலைச் சரித்திரத்தில் ஒரு உண்மையைப்பற்றி எடுத்துச் சொல்லக்கேட்கிறோம்.*

இரண்டாயிர வருஷங்களுக்கு முன்பு கிரேக்கர்கள் மிக உயர்ந்த பாணியில் கலைகளையும் இலக்கியங்களையும் அமைத்து வைத்திருந்தார்கள். அவர்களுடைய ரசிகத் தன்மை அபூர்வமாயிருந்தது. பிற்காலத்தில் ரோமாபுரியிலுள்ளவர்கள் மேலே சொன்ன கிரேக்கக் கலைகளைக் கற்கத் தொடங்கினார்கள். ஆனால், அந்தக் கலைகளின் உண்மைத் தத்துவமும் ரஸமும் அவர்களுக்குப் பிடிபடவில்லை. அது காரணமாக, இலக்கண கர்த்தாக்களும் வியாக்கியான கர்த்தாக்களும் அவதரித்துவிட்டார்கள், புற்றீசல்போல அவதரித்துவிட்டார்கள். உண்மையுணர்ச்சி குறையக் குறைய, வியாக்கியான கர்த்தாக்களின் ஆதிக்கம் அதிகமாய்ப் போயவிட்டது. கலைக்கு, அவர்களெல்லாம் அசுரர்களே ஆனார்கள். அவர்கள் எழுதியுள்ள கணக்கில்லாத வியாக்கியானங்களுக்குள் உண்மைக் கலையை இருக்கிற இடம் தெரியாதபடி புதைத்து விட்டார்கள். உண்மைக் கலையொன்று இருப்பதாக அவர்களுக்குச் சொல்லமுடியாமலே போயிற்று.

இந்த நிலையில் பெரியார் ஒருவா, வியாக்கியான கர்த்தாக்களையும் அவர்களது படாடோபங்களையும் கண்டித்து ஒதுக்கத் தலைப்பட்டார். அதற்காக எவ்வளவோ நூல்களை, எத்தனையோ ஆண்டுகளாக, ஆராயந்தார். ஆராய்ந்ததன் பலனை உலகத்துக்கு எடுத்துச் சொன்னார். மறைந்துபோன பூர்வ கலை

அவரால் மக்களுக்கு உதவ வந்தது. (இது நடந்து 500 ஐந்நூறு வருஷங்கள் ஆய்விட்டன.) —சவன ரோலா.

மேலே சொன்னபடி உயர்ந்த பண்பாடுகள் மறைந்து போகவும் மறுபடி அவைகளை மீட்கவும் ஏற்பட்டது கம்பர் காலத்திலேயே. அதி பூர்வமான காலத்திலும் அப்படியே, கலைகள் மறையவும் அகத்திய முனிவர் அவைகளை விரிந்த ஆராய்ச்சியினால் மீட்டு உலகத்துக்கு உதவினார். இதையும் கம்பர் கண்டார். இதைக் கம்பர் எப்படி விளக்குகிறார் என்று பார்ப்போம்.

அவுணர்கள் என்ற வேண்டாத வர்க்கத்தவரிருந்தார்கள். அவர்கள் உலகத்திலுள்ள அரிய வஸ்துக்களை எடுத்துக்கொண்டு போய் சமுத்திரத்துக்குள் ஒளித்து வைத்து விட்டார்கள். தேவர்கள் போய் அகத்திய முனிவரிடம் குறையிரந்தார்கள். விஷயத்தைத் தெரிந்துகொண்டு, சமுத்திரத்தை உள்ளங்கையில் வாரி முகந்து அப்படியே உண்டுவிட்டார் அகஸ்தியர். தேவர்கள் உமிழவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவரும் உமிழ்ந்தார். உலகத்துக்குச் சிறந்த பொருள் எல்லாம் கிடைத்தன. அதாவது, உயர்ந்த கலைகள் மக்களுக்கு மீண்டு வந்தன.

**பண்(டு)அ வுணர்**
**மூழ்கி னர்**
**படார்கள் என**
**வா னோர்**

---

18. பண்டு — பூர்வ காலத்தில். அவுணர் மூழ்கினர் படார்கள் என — சமுத்திரத்தில் மூழ்கிய அவுணர்கள் தொலைய மாட்டார்கள் என்று எண்ணி. வானோர்— யாவராலும்.

'என்த வ !
எமக்க ருள்'
எனக் குறை
இரந் தார்க்

கண்(டு)ஒ ருகை
வாரி னன்
முகந்த கடல்
எல் லாம்

உண்டு, அவர்கள
பின்'உ மிழ்க'
என்ற லும்,
உமிழ்ந் தான். (19)

**19.** நாம் வேறு கடவுள் வேறு என்ற வித்தியாசம் அற்றுக் கடவுள்த் தத்துவத்தோடு, ஒன்றுவது தான் யோகம். இப்படிக் கடவுள்த் தத்துவத்தோடு ஒன்றுவதற்கு இடையூறாய் நிற்பது ஆணவம். அது ஒரு மலை போலவே நிற்கிறது. ஏறிச்செல்லமுடியாத மலை அது. ஆனால், ஆணவம் என்பதுவெறும் மாயை,

---

18. என் தவ எமக்கு அருள என – மதிக்கப்படுகின்ற தவசிரேஷ்டரே, எங்களைக் காப்பாற்றி அருளவேண்டும் என்று சொல்ல குறையிரந்தார்க் கண்டு – அப்படிக் குறையிரந்த தேவர்கள் நிலையைப் பரிவுடன் பார்த்து. ஒரு கை வாரினன் முகந்த கடல் எல்லாம் உண்டு – ஒரு கையினால் வாரினவனாய் முகந்த கடலை எல்லாம் உண்டு. அவர்கள பின உமிழ்க என்றலும் – தேவர்கள் அடுத்தாற் போல் உமிழ்ந்தருள வேண்டும் என்று சொல்லவும். உமிழ்ந் தான் – கடலைத்தான் உமிழ்ந்தான்.

அதைக் கொஞ்சம் கூர்ந்து பார்த்து விட்டோமானல், அப்படியே அமிழ்ந்து போய்விடும். பாதாளத்துக்கே போனமாதிரி ஒழிந்துவிடும் என்று சொல்லுவார்கள் ஞானிகள். அத்தகைய ஞானியாய் அகத்திய முனிவர் விளங்கினர். அவருடைய ஞானத்தை மற்றவர்களுக்கும் உதவினர். ஞானத்தைப் பெற்றவர்களுக்கு ஆணவத்தைக் கடந்து, கடவுள்த் தத்துவத்தோடு ஒன்றுவது எளிதாயிற்று. விந்தியமலை (நாகமது) பாதாளத்துக்கே போய் ஒழிய (நாகம் உற), யோகக் களிருக (நாகம் என) நின்றர், அகத்திய முனிவர்.

**யோ**கம் உறு
பேர்உ யிர்கள்
தாமஉ லைவு
று மல

ஏகும் நெறி
யாதெ ன, -
மிதித்த டியின்
ஏ றி,

---

19 யோகம் உறு போஉயிரகள - யோக நிலையை அடைய முயலும் பெரியோர்கள். தாம் உலைவுறுமல ஏகும் நெற யாது என - தங்களுக்குக கஷடமில்லாமல கடவுள்த் தததுவததை அடைவதறகான மார்க்கம் எது எனறு கேட்கவும் மிதிதது அடியில ஏற - விந்திய மலைபோலத தாணட முடியாதபடி இருந்த ஆணவததைக் காலால் மிதித்துத் தாணடிக் கடவுள் தததுவததோடு கலப்பதை எடுத்துக் காட்டினர்

மேக நெடு
மாலை தவழ்
விந்தை எனும்
விண் தோய்

நாக மது
நாகம் உற
நாகம் என
நின் ருன். (20)

20. கிரேக்க தேசத்தில் ஈஸாப் என்ற பேராசிரியர் ஒருவர்இருந்தார். அவர் எழுதிய கதைகள் உலகெங்கும் பிரசித்தி பெற்றவை. கதையில் வரும் பாத்திரங்கள் எல்லாம் அனேகமாய் மிருக வகையைச் சேர்ந்தவையாய் இருக்கும் அல்லது தேவலோகத்திலுள்ள பெரும் பூதங்களாகவோ குறும் பூதங்களாகவோ இருக்கும். பாத்திரங்கள் பலவகையாய்ப்

---

19. மேக நெடு மாலை தவழ் – மேகங்கள் நீண்ட நீண்ட மாலையாகக் கோத்துத் தவழ்கின்ற சிகரங்களையுடைய விந்தை எனும் விண்தோய நாகமது – விந்திய பருவதமென்னும் வானத்தை எட்டுவதான மலையானது. நாகம் உற – நாகலோகமாகிய பாதாளத்துக்குப் போய்த் தொலைய. நாகமென நினருன் – களிறுபோல் நின்ருன்; அதாவது யோக உலகில்.

குறிப்பு:— உத்ஸாகம் 'உண்டாகிற காலத்திலும், உத்ஸாகத்தை எடுத்துச் சொல்லும் காலத்திலும் 'கும்மாளிபைக் காட்டும் மடக்குகளும் நொடிப்புகளும் பாஷையில் தாமாக வந்து ஒலிக்கும். 'அந்த விதமாக ஒலிக்கிறது – 'நாகமது நாகம் உற நாகமென 'நின்ருன்' என்ற கடைசி அடி. வெறும் சிலேடைச் சிலம்பம் என்று தள்ளிவிடலாகாது.

பேசும். எப்படிப் பேசினாலும் மனிதர்களுடைய இதய பாவத்தையே எடுத்துக் காட்டும். ஆகவே, பாத்திரங்கள் எல்லாம் மக்கள்தான். அவர்கள் என்ன என்ன வேஷத்தை எல்லாமோ மேலே போட்டுக் கொள்ளுகிறார்கள். கதைகள் உலகப் பிரசித்தியாய் இருப்பதற்கு, மேலே சொன்ன மக்களது இதய தத்துவங்களும், உண்மைகளுந்தான் காரணம்.

நம்முடைய முன்னோர்களும் இந்த விதமாகக் கதை கட்டினார்கள். கதை ஒன்றைப் பார்க்கலாம்.

புலவர்கள் பிரம்மாண்டமான ஒரு தராசைத் (துலாக்கோல்) தூக்கிப் பிடித்தார்கள். பிடித்த இடதுகை, நக்ஷத்திர மண்டலங்களுக்குள் நிற்கிறது. தராசின் இரு தட்டுகளும், வடதிசை தென் திசையாகிய துருவ மண்டலங்களில் நிற்கின்றன. ஒரு தட்டில் உலகத்தையே தூக்கிப் போட்டார்கள். அந்தத் தட்டுக் கீழேபோய் நின்றது. உடனே அடுத்த தட்டில் மதுரை நகரத்தைத் தூக்கி வைத்தார்கள். அவ்வளவுதான் : அந்தத் தட்டுக் கீழே இறங்கியது, பளுவினால். உலகமிருந்த எதிர்த் தட்டோ மேலேயே போய்விட்டது. பளுவில்லை.

இதன் பொருள் என்ன? உலகமெங்கும் பரந்துள்ள புலமையைவிட மதுரைமா நகரம் புலமை செறிந்தது, (பளுவானது) என்பதுதான்.

வெண்பா

உலகம் அனைத்தும்
எதிர்துலையா வைத்துப்,

புலவர் புலக்கோலால்த்
தூக்க, — உலகம்அது

தான்வாட,— வாடாத
தன்மைத்தே' தென்னவன்

நான்மாடக் கூடல்
நகர் !

இந்தப் பாட்டிலுள்ள பொருளை அபாண்டமென்று யாரும் சொல்ல முன்வருவார்களா? மாட்டார்கள். கவிஞரது சாதுரியத்தையும் ஆர்வத்தையுங் கண்டு வியப்பார்கள், அனுபவிப்பார்கள். இதயத்தின் உண்மைத் தத்துவம் எல்லாருக்கும் பட்டு விடும். இனி:

*　　　*　　　*

இமய மலையில் பார்வதிக்கும் சிவபிரானுக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது. நாளைக் காலை கல்யாணம். இன்று மாலை உலகத்திலுள்ள சகல ஆன்மாக்களும் வந்து கூடிவிட்டார்கள். இமயமலையின் பாரம் போதாதென்று விருந்தினர்கள் பாரமும் சேர்ந்து கொண்டது. அப்படியே அந்த இமயமலைப் பிரதேசம் பாதாளத்தை நோக்கிக் கீழேபோய்க் கொண்டிருந்தது. பார்த்தார் சிவபெருமான். குறுமுனியாகிய அகத்தியரைக் கூப்பிட்டு, 'தென் கோடிக்கு உடனே செல்லுவீராக' என்று சொன்னார். முனிவரும் அப்படியே பொதிகை மலைக்கு வந்து சேர்ந்தார். பூமி சமமாயிற்று. ஏன் அகத்திய முனிவரிருந்த பிரதேசமே, பளுவாய்ப் போய்க் கொஞ்சம் கீழே இறங்கியது. சிவபெருமானும் மற்றவர்களுமிருந்த வடபக்கம் உயர்ந்து போய்விட்டது. தெற்கிலுள்ள அகத்திய முனிவரது பண்பாடு மிகப் பெரிது என்று சொல்லவந்த கதை இது.

அரவாபரணம் சூடிய சிவபெருமான், என்றென்றும் புகழுக்குரியவரான அகத்திய முனிவரைப் பார்த்துத் 'தெற்கு நோக்கி ஏக வேண்டும்' என்றார்.

மூச ரவு
சூடும் முத-
லோன், 'உரையில்
மூ வா,

மாசில் தவ!
ஏ'கெ ன,-
வடாது திசை
மேல் நாள்

நீசம் உற,
வானில் வளர்
மாம லயம்
நே ரா,

---

20. மூசு அரவு சூடும் முதலோன் — வேகத்தோடு சுவாசம் விட்டுக்கொண்டிருக்கும் சர்ப்பத்தைத் தலையில் சூடிய சிவபெருமான். உரையில மூவா மாசில் தவ — சோர்வுபடாத புகழையுடைய குற்றமற்ற தவ ஒழுக்கத்தில் நிற்கும் அகத்திய முனிவரே. ஏகு என — செல்ல வேண்டும் என்று சொல்லவும். வடாது திசை மேல நாள நீசமுற — உத்தர திசையென்று பாராட்டிய வட திசையானது, அந்தப் பூர்வ காலத்தில் இழிவுபட.

ஈசன் நிக
ராய்உ லகு
சீர்பெ றஇ-
ருந் தான். (21)

---

20. வானில் வளர் மாமலையம் நேரா – வானத்தை ஊடுருவி நிறகும் நீண்ட பொதிகை மலையைச் சேர்ந்து. ஈசன் நிகராய் – உலகத்தின் கோணல் நிமிர்ந்து சீர்பெற.

குறிப்பு.— தமிழ் நாட்டிலுள்ள பண்பாடு மிக உயர்ந்ததென்று வட இந்தியாவிலுள்ள தறகாலத்துச் சரித்திர ஆசிரியர்கள் சகலரும் சொல்லுகிறுர்கள். கம்பர் அதற்கு வியாக்கியானம் செய்த முறையிலப் பாடல் வகுக்கிறுர்.

## உன் வரவு நல்வரவு.

21. தென்னாட்டுக் கலைகளுக்கெல்லாம், சமய தத்துவங்களுக்கெல்லாம், அதிதேவதையாக அகத்திய முனிவர் விளங்குகிறார். ஆகவே வட நாட்டிலுள்ள சமயதத்துவ உண்மைகளையும் அறிந்து அனுபவிக்கக் கூடியவர் அவர்தானே?

ராமன் என்ற சக்கரவர்த்தித் திருமகன் கடவுள் தத்துவத்தில் நன்றாய்த் திளைத்துள்ளவன். அவனுடைய தியாகமும் வாழ்க்கையும், அப்படித் திளைத்தவன் என்பதைத் தெளிவுபட எடுத்துக் காட்டுகின்றன. ராமனைக் கடவுளாகவே கருத வேண்டும் என்றெல்லாம் பாராட்டுகிறார் முனிவர்.

கடவுள் எங்கும் வியாபித்தவன், எப்படி வியாபித்தவன்?

வானத்தில் நிறைந்திருப்பவன், பூமிக்குள் நிறைந்திருப்பவன், பஞ்ச பூதங்களில் நிறைந்திருப்பவன். பேரண்டமுழுதும் வியாபித்திருக்கும் வஸ்துவின் உள்ளத்திலும் நிறைந்திருப்பவன் · இவைகளையெல்லாம் கண்டறிந்து பாடும் வேதங்களில் எல்லாம் நிறைந்திருப்பவன் என்றும் ஞானிகள் உணருகிறார்கள். அப்படி உணரும் உணர்வும் கடவுள்த் தத்துவந்தான். அது கண்ணுக்கு எவ்விதத்திலும் தென்படாத பொருள். அந்தப் பொருளையே நான் கண்ணாரப்

பார்க்கப் போகிறேன் என்று ஒரே எக்களிப்போடு பேசுகிறார் முனிவர்.

சந்தம்

தான னன
தன்ன னன
தன்ன னன
தன் ன

விண்ணி னில்,
நிலத்தி னிச்
விகற்ப உல-
கிலப் பேர்

எண்ணி னில்,
இருக்கி னில்
இருக்கும் என
ஓ ரும்

உள் நி லை
உணர்வி னை
உறப்பெ றுவெ
ளுல் என்

21. விகற்ப உலகில் – வேறுபட்ட பஞ்ச பூதங்களிலும் அவைகளால் ஆகிய எண்ணிறந்த பேத உருவங்களிலும். பேர் எண்ணினில – எப்படி நம்முடைய எண் சாண உடம்பெங்கும் வியாபித்த ஒரு தனித்த மனசு இருக்கிறதோ, அப்படியே பேரணடம் முழுதும் எல்லாப் பொருள்களிலும் நிறைந்துள்ள தனி மனசு. அதாவது இறைவனது அறிவு வியாபிததிருக்கிறது. இருக்கினில் இருக்கும் என ஒரும் – இருக்கு வேதத்தைப் போன்ற நூலகளிலும் கடவுள் தத்துவத்தைக் காணலாம் என்று உணரும். உள நிலைஉணாவினை – ஞானிகளது உள்ளத் திருநது உணர்கிற உணர்வுத் தத்துவமாகிய கடவுளை. (அதாவது ராமனைத்தான்).

கண்ணி னில்
எனக்கொ டு
களிப்பு றும-
னத் தான். (22)

22. சித்த வைத்தியம் என்பதாகப் பூர்வமான மருத்துவக் கலையொன்று இருக்கிறது, அது அகத்திய முனிவர் காலத்திலிருந்தே தொடர்பாய் வந்திருக்கிறது. அதன்படி எத்தனையோ பக்குவங்களுண்டு. அதில் ஒன்று, சில உலோகங்களை, முக்கியமாகப் பொன்னை, சில மூலிகைகளோடு சேர்த்துப் பெரிய குழி அம்மியில் வைத்துப் பளுவான குழவிகொண்டு அரைப்பார்கள். இடைவிடாது அரைப்பார்கள். ஆறுமாசம், ஒரு வருஷங்கூட அரைக்க வேண்டியிருக்கும். அப்படியெல்லாம் அரைத்தபின்தான், மருந்தின் சக்தி வெளிவரும் என்று சொல்வார்கள். இந்த விதமான வைத்தியத்தின் கரைகண்டவர், அகத்தியர்.

ஞான மார்க்கத்தில்க் கடவுள் தத்துவத்தைக் காணப் பேரறிவாளர் (பிரம்மா போன்ற பேரறிவாளர்) எவ்வளவோ முயலுகிறார்கள். வேதங்களின்

---

21. கண்ணினில் உறப்பெறுவனல் — என் கண்ணுக்குத் தென்படப் போகிறது. எனக் கொடு களிப்புறும் மனத்தான் — என்று எண்ணிக்கொண்டு ஒரே எக்களிப்பில் எதிர்பார்க்கிற அகத்திய முனி.

குறிப்பு:—கடவுள்த் தத்துவம் சர்வ வியாபகம் என்றால் போதாது: இங்கே அங்கே என்று சுட்டிக் காட்டுவதில் உண்மைக்கு வேகமும் பாவமும் உண்டாகிறது. அத்தகைய வஸ்துவோடு ஒன்றாகக் கலந்தவன் ராமன் என்பது பொருள். பாட்டின் துள்ளலில் எக்களிப்பு பாவத்தை நன்றாய்ப் பார்க்கலாம்.

உட்பொருள்களையும், வேதங்களோடு சேர்ந்த பிற சாஸ்திரங்களையும் தங்கள் பரந்த அனுபவ ஞானத்தில் வைத்து அழுத்தமாய் ஆராய்கிறார்கள். எவ்வளவோ காலம் விடாது ஆராய்கிறார்கள். அப்படி ஆராய்ந்தும், கடவுள்த் தத்துவம் கிட்டுவதில்லை. அப்படிக்கிட்டாத பொருளே, அதாவது கடவுளே, தனக்குமுன் வந்து வார்த்தையாடப் போகிறது என்ற உணர்ச்சியில் நிற்கிறார் அகத்தியர்.

இரைத்த மறை
நாளி னொ(டு)
இயைந்த பிற
யா வும், -

நிரைத்த நெடு
ஞான நிமிர்
கல்வின் நெடு
நாள் இட்(டு)

அரைத்தும், அய
னாலும் அறி
யாத பொருள்,
நேர் நின்(று)

---

22. இரைத்தமறை – உண்மையை யெடுத்து வேகத்தோடு சொல்லுகிற (வேதங்கள்) மறைநூல்களையும். இயைந்த பிற யாவும் – அந்த மறைநூல்களோடு சம்பந்தப்பட்ட சாஸ்திரங்களையும். நிரைத்த நெடு ஞானம் – வெகு நாளாக வரிசைப்படுத்தி வைத்த அனுபவ ஞானமான. நிமிர் கல்வின் – மலைபோன்ற ஒரு பெரிய குழி அம்மியில். நெடுநாளிட்டு அரைத்தும் - யுகம் யுகமாகவே வைத்து அரைத்தும், அதாவது ஆராய்ச்சி செய்தும். அயனாலும் அறியாத - பிரம்மா போன்ற பேரறிஞர்களாலும் கண்டறியாத. பொருள் - கடவுளாகிய வஸ்து. நேர்நின்று உரைக்கு

உரைக்கு தவு
மால்ள னும்
உணர்ச்சி யின்
உவப் பான். (23)

23. தேகத்தில் ஒரு நோய் புகுந்துகொள்ளு கிறது. எலும்புக்குள்ளுமே புகுந்து விடுகிறது. சரி யான மருத்துவன் வந்தானுனல் நோயையும் அதனுல் ஏற்பட்ட விஷத்தையும் வேர றக் களைந்து விடுவான். தேகம் ஆரோக்கியம் அடைந்து பல நன்மைகளைச் செய்யவும் அனுபவிக்கவும் வசதி பெறுகிறது.

இதுபோலவே சமூகமாகிய தேகத்துக்குள் தீய கொள்கைகள் பிரவேசித்து அதன் காரணமாக ஒழுக் கம் பண்பாடுஎல்லாம்ஒழிந்துபோக நேருகிறது. இந்த நோய்வாய்ப்பட்டுக்கஷ்டப்படுகிறது சமூகம்.உயர்ந்த லக்ஷ்யத்தோடு கூடிய மகாபுருஷன் ஒருவன் வருகி ருன், தவருன கொள்கைகளை யெல்லாம் அகற்று கிருன், உயர்ந்த லக்ஷ்யங்களை இதயத்தில் பதியச்

---

உதவுமால் - எனக்கு நேராகவந்து வார்த்தையாடப் போகிறது, அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டி விட்டது என்று. உணர்ச்சியின உவப்பான் - மிக்க உணர்ச்சியோடு பரவசமாகிருர் முனிவர்.

குறிப்பு:—கம்பர் சமயக்கலையில் எவ்வளவு தெளிந் திருந்தாரோ அப்படியே, மருததுவம் முதலிய கலைகளிலும் பயினறிருந்தார். இது பறறியே அவரைக் ‘கலவியில் பெரியவர்’ என்ருர்கள்.

செய்கிறான். அது காரணமாகச் சமூகத்துக்கு இன்ப வாழ்க்கை எய்த நேருகிறது. இது நமது அனுபவம்.

'உய்ந்த னர்
இமைப்பி லர்;
உயிர்த்த னர்த
வத் தோர்;

அந்த ணர்
அறத்தின் நெறி
நின்ற னர்க
ளா னார்;

வெந்தி றல்
அரக்கர் விட
வேர்மு தல்அ
றுப் பான்

23. உய்ந்தனர் இமைபபிலர் - தேவர்கள் பிழைத்தார்கள்: அதாவது உயர்ந்த லக்ஷ்யத்திலிருப்பவர்கள் பிழைத்தார்கள். தவ ஒழுக்கத்திலிருந்த முனிவர்களுக்கு உயிரே போன மாதிரி யிருந்தது. அவர்களுக்கு உயிர் வந்து விட்டது. அந்தணர் - வைதிகத் துறையில் நிற்பவர்கள். வெந்திறல் அரக்கர் - கொடுமை செய்வதில் திறமையுடைய அரக்கரை; அதாவது நல்ல பண்பாடுகளைக் கெடுக்கும் தீய கொள்கைகளை. விட வேர்முதல அறுப்பான - சமுதாயத்துக்குள் எங்கெங்கும் புகுந்துள்ள விஷ வேர்களை அடியோடு பிடுங்கி எறியும் படியாக.

வந்த னன்
மருத்து வன்
எனத்த னிவ
லிப் பான். (24)

24. ராமன் வருவதைக் கண்டு கொண்டார் முனிவர். அவ்வளவுதான்: இதய மிளகிக் கண்ணீ ராய்ப் பொழியலுற்றது. அடி எடுத்துவைக்க இயல விலலை. நின்று விட்டார்.

நுண்ட னன்
இராம னை
வரக்;க ருணை
கூ ரப்

புண்ட ரிக
வாள்ந யனம்
நீர்பொ ழிய
நின் ருன்;-

---

23. வந்தனன் மருத்துவன் - நம்மிடை வந்தான், ராம ஞகிய மருத்துவன். தனி வலிப்பான் - என்றுமில்லாத உறுதியோடு நிற்கிருர் முனிவர்.

குறிப்பு:— சமூகம் எவ்வளவு கெட்டுப் போயிருந்த போதிலும் உண்மையான லக்ஷயங்களை யெடுத்துப் பரப்பும் சக்தி வாய்ந்த மகாபுருஷன் ஒருவன் இருந்தால் சமூகம் நிச்சயமாகத் திருந்திவிடும் என்ற நம்பிக்கையிலிருக்கிருர் கம்பர். இது பற்றியே உய்ந்தனர், உயிர்த்தனர், நின்றனர் களானுர் என்ற இறந்த கால இலக்கண வழக்கைக் கையா ளுகிருர். இதனுல், கவிக்கு உறுதி பாவம் ஏற்படுகிறது.

24. கருணைகூர - அன்பினுல் மனம் இளக. புண்ட ரிக வாள் நயனம் - தாமரை மலர்போன்ற பிரகாசமான கண்ணிலிருந்து. நீர் பொழிய நின்ருன் - ஆனந்தக் கண்ணீர் பொழிய அப்படியே நின்றுவிட்டான்.

எண்தி சையும்
ஏழ்உ லகும்
எவ்வு யிரும்
உய் யக்

குண்டி கையி
னிஸ்ப,பொ ருவில்
காவி ரிகொ
ணர்ந் தான். (25)

---

24. எணதிசையும் ஏழுலகும் எவவுயிரும் உய்ய—விரிவான பிரதேசததில் வாழும்உயிர் வர்க்கஙகளுக்கெல்லாம், உணவு ஏராளமாகக் கிடைதது வாழும்படி. குணடி கையினில் பொருவில் காவிரி கொணர்ந்தான் — வெள்ளப்பெருக்கோடு கூடிய ஒப்பில்லாத காவிரியையே கலசத்தில்க் கொண்டு வந்தவரான அகத்திய முனி நின்ருன். சகல கலேயும் அடங்கிய பண்பாடு குணடிகை.

குறிப்பு:— அணே தடுததும், ஏரி வெட்டியும், உழவுத் தொழிலுக்கு எவ்வளவோ பெரும் உதவி பூர்வகாலத்தில் செய்தவர் அகத்தியர். இதை யாரும் அனுபவிக்க வேண்டியதுதான். கம்பரும் அனுபவிக்கிருர். அந்த அனுபவம் பாவமாக உருவெடுக்கிறது செய்யுளில்

எண்தி சையும் ஏழு லகும்
எவவு யிரும் உய் யக்

குண்டி கையி னில்ப்பொ ருவில்
காவி ரிகொ ணர்ந் தான!

25. அப்படி நின்ற அகத்திய முனிவரை ராமன் வந்து அடி பணிகிறான். முனிவரும் ராமனை அன்போடு தழுவிக் கொண்டார். முனிவருக்கு வாய் பேச எழவில்லை. ஆனந்தக் கண்ணீர் பொழியும் கண்ணாலேயே, 'உன் வரவு நல்வரவாகுக' என்று சொன்னார்.

நின்ற வனை
வந்த நெடி-
யோன்அ டிப
ணிந் தான்;

அன்ற வனை
அன்பொ டுத-
ழீஇ,அ ழுத
கண் ணால்

'நன் று வர(வு)'
என் று, பல
நல்உ ரைப-
கர்ந் தான்,-

---

25. நின்றவனை – ராமன் வருவதைக் கண்டவுடன் அப்படியே நின்ற அகத்திய முனிவரை. வந்த நெடியோன் – வடக்குத் திக்கிலிருந்து வந்த ராமன். அடி பணிந்தான் – காலில் விழுந்து நமஸ்கரித்தான். அன்று அவனை – அப்பொழுது அந்த ராமனை. அன்பொடு தழீஇ – மிக்க பரிவோடு ஆலிங்கனம் செய்து. அழுத கண்ணால் நன்று வரவு என்று – வாய் பேசமுடியாத நிலையில் கண்ணீர் ததும்பும் கண்ணாலேயே நல்வரவு கூறிவிட்டு (சிறிது நேரம் கழித்து). பல நல் உரை பகர்ந்தான் – மன அமைதி ஏற்பட்டவுடன் உபசார வார்த்தைகள் சொன்னான்.

என்றும் உள
தென்த மிழ்
இயம்பி இசை
கொண் டான். (26)

25. என்றும் உள தென்தமிழ் இயம்பி இசை கொண் டான் — என்றென்றும் உளதாய் நிற்கும் அழகிய தமிழ்ப் பாடல்களைப் பாடிப் புகழ்பெற்றவனை. தென்தமிழ் — வடமொழி ஒன்றுதான் வடநாட்டில் பிரசித்தி பெற்றதாய் இருந்தது. தெற்கே தமிழ் மொழியொன்று மிக்க விரிவா யும், பண்பாடுடையதாயும் இருப்பதை எடுத்துச் சொல்லு வது மரபாயிருந்தது. தென் தமிழுக்கு மாறுன பதம் வட தமிழ் அல்ல ; ஆனுல் வடமொழி, தமிழ் என்ருல் தமிழ் மொழி அல்ல. தமிழ் இலக்கியம்.

# இங்கேயே தங்கவேண்டும்

26. ராமனைச் சந்தித்து உபசார வார்த்தையெல்லாம் அகத்தியர் சொல்லி முடித்தார். சொல்லி முடித்ததும் ரிஷிகள் குழாமாக வந்து சேர்ந்தார்கள், ராமனை வரவேற்பதற்காக, மறை பாட வல்லவர்கள் பல வேறு வகைப்பட்ட பாடல்களைப் பாடினார்கள். பாடல்களைக் கேட்ட மாத்திரத்திலே ஆனந்தத்தில் மூழ்கியவனாய் அப்படியே நின்றுவிட்டான் ராமன். சிறிது நேரங் கழித்துத்தான் அவனுக்குத் தன் வசம் வந்தது. கலசங்களிலுள்ள தீர்த்தத்தை மாங்குழை கொண்டு, வழியில் தெளித்தார்கள். புஷ்பங்களையும் நீள நீளமாகத் தூவினார்கள்.

சந்தம்

தான தன
தன்ன தன
தன்ன தன
தன் ன

வேதி யர்கள்
வேத மொழி
வேறு பல
கூ றீ,

காதல் மிக
நின்(று)எ ழில்க-
மண்ட லுவின்
நன் னீர்

---

26. காதல் மிக நின்று - ஆனந்த மேலீட்டினால் அப்படியே நின்று. எழில் கமண்டலுவின் நன்னீர் — அழகிய கலசத்திலிருந்த தீர்த்தத்தை.

மாத வர்கள்
வீசி நெடு
மாமலர்கள்
தூவப்,

போது மணம்
நாறு குளிர்
சோலை கொடு
புக்கான். (27)

27. ரிஷிக் குழாத்தோடு சோலைக்குள் புகுந்து அங்கே விருந்துண்டு சௌக்கியமாக இருந்தான். அப்போது, தன் ஆனந்தத்தை வெளியிடுகிறார் அகத்தியர்.

பொருந்த அம-
லன்பொழில்
அகத்தினிது
புக்கான்

விருந்த வண்
அமைத்த பின்
விரும்பினன்
இருந்தான்,

---

26. நெடு மாமலர்கள் தூவ - நீள நீளமாகப் புஷ்பங்களை வழியில் தூவ. போது மணம் நாறு குளிர் - புஷ்ப வாசனையும் குளிர்ச்சியுங் கொண்ட. சோலைகொடு புக்கான்— சோலைக்குள் புகுந்தான் ராமன்.

27. பொருநத - ரிஷிக்குழாத்தோடு ஒத்து நடந்து, அமலன் - ராமன். பொழில அகதது இனிது புக்கு - சோலைக்குள் புகுந்து. விருந்து அவன் அமைத்த பின - அங்கே விருந்து நடத்திய பின்பு விரும்பினன் இருநதான் - விருப்பத்தோடு உண்டு இனிது இருந்தான ராமன.

'இருந்த வம்
இழைத்த(து) என(து)
இல்:இ டையில்
வந் தென்

அருந்த வம்
முடித்த னை
அருட்க ரச!'
என் றான். (28)

28. அகத்திய முனிவர் மகாஞானி. அவரே ராமனைப் பார்த்து நீ தான் மகா ஞானியென்று பாராட்டிவிட்டார். ராமனுக்கு இதைவிட மேலான அங்கீகாரம் இந்த உலகத்திலிருக்க முடியுமா? இதை நன்றாய் உணர்ந்து, ராமன் தன் ஆனந்தத்தை வெளியிடுகிறான். "தேவர்களும், தவசிகளுக்குத் தவசி என்று சொல்லக்கூடிய பெரியோரும்கூட உன்னிடம்

---

27. இருந்தவம இழைத்தது எனது இல் - என்னுடைய குடிசை எவ்வளவோ பெரிய தவத்தைச் செய்திருக்க வேண்டும். அல்லாத பக்ஷம், நீ இங்கே வந்து தங்க நேருமா? இடையில வந்து என அருநதவம் முடித்தனை - இன்னும் எத்தனையோ வருஷங்கள் அரிய தவம்செய்தால்த் தான அதன் பயன் எனக்குக் கிட்டும். அப்படி யெல்லாம் செய்யவேணடாதபடி எனக்கு இப்போதே அந்தத் தவத தின் பயன் கிடைத்துவிட்டது. எல்லாம் உன்னைக் காணக் கிடைத்த காரணமாகத்தான. அருட்கு அரச - அருளுக்குப் புகலிடமாயுள்ள அரசனே; ராமனே.

இந்த அங்கிகாரத்தைப் பெறவில்லை. எனக்கல்லவா கொடுத்து வைத்திருக்கிறது அது. எனக்குக் கிட்டியது சாமான்யமான இந்த உலகமா? அல்ல. எல்லா உலகத்தையும் அடக்கியுள்ள இறுதியில்லாத பரலோகமே கிட்டிவிட்டது'' என்று அகத்தியரைப் பார்த்துச் சொல்லுகிறான் ராமன்.

என்ற முனி
    யைத்தொ ழு(து)
        இராமன், 'இமை
            யோ ரும்,

நின்ற தவம்
    முற்றும் நெடி
        யோரின் நெடி
            யோரு ம்,

உன் தன் அருள்
    பெற்றி லர்;யான்
        உன்அ ருள்சு
            மந் தேன்!

வென்ற னென்
    அனைத்து லகும்!
        மேல்இ னிஎன்?'
            என் றான். (29)

---

28. இமையோரும் — தேவர்களும். நின்ற தவம் முற்றும் — ஏற்றுக்கொண்ட தவத்தைக் கடைசிவரை செய்து சாதித்த. நெடியோரின் நெடியோரும் — பெருமை வாய்ந்தவர்களுக்குள் 'பெரியோராய் உள்ளவரும். மேல் இனி என் எனறான் — இதற்கு மேலான பாக்கியம் வேறு என்ன இருக்கிறது என்றான் ராமன்.

29. முனிவரைச் சந்தித்ததனாலாகிய அளவிலா ஆனந்தத்தை ராமன்சொல்லவும், முனிவருக்கு ஊக்கமும் துணிவும் உண்டாய் விடுகிறது. ராமனைப் பார்த்துச்சொல்லுகிறார்: 'தண்டகாரண்யத்தில் நீ வசித்துக் கொண்டிருந்த செய்தியை எனக்கு சொன்னார்கள். அதனால் இந்தப் பக்கமும் வருவாய் என்று எதிர் பார்த்தேன்.'

தண்ட க
வனத்து றைதி
என்று ரைத-
ரக்கொ ண்(டு),

உண்டு வர(வு)
இத்தி சை
எனப்பெ ரி(து)உ-
வந் தேன்!

என்த கு
குணத்தி னை!'
எனக்கொ(டு) உயர்
சென் னி

துண்ட மதி
வைத்த வனை
ஒத்த முனி
சொல் லும்: (30)

---

29. தண்டக வனத்து உறைதி – தண்டகாரண்யத்தில் நீ வசிக்கிறாய் என்பதை. உரைதரக் கொண்டு - சொல்லக் கேட்டு. உண்டு வரவு இந்திசையென - இந்தப் பக்கமாக வர உத்தேசமுண்டு உனக்கு என்பது தெரிந்து பெரிது உவந்தேன் – மிகவும் சந்தோஷப் பட்டேன். என் தகு குணத்தினை - உன் குணத்தை யார்தான் மதிக்கமாட்டார்கள், அப்படிச் சிறந்த குணங்கள வாய்ந்தவனாகிய நீ. எனக் கொடு – என்று சொல்லிவிட்டு. உயர் சென்னி துண்ட மதி வைத்தவனை ஒத்த முனி - மிக்குயர்ந்த சென்னியில் பிறைச் சந்திரனைச் சூடிய சிவபிரானையே ஒத்தஅகத்திய முனிவர்.

30. முனிவர் ராமனைத் தன் ஆசிரமத்திலேயே தங்கும்படி சொல்லுகிறார்.

'ஈண்டு றைதி,
ஐய! இனி,
இவ்வ யின்இ-
ருந் தால்

வேண்டி யன
மாத வம்
விரும் பினமு-
டிப் பாய்:

தூண்டு சின
வாள்நி ருதர்
தோன்றி யுளர்
என் றால்,

மாண்டு க
மலைந்தெ மர்
மனத் துயர்து-
டைப் பாய்.' (31)

---

30. ஈண்டு உறைதி - இங்கேயே தங்குவாயாக. இவ்வயின் இருந்தால் - இந்த இடத்திலேயே இருந்தால். வேண்டியன மாதவம் - எவ்வளவு தவங்களானாலும் விரும்பின முடிப்பாய் - உன் விருப்பத்துக்கு ஒத்தபடியெல்லாம் செய்து முடிக்கலாம். தூண்டு சின வாள் நிருதர் - மனசிலிருந்து சதா கோபாக்கினி தூண்டிக் கொண்டிருக்கிற வாள்ப்படை ஏந்திய அரக்கர்கள் தோன்றியுளர் என்றால் - இங்கே வர மாட்டார்கள்தான், ஆனால் வருவார்கள் என்று வைத்துக் கொண்டாலும். மாண்டு உக மலைந்து - இறந்து ஒழிந்து போகும்படியாகப் போர் செய்து. எமர் மனத்துயர் துடைப்பாய் - எம்போலியரான முனிவர்களது துயரை நீக்கவும் செய்வாய்.

*31.* அகத்திய முனிவருக்கு என்றுமில்லாத உற்சாகம் பிறந்துவிட்டது. அப்படி உண்டாகும் உற்சாகத்திலிருந்து வருகிற வார்த்தையைப் பாருங்கள்.

> 'வாழும் மறை,
> வாழும் மனு
> நீதி, அறம்
> வாழும்,
>
> தாழும் இமை
> யோர்உ யர்வர்,
> தான வர்கள்
> தாழ் வர்,
>
> ஆழி உழ
> வன்பு தல்வ!
> ஐயம் இலை,
> மெய் யே
>
> ஏழ்உ லகும்
> வாழும் இனி,
> இங்கு றைதி'
> என் றான். (32)

---

*31.* வாழும் மறை — வேதங்களுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது. தாழும் இமையோர் உயர்வர் — தற்போது இழிந்த நிலையிலிருக்கிற தேவர்கள் உன்னத நிலையை அடைவார்கள். தானவர்கள் தாழ்வர் — அரக்கர்களது ஆதிக்கம் கீழே போய்விடும். ஆழி உழவன் புதல்வ — சக்கராயுதங் கொண்டு சமூகத்தைப் பண்படுத்திய தசரத சக்கரவர்த்தியின் புதல்வனே. ஐயம் இலை — அரக்கர்கள் ஒழிவதிலச் சந்தேகமில்லை. மெய்யே ஏழுலகும் வாழும் இனி — உண்மையாகவே ஏழு கண்டங்களில் உள்ளவர்களும் இனிமேல்ச சுகமாய் வாழ்வார்கள் இங்கு உறைதி என்றான் — கட்டாயம் இங்கே தங்கவேண்டும் என்று சொன்னான்.

குறிப்பு — உத்ஸாக பாவத்தைச் செய்யுள் உருவத்தில் நன்றாய்ப் பார்க்கலாம்.

# தொடருகிறது அகத்தியர் சிந்தை

32. 'உலகமெல்லாமே இனிது வாழும், தன்னுடன் ராமன் தங்கினால்' என்று சொன்னார் முனிவர். ஆனால், அப்படிச் சௌகரியமாகப் பொதிகை மலைச் சாரலில் தங்கிக் கொண்டிருப்பது தன் லக்ஷ்யத்துக்கு ஏற்றதல்ல' என்று விண்ணப்பிக்கிறான் ராமன்.

சந்தம்

தான தன
தன்ன தன
தன்ன தன
தன் ன

'செருக்க டை
அரக்கர் புரி
தீமை சிதை
வெய் தித்

தருக்க ழி
தரக்,க டிது
கொல்வ து—
சமைந் தேன்;

---

32. செருக்கு அடை அரக்கர் — மிக்க மன உறுதியோடு போர் புரியும் அரக்கர்கள். சிதைவு எய்தி - ஒழிந்துபோக. தருக்கு அழிதர - அரக்கர்களுடைய எக்களிப்பெல்லாம் ஒழிந்து போக. கடிது கொல்வது சமைந்தேன் — அரக்கர்களை வெகு சீக்கிரத்திலேயே கொன்று தொலைக்க வேண்டும் என்ற லக்ஷ்யத்திலிருக்கிறேன்.

வருக்க மறை
யோய்! அ வர்
வருந்தி சையில்
முந் தும்(று)

இருக்கை நலம்:
நின் அ ருள் என்?'
என்ற னன்
இரா மன் (33)

33. 'வாஸ்தவந்தான், நீ சொல்லுகிறது ரொம்பவும் சரி' என்கிருர் முனிவர்.

'விழுமி யது
சொற் ற னை நீ:
வில் இ(து) இவண்
மேல் நாள்

முழுமு தல்வன்
வைத் து ளது;
மூவு லகும்
யா னும்

32. வருக்க மறையோய் - விதம் விதமாகவுள்ள கலைகளில எலலாம் நிபுணரான பெரியோய. அவர் வரும் திசையில - அரக்கர்கள் வந்து சேரக்கூடிய பிரதேசத்தில். முந்து உற்று இருக்கை நலம் - முன்னதாகவே நான் போய் இருத்தல் பிரயோசனமாய் இருக்கும் என்று எண்ணுகிறேன். நின் அருள் என் - உனனுடைய கருத்து என்னவோ.

33. விழுமியது சொற்றனை! நீ - மிகவும் சிறநத காரியத்தை நீ சொல்லுகிருப். வில் இது இவண் மேல நாள முழு முதலவன் வைத்துளது - இந்த வில்லை ஆதிகாலததில் சிவபெருமானே இங்கே வைத்துவிட்டுப் போனுர். மூ உலகும் யானும் வழிபட இருபபது - உலகத்தாரும் நானும் இந்த

வழிப ட
இருப்ப(து); இது
தன்ணே, வடி
வா ளிக்

குழுவு நிறை
புட்டி லொடு
கோடி! என
நல் கி. (34)

34. பொதிகை மலைப் பக்கத்தில், சமீப காலம் வரை ஆதிதொட்டு இரும்புக் கனிகளும், கொல்லர் சேரிகளும் வளமாய இருந்தன. அகத்திய முனிவரே அந்தக் கைத்தொழிலை வளர்த்து வந்தார் என்று சொல்லுவார்கள — 'குறுமுனிவன் கோத்தெடுத்த கொல்ச்சேரி' — உலகத்தில் எங்குமே யில்லாத தோய்ச்சலுள்ள ஆயுதங்களை அங்கே செய்து வந்தார் கள். அனேக விதமான அம்புகள் — சிறிய அம்புகள் (-வாளி), நீண்ட பெரிய அம்புகள் (-கணை), பலவித மான வாள், வேல் எல்லாம் செய்து வந்தார்கள். யுத்தத்துக்கு அரிய கருவிகளாய் இருந்தன அவை. அந்த ஆயுதங்களின் வீரச் செயல்களை ரொம்பவும் புகழ்ந்து பாராட்டி வந்தார்கள். அவைகளுக்கு வழி பாடு செய்தும் வந்தார்கள்.

* * *

---

வில்லுக்குச சகலவித வழிபாடும் செய்து வருகிறோம். இது தனணே— இந்த விலலை வடி வாளிக் குழுவு நிறை புட்டிலொடு— கூரிய அம்புக்கட்டுகள் நிறைந்த அம்பறுத் தூணியோடு. கோடியென நல்கி — கொள்வாயாக எனறு கொடுத்து.

முனிவர் சொல்லுகிறார் ஒரு வாளைக் குறித்து — 'உலகத்தை எதிராக வைத்தாலும் போதாது' என்று. ஒரு கணையைப் பற்றிச் சொல்லுகிறார் — 'திரிபுரத்தைச் சிவபெருமான் சிதைத்தது இந்தக் கணையைக் கொண்டுதானோ என்று சொல்லத் தோன்றும்' என்பதாக.

இப்பு வனம்
முற்றும் ஒரு
தட்டின் இடை
இட் டால்

ஒப்பு வர(வு)
இற்றெ ன
உரைப்ப ரிய
வா ளும்,

வெப்பு ருவு
பெற்ற அரன்
மேரு வரை
வில் லா

முப்பு ரம்
எரித்த தனி
மொய்க ணை யும்
நல் கா. (35)

---

34. இப்புவனம் முற்றும் – இந்த உலகமுழுவதையுமே. ஒப்பு வரவு இற்று – சமமாக வராது. உரைப்பரிய வாளும் – புகழ்தற்கு அரிய வாளும். வெப்பு உருவு பெற்ற அரன் – அக்கினி உருவமாயுள்ள சிவபெருமான். மேரு வரை வில்லா – மேருபருவதத்தையே வில்லாகக் கையில் கொண்டு. முப்புரம் எரித்த – திரிபுர சம்ஹாரம் செய்த. தனிமொய்கணையும் நல்கா – ஒப்பற்ற உறுதி வாய்ந்த கணையையும் கொடுத்து.

35. வாளையும் கணையையும் ராமனுக்குக் கொடுத்துவிட்டு, ‘வீரனே! நான் சொல்வதைக்கேள்· பஞ்சவடி என்பதாக, கோதாவரி உற்பத்தியாகிற இடமொன்றிருக்கிறது. அங்கே பெரிய பெரிய மரங்கள் வானத்தை அளாவி ஓங்கி நிற்கும். அதைவிட ஓங்கி நிற்கும், மூங்கில்கள். எல்லாவற்றையும் விட ஓங்கி மலைச் சிகரங்கள் நிற்கும். இதெல்லாம் ஒரு புறமிருக்க, ஆசிரமத்தை ஒட்டி நாலா பக்கமும் பூங்கொத்துகள் நிறைந்த சோலைகள் அடர்ந்து நிற்கும். மெதுவாக அலைகளை வீசிக் கொண்டிருக்கும் நதியும், ஸ்நான வசதிக்காகத் தவழ்ந்த வண்ணமாய் ஓடும். இப்படி அழகிய காட்சிகள் சூழ்ந்துள்ள இடம் பஞ்சவடி.’

‘ஓங்கு மரன்
ஓங்கி, கழை
ஓங்கி, மலை
ஓங் கிப்,

பூங்கு லை
குலாவு குளிர்
சோலை புடை
விம் மித்,

---

35. ஓங்கு மரன ஓங்கி – ஓங்கி வளரக்கூடிய மரங்கள் ஓங்கி நிறக. கழை ஓங்கி - மேலே சொன்ன மரங்களைவிட மூங்கில்கள ஓங்கி நிறகவும் மலை ஓஙகி–எலலாவற்றிற்கும் மேலாக மலைச் சிகரங்கள் ஓங்கி நிற்கவும். சோலை புடை விம்மி – சோலைகள் நாலாபக்கமும் அடர்ந்து நிற்கவும்.

தூங்கு திரை
ஆறு தவழ்
தூய தொரு
சூ ழல், -

பாங்கர் உள
தால்உ றையுள்
பஞ்ச வடி,
மஞ் ச!' (36)

---

தூங்கு திரை ஆறு தவழ - சின்னஞ்சிறு அலேகள் அசைந்து தவழும் நதியும் ஒரு பக்கம் ஓட்டியோடவும். தூயதொரு சூழல் பாங்கா உளதால - இப்படிப் புனிதமான காட்சிகள் எல்லாம் பக்கத்தில அமைந்துள்ளன எதன் பக்கத்தில? உறையுள் பஞ்சவடி - வாசஸ்தலமாகிய பஞ்சவடியின் பக்கத தில்தான். மஞச - மைந்தனே (—வீரனே).

குறிப்பு'— மரம் மூங்கில் மலே இவைகள், யாரும் வியக்கும்படி, ஒன்றினமேல் ஒன்ருய் நிறகினறன என்னும் பாவத்தை முதலடியின ஓசையிலேயே காணலாம்

ஓங்கு மரன
ஓஙகி, கழை
ஓங்கி, மலே
ஓங் கி,

அதிசய பாவததைச் செயயுள உருவததிலேயே பார்க் கிருேம்.

36. 'இப்படி அழகாய் அமைந்துள்ளது பஞ்ச வடி (—ஐந்து பெரிய ஆலமரங்களையுடைய இடம்) அங்கே போய் நீங்கள் சுகமாய் இருங்கள்' என்று வாழ்த்தியனுப்புகிறார் அகத்திய முனிவர்.

'ஏகி, இனி(து)
அவ்வ யின்
இருந்து றைமின்'
என் றான்.

மேக நிற
வண்ண னும்
வணங்கி விடை
கொண் டான்;

பாக னைய
சொல்லி யொடு, –
தம்பி பரி
வில் பின்

---

36. ஏகி – பஞ்சவடிக்குப் போய். இனிது அவ்வயின் இருந்து உறைமின என்றான் – சுகமாக அங்கே தங்குங்கள் என்று சொன்னார் அகத்திய முனிவர். மேகநிற வண்ணனும்– ராமனும். பாகனைய சொல்லியொடு கடிது போனான் – தேன பாகுபோல் இனிதாய்ப் பேசும் சீதையோடு வேகமாய்ப் போனான்–கொஞ்ச தூரமே போயவிட்டார்கள். தம்பி பரி விலை பின் போக : முன்னே வேகமாய்ப் போகும் ராமனையும் சீதையையும் பார்த்த இலக்குவனுக்குப பரிதாபமே உண்டாகிறது அதனால வேகமாய் நடக்கக கால இடம் கொடுக்க விலலை. மெள்ளவே பினனாலே போனான். முனிவரும், ஒருவிதமான ஏககத்துடனேயே அவர்களது செல்லுகையைச் சிந்திக்கிறார். ராமன் சீதை இருவர் மாத்திரம் வேகமாய்ச செல்லுகிறார்கள். ராமனுக்குத் தன் லக்ஷயத்தில் குறி.

போக, முனி
சிந்தை தொட
ரக்,க டிது
போ னன். (37)

---

சீதைக்கு, வசிப்பதற்கு நல்ல இடம் வாய்த்தது என்பதாக எண்ணம். இந்தக் காரணத்தினாலே, பஞ்சவடி நோக்கிச் செலலுவதில இருவருக்கும் நடையில் வேகம் உண்டா கிறது.

குறிப்பு:— ராமனும் சீதையும் வேகமாக நடந்தார்கள் என்பது, 'கடிது போனன்' என்று சொல்வதால ஏறபடு கிறது. எழுவாய்க்கும் பயனிலைக்குமிடையே தம்பியையும் முனிவரையும் வைத்துத் தயக்க பாவத்தைக் காட்டுகிருர் கவிஞர்.

# 3. சடாயு காண் படலம்

## அதிசயத்துப் பார்த்தார்கள்

**1.** பொதிகைமலைச் சாரலிலிருந்த அகத்திய முனிவரது ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டு, வட திசையை நோக்கி நடந்து போகிறார்கள், ராமன் இலக்குவன் சீதை ஆகிய மூவரும். அனேக காத தூரம் நடந்து செல்லுகிறார்கள். வழியிலே ஆறுகளும் அருவிகளும் எத்தனையோ. அருவிகளைப் பார்த்தால், படுத்திருந்த ஆறுகள் ஏதோ நிமிர்ந்து நின்றனபோல் தோன்றுகின்றன. மலைகளும் எத்தனையோ. யானைகள் ஒன்றன்பின் ஒன்றாய்ப் போவதுபோல் மலைத் தொடர்ச்சிகள் சில. ஆலோசனைக்காக யானைகள் கூட்டங்கூடியிருந்த மாதிரிச் சில மலைகள். இத் தகைய பிரதேசங்களைப் பார்த்துக்கொண்டே வெகு தூரம் போய்விட்டார்கள்.

சந்தம்

தானன தானன
தான தன்னன

**நடந்தனர் காவதம்**
**பலவும்; நல்நதி**

**கிடந்தன நின்றன,**
**கிரிகள் கேண்மையின்**

---

**1.** நடந்தனர் காவதம் — பல காத தூரம் நடந்து விட்டார்கள். நல் நதி கிடந்தன நின்றன — அவர்கள் பார்த்த நதிகள் படுத்துக்கிடந்ததாகவும், சில இடங்களில் நிமிர்ந்து நின்றதாகவும் (அருவிகள்) தோன்றின. கிரிகள்கேண்மையின்— மலைகள், யானையினத்துக்கு ஏற்பட்ட அன்போடு.

தொடர்ந்தன துவன்றின,
சூழல் யாவையும்

கடந்தனர், — கண்டனர்
கழுகின் வேந்தையே. (38)

2. பல மலைகளுக்கிடையே முன்னேறி நின்றது, கருங்கல் மலை. அதன் மீது கழுகு அரசனாகிய சடாயு வீற்றிருந்தான்.

முந்தொரு கருமலை
முகட்டு முன்றிலில், —

சந்திர னோ(டு)ஒளி
தழுவச் சாத்திய,

---

1. தொடர்ந்தன துவன்றின - ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து போவதாய்த் தோன்றின. வேறு சில இடங்களிலோ, நட்புப்பறறிக் கூட்டம் போட்டிருப்பதாய்த் தோன்றின. சூழல் யாவையும் கடந்தனர் — இந்த விதமாக நதிகளும் மலைகளும் இருந்த பிரதேசங்களை எல்லாம் கடந்தவர்களாய் கண்டனர் கழுகின வேந்தையே — கழுகுகளுக்கு அரசனாகிய சடாயுவை எதிரே கண்டார்கள்.

2. முந்து ஒரு கரு மலை முகட்டு முன்றிலில — முன்னேறி நின்ற ஒரு கருமலைச் சிகரத்தை ஒட்டிநின்ற முற்றத்தில். சந்திரனோடு ஒளி தழுவச் சாத்திய — சந்திரனையும் அதன் நிலவையும் சேர்த்துச் சாத்திய

அந்தமில் கனைகடல்
அமரர் நாட்டிய

மந்தர கிரியென
வயங்கு வான் தனை. (39)

3. உலகத்தில் தூர திருஷ்டியுடைய பிராணிகள் இரண்டு: ஒன்று, கூரிய அறிவோடு ஆராய்ச்சியில் சிறந்த மந்திரி. மற்றது, சிறு கண்ணை உடைய கழுகு.

தூய்மைய இருங்கலை
துணிந்த கேள்வியன்,

வாய்மையன், மறுவிலன்,
மதியின் கூர்மையன்,

---

2. அந்தமில் கனைகடல் – ஓரே பரப்பாயுள்ள அலைகள் சப்திக்கும் பாற்கடலில். அமரர் – தேவர்கள். மந்தர கிரியென – பொன் மயமான மந்தரகிரி என்று சொல்லும் படி. வயங்குவான் தனை – விளங்கியிருப்பவனை — சடாயுவை. சடாயுவின் கழுத்துக்குக் கீழுள்ள மேனி பொன் நிறமாயிருந்தது. கழுத்தும் சிரசும் ஒரே வெண்ணிறமாய் இருந்தது. மந்தர கிரிமேல் சந்திரனது ஒளி படர்ந்த சிகரம்: வாய்ப்பான உவமை.

3. தூய்மைய இருங்கலை துணிந்த கேள்வியன் – கலைகளையெடுத்துச் சொல்லும் நூல்களில் உண்மையைச் சொல்லுபவைகளையே ஆராய்ந்தும், நிபுணர் வாயிலாகக் கேட்டும் உள்ளவனாய். மறுவிலன் – யாதொரு குற்றமும் இல்லாதவனாய். மதியின் கூர்மையன் – கூர்மையான மதியுடையவனாய்.

ஆய்மையின் மந்திரத்(து)
அறிஞ னும்எனச்,

சேய்மையின் நோக்குறு
சிறுக ணுன்தனை. (40)

4. பகைவரைக் கொன்று எக்களிக்கிற வீரத்தைச் சிங்கத்தினிடம் வைத்துச் சொல்வது வழக்கம். இங்கே அந்த வீரத்தைக் கழுகினிடம் வைத்துச் சொல்லுகிறதைப் பார்க்கிறோம். அரக்கர்களைக் கொன்று எமனுக்கு விருந்தளிக்கிறவனும் சடாயு.

வீட்டிவாள் அவுணரை,
விருந்து கூற்றினுக்(கு)

ஊட்டி, வீழ் பிச்சில்தான்
உண்டு, நாள்தொறும்

---

3. **ஆய்மையின் மந்திரத்து அறிஞனும் என** — ஆராய்ச்சியில் வல்லவனான மந்திரிக்கு ஒப்பாக. **சேய்மையின் நோக்குறும்** — தூரத்தேயுள்ள பொருளைப் பார்க்க வல்ல. **சிறுகணுன் தனை** — சிறு கண்ணையுடைய கழுகு அரசனை சடாயுவை.

*குறிப்பு:—* எதிர் காலத்தில் நேரும் காரியங்களை முன்னதாக எட்டி அறியும் மந்திரிகளின் திறத்துக்குக் கழுகின் எட்டிய பார்வையை ஒப்பிடுவது மரபு. அதற்கு மாறாக, மந்திரிகளின் எட்டிப்பார்க்கும் திறம்போல உள்ளது சடாயுவின் கண் என்பதில், காம்பீர்ய பாவம் உண்டாகிறது.

4. **வாள் அவுணரை வீட்டி** — வாளை ஏந்திய அரக்கர்களைத் துண்டம் துண்டமாய் ஆக்கி, **விருந்து கூற்றினுக்கு ஊட்டி** — அந்த மாமிசத் துண்டங்களைக் கொண்டு எமனுக்கு விருந்து செய்து. **வீழ் பிச்சில் தான் உண்டு** — எமன் உண்டதுபோக விழுந்த மிச்சத்தைத் தான் உண்டு.

திட்டி,மேல் இந்திரன்
சிறுகண் யானையின்

தோட்டிபோல்த் தேய்ந்(து)ஒளிர்
துண்டத் தானதனை. (41)

5. வானத்தையே அடைந்தமாதிரி மலை முகப்பில் இருக்கிறது கழுகு. அதன் அலகும் மலையையே பெயர்க்கத் தக்கதாக அவ்வளவு பெரிதாய் இருக்கிறது அந்தக் கழுகுக்குக் கழுத்தில் ஒரு ஆரம் தலையில் ஒரு கிரீடம்.

சகல புவனங்களையும் ஆளுகிற சக்தி கடவுளது திருக்கரத்திலிருக்கிறது. அந்தச் சக்தியைக் காட்டுவது நவக்கிரகங்களாகிய சக்கராயுதம் தான். திருமால் கையிலேந்திய சக்கராயுதம் போல மிகுந்த பிரகாசத்தோடு விளங்குகிறது, கழுத்திலுள்ள ஆரம்.

கோள்இரு நாலினோ(டு)
ஒன்று கூடின

ஆளுறு திகிரிபோல்
ஆரத் தானதனை;

---

4 நாள தோறும் திட்டி - இபபடி யெல்லாம் வேலை செய்த தன்னுடைய அலகை நாள்தோறும் மலைகளில்த் திட்டி. தோட்டி போல் — யானையை அடக்கும் அங்குசம் போல். தேய்நது ஒளிா துண்டததான — தேய்ந்து தேய்ந்து அது காரணமாகப் பிரகாசிக்கும் அலகையுடையவன்.

5. கோள இரு நாலினோடு ஒனறு கூடின ஆளுறு திகிரி போல் — ஒனபது கிரகங்களையும் சேர்த்துக் கோத்தால், சகல புவனங்களையும் ஆளுகிற விஷ்ணுவின் சக்கராயுதந்தான்; அதை யொத்த ஆரததான்.

நீளூறு மேருவின்
நெற்றி முற்றிய
வாள்இர வியில்பொலி
மௌலி யான்தனை. (42)

6. சடாயுவின் உருவத்தின் பெருமையையும் ஆபரணத்தையும் கிரீடத்தையும் பார்த்தோம். இனி, அவனது வரலாற்றைப் பார்ப்போம்.

சடாயுவின் புகழ் என்றால் – பாஷையே பேச முடியாமல் அவமானப் படும்படி அவ்வளவு பெரிய புகழ். அவனுடைய தந்தையோ, – உலகத்தையே மூடியுள்ள இருள் யாரைக் கண்டு அழிந்துவிடுமோ, அந்த அருணன்தான். (அருணன் சூரியனுடைய தேர்ப்பாகன்.)

சொற்பங்கம் உறநிமிர்
இசையின் சும்மையை,
அற்பங்கம் உறவரும்
அருணன் செம்மலை,

---

5. நீளூறு மேருவின் நெற்றி முற்றிய – உயர்ந்த பொன் மயமான மேரு மலையின் சிகரத்தை மூடிய. வாள இரவியில் – மிக்க பிரகாசத்தோடு கூடிய சூரியனைப் போல். பொலி மௌலியான தனை – விளங்கும் கிரீடத்தைச் சூடிய சடாயுவை.

6. சொல் பங்கம் உற – பாஷையானது பழுது பட்டுப் போம்படி. நிமிர இசையின் சுமமையை– வளர்ந்து கொண்டே போகும் கீர்த்தியாகிய பெரும் பாரத்தை (–சடாயுவை). அல பங்கம் உற – உலகத்தை மூடிய இருள் தோற்று ஓடு வதற்கு ஏதுவான. அருணன செம்மலை – சூரியனது தேர்ப் பாகனான அருணன் பெற்ற பிள்ளையை (–சடாயுவை).

சிற்பங்கொள் பகல்எனக்
கடிது சென்றுநீர்

கற்பங்கள் பலப்பல
கண்டு ளான் தனை. (43)

7. இட்டத்திலிருந்து பார்த்தால் சடாயு இருந்த மலை அவனது பளுவைத் தாங்கமுடியாமல் அழுந்தவும் பூமியே அந்த மலையோடு கீழே தாழ்ந்து போய்க் கொண்டிருப்பதாகவும் தோன்றும். சடாயுவும் மலையும் பூமியும் அப்படி யிருக்கின்றன அந்த இடத்தில்.

ஓங்குயர் நெடுவரை
ஒன்றி நின்றது

தாங்கல(து), இருநிலம்
தாழ்ந்து தாழ்வுற,

---

6. சில் பங்கொள் பகல் என – குறுகிய அளவு கொண்ட ஒரு நாளைப்போல. கடிது சென்று நீர் – வேகமாயக் கழிந்து போகிற. கற்பங்கள் பலப்பல – எத்தனையோ யுகங்களை. கண்டுளான்தனை – வாழ்ந்து கழித்த சடாயுவை. சடாயுவின் ஆயுள்நாளில் ஒரு யுகம் என்பது, நமக்குள்ள ஒரு நாளைக்கு ஒத்தது அப்படியானால் அவன் ஆயுள்நாள் எத்தனை யுகங்களைக் கொண்டிருக்கும்?

7. ஓங்கு உயர் நெடுவரை – மிகவும் ஓங்கி உயர்ந்து நின்ற மலை. ஒன்றி நின்றது – அதாவது சடாயு தங்கியிருந்த மலை. தாங்கலது – தாங்கமுடியாமலிருந்தது. இரு நிலம் தாழ்ந்து தாழ்வுற – மலையின் பக்கததிலுள்ள பரந்த நிலமெல்லாம் அப்படியே கீழ் நோக்கிப் போவதாகத் தோன்ற.

வீங்கிய வலியினில்
இருந்த வீரனை

ஆங்கவர் அணுகினர்,
அயிர்க்கும் சிந்தையார். (44)

8. சடாயுவைக் கிட்ட நெருங்கிப் பார்த்ததும் 'இவன் ஒரு அரக்கனாய் இருக்கவேண்டும். சரி, தனக்கு முடிவைச் சம்பாதித்துக் கொள்ளவே இங்கே

---

7. வீங்கிய வலியினில் இருந்த வீரனை – அவ்வளவு பலத்தோடு இருந்த வீரனை; சடாயுவை. ஆங்கு அவர் அணுகினர் – அந்த இடத்தில் வந்து கிட்டினார்கள். அயிர்க்கும் சிந்தையார் – தூரத்தில் வரும்போதே திகைப்போடு வந்த ராம லக்ஷ்மணர்கள்.

குறிப்பு:— சில இடங்களில் ஒரு மலைக்குமேல் வேறொரு பெரிய மலை தங்கியிருப்பதைக் காண்கிறோம். சிறிது நேரம் அந்த மலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தால் மலையின் பளுவை நம் உள்ளம் உணரப் பார்க்கிறது. அது காரணமாகக் கீழுள்ள மலையும் பக்கத்திலுள்ள தரையுமே கீழே போகக்கொண்டிருப்பதாகத் தோன்றும். உள்ளத்தின் மலைப்பினால், அதாவது மயக்கத்தினால், தோன்றுகிற தோற்றந்தான் அது.

வந்திருக்கிறுன்' என்று நினைக்கிறுர்கள் ராம லக்ஷ்மணர்கள். ஒருவேளை அரக்கனல்லாமலும் இருக்கலாம் என்கிற சந்தேகமும் உதிக்கிறது அவர்களுக்கு.

இறுதியைத் தன்வயின்
இயற்ற எய்தினன்

அறிவிலி அரக்கனும் :
அல்ல னும்எனின்,

எறுழ்வலிக் கலுழனே
என்ன உன்னி,அச்

செறிகழல் வீரரும்
செயிர்த்து நோக்கினர். (45)

---

8. இறுதியைத் தன் வயின் இயற்ற எய்தினன் – ஆயுள் முடிவைத் தனக்குச் சம்பாதித்துக் கொள்ளவே வந்திருக்கிறுன். அறிவிலி அரக்கனும் – நம்முடைய அம்புக்கு இரையாகப் போகிறுமே என்ற அறிவிலலாமல் வந்தவன்தான் இவன். இப்படி எண்ணினுர்கள் கொஞ்ச தூரத்தில் வரும்போது கிட்ட நெருங்கவும், அரக்கன் அல்ல என்று தெரிய வந்தது எறுழ் வலிக் கலுழனே – மிக்க வலிமை கொண்ட திருமாலின் வாகனமான கருடன் தானே என்று எண்ணி. செறிகழல் வீரரும் – அழகாய் இறுகப்பூண்ட கழல் வீரரான ராம லக்ஷ்மணர்கள். செயிர்த்து நோக்கினர் – அதிசயத்தோடு பார்த்தார்கள்.

9. வில் ஏந்திய ராம லக்ஷ்மணர்களைச் சடாயுவும் ஒரு சந்தேகத்தோடு பார்க்கிறான்.

சந்தம்

தானன தானன
தான தன்னன

வனைகழல் வரிசிலை
மதுகை மைந்தரை

அனையவன் தானும்கண்(டு),
அயிர்த்து நோக்கினன் –

'வினையறு நோன்பினர்
அல்லர், வில்லினர்:

புனைசடை முடியினர்
புலவ ரோ?' என. (46)

---

9. வனைகழல் – வீரக்கழலை யணிந்தவர்களாய். வரிசிலை மதுகை மைந்தரை – வில்லை ஏந்திய பலசாலிகளான வீரரை. அனையவன் தானும் கண்டு – அந்தச் சடாயுவும் கண்டு. அயிர்த்து நோக்கினன – சந்தேகத்தோடு பார்க்கிறான். வினை அறு நோன்பினர் அல்லர் – செயல் ஒழிந்த தவத்தில் நிற்பவர்களாய்த் தோன்றவில்லை வில்லினர் – வீரச்செயல் செய்வதற்காக வில் ஏந்தி வருகிறார்கள். புலவரோ என – இவர்கள் தேவர்கள் தானோ என்று நினைத்தவனாய், அயிர்த்து நோக்கினன்.

10. சடாயு தன் இறக்கைகளின் பலத்தினுல், இந்த உலகம் மாத்திரமல்ல, தேவர்களிருக்கிற வானுலகத்தையும் தினம் சுற்றி வருகிறவன். ஏன், வைகுண்ட லோகம் பிரும்ம லோகம் கைலாசம் எல்லாமே அவனது சஞ்சாரத்துக்கு உட்பட்டவை தான். தேவேந்திரன் முதலிய தேவர்களை யெல்லாம் தினசரி காண்கிறவன் அவன். அப்பேர்ப்பட்ட வனுக்கு ஏற்படுகிறது சந்தேகம்.

'புரந்தரன் முதலிய
புலவர் யாரையும்

நிரந்தரம் நோக்குவென்:
நேமி யானும்அவ்

வரந்தரும இறைவனும்;
மழுவ லாளனும்

கரந்திலர் எனனை:யரன்
என்றும் காண்பெனுல்.' (47)

---

10. புரந்தரன் முதலிய புலவர் யாரையும்—தேவேந்திரன் முதலிய தேவர்கள் எல்லோரையும். நிரந்தரம் நோக்குவென் - தினந்தோறும் பார்த்து வரத்தானே செய்கிறேன். நேமியானும — திருமாலும். அவ்வரந தரும் இறைவனும் - பிரமனும். மழுவலாளனும — மழுவேந்திய சிவபெருமானும். கரந்திலர் என்னை - எனக்குத்தெரியாமல் ஒழிந்து கொண் டிருப்பவர்கள் அல்லவே.

குறிப்பு:— தேவேந்திரனையும் மறறும் மும்மூர்த்தி களையும் ஒத்திருக்கிருர்கள் இந்த வீரர்கள் ஆனுல, அவர் களோ என்று மயங்க வேண்டியதிலலை: அவர்களோடுதான எனக்குப் பரிச்சயம் உணடே என்பது பாவம்.

11. மிகப் பூர்வமான காலத்தை யோசித்துப் பார்க்கிறான். அதாவது, சிவபெருமானால் எரிக்கப் படுவதற்கு முன் மன்மதனுக்கு உருவமிருந்தது. 'அப்படி உருவிலி என்றில்லாமல், உருவத்துடனேயே இருந்த மன்மதனைக் கண்ணால் கண்டிருக்கிறேனே' என்கிறான் சடாயு.

'தாரமன்என் பவனையும்
கண்ணின் நோக்கினேன்:

தாமரைச் செங்கண் இத்
தடக்கை வீரர்கள்

பூமரு பொலன்கழல்ப்
பொடியி னோடும்ஒப்

பாம்என வருகிலன்:
ஆர்கொ லாம்இவர்:' (48)

---

11. தாமரைச் செங்கண் இத்தடக்கை வீரர்கள் - இந்த ராம லக்ஷ்மணர்களது. பூமரு பொலன் கழல்ப் பொடியினோடும் - பூவேலை செய்த அழகிய வீரக்கழல்களில் ஒட்டிய தூசியோடு. அதாவது, இவர்களது கால்த் தூசிக்குக்கூட. ஒப்பாம் என வருகிலன் - சமானம் என்று சொல்லும்படி கிட்ட வரமாட்டான்; அழகில் அவ்வளவு கீழாயுள்ளவன் மன்மதன்.

குறிப்பு;— தேவர்களை முந்திய பாட்டில் ஒதுக்கி விட்டு, மன்மதனைக் கொண்டு இந்தப் பாட்டைத் தனியாக வைத்ததில் ஒரு நாகரிகமிருக்கிறது, வேகமும் இருக்கிறது. ராமலக்ஷ்மணர்களுடைய அழகை அவ்வளவாக அழுத்திச் சொல்லவேண்டி யிருக்கிறது.

12. 'ராம லக்ஷ்மணர்களுடைய கம்பீரமான உருவத்தையும் ராஜசௌந்தர்யத்தையும் பார்த்தால் இந்த உலகம் காணாது இவர்களுக்கு, இதுபோல இன்னுமிரண்டு உலகங்களையும் சேர்த்து ஆண்டால்த் தான் இவர்களுடைய லக்ஷணத்துக்குப் பொருந்தும்,' என்கிறான்.

'உலகொரு மூன்றும்தம்
உடைமை ஆக்குறும்,

அலகறும் இலக்கணம்
அமைந்த மெய்யினர்,

மலர்மகட்(கு) உவமையா-
ளோடும் வந்தஇச்

சிலைவலி வீரரைத்
தெரிகி லேன்'என. (49)

---

12. உலகொரு மூன்றும் தம் உடைமை ஆக்குறும் – இந்த உலகம் போன்ற மூன்று உலகத்தையும் ஆளுகிற வர் யாராவது இருந்தால், அன்னவர், 'நீங்கள்தான் ஆளத் தகுதியுள்ளவர்கள்' என்று சொல்லி ராமலக்ஷ்மணனிடம் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்கள். அலகு அறு – அள விலலாதபடி, எத்தனை எத்தனையோ லக்ஷணங்கள் வாய்ந்த மேனியையுடையவர். மலர்மகட்கு உவமையாளோடும்–லக்ஷ்மி தேவிக்குச் சமானமான ஒரு பெண்ணோடும். சிலை வலி வீரரை – வில் ஏந்திய திடகாத்திரமுள்ள இந்த வீரரை. தெரிகிலேன என – தெரியவில்லையே எனக்கு என்று.

13. 'பார்த்தால்க் கரிய மலையும் சிவந்த மலையும் சேர்ந்து வந்தாற்போலிருக்கிறது. மார்பில் வீர லக்ஷ்மி வாசஞ்செய்கிருள். அழகிய கண்களிலோ வீரம் தாண்டவமாடுகிறது.' ஒரே வியப்போடு இவர்களைப் பார்க்கிருன் சடாயு. அப்படிப் பார்க்கும் போது, ஒரு சந்தேகம் தோன்றுகிறது.

'கருமலை செமமலை
அனைய காட்சியர்,

திருமகிழ் மார்பினர்,
செங்கண் வீரர்தாம்,—

அருமைசெய் குணத்தின என்
துணைவல் ஆழியான

ஒருவனை இருவரும்
ஒத்து ளார்அரோ' (50)

---

13. அருமை செய் குணத்து — அருமையெல்லாம் செய்யும் குணங்களோடு கூடிய. என் துணைவன் ஆழியான ஒருவனை — எனக்கு உற்ற நணபனுன தசரத சக்கரவர்த்தியாகிய அந்த ஒருவனை இருவரும ஒத்துளார அரோ — இருவரும் ஒத்திருக்கிருர்கள்: என்ன விசித்திரம் இது!

# உணர்வு நீங்கி விட்டதே

14. 'இதென்ன விசித்திரமாய் இருக்கிறது! தசரதனுடைய சாயலிலிருக்கிருர்கள் இவர்கள். தசரதனுடைய பிள்ளைகளாகததானே இருக்கவேண்டும்? லக்ஷ்மி போன்ற ஒரு பெண்ணையும் கூட்டி வருகிருர்கள். இந்தப் பாலைவனத்தில் தேசாந்திரிகளாய் இந்த விதம் வருவதற்குக் காரணந்தான் இருக்கக்கூடுமா'—என்றெல்லாம் பலவிதமாக எண்ணுகிருன் சடாயு.

சந்தம

தானன தானன
தான தன்னன

ஏனப்பல நினைப்பின
மனத்துள எண்ணுவான்,

சினப்படை வீரர்மேல்ச்
செல்லும அன்பினன்:

'கனப்படை வரிசிலைக்
காளை யீர்கள்! யார்?

மனப்பட எனக்(கு)உரை
வழங்கு வீர்' என்ருன். (51)

---

14. எனப் பல நினைப்பின — மேலே கண்டபடி பலவாருன யோசனைகளை. சினப்படை வீரர்மேலச் செல்லும அன்பினன — வேகங்கொண்ட வில் ஏந்திப் போர் செய்ய வல்லவரான அந்த ராம லக்ஷ்மணர்கள் பால் மனம் இளகியவனன சடாயு கனப்படை வரிசிலைக் காளையீர்கள யார்—பருத்த வாள் முதலிய ஆயுதங்களையும், இறுகக்கட்டிய வில்லையும் ஏந்திய வீரர்களே, நீங்கள் யார்? மனப்பட எனக்கு உரை வழங்குவீர் — மனங் கொண்டு (எதையும் ஒளிக்காமல) எனக்குச சொலலுங்கள்.

15. சடாயு கேட்டுவிட்டான். உண்மையல்லது வேறு ஒன்றையும் சொல்லி அறியார்கள் அவர்கள். என்ன செய்வார்கள் ?

வினவிய காலையில்,
மெய்ம்மை அல்லது

புனைமலர்த் தார்அவர்
புகல்கி லாமையால்,—

'கனைகடல் நெடுநிலம்
காவல் ஆழியான்

வனைகழல் தயரதன்
மைந்தர் யாம்'என்றார். (52)

---

15. புனைமலர்த் தார் அவர் – மாலையைத் தலையில் சூடிய ராம லக்ஷ்மணர்கள். மெய்ம்மை அல்லது புகல்கிலாமையால் – உண்மைக்கு மாறாக எதையும் பேசும் வழக்கம் இல்லாமையால். கனைகடல் நெடுநிலம் – சப்திக்கின்ற கடல் சூழ்ந்த பெரிய ராஜ்யத்துக்கு. காவல் ஆழியான் – சக்கரவர்த்தியான. வனைகழல் தயரதன் – வீரக் கழலையணிந்த தசரதனது.

குறிப்பு :— தாங்கள் சக்கரவர்த்தியின் குமாரர்கள் என்று, போன இடங்களில் சொல்லிக்கொள்ளத் தயங்குகிறார்கள். ஆனாலும், உண்மையை மறைக்க முடியவில்லை. ஏதோ கஷ்டப்பட்டுத் தங்களை இனம் சொல்லுகிறார்கள் இந்த பாவத்தைச் செய்யுளில் காணலாம். தங்களை இனஞ் சொல்ல வந்த இடத்தில், எதையும் விட்டுக் கொடுக்காமல், தங்கள் தந்தை பெரிய வீரன் (வனை கழல் தயரதன்) என்றும் சொல்லுகிறார்கள்.

*16.* தசரதனது புத்திரர் என்று சொன்னவுடனே, சடாயுவின் இதயத்தில் ஒரு ஆனந்தக் கடல் பொங்கிவிட்டது. மலைச் சிகரத்திலிருந்து தரைக்கு வந்து, ராமலக்ஷ்மணர்களைத் தழுவிக்கொண்டவனாய், யோக க்ஷேமம் விசாரிக்கிறான்.

**உரைத்தலும் பொங்கிய**
**உவகை வேலையன்**
**தரைத்தலை இழிந்(து), அவர்த்**
**தழுவுங் காதலன்,**
**'விரைத்தடந் தாரினிர்!**
**வேந்தர் வேந்தன் தன்**
**வரைத்தடந் தோளிணை**
**வலியவோ?' என்றான். (53)**

---

*16.* **உவகை வேலை** — ஆனந்தக் கடல். **தரைத்தலை இழிந்து** — அப்படியே தரையில் இறங்கிவந்து. **அவர்த் தழுவுங் காதலன்** — அவர்களை அன்போடு தழுவினவனாய். **விரைத்தடம் தாரினிர்** — வாசனை பொருந்திய பெரிய மாலை சூடியவர்களே. **வேந்தர் வேந்தன்தன்** — ராஜாதி ராஜனான தசரதனது. **வரைத்தடம் தோளிணை வலியவோ** — மலைபோலும் பெரிய தோள்கள் போர்செய்யத் தக்கவாறு உறுதியாய் இருக்கின்றனவோ. வீரம் நிறைந்த அக்காலத்தில், ஒருவன் சௌக்கியமாய் இருக்கிறானா என்று கேட்பதற்குப்பதிலாகத் 'தோள் வலியவோ?' என்று கேட்பது வழக்கு.

17. மலைபோலும் தோள்கள் வலியவோ என்று அன்பும் உற்சாகமும் கலந்தவனாகக் கேட்கிறான் சடாயு. பதில் எப்படி வருகிறது பாருங்கள்.

உலகம் என்றுமே மறக்கமுடியாதபடி அற்புதமாய்த் தன் சத்தியத்தைக் காத்தவன் தந்தை என்று ஆரம்பிக்கிறான் ராமன்.

'மறக்கமுற் றாதன
வாய்மை காத்தவன்,

துறக்கமுற் றான்' என
முன்னஞ் சொல்லலும்,—

இறக்கமுற் றான்என
ஏக்கம் எய்தினான்,

உறக்கமுற் றான்என
உணர்வு நீங்கினான். (54)

---

17. மறக்கமுற்றா — உலகத்தாரால் மறந்தொழிந்து போகாத. தன வாய்மை காத்தவன் — தன்னுடைய சத்தியத்தைக் காத்த தசரதன். துறக்கம் உற்றான் என—சுவர்க்கத்தை அடைந்து விட்டான என்று. முன்னஞ்சொல்லலும் — சொன்ன மாத்திரத்தில். இறக்கம் உற்றான் என ஏக்கம் எய்தினன — இறந்தே போய்விட்டான் என்று சொல்லும் படியாக அவ்வளவு ஏக்கமாய்ப் பெரு மூச்சு எறிந்தான். மூச்சே நின்று விட்டது. சிறிதுநேரங்கழித்துப் பார்க்கவும் ஏதோ உயிர் இருப்பதாகத் தெரிந்தது உறக்கம் உற்றான் என உணர்வு நீங்கினான் — உறக்கத்திலிருப்பதுபோல, உணர்வு நீங்கிக் கிடந்தான், சடாயு.

## இறந்த பிறகுதான் போகும் துயரம்

18. ராம லக்ஷமணர்களுக்கு ஒன்றும் தோன்ற வில்லை. அப்பாவிகள் என்ன செய்வார்கள்? சடாயுவை அப்படியே கைகளால் தழுவி எடுத்தார்கள். எடுத்தபோது அவர்களுடைய கண்ணீர் சடாயுவின் முகத்தில் விழுந்தது - மூர்ச்சையாய்ப் போனவனுக்கு முகத்தில் ஏதோ தண்ணீர் தெளித்த மாதிரி.

சந்தம்

தான்ன தானன
தான தன்னன

தழுவினர் எடுத்தனர்
தடக்கை யால்;முகம்

கழுவினர் இருவரும்
கண்ணின நீரினல் ;

வழுவின இன்னுயிர்
வந்த மன்னனும்,

அழிவுறு நெஞ்சினன்
அரற்றி னன்அரோ! (55)

---

18 தடக்கையால – தங்களுடைய பெரிய கைகளால். முகம் – சடாயுவின் முகத்தை. வழுவின இன்னுயிர் வந்த மன்னனும் – நழுவிப்போன உயிர் திரும்பி வந்தது என்று சொல்லும் படியிருந்த கழுகரசனை சடாயுவும். அழிவுறு நெஞ்சினன் – இடிந்த நெஞ்சினனுய். அரற்றினன் அரோ – அலறினன் ; அதை என்ன என்று சொல்ல!

19. சடாயுவுக்கு உயிர்க்குயிரான நண்பன் தசரதன். அவன் இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்டு மூர்ச்சையாய்ப் போனான் சடாயு; கொஞ்சம் தெளிவு வரவும் அலறுகிறான்.

'அடடா உன் ஈகையைப் பற்றி யாரால் புகழ முடியும்! ராஜ்யத்திலுள்ள குடிகளைப் பாது காதத முறையை (தண் குடையை) யாரால்ப் புகழ முடியும்? உன்னுடைய பொறுமையைத் தான் என்ன என்று சொல்வது? இந்த மூன்று அற்புதமான குணங்களும் உன்னிடத்திலே நின்று விளங்கின.

ஏதோ ஈகைக்குக் கற்பகம் என்றும், தண்மைக்குச் சந்திரனென்றும், பொறுமைக்குப் பூமியென்றும் சொல்லுவார்கள். நீ இருந்தபோது அவைகளை மனசோடு புகழுவார் இல்லை. இனிமேல்த் தான் அவைகளைப் புகழுவார்கள். அவைகளுக்குப் பிறந்து விட்டது நல்ல காலம்!'

சந்தம்

தானன தானன
தானன தானன
தானா தன்

'பரவல்அரும கொடைக்கும், நின் தன்
பனிக்குடைக்கும், பொறைக்கும், நெடும்
பண்புதோற்ற,

19. பரவலரும் – புகழுகிறதற்கு முடியாத, பரவல் புகழுதல். பனிக்குடைக்கும் – குளிர்ந்த நிழலைத் தருகிற வெண் கொற்றக் குடைக்கும் மக்களுக்கு சகலவித சௌகரியத்தையும் செயயும் அரசாட்சிக்கு வெணகொற்றக் குடை அடையாளம். பொறைக்கும்–நிர்வாகத்துக்கு அவசியமான பொறுமைக்கும். நெடும் பண்பு தோற்ற–எத்தனையோ

கரவல்அரும கற்பகமும்
முழுமதியும் கடல்இடமும
களித்துவா ழப்,—

புரவலர்தம் புரவலனே!
பொய்பபகையே! மெய்க்(கு)அணியே!
புகழினவாழ் வே!—

இரவலரும் நல்லறமும
யானும்இனி எனபட நீத்(து)
ஏகினை யே!' (56)

---

வகையில் தோறறுப்போன. கரவல அரும் கற்பகமும் — ஒளிக்காது கொடுபபதாகச சொல்லும் கற்பகத் தருவும், முழு மதியும் — தண்மையைக் கொடுக்கக்கூடிய பூர்ண சந்திரனும் (வெணகொறறக் குடைக்குச சமானம்). கடல இடமும — கடலால சூழப்பட்ட பூமியும் (பொறுமைக்கு அதிதேவதை). களித்து வாழ — நமககுமேல் யாரும் இல்லையென்று எக்களிப் போடு வாழும்படி - ஏகினையே. புரவலர்தம் புரவலனே — மக்களைப் பாதுகாக்கிறார்கள் அரசர்கள்: அந்த அரசர்களையே் நீ காககிறாய எனபது குறிப்பு. பொயப் பகையே — பொய் எனறால உனனால சகிக்க முடியாது. மெய்க்கு அணியே — சததியததிறகு அதிதேவதையான தெயவம், உன்னை ஒரு ஆபரணமாக அணிநதுகொள்ளும் புகழின வாழவே — புகழ நிலையாகத தங்குவததறகு இடமான நீ. மற்றவர்களை ஏதோ சில காலம் புகழத் தோனறும். பிறகு அவர்களது குணம் மாறுபடும் அவவளவு தான் புகழும் அவர்களைவிட்டு ஓடி விடும். ஆனால உனனிடததில் நிலையாய நிறகும், இரவலரும் — யாசிப்பவர்களும். நல்ல அறமும் — உயர்ந்த தர்மமும். என பட — என்ன கஷ்டத்துககு உளளாகும்படி. நீத்து ஏகினையே —விட்டுவிட்டுப் போயவிட்டாயே.

குறிப்பு:— சோக பாவம் தமிழ்ப் பண்போடு கூடி அருமையாய்ப் பேசுகிறது.

20. தசரதனுடைய நட்பை எண்ண எண்ண, சோகம் பொங்கிக்கொண்டு வருகிறது சடாயுவுக்கு·

'சத்தியம் தவறாத தசரதனே! உலகத்தாரும் தேவர்களுமே சம்பராசுரனால் ரொம்பவும் துன்பத்துக்கு ஆளானார்கள். இந்திரன் வந்து உன்னை வேண்டிக் கொண்டான். அதன்பேரில் சம்பராசுரன்மேல்ப் போர் தொடுத்தாய். நானும் அப்போது பக்கத்தில் ஏதோ துணையாய் நின்றேன். அசுரனை வென்ற காரணமாக வெற்றிக் கொண்டாட்டம் நடந்தது. எத்தனையோ தேசத்து அரசர்களும் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் கூடியிருந்தார்கள்.

சாதாரண நட்புப் பாராட்டி ஒருவரைப் புகழ்ந்தால், உலகத்தார் அதை எளிதில் நம்புவதில்லை. ஆனால், உலகத்தார் எல்லாருக்கும்சந்தேகம் அறும்படியாக, 'நீயுடல் நான் உயிர்' என்று சொன்னாய் நீ. உன்னுடைய வார்த்தை நிலைக்கிற வார்த்தை அல்லவா!'

'தயிர்உடைக்கும் மத்தென்ன
உலகைநலி சம்பரனைத்
தடிந்தஅந் நாள்,

அயிர்கிடக்கும் கடல்வலயத்(து)
அயல்அறிய, நீஉடல்நான்
ஆவிஎன் று,

---

20. அயிர் கிடக்கும் தயிர் உடைக்கும் மத்து என்ன உலகை நலிசம்பரனை—தயிர் மத்தானது எப்படித் தயிரை உடைதது்க் கலக்குமோ அந்த விதமாகச் சம்பராசுரன் போர் செய்து உலகத்திலுள்ள அரசர்களையெல்லாம் துன்புறுத்தினான்; அவனை. தடிந்த அந்நாள் — நீ கொன்றபோது.

செயிர்கிடத்தல் செய்யாத
திருமனத்தாய்! செப்பினுய்;
திறம்பாநின் சொல்:

உயிர்கிடக்க உடலைவிசும்(பு)
எற்றினர்! உணர்(வு)இறந்த
கூற்றினூரே!' (57)

21. மேலும் புலம்புகிருன் சடாயு: மேலான புகழ் எனக்குக் கிடைப்பதற்கு ஒரு வழியிருக்கிறது, இந்த க்ஷணமே புனிதமான தீயில் விழுந்து இறந்து ஒழிவதுதான் அது. அப்படிச்செய்வதை விட்டுவிட்டுப்

---

கடல வலயத்து அயல் அறிய – நட்பு விஷயமாகச் சந்தேகத்துக்குச் சதா உள்ளாகி யிருக்கும் கடல் சூழ்ந்த உலகத்தில்' பிறர் நன்ருப் அறியும்படி; அயிர் கிடக்கும் – சந்தேகம் நிறைந்த. நீ உடல நான் ஆவி என்று - நீ சாமானிய உடல் என்றும், அந்த உடலுக்கு நான் உயிர் என்றும் அபாரமாகப் பாராட்டி. செயிர் கிடததல் செய்யாத திருமனததாய செப்பினுய் – குற்றம் என்பது யாதுமில்லாத் திருவுள்ளம் படைத்த தசரதனே, வாய்விட்டுச சொன்னுப திறமபா நினசொல் – உண்மை தான், உன் வார்த்தை பழுதுபடாததுதான். உயிர் கிடக்க உடலை விசும்பு எற்றினா வுணாவு இறநத கூறறினுரே. எமன் உயிரைத்தான் கொண்டு போவான். உடலைக் கொணடு போகமாட்டான. ஆனுல், இப்போது புத்தி கெட்டுப் போய உடலைத்தான் கொணடு போயிருக்கிருன. உயிரை (–என்னை) இங்கே விட்டுவிட்டுப் போய்விட்டான். அட பைத்தியமே!

குறிப்பு:— அந்த எமன் என்னைக் கொண்டு போயிருக் கலாம். அது செயயாமல்ப் போனது எவ்வளவு பைத்தி யக்காரத்தனம்! என்பது பாவம்.

பெண்களைப் போல் அல்லவா, நிலத்தில் விழுந்து அழுது கொண்டிருக்கிறேன். இது என் வீர வாழ்க்கைக்கு எந்த விதத்தில் தகுதி?"

'எழுவதோர் இசைபெருக,
இப்பொழுதே ஒப்பரிய
எரியுமதீ யில்

விழுவதே நிற்க,மட
மெல்லியலார் தம்மைப்போல்
நிலத்தின்மேல், வீழ்ந்(து)

அழுவதோ யான்?' என்று,
அறிவுற்றான் எனஎழுந்தாங்(கு)
அவரைநோக் கி,

'முழுவதேழ உலகுடைய
மைந்தன்மீர்! கேண்மின்' என
முறையிற்சொல் வான. (58)

22. சடாயு தன் வரலாற்றைச் சொல்லுகிறான் 'ராம லக்ஷ்மணர்களே. என்னுடைய விருத்தாந்தத்தைக் கேளுங்கள் சூரியனுடைய சாரதி அருணன்.

---

21. எழுவதோர் இசை பெருக — ஒன்றுமில்லாத எனக்குப் புதிதாகப் புகழுண்டாய் அது எங்கும் பரவும்படி. ஒப்பரிய எரியும் தீயில் விழுவதேநிற்க — எங்குமில்லாத புனிதமான தீயில நான் விழுந்து ஒழிந்து விடும் நற்காரியம் ஒன்றிருக்க. மெல்லியலார் தம்மைப்போல் — பெண்களைப்போல். என்று - என்று சொல்லிக்கொண்டு. அறிவுற்றான் என — அறிவிழந்து புலம்பிக் கொண்டிருந்தவன், திரும்ப அறிவு பெற்றான் என்று சொல்லும்படி. அவரை நோக்கி —ராம லக்ஷ்மணர்களைப்பார்த்து முழுவது ஏழ உலகுடைய மைந்தன் மீர — ஏழு உலகுகளையும் முழுவதுமே உரிமையாக உடைய அரசிளங்குமரரே. கேண்மின் என — கேளுங்கள் என்று.

அந்த அருணனுடைய அம்சமாகப் பிறந்தேன் நான். அருணன் போகும் இடமெல்லாம் நானும் போவேன். உங்கள் தந்தை தசரதருக்கு இன்னுயிர்த் துணைவன். நான் எப்போது பிறந்தேன் என்று உங்களுக்குத் தெரியவேண்டாமா? தேவர்களையும் மற்ற உயிர் வர்க்கங்களையும் பிரமன் அனுதியான காலத்தில் வகுத்தான். அப்போதே என்னையும் உண்டாக்கினுன். கழுகுகளுக்கு அரசனுன சாம்பாதி என்பவன்தான் என் தமையன். நான் இளவரசன்; என் பெயர் சடாயு.'

'அருணன்தன் புதல்வன் யான்
அவன்படரும் உலகெல்லாம்
படர்வேன்; ஆ ழி,

இருள்மொய்ம்பு கெடத், துரந்த
தயரதற்(கு)இன் உயிர்த்துணைவன்,
இமையாரோ டும்

வருணங்கள் வகுத்திட்ட
காலத்தே வந்(து)உதித்தேன்,
கழுகினமன் னன்,

தருணங்கொள் பேரொளியீர்!
சம்பாதி பின்வரு
சடாயு'என ருன். (59)

---

22. படரும் – பரந்து செல்லும். ஆழி இருள மொய்ம்பு கெடத் துரந்த – ஆகஞசக்கரத்தைப் பகைவர்களது நெருக்கம் கெடும்படி பிரயோகித்த ; பகைவர் ஒழியும்படியாக ஆணை செலுத்திய. இமையாரோடும் வருணங்கள் வகுததிட்ட காலததே–தேவர்களோடு உயிர் வர்க்கங்களையும் பிரமன் உணடாககிய காலத்தில். வந்து உதிததேன் – பிறந்தேன் தருணங்கொள் பேரொளியீர் – இளமையும் தேஜஸும் நிறைந்த மைந்தர்களே. சம்பாதிபின் வரு சடாயு என்ருன் – சம்பாதிககுப் பின் பிறந்த சடாயு நான் என்று சொன்னுன்.

23. சடாயு ஏதோ வனாந்தரத்திலிருக்கிறவன் தசரதன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டவுடன் தாங்கமுடியாத துயரத்துக்கு உள்ளாகி, மண்ணில் விழுந்து புரண்டு அழுகிறான். துயரத்தைச் சகிக்கமுடியாதபடி நெருப்பில் விழுந்து உயிர் துறக்க வேண்டும் என்றெல்லாம் புலம்புகிறான். ராம லக்ஷ்மணர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. முதலில் சடாயு சொன்ன வரலாற்றினால், தந்தைக்கு ரொம்பவும் உரித்தானவன் அவன், என்று தெரிய நேர்ந்தது. சடாயுவின் சோகம் அவர்களையும் தாக்கிவிட்டது.

ஆண்(டு)அவன்ஈ(து) உரைசெய்ய,
அஞ்சலித்த மலர்க்கையார்,
அன்பினோடும்

மூண்டபெருந் துன்பத்தால்
முறைமுறையின் நிறைமலர்க்கண்
மொய்த்தநீரார்,

பூண்டபெரும் புகழ்நிறுவித்
தம்பொருட்டால் மேல்உலகம்
புக்கதாதை

23. ஆண்டு அவன் ஈது உரை செய்ய – இந்த விதமாகத் தன் வரலாற்றைச் சடாயு சொல்லவும். அஞ்சலித்த மலர்க் கையார் – கும்பிட்ட கையினராய். அன்பினோடும் – சடாயுவின் மேலுண்டான வாஞ்சையினோடும். முறைமுறையின் நிறை மலர்க்கண் மொய்த்த நீரார் – கண்ணீர் பெருகிப் பெருகி வடியும்படியாக அழுதவர்களாய். பூண்ட பெரும் புகழ் நிறுவி – தான் சம்பாதித்த புகழை இவ்வுலகத்தில் நிறுத்தி விட்டு. தம்பொருட்டால் மேல்உலகம் புக்க தாதை – தாங்கள் காட்டுக்கு வந்ததன் காரணமாக வானுலகம் சேர்ந்த தசரதன்.

மீண்டனன்வந் தான்அவனைக்
கண்டனரே ஒத்தனர்அவ்
விலங்கல்த்தோ ளார். (60)

24. ராம லக்ஷ்மணரைத் தன்னுடைய இரண்டு இறக்கைகளாலும் அன்போடு தழுவிக் கொண்டு, சொல்லுகிறான், சடாயு.

''எனக்கும் நீங்கள் ஈமக் கடனைச் செய்துவிடுங்கள். தசரதன் உடலுக்கும் என் உடலுக்கும் அவனே உயிராய் இருந்தான். அந்த உயிர் பிரிந்த பிறகு இந்த உடலாகிய சுமையை எப்படி நான் தாங்க முடியும்?''

மருவினிய குணத்தவரை
இருசிறகால் உறத்தழுவி,
'மக்காள்நீ ரே,

உரியகடன் வினையேற்கும்
உதவுவீர்; உடல்இரண்டுக்(கு)
உயிர்ஒன்று னன்

---

23. மீண்டனன் வந்தான் – மீண்டு வந்துவிட்டான். அவனைக் கண்டனரே ஒத்தனர் – அப்படி வந்த தந்தையைப் பார்த்தது போலவே ஆறுதலடைந்தார்கள். விலங்கல்த் தோளார் – மலைபோலும் தோளையுடைய ராமலக்ஷ்மணர்.

24. மருவினிய குணத்தவரை – மனசுக்கு ஒத்த இனிய குணத்தவரான ராம லக்ஷ்மணரை. இரு சிறகால் உறத் தழுவி – இரண்டு இறக்கைகளாலும் ஆர்வத்தோடு தழுவி. மக்காள் நீரே – என் மக்களாகிய நீங்களே. உரிய கடன் வினையேற்கும் உதவுவீர் – ஏற்பட்டுள்ள ஈமக்கடனைப் பாவியாகிய எனக்கும் செய்ய வேண்டும். உடலிரண்டுக்கு உயிர் ஒன்றுனன் – தன்னுடலுக்கும் என்னுடலுக்கும் ஒரே உயிர் போலிருந்த தசரதனை.

பிரியவுந்தான் பிரியாதே
இனிதிருக்கும் உடல்ப்பொறையாம்
பிழைபா ரா,

எரியதனின் இன்றேபுக்(கு)
இறவேனேல், இத்துயரம்
மறவேன்'என் றான். (61)

---

24. பிரியவுந்தான் பிரியாதே இனிதிருக்கும் – அவன் இறக்கவும், இறவாது திடமாய் இருக்கும். உடல்ப பொறையாம் பிழை பாரா – உடல்ச் சுமையாகிய துன்பத்தைப் பார்த்து; நீங்காது என்று கண்டு. பாரா – பார்த்து. எரி அதனின் இன்றே புக்கு இறவேனேல் – அக்கினியில் விழுந்து இப்போதே இறவாமல் போனால், இத் துயரம் மறவேன் எனறான் – இந்தத் துயரத்தை மறக்க முடியாது என்றால், என்றான்.

## உன்னால் எங்களுக்கு எப்பேர்ப்பட்ட புகழ்

25. 'என்னால் இந்தத் துயரத்தைச் சகிக்க முடியவில்லை. இறந்தே தீர வேண்டும் நான்' என்று சடாயு ஒரே படியாயச் சொல்லுகிறான். இந்தச் சொல்லை எப்படி ராம லக்ஷ்மணர்கள் தாங்கக்கூடும்?

சந்தம்

தான தன்னன
தன்னன தன்னன

என்று ரைத்த
எருவை அரசனைத்

துன்று தாரவர்
நோக்கித்தொ ழுது,கண்

ஒன்று முத்தம்
உறைஉறை யாய்உக

நின்று. மற்றின்ன
நீர்மை நிகழத்தினர். (62)

---

25. என்று உரைத்த எருவை அரசனை - உயிரை விட்டு விட வேண்டும் என்று சொன்ன கழுகரசை. துன்று தாரவர் நோக்கித் தொழுது - புஷ்பம் நிறைந்த மாலையைச் சூடிய ராம லக்ஷ்மணர் பார்த்துத் தொழுது கண் ஒன்று முத்தம் உறை உறையாய் உகநின்று -கண்ணிலிருந்து வடிந்த முத்துப் போன்ற கண்ணீர் துளித்துளியாய் வடிய, அப்படியே சிறிது நேரம் நின்று. இன்ன நீர்மை நிகழத்தினர் - கீழேயுள்ள விஷயங்களைச் சொன்னார்கள்.

26. ராம லக்ஷ்மணர்கள் சொல்லுகிறார்கள் - 'ஏதோ ஆபத்து வந்த காலத்தில், அதைவிட்டுப் பிழைக்க வேண்டுமானால் உதவி செய்யக்கூடியவன் தந்தைதான். அந்தத் தந்தை சத்தியத்தை விட்டுத் தவறக்கூடாது என்று எண்ணியவனாய், இறந்துபோய் விட்டான் - எங்களை நிர்க்கதியாய் ஆக்கிவிட்டான்.'

உய்வி டத்(து)உத-
வற்குரி யானும்தன்
மெய்வி டக்கரு-
தாதுவின் ஏறினான் :
இவ்வி டத்தினில்
எம்பெரு மான்எமைக்
கைவி டில்ப்,பினை
யார்களை கண்உளார் ?' (63)

---

26. உய்விடத்து – ஆபத்தை விட்டுப் பிழைப்பதற்கான சந்தர்ப்பத்தில் உதவற்கு உரியானும் – எங்களுககு உதவி செய்வதற்குரிய தந்தை தசரதனும். மெய்விடக் கருதாது – தனக்குரிய சத்தியத்தைக் கைவிடச் சிறிதும் எண்ணாமல். விண் ஏறினான் – வானுலகம் அடைந்தான. . இவவிடத்தினில் எம்பெருமான – இங்கே எஙகளுக்குக் கிடைத்த தந்தையாகிய நீ. எமைக் கைவிடில – எங்களைக் கைவிட்டுவிட்டால். பினனை யார் களைகண் உளார் – நாங்கள பற்றிக்கொள்வதற்கு யார் உதவியாய் நிறபவர்.

27. மேலும் சொல்லுகிறார்கள்: 'தாயைவிட்டு தந்தையை விட்டு நீங்கினோம். அயோத்தி நகரத்தி லுள்ள மக்கள் எவ்வளவோ வருந்த, நாங்கள் வனம் புகுந்தோம். அதையெல்லாம் நினைக்க, எங்கள் மனசு நோயுற்றது போலிருந்தது. உன்னைப் பார்த்த காரணத்தால், அந்த நோய் நீங்கியது. இது உண்மை.'

'தாயின, நீங்கரும்
தந்தையின, தண் நகர்

வாயின் நீங்கி
வனமபுகுந்(து) எய்திய

நோயின நீங்கினெம,
நுன்னின் : என்,எங்களை

நீயும் நீங்குதி
யோ,நெறி நீஙகலாய்!' (64)

---

27. தாயின – தாயைவிட்டு. நீங்கரும் தந்தையின் – பிரியமுடியாத அருமைத் தநதையைவிட்டு. தண் நகா வாயில் நீங்கி – குளிர்ந்த சோலை நிறைந்த அயோத்தியின் கோட்டை வாசலைவிட்டு நீங்கி. வனம புகுந்து எய்திய நோயின் நீங்கினெம – அப்படி எல்லாரையும் விட்டுப் பிரிந்து, வனம் புகுந்ததனுல் ஏறபட்ட துன்பத்தை விட்டு நீங்கினேம். நுன்னின – எல்லாம் உன்னைச சநதித்ததன் காரணமாகத் தான. என் – என்ன விபரீதமாயிருக்கிறது? நெறி நீங்கலாய் – சன்மார்க்கததை விட்டு நீங்காத பெரியோய்.

குறிப்பு:—ராம லக்ஷ்மணர்களது மனசிலுள்ள துயரம் செயயுளில் அப்படியே உருவெடுக்கிறது. பாவம் வாய்ந்த அருமையான கவி.

28. ராம லக்ஷ்மணர்கள் சொன்ன வார்த்தைகளைச் சடாயு கேட்டான். அவர்கள் நெஞ்சிலுள்ள துயரத்தையும் பார்த்தான். முகத்தையும் பார்த்தான். யோசிக்க ஆரம்பித்தான். ''அப்படியா இருக்கிறது, விஷயம்'' என்று பரிந்து சொல்லுகிறான்.

என்ற சொல்லர்
இரந்தழி நெஞ்சினர்
நின்ற வீரரை
நோக்கிநி னைந்(து)அவன்,
'அன்ற(து) என்னின்,
அயோத்தியின ஐயன்மீர்
சென்ற பினஅவன்
சேர்குவென் யான்'என்றான் (65)

---

28. என்ற சொல்லா – மேலே சொன்னபடி பரிந்து பேசியவர்களாய். இரந்தழி நெஞ்சினர் – கெஞ்சிக் கேட்டு ரொம்பவும் வருந்திய நெஞ்சினராய. நினற வீரரை நோக்கி நினைந்து அவன் – செயலற்று நின்ற ராம லக்ஷ்மணரை நோக்கி யோசனை செய்தவனான சடாயு. அன்று அது என்னின – அப்படி விஷயம் இருக்கிறதென்றால், நீங்கள் உதவியற்று இருக்கிறீர்கள் என்று ஏற்படுவதனால். அயோதநியின ஐயன மீர் சென்ற பின் – நீங்கள் அயோத்திக்குத திரும்பிச் சென்ற பிறகே. அவன சேர்குவென யான் – தசரதனிடம் சேருகிறேன் நான் (உயிர் விடுகிறேன் )

குறிப்பு— அவனைச் சேருவேன என்று பெயர் சொல்லாமல்ச் சொன்னதில் ஒரு சோக பாவமிருக்கிறது. வழக்கிலுள்ள பாவம் இது.

29. மேலும் சொல்லுகிறான் சடாயு

'ஆம், தசரத சக்கரவர்த்தி இறந்து போனான். ஆனால் உங்களுக்கு உரித்தான ராஜ்யத்தைச் சுகமாயிருந்து ஆளாதபடி நீங்கள் இங்கு வருவதற்கு என்ன காரணம்? அப்படி வருதற்கு நிகழ்ந்த காரியங்கள் என்ன? இதை யெல்லாம் நினைக்கும்போது என் நெஞ்சு எரிகிறது!'

'வேந்தன் விண்அடைந்
தான்எனின், வீரர்நீர்
ஏந்து ஞாலம்
இனி(து)அளி யா(து),இவண்
போந்த(து) என்னை,
புகுந்த(து)என? புந்திபோய்க்
காந்து கின்றது,
கட்டுரை யீர்!' என்றான். (66)

---

29. ஏந்து ஞாலம் – உங்களுக்கு உரித்தான இராஜ்யத்தை. இனிது அளியாது – சுகமாயிருந்து பரிபாலியாமல். இவண் போநதது எனனை – வனாந்திரமாகிய இங்கே வருவதற்குக காரணம் என்ன? புகுநதது என் – என்ன காரியம் நிகழ்ந்ததோ புநதிபோய்க் காநதுகின்றது – என்னுடைய மனசு எப்படி எப்படியெல்லாமோ நினைத்துக் காந்துகின்றது. கட்டுரையீர் – எல்லாவறறையும் விளக்கமாகச் சொல்லுங்கள்.

30. யாரோ பகையரசர் வந்து, ராம லக்ஷ்மணர்களை நாட்டைவிட்டுத் துரத்தி விட்டதாக எண்ணு கிருன் சடாயு

'தேவர் தானவர்
திண்திறல் நாகர்வே(று)
ஏவர் ஆக:
இடர்இழைத் தார்எனின்,
பூஅ ராவு
பொலனகழல் வேலினீர்!
சாவ ராக்கித்,
தருவென்அ ரசு என்ருன. (67)

31. யாரோ பகையரசர் வந்து, தந்தை தசரதனைக் கொன்று, தங்களையும் காட்டுக்குத் துரத்தி விட்டதாகத் தப்பாக எண்ணிச் சடாயு பேசினதை

---

30. தேவா – போர் செய்வதில் அபார திறம் வாய்ந்த தேவரே வரட்டும். தானவர் – அசுரர்களே வரட்டும். திண் திறப் நாகா – மிக்க பலம் பொருந்திய நாகர்களே வரட்டும். வேறு ஏவராக – வேறு யாரேனும் வரட்டும். இடர் இழைத்தார் எனின் – உங்களுக்கு இடையூறு செய்திருந்தார்களானால அவர்களை பூ அராவு பொலனகழல வேலினீர் - பூ வேலை செய்த பொறகழலைக்காலில அணிந்து, வேலைக் கையிலேந்திய வீரர்களே, சாவராக்கித் தருவென் அரசு – அவர்களைக் கொன்று உங்களுக்கு அரசைத் தருவேன்

ராமன் தெரிந்து கொண்டான். ஆனால், அவனுக்குக் கைகேசியைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியவில்லை. அதன்பேரில் லக்ஷ்மணனைப் பார்த்தான்.

தாதை கூறலும்,
தம்பியை நோக்கினன்
சீதை கேள்வன்:
அவனும்தன் சிற்றவை
மாத ரால்வந்த
துன்பின் வரம்பெலாம்
ஓத ஓத
ஒழிந்தஉ ணர்வினன். (68)

32. மனங்கலங்கியவனாய், சடாயு ராமனைப் பார்த்துச் சொல்லுகிறான் ·

---

31. தாதை கூறலும் — தந்தையாகிய சடாயு மேலே சொன்ன வார்த்தைகளைச் சொல்லவும். தம்பியை நோக்கினன் சீதை கேளவன் — பதிலாகத் தான் ஒன்றும் சொல்லாமல் லக்ஷ்மணனைப் .பார்த்தான் ராமன அவனும் — அந்த லக்ஷ்மணனும். தன சிற்றவை மாதரால வந்த துனபின் வரம் பெலாம ஓத ஓத — கைகேசியான ஒரு பெணணினால் வந்த அளவு கடந்த துன்பத்தை •யெல்லாம் சொல்லசசொல்ல. ஒழிந்த உணர்வினன் — உணர்வு கொஞ்சங் கொஞ்சமாய் நீங்கியவனான சடாயு. தாரணி — ராஜ்யத்தை.

'உன் தந்தையைச் சத்தியவானாக்கினாய். சிற்றவை இட்ட கட்டளையைக் கௌரவித்து அதன்படி நடந்தாய். ராஜ்யத்தை உனக்குப்பின் பிறந்த தம்பி பரதனுக்குக் கொடுத்தாய். இதல்லவா வள்ளல் தன்மை!'

'உந்தை உண்மையன்
ஆக்கி,உன் சிற்றவை

தந்த சொல்லைத்
தலைக்கொண்டு, தாரணி

வந்த தம்பிக்(கு)
உதவிய வள்ளலே!

எந்தை வல்ல(து)
யாவர்வல் லார்!'என. (69)

33. ராமனுடைய தியாக குணத்தைக் கண்டு, அப்படியே பரவசமாகிப் போன சடாயு, அந்த ராமனை அன்புறத் தழுவி உச்சிமோந்து ஆனந்தக் கண்ணீர் பொழிந்தவனாய்ப் பேசுகிறான்.

அல்லித் தாமரைக்
கண்ணனை அன்புறப்

புல்லி மோந்து
பொழிந்த கண்ணீரினன்,

---

32. எந்தை வல்லது யாவர் வல்லார் – என் அப்பனாகிய ராமனே, நீ சாதிக்கக் கூடியதை யார்தான் சாதிக்கக் கூடும். என – என்று.

33. அல்லித் தாமரைக் கண்ணனை - பேரிதழ் விளங்க விரிந்த செந்தாமரை மலர் போன்ற கண்ணையுடைய ராமனை. அன்புறப் புல்லி - அன்புடன் தழுவி. மோந்து - உச்சி மோந்து. பொழிந்த கண் நீரினன் - கண்ணீர் பொழிந்தவனாய் (சடாயு).

'வல்லை மைந்த, அம
மன்னையும் என்னையும்

எல்லை யில்புகழ்
எய்துவித் தாய்!' என்றான். (70)

---

33. வல்லை மைந்த-யாருக்கும் செய்யமுடியாத செயலைச் செய்ய வல்ல மகனே. அம்மன்னையும் என்னையும்-அந்தச் சக்கரவர்த்தியாகிய தசரதன் நான் ஆகிய இரு தந்தையர்களையும். எல்லை யில் புகழ் எய்துவித்தாய் - என்றென்றும் நிலைக்கக் கூடிய புகழுக்கு உரியராக்கி விட்டாய்; எய்து வித்தாய் - கிடைக்கச் செய்தாய்.

## குஞ்சைப் பார்த்தது போலப் பார்க்கிறான்

34. இப்படியெல்லாம் ராமனைப் பாராட்டி விட்டு, 'இந்த வனாந்திரத்தில் ராஜகுமாரர்கள் வந்தது ஒருபுறம் இருக்கட்டும் தெய்வம் போன்ற இந்தப் பெண்ணும் எப்படி உடன் வந்தாள்?' என்ற திகைப்போடு அவளைப் பார்க்கிறான் சடாயு.

சந்தம்

தான தன்னன
    தன்னன தன்னன

பின்னரும்அப்
    பெரியவன், பெய்வளை

அன்னம் அன்ன
    அணங்கினை நோக்கினான்:

'மன்னர் மன்னவன்
    மைந்த!இவ் வாள்நுதல்,

இன்னள் என்ன
    இயம்புதி யால் என்றான். (71)

---

34. அப்பெரியவன் - சடாயு. பெய்வளை அன்னம் அன்ன அணங்கினை - வளையல்களை நிறைய அணிந்த அன்னத்துக்குச் சமானமான தெய்வம் போன்ற சீதையை. மன்னர் மன்னவன் மைந்த - ராஜாதி ராஜனான தசரத சக்கரவர்த்தியின் மைந்தனே. இவ்வாள் நுதல் - இந்தப் பெண் (பிரகாசம் பொருந்திய நெற்றியையுடையவள்). இன்னள் என்ன இயம்புதி யால் - யார் என்று சொல்லவேண்டும்

குறிப்பு:- வனாந்திரத்தில் அரசகுமாரியை எப்படிக் கொண்டு வரலாம் என்ற அருமை பாவம் சடாயு திகைத்துத் திகைத்துப் பேசுவதில் விளங்குகிறது நோக்கினான் - மன்னர் மன்னவன் மைந்த!- இவ்வாள் நுதல் - இன்னாள் என்ன இயம்புதியால் - என்ற நடை திகைப்பைக் காட்டு கிறது.

35. சீதையை யார் என்று சடாயு கேட்க, ஜனகமகாராஜனுடைய புத்திரியென்றும், தன் மனைவி யென்றும், காட்டுக்கு வரக்கூடாது என்று தான் எவ்வளவோ தடுத்தும் அவள் பிடிவாதமாய் உடன் வந்துவிட்டாள் என்றும் ராமன் சொன்னான். சடாயு வுக்கு என்றுமில்லாத வியப்பும் ஆனந்தமும் உண்டா யிற்று. "இங்கேயே ஒரு சௌகரியமான இடம் அமைத்துத் தருகிறேன். நீங்கள் மூவரும் தங்கலாம். பாதுகாப்புக்கு நானிருக்கிறேன்" என்று சொன்னான்; மிக்க ஆர்வத்தோடு சொன்னான். அதற்கு ராமன் சொல்லுகிறான். "அரசே, எங்களுடைய பாது காப்பை எண்ணி அகத்திய முனிவர் அரிய ஆயுதங் களைக் கொடுத்திருக்கிறார். அதோடு, பஞ்சவடி எங்களுக்கு வசிப்பதற்குப் பொருத்தமான இட மென்றும் குறிப்பிட்டிருக்கிறார். நாங்கள் அங்கே போய் வசிக்க நீ அனுமதி தரவேண்டும்" என்று ராமன் சொன்னான். அதற்கிணங்கிச் சடாயு சொல்லுகிறான்: "வாஸ்தவம். ஆற்றோரத்திலுள்ள பஞ்சவடி மிக வாய்ப்பான இடந்தான். சத்தியத்துக் கான உங்கள் தவத்தை அங்கே செய்யுங்கள். சரி, செல்லுங்கள்."

'பெரிது நன்(று)அப்
பெருந்துறை; வைகி, நீர்

புரிதிர் மாதவம்;
போதுமின்: யான்அது

---

35. பெரிது நன்று அப் பெருந்துறை – ஆற்றங்கரையி லுள்ள அந்தப் பஞ்சவடி ரொம்ப நல்ல இடந்தான். வைகி – சௌகரியமாகத் தங்கி. நீர் புரிதிர் மாதவம் - உங்களுக்கு ஏற்பட்ட அருமையான தவத்தைச் செய்யுங்கள். போதுமின் –

தெரிவு றுத்துவென்'
    என்(று)அவர் திண்சிறை

விரியும் நீழலிற்ச்
    செல்ல,விண் சென்றனன். (72)

36. தங்குவதற்காக அகத்தியர் குறித்த இடத்தைக் காட்டிவிட்டுப் போய்விட்டான் சடாயு.

ஆய சூழல்,
    அறியஉ ணர்த்தி,அத்

தூய சிந்தைஅத்
    தோமில்கு ணத்தினன்

---

நடவுங்கள். யான அது தெரிவுறுததுவென் என்று - அந்த இடததை நான் உங்களுக்குக் காணபிக்கிறேன் என்று சொல்லி, அவா திண் சிறை விரியும நீழலிற்ச் செல்ல- ராமன் முதலிய மூவரும் சடாயுவின் பெரிய சிறகின நிழலில்ச் செல்லும்படியாக. விண் சென்றனன - ஆகாயததில் பறந்து போனான்.

குறிபபு.— சடாயுவின் அன்பும் அருமையும் அப்படியே பாவமாகச சொட்டுகிறது செயயுளில. இநதச் செயயுளுக்கு முந்தியுள்ள செய்யுள்கள் ஏதோ சில காணப்படவில்லை. அவைகளின சாராம்சம் கொடுபட்டிருக்கிறது.

36 ஆய சூழல் – மேலே கூறிய இடத்தை. தூய சிந்தை அத் தோமில் குணத்தினன் – அந்தத் தூய்மையான இதயமும், குற்றமில்லாத குணமும் படைத்தவனான சடாயு.

போய பின்னைப்,
பொருசிலை வீரரும்

ஏய சோலை
இனிதுபுக்(கு) எய்தினர் (73)

37. சீதையைத் தன் சொந்த மருமகள் என்றும், ராம லக்ஷ்மணர்களை மக்கள் என்றும் எண்ணிச் சதா அவர்களுடைய க்ஷேமத்தைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறுன் சடாயு. அவனுக்கு அரக்கர்களுடைய திறமெல்லாம் தெரியுமாதலால் ஒரே ஜாக்கிரதையாக இருக்கிறுன்.

வார்ப்பொற் கொங்கை
மருகியை, மக்களை,

ஏர்ப்பச் சிந்தனை
இட்(டு),அவ் வரக்கர்தம்

சீர்ப்பைச் சிக்கறத்
தேறினன், - சேக்கையில்ப்

பார்ப்பைப் பார்க்கும்
பறவையில்ப் பார்க்கின்றுன். (74)

---

36 பொருசிலை வீரரும்–போர்த தொழிலுக்கான வில்லை ஏந்திய ராமலக்ஷ்மணர்களும். ஏய சோலை இனிது புக்கு எய்தினர்–அந்த வாயப்பான சோலைக்குள் பிரவேசிததார்கள்.

37. மக்களை – ராம லக்ஷ்மணர்களை. ஏர்பச் சிந்தனை யிட்டு – உரிமையோடு சிநதையில் வைத்து அவ அரக்கர் தம் சீர்ப்பைச சிக்கு அறத தேறனன்– ஏதோ மறைந்து திரிகிற அரக்கர்களுடைய தந்திரங்களைக் கொஞ்சமும் பாக்கியில்லாமல் தெரிந்து வைத்துள்ள சடாயு. சேக்கையில் பார்ப்பைப் பார்க்கும் – கூட்டிலுள்ள தன குஞ்சுகளைச் சதா பார்த்த வண்ணமாய இருக்கும். பறவையிலப் பார்க்கின்றுன்–தாய்ப் பறவையைப்போல் ஜாக்கிறதையாப் பார்த்து வருகிறுன்.

# 4. சூர்ப்பனகைப் படலம்

## ராமனைக் கண்டாள்

*1.* கோதாவரியின் உற்பத்தி ஸ்தலமான பஞ்ச வடியே வசிப்பதற்கு வாய்ப்பான இடமென்று அகத்தியமுனி சொன்னார். பஞ்சவடி என்றால் ஐந்து ஆலமரத்தின் நிழலில் அமைந்துள்ள இடம் என்று பொருள். ரொம்ப அழகாய்த்தானே இருக்க வேண்டும் அந்த இடம்? ராமன் அங்கே சுகமாக வசிக்கிறான். ஒருநாள் ராமன் மலைச்சாரலை ஒட்டி ஓடும் ஆற்றங்கரைப் படுகையில் உட்கார்ந்திருக் கிறான். அங்கே ஒரு காட்சி.

அன்னமொன்று வந்து, அவன் பக்கமாக அசைந்து அசைந்து மெள்ள நடந்து போயிற்று. அந்த நடையைப் பார்த்த ராமன், அப்படியே முகத்தைத் திருப்பித் தன்னிடம் வந்துகொண்டிருந்த சீதையின் குழைந்து நெளிந்து நடக்கும் நடையை உற்றுப் பார்த்தான்.

ஓதிமம் ஒதுங்கக்கண்ட
உத்தமன், உழையளாகும்

சீதைதன் நடையைநோக் கிச்
சிறியதோர் முறுவல்செய் தான்:-

ராமன், ஆடவர் தோரணையில், கூர்ந்து பார்த்துப் புன்முறுவல் செய்கிறான், 'சீதையே, உன்னுடைய நடைக்கு அந்த அன்னத்தின் நடை கிட்ட வருமா ?' என்ற பாவத்தில் புன்சிரிப்போடு பார்த்தான்.

ராமனது நடையை அந்த விதமாகக் கூர்ந்து பார்க்க, சீதைக்கு முடியுமா? நாணம் இடங்கொடாதுதானே? ஆனுல், ராமனுடைய கம்பீரநடையைப் பல தடவையும் பார்த்தவள் அவள். அந்த நடையெல்லாம் அவள் மனசிலேயே நிற்கிறது. சரி, அவள் என்ன செய்கிருள் என்று பார்ப்போம்.

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

ஓதிமம் ஒதுங்கக்கண் ட
உத்தமன், உழையளா ¹கும்

சீதைதன் நடையைநோக் கிச்
சிறியதோர் முறுவல்செய் தான்;—

மாதவள் தானும்,ஆண் டு
வந்துநீர் உண்டுமீ ளும்

போதகம் நடப்பநோக் கிப்
புதியதோர் முறுவல்பூத் தாள். (75)

---

1. ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் — அன்னம் ஒன்று நடக்கக் கண்ட ராமன். உழையளாகும் — தன் பக்கமாக வந்துகொண்டிருந்த. மாதவள் தானும் — அந்தச் சீதையோ. ஆண்டு வந்து நீர் உண்டு மீளும் — அந்த இடம் வந்து தண்ணீரைக் குடித்துவிட்டுத் திரும்பிப் போய்க்கொண்டிருந்த. போதகம் நடப்ப நோக்கி — கம்பீரமான யானை நடந்து செல்லுவதைப் பார்த்து. புதியதோர் முறுவல் பூத்தாள் — என்றுமில்லாத அழகிய புன்முறுவல் வந்து அவளது முகத்தில் தவழ்ந்து நின்றது.

குறிப்பு:— உலகத்தில் நமக்கு உவந்த பொருளின் செயல் எல்லாம் அழகாய் இருக்கின்றன. அந்தச் செயல்

2. இன்னும் இரண்டு காட்சிகள்· ஆற்றின் பக்கத்தில் புஷ்பங்களோடு கூடிய சின்னஞ் சிறு கொடிகள் காற்றில் மெள்ள ஆடி அசைந்துகொண்டிருந்தன. இது ஒன்று. இரண்டாவதாக· ஆற்றுக்குள்ளேயே கரையோரமாக ஒரே நீலமாயுள்ள குவளைகள் காடாகப் பூத்திருந்தன. அவைகளுக்கிடையே

---

களோடு ஒத்து வேறொரு பொருளில்ச் செயல் நிகழுமானல் அந்தச் செயலுக்குள்ளும் அழகு ஏறிவிடுகிறது. அதன் பிறகு மாறி மாறி அழகு அந்தப் பொருள்களிடத்தில் பாய்கிறது. பெணகளின நடை அழகாய் இருக்கிற காரணத்தால், அதை ஒத்து நடக்கும அன்னத்தின நடையும் அழகாய் இருக்கிறது. பிறகு, அனனத்தின நடையை மனசில் வைத்துக்கொண்டு பெண்ணின் நடையைப் பார்ப்போமானல் முன கண்ட அழகைவிட அதிகமான அழகைப் பெண்ணின் நடையில் காண்கிறோம். இந்த விதமாக அழகு மாறி மாறிப் பாய்ந்து பெண்ணின் நடையிலும் அனனத்தின் நடையிலும் வளர்ந்தேறும் ரசத்தைப் பார்ககிறோம். இது அழகுத் தத்துவததில்க் காணும் ஒரு அரிய உண்மை

பாவஙகளை ஆடவர் முகம் எடுத்துக் காட்டுதல் இயல்புதான. ஆனல், பெணகளின் முகமோ. பாவங்கள் வந்து விளையாடுவதற்கான ஒரு பூங்காவனமே. அபிநயக் கலை வல்லார், இதை நன்கு அறிந்து அபிநயக கலையைப் பெண்களிடம் ஒப்படைத்திருககிறார்கள். ராமன் சிறியதோர் முறுவல் செய்தான் என்று சொல்லிவிட்டுச் சீதையினிடம் வரும்போது புதியதோர் முறுவல் பூத்தாள் என்கிறார் கவிஞர்.

ஆங்காங்கு, அகன்ற இதழ்கொண்ட செந்தாமரைப் புஷ்பங்களும் பூத்திருந்தன. ஆகக் காட்சிகள் இரண்டு.

வில்இயல் தடக்கைவீரன்
விங்குநீர் ஆற்றின்பாங்கர்

வல்லிகள் நுடங்கக்கண்டான்,
மங்கைதன் மருங்குல்நோக்க;-

எல்லியங் குவளைக்கானத்(து)
இடைஇடை மலர்ந்துநின்ற

அல்லியங் கமலங்கண்டாள்,-
அண்ணல்தன வடிவுகண்டாள் (76)

---

2. வில்லியல் தடக்கை வீரன் - வில்லோடு சதா பழகிய பெரிய கையையுடைய ராமன். விங்குநீர் ஆற்றின் பாங்கர் - வெள்ளமாக நீர் ஓடிக்கொண்டிருந்த ஆற்றின் பக்கத்தில். வல்லிகள் நுடங்கக் கண்டான் - பூங்கொடிகள் அசைந்து நிற்கக் கண்டான். மங்கைதன் மருங்குல் நோக்க-சீதையின் இடையை உற்று நோக்க; இடையின் நுடங்குதலை அனுபவிக்கிறான்; அதை அப்படித் தெரிவிக்கிறான். எல்லியங் குவளைக் கானத்து - இருண்ட நீல நிறத்தோடுகூடிய குவளைக் காட்டில். அல்லியங் கமலங் கண்டாள் - அகன்ற இதழோடு கூடிய செந்தாமரை மலரைக் கண்டவளான சீதை அண்ணல் தன வடிவு கண்டாள் - மனக்கண்ணால் ராமனது நீலமேனியையும அந்த மேனியிடைச் செந்தாமரை போன்ற கண்களையும் வாயையும் இரு கைகளையும் இரு பாதங்களையும், அந்தக் காட்சியை ஒட்டி உள்ளத்திலக கணடு கொண்டாள்.

குறிபபு :— ராமனது ஆர்வமான பார்வையும், நாணத்தோடு கூடிய சீதையின் மனக் காட்சியும் இந்தப் பாடலிலும் தெளிவாயத் தெரிகின்றன.

3. ராமன் சீதை லக்ஷ்மணன் ஆகிய மூவரும் சுகமாகக் காலங்கழித்து வருகிறார்கள்.

பஞ்சவடிக்குப் பக்கத்தில் விசாலமான ஒரு வனமிருந்தது. அங்கே சூர்ப்பனகை யென்ற அரக்கி தனியாக இருந்து அதிகாரஞ் செலுத்தி வந்தாள். அவளுடைய திறமையைப் பார்த்தால் யாரும் வியக்க வேண்டியதுதான். எங்கே வேண்டுமானாலும் எந்தக் காட்டுக்குள்ளும் பாதையில்லாத மரஞ் செடிகளுக்குள்ளும், திரிந்து செல்லும் திறமையுடையவள். எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் போய்த் திரிகிறவள். இப்படியெல்லாம் அவள் திரிந்து கொண்டிருக்கிறாள். அவளைச சும்மாவிடக் கூடாதா? கேடுகளை யெல்லாம் விளைக்கக் கூடிய விதியாகிய மூல காரணம் ஒன்றிருப்பதால், என்ன நேருகிறது என்று பாருங்கள்.

சந்தம்

தானன தானன
தான தன்னன

வைகலும் தமியள்அவ்
வனத்துள் வைகுவாள்,

நொய்தின்இவ் உலகெலாம்
நுழையும நோன்மையள்,-

---

3. வைகலும் தமியள அவ்வனத்துள் வைகுவாள — ஸ்திரமாகத்தானே தனியாக அந்தக் காட்டில் தங்குபவளாய. நொயதின இவ உலகெலாம் நுழையும நோன்மையள — அதி வேகமாக, அந்தக காடு மாத்திரமா, வேறு எங்கே வேண்டுமானாலும் நுழைந்து திரியும் சகதி வாய்நதவளான சூர்ப்பனகை.

வெய்யதோர் காரணம்
மேவி உண்மையின்,

எய்தினள் இராகவன்
இருந்த சூழல்வாய். (77)

4. ஆதியான காலத்தில் தேவர்களுக்கு, அரக்கர் வந்து தாக்குதலினால் ரொம்பவும் கஷ்டம் ஏற்பட்டு விட்டது. விஷ்ணுபிரானிடம் போய், 'அரக்கர்கள் எங்களைப் பகைத்து இல்லாத துன்பத்துக்கு உள்ளாக்குகிறார்கள். நீ தான் வந்து அவர்களை விலக்கி எங்களைக் காக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தார்கள். விஷ்ணுமூர்த்தியும் தேவர்கள் மேல் கருணை கொண்டவனாய், சர்ப்ப சயனத்தின்மீது ஆனந்த நித்திரை செய்துகொண்டிருந்ததை விட்டு

---

3. வெய்யதோர் காரணம் மேவி உண்மையின் — மிகவும் கேடான காரியங்களை நிறைவேற்றுவதற்காக இருக்கும் விதியாகிய மூல காரணம் பொருந்தியிருப்பதால். எய்தினள் இராகவன் இருந்த சூழல்வாய் — வந்து சேர்ந்தாள் ராமனிருந்த இடத்துக்கு.

ராமன் ஒருவன் இருக்கிறான், சீதை யொருத்தி யிருக்கிறாள். லக்ஷ்மணன் ஒருவன் இருக்கிறான் என்கிற விஷயமொன்றும் சூர்ப்பனகைக்குத் தெரியாதுதான். ஆனால், எல்லாவற்றையும் ஆட்டுகிற விதிக்கு நன்றாய்த் தெரியும். சீதையை ராவணன் தூக்கிக்கொண்டு போவான் என்ற கொடிய காரியங்கூட விதிக்குத் தெரியும். அந்தக் கொடிய காரியத்தைச் செய்து முடிப்பதற்காகவே காட்டில் அங்குமிங்கும் திரிகிற சூர்ப்பனகையை ராமனிருந்த இடத்துக்குக் கொண்டுவந்து விடுகிறது, அந்த விதி.

விட்டு அயோத்தியில் வந்து ராமனுகப் பிறந்தான். இது நமக்குத் தெரியும்.

எண்தகும் இமையவர்,
'அரக்கர் எங்கள்மேல்
விண்டனர், விலக்குதி'
எனன, மேலைநாள்
அண்டசத்(து) அருந்துயில்
துறந்த ஐயனைக்
கண்டனள், தன்கிளைக்(கு)
இறுதி காணுவாள். (78)

---

4. எண் தகும் இமையவர் – யாவருடைய மதிப்புக்கும் உரிய தேவர்கள். அரக்கர் எங்களமேல் விண்டனர் – அரக்கர்கள் எங்கள்மேல பகை தொடுத்திருக்கிறுர்கள். விலக்குதி என்ன–அரக்கர்களை விலக்கி எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று சொல்லவும் மேலைநாள – பூர்வ யுகத்தில். அண்ட சத்து அருந்துயில துறந்த ஐயனை – ஆதிசேஷ சயனத்தில் ஆனந்த நித்திரை செய்துகொணடிருநதும் அதைவிட்டு நீங்கி அயோததியில் வந்து அவதரித்த ராமனை. கணடனள் – கண்டுவிட்டாள். தன் கிளைக்கு இறுதி காணுவாள் – தன் சுறறமாகிய அரக்கர்களுக்கு முடிவுசெய்யப் பிறந்தவளாகிய சூர்ப்பனகை.

குறிப்பு.— அரக்கர்களைத் தொலைப்பதற்காக ராமன் அவதரித்தான். அவனேடு ஒத்துழைப்பதறகாக சூர்ப்பனகை அம்மாளும் அவதரித்துவிட்டாள்! இந்த பாவத்தை நன்குணர்ந்து அனுபவிக்க வேண்டும்.

5. ராமனைப் பார்த்தால் எங்குங் காணாத அழகாய் இருக்கிறது. அவள் மனசிலுண்டான காதல் வெறி என்ன என்ன காரியங்களையோ செய்கிறது:

'சிந்தையில் உறைபவன் மன்மதன்; அவனாக இருக்கலாமோ இவன்?'' என்று முதலில் எண்ணினாள். ஆனால், உருவம் என்பது மன்மதனுக்கு இல்லையே என்பதும் உடனே பட்டுவிட்டது.

சந்தம்

தானன தானன
தான தன்னன

சிந்தையின உறைபவற்(கு)
உருவம் தீர்ந்ததால்;

இந்திரற்(கு) ஆயிரம்
நயனம்; ஈசற்கும்

முந்திய மலர்க்கண்ஓர்
மூன்று, நான்குதோள்

உந்தியின் உலகளித் -
தாற்கென்(று) உன்னுவாள், (79)

---

5. சிந்தையின உறைபவற்கு உருவம் தீர்ந்ததால் — மனசிலே உறைகிற மன்மதனுக்கு உருவமே கிடையாது; இவனுக்கு உருவமிருக்கிறது. இந்திரற்கு ஆயிரம் நயனம் — இந்திரனுக்கு ஆயிரம் கண்கள். ஈசற்கும் முந்திய மலர்க்கண் ஓர் மூன்று — சிவபெருமானுக்கும் முன்னாலே தெரிகிற செந்தாமரை போன்ற கண்கள் மூன்றுண்டு, இவனுக்குக் கண்கள் இரண்டுதானே. நான்கு தோள — நான்கு தோளுண்டே. உந்தியின உலகு அளித்தாற்கு - உலகத்தையெல்லாம் வயிற்றில் வைத்துக் காத்த விஷ்ணு மூர்த்திக்கு; இவனுக்கு அப்படியெல்லாம் நான்கு தோளில்லை,

6. கடைசியாக ஒரு தீர்மானத்துக்கு வருகிருள் ராமனைப்பற்றி· மன்மதன் சிவபெருமானது நெற்றிக் கண்ணிஞல் எரிந்து ஒன்றுமில்லாமல்ப் போய் விட்டான். வாஸ்தவந்தான். ஆனுல், ஏதோ அன்று தொட்டு இன்றுவரை அருமையான தவம் செய்து கொண்டிருக்கிறன் என்று சொல்லுகிருர்கள் அல்ல வா? விஷயம் இப்போது தெரிகிறது!

கற்றையஞ் சடையவன்
கண்ணிற் காய்தலால்

இற்றவன், அன்றுதொட்(டு)
இன்று காறுந்தாவ்

---

இரண்டாகத்தானே இருக்கிறது. என்று உளனுவாள — இவவிதமாக எண்ணுவாள்.

குறிப்பு ·— அங்கம் ஒன்றுமேயிலலாத மனமதனது அழகைப் பாராட்டுவதில் பொருளேயில்லை இந்திரன முதலிய மற்ற மூனறுபேருக்கும் அங்கங்கள் இருக்கினறன ஆனுல் எலலாம் கோரம் ஆயிரங்கண், மூன்று கண, நான்கு தோள் — இவைகளை யாராவது அழகென்று சொல்லுவார்களா ? — என்பது பாவம்.

6. கற்றையஞ சடையவன் — நீணட கற்றையாக உடைய சடை அணிந்த சிவபெருமான். கணணிற் காயதலால் — நெற்றிக் கணணுல எரித்த காரணமாக. இற்றவன — இல்லாமல ஒழிந்து போனவன். அன்றுதொட்டு இன்று காறும் — எரிந்த நாள் தொட்டு இன்று வரையும்.

நற்றவம் இயற்றி,அவ்
அனங்கன் நல்உருப்

பெற்றன னுமெனப்
பெயர்த்தும் எண்ணுவாள். (80)

7. ராமனது நீண்டகைகளின் அழகில்ஈடுபட்டவளாய்ச் சூர்ப்பனகை சொல்லுகிறதைப் பாருங்கள்.

தூரங்களின் அமைந்துதாழ்ந்(து)
அழகின் சார்பின,

மரங்களும நிகர்க்கில
மலையும் புல்லிய,—

---

6. நல்தவம் இயற்றி – உயர்ந்த தவத்தைச் செயது. அவ் அனங்கன் நல் உருப் பெறறனனும் – அந்த மன்மதனே தனக்கு முன்னிலலாத அரிய உருவைப் பெற்றுக்கொண்டான் பேஷ்! எனப பெயாத்தும் எண்ணுவாள் – என்ற வண்ணமாக மாறி எண ணுகிறுள்.

7. தரங்களின் அமைந்து – ராமனது கைகள் உடலுக்குப் பொருத்தமான முறையில் அமைந்து. தாழநது அழகின் சார்பின – முழந்தாள்வரை நீண்டு, அழகின் லக்ஷணத்தோடு பொருந்தியவை. மரங்களும் நிகர்க்கில மலையும புலலிய: மரங்களையும், அதாவது பனை போனற மரஙகளையும் இதர உன்னதமான மரங்களையும் பார்த்து ரொம்பவும் அனுபவித்தவர் கம்பர் அப்படியே கரும்பாறைகள நீண்டு கிடப்பதையும் பார்த்து அனுபவித்தவர். வீரர்களுடைய நீணட திட்பமான கைகளையோ, மரங்களையும் கரும்பாறைகளையும் விட அதிகமாக அனுபவிக்கிறவர். அந்த அனுபவததைச் சூர்ப்பனகையின வாயில வைத்துச சொல்லுகிறுர். மலையும் புலலிய – கரும்பாறைக்கு ஏது இவ்வளவு திட்பம், என்று எண ணுகிறுள் சூர்ப்பனகை.

உரம்களி உயர்திசை
ஓம்பும் ஆனையின்

கரங்களே இவன்மணிக்
கரம்என்(று) உன்னுவாள் (81)

8. சூர்ப்பனகை கண்ணுக்கு ராமனுடைய அழகு எங்கும் காணாததாய இருக்கிறது. ராஜ லக்ஷணங்கள் எல்லாம் அமைந்ததாயிருக்கிறது. 'ஆபரணங்கள் எல்லாம் அணிந்து பொன்முடி சூடி, சிம்மாசனத்தில் வைத்துப் பார்க்கவேண்டிய அழக னல்லவா இவன்? என்ன காரியத்துக்காக இப்படி

---

7. உரம் களி உயர் திசை ஓம்பும் ஆனையின் — உடலின் உறுதியும் வீரமும் மிகவாக உடைய எட்டுத் திசைகளி லிருந்து பூமியைத் தாங்குகிற யானைகளின். கரங்களே இவன் மணிக்கரமென்று உன்னுவாள — துதிக்கைகளே இவனது நீல ரத்தினம் போன்ற கைகள் என்று எண்ணு கிறாள்.

குறிப்பு.— கண்ணுக்குப் புலனாகும் வஸ்துக்களிலுள்ள ஈடுபாட்டைவிடக் கண்ணுக்குப் புலனாகாமல் பாவனை உலகத்திலுள்ள வஸ்துக்களிடத்தில் நமக்கு ஈடுபாடு அதிகம். இது நம்முடைய மனசின இயல்பு மரம் மலை இவைகளை அனுபவிப்பதைவிட எட்டுத் திக்குகளிலும் பூமியைத் தாங்கி நிறகிற யானைகளின துதிக்கையைப் பாவனை உலகத்தில அதிகமாக அனுபவிக்கிறோம். அநத யானைகளின் தும்பிக்கை எவ்வளவாகவோ பருத்தும் பாதாளம் வரைக்கும் நீண்டும் தொங்குகினறன. அவைகளின அழகை எடுத்துச் சொலல முடியுமா? ராமனது கைகளை இந்த விதமாகவெல்லாம பாவித்து அனுபவிக்கிறார் கவிஞர்.

வீணுகத் தன் திரு உடம்பை வருத்துகிறுன்? இவனுடைய செந்தாமரை போன்ற கண்களைப் பார்த்தால், புதிது புதிதான சிங்கார ரசங்களைக் கொட்டக்கூடிய சிங்கார புருஷனுக இருக்கிறுனே இவன்!'

'எவனசெய, இனியஇவ்
அழகை எய்திஞேன்,

அவன்செயத் திருஉடம்(பு)
அலச நோற்கின்றுன்?—

நவன்செயத் தகையஇந்
நளின நாட்டத்தான்

தவன்செயத் தவன்செய்த
தவன்என்!' என்கின்றுள். (82)

---

8. இனிய இவ் அழகை எய்திஞேன — மனசுக்கு மிகவும் உவந்த அழகைப் பெற்றவனுகிய இவன். எவன் செய — என்ன காரணத்துக்காகவோ அவன செய — வீணுகும்படி. திரு உடம்பு அலச நோற்கின்றுன — திரு உடம்பு வருந்தும்படி விரதத்தை மேற்கொண்டிருக்கிறுன். நவன் செயத்தகைய — சிங்கார ரசத்தைப புதிது புதிதாக விளைக்கக்கூடிய. நளின நாட்டத்தான் — செந்தாமரை போன்ற கண்களையுடைய இந்தப் பேரழகு உடையவன். தவன செய — தவக்கோலத்துக்கே அழகு உண்டாவதற்காக இவன் தவம் செய்கிறுன்; இப்படித் தவம் செய்வதற்கு. தவன் செயத தவன் என் — தவத்துக்குரிய அதிதேவதை செயத தவந்தான் எப்படிப் பட்டதோ!

குறிப்பு:— ராமனைப் பார்ததாள், அவன் அழகில் ஈடு பட்டாள். தவஞ்செயது உடம்பை வீணுக்குகிறுனே என்றும் அனுதாபப்படுகிறுள் முதலில். சிறிது நேரங

9. ராமனுடைய அழகில் ஈடுபட்டு, அது காரணமாக முகம் கண் உடம்பெல்லாம் ஒளியிழந்து போய், ஏதோ மேகத்தில் வரைந்த சித்திரம்போல் தெளிவில்லாத தோற்றத்தோடு நிற்கிருள் சூர்ப்பனகை.

வான்தனில் வரைந்ததோர்
மாதர் ஓவியம்

போன்றனள், புலர்ந்தனள்,
புழுங்கும் நெஞ்சினள்,

தோன்றல்தன் சுடர்மணித்
தோளில் நாட்டங்கள்

ஊன்றினள் பறிக்கஓர்
ஊற்றம் பெற்றிலள். (83)

---

கழித்துக் காதல் உச்சத்தை அடையவும், அவன் பூண்ட தவக்கோலமே அழகுக்கு உரியது, மற்றக் கோலங்கள் எல்லாம் வெறும் ஆடம்பரமான போலிஎன்றே அவளுக்குப் படுகிறது. இந்த பாவம் செய்யுளின் உருவத்தில் வெகு தெளிவாய்த் தெரிகிறது.

9. வான்தனில் - மேகத்தில். மாதர் ஓவியம் - பெண்ணை எழுதிய சித்திரம். புலர்ந்தனள் - உடல் வாடினுள். புழுங்கும் நெஞ்சினள் - நைகின்ற நெஞ்சினளான சூர்ப்பனகை. தோன்றல் தன் சுடர்மணித் தோளில் - ராமனது பிரகாசம் பொருந்திய நீல ரத்தினம் போன்ற தோளில். நாட்டங்கள் ஊன்றினள் - கண்கள் அப்படியே பதியும்படியாக ஏற்பட்டு விட்டது. பறிக்க ஓர் ஊற்றம் பெற்றிலள் - ஊன்றிய கண்களைத் தோளைவிட்டுப் பறிப்பதற்குத் தகுந்தபடி மனவலி இல்லாது போனுள்.

*10.* ராமனது தோளைவிட்டுக் கண்ணைப் பறிக்க முடியாதபடி திகைத்து நிற்கிறாள். காதல் வெறி யானது உள்ளத்தில் எதிர்பாராத எண்ணங்களை யெல்லாம் எண்ணத் தூண்டுகிறது. அப்படியே போய் ராமனது மார்பை இறுகத் தழுவிவிடுவேன் என்றே எண்ணத் தோன்றுகிறது!

**நின்றனள், 'இருந்தவன்**
**நெடிய மார்பகம்**

**ஒன்றுவென்; அன்றெனின்**
**அமுதம் உண்கினும**

**பொன்றுவென; போக்கினி**
**அரிது போன்ம்' எனாச்,**

**சென்றெதிர் நிற்பதோர்**
**செய்கை தேடுவாள்.** (84)

*11.* இவ்வளவு ஆசையிருந்தாலும் தன்னை ஒரு காரணம்பற்றி அங்கிகரிக்க மாட்டான் என்று பயப்

---

*10.* நின்றனள் – திகைத்துப் போய நின்றவளான சூர்ப்பனகை இருந்தவன் நெடிய மார்பகம் ஒனறுவென் – அதோ இருககிற ராமனது விசாலமான மார்பை அப்படியே தழுவி விடுவேன். அனறெனில – அப்படித தழுவக கிடைக் காமற போனால். அமுதம் உண்கினும் பொன்றுவென் – இறப்பை ஒழித்துச் சிரஞ்சீவியாக ஆக்கக்கூடிய தேவா மிர்தத்தையே உண்டாலும் பிரயோசனமிலலை; இறந்து தான் போவேன்: பொன்றுதல – இறத்தல. போக்கினி அரிது போனம் எனா – பிழைப்பதற்கு வழி இனி இல்லை போலும் என்று எண்ணி.

படுகிறாள். 'நம்முடைய பல் அழகாய்த்தான் இருக்கிறது. இருந்தால் என்ன, எவ்வளவோ பிராணிகளைக் கடித்துத் தின்றது தானே, அந்த மாமிசத்தையெல்லாம் வயிறு அடக்கி வைத்துக்கொண்டுதானே இருக்கிறது' என்று அவன் வெறுத்துத் தள்ளிவிடுவான் என்றெல்லாம் எண்ணி ஒரு யுக்தி பண்ணுகிறாள்,

'எயிறுடை அரக்கி! எவ்
உயிரும் இட்டதோர்

வயிறுடை யாள்! என
மறுக்கும; ஆதலால்,—

குயில் தொடர் குதலை,ஓர்
கொவ்வைச் செய்யவாய்

மயில்தொடர் இயலியாய்
மருவல் நன்(று)' எனா. (85)

12. தெய்வ உபாசனைகள் செய்து மந்திரசக்திகள் எத்தனையோ பெற்றவள் சூர்ப்பனகை. இப்போது லக்ஷ்மி தேவியைத் தியானித்து எதையும் சித்திக்கவல்ல மந்திரம் ஒன்றையும் மனசுக்குள்

---

11. எயிறுடை அரக்கி – மாமிசத்தைத் தின்னும் பல்லையுடையவள் இவள், மறுக்கும் ஆதலால் – தள்ளி விடுவான் ஆகையால. குயில தொடா குதலை ஓர் கொவவைச் செய்யவாய்–குயிலே தொடரும்படியான அவ்வளவு இனிய மழலைச சொல்லோடும், கொவ்வைப் பழம்போனற சிவந்த வாயோடும். மயில் தொடர் இயலியாய – மயிலே தொடரும் படியான அத்தனை அழகிய பாவங்கொணட சாயல்கள் பொருந்தியவளாய். மருவல் நன்று எனா–அவன் எதிர்போதல் தான் சரியான வழியாக இருக்கும் என்று எண்ணினவளாய்.

உச்சரித்துக் கொண்டாள். உடனே முகத்தில் சந்திரன் போன்ற தேஜஸ் ஜொலிக்க ஆரம்பித்தது. அபூர்வமான அழகும் வாய்ந்துவிட்டது. மேனியி னுடைய ஒளியும் உடையின் பொன்னொளியும் ஆபரணங்களின் ஒளியும் எல்லாம் சேர்ந்து, ஆகா யத்துக்கே ஒரு பிரகாசம் கொடுத்து விட்டது. அவ் வளவு சோபிதமாய்த் தோன்றினாள் சூர்ப்பனகை.

*பங்கயச் செல்வியை*
*மனத்துப் பாவியா*

*அங்கையின ஆயமந்-*
*திரத்தை ஆய்ந்தனள்;—*

*திங்களிற் சிறந்தொளிர்*
*முகத்தள் செவ்வியள்,*

*பொங்கொளி விசும்பினிற்*
*பொலியத் தோன்றினாள்.* (86)

13. சூர்ப்பனகை ராமனது முன்னிலையில் என்ன கோலத்தோடு வருகிறாள் பார்ப்போம்.

---

12. பங்கயச் செல்வியை - தாமரை மலரிலிருக்கும் லக்ஷ்மி தேவியை. மனத்துப் பாவியா - மனசில் பாவித்து. அங்கையின ஆய மந்திரத்தை – கைக்குள்ளே இருக்கிறது என்று சொல்லும்படி அவ்வளவு எளிதாய்க் காரியத்தைச் சித்திக்கச் செய்ய வல்ல மந்திரத்தை ஆய்ந்தனள் - மனசுக் குள் உச்சரித்தாள். செவ்வியள் - அபூர்வமான அழகு வாய்ந்தவளாய், விசும்பினிற் பொலிய - ஆகாயத்தில் வீசி விளங்க.

வர்ணச்சேலையின் வீச்சோடும் உடம்பின் சாய லோடும் வந்ததைப் பார்த்தால் ஏதோ ஒரு மயில் வந்ததெனவே இருந்தது.

தேவலோகத்துக் கற்பகத்தை ஒட்டி வளர்ந் துள்ள பொன் மயமான தளிரைப்போல் மேனி யிருந்தது. செவ்விதழோ, பார்க்கப் பார்க்கக் காம வெறி யூட்டுவதாய், தேன் கசிகிறதோ என்று சொல்லத் தோன்றும், மேலும், பிரகாசத்தோடு கூடிய முத்துக்களை உள்ளே வைத்துக் காட்டிக் கொண்டிருந்தது. விழிகளைப் பார்த்தால், மானின் விழியையே எடுத்து வைத்தாற் போலிருந்தது.

சந்தம்

தான னன
தன்ன னன
தன்ன னன
தன் ன

வானின் உயர்
கற்ப கம்
உயிர்த்த தளிர்
வண் ண

---

13. வானின் உயர் கற்பகம் உயிர்த்த - தேவலோகத்தி லுள்ள கற்பக விருக்ஷமே-தளிர் விட்ட. தளிர் வண்ண — தளிரின் மிக அழகான.

மேனி நனி
பெற்று, விளை
காம வெறி
யூட் டும்

தேனின் இதழ்
பெற்று, திகழ்
முத்து நனி
பெற்( று), ஓர்

மானின விழி
பெற்று, மயில்
வந்த தென
வந் தாள, (87)

**14.** சூர்ப்பனகையின் தோற்றத்தைக் கண்ணுல் பார்த்தோம். இனி காதில் விழுகிற சப்தங்களின் நயத்தைப் பார்ப்போம்.

---

13. மேனி நனி பெற்று—நிறத்தை நனருய்ப் பெற்று. விளை காம வெறி யூட்டும் - பார்க்கப் பார்க்கக் காம வெறி ஊட்டுவதான. தேனின இதழ் பெற்று - தேன் கசிவது போலும் செவ்விதழ்களைப் பெறறு. திகழ முத்து நனி பெற்று - அந்த இதழ்களுக்குள்ளேயிருந்து பிரகாசிப்ப தான முத்துக்களையும் (பல்) பெறறு. ஓர் மானின் விழி பெற்று- மானின் விழியிலுள்ள பலவகைப்பட்ட பாவங் களும் கண்ணில அமைவதாய்.

குறிப்பு.— அபூர்வமான அலங்காரத்தோடும் அழ கோடும் ஒரு நடன பாத்திரம், ஒரு நல்ல நடன ஜதியோடு வந்ததுபோலிருக்கிறது செய்யுளின் கதி. வாணையிலும் உவமானத்திலும் ஆழ்ந்த அனுபவமும் உண்மையும் கிடக்கின்றன. சவுக்கத்தில பாடி அனுபவிக்க வேண்டிய கவி

காலிலுள்ள சிலம்பின் ஒலி மேகலையில்க் கோத்த மணிகளின் ஒலி, கழுத்திலுள்ள ரத்ன கண்டிகளின் ஒலி, கூந்தலிலுள்ள வண்டுகளின் ரீங்காரம், இந்த ஒலிகள் எல்லாம் ஒன்றோடொன்று போட்டிபோட்டு ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லுகின்றனவாம். அதாவது, 'ஓர் அபூர்வமான பெண் இதோ வருகிறாள். பாருங்கள்' என்று சொல்லுகின்றனவாம்.

நூபு ரமும்
மேக லையும்
நூ லும் அறல்
ஓ தி

பூமு ரல்பொன்
வண் டும் இவை
பூசல் இடும்
ஓ சை

தாம்உ ரை செய்
கின் ற,- ஒரு
தையல வரும்
என் று:

---

14. நூபுரம் - காலில் அணியும் சிலம்பு. மேகலை - அரையில் அணியும் மேகலை நூல - கழுத்திலுள்ள ரத்ன ஆரங்கள், அறல ஓதி - திரைத்த கருமணல்ப் பரப்பை ஒத்த நெளிந்த கூந்தலிலச் சூடிய. பூமுரல் பொன் வண்டும் - பூவிலிருந்து ரீங்காரம் செய்யும் வண்டுகளும். இவை பூசலிடும் ஓசை - இவை ஒன்றோடொன்று போட்டி போட்டு ஒலிக்கும் ஓசைகள் தாம் உரை செய்கின்ற - அவைகள் எடுத்துச் சொல்லுகின்றன. என்ன சொல்லுகின்றன : ஒரு தையல் வரும் என்று - ஒரு பெண் வருகிறாள் என்பதாக.

கோம கனும்
அத்தி சை
குறித்த னன்வி
ழித் தான். (88)

15. உயிரையே மீட்கவல்ல தேவாமிருதத்தை உட்கொண்டது என்றுசொல்லும்படியான ஸ்தன்யங்களால் இடை அப்படியும் இப்படியும் நுடங்கும்படி நடந்துவரும் சூர்ப்பனகை ராமனது திருக்கண்களில் தென்பட்டாள்.

விண்ண குள
வந்த தொரு
மெல்அ முதம்
என் ன,

வண்ண முலை
கொண்டி டை
வணங்க வரு
போழ் தத்(து),—

---

14 கோமகனும் அத்திசை குறிததனன் விழித்தான்– ராமனும் அந்த ஓசைகள் வந்த திசையைக் குறித்து நோக்கினன.

குறிப்பு:— சிலம்பு முதலியவறறின் ஓசையே, முதல் இரணடியின் வார்த்தை தாளங்களில் ஒலிக்கின்றன

15 விணணருள வநததொரு மெல் அமுதம எனன – சமுத்திரத்தில் அலலாமல, தேவலோகத்திலிருந்து வந்த மென்மையான தேவாமிர்தம் என்ன.

எண் அ ருளி
ஏழை மை
துடைத்தெ ழும்மெய்ஞ்
ஞா னக்

கண் அ ருள்செய்
கண்ணனை, இரு
கண்ணின் எதிர்
கண் டான். (89)

16. சூர்ப்பனகையின் அபூர்வமான அழகையும் அலங்காரத்தையும் பார்த்து ராமன் அதிசயத்தில் மூழ்கி விடுகிறான்.

நாகரிகத்தின் உச்சத்தை அடைந்த பேர்பெற்ற நாகலோகத்துப் பெண்ணோ இவள்? அப்படிச் சொல்லுவதற்கு இடமில்லை. வேறு எந்த உலகத திலும் பார்க்கமுடியாது. தேவலோகத்திலும் பார்க்க

---

15. எண் அருளி-உணர்ச்சியற்ற ஜட தத்துவத்துக்கு உணர்ச்சி கொடுத்து ஏழைமை துடைத்து - ஆணவமாகிய அறியாமையை நீக்கி. எழும் மெய்ஞானக் கண் அருள்செய்-புதிதாக ஏறபடும் மெய்ஞ்ஞானமான கண்ணை அளிக்கும் கண்ணனை இருகண்ணின எதிர்கண்டான - கண்ணனாகிய ராமன் தன் இரு கண்களுக்கும் எதிரே கணடான் சூர்ப்பனகையை.

குறிப்பு:— முதலிரண டடியிலும் சிருங்கார ரசத்தை அபூர்வமாய் நிறைத்து வைத்திருக்கிறது. அதிலிருந்து கம்பா நம்மைக் கொண்டுபோய் எட்டாத ஒரு பக்தி ரசததில வீழ்த்தி விடுகிறா பின்னிரண்டடிகளையும் பாடப்பாட இதயத்தில் பக்தி ரசம் ஊறி ஊறிப் பெருக் கெடுக்கக் காணலாம்.

முடியாது. இந்தப் பூமியிலோ, இல்லவே இல்லை. இவ்வளவு நாகரிகமான உருவத்தைப் பார்த்துவிட்டு, 'எந்த உயர்ந்த குடியில் பிறந்தவளோ இவள்' என்று திகைக்கிறான்.

பேர்உ ழைய
நாகர் உல
கிற்பி றிதின்,
வா னின்,

பார்உ ழையின்,
இல்ல தொரு
மெல்லு ருவு
பா ரா,

'ஆர்உ ழையள்,
தங்கும் அழ-
கிற்(கு)அ வதி
உன் டோ!

---

16. பேர் உழைய - புகழிடத்து என்றென்றும் தங்குகிற நாகர் உலகில் - நாகர் உலகம் கீழ் உலகம் என்றெல்லாம் நாகரிகம் காரணமாகப் புகழ் வாய்ந்த தென் நாட்டில். பிறிதின் - வேறு நாடுகளில். வானின் - தேவலோகத்தில். பார உழையின் - இந்தப் பூமியிடத்துமே. இல்லதொரு மெலலுருவு பாரா - காணமுடியாத நாகரிகமான ஓர் அழகைப் பார்த்து ஆர் உழையள் - எந்தக் குடிக்கு இவள் உரியவளோ தங்கும் அழகிற்கு அவதியுண்டோ - அஙகங்களில்த் தங்கிக்கிடக்கும் அழகுக்கு வரம்புண்டோ. அதாவது, பாக்கப் பார்க்க அழகு புதிது புதிதாய்த் தோன்றிக்கொண்டே யிருக்கிறது.

நேரி ழையர்
யாவர் இவர்
நேர்!' எ னநி
னைந் தான். (90)

17. ராமன் மிக்க மதிப்புடனும் மரியாதையுடனும் சூர்ப்னகையைப் பார்க்கிறான். அந்த வேளை, சூர்ப்பனகையும் ராமனுடைய பாதங்களைக் கைகளினால் சேவிக்கிறாள்.

அவ்வ யின், அவ்
ஆசை தனில்
ஆழ்ந்து டைய
அன் னாள்,

செவ்வி முகத்(து)
அண் ணல் அடி
செங்கை யின் இ
றைஞ் சா,

---

16. நேரிழையர் யாவர் இவர்நேர் என - பெண்களிலே இவளுக்கு ஒப்பானவள் யாரென்று, பெண்களை நோக்கிக் கூறும்போது பன்மையில்கூறுவது பூர்வமான வழக்கு

குறிப்பு:— சூர்ப்பனகையின் தோற்றத்தில் உயர்ந்த குடிப்பிறப்பும் அழகும் இருக்கக் கண்டு அதிசயிக்கிற பாவம், கடைசி இரண்டடியிலுள்ள கவி உருவத்தில் தெளிவாய்த் தெரிகிறது.

17. அவவயின் - அந்தச் சமயத்தில. ஆசைதனில ஆழந்துடைய அன்னாள - மேலே சொனன காதல் வெறியில் ஆழ்ந்து போனவளான சூர்ப்பனகை. செவவி முகத்து அணணல அடி - கருணையும் அழகும் அமைந்த முகமுடைய ராமன் அடிகளை. செங்கையின் இறைஞ்சா - தன்னுடைய அழகிய கைகளால் சேவித்து விட்டு.

வெவ்வி யநெ
டுங்கண் அயில்
விசி அயல்
பா ரா,

நவ்வி யின்ஒ
துங்கி இறை
நாணி அயல்
நின் றாள். (91)

---

17. வெவ்விய நெடுங்கண் அயில் - வேகங்கொண்ட நெடிய கண்களாகிய வாள்களை. விசி - பலவேறு வகை யாகக் கடைக்கண் பார்வை பார்த்து நவ்வியின் ஒதுங்கி - மானைப் போல் நெளிந்து நெளிந்து பின வாங்கி. இறை நாணி அயல நின்றாள - பாதி நாணமும் பாதி ஒய்யாரமு மாக ராமன் பக்கத்தில்ப் போய் நின்றாள்.

# ஒரே சிரிப்பாய்ச் சிரித்தான்

18. ராமனும் பக்கத்தில் நின்ற சூர்ப்பனகையைப் பார்த்து 'நீ இங்கே வந்ததுபற்றி ரொம்ப சந்தோஷம். ஏதோ தூரத்திலுருந்து நீ வந்திருக்கிறாய். எங்களிடம் நீ வந்தது புண்ணிய வசத்தால்த் தான். இந்தக் காட்டில் உனக்கு ஆதாரமாக ஒருவரும் இருக்க மாட்டார்களே!'

சந்தம்

தான னன
தன்ன னன
தன்ன னன
தன் ன

'தீதில் வர
வாக இவண
நின்வ ரவு,
சே யோய்

போத உள
தெமஉ ழை,ஓர்
புண்ணி யம்அ
தன் றோ!

ஏது பதி,
ஏது பெயர்,
யாவர் உற(வு)?'
என் றான்

---

18. தீதில் வரவாக இவண் நின் வரவு - இங்கே நீ வந்தது பற்றி ரொம்ப சந்தோஷம். உனக்கு ஒரு தீங்கும் நேரிடாது சேயோய போத உளது எம் உழை- தூரத்திலுள்ளவளாகிய நீ எங்களிடம வந்து சேர நேர்ந்தது. ஓர் புண்ணியம் அதனறே - ஒரு புண்ணிய வசத்தினுல்த்தான: எங்களிடம் வராது போனல மனுஷ சஞ்சார மில்லாத இந்தக் காட்டில எத்தனையோ ஆபத்துக்கு உள்ளாகியிருப்பாய் ஏது பதி - எது உனனுடைய ஊர். ஏது பெயர்-பெயர் என்ன. யாவர் உறவு - உன்னுடைய சுற்றத்தார் யார். என்றான் - என்று கேட்டான்.

வேத முதல்,-
பேதை யவள்
தன்நி லைவி
ரிப் பாள். (92)

19. சூர்ப்பனகை சொல்லுகிறாள்: 'நான் பிரம்மாவின் பேரனுக்குப் புதல்வி. சிவபெருமானுக்குத் துணைவனான குபேரனுக்குத் தங்கை. அஷ்டதிக்குகளிலுள்ள யானைகளையெல்லாம் தொலைத்துக் கைலையங்கிரியையே செண்டாக்காய்த் தூக்கின ராவணேசுவரனுக்குத் தங்கை.'

சந்தம்
தானன தனன தன்
தனன தனன தன்

பூவிலோன் புதல்வன்மைந் தன்
புதல்வி,முப் புரங்கள்செற் ற
சேவலோன் துணைவன்ஆ ன
செங்கையோன் தங்கை;திக் கின்

---

18 வேத முதலை – வேதங்களுக்கு அடிப்படையான பொருள் (-ராமன்) பேதையவள் தனநிலை விரிப்பாள் – ராமனது மனதை அறியாத அந்தப் பேதை, தான் இன்னார் என்று தற்பெருமையோடு சொல்லுகிறாள்

19. பூ இலோன் – பூவை இருப்பிடமாகக் கொண்ட பிரமன் முப்புரங்கள செற்ற சேவலோன் துணைவனான – திரிபுரங்களைத் தொலைத்த ரிஷப வாகனத்தில் ஏறிய சிவபெருமானுக்கு உற்ற நண்பனான. செங்கையோன தங்கை– சிவந்த கையையுடைய குபேரனுக்குத் தங்கை திக்கின் – எட்டுத் திக்குகளிலும்.

மாஎலாம் தொலைத்துவெள் ளி
மலைஎடுத்(து) உலகம்தாங் கும்

காவலோன் பின்னை,கா மர்
வல்லியாம் கன்னி,என் றுள். (93)

20. தான் ராவணனுடைய தங்கையென்றும், கன்னியென்றும், பெயர் காமவல்லி யென்றும், துணிந்து சூர்ப்பனகை சொன்னதன் காரணமாக, ராமனுக்குச் சந்தேகம் உண்டாய்விட்டது. ''சரி, என்னிடத்தில் என்ன காரியத்தை உத்தேசித்து வந்திருக்கிறாய்? கூடுமானால் அதைச் செய்து தரு கிறேன்'' என்று சொன்னான். அதற்கு அவள் பதில் சொல்லுகிறாள்:''பெண்கள் தங்கள் மனசிலுள்ளதை லகுவில் வெளியிட முடியாது. ஆனாலும் நான் சொல்லுகிறேன். மன்மதன் என்ற கொடியவன் என்னை எவ்வளவோ துன்புறுத்துகிறான். அந்தத் துன்பத்திலிருந்து நீ என்னைக் காக்க வேண்டும்'' என்று, ராமனுக்கு விஷயம் தெரிந்துவிட்டது. அவனுக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. மௌன மாய் இருந்தான். அப்படி மௌனமாயிருந்தது அவளுக்கு ஒரு துணிச்சலைக் கொடுத்தது. காதல் வெறியும் அவளைத் தூண்டுகிறது. நாணத்தை அப்படியே விட்டுவிட்டுப் பேச ஆரம்பிக்கிறாள்.

---

19 மா எல்லாம் தொலைத்து - பூமியைத் தாங்கிக் கொண்டு நிற்கிற யானைகளைத் தொலைத்து. வெள்ளிமலை எடுத்து-சிவபெருமான் தங்கும் கயிலையங்கிரியைத் தூக்கி. உலகம்தாங்கும் காவலோன் பின்னை — உலக முழுவதிலும் அதிகாரம் செலுத்தும் ராவணனது தங்கையாகும் நான். காமவல்லியாம் கன்னி - காமவல்லியென்பது என்பெயர். கன்னி - இன்னும் எனக்குக் கலியாணம் ஆகவில்லை.

'விவாகமென்பது எத்தனையோ உண்டு. சாஸ்திரங்களே அவைகளை வகுத்துக் கூறுகின்றன. அப்படிக் கூறப்பட்டவைகளில் ஒன்று காந்தர்வ விவாகம் என்பது அதன்படி காதலுற்ற ஆடவரும் பெண்டிரும் யாதொரு சம்பிரதாயமோ, கிரியையோ இல்லாமல், வேருருவர் கொடுக்கிறது வாங்குகிறது என்பதும் இல்லாமல் தாமாகவே மணந்து கொள்ளலாம். நாம் இருவரும்மணந்துகொண்டால், எவ்வளவோ சௌகரியம் ஏற்படும் உனக்கு'' என்கிருள.

'காந்தர்ப்பம் எனபதொன் று,
காதலில்க் கலந்தசிந் தை
மாந்தர்க்கும மடந்தைமார்க் கும்
மறைகளே வகுத்துக்கூ றும்;
ஏந்தல்ப்பொன் தோளிஞய்! இஃ(து)
இயைந்தபின்,- எனக்குமூத் த
வேந்தர்க்கும் விருப்பிற்ரு கும்:
வேறும்ஓர் உரையுண்(டு)'என் ருள். (94)

---

20. காந்தாப்பம் எனபது ஒனறு - காந்தர்வ விவாகம் என்பதாக ஒரு விவாகத்தை காதலிலக் கலநத சிந்தை - ஒருவருக்கொருவர் உணமையான காதலில் ஒன்றுபட்ட சிந்தையுடைய மாநதாக்கும் மடநதைமார்க்கும் - ஆடவருக்கும் பெண்டிாக்குமாக மறைகளே வகுததுக் கூறும் - சாஸ்திரங்களே வகுத்தும் அங்கீகரித்தும் சொல்லும். ஏந்தப்ப பொன தோளிஞய் - குன்றுபோலும் அழகிய தோளை யுடைய ராமனே. இஃது இயைநதபின - இந்தக் காந்தர்வ விவாகம் நம்மிருவருக்கும் நடந்த பிறகு. எனக்கு மூத்த வேநதர்க்கும் விருபபிறருகும் - என னுடைய தமையன்மாரான ராவணன முதலிய அரசருக்கும் மிக உவநததாய இருக்கும் வேறும ஓர் உரையுண்டு என்ருள- இன்னும் சொலல வேண்டியதொன்றிருக்கிறது எனறு சொல்லுகிருள்

21. எப்படிச் சௌகரியம் ஏற்படும் என்பதை எடுத்துச் சொல்லுகிறுள்.

"நீயோ முனிவர் கூட்டத்தைச் சேர்ந்தவன். முனிவர்களுக்கும் என் தமையன்மாருக்கும் பூர்வமான தீராப்பகை. முனிவர்களைச் சேர்ந்தவன் என்கிற ஒரு காரணம்போதும், நீயும் அவர்களுடைய பகைக்கு உள்ளாகிவிடுவாய். அதன் பிறகு, ஒழுங்கு தாட்சண்யம் என்று அவர்களிடத்திலிருக்காது. மேலும், தனியாக இருக்கிறுய். ஆதலால், அவர்களைச் சமாதானப்படுத்தி உனக்குத் துணையாய்ச் செய்து கொள்ளுவதற்கு, நாம் இருவரும் மணந்து கொள்ளுவதைத் தவிர்த்து வேறு செயலில்லை."

'முனிவரோ(டு) உடையர்முன் னே
முதிர்பகை; முறைமைநோக் கார்,

தனிமைநீ ஆதலால், மற்(று)
அவரொடும் தழுவற்கொத் த

---

21. முனிவரோடு உடையர் முன்னே முதிர் பகை - ராவணன் முதலிய என் தமையன்மாருக்கு முனிவர்களோடு பூர்வமான கடும் பகையுண்டு. முறைமை நோக்கார் - பகையாளி என்று வந்துவிட்டால் ஒழுங்குமுறையொன்றும் கிடையாது அவர்களுக்கு தனிமை நீ ஆதலால் - இங்கே நீ தனியாக இருப்பதன் காரணமாக; அதாவது போருக்கு உரிய துணை ஒன்றுமில்லாமல். அவரொடும் தழுவற்கொத்த - அவர்களோடு ஒத்துவாழ்வதற்கான

வினையம்ச தல்ல(து)இல் லை;
விண்ணும்நின் ஆட்சியாக் கி

இனியராய் அன்னர்வந்(து) உன
ஏவலில் நிறபர்'என் றாள். (95)

22. சூர்ப்பனகை இந்தவாறாகச் சொன்னதை ராமன் ரொம்பவும் அனுபவிக்கிறான். எப்படி அனுபவிக்கிறான் பார்ப்போம்:

'நிருதர்தம் அருளும்பெற் றேன்,
நின்நலம் பெற்றேன்,நின் னோ(டு)

ஒருவரும் செல்வத்(து)யாண் டும்
உறையவும் பெற்றேன்அன் றோ! -

---

21 வினையம் சதலலது இல்லை - யுத்தியான செயல் இதைத் தவிர்த்து வேறு கிடையாது விண்ணும் நின் ஆட்சியாக்கி - உனக்கு வேண்டிய ராஜ்யம் எதையும் கொடுத்து வானத்தி லிருந்த போதிலும் அதைக் கொடுத்து. இனியராய அனனா வந்து-மிக்க மரியாதையுடன அவர்களேவந்து உன் ஏவலின நிற்பர் என்றாள் - உன் ஏவலாளராய் நின்று ஊழியம செயவாாகள் என்றாள்.

22 நிருதா தம் அருளும் பெற்றேன - அடாடா, நான் எவ்வளவு யோகக்காரன! அரக்கர்களுடைய கருணையே கிடைத்து விட்டது நின நலம் பெற்றேன் - உன்னை மணந்து கொள்கிற பாக்கியமும் கிடைத்து விட்டது. நின்னோடு ஒருவரும் செலவத்து யாண்டும் உறையவும் பெற்றேன அன்றோ - உன்னுடன் என்றும் நீங்காத செல்வத்தில் சதா வாழ்ந்து கொண்டு இருக்கவும் கிடைத்து விட்டதல்லவா, பேஷ்!

திருநகர் நீர்ந்தபின னர்
செய்தவம் பயந்த(து) என னு,

வரிசிலை வடித்ததோ ளான்
வாள்எயி(று) இலங்கநக் கான். (96)

---

22. திருநகர் நீர்ந்த பின்னா – அயோத்தியைக் கடந்து காட்டுக்கு வந்த பின்பு செய்தவம் பயநதது எனறு – செய்த தவத்தின் பயன் கைமேல் கிடைத்துவிட்டது என்று. வரிசிலை வடித்த தோளான் – நன்ருய் இறுகக் கட்டிய வில்லைத் தோளில் தாங்கியவனுன ராமன். வாள எயிறு இலங்க நக்கான – பிரகாசமான பற்கள் தெரியும்படியாக வாய் விட்டுச் சிரித்தான்.

## ராமனைத் தழுவிக் கொண்டாள் பயந்த சீதை

23. இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன நேருகிறது? யாருக்கும் கண்ணின் ஒளிபோல உயிர்களிடத்திலெல்லாம் அமைந்திருக்கும் இறைவனது உருவமானவன் ராமன். அவன் பக்கத்தில் வருகிறது யார், பார்ப்போம்.

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

விண்ணிடை உம்பர், நா கர்
விரிஞ்சனே, முதலோர்க்கெல் லாம்

கண்ணிடை ஒளியின்பாங் கர்,
கடிகமழ் சாலைநின் றும்

பெண்ணிடை அரசி,தே வர்
பெற்றநல் வரத்தால்ப,பின் னர்

மண்ணிடை மணியினவந் த
வஞ்சியே போல்வாள்வந் தாள். (97)

---

23. விண்ணிடை உம்பர - வானத்திலுள்ள தேவர்கள் என்ன. நாகர் - நாகலோகத்திலுளள அறிஞர்கள் என்ன. விரிஞ்சனே முதலோர்க் கெல்லாம் - பிரம்மா முதலிய மும் மூர்த்திகளுக்குமே. கண் இடை ஒளியின பாங்கர் - கண்ணுக்குள் இருந்து பார்க்கும் அறிவைப்போல, ஜீவராசிகளுக்கு உள்ளாக எல்லாம் இருந்து விளங்குகிற இறைவனது அம்சமான ராமன் பக்கமாக கடிகமழசாலை நின்றும் - வாசனைப் புஷ்பங்களினுல கமழும் சாலையினின்றும். பெண்ணிடை அரசி - பெண்கள் திலகமான சீதை லக்ஷ்மி தேவியானவள் மண்ணிடை மணியின் வந்த - பூமியில் ரத்தினம்போல வந்து அவதரித்த. வஞ்சியே போலவாள வந்தாள - பூங்கொடி போனறவளான சீதை வநதுகொண்டிருநதாள், - ராமன பக்கமாக

24. காட்டிலுள்ள மரஞ் செடிகளுக்குள்ளே எங்கும் காணாத அழகும் மேனியுங் கொண்ட பெண்ணுருவம் இடையிடையே தோன்றக் கண்டாள், அரக்கியான சூர்ப்பனகை.

மாமிசத்தை வாட்டித் தின்பதற்காக ஒரே தேட்டமாயுள்ள சூர்ப்பனகை காண்கிறாள்.

ஊன்சுட உணங்குபேழ் வாய்
  உணர்விலி, உருவம்நா றும்

வானசுடர்ச் சோதிவெள் ளம்
  வந்திடை வயங்கநோக் கி,

மீன்சுடர் விண்ணுபமண் ணும்
  விரிந்தபோர் அரக்கர்என் னும்

கான்சுட, முளைத்தகற் பின்
  கனலியைக் கண்ணில்க்கண் டாள் (98)

---

24. ஊன் சுட உணங்கு பேழ்வாய் உணர்விலி - மாமிசத்தை வாட்டி, அதைத் தின்பதறகாக ஆசைப்படும் பெரிய வாயையுடைய அறிவில்லாதவளான சூாப்பனகை. உருவம் நாறும் - பெண உருவம் தோனறும் வான்சுடர்ச் சோதி வெள்ளம் - மாலைசூரியனது பொனமயமான ஒளிப் பிழம்பு வந்திடை வயங்க நோக்கி - மரஞ்செடிகளுக்கு இடையே பிரகாசிக்கவும், உறறுப் பாாத்தாள். பார்த்ததும் ஒரு பெண் என்று தெரிந்துகொண்டாள் அநதப் பெண் யார்? மீன் சுடா விண்ணும் மண்ணும் - நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கினற வானத்திலும் பூமியிலுமே விரிநத போர் அரக்கா எனனும் கான சுட - எங்கும் பரவிப போர் செய்யும் ராக்ஷஸர் ஆகிய காட்டைச் சுட்டொழிப்பதறகாக. முளைத்த கற்பின் கனலியை - அவதரித்த கறபாகிய

25. ஏதோ பூவைக் கொய்துகொண்டு நின்ற சீதை கண்ணுக்குத் தென்பட்டதும், அவளது அழகை அனுபவிக்க ஆரம்பித்து விட்டாள் சூர்ப்பனகை. ஒரே பார்வையாய் பார்த்து நின்றாள், மனசில்போய் வியாபித்த அந்த அழகுக்கு எல்லையே இல்லை என்று திகைத்து நின்றாள்.

பண்புற நெடிதுநோக் கிப்,
'படைக்குநர் சிறுமைஅல் லால்

என்பிறங்(கு) அழகிற்கெல் லை
இல்லையாம், என் றுநின் றாள்:

---

அக்கினியை (-சீதையை) கண்ணிற் கண்டாள் – பிரத்தியக்ஷமாகப் பார்த்துக்கொண்டாள்.

குறிப்பு:— மறைந்து மறைந்து காணும்போதுதான் ஒரு உருவத்தின் அழகு ஏதோ வியாபகம் உள்ளதாய்த் தோன்றும். சீதையின் அழகும், மேனியும், மரஞ் செடிகளுக் கிடையே வியாபகத்தோடு பிரகாசித்ததாய்த் தோன்றுகிறது சூர்ப்பனகையின் கண்ணுக்கு. இதைக் குறித்தே 'உருவம் நாறும் வான்சுடர்ச் சோதி வெள்ளம் வந்திடை வயங்க' என்கிறார். சீதை காரணமாகவே ராவணனும் அரக்கர்களும் தொலையப் போகிறார்கள் என்பதைக் குறித்து, அரக்கர் என்னும் கான்சுடமுளைத்த கனலி' என்கிறார்.

25. பண்புற நெடிது நோக்கி - பொருமை யாதொன்று மில்லாமல் மனசோடு நெடிது நேரம் சீதையை நோக்கி. படைக்குநர் சிறுமையல்லால் – அழகின் வரம்பு என்று சொல்லுவதற்குக் காரணம் சிருஷ்டிகர்த்தாவின் திறமே அவ்வளவோடு நின்றது என்பதுதான் பொருள், வாஸ்தவத்தில். எண்பிறங்கு அழகிற்கு - மனசுக்குள் போய் நின்று வியாபிக்கிற அழகுக்கு. எல்லை இல்லையாம் என்று நின்றாள் - எல்லை கிடையாது என்று எண்ணித் திகைத்து நின்று விட்டாள்.

'கண்பிற பொருளில்ச்செல் லா,
கருத்தெனின் அஃதே; கண்ட

பெண்பிறந் தேனுக(கு)என் னில்,
எனபடும் பிறருக்(கு)?'என் ருள் (99)

26. பூப் பறித்துக்கொண்டிருந்த சீதை, நடந்து வந்து ராமன் இருந்த இடத்துக்குச்சற்று எட்டி நின்றுகொண்டிருந்தாள். அப்போது சூர்ப்ப னகை என்ன செயகிருள் என்று பார்ப்போம்.

பொருதிறத தானைநோக் கிப்
பூவையை நோக்கிநின் ருள்:

'கருதமற் றினிவேறில் லை,
கமலத்துக் கடவுள்தா னே

---

25. கண்பிற பொருளில்ச் செல்லா - அந்த அழகை விட்டுக் கண்ணைப் பறிக்க முடியவில்லை. கருதெனின அஃதே - வேறொரு பொருளில் மனசைச் செலுத்திப் பார்த்துக் கொணடிருந்தாலும், இந்த உருவந்தானே தோன்றுகிறது உருவெளித் தோற்றமாக. கண்ட பெண் பிறந்தேனுக்கு – இப்படிப பார்க்க நேர்ந்த பெண்ணுகிய எனக்கு இந்தப் பாடென்ருல். என்படும பிறருக்கு என்ருள் - என்ன ஆகும் ஆடவர் பாடு என்று எண்ணினுள்.

26, பொரு திறததானை நோக்கி - போர்வல்ல ராமனை நோக்கி, அடுத்தாற்போல். பூவையை நோக்கி - பெண ணுகிய சீதையையும் நோக்கி. நினருள -அதிசயித்து நின்று விட்டாள். பிறகு சொல்லுகிருள் : கருத மற்று இனி வேறில்லை - காரணத்தை யோசிக்க வேண்டியதில்லை , - இப்போது நன்ருய்த் தெரிந்துவிட்டது, கமலத்துக் கடவுள் தானே - பிரமனே.

ஒருதிறத்(து) உணரநோக் கி
உருவினுக்(கு) உலகம்மூன் றில

இருதிறத் தார்க்கும்செய் த
வரம(பு), இவர் இருவர்'என் றுள்.
(100)

27. சீதையின் அபூர்வமான அழகை எப்படி யெல்லாமோ அனுபவித்தாள் சூர்ப்பனகை. அழகுக்கே அவள் சிகரம் என்று எண்ணுகிறாள். அப்படியே மனசில் வைத்துப் பாராட்டுகிறாள். சிறிது நேரங் கழியவும் யோசனை வேறாய்ப் போய் விட்டது.

இந்த அழகிய காயாம்பூ வண்ணனை இவன் இவ்வளவு மென்மையும் அழகும் வாய்த பெண்ணோடு இந்த நடுக்காட்டில் வந்து வாழ்க்கை நடத்தவா செய்வான்? மாட்டான் 'என்று எண்ணுகிறாள்

'பொன்னைப்போல்ப் பொருவில்மே னிப்
பூவைப்போல் வண்ணத்தான், இம்

மின்னைபபோல் இடையாளோ டும்
மேவுவாழ் வுடையன்அல் லன்;—

26. ஒரு திறதது உணர நோக்கி - ஒன்றாகச் சேர்த்து வைத்து அறிந்து கொளள வேண்டுமெனறு எண்ணி. உலகம மூன்றில இருதிறத்தாக்கும் - வானம் பூமி நாகலோகம ஆகிய மூன்று லோகத்திலும் ஆண் பெண்ணாகிய இருவர்சம்பந்தமாக உருவினுக்குச் செய்த வரமபு இவா எனறுள - அழகின் உச்சத்தை அறிவதற்காகச் செயத வரம்பு எனறு உறுதி செய்துகொண்டாள்.

27. பூவைப்போல வணணததான் - காயாம்பூவைப் போல் நீலநிறத்தவனை இவன். இம் மின்னைபபோல் இடையாளோடும் மேவு வாழ்வு உடையான அல்லன - மின்னலைப் போன்ற இடையையுடைய பெண்ணோடு இந்தக் காட்டில் வாழ்க்கை நடத்தக் கூடியவன் அல்ல.

தன்னைப்போல் தகையோர்இல் லாத்
தளிரைப்போல் அடியினு ளும்,

என்னைப்போல் இடையேவந் தாள்
இகழ்விப்பென் இவளை'என்று. (101)

28 சூர்ப்பனகை சீதையைக் குறித்து ராமனிடம் என்ன சொல்லுகிறாள் என்று பார்ப்போம்.

'இதோ வருகிறவள் மாய வித்தை யெல்லாம் செய்யக்கூடிய படுஅரக்கி. அவளுடைய நெஞ்சத்தை யாராலும் அறிய முடியாது, ஏதோ தெரிந்துவிடலாம் என்று எண்ணுவது வீணான காரியம்

'வரும்இவள் மாயம்வல் ல
வஞ்சனை அரக்கி;நெஞ் சம

தெரிவிலள ; தேறுமதன் மை,
சீரியோய்! செயலிற்றன் றால் ;

---

27. தன்னைப் போலத்தகையோர் இல்லா – பெண் தன்மையும் அழகும் தனக்குச்சமானமாக வேறு யாரிடத்திலுமில்லாத தளிரைப்போலஅடியினுளும – மாந்தளிர் போன்ற சிவந்த மென்மையான பாதத்தையுடையவளான இவள். என்று-என்று எண்ணியவளாய்.

குறிப்பு:— இடையே வந்த பெண்ணை ராமனிடம் சொல்லி இகழவித்து ஒதுக்கிவிடலாம் என்ற எக்களிப்பானது பாட்டின் ஓசையிலேயே கிடக்கிறது. அருமையான பாவம் வாய்ந்தது செய்யுள்.

28. நெஞ்சம தெரிவிலள - இவளது மனசை யாரும அறிய முடியாது தேறும தன்மை – மனசைத் தெரிந்து விடலாம் என்று எண்ணுவது செயலிற்று அன்றால் - சாதிக்கிற காரியமல்ல சீரியோய - நீயோ, வஞ்சனையொன்றும் அறியாத உயர்ந்த பண்புடையவன்.

உருவிது மெய்யதன் றூல்;
ஊன் நுகர் வாழ்க்கையா ளை

வெருவினென் ! எய்திடா மல்
விலக்குதி, வீர!' என் றுள. (102)

29. சீதையை அரக்கியென்று சூர்ப்பனகை சொல்லுகிறுள். யாரிடம்? ராமனிடமே. இதைவிட வேடிக்கையான காரியம் ஒன்று இருக்கவா செய்கிறது? ராமன் பேசுகிறதைப் பார்ப்போம்.

நங்கையே, உன்னுடைய புததிசாலித்தனம் ரொம்ப ரொம்பத் தெளிவு. சரிசரி யாரும் தன்னுடைய உண்மையான சுபாவத்தை ஒளித்துக்கொள்ள முடியாது. என்னிடத்தில் நீ காட்டும் நல்ல எண்ணந் தான் எவ்வளவு தெளிவாய் இருக்கிறது அடடா!'

' ஒள்ளிதுன் உணர்வு! நங் காய்!
தன்னையார் ஒளிக்கும்சட் டரா?

தெள்ளிய நலத்தினுல் உன்
சிந்தனை தெரிந்ததம் மா!

---

28. உருவுஇது மெய்யது அனறூல் – இந்த அழகெல்லாம் இயலபான அழகு அல்ல—வேஷந்தான் ஊன் நுகர் வாழக்கையாளை –நரமாமிசங்கூட உண்ணுகிறவள் இவள். வெருவினென் – அதனுல் இவளைப்பாாக்க எனக்குப் பயமாயிருக்கிறது. எயதிடாமல – என்னைப பிடித்துக் கொள்ளாமல விலக்குதிவிர – விலக்குவாய், வீரனே

29 ஒளளிது உன் உணாவு – வெகு நோ்த்தியாக இருக்கிறது, உனனுடைய புத்திசாலித்தனம் தன்னை யாா ஒளிக்கும சட்டார;– தனனுடைய சுபாவத்தை மறைக்கக் கூடிய சக்தியுடையவர்கள் யார் இருக்கிறுர்கள்.

கள்ளவல் அரக்கிபோ லாம்
இவளை நீ காண்டி!' என் று,-
வெள்ளிய முறுவல்முத் தம்
வெளிப்பட வீரன் நக் கான். (103)

30. சூர்ப்பனகை பேசியதன் காரணமாக ராமன் வேடிக்கைபண்ணிச் சிரித்துக்கொண்டிருக்கிறான். அந்தச் சமயத்தில் அவன் பக்கம் நடந்து வருகிறாள் சீதை.

ஆயிடை, அமுதினவந் த
அருந்ததிக கற்பின் அம் சொல்
வேயிடைத் தோளினு ளும்,
வீரனைச் சேரும்வே லை,
'நீயிடை வந்ததென னை,
நிருதர்தம் பாவை!' என் னுக்,
காய்எரி அனையகள் ள
உள்ளத்தாள் கதித்தலோ டும் (104)

29. கள்ளவல் அரக்கிபோலாம் இவளை நீ காண்டி - ஏமாற்றுதலில் வல்ல அரக்கி என்று இவளை நீ கண்டு பிடித்துக்கொண்டாய், பேஷ்பேஷ், என்று சொல்லி. வெள்ளியமுறுவல் முத்தம் - வெளேர் என்றிருக்கும் பற்களாகிய முத்துக்கள். வெளிபபட வீரன நக்கான - வெளியிலே தெரியும்படியாக ராமன் சிரித்தான்

30 ஆயிடை - அந்தச் சமயத்தில். அமுதின் வநத - தேவாமிர்தத்தைப் போல் அருமையாய் உலகுக்குக் கிடைத்த அருநததிக் கற்பின - அருந்ததிபோல் கற்பை யுடைய. அஞ்சொல - மிருதுவான சொல்லையுடைய. வேயிடைத தோளினுளும - வேய்போன்ற தோளையுடைய சீதையும். வீரனைச் சேரும் வேலை - ராமனை நெருங்கிவரும் சமயத்தில். நீ இடை வந்தது என்னை நிருதர் தம் பாவை என்று - அரக்கர் மகளே, எப்படி நீ இங்கே வரலாம் என்று சொல்லிக்கொணடு. காய எரி அனைய கள்ள உள்ளத்தாள - காந்துகின்ற அக்கினிக்குச் சமானமான பொறுமையால் கொதிக்கும் மனத்தாள். கதிதகலோடும் - அதட்டிய வுடனே.

31. சூர்ப்பணகை அதட்டியவுடனே, அப்பாவி சீதை, என்னசெய்வாள்? பயந்துபோன அன்னத்தைப் போல நடுங்கி ஓடினாள். பாதங்கள் வருந்தப் பதைத்துப் பதைத்துக் கால் எடுத்து வைக்கிறாள்.

அஞ்சிய அன்னம்அன் னாள்.
மின் இடை அலசஓ டிப்

பஞ்சின்மெல் அடிகள்நோ வப்
பதைத்தனள்; பருவக்கா ல

மஞ்சிடை வயங்கித்தோன் றும்
பவளத்தின் வல்லிஎன் னக்,

குஞ்சரம் அனையவீ ரன்
குவவுத்தோள் தழுவிக்கொண் டாள்.
(105)

---

31. மின்னிடை அசை ஓடி – மின்னல் போன்ற இடை வருந்தும்படியாக ஓடி. பஞ்சினமெல் அடிகள் நோவப் பதைத்தனள - பஞ்சு போன்ற மென்மையான பாதங்கள் நோவ, உடம்பு எல்லாம் பதைத்தவளாய். பருவக கால யஞ்சிடை மயங்கித் தோனறும் - கார்காலத்து நீலமேகத திடை ஒட்டித்தோனறும். பவளத்தின் வல்லி அன்ன - சிவந்த பவளக் கொடிபோல. குஞ்சரம் அனைய வீரன குவவுத்தோள்; - யானையை ஒத்த ராமனது திரண்ட தோளைத் தழுவிக்கொண்டாள், சீதை.

## பர்ணசாலைக்குள் போனான் சீதையோடு

32. சீதையை அரக்கியென்று சூர்ப்பனகை சொன்னபோது, அதை ஏதோ விளையாட்டாகக் கருதி அனுபவித்தான் ராமன். இப்போதோ, ஆபத்துக்கு உள்ளாகி விடுவாள் சீதை என்பதாக எண்ணினான். 'அரக்கரோ அரக்கியர்களோ, இவர்களோடெல்லாம் விளையாட்டாகக்கூடப் பேசுதல் கூடாது என்றும் தெரிகிறது. அப்படியெல்லாம் பேசினால் விளைகிறது தீமைதான்' என்று எண்ணி சூர்ப்பனகையைப் பார்த்து 'தொந்தரவு கொடுக்கும் காரியம் ஒன்றும் செய்யக்கூடாது' என்று சொல்லுகிறான்.

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

வளைஎயிற் றவர்களோ டு
வரும்விளை யாட்டென்று னும்,

விளைவன தீமையே யாம்,

32. வளை எயிற்று அவர்களோடு வரும - வக்கிர தந்தங்களையுடைய அரக்கர்களோடு ஏற்படும். வீரன் - வீரனாகிய ராமன். மிக்கப் பொறுமையோடு பேசுகிறான்:

'உளைவன இயற்றல்! ஒல்லை
உன் நிலை உணருமாயின்,

இளையவன் முனியும், நங்காய்!
ஏகுதி விரைவின்' என்றான். (106)

33. 'தனக்கும் சூர்ப்பனகை முதலான அரக்க இனத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்கமுடியாது' என்று எவ்வளவோ சொல்லியும், பிடிவாதமாய் வம்பு பண்ணுகிறாள் அந்த அரக்கி.

---

32. உளைவன இயற்றல் - வருத்தம் தரக்கூடிய காரியம் ஏதேனும் செய்துவிடாதே. ஒல்லை உன் நிலை உணருமாயின் - இந்த க்ஷணத்தில் உன்னுடைய மனநிலை இப்படியிருக்கிறதென்று தெரிந்துவிடுவானானால் இளையவன முனியும் - என் தம்பி ஒருவன் இருக்கிறான, அவனுக்குக் கோபம் வந்துவிடும்.

குறிப்பு — சூர்ப்பனகை பொல்லாதவள் என்றும், அவள் காட்டிலே வந்திருக்கும் அருமைச் சீதையைத் துன்புறுத்தினாள் என்றும், ராமனுக்கு நன்றாய்த் தெரியும். சூர்ப்பனகையை அந்த க்ஷணமே என்னவேண்டுமானாலும் செய்திருக்கலாம். வில்லும் அம்பும் பக்கத்திலேயே இருக்கிறது. ஆனால, வீர லக்ஷணத்துக்கு ஏற்க, பெண்ணினிடம் பரிதாபம் கொண்டவனாய், 'வம்பு ஏதும் செய்துவிடாதே அம்மா. தம்பி கோபித்துக்கொள்ளப் போகிறான்' என்று உண்மையான இத பாவத்தோடு பேசுகிறான். ரொம்பவும் அனுபவிக்கத்தக்க பாவம் இது.

'இன்னும் என்ன என்ன அயோக்கியத்தனமான வார்த்தைகளைச் சொல்லப் போகிறளோ, துணிந்து எதையும் சொல்லுவாள்' என்று எண்ணினவனய், அந்த இடத்தை விட்டுப் புறப்படுகிறன் ராமன்.

'நன்ஞெடும் தொடர்விலா தேம்
என்னவும் தவிராள்; இனனும்
கல்நெடு மனத்திசொல் லும்
கள்ளவா சகங்கள்' என் று,—
மினனெடு தொடர்ந்துசெல் லும்
மேகம்போல், மிதிலைவந் த
பொன்னெடும் புனிதன்போய் அப்
பூம்பொழில்ச் சாலைபுக் கான். (107)

33. கல் நெடு மனத்தி சொல்லும் - இரக்கமில்லாத அந்த அரக்கி நிச்சயம் சொலலுவாள். கள்ள வாசகங்கள என்னு – அக்கிரமமான வாாத்தைகளை என்று எண்ணின வனய. மிதிலை வநத பொன்னெடும் புனிதன போய் - மிதிலை யில் அவதரித்த லக்ஷ்மிதேவியான சீதை முன்னல் போக ராமன் பின்னல் செல்லுகிறன். அப் பூம் பொழில்ச்சாலை புக்கான – பூஞ்சோலை நிழலில் அமைந்திருந்த பர்ணசாலைக் குள போனன்.

குறிபபு.—பின இரண்டு அடியையும் பாடப் பாட மின்னும் மேகமும், சீதையும் ராமனும், தொடர்ந்து செல்லுவதாக மனக்கண்ணிற்குப் புலப்படும்

## மன்மதனை விட்டு ஒளிக்க இடமேது

34. ராமன் பர்ணசாலைக்குள் போனதும் சூர்ப்பனகைக்கு ஒரே ஏமாற்றமாய்ப் போய் விட்டது. உடலை விட்டே உயிர் போனமாதிரி யிருந்தது. சுவாசம்கூட இல்லாமல் அப்படியே ஒடுங்கி நின்றுவிட்டாள். சிறிது நேரங் கழித்து உணர்ச்சி வந்தது. 'அடடா அவன் நம்மைவிட்டுப் போய்விட்டானே, மனசில் கொஞ்சங்கூட அங்கீ கரிப்பதாக இல்லையே! கோபமும் அவனுக்கு வந்து விட்டதே' என்றெல்லாம் கையை நெரித்த வண்ண மாய் நினைக்கிறாள்.

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

புக்கபின் போயதென் னும்
உணர்வினள்; பொறையுள் நீங் கி

உக்கதாம் உயிரள், ஒன் றும்
உயிர்த்திலள், ஒடுங்கிநின் றாள்:

---

34 புக்கபின் போயது என்னும உணர்வினள் - ராமன பர்ணசாலைக்குள் போனதும், காரியம் வீணாய்ப்போய் விட்டதே என்று எண்ணுகிற சூர்ப்பனகை. பொறையுள் நீங்கி உக்கதாம உயிரள - உடம்பை விட்டு நீங்கித் தொலைந்து போயிற்று உயிர், என்று சொலலும்படியான அவள். உயிர்த்திலள ஒடுங்கி நின்றாள - சுவாசங்கூட இல் லாமல் அபபடியே ஒடுங்கி நின்றுவிட்டாள் சிறிது நேரங் கழித்து உணர்ச்சி வந்தது.

'தக்கிலன், மனத்துள்யா தும்
தழுவிலன், சலமும்கொண் டான், –

மைக்கரும் குழலினுள் மாட்(டு)
அன்பினில் வலியன்'என் பாள். (108)

35. ராமன் தன்னைப் புறக்கணித்து விட்டான் என்ற காரணத்தால் சூர்ப்பனகைக்கு எவ்வளவோ மனம் தளர்ந்துவிட்டது. ஆனாலும், அப்படியே நின்று விடவில்லை. ராமனை எப்படியாவது அணைந்துவிட வேண்டும் என்ற ஆத்திரத்தோடு, அதற்கு வழியை நாடிப் படபட என்று நடந்து போகிறாள் இன்றைக்கு இவனைத் தழுவாமல்ப் போவேனானால் உயிரே போய்விடும் என்ற எண்ணத்தோடு நடந்து போகிறாள்.

பூங்கொடியாலாகிய ஒரு பந்தல். அதன் கீழே அழகான கைபிடிச் சுவர் மாத்திரமுள்ள பளிக்கறை. அந்தப் பளிக்கறைக்குச் செம்பொன்னாலாகிய வரி

---

34. தக்கிலன் - நமக்குக கிடைக்காமலப் போய் விட்டான். மனத்துள யாதும் தழுவிலன - மனசில் சிறிதும் அங்கீகரிக்கவில்லை. சலமுங் சொண்டான - கோபமும் கொண்டு விட்டான மைக்கருங் குழலினுள மாட்டு - நான் கண்ட அந்தக் கருங் கூந்தலுடைய பெண்ணினிடத்து. அனபினில வலியன என்பாள - அபார காதலுடையவன் என்று எண்ணத் தலைப்பட்டாள்.

வாளம் அழகாய்க் கொடுத்திருந்தது. இத்தகைய குளிர்ச்சியான பளிக்கறைப் பந்தலுக்குள் புகுந்தாள், சூர்ப்பனகை.

நின்றிலள்: அவனைச்சே ரும்
நெறியினை நினைந்துபோ னாள்;
'இன்றிவன் ஆகம்புல் லேன்
எனின்,உயிர் இழப்பென்'என் னுப்
பொன்திணி சரளச்சீ தப
பளிக்கறைப் பொதும்பர்புக் காள்:—
சென்றது பரிதிமேல் பால:
செக்கர்வந்(து) இறுத்ததன் றே! (109)

---

35. நின்றிலள் – செயலற்று அப்படியே இருந்து விடவில்லை. இன்று இவன ஆகம் புலலேன எனின – இன்றைக்கே இவனது மார்பு தழுவ வேணடும், தழுவாமல் போனல. உயிர் இழபபென என ற – உயிர் போய் விடும் என்று எண்ணியவளாய பொனதிணி சரளச்சீதப் பளிக்கறை – பொன்னினல் வரிவாளம் ஒழுங்காகக் கொடுத்து, குளிர்ந்த பளிங்கினலச சுவர் எடுத்த வசந்த மேடை பொதும்பர் புக்காள – பூங்கொடிப் பந்தலுக்குள் புகுந்தாள்; அந்தச சமயத்தில தானே, சென்றது பரிதி மேல் பால - சூரியன் மேல்த்திசையில இறங்கியது. செக்கர் வந்து இறுத்ததனறே-செவ்வானம் அந்த மேல்த்திசையில் படர்ந்து விட்டது.

36. மாலை நேரம் வந்து விட்டது. போதாக் குறைக்குச் செவ்வானமும் படர்ந்து விட்டது. கேட்பானேன்! சூர்ப்பனகை சிந்தை அழிந்தவளாய் மூர்ச்சையாய்க் கிடக்கிறாள். மேலே சொன்ன காதலாகிய கனல் மூள ஆரம்பித்துவிட்டது.

சந்தம்

தான தன்னன
தன்னன தன்னன

அழிந்த சிந்தைய –
ளாய்அயர் வாள்வயின்,

மொழிந்த காமக்
கடுங்கனல் மூண்டதால்

வழிந்த நாகத்தின்
வன்தொளை வாள்எயிற்(று)

இழிந்த கார்விடம்
ஏறுவ(து) என்னவே! (110)

---

36. அயாவாள வயின் - அயர்ந்த சூர்ப்பனகையிடத்தில. வழிநத நாகததின – நீண்டு நெளிந்துள்ள நாகத்தின. வன் தொளை வாள எயிற்று – பொல்லாத தொளையுள்ள கொடிய பல்லிலிருந்து இழிநத கார் விடம் – இறங்கிய கறுத்த விஷமானது. ஏறுவது என்னவே – உடம்பில் ஏறுவது போலவே,– காமக் கடுங் கனல் மூண்டதால்.

37. தாடகையாகிய கொடிய அரக்கியின் மார்பில் ராமனது அம்புபாய்ந்த விசித்திரம் நமக்குத் தெரியுமே!

தாட கைக்கொடி-
  யாள்தட மார்பிடை

ஆட வர்க்(கு)அர-
  சன்அயில் அம்புபோல்,—

பாட வத்தொழில்
  மன்மதன் பாய்கணை

ஓட, உட்கி
  உயிர்உளைந் தாள்அரோ! (111)

---

37. ஆடவர்க்கு அரசன் — ராமனது. அயில் அம்புபோல் — கூர்மையான அம்புபோல. பாடவத் தொழில் — திறமை வாய்ந்த. மன்மதன பாய் கணை ஓட — மன்மதனது பாய்கின்ற அம்பு மார்பைத் தொளைத்து ஓடவும். உட்கி உயிர் உளைந்தாள அரோ - பயந்துபோய் உயிர் நடுங்கும்படி ஆயிற்று.

குறிப்பு:— காதலைப்பற்றிக் கம்பர் எவ்வளவோ வேகமும் உணமையும் அமையப் பாடுவார். சூர்ப்பனகையின் காதலைப் பற்றிப் பாட வரும்போது, கவிஞருடைய உள்ளத்தில் ஒருவிதமான ஹாஸ்யம் புகுந்துவிட்டது. இது முதல் வருகிற பாடல்களில், சிருங்கார ரஸத்தோடு ஹாஸ்யமும் கலந்திருப்பதாகப பார்ககவேண்டும்.

38. மன்மதனுடைய தொந்தரவைச் சகிக்க முடியவில்லை. அவனுக்குத் துணையாக இருக்கிறுன் பூர்ண கலையோடுள்ள சந்திரன். அவர்கள் இருவர் மேலும் கோபம் வராமலா இருக்கும்?

*கலைஉ வாமதி –*
*யேகறி யாக,வன்*

*சிலையின் மாரனைத்*
*தின்னும் நினைப்பினுள்!*

சந்திரனையே துணைக்கறியாக வைத்துக் கொண்டு மன்மதனை அப்படியே தின்றுவிட எண்ணு கிருள். ஆத்திரத்துக்கும் ஆங்காரத்துக்கும் குறை வில்லை. இப்படி ஆங்காரப்படும் சமயத்தில் பொதி கைமலையி லிருந்து பிருதுவாய்த் தென்றல் வந்து அவள் மேல் வீசுகிறது. அதனுல் என்ன ஏற்படு கிறது, பார்ப்போம்.

*கலைஉ வாமதி –*
*யேகறி யாக,வன்*

*சிலையின் மாரனைத்*
*தின்னும்நி னைப்பினுள்,—*

---

38. **கலை உவாமதியே** – பூர்ண சந்திரனே. **வன்சிலையின் மாரனை** – கொடுமை செயயும் கரும்பு வில்லை ஏந்திய மன்மதனை. இந்தக் கோபம் ராஜாங்க ஹோதாவில் வருவது ; ராவணேசுவரனுடைய தங்கையல்லவா இவள்?

மலைய மாருத
மாம்நெடும் காலவேல

உலையும் மார்பிடை
ஊனறிட, ஓயுமால். (112)

39. சமுத்திரத்தினுடைய ஓசையைக் கேட்டுக் கேட்டுப் பழகியவள் தான்: ஆனாலும், இப்போது அது காதல் நோயைக் கிளறிச் சூர்ப்பனகையை எவ்வளவோ துன்புறுத்துகிறது. வந்துவிட்டது கோபம் அவளுக்கு.

அலைகரும் ஆழி
அடங்கிட, அங்கையால்

மலைக்கு லங்களிலத்
தூர்க்கும மனததினள்,—

---

38. மலைய மாருதமாம் நெடுங்கால வேல — பொதிகை மலையிலிருந்து வாதத தெனறலாகிய மிகவும் கொடிய வேலானது. உலையும் மார்பிடை-முன்னமேயே மன்மதபாணங்களால உலைந்துள்ள மார்பில். ஊன்றிட ஓயுமால — பாயவும், அப்படியே தளர்ந்து விடுகிறாள்; ஆங்காரமும் எங்கேயோ போய்விட்டது.

குறிப்பு.— சூர்ப்பனகையின் உள்ளத்தில் எவ்வளவோ ஆங்காரமும் திரமும் இருக்கிறது. அதெல்லாம் போன இடம் தெரியாமல் போகிறது, மென்மையான தென்றல் வந்து வீசவும். இந்த முரணான வைப்பு ரொம்பவும் அனுபவிக்கத தககது சூர்ப்பனகையின் காதல் இது.

39. அலைக்கும் ஆழி அடங்கிட — அலையோடு கூடிய சமுததிரம் அப்படியே அடஙகிவிடும்படி. அங்கையால மலைக்குலங்களிலத தூர்க்கும மனத்தினள் — கைகளினால் பெரிய மலைகளையெல்லாம் எடுத்து எறிந்து தூர்த்துவிட வேண்டும் எனறு எண்ணுகிறாள்.

நிலைக்கும் வான்மதி
வீசிய நீள்நிலா

மலைக்க, நீங்கும்
மிடுக்கினள், மாந்துவாள். (113)

40. காட்டிலுள்ள மரங்கள் எல்லாம் தொந்தரவு செய்ய வேண்டுமென்றே புஷ்பங்களைப் பூத்து, ஏந்திக்கொண்டிருக்கின்றன. அந்த மரங்கள் மேலும் கோபம் உண்டாய்விட்டது அவளுக்கு.

பூஎ லாம்பொடி
யாக,இப பூமியுள்

கூஎ லாமஒடிப்–
பென்எனக் காநதுவாள்;

சேவ லோடுறை
செந்நலை அன்றிலின்

நாவி னுல்வலி
எஞ்சந டுங்குமால். (114)

---

39. நிலைக்கும் வான்மதி – வம்பு பண்ணுவதற்காக ஆகாயத்தில் நிலையாக நினறு கொண்டிருக்கும் அந்தச் சந்திரன். வீசிய நீள நிலா மலைக்க – வீசிய நிலாக்கற்றை வந்து தாக்க. நீங்கும் மிடுக்கினள – தன பலமெல்லாம் போயினவளாய.

40. சேவலோடு உறை செநதலை அனறலின நாவினுல் – ஆண் அன்றிலோடு உறையும் பெண் அன்றில் மெல்லக் கூவவும். வலி எஞ்ச – தனக்கு இயல்பாகவுள்ள பலம் நீங்க. நடுங்குமால – உடல் எலலாம் நடுங்குகிறது அவளுககு.

குறிப்பு:—பூமியிலுள்ள காடுகளை யெல்லாம் ஒடித்து விடக் கூடுமாம். ஆனுல், அன்றிலப் பறவையின மெல்லிய ஒலி காதில் விழவும, அப்படியே நடுங்கி விடுகிருள். என்னமாய் இருக்கிறது காரியம்!

41. சாமானியமாகத் தமிழ் நாட்டில் உறை பனியைப் பார்க்கமுடியாது. இமயமலையில்தான் உறைபனி உண்டு. கம்பர் இமயமலைக்குப் போய் உறைபனியைப் பார்த்திருக்கிறார். கையினால் அள்ளி, மிருதுவாய்க் குழையும் அதன் தன்மையையும், குளிர்ச்சியையும் அனுபவித்திருக்கிறார்.

* * *

காதல் வெப்பத்தைத் தாங்க முடியவில்லை சூர்ப்ப னகைக்கு. அதற்காக மாவைப்போல் மிருதுவான உறைபனியை அள்ளி மார்பில் அப்பினாள். உறை பனி என்ன ஆயிற்று?

கைக ளால்த்தன
கதித்துள கொங்கைமேல
ஐய தண்பனி
அள்ளினள் அப்பினள்,—
மொய்கொளா தீயிடை
வெந்துமு ருமகிய
வெய்ய பாறையில்
வெண்ணெய்நி கர்க்குமால். (115)

41 ஐய தண்பனி அள்ளினள் அப்பினள — மிருதுவான குளிர்ந்த உறைபனியை அள்ளி அப்படியே அப்பிக்கொண் டாள் மொய்கொள் தீயிடை — நெருக்கமாகப் போட்ட நெருப்பினால். வெய்ய — சூடான. வெண்ணெய் நிகர்க்கு மால — வெண்ணெய்போல் உருகிவிட்டது உறை பனி.

42. சூர்ப்பனகையின் தேகம் சாதாரணமாய் ரொம்பவும் குளிர்ந்திருக்கும். ஆனல் இப்போதோ, ஒரேபடியாய் வெப்பத்தைக் கக்குகிறது இதைப் பார்த்து அவளும் ரொம்பப் பயந்துவிட்டாள். சரி, நீர் நிறைந்த தொட்டிக்குள் போய்க் குளிப்போம் என்று தொட்டிக்குள் இறங்கினுள். அவ்வளவுதான், அந்தத் தண்ணீர் கொதிக்க ஆரம்பித்துவிட்டது.

அளிக்கும் மெய், அழல்
கான்றிட அஞ்சினுள்;

குளிக்கும் நீரும்
கொதித்தெழக் கூசுமால்:

விளிக்கும் வேலையை,
வெங்கண் அனங்கனை

ஒளிக்க லாம்இடம்
யாதென உன்னுமால். (116)

---

42. அளிக்கும் மெய்-குளிர்ந்துள்ள தேகம். கூசுமால – பயப்பட்டு விட்டாள். விளிக்கும் வேலையை – சபதிக்கின்ற சமுததிரததையும். வெஙகண் அனங்கனை –கொடிய மன்மதனை யும் விட்டு ஒளிக்கலாம் இடம் – தபபுவதறகான இடம். யாது என உன்னுமால – ஏதாவது உணடா என யோசிக் கிருள்

## ஆவி போனாலும் ஆசை போகாதோ!

**43.** கார்காலத்து நீல மேகம் வந்து தோன்றி னாலும், நீல நிறங்கொண்ட பருத்த தூண் ஒன்றைக் கண்டாலும் ராமனுடைய உருவத்தை அவை ஞாபகப்படுத்துகின்றன. சூர்ப்பனகை அப்படியே கையெடுத்துக் கும்பிடுகிறாள் உடல் வெப்பத்தைத் தணித்துக் கொள்வதற்காகச் சந்திரகாந்தக் கல்லால் செய்த கல்க்கட்டிலில்ப் போய்ப் படுக்கிறாள்.

சந்தம்

தான தன்னன
தனன தன்னன

வந்து கார்மழை
தோன்றினும், மாமணிக்

கந்து காணினும்,
கைத்தலம கூப்புமால்:

இந்து காந்தத்தின்
ஈரநெ டுங்கலும்

வெந்து காநத,
வெதுப்புறும் மேனியாள. (117)

---

43. கார மழை - கார்காலத்து நீல மேகம். மாமணிக் கநது - நீல மணி போனற தூண். இந்து காந்தத்தின ஈர நெடுங கல்லும - தண்ணீர் கசிந்து ஈரமாக இருக்கும் சந்திர காநதக கல்லால ஆகிய நீணட கட்டில்கூட. வெந்து காநத - சூடுஏறிக் காந்தும்படியாக வெதுப்புறும மேனி - காய்ச்சலுக் குளளான தேகம்

**44.** திடீர் என்று சூர்ப்பனகையின் கண்முன், ராமனது உருவம், உருவெளித் தோற்றமாய்த் தென்படுகிறது. ராமனது உண்மையான மேனியைக் கண்டதாகவே நினைத்துக் கொள்ளுகிறாள் அவள். அவ்வளவுதான், காதல் நோய் அதிகரித்துச் சோருகிறாள். சிறிது நேரங்கழித்து வெட்கப்படுகிறாள். பிறகு என்ன செய்து விடுவானோ என்று பயப்படவும் செய்கிறாள்.

**வீரன் மேனி**
**வெளிப்பட, வெய்யவள்**

**கார்கொள் மேனியைக்**
**கண்டன ளாம்எனச்**

**சோரும் வெள்குமு**
**துணுக்கெனும் : அவ்உருப்**

**பேரும் கால்,வெம்**
**பிணியிடைப் பேருமால்.** (118)

**45.** ஒரு நீலமேகம் அவள் பக்கத்தில் வந்தது. அதை ராமன் என்றே காதல் வெறியினால்த்

---

44. **வீரன் மேனி வெளிப்பட** - ராமனது மேனி உருவெளித் தோற்றமாய்த் தென்பட. **வெய்யவள்** – சூர்ப்பனகை. **கார்கொள் மேனியைக் கண்டனளாம என** – ராமனது உண்மையான நீல மேனியைக் கண்டதாக எண்ணிக் கொண்டு. **வெள்கும்** – வெட்கப்படுவாள் **துணுக்கெனும** – அஞ்சுவாள். **அவ்உருப்பேரும காம** – அந்த உருவெளித் தோற்றம் நீங்கவும். **வெம்பிணிஇடைப்பேருமால்** – ஆறுதல் இல்லாத துன்பத்துக்கு உள்ளாகி விடுவாள்.

தழுவினுள். அந்த மேகத்தின் பாடு என்ன ஆயிற்று பாருங்கள்!

ஆகக் கொங்கையின்
ஐயன் என்(று) அஞ்சன

மேகத் தைத்தழு -
வும், அவை வெந்தன

போகக் கண்டு
புலம்பும், அப் புனமையாள்

மோகத் துக்கோர்
முடிவும்உண் டாங்கொலோ! (119)

46. காதல் நோயினுல், சூர்ப்பனகை ஊழித் தீயில்விழுந்தவள் போல் ஆகிருள், ஆனுலும் அவளுக்கு உயிர் போகவில்லைதான். உயிர் போகவில்லை

---

45. ஆகக் கொங்கையின் – மார்போடு இறுக. ஐயன் எனறு அஞ்சன மேகத்தைத் தழுவும் – ராமன் என்றே கரு மேகத்தைத் தழுவுவாள். வெந்தன போகக்கண்டு புலம்பும – அந்த மேகங்கள் அப்படி அப்படியே வெந்து கரைந்து போகக் கண்டு புலம்புவாள். அப் புன்மையாள மோகத் துக்கு – அந்த அற்பப் பெண்ணுன சூர்ப்பனகையின் மோகத்துக்குத் தான.

குறிப்பு:— மேகத்தைத் தழுவினுள். அவை வெந்து போயின என்னும் ஹாஸ்யத்தின் அடிப்படையான காதல்த் தத்துவம் ரொம்பவும் அனுபவிக்கத் தக்கது.

என்று யாருமே சொல்லுவார்கள். உயிர் போகாத தற்குக் காரணத்தைப் பார்ப்போம்

> ஊழி வெங்கனல்
> உற்றனள் ஒத்தும், அவ்
>
> ஏழை ஆவி
> இறந்திலள் என்பரால்:
>
> ஆழி யானை
> அடைந்தனள் பின்னையும்
>
> வாழ லாமஎனும்
> ஆசைம ருந்தினே. (120)

47. சூர்ப்பனகை மேலும் புலம்புகிருள்· வஞ்சிக்கிற கொடிய மாயைகளைச் சதா உண்டாக்கித் துன் புறுத்துகிறது என் நெஞ்சு. அந்த நெஞ்சுக்குள் நீ புகுந்து ஆபத்தை நீக்கவேண்டும் என்கிருள்.

> 'வஞ்ச னைக்கொடு
> மாயைவ ளர்க்கும்என்
>
> நெஞ்சு புக்(கு)என(து)
> ஆவத்தை நீக்(கு)'எனும்;

---

46. அவ ஏழை ஆவி இறந்திலை – பெணணுகிய சூர்ப்பனகைக்கு உயிர் போகவில்லை. என்பரால – எனறு சொல்லுவார்கள். ஏன்? ஆழியானை அடைந்தனள பின்னையும்— விஷ்ணுவின அம்சமான ராமனை எப்படியும் அடைந்து அதன பினனும். வாழலாமெனும் ஆசை மருந்தினே – மணநது வாழலாம எனனும் ஆசையாகிய மருந்து காரண மாகததான்,– ஆவி இறநதிலள

'அஞ்ச னக்கிரி -
யே! அரு ளாய்!' எனும்; —

நஞ்சம் நக்கினள்
போலநு டுங்குவாள். (121)

48. காதல் வெறி சூர்ப்பனகையை இன்னொரு விதத்தில் பேசச் செய்கிறது. 'நாம் கண்ட பெண்ணின் கண்கள், அடடா, நீலோற்பலமா அல்லது கயல்தானோ? அவளுடைய அழகோ லக்ஷ்மி தேவியைவிட மேலாய் இருக்கிறது. அப்படிப்பட்டவள் மனைவியாய் இருக்கும்போது, என்னையும் ஏறிட்டுப் பார்ப்பானா அவன்?'

காவி யோகய -
லோஎனும் கண் இணைத்,

தேவி யோ,திரு
மங்கையிற் செவ்வியாள்;

பாவி யேனையும்
பார்க்குங்கொ லோஎனும், -

ஆவி ஓயினும்
ஆசையின் ஓய்விலாள். (122)

---

47. அஞ்சனக் கிரியே - கண்ணுக்கிடும் மை போன்ற மலையை ஒத்தவனே. அருளாய் எனும் - கருணைகாட்ட வேண்டும் என்று புலம்புகிறாள்.

48. ஆவி ஓயினும் ஆசையின் ஓய்வு இலளாள. இதில் சோக ரசம் நன்றாய்த் ததும்புகிறது.

## பார்த்துக் கொண்டான் லக்ஷ்மணன்

49. சூர்ப்பனகையினுடைய காதல் அவளை இந்த விதமாகப் பாடாய்ப் படுத்திக்கொண்டிருக்கிறது. அந்த வேளையில்:

சந்தம்

தான தன்னன
 தன்னன தன்னன

ஆன்ற காதல்
 அஃதுற எய்துழி,

மூன்று லோகமும்
 மூடும் அரக்கராம்

ஏன்ற கார்இருள்
 நீக்க,இ ராகவன்

தோன்றி னன்என
 வெய்யவன் தோன்றினன். (123)

---

49. ஆன்ற காதல — சூர்ப்பனகையின் நிறைந்த காதல். அஃதுற எய்துழி — மேலே சொன்ன விதமாக அவளைப் படுததிக்கொண்டிருக்க. மூனறு லோகமும் மூடும் அரக்கராம் — மூன்று லோகததையும் தங்கள் கொடிய செய்கைகளால் வருத்தும் அரக்கராகிய. ஏன்ற காரிருள் நீக்க — நெருங்கிய இருளை நீக்குவதற்கு இராகவன் தோன்றினன் என — ராமன் தோனறியது போல, வெய்யவன் தோன்றினன் — சூரியன் கிழக்குத் திக்கில் உதித்தனன்.

50. விடிந்தவுடன் காதல் நோய் கொஞ்சம் தணிந்தது சூர்பபனகைக்கு. உயிரும் அவளுக்கு வந்தது என்றுதான் சொல்ல வேண்டும். இத்தத் தெளிவு புதிய ஊக்கமே கொடுக்கிறது. துணிவும் உண்டாகிறது. அந்த அழகுள்ள பெண ஒருத்தி இருக்கும் வரை நம்மைத் தீண்டப் போவதில்லை ராமன். ஆதலால் இபபோதே ஓடி அவளைத தூக்கிக்கொண்டு போய ஒளித்துவைத்துவிடவேண்டும்' என்று எண்ணுகிருள்.

சந்தம்

தான தன்னன
தானன தானன
தா ன

விடியல் காண்டலின்
ஆண்டுதன உயிர்கண்ட
வெய் யாள்,

'படியி லாள்மருங்(கு)
உள்ளள(வு) எனைஅவன்
பா ரான்

---

50 விடியல் காணடலின — சூரியோதயத்தைக் கண்ட மாத்திரத்தில். ஆண்டு தன் உயிர் கண்ட வெய்யாள் — அப்போது தான் போன தன் உயிரை மறுபடியுங் கண்ட கொடிய அரக்கியானவள், சொலலுகிருள்' படியிலாள மருங்கு உளளவு - யாதொரு குறைமுமில்லாத அந்தப் பெண் ராமன் பக்கத்தில் உள்ளளவும். எனை அவன் பாரான் — என்னை அவன் ஏறிட்டுப் பார்க்க மாட்டான்

கடிதின் ஓடினென்
எடுத்(து)அவள்க் கரந்திவண்,
கா தல்

வடிவி னுடன்
வாழ்வதே வாழ்(வு)' என
மதி யா. (124)

51. சீதையைத் தூக்கிக்கொண்டு போவதற்காக ஆசிரமத்துக்குப் போகிறுள் சூர்ப்பனகை. அங்கே தடாகத்தின் ஓரத்திலிருந்து கண்ணை மூடியவனுய் ராமன் சந்தியாவந்தனம் செய்துகொண்டிருக்கிறுன். ஆசிரமத்தில் இருக்கிறுள் சீதை.

வந்து நோக்கினள்,
வள்ளல்போய் ஒருமணித்
தடத் துச்

சந்தி நோக்கினன்
இருந்தது கண்டனள்;
தம் பி

---

50. (ஆகையால்,) கடிதின் ஓடினென் - இப்போதே நான் ஓடிப் போய். எடுத்து அவளக் கரந்து - அவளை எடுத்துக கொண்டுபோய் மறைத்து விட்டு. இவண் - இந்த இடத்தில்த் தானே. மதியா - மதித்தவளாய்.

51. வள்ளல் போய் ஒரு மணித் தடத்து - ராமன் சிறிது எட்டிப்போய் ஒரு அழகிய தடாகத்தில். சந்தி நோக்கினன் இருநதது கண்டனள - காலை நேரத்துச் சந்தியாவந்தனத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டாள். தம்பி - தம்பி லக்ஷ்மணனவன்.

இந்து நோக்கிய
நுதலியைக் காத்(து)அயல்
இருண் ட

கந்தம் நோக்கிய
சோலையில் இருந்தது
கா ணாள். (125)

52. சீதை தனியாகவே இருப்பதாக நினைத்தாள். 'நான் எண்ணியது கைகூடி விட்டது. தாமதித்துக்கொண்டு யோசனை பண்ண வேண்டிய காரியம் ஒன்று மில்லை' என்று எண்ணி சீதையினிடம் ஓடினாள் சூர்ப்பனகை.

'தனிஇ ருந்தனள்,
சமைந்த(து)என் சிந்தனை
தாழ் வுற்(று)

இனிஇ ருந்தெனக்(கு)
என் ணுவ(து) இல்'என
என் றைத்.

51. இந்து நோக்கிய நுதலியைக் காத்து – பிறைச் சந்திரன் ஒத்த நெற்றியையுடைய சீதையைக் காத்தவண்ணமாய். அயல் இருண்ட கந்தம் நோக்கிய சோலையில் இருந்தது காணாள் – அந்த இடத்தை ஒட்டிய செறிந்த நிழலால் இருள் கொண்டதும் புஷ்பங்களால் கமழுவதுமான சோலையில் இருந்தான் என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை அவள்; கந்தம் நோக்கியசோலை–வாசனையானது தனக்கு வாய்த்த இடமென்று பார்த்துத் தங்கிய சோலை: அதாவது சதா வாசனை தங்கியிருந்த சோலை.

52. தாழ்வுற்று – விளைகத தாமதஞ் செய்து. இனி இருந்து எனக்கு எண்ணுவது இல – இனிமேல் சும்மா உட்கார்ந்துகொண்டு எண்ணவேண்டிய காரியம் யாதுமில்லை. என என்று – என்று எண்ணினவளாய்.

துனிஇ ருந்தவல்
மனத்தினள் தோகையைத்
தொடர்ந் தாள்;

கனிஇ ரும்பொழில்க்
காத்தயல் இருந்தவன்
கண் டான். (126)

52. துனி யிருந்த வல் மனத்தினள் — ஆங்காரம் குடி கொண்டிருந்த கொடிய மனத்தினளாகிய சூர்ப்பனகை. தோகையைத் தொடர்ந்தாள் — சீதை மேல்ப் பாய்ந்தாள்: தோகை — மயில் போன்றவள். கனியிரும் பொழில் — கனிகள் தொங்கிய அந்தப் பெருஞ் சோலையின் மறைவில். காத்து அயல் இருந்தவன் கண்டான் - உட்கார்ந்து காத்துக்கொண் டிருந்தவனை லக்ஷ்மணன் கண்டுகொண்டான், சீதைமேல்ப் பாய்ந்ததை.

53. சீதைமேல் யாரோ பாய்ந்ததாகத் தெரிய வந்தது லக்ஷ்மணனுக்கு. வில்லை யெடுக்கப் போனான். பெண்பிள்ளையென்று தெரிந்தவுடன், 'அடடா பெண் அல்லவா இவள்' என்று எண்ணி, வில்லை அப்படியே வைத்துவிட்டு ஓடிப்போய், சூர்ப்பனகையின் வேஷம் கொஞ்சம் கலைந்து இயல்பாயிருந்த செம்பட்டை ரோமத்தைத் திருகிப் பிடித்துக்கொண்டான்.

சந்தம்

தான தன்னன
தானன தானன
தா ன

'நில்அ டி!' எனக்
கடுகினன் : பெண்என
நினைந் தான் ;

வில்எ டா(து)அவள்
வயங்கெரி யாம்என
விரிந் த

சில்லல் ஓதியைச்
செங்கையில்த் திருகுறப்
பற் றி,

---

53. நிலலடி எனக் கடுகினன் – அங்கே நில் என்று சொல்லி விரைந்து சென்று. பெண் என நினைந்தான் – இவ்வளவு தானா, பெண் தானே என்று நினைத்து. வில் எடாது –பக்கத்தில் கிடந்த விலலை அப்படியே வைத்துவிட்டு. வயங்கு எரியாம் என விரிநத – கொழுந்துவிட்டு எரியும் நெருப்புப்போல் பரந்துள்ள. சில்லல் ஓதியை – சிலிர்த்துள்ள ரோமத்தை. செங்கையிலத் திருகுறப்பற்றி – கையினால் ஒரே திருகாய்த் திருகிப் பிடித்துக்கொண்டு.

வல்வ யிற்றுதைத்(து),
ஒளிகிளர் வாளினை
உருவி. (127)

54. பயமுறுத்துவதற்காகத்தான் வாளையுருவினான். அரக்கியானவள் ஆபத்து வந்துவிட்டது என்று எண்ணி, லக்ஷ்மணனை ஒரே வேகமாய்த் தாக்கிவிட்டு, ஆகாயத்தில்க் குதித்துவிட வேண்டும் என்று துள்ளினாள். அவ்வளவு தான் · அப்படியே அவள் தலையைப்பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கி விட்டு, 'அயோக்கியத்தனம் பண்ணாதே' என்று சொல்லித் தன் கைவேலையைக் காட்டுகிறான் லக்ஷ்மணன்.

ஊக்கித் தாக்கிவிண்
படர்வெம்என்(று) உருத்தெழு
வாளை

நூக்கி நொய்தினில்,
'வெய்திழை யேல'என
நுவலா,

---

53 வல் வயிறு உதைதது – வலிய வயிற்றைக் காலால் உதைத்து. ஒளி கிளர் வாளினை உருவி – ஒளி விட்டுப் பிரகாசிக்கும் தன் உடை வாளை உருவவும்.

54. ஊக்கித் தாக்கி – எதிர்த்துத் தாககி. விண் படர் வெம் எனறு – ஆகாயத்தில் துள்ளி விடலாம் என்று. உருத்து எழுவாளை – சினந்து துள்ளிய அரக்கியை. நூக்கி – அப்படியே ஒரு குலுக்குக் குலுக்கி. நொயதினில – யாதொரு சிரமுமில்லாமல். வெய்து இழையேல் ' என நுவலா – கொடிய காரியம் ஒன்றையும் இனிமேல் செய்யாதே என்று அழுத்தமாயச் சொல்லி முடித்து விட்டு.

மூக்கும் காதும்வெம்
முரண்முலைக் கண்களும்
முறை யால்

போக்கிப, போக்கிய
சினத்தொடும் புரிகுழல்
விட் டான், (128)

55. கீழே விழுந்தாள் சூர்ப்பனகை. ஒன்றும் ஓடவில்லை அவளுக்கு. திகைத்துப்போய் அப்படியே உட்கார்ந்துவிட்டாள். பிறகு மெள்ளக் கீழேகிடந்த மூக்கின் துண்டத்தைக் கையினால் எடுத்துப்பழையபடி ஒட்டப் பார்க்கிறாள். ஒட்டவா செய்யும்! கொல் உலைபோலப் பெருமூச்சு எறிகிறாள். கையினால் தரையை ஓங்கி அடிக்கிறாள்.

ஓ,ற்றும் மூககினை;
உலையுறு தீயென
உயிர்க் கும்;

எற்றும் கையினை
நிலத்தினில்; இணைத்தடம்
கொங் கை

---

54. போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான—மனசை விட்டுக் கோபம் போயவிட்டது, அதோடு கையைவிட்டு அரக்கியின் கூந்தலும் போயவிட்டது, லக்ஷ்மணனுக்கு.

55. எற்றுங் கையினை நிலத்தினில — வேகமாயக் கையை நிலத்தில் மோதும்.

பறும் பார்க்கும்; மெய்
வெயர்க்கும்; தன் பருவலிக்
கா லாலச்

சுற்றும் ஓடும்; செம்
சோரிநீர் சொரிதரச்
சோ ரும். (129)

*56.* மலையூற்று மிகுதியாயுள்ள அருவி போல் ரத்தம் வடிகிறது. போன போன இடமெல்லாம் ரத்தச் சேறுதான். அந்தச் சேற்றிலேயே திரிகிருள். தேவர்களுமே பயப்படும்படியாகத்தன்குலத்திலுள்ள அரக்க வீராகளின் பெயரையெல்லாம் சொல்லி அழைக்கிருள்.

ஊற்று மிக்கநீர்
அருவியின் ஒழுகிய
குரு திச்

---

55. மெய் வெயாக்கும் - உடம்பு வெயர்க்கும் பருவலிக் காலாலச் சுற்றும் ஓடும் - காலில் நின்ற வண்ணமாகச் சிறிது நேரம் அப்படியும் இப்படியும் சுற்றுவாள்: பிறகு ஓரேபடியாய நாலாபக்கமும் ஓடுவாள். செம் சோரிநீா சொரிதரச் சோரும் - சிவந்த ரத்தம் வழிநததன் காரணமாகச் சோர்ந்து விழுந்தாள்.

56. அருவியின ஒழுகிய - அருவியைப் போல வடிந்த. குருதிச்சேற்று வெள்ளத்துள - சேறுபட்டு ஓடிய ரத்தப்

சேற்று வெள்ளத்துள்
திரிபவள், - தேவரும்
இரி யக்,

கூற்றம் உட்கும்தன்
குலத்தினோர் பெயரெலாம்
கூ றி,

ஆற்று கிற்கிலாள்
பற்பல பனனி நின் (று)
அழைத் தாள். (130)

57. சூர்ப்பனகை சர்வாதிகாரம் செலுத்துகிற அரக்கர் குலத்தைச் சேர்ந்தவள். அதிகாரத்தினால் ஏற்படக்கூடிய பெருமிதமெல்லாம் அவளிடமிருக்கிறது. தான் மற்றவர்களைத் துன்பப் படுத்தலாம், அவமானப் படுத்தலாம். ஆனால் மற்றவர்களோ, தங்களுக்குப் பயந்து அடங்கியிருக்க வேண்டியதே ஒழிய எதிர்க்கிறது என்பதுகூடாது. சட்டம் இப்படியிருக்க அனுஷ்டானமும் இப்படியிருக்க கேவலம் மனுஷனை லக்ஷ்மணன், தன்னை அவமானப்படுத்திவிட்டான்.

---

பெருககில, திரிபவவ - அப்படியும் இப்படியுமாகத் திரிபவள் தேவரும் இரிய - தேவர்களும் பயப்படும்படி. கூற்றம் உட்கும - எமனே பயப்படும்படியான. தன் குலத்தினோர் பெயரெலாம் கூறி - அரக்கவர்க்கத்தினர் பெயர் எல்லாம் சொலலி. ஆற்றுகிற்கிலாள பற்பல பன்னி நின்று - அவமானத்தைத தாங்கமுடியாதவளாயப் பலபல விஷயங்களைச் சொலலிக்கொண்டு. அழைத்தாள் - கூவி அழைத்தாள்.

தன் வீரத்தைத் தோள்களில் எக்களிப்போடு பார்த்துக்கொண்டும் அல்லவா இருக்கிறான்? நானோ மண்ணில் கிடந்து புலம்புகிறேன். இது முறையா!

சந்தம்

தானன தானன
தானன தானன

'உரம்நெறிந்து விழ,என்னை
உதைத்துருட்டி மூக்கரிந்த

நரன் இருந்து தோள்பார்க்க,
நான்கிடந்து புலமபுவதோ!

கரன் இருநத வனம்அன்றோ:
இவைபடவும் கடவேனோ!

அரன் இருந்த மலைஎடுத்த
அண்ணாவோ! அண்ணாவோ!' (131)

---

57. உரம் நெறிநது விழ - மார்பு நெறிந்து நான் கீழே விழும்படி. நரவிருந்து தோள பாாக்க - மனுஷனாகிய லக்ஷ்மணன் எககளிப்போடு தன் தோள்களைப் பார்த்துக் கொணடு உயிரோடிருக்க. கரன இருந்த வனம் - கரன் என்னும் அரக்கப் பிரதானி காக்கிற வனமல்லவா இது இவை படவும் சடவேனோ - இந்த வனத்தில் இந்த மாதிரி அவமானப்பட ஏறபட்டுவிட்டதே. அரன் இருந்த மலை எடுத்த - சிவபெருமான இருநத கயிலையங்கிரியைச் செந்தூக காய்த் தூக்கிய

58. மனுஷன் ஒருவன் மேல் ஆசைகொண்டு மூக்கிழந்தேன். இதைவிட வெட்கக்கேடு வேறு என்ன இருக்கிறது? எனக்கு இந்த வசை ஏற்பட்டால், ராவணேசுவரா! உன்னுடைய புகழுக்கு மாசு ஏற்படாதா? உன்னுடைய புகழ் எப்பேர்ப்பட்டது. எட்டுத் திசைகளிலுள்ள யானைகளின் வேகங் கலங்கும்படியாகப் போர்செய்து அவைகளின் தந்தங்களையும் ஒடித்தாய். இப்படி ஒடித்த வீரத்தைப்பற்றிக் கவிஞர்கள் பாடி உன் புயத்தைப் புகழால் நிறைத்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட புயத்தோடு கூடிய ராவணனே, ராவணனே!

'நசையாலே மூக்கிழந்து
நாணம்இலா நான்பட்ட

வசையாலே, நினதுபுகழ்
மாசுண்ட(து) ஆகாதோ!

இசையானை திசைகலங்கச்
செருச்செய்து மருப்பொசித்த

இசையாலே நிறைந்தபுயத்(து)
இராவணவோ! இராவணவோ!' (132)

---

58, செருச்செய்து மருப்பு ஒசித்த - போர்செய்து தந்தங்களை ஒடித்த. இசையாலே நிறைந்த - புகழ்க் கவிகளால் நிறைத்த. திக்கு விஜயம் செய்ததை, இப்படி யெல்லாம் அஷ்டதிக்கு யானைகளின்மேல் வைத்துப் பேசுவது கவி மரபு. நேர் நேராகப் பொருள் கொள்ளுவதற்கு எழுந்ததல்ல.

59. 'இந்தக் காட்டில் சாமானியப்பட்ட யாரோ இரண்டு பேர் என் காதையும் மூக்கையும் அரிந்து விட்டார்கள். இந்த அவமானத்தை என்னால் தாங்க முடியாது. உயிர் போகப் போகிறது எனக்கு' என்கிறாள்.

'கானம்அதின் இடைஇருவர்
காதொடுமூக்(கு) உடன்அரிய,

மானம்அதால் பாவியேன்
இவண்மடியக் கடவேனோ?

தானவரைக் கருஅருத்துச்,
சதமகனைத் தளையிட்டு,

வானவரைப் பணிகொண்ட
மருகாவோ! மருகாவோ!' (133)

60. கல்லையே வெட்டக்கூடியதான வாளையும் வேலையும் ஏந்திய கரன் என்ன, தூஷணன் என்ன,

---

59. தானவரை கருவறுத்து - தானவர் என்ற பல சாலிகளான பகைவர்களைக் கருவறுத்து. சதமகனைத் தளையிட்டு - இந்திரனை விலங்கிட்டு. வானவரைப் பணிகொண்ட - தேவர் எல்லோரையுமே வேலையாளாகக் கொண்ட. மருகாவோ - இந்திரஜித்தே.

மற்றும் வீரர்கள் என்ன, எல்லாரும் அரக்கர் குலத்தில் அவதரித்தீர்களே ஏன் அவதரித்தீர்கள்?

'சூல்வீரும் படைத்தடக்கை
அடல்கரதூ டணர்முதலா
அல்வீரும் சுடர்மணிப்பூண்
அரக்கர்குலத்(து) அவதரித்தீர்!
கொல்வீரும் படைக்கும்ப
கருணனைப்போல்க் குவலயத்துள்
எல்வீரும் உறங்குதிரோ?
யான்அழைத்தல் கேளீரோ?' (134)

---

60. அடல்க் கர தூடணர் முதலாக-மிகக வலிகொணட கரன் தூஷணன் முதலாகவுள்ள நீங்கள் எல்லாம். 'அல் ஈரும் - இருளை மாயக்கும். சுடர் மணிபூண் - பிரகாசிக்கும் மணி அழுததிய ஆபரணங்கள அணிநத. கொல்வீரும் படை - கொல்லர்கள் அராவி நகாசு வேலை செய்த வாள் வேல் முதலியவைகளை ஏந்திய. குவலயத்துள எல்வீரும்-உலகத்தில எங்கெங்கெல்லாமோ நீங்கள் இருக்கிறீர்கள்.

# 5. கரன் வதைப் படலம்

## நீங்குகிற பழியா இது

**1.** லக்ஷ்மணன் சூர்ப்பனகையின் மூக்கு முதலிய அங்கங்களைச் சேதப்படுத்தி விட்டான். அவளுக்கு உண்டான அவமானத்துக்கும் ஆங்காரத்துக்கும் அளவில்லை. வனமெல்லாம் எதிரொலிக்கும்படி கதறுகிறாள். அரக்கர் பெயர்களைச் சொல்லி அழைக்கிறாள். யாதொரு உதவியும் வரவில்லை. அப்படியே ஓடிப்போய்த் தன்னுடைய சிறிய தாயார் மகனை கரன் காலில் விழுந்தாள். புண்பட்ட மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் வடிந்த ரததம் ஒரே படலமாய் மண்ணில்ப்பரவி ஓடி நிற்கிறது. அதன்மேல் அவளுடைய கரிய உருவம் கிடக்கிறது.

சந்தம்

தான தனனன
தன்னன தன்னன.

இருந்த மாக்கரன்
தாள்இணை யின்மிசை,

சொரிந்த சோரியள்
கூந்தலள் தூம்பெனத்

---

1. இருந்த - ஆசனத்தில் அமர்ந்திருந்த. கரன் — கரன் எனபவன் ராவணனது சிறிய தாயார் மகன், ராவணனது சேனாதிபதிகளில் ஒருவன. சூர்ப்பனகை தண்டகாரண்யததில் செளகரியமாக வசிக்கவேண்டும், அவளுக்கு

தெரிந்த மூக்கினள்
வாயினள்,—செக்கர்மேல்

விரிந்த மேகம்
எனவிழுந் தாள்அரோ! (135)

2. சூர்ப்பனகை நாலா பக்கமும் கேட்கும்படியாகக் கதறினாள். 'அரக்கர்களுக்கு முடிவு வந்துவிட்டது' என்று எமன் கட்டளையின்படி பேரிகை கொட்டிய மாதிரியிருந்தது அவளுடைய கதறல்.

அழுங்கு நாள்இதென்(று)
அந்தகன் ஆணையால்

தழங்கு பேரி
யெனத்தனித்(து) ஏங்குவாள்,

---

வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டும், என்று கருதியே கரனை அங்கே இருக்கச் செய்தான். ராவணன். தாள இணையின் மிசை – பாதங்களின்மேல். சொரிந்த சோரியள கூந்தலள் – ரத்தம் சிந்திக் கொண்டும் செம்பட்டை மூடிப் படர்ந்த தாயும். தூம்பெனத் தெரிந்த மூக்கினள வாயினள – தூம்பாகக்குழிபோல ககக்லும் குழிய லுமாயுள்ள, துளைபட்ட மூக்கோடும் வாயோடும். செக்கர் மேல விரிநத மேகம் என விழுந்தாள – செவ்வானத்தின்மேல் விரிந்து கிடந்த கருமேகம்போல விழுந்தாள். அரோ'– அடடா. அந்தக காட்சியை என்னவென்று சொல்லுவது!

2. அழுங்கு நாள் இதெனறு – அரக்கர்களுக்கு முடிகிற காலம் இதுதான என்று தெரிவிக்கும்படி. அந்தகன ஆணையால தழுங்கு பேரி என – எமனது கட்டளைப்படி சாற்றும் பேரிகைபோல. தனித்து ஏஙகுவாள – இதர சத்தம் எல்லாம் அடங்கும்படி கதறினாள்.

முழங்கு மேகம்
முடித்தவெந் தீயினுல்

புழுங்கு நாகம
எனப்புரண் டாள்அரோ (136)

3. சூர்ப்பனகையின் வேதனையைப் பார்க்கக் கரனுக்குச் சகிக்க முடியவில்லை. ஆங்காரமான வார்த்தைகள் வாயிலிருந்து வந்தன. அந்த வார்த்தைகளோடு அக்கினியும் வந்து வீசிய மாதிரியிருந்தது. "யார் உன்னை இப்படி அவமானப் படுத்தியது? அவர்களைச் சொல் · சொல் இப்போதே" என்றுன்.

வாக்கிற்(கு) ஒக்கப்
புகைமுந்து வாயினுன்

நோக்கிக், 'கூசலர்
நுன்னைஇத் தன்மையை

---

2. முழங்கு மேகம் முடித்த வெம் தீயினுல் – இடிக்கின்ற மேகம் தன்னிடத்தே வைத்துள்ள மின்னலாகிய தீ தலையில் தாக்கவும். புழுங்கு நாகம் என – வேதனைக்குள்ளான சர்ப்பத்தைப்போல. புரண்டாள அரோ – அப்படியும் இப்படியுமாகப் புரண்டாள்.

குறிப்பு:— பேரிபோல் ஏங்கினுள் என்பதை வைத்து ஒரு பேரொலியைக காதினுல் நாம் கேட்கவேண்டும். புழுங்கு நாகம் எனப் புரண்டாள் என்பதை வைத்து வேதனையைப் பார்க்கவேண்டும்

3. கூசலர் – பயப்படாதவர்களாய்.

ஆக்கிப் போனவர்
ஆர்சொல்' என் றான் அவன்;-

மூக்கில்ச் சோரி
முழீஇக்கொண்ட கண்ணினாள்: (137)

4. சூர்ப்பனகையைக் காதல்ப் பேய் வந்து ஆட்டு கிற காரியம் நமக்குத் தெரியும். என்ன கொடுமை காதலர் இழைத்தாலும், அது காரணமாக என்ன கோபம் மேலிட்ட போதிலும், காதல் வாயிலாகப் பார்க்கிறபோது, ஒரு பரிவு உண்டாகத்தான் செய் கிறது. கரன் எவ்வளவு ஆங்காரத்தோடு கேட்ட போதிலும், சூர்ப்பனகையின் வார்த்தைகள் பரிவுட னேயே வருகின்றன

''இரண்டு மனிதர்கள். தவ வாழ்க்கை கொண்ட வர்கள். ஆனாலும் வில் ஏந்திய வீரர்கள். மேனியோ மன்மதனது மேனிதான். தர்மத்தில் நின்று ஒழுகு பவர்கள்' என்றெல்லாம் ராம லக்ஷ்மணர்களைப் பற்றிப் பாராட்டியவாறாகப் பேசுகிறாள்.

'இருவர் மானுடர்
தாபதர், ஏந்திய

வரிவில் வாள்க்கையர்,
மன்மதன் மேனியர்,

---

3. மூக்கில்ச சோரி முழீ இஇகொண்ட கண்ணினாள — மூக்கிலிருந்து வந்த ரத்ததால் இரண்டு கண்களும் ஒரே படியாய முழுகடிக்கப் பட்டிருந்தன இத்தகைய கண் ணோடு விஷயத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறாள் சூர்ப்பனகை.

4. தாபதர் – தவக்கோலங் கொண்டவர்கள். ஏந்திய வரி வில் வாளக் கையர் — வீரர்களாய்ச் சதா வில்லையும் வாளையும் ஏந்தியவர்கள்

தரும நீரர்,
நயரதன் காதலர்,–

செருவில் நேரும்
நிருதரைத் தேடுவார்.' (138)

5. மேலும் சொல்கிறாள்: ' உன்னுடைய பராக்கிரமத்தை அவர்கள் கொஞ்சங்கூடப் பொருட்படுத்தவில்லை. ஒரு உயர்ந்த தர்மத்தை லட்சியமாக வைத்து அதை நிலைநிறுத்தும் கொள்கை யுடையவர்கள். அதற்காக எதையும் செய்ய முனைந்து நிற்கிறார்கள்."

'ஒன்று நோக்கலர்
உன்வலி; ஓங்(கு)அறன்

நின்று நோக்கி
நிறுத்தும் நினைப்பினர்;

வென்றி வேல்க்கை
நிருதரை வேர்அறக்

கொன்று நீக்குதும
என்றுணர் கொள்கையார்.' (139)

---

4. தரும நீரர் - தருமத்தைவிட்டு விலகாதவர்கள். நயரதன காதலர் - தசரத சக்கரவர்த்திக்கு அருமைப் புதல்வர்கள். செருவில நேரும் நிருதரைத் தேடுவார் – யுத்தம் செய்யவரும் அரக்கர்கள் யாராவது இருக்கிறார்களா என்று தேடுபவர்கள்.

5. குறிப்பு:—காதல் காரணமாகவே ராம லக்ஷ்மணரது லட்சியங்களை குறைத்துக் கூற சூர்ப்பனகைக்கு மனம் வரவில்லை, என்பது பாவம்.

6. ராம லக்ஷ்மணர்களைப் பற்றி நல்லவர் என்றும் வீரர் என்றும் நமக்கு விரோதிகள் என்றும் சொல்லித் தீர்த்தாய் விட்டது. பிறகு கதைகட்ட ஆரம்பிக்கிறாள்.

''உலகத்திலானாலுஞ்சரி வானத்திலானாலுஞ்சரி, வேறு எங்கேயானாலும்சரி, கற்பனை பண்ணிப் பார்த்தாலுஞ்சரி, யாவராலும் காணமுடியாத பெண் போலும் ஒரு அணங்கு'' என்று ஆரம்பிக்கிறாள்.

'மண்ணில் நோக்குறில்,
வானினில மற்றினில்
எண்ணி நோக்குறில்,
யாவர்க்கும் நோக்கலாப்
பெண்ணின் நோக்குடை -
யாள் !ஒரு பேதையேன்
கண்ணின் நோக்கிய
சொல்லருங் காட்சியாள்!' (140)

---

6. எண்ணி நோக்குறில — பாவனை செய்து பார்த்தாலும். பெணணின் நோக்குடையாள — பெண்ணுக் குரிய அழகெல்லாம் வாய்ந்துள்ள உருவம்; தெய்வ அணங்கு ஒன்று பெண்ணுக்குரிய அழகெலலாம் தரித்து வந்தது என்பது இங்கே குறிப்பு. ஒரு பேதையேன — கல்வி அறிவில்லாத நான். கண்ணில் நோக்கிய — கண்ணாரக் கண்ட அற்புதமான அழகையெல்லாம். சொல்லருங் காட்சியாள் — எடுத்துச் சொல்லமுடியாத அவ்வளவு அழகு வாய்ந்தவள் ஒருத்தி.

12

7. "இத்தகைய பெண்ணொருத்தியை நான் காண நேர்ந்தது, கூர்ந்து பார்த்தேன் அவளுடைய அழகை. சரி, இந்தப் பெண்ணை எடுத்துக்கொண்டு போய், தமையன் இராவணனுக்குக் கொடுக்கவேண்டும் என்று எண்ணினேன். அப்படியே மேலே சொன்ன வீரர்களை விலக்கிவிட்டு, அந்தப் பெண் மேல் பாய்ந்தேன்."

'கண்டு நோக்கி,அக்
    காரிகை யாள்தனைக்

கொண்டு போவல்
    இலங்கையர் கோக்கெனு,

விண்டு மேல்விழுந்-
    தேனை வெகுண்(டு)அவர்

துண்ட மாக்கினர்
    மூக்(கு)'எனச் சொல்லினாள். (141)

8. சூர்ப்பனகை சொன்னதைக் கேட்டான் கரன். "அப்படியா மூக்கை வெட்டினார்கள்? சரி சரி, இருக்கட்டும்" என்றான். மூக்கைப் பார்க்க எத்தனித்தான். முகமெல்லாம் ஒரே ரத்தமாகவும், கண், மூக்கு

---

7. காரிகையாள் தனை - அழகு வாய்ந்த பெண்ணை. கொண்டு போவல் இலங்கையர் கோக்கு எனு - கொண்டு போவேன் ராவணனுக்கு என்று எண்ணி. விண்டு - இடையில் நின்ற வீரர்களை விலக்கி. மேல் விழுந்தேனை - பெண்ணினிடம் ஓடின என்னை. வெகுண்டு அவர் 'துண்டமாக்கினர் மூக்கு' - கோபங் கொண்டவராய் மூக்கை அரிந்து விட்டார்கள்.

வாய் எல்லாம் ஒரே ரத்தக் குழியாகவும் இருந்த தனுல் மூக்கைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கண்டு பிடிக்க முடியாததாலே, 'காட்டு அந்த மூக்கை' என்று ஆங்காரமாய்ச் சொல்லிக்கொண்டு எழுந்து வருகிறுன்.

கேட்ட னன்உரை,
கண்டிலன் 'கேடினர்

தோட்ட நுங்கில்த்
தொளையுறு மூக்கினைக்,-

காட்(டு)'எ னைழுந் -
தான்,எதிர் கண்டவர்

நாட்டந் தீய,—
உலகைந டுக்குவான். (142)

9. கரன் எழுந்து நின்று, கோபாக்கினி பொங்க விழிக்கிருன்; அரற்றுகிருன். அதனுல் உலகம்

---

8. கேட்டனன் உரை – சூர்ப்பனகை சொன்னதைக் கேட்டான் கரன். கண்டிலன் – வந்த ஆங்காரத்தில் அறுந்த மூக்கைப் பார்க்க எத்தனித்தான், ஆனுல் காணமுடிய வில்லை. கேடினர் தோட்ட—'தங்களுக்குக் கேடுகாலத்தை விளைவித்துக்கொண்ட ராம லக்ஷ்மணர் வெட்டி எடுத்த. நுங்கில்த் தொளையுறு' மூக்கினை – பனை. நுங்குபோல்த் தொளை பட்டமூக்கினை. எதிர் கண்டவர் நாட்டந் தீய – குபீரென்று கோபா வேசத்துடன் எழுந்தான்: எதிர் நின்று •பார்த்தவர் களது கண் தீய்ந்து போகுமோ என்று சொல்லும்படியாக இருந்தது கோபாவேசம். உலகை நடுக்குவான் – உலகத்தார் எல்லாம் அஞ்சும்படியாகப் போர் புரிபவன் கரன்.

ஏழுமே எரிந்து போய் விடுமோ என்று சொல்லத் தோன்றுகிறது.

எழுந்து நின்(று)உல(கு)
ஏழும்எ ரிந்துகப்

பொழிந்த கோபக்
கனல்உகப் பொங்குவான்;-

'கழிந்து போயினர்
மானுடர் என்னுங்கால்,

அழிந்த தோஇவ்
அரும்பழி' என்னுமால். (143)

---

9. எரிந்து உக – எரிந்து சாம்பலாக. கனல் உக – நெருப்புக் கொப்புளிக்கும்படி. பொங்குவான் – மேலும் மேலும் கோபம் பொங்கியவனாய். கழிந்து போயினர் – தப்பி ஓடிவிட்டார்கள். என்னுங்கால் – என்று சொன்னால் பிரயோசனம் என்ன. அழிந்ததோ இவ அரும்பழி என்னுமால் – அரக்கர் தலைவனான ராவணனது தங்கையை அவமானப் படுத்திய இந்தப் பழி அழியவா போகிறது என்று அலறுகிறான்.

## ராமனைச் சுட்டிக் காட்டினாள்

10. "இதோ அந்த நரர்களைத் தொலைத்து விடுகிறேன் தேரைக் கொண்டு வா" என்று சொன்னான் கரன்! அவ்வளவுதான் அரக்கர் பதினாலு பேர் அவன் முன் வந்தார்கள்.

*சந்தம்*

*தான தன்னன*
*தன்னன தன்னன*

**'வருக தேர்' எனும்**
**மாத்திரை, — மாடுளோர்**

**இருகை மால்வரை**
**ஏழினொ(டு) ஏழ்அனார்,**

**ஒருகை யால்உல(கு)**
**ஏந்தும்உ ரத்தினர்,**

**'தருக இப்பணி**
**எம்வயின் தான்' என்றார். (144)**

---

10. வருக தேர் எனும் மாத்திரை — தேர் கொண்டுவா என்று சொன்ன மாத்திரத்தில். மாடுளோர் — பக்கத்திலிருந்தவர்கள். இருகை மால்வரை ஏழினோடு ஏழ் அனார் — இரண்டு பெரிய துதிக்கைகளையுடைய யானைகள் பதினாலோ என்று சொல்லக்கூடிய பெருத்த உடம்பினர். ஒரு கையால் உலகு ஏந்தும் உரத்தினர் — ஒரு கையாலேயே உலகத்தைத் தூக்கும் பலம் வாய்த்தவர். தருக இப்பணி எம் வயின் தான் என்றார் — இந்த மனிதர்களைத் தொலைக்கும் வேலையை எங்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்றார்கள்.

11. அந்தப் பதினாலு அரக்கர்களையும், இரண்டு இரண்டு துதிக்கைகள் கொண்ட யானைகள் என்று தான் சொல்லவேண்டும். அவர்களுடைய ஆயுதங்களைக் கொஞ்சம் பார்க்கலாம். முக்கோலான சூலங்கள் எத்தனையோ, வாள்கள் எத்தனையோ, இன்னும் எத்தனையோ ஆயுதங்களைக் கையாளுபவர்கள்.

சூலம் வாள்மழுத்
தோமரஞ் சக்கரம்

கால பாசம்
கதைபொருங் கையினர்,

வேலை ஞாலம்
வெருவுறும் ஆர்ப்பினர்,

ஆல காலந்
திரண்டன்ன ஆக்கையார். (145)

12. அவர்களது வீரத்தையும் கோபத்தையும் பார்த்தால் நடுக்கடலிலுள்ள வடவா முகாக்கினியே

11. மழு - இருப்புலக்கை. தோமரம் — மரத்தினால் செய்த உலக்கை. காலபாசம் — முள்ளோடு கூடிய கயிறுகள். கதை - தண்டாயுதம். பொருங் கையினர் — ஆயுதங்களைக் கொண்டு போர் செய்யும் கையினர். வேலை ஞாலம் வெருவுறும் ஆர்ப்பினர் — கடல் சூழ்ந்த இந்த உலகத்திலுள்ளவர்கள் எல்லாரும் அஞ்சும்படியாக ஆர்ப்பரிக்கக் கூடியவர்கள். ஆல காலம் திரண்டன்ன ஆக்கையார் — உலகத்தையே முடிக்கும் படியான விஷமெல்லாம் திரண்டது போன்ற கரிய உடம்பை யுடையவர்கள்.

குறிப்பு:— அருமையான ரிதம் கொண்ட பாடல்.

தோற்றுப்போகும். அவர்கள் கரனிடம் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம்:

"நீ எங்களிடத்தில் வைத்த நம்பிக்கை ரொம்ப அழகாய் இருக்கிறது! எங்களுடைய அடிமைத் தொழிலும் வெகு அழகாக இருக்கிறது! நீ என்ன, தேவர்மேலா போர் தொடுக்கிறாய்?"

வெம்பு வேலைக்
    கனலன்ன வெம்மையார்,

'நம்பும் எம்அடி –
    மைத்தொழில் நன்(று) எனு

'உம்பர் மேல்இன்று
    உருத்தனை போதியோ,

இம்பர் மேலினி
    யாம்உளெ மோ?'என்றார் (146)

13. "வாஸ்தவந்தான். இந்தச் சாமான்யப் பட்டவர்கள் மேல் போர் தொடுத்தால் என்னுடைய

---

12. நன்று எனு - ரொம்ப அழகாய் இருக்கிறது. உம்பர்மேல இன்று - தேவர்கள்மேல் இப்போது. உருத்தனை போதியோ - கோபித்துப் போர்செய்யப் போகிறாயோ. இம்பர் மேல இனி யாம் உளெமோ – நீ இதறகெல்லாம் போர் செய்யப் போனால நாங்கள் இந்த உலகத்தில் இருக்கிறோம் என்று யாராவது சொல்லுவார்களா?

ஸ்தானத்துக்குத் தகாததுதான். நீங்கள் சொன்னது ரொம்ப சரி'' என்கிறான் கரன்.

'நன்று சொல்லினிர்,
  நான இச்சி ரூர்கள்மேல்

சென்று போர்செயில்த்
  தேவர்சி ரிப்பரால்:

கொன்று சோரி
  குடித்(து)அவர் கொள்கையை

வென்று மீளுதிர்,-
  மெல்லிய லோ(டு) என்றான். (147)

14. ''நீங்களே அந்த நரர்களைக் கொன்று வாருங்கள்'' என்று சொன்னதில், அந்த அரக்கர்களுக்கு ரொம்ப எக்களிப்பு ஏற்பட்டுவிட்டது.

---

13. சோரி குடித்து - ரத்தத்தைக் குடித்து. அவர் கொள்கையை வென்று - அரக்கர்களை ஏதோ சம்ஹாரம் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்களாமே அந்த மனிதர்கள், அந்தக் கொள்கையை இல்லாமலாக்கி. மீளுதிர் மெல்லியலோடு என்றான் - திரும்பி வாருங்கள், சூர்ப்பனகை சொன்ன அந்த பெண்ணோடு, என்றான்.

அப்படியே கரனை வணங்கினார்கள். சூர்ப்பனகை முன்னே போக, அவர்கள் பின்னே சென்றார்கள்.

என்ன லோடும்
விரும்பிஇ றைஞ்சினர்;
சொன்ன நாணிலி
அந்தகன் தூதென
அன்னள் பிற்படர்
வார்என ஆயினர்;-
மன்னன் காதலர்
வைகிடம் நண்ணினர். (148)

15. ராம லக்ஷ்மணர்கள் இருந்த இடத்தை முதலில் சுட்டிக் காட்டினாள்.

---

14. என்னலோடும்—இணங்கியவனாகக் கரன் சொல்லவும். விரும்பி இறைஞ்சினர் – கரனை மிக்க மகிழ்ச்சியுடன் வணங்கினார்கள். சொன்ன நாணிலி அந்தகன் தூது என - வெட்கமில்லாது பொய்யெல்லாம் சொன்ன சூர்ப்பனகையே எம தூதன் போல அவர்களுக்கு முன்னே போனாள். அன்னள் பிற் படர்வார் என ஆயினர் – அவள் நடத்த, தாங்கள் பின் செல்வார் என ஆயினர்; பெண் பிள்ளை நடத்த வீரர் யுத்தத்துக்குப் போனால் எவ்வளவு அழகு! மன்னன் காதலர் வைகிடம் நண்ணினர் – சக்கரவர்த்திக் குமாரரான ராமலக்ஷ்மணர் தங்கும் இடத்தை அடைந்தார்கள்.

அந்தச் சமயத்தில் ராமன் விஷ்ணுமூர்த்தியைத் தியானித்த வண்ணமாயிருந்தான்.

துமிலப் போர்வல்
அரக்கர்க்குச் சுட்டினுள்;

அமலத் தொல்பெயர்
ஆயிரத்(து) ஆழியான்

நிமலப் பாத
நினைவின் இருந்தஅக்

கமலக் கண்ணனைக்
கையினில்க் காட்டினுள். (149)

---

15. துமிலப் போர் வல் அரக்கர்க்கு – பேர் ஆரவத்தோடு போர் செயயும் அரக்கருக்கு. துமிலம் – பேர் ஆரவாரம். அமலத் தொல் பெயர் ஆயிரத்து ஆழியான் – பழுதில்லாத ஆயிரக்கணக்கான பெயரையுடைய விஷ்ணுமூர்த்தியின். நிமலப் பாத நினைவின் இருந்த – தூய திருவடித் தாமரையைத் தியானித்துக்கொண்டிருந்த.

## மலையெலாம் வந்து கூடின

16. தியானத்திலிருந்த ராமனை அரக்கர்கள் பார்த்துக் கொண்டார்கள். பார்த்ததும், ''அவனைப் பிடித்து ஆகாயத்தில் வீசுவோம். விழும்போது, ஏந்திக் கொள்ளுவோம். மறுபடியும் ஆகாயத்தில் வீசுவோம். இப்படியாக அம்மானை ஆடுவோம்'' என்று சிலர் சொல்லுகிறார்கள். அதாவது, ராமனுடைய உருவத்தை அவ்வளவு அலட்சியமாக எண்ணுகிறார்கள். வேறு சிலர், ''கயிற்றினால் கட்டி விடுவோம்'' என்கிறார்கள். ''கரன் சொன்னபடி ராமனை அப்படியே சூழ்ந்து கொள்ளுவோம்'' என்று சுற்றிக் கொள்ளுகிறார்கள்.

சந்தம்

தான தன்னன
தன்னன தன்னன

'எற்று வாம்பிடித்(து)
ஏந்துதும்' என்குநர்,

'பற்று வாம்நெடும்
பாசத்தின்' என்குநர்,

---

16. எற்றுவாம் பிடித்து - பிடித்து ஆகாயத்தில் வீசுவோம். ஏந்துதும் என்குநர் - கீழே விழும்போது கையினால் ஏந்திக் கொள்ளுவோம் என்கிறார் சிலர்.

'முற்று வாம்இறை
சொல்முறை யால்'எனச்

சுற்றி னார்,வரை
சூழ்ந்தன்ன தோற்றத்தார். (150)

17. அரக்கர்கள் மெல்லமெல்லச் சூழ்ந்து வந்தார்கள். தியானத்திலிருந்து ராமனும் விழித்தான். அரக்கர்களைப் பார்த்துக் கொண்டான். தம்பியைப் பார்த்து ''சீதையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்'' என்று சொல்லுகிறான்.

ஏத்து வாய்மை
இராமன்இ ளவலைக்,

'காத்தி தையலை'
என்று,தன் கற்பகம்

---

16. முற்றுவாம் இறை சொல் முறையால் என — சூழ்ந்து கொள்ளுவோம் கரன் சொல்லியபடி என்று. வரை சூழ்ந்தன்ன தோற்றத்தார் — கருமலைகள் சூழ்ந்ததுபோல் தோற்றம் உடையவர்களாய்.

குறிப்பு:— ராமன் தியானத்திலிருந்ததால், அரக்கரது வேடிக்கைகளையெல்லாம் ராமன் பார்க்கவில்லை. ஆனால் நாம் அனுபவிக்கிறோம். கருமலைகள் சூழ்ந்து முற்றுகை போடும் செயல விசித்திரமல்லவா?

17. ஏத்து வாய்மை இராமன — யாருமே புகழ்தற்குரிய சத்தியவானான ராமன்: சத்தியமே வீரம் முதலான சக்திகளைக் கொடுக்கும் என்பது குறிப்பு. இளவலைக் காத்தி தையலை என்று — தம்பி லக்ஷ்மணனைப் பார்த்து, சீதையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டு.

பூத்த(து) அன்ன
பொருவில் தடக்கையால்,

ஆத்த நாணின்
அருவரை வாங்கினன். (151)

18. வில்லை வாங்கிக் கொண்டான். வாளையும் அரையில் செருகிக் கொண்டான். அம்பறாத் தூணியையும் முதுகில்கட்டிக் கொண்டான். அப்படியே பர்ணசாலையை விட்டு வெளியே வந்து, அரக்கர்களைப் பார்த்து, ''எதிரே வாருங்கள் இந்த வழியாக'' என்று வீராவேசத்தோடு கூவினன்.

வாங்கி, வாளொடு
வாளிபெய் புட்டிலும்

தாங்கித், தாமரைக்
கண்ணன் அச் சாலையை

---

கற்பகம் பூத்தது அன்ன – கற்பகத் தருவில் செந்தாமரை மலர் பூத்தாலப் போன்ற. பொருவு இல் தடக்கையால் – ஒப்பில்லாத பருத்த கையினல். ஆதத நாணின் அருவரை வாங்கினன் – நாண் பூட்டிய மலைபோன்ற வில்லை வாங்கிக் கொண்டான்.

குறிப்பு:— தியானத்திலிருந்து ராமன் விழித்ததும், அரக்கர்கள் சூழ்ந்துவந்ததைப் பார்த்ததும், வில்லை வாங்கினதும், எல்லாம் கண்முன் நிற்கின்றன. செய்யுள் உருவத்தில் துரித பாவத்தைப் பார்க்கலாம்.

18. வாளி பெய் புட்டிலும் - அம்பு நிறைந்த அம்பறாத் தூணியும். தாமரைக் கண்ணன் – ராமன்.

நீங்கி, 'இவ்வழி
நேர்மின்அ டா'என,

விங்கு தோளன்
மலைதலை மேயினன். (152)

19. அரக்கர்களுடைய தோளும் ஏந்திய வாளும் மரங்கள்போல் ஏறிட்டு நின்றன. ராமனது அம்புகள் போய் அந்தத் தோள்களை வெட்டிவீழ்த்தின; தோள்கள் அற்றுவிழவும், அரக்கர்கள் ஓடிவந்து மார்பைக் கொண்டே தாக்கவந்தார்கள்.

மரங்கள் போல்நெடு
வாளொடு தோள்விழ;

உரங்க ளான்அடர்ந்-
தார்க்(கு)உர வோன்விடும்

சரங்கள் ஓடின
தைக்க,அ வர்கள்தம்

சிரங்கள் ஓடின,-
தீயவள் ஓடினள். (153)

---

18. இவ்வழி நேர்மின் அடா என - இந்தப் பக்கமாக எனக்கு நேரே வாருங்கள் பயல்களா! என்று சொல்லவும். விங்கு தோளன் - வீர உணர்ச்சியோடு, தோள் வீங்கியவனாய். மலைதலை மேயினன் - போர் புரிய ஆரம்பித்தான்.

19. உரங்களான் அடர்ந்தார்க்கு - தோளில்லாமல் இருந்தது பற்றி மார்பைக்கொண்டே தாக்க வந்ததைப் பார்த்து. உரவோன் விடும் சரங்கள் ஓடின தைக்க - ராமன் ஏவிய அம்புகள் ஓடிப்போய்க் கழுத்தில் தைக்க. அவர்கள் தம் சிரங்கள் ஓடின - அந்தப் பதினாலு அரக்கர்களுடைய தலைகள் அறுபட்டு ஓடின; அவ்வளவுதான்: சூர்ப்பனகையும் ஒரே ஓட்டமாய் ஓடிப்போய்விட்டாள்.

20. ஒரு காட்டில் யானைக்கூட்டம் வந்து நிற்கிறது. சிங்கம் ஒன்று வந்து கொம்பன்களை யெல்லாம் கொன்றுவிட்டது. பெண்யானை ஒன்று துதிக்கையைத் தூக்கிய வண்ணமாய் அவ்விடத்தை விட்டு அலறி ஓடுகிறது. சூர்ப்பனகை கரனிடத்தில் ஓடியது அந்த விதமாக இருந்தது.

ஒளிறு வேல்க்கரற்(கு)
உற்ற(து) உணர்த்தினாள்;

குளிறு கோபவெங்
கோளரி மாஅடக்

களி(று)எ லாம்படக்,
கைதலை மேலுறப்,

பிளிறி யோடும்
பிடியன்ன பெற்றியாள். (154)

21. பதினான்குஅரக்கர்களும் இறந்தொழிந்தார்கள் என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில்

---

20. ஒளிறு வேல்க் கரற்கு - பிரகாசிக்கும் வேலை ஏந்திய கரனிடத்தில். உற்றது உணர்த்தினாள் - பதினாலு அரக்கர்களுக்கும் நேர்ந்த முடிவைச் சொன்னாள். எப்படி ஓடி வந்தாள் என்பதைப் பார்க்கலாம். குளிறு – கர்ச்சிக்கிற. கோளரி மா அட – வீரம் பொருந்திய ஆண் சிங்கம் தாக்கவும். களிறு எலாம் பட - ஆண் யானைகள் எல்லாம் இறந்து விழ கை தலைமேல் உற – துதிக்கையைத தலைமேல் தூக்கிக்கொண்டு. பிளிறி ஓடும் பிடி அன்ன பெற்றியாள – அலறி ஓடும் பெண் யானை போன்ற சூர்ப்பனகை; உற்றது உணர்த்தினாள்.

கரனுக்குக் கோபாவேசம் வந்து கண் கலங்கி ரத்த மும் வடிந்து நிற்கிறது.

அங்(கு)அ ரக்கர்
 அவிந்தழிந் தாரெனப்,

பொங்(கு) ரத்தம்
 விழிவழி போந்துக,

வெங்க ரப்பெய
 ரோன்வெகுண் டான், விடைச்

சங்க ரற்கும்
 தடுப்பரும் தன்மையான். (155)

22. கரனுக்கு ஒரே கோபாவேசம் உண்டாய் விட்டது. ''கூப்பிடு நம்முடைய படையை'' என்று கட்டளையிட்டான். அவ்வளவுதான், பக்கத்திலுள்ள

---

21. வெங்கரப் பெயரோன் – கரனுடைய பெயரைச் சொல்லும்போது வெங்கரன் வெங்கரன் என்று சொல்லி வந்தார்களாம், அத்தகைய கொடிய கரன். வெகுண்டான் – என்றுமில்லாத கோபத்துக்கு உள்ளானான். விடைச் சங்கரற்கும் தடுப்பருந தன்மை யான – ரிஷப வாகன ரான ருத்திரமூர்த்தியாலும் எதிர்க்க முடியாத வீரப் போர் வல்ல கரன்.

வர்கள் ஒரே பாய்ச்சலாக ஓடிப் போய், ஒரு பெரிய முரசை மலைச் சிகரத்தில் ஏற்றினார்கள்.

'அழை!'என்(று) ஏவ
அரக்கவன் போர்ப்படை,

உழையர் ஓடி
ஒருநொடி ஓங்கல்மேல்

மழையென் மாமுர(சு)
ஏற்றினர் : வல்லையின்

முழையின் வாள்அரி
அஞ்சமு முக்குவார். (156)

23. முரசின் ஒலி எழுந்த மாத்திரத்தில், பெரிய பெரிய மேகங்கள் திரண்டுவந்த மாதிரி வந்தன, தேர்ப்படை.

பேரி யோசை
பிறத்தலும், பெட்புறு

மாரி மேகம்
வரம்பில வந்தெனத்,

---

22. அழை என்று ஏவ அரக்க வன் போர்ப் படை — வலிகொண்ட அரக்கப்படையைக் கூப்பிடு உடனே என்று கட்டளையிட, உழையர் ஓடி — பக்கத்தில் இருந்த ஏவலாளர்கள் ஓடி ஒரு நொடி ஓங்கல மேல — ஒரு நொடிப் பொழுதிலே மலைச் சிகரம் ஒன்றின்மேல மழையென் மாமுரசு ஏற்றினர் — இடி இடிக்கும் மேகம் போன்ற பெரிய முரசொன்றை மலைசிகரத்தில ஏற்றி வைத்து வல்லையின் — வெகு துரிதமாகவே முழையின வாள் அரி அஞ்ச — மலைக் குகைக்குள் வசிக்கும் பெரிய ஆண் சிங்கமானது அஞ்சும் படியாக.

23. பேரி — முரசு. பெட்புறும் மாரி மேகம் வரம்பு இல வந்து என — பெரிய உருவத்தோடு கூடிய மழை மேகம் அனேகம் வந்ததுபோல.

தேரின் சேனை
திரண்டன,- தேவர்தம்

ஊரும் நாகர்
உலகும்உ லையவே. (157)

24. உலகம் முடிகிற காலத்தில் பெரும் புயல் அடித்துக் கடல் பொங்கி வருமாம். அதனுடைய பேரொலி, அண்டத்தையெல்லாம் அளாவி வருமாம். அலைகளோ, பெரிய பெரிய மலைத் தொடர்கள் போல் புரண்டு வருமாம். அரக்கர் சேனையின் முழக்கமும் தோள்களும், அந்த யுகாந்த காலத்துக் கடலின் பொம்மலையும் அலைகளையுமே நினைப்பூட்டின.

போர்ப்பெ ரும்படை,-
பொம்மல் முழக்கமா,

நீர்த்த ரங்கம்
நெடுந்தடந் தோள்களா,

ஆர்த்தெ ழுந்த(து);
இறுதியின் ஆர்கலிக்

கார்க்க ருங்கடல்
கால்கிளர்ந்(து) என்னவே. (158)

---

23. ஊரும் : ஊர்ந்து செல்லும்.

24. போர்ப்பெரும் படை—போர் செய்ய வந்த அரக்கப் பெரும் படையானது. பொம்மல் முழக்கமா – சமுத்திர கோஷமே படையின் ஆரவாரமாகவும் நீர்த் தரங்கம் நெடுந் தடந்தோள்களா - சமுத்திரத்தினுடைய அலைகளே படையின் நீண்டு பரந்த தோள்களாகவும் தோன்றும்படி. ஆர்த்து எழுந்தது – அந்தப் படை ஆரவாரத்தோடு எழுந்தது. இறுதியின் ஆர்க்கலி காரக் கருங்கடல — யுகாந்த காலத்தில் பேரொலியோடு கன்னங் கரேல் என்று வரும் கடல். கால் கிளர்ந்து என்னவே—ஊழிக்காற்றால் பொங்கி வந்தது போல்.

25. போர்ப் பெரும் படை எழுந்தது. அனேக விதமான பெரிய பெரிய கொடிகளை ஏந்திக்கொண்டு காட்டையெல்லாம் அடைத்து வந்தது.

காடு துன்றி
　　விசும்புக ரந்தென
நீடி எங்கும்
　　நிமிர்ந்தநெ டுங்கொடி;-
ஓடும் எங்கள்
　　பசியென் றுவந்தெழுந்(து)
ஆடு கின்ற
　　அலகையின் ஆடவே. (159)

26. அந்தப் படைவீரர்களது உருவத்தைப் பார்த்தால், ஏதோ கட்டுத் தறியை முறித்துவிட்டு வந்த மதயானைக் கூட்டம் என்று சொல்லத் தோன்றும்.

தறியின் நீங்கிய
　　தாழ்தடக் கைத்துணைக்
குறிகொள் மாமத
　　வேழக்கு ழுஅனார்,

---

25. காடு துன்றி - காட்டை அடைத்துககொண்டு. விசும்பு கரந்து என - ஆகாயததை மறைத்த மாதிரியாக. நீடி எங்கும் நிமிர்ந்த நெடுங்கொடி - வெகு தூரமாகப் பரந்து நிமிர்ந்த நெடுங்கொடிகள் எலலாம். அலகையின் ஆடவே - தின்னுவதற்குப் பிணங் கிடைக்கப் போகிறது என்ற ஆசையில் ஆடுகின்ற பேயகளைப்போல் அந்தக் கொடிகள் ஆடிவர.

26. தறியின் நீங்கிய - கட்டுத் தறியைவிட்டு நீங்கிய. தாழ் தடக்கைத் துணை - ஒன்றுககு இரண்டான தாழ்ந்து நீணடுள்ள தும்பிக்கை போன்ற கைகளோடு. குறிகொள மாமத வேழக் குழு அன்னார் - எதிரிகளைக் கொல்லுவதற்காகப் புறப்படும் பெரிய மதயானைக் குழாம் போன்றவர்.

செறியும் வாளொடு
வாளிடை தேய்த்துகும்

பொறியின், கான்எங்கும்
வெங்கனல் பொங்கவே. (160)

27. இந்த பூமியானது முதுகை நெளிக்க நேர்ந்தது. நெளிக்க நேர்ந்ததன் காரணமாக, ஏழு கண்டங்களிலுமுள்ள மலைகள் ஓர் இடத்தில் வந்து ஒதுங்க நேர்ந்தது. அப்படி இருந்தது அரக்கர் படை ஒன்றாக வந்து சேர்ந்தது.

தலையில் மாசுணம்
தாங்கிய தாரணி

நிலைநி லாது
முதுகைநெ ளிப்புற,

---

26. செறியும் வாளொடு வாள இடை தேய்த்து உகும் பொறியில்—வாள்கள் வாள்களோடு நெருங்கிவந்து தேய்ப்பதன் காரணமாகச் சிதறும் தீப்பொறியினால். கான் எங்கும் வெங்கனல பொங்கவே — காடு எல்லாம் பெரு நெருப்புப் பற்றி எரிய போர்ப்பெரும் படை ஆர்த்தெழுந்தது.

27. தலையில் மாசுணந்தாங்கிய — தலையில்வைத்து ஆதி சேஷன் தாங்கிய. தாரணி நிலைநிலாது முதுகை நெளிப்புற — பூமியானது நிலையில். நில்லாமல் முதுகை நெளிக்க: பூகம்பத்தில்போல.

உலைவில் ஏழ்உல -
கத்தி னும் ஓங்கிய

மலைஎ லாம்ஒரு
மாடுதொக் கென்னவே. (161)

---

27. ஏழ் உலகத்தினும் ஓங்கிய மலைஎலாம் – ஏழு கண்டங்களிலும் ஓங்கிய வண்ணமாய் அசையாது நிற்கும் மலைகள் எல்லாம். ஒரு மாடு தொக்கு என்னவே – ஒரு பக்கத்தில் வந்து சேர்ந்து நின்றது போலவே, போர்ப் பெரும்படை ஆர்த்து எழுந்தது.

## குகையில் இருந்து சிங்கம் வெளிவருகிறது!

28. நமக்குத் தெரியும் யோகிகளின் காரியம்; உலகப் பற்றுகளை எல்லாம் ஒதுக்கிக் கொள்ளுவார்கள். பூர்வ வினைகளையும் இல்லாமல் ஒழித்துக் கொள்ளுவார்கள். அவர்களுடைய மனச்சாந்தி காரணமாகவும் வரையறுத்து உண்ணும் உணவு காரணமாகவும், சாதாரணமாக நோய் என்பது அவர்களை அணுகுவதில்லை. இருந்தாலும், பிறந்தது முதல் உடன் தங்கி வரும் சில நோய்கள், யோக சாதனங்களாலும் தள்ள முடியாதபடி உடலில் மறைந்திருந்து கடைசியாக அந்த யோகிகளையே எமனுக்கு இரையாக்கி விடுகின்றன. யோகிகள் பாடே இது என்றால் மற்ற மக்கள் பிராணிகளைச் சொல்லவா வேணும்?

சூர்ப்பனகையானவள் அரக்கர்குலத்தில், அரக்கரோடு அரக்கியாய்ப் பிறந்து வளர்ந்து வந்தவள் தான். அடடா, அவளே அந்த அரக்கர்களை இப்போது ராமன் முன் கொண்டுவந்து விடுகிறாள். நோய் என்றால் அப்படிக் கொண்டுவந்து விடவேண்டாமா!

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

**வந்தது சேனைவெள் ளம்**
**வள்ளியோன் மருங்கு;-மா ய**
**பந்தமா வினையைமா ளப்**
**பற்றறு பெற்றியோர்க் கும்,**

---

28. **வந்தது சேனை வெள்ளம் வள்ளியோன் மருங்கு** — கரன் நடத்தி வந்த அரக்கப்படை ராமனுக்குப் பக்கமாகவே வந்து சேர்ந்தது, **வள்ளியோன்** — ராமன். **மாய பந்த மா வினையை மாள** - மாயமாகப் பிறவியோடு ஒட்டி வரும் பூர்வ

உந்தரு நிலையதா கி,
உடன்உறைந்(து) உயிர்கள்தம் மை

அந்தகற்(கு) அளிக்கும்நோய் போல்,
அரக்கிமுன் ஆகஅம் மா! (162)

29. அரக்கர் சேனை எப்படி வந்தது? மரங்கள் அடர்ந்த காடுஎங்கும் பரவி நடந்து வந்தது. அப்படி நடந்து வந்ததன் காரணமாகக் காடு என்ன ஆயிற்று? மரஞ்செடிகள் எல்லாம் நொறுங்கிப்போய், பண்படுத்திய ஒரு ராஜபாதையாகவே ஆய்விட்டது. இப்படி வந்த சேனை, கரன் செலுத்திவந்த சேனை என்று தெரிந்து கொண்டான் ராமன்.

மரனபடர் கானம்எங் கும்
அதர்பட வந்தசே னை,

கரன்படை என்பதெண் ணிக்
கருநிறக் கமலக்கண் ணன்,

---

வினையை ஒழிப்பதற்கு. பற்று அறு பெற்றியோர்க்கும் - உலகப் பற்றுகளை விட்டு நீங்கிய யோகிகளுக்குமே. உந்தரு நிலையதாகி உடன் உறைந்து — தள்ள முடியாதபடி உடலோடு ஒட்டி உறைந்து. உயிர்கள் தம்மை — எல்லா உயிர்களையுமே. அநதகற்கு அளிக்கும் நோய் போல் — எமனுக்கு இரையாகக் கொடுக்கும் நோயபோல. அரக்கி முன் ஆக அம்மா, வந்தது சேனை வெள்ளம்!

29. மரன் படர் கானம் எங்கும — மரங்கள்அடர்ந்த காடெலலாம். அதர்பட வந்த சேனை — செப்பனிட்ட பாதை போல் ஆகும்படி நடந்தேறி வந்த சேனையானது. கரன் படை என்பது எண்ணி — கரன் செலுத்தி வந்த படை என்பதை அறிந்து. கருநிறக் கமலக் கண்ணன் — நீலமேனியனான ராமன்.

சரன்படர் புட்டில்கட் டிச்
சாபமும் தரித்தான்,—தள் ளா

உரன்படர் தோளின்மீ து
கவசமிட்(டு) உடைவாளார்த் தான்.
(163)

30. ராமன் இப்படி யுத்த சன்னத்தனுகிறதைப் பார்த்தான். லக்ஷ்மணன் அவனுடைய வீரம் அவனையே தள்ளிக்கொண்டு மேலே கிளம்புகிறது. சொல்லுகிருன் ராமனைப் பார்த்து -

'எந்த விதத்திலும் பின் வாங்கமாட்டார்கள் என்று சொல்லும்படி வானவர்கள் என்ன, இவ்வுலகத்திலுள்ள வீரர்கள் என்ன. எல்லாரும் யுத்தஞ்செய்ய வரட்டும். வந்தால், அவர்களுக்கு ஏற்பட்ட வாழ்நாள் தீர்ந்து ஒழிவது நிச்சயம்! இதை நான் உனக்கு எடுத்துச் சொல்லவும் வேண்டுமா! ஆண் சிங்கம்போன்ற ராமனே! இந்தப் போரை

---

29. சரன் படர் புட்டில் கட்டி — அம்பு நிறைந்த அம்பறுத் தூணியை முதுகில்க் கட்டி. சாபமும் தரித்தான — வில்லையும் ஏந்திக் கொண்டான். தள்ளா உரன் படர் தோளின்மீது — என்றுங் குறையாத வலிகொண்ட தோளின் மீது. கவசமிட்டு — கவசத்தை அணிந்து. உடைவாள் ஆர்த்தான் — அரையில் உடைவாளை கட்டிக்கொண்டவனுன அவன் சாபமும் தரித்தான்.

எனக்குக் கொடுக்கலாகாதா? தயவுசெய்து கொடுக்க வேண்டும்'' என்கிறான் லக்ஷ்மணன்.

'மீளருஞ் செருவில்விண் ணும்
மண் ணும்மேன் மேல்வந்தா லும்,

நாளுலந்(து) அழியுமன் றே,
நான உனக(கு) உரைப்பதென் னே?

ஆளியின துப்பினாய்! இவ்
அமர்எனக(கு) அருளிநின்(று) என்

தோளினைத் தின்னுகின்ற
சோமபினைத் துடைத்தி'என் றான்.
(164)

---

30. மீளரும் செருவில - எந்த விதத்திலும் புறங் கொடுக்காது எதிரிகள் செய்யும் போரில். விண்ணும மண்ணும் - வானத்திலுள்ள வீரரும் பூமியிலுள்ள வீரரும். நாள உலந்து அழியும் அன்றே - ஜாதகத்தில் நீண்ட ஆயுள் இருந்தபோதிலும், அப்பொழுதே காலம் முடிந்துவிடும் அவர்களுக்கு. ஆளியின துப்பினாய் - சிங்கம் போன்ற வீரனே. இவ அமர் எனக்கு அருளி நினறு - இந்தப் போரை எனக்குக் கொடுத்துவிட்டு நீ கொஞ்சம் சும்மா இருந்து. என் தோளினைத தினனுகினற சோம்பினை - என் தோளை அரிக்கிற சோம்பல் காரணமான தினவை. துடைத்தி எனறான் - தயை செய்து நீக்க வேணடுமென்றான.

குறிப்பு:— சற்று முந்திவந்த பதினான்கு அரக்கர் களையும் ராமனே போர் செயது கொன்றான். அதுவே பிடிக்கவில்லை லக்ஷ்மணனுக்கு. இப்போது வந்த போரை யாவது தனக்குக் கொடுக்க வேண்டும் என்று நயந்து சொல்லுவதில, லக்ஷ்மணனது அபூர்வமான இயற்கை வீரம் வெளிப்படுகிறது. ஆம், தோளில் உண்டான தினவை அவனால் தாங்க முடியவில்லை!

31. தனக்கே போர் செய்ய இடங்கொடுக்க வேண்டும் என்று லக்ஷ்மணன் கேட்டுக்கொண்டதற்கு ராமன் இணங்கவில்லை. ஆனாலும் என்ன செய்யக் கூடும். தம்பியாகிய லக்ஷ்மணன். ராமனது ஆற்றலை நன்ருய் உணர்ந்தவன் அவன். அவனது கட்டளையை யும் மறுக்கமுடியாதுதானே?

*என்றனன் இளையவீ ரன்;*
*இசைந்திலன் இராமன்: அன் னுன்*

*குன்றன தோளின்ஆற் றல்*
*உள்ளத்தின் உணரக்கொண் டான்;*

*அன்றியும் அண்ணல்ஆ ணை*
*மறுக்கிலன்;– அங்கைகூப் பி*

*நின்றனன் இருந்தான், கண் ணீர்*
*நிலனுறப் புலர்கின்ருள் பால். (165)*

32. வாடிய முகத்தவளாய், சீதை நிலைகுலைந்து சோருகிருள். இந்த நிலையில். கொடிகள் படர்ந்த

---

31. **அன்னுன் –** ராமனது. **குன்றன தோளின் ஆற்றல்–** குன்றை ஒத்த தோளின் வலிமையை, அதாவது, வில்த் திறத்தை. **உள்ளத்தின் உணரக் கொண்டான் –** மனசில் நன்ருய்த் தெரிந்துகொண்டான் லக்ஷ்மணன். **அன்றியும் அண்ணல் ஆணை மறுக்கிலன்–**மேலும் தமையனது கட்டளைக்கு மாருய் நடப்பவன் அல்ல. **அங்கை கூப்பி நின்றனன் இருந்தான்–** கையைக் குவித்த வண்ணமாய் ஒரு நிலையிலேயே நின்று விட்டான். **கண்ணீர் நிலன் உறப் புலர்கின்ருள் பால் –** கண் ணீர் பூமியில்ச் சொட்டும்படியாக வருந்திய சீதை பக்கத்தில்.

சாலையிலிருந்து வில் ஏந்துகிற மேருகிரிபோல் வெளியே வருகிறான் ராமன்.

குழையுறு மதியம்பூத் த
கொம்பனாள் குலைந்துசோ ரத்;-
தழையுறு சாலைநின் றும்
தனிச்சிலை தரித்தமே ரு,
மழையென முழங்குகின் ற
வாள்எயிற்(று) அரக்கர்கா ண,
முழையினின்(று) எழுந்துசெல் லும்
மடங்கலின் முனிந்துசென் றான்
(166)

---

32. குழையுறு மதியம் பூத்த கொம்பு அன்னாள் – திகைப்புடன் வதங்கிய சீதையின் முகம் குழையுற்ற மதியம்போல் இருந்தது. அததகைய சந்திரனைப் பூத்த பூங்கொம்பை ஒத்தவளான சீதை. தழையுறு சாலைநின்றும் – கொடிகள் படர்ந்த சாலையிலிருநது. தனிச்சிலை தரித்த மேரு – பெரிய வில்லை ஏந்திய மேரு மலைக்கு ஒப்பான ராமன். முழையின் நின்று எழுந்து செல்லும் மடங்கலின் – குகையினின்று எழுந்து வெளியே வரும் சிங்கத்தைப்போல. மழையென முழங்குகின்ற வாள் எயிற்று அரக்கர் காண – மேகம்போல முழங்கிக் கொண்டு நின்ற வக்கிர தந்தங்களையுடைய அரக்கர் காணும் படியாக, முனிந்து சென்றான். முனிந்து சென்றான் – கோபாவேசத்தோடு வெளியே வந்தான்.

## பரிந்து தலையைக் கொய்தான்

33. ராமன் யுத்த சன்னத்தனாய்ப் போர்செய்ய வந்துவிட்டான் என்பதைக் கரன் பார்த்துக் கொண்டான். "ஓ. இந்த நரனை நானே கொன்று தீர்க்கிறேன்" என்று போருக்கு முற்பட்டு வந்தான். அப்போது அகம்பன் என்ற அரக்கன்; "இது நல்ல சகுனமல்ல போர் செய்வதற்கு" என்று சொன்னான். அவன் சொல்லைக் கவனியாது, தன் சேனையை முன்னேறவிட்டுப் போர் தொடங்கினான். எத்தனையோ ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள் அரக்கர்கள். ராமனுடைய அம்புகளால் அத்தனை ஆயுதங்களும் நொறுங்கிப் போயின. கரனது சேனை அவ்வளவும் அழிந்துபட்டன. மிஞ்சியிருந்தது, கரனும் அவனுடைய பதினான்கு சேனைத்தலைவர்களும் மாத்திரந்தான் என்று ஏற்பட்டுவிட்டது.

*　　*　　*　　*

இந்த நிலையில், திரிசிரா என்னும் சேனைத் தலைவன் தன்னுடைய சேனை சூழ்ந்துவர யுத்தத்துக்கு முன்னேறி வருகிறான்.

சந்தம்

தானன தானன
தான தன்னன

**அத்தலைத், தானைசூழ்**
**அளவில் ஆற்றலன்,**

**முத்தலைக் குரிசில்பொன்**
**முடியன், முக்கணன்,**

---

33. **அத்தலை** - அந்தச்சமயத்தில். **தானை சூழ் அளவில் ஆற்றலன்** – சதா சேனை சூழ்ந்துள்ள சக்தி வாய்ந்தவன். **முத்தலைக் குரிசில்பொன் முடியன்** – சிகரம் போன்று, சிறந்து விளங்கும் பொன் முடி மூன்று தரித்துள்ளவன். **முக்கணன்** – ருத்ர மூர்த்தியின்.

கைத்தலைச் சூலமே
அனைய காட்சியான்,

வைத்தலைப் பகழியால்
மழைசெய் வில்லினன். (167)

34. திரிசிரா, வில்லை எடுத்து, ராமன் மேல் அம்புகளைத் தூவினன். அப்படித் தூவிய அம்புகள் எல்லாம் நொறுங்கும்படி வெகு வேகமாகச் செல்லக் கூடிய கணைகளை ஏவினன் ராமன்.

தூவிய சரமெலாம்
துணிய வெங்கணை

ஏவினன் இராமனும்;
ஏவி, ஏழிரு

33. கைத்தலைச் சூலமே அனைய காட்சியான் — அவன் கையில் முத்தலைச் சூலம் ஒன்று இருந்தது, அவனுடைய உருவமே ஒரு தனிச் சூலமாயத் தோன்றியது. வைத்தலைப் பகழியால மழை செய் வில்லினன் — கூர்மையான முகங் கொணட அம்புகளினால் அம்பு மழை செய்யக்கூடிய வில்லை யும் உடையவன.

குறிப்பு:— பயங்கரத்தை உண்டு பண்ணுவதற்காகத் தலைபோன்ற சிற்ப வேலைப் பாடுடைய மூன்று பொன் முடி களைத் தரிததுள்ளவன். உபசாரமாகத் திரிசிரா — மூன்று தலையையுடையவன் என்று அவனுக்குப் பெயர் வழங்கி வந்தது.

34. தூவிய சரம் எலாம் துணிய — திரிசிரா தூவிய அம்புகள் எலலாம் முறிந்து ஒழியும்படி. ஏழிரு பூவியல் வாளியால் — பூவேலை செய்த பதினாலு பேரம்புகளால்.

பூவியல வாளியால்
பொலங்கொள் தேர்அழித்(து),

ஆவிவெம் பாகனை
அழித்து மாற்றினான். (168)

35. தேவர்கள் என்று சொல்லுகிறார்களே அவர்கள், மேலேயிருந்து பார்த்துக்கொண்டிருந்தால். திரிசிராவின் தேரும் தேர்ப்பாகனும் அழிந்துபோன தற்கே கைதட்டி ஆரவாரம் செய்திருப்பார்கள், ஆனால், அவர்கள் அது செய்யவில்லை. அந்தத் தேவர்கள் கைதட்டி ஆரவாரிக்கும்படியாக, அடுத்தாற் போல் ஒரு வேலை செய்தான் ராமன்.

பொன்மயமான நுனிகொண்ட பேர் அம்பு ஒன்றை வெகு வேகமாக விட்டான். அது என்ன செய்தது என்று பார்ப்போம்:

அன்றியும், அக்கணத்(து)
அமரர் ஆர்த்தெழ,

பொன் தரி வடிம்புடைப்
பொருவில் வாளியால்,

---

பொலங்கொள் தேர் அழித்து – திரிசிராவின் அழகிய தேரை அழித்து. ஆவி வெம்பாகனை அழித்து – தேர்ப் பாகனுடைய உயிரையும் அழித்து. மாற்றினான் – திரிசிரா வின் நிலையை மாற்றினான். திரிசிரா தேரிலிருந்து செய்த போர் மாறிவிட்டது.

35. பொருவில் வாளியால் – ஒப்பற்ற பேர் அம்பு ஒன்றை ஏவி.

வன்தொழில் தீயவன்
மகுட மாத்தலை

ஒன்றொழித்(து) இரண்டையும்
உருட்டினன் அரோ. (169)

36. தேர் அழிந்து போய்விட்டது. இரண்டு தலை அற்று ஒரு தலை மாத்திரம் மிஞ்சிய காரணமாக, திரிசிரா என்னும் பெயரும் போய்விட்டது. ஆனாலும், அவனது வீரம் குறையவில்லை. வில்லின் நாண் அழிய அழியப் புதிய நாண் ஏற்றி வில்லை உபயோகித்தான்.

அப்படிப் பிரயோகித்ததன் காரணமாக, ஏதோ வானுலகத்திலுள்ள மேகம் கீழே இறங்கி மழை பெய்ததோ என்று சொல்லும்படி இருந்தது.

தேர்அழிந்(து), அவ்வழித்
திரிசி ராஎனும்

பேர்அழிந்(து), அதனினும்
மறம்பி ழைத்திலன்;

---

35. வன் தொழில் தீயவன் – முரட்டுத் தொழில் செய்யும் திரிசிராவின். மகுட மாத்தலை – முக்கவராகக் கிளைத்த கிரீடம் ஏந்திய தலைகளில். ஒன்று ஒழித்து இரண்டையும – ஒன்றை விட்டுவிட்டு மற்ற இரண்டு தலைகளையும். உருட்டினன் அரோ – தரையில் விழுந்து உருளும்படி செய்தான்.

36. அதனினும் மறம் பிழைத்திலன் – பேர் அழிந்தது. அது காரணமாக சோர்வு ஏற்படவில்லை. வீரச் செயலை விட்டு விலகவில்லை.

வார்அழித்(து) உமிழ்சிலை,
வான நாட்டுழிக்

கார்இழிந் தால்எனக்,
கணைகள் சிந்தினன். (170)

37. பார்த்தான் ராமன்: ஆங்காரம் பிறந்து விட்டது. நெற்றி ஏறிட்டது; ஏதோ நீலமேகம் ஒன்று வில் ஏந்திக் கொண்டு ஒரு எதிரியைத் தொடர்ந்தது போலிருந்தது, ராமன் திரிசிராவைத் தொடர்ந்து சென்றது.

ஏற்றிய நுதலினன்
இருண்ட கார்அனன்

தோற்றிய வில்லொடும்
தொடர, மீமிசைக்

---

36. வார் அழிந்து உமிழ்சிலை — நாண் அற்றுப்போக அற்றுப்போக, அம்புகளை உமிழ்ந்த வில்லானது. வான நாட்டுழிக் கார் இழிந்தால் என — வானுலகத்திலுள்ள மேகமே கீழிறங்கி வந்ததோ என்றும் சொலலும்படியாக இருந்தது. கணைகள சிநதினன் — அப்படிச் சொல்லும்படியாக அம்புகளை ஏவினன்.

37. ஏற்றிய நுதலினன் — நெறித்து ஏறிய நெற்றியோடு. இருண்ட கார் அனன் — நீலமேகம்போன்ற ராமன். தோற்றிய வில்லொடும் தொடர — முன்னேறித் தோன்றும்படியாக விலலை ஏந்தி. மீமிசைக் காற்றின் அழிந்தென.- ஏதோ

காற்றிடை அழிந்தெனக்
கார்மு கத்தையும்

மாற்றரும் பகழியால்
அறுத்து மாற்றினன். (171)

38. என்ன செய்வான் திரிசிரா? வில்லே நொறுங்கிப் போய்விட்டது. வில் அழிந்து போயுங் கூட, அவனுடைய கண்களின் வீரப்பார்வை குறையவில்லை. முகத்திலுள்ள வீராவேசம் குறையவில்லை. கோபம் குறையவில்லை. இடிபோல் முழக்கும் வீர ஆரவாரம் குறையவில்லை. தோள் வலியும் குறையவில்லை. என்னதான் செய்கிறன் என்று பார்ப்போம்:

சந்தம்

தான தன்னன
தானன தானன
தா ன

வில்இ ழந்தனன்
என்னினும், விழித்தவாள்
முகத் தின்

எல்இ ழந்திலன்,
வெங்கதம் இழந்திலன்,
இடிக் கும்

---

ஆகாயத்திலிருந்து வந்த புயல் காற்றினல் நொறுங்கிவிட்டது என்று சொல்லும்படி. கார் முகத்தையும் – திரிசிராவின் வில்லையுமே. மாற்றரும் பகழியால் அறுத்து மாற்றினன் – தடுக்க முடியாத அம்பினல் அறுத்து விறகுத் துண்டமாய் ஆக்கினன். திரிசிராவின் வில் நொறுங்கிப்போய்விட்டது.

38. வாள் முகத்தின் – வீரத்தைக்காட்டும் முகத்தில். எல் – பிரகாசத்தை. வெம் கதம் இழந்திலன் – கொடிய கோபாவேசத்தை இழக்கவில்லை.

சொல்இ ழந்திலன்,
தோள்வலி இழந்திலன்,
சொரி யும்

கல்இ ழந்திலன்,
இழந்திலன் சுறங்கெனத்
திரி தல். (172)

39. மாய வித்தைகள் பல உண்டு. அவைகளில் ஒன்று. ஒருவனே ஒரு வேலை செய்வான். ஆனால் ஏதோ இருநூறு பேர் ஆகாயத்திலிருந்து மேலும் மேலும் பாறுங்கற்களைத் தொடர்ச்சியாக வீசியதுபோல்த் தோன்றும். இந்த மாயவித்தை போல் இருந்தது, திரிசிராவின் போர். அவனுக்கு என்ன நேர்ந்தது என்று பார்ப்போம்:

ஆள்இ ரண்டுநூ(று)
உளஎன அந்தரத்(து),
ஒரு வன்

38. சொரியும் கல் இழந்திலன் - வில் ஒழிந்து போனால் என்ன, அங்கே கிடந்த பாறுங்கறகளை எடுதது வீசுகிற காரியம் குறையவில்லை. இழந்திலன் சுறங்கெனத் திரிதல் — கலலுகளை எடுத்து வீசுவதற்காக நாலாபக்கமும் பம்பரம் போலச் சுறறித் திரியும் காரியமும் குறையவில்லை, திரிசிராவுக்கு.

குறிப்பு :— அபூர்வமான பாவ உருவம் பெற்ற செய்யுள் இது. கவிஞர் திரிசிராவின் வீரததையும் வீரச் செயலையும் பார்த்து ரொம்பவும் கூத்தாடுகிறார். அந்தக் கூத்தாட்டம் செயயுளின் தாள உருவததில்கூ கிடககிறது. திரும்பத் திரும்பப் பாடி அனுபவிக்க வேலடிய செயயுள்.

39. ஆள இரணடு நூறு உளஎன அந்தரதது — வீரர்கள் இருநூறு பேர் வானத்தில் உள்ளார்கள் என்று சொல்லும்படி. அந்தரம் — வானம். ஒருவன் — ஒருவனே.

மூள்இ ரும்பெரு
மாயையின் செருமுயல்
வா னைத்,

தாள்இ ரண்டையும்
இரண்டுவெங் கணைகளால்த்
தடிந் து, -

தோள்இ ரண்டையும்
இரண்டுவெங் கணைகளால்த்
துணித் தான். (173)

---

39. மூள் இரும் பெரு மாயையின் - மேன்மேலாகச் செய்யும் மாயப் போர்போல. செரு முயல்வானை - யுத்தஞ் செய்யும் திரிசிராவை. தாள் இரண்டையும் இரண்டு வெம் கணைகளால்த தடிந்து - கால இரண்டையும் இரண்டு அம்புகளால் அறுத்து. கறங்குபோல் திரிதல் நின்று விட்டது. ஆனாலும் கலலை எடுத்து வீசுவது நிறக வில்லை. அதற்காகக் கணக்குப் பார்த்து வேறு இரண்டு அம்புகளை ஏவினன் அவைபோய்த் தோள் இரண்டையும் துணித்து விட்டன.

குறிபபு — இரண்டு காலுக்கு இரண்டு அம்புகள் என்று கணக்கிட்டு ஏவினன் அதோடு நிற்கவில்லை. மறுபடியும் ஒன்று இரணடு என்று எண்ணிக்கொண்டு அம்புகளை ஏவினன். தோளும் ஒன்று விழுந்தது இரண்டு விழுநதது என்று ஏறபட்டு விட்டது. இது, ஹாஸ்யம். எக்களிப்பு, வீரம் ஆகிய மூன்று பாவங்களையும் கொண்டது. அம்பு எய்தவன் சதுரப்பாட்டை வெகு அலங்காரமாகக் காட்டியிருக்கிறது.

40. திரிசிராவுக்குக் கால் போய்விட்டது, தோளும் போய்விட்டது. ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆனாலும் ஆங்காரமும் கொதிப்பும் விட்டபாடாக இல்லை. வாயைத் திறந்தவண்ணமாய்ப் பெரிய பல்லையெல்லாம் தெரியும்படியாகக் காட்டிக் கொண்டு ஓடிவந்து எதிரியைக் கடித்துவிட, ஆத்திரப் படுகிறான்,

இந்த ஆத்திரத்தைப் பார்த்தான் ராமன். இரக்கமே பிறந்துவிட்டது.

அற்ற தாளொடு
தோளினன், அயில்எயி(று)
இலங் கப்

பொற்றை மாமுழைப்
புலால்உடை வாயினன்,
புகுந் து

---

40 அற்ற தாளொடு தோளினன் - காலும் தோளும் அறறுப்போனவனாய். அயில எயிறு இலங்க—வேல் போலும் பற்கள் வரிசையாய்ப் பிரகாசிக்க. பொற்றை மாமுழைப் புலால் உடை வாயினன் - சிறுகுன்றிலுள்ள பெரிய குகை போல் புலால் உண்ணுவதற்கே ஏற்பட்ட வாயினனாய்.

பற்ற ஆதரிப்
 பான்தனை நோக்கினன் :
 பரி யா

கொற்ற வார்சிலைச்
 சரங்கொடு தலையையுங்
 குறைத் தான். (174)

---

புகுந்து பற்ற ஆதரிப்பான் தனை - தன்னிடம் அப்படியே ஓடி வந்து தன்னைக் கடித்துத தின்ன ஆத்திரப் படுகிற திரிசிராவை நோக்கினன - ராமன் பார்த்தான். பரியா - அடடா, எவ்வளவு கஷ்டப்படுகிறான், எவ்வளவு ஆத்திரப் படுகிறான் என்று மனமிரங்கியவனாய். கொறற வார் சிலைச் சரங்கொடு - குறி தவறாத நீண்ட வில்லில் ஏற்றிய அம்பு ஒன்றைக்கொண்டு. தலையையும் குறைத்தான் - தலையையும் அறுத்துத் தள்ளினான் .

குறிப்பு:— திரிசிரா அரக்கனாய் இருந்தாலும், அவனுடைய வீரத்தனத்தைப் பாராட்டாம லிருக்க முடிய வில்லை ராமனுக்கு. வீரம் என்பது ஒரு கலை. மிக அருங் கலை. அந்தக் கலையின் அறபுதமான லாகவங்களை - அம்பு தொடுப்பதையும், கல்லுகளை எடுத்து வீசுவதை யும் - பார்த்து ராமன் அனுபவித்து விட்டான். அதிலிருந்து உண்மையான அனுதாபம் திரிசிராவின்மேல் ஏற்பட்டு விட்டது. என்ன செய்கிறது, அவனுடைய வேதனை யெல்லாம் உயிர் நீங்கினால்தானே தீரும் ?

41. திரிசிராவானவன் சேனைத் தலைவன் என்பது நமக்குத் தெரியும். தலை அறுந்து மண்ணில் விழுந்தான் அவன். அவ்வளவு தான். நெருங்கி நின்ற அரக்கர்கள் எல்லோரும் ஓரே ஓட்டமாய்ப் புறங்கொடுத்து ஓட ஆரம்பித்தார்கள். திரிசிராவின் சகாவான தூஷணன் என்னும் சேனைத் தலைவன் அவர்களை ஓடிப்போகாதபடி தடுக்கப் பார்த்தான். அவர்கள் நின்ற பாடாக இல்லை. அவர்களால் ஓட முடிந்ததோ? அதுவுமில்லை.

சந்தம்

தான தனனன
தானன தானன
தா ன

திரிசி ராஎனும்
சிகரம்மண் சேர்தலும்
செறிந் த

நிருதர் ஓடினர்,
தூ டணன் விலக்கவும்
நில் லார், -

---

- 41 திரிசிரா எனும் சிகரம் மண் சேர்தலும் - சேனைக் கிடையே திரிசிரா நின்றது மலைச் சிகரம் ஒன்று நின்ற மாதிரி யிருந்தது. அவன் மண்ணில் விழுந்தது அந்த மலைச்சிகரம் மண்ணில் விழுந்ததுபோலவே இருந்தது. செறிந்த நிருதர் ஓடினர் - படையாக நெருங்கி நின்ற அரக்கர் முதுகுகாட்டி ஓட்டம் பிடித்தனர்.

பரிதி வாளினர்
கேடகத் தடக்கையர்
பரந் த

குருதி நீரிடை
வார்கழல்க் கொழுங்குடர்
தொடக் க. (175)

42. அரக்கப் படையினர் இவ்விதமாகச் சிக்குண்டு ஓட முடியாமல் நிற்கிறார்கள். இப்படி நிற்பவர்கள் போக ஓடிய சிலர் காலில், இறந்து பட்டவர்களது அரைக் கச்சையும் அதில் கட்டிய வாளும் காலைத் தொடர்ந்து வருவதையும் காலை வெட்டுவதையும் உணர்ந்து கொள்ளவில்லை. அவ்வளவு பயம் அவர்களுக்கு!

வேறு சில இடங்களில் என்ன பார்க்கிறோம்: ராமனது பாணம் நெஞ்சை உருவித் தைத்து நிற்கவும் உயிர் போனவராய் ஸ்தம்பித்து நின்றார்கள்

---

41. பரிதி வாளினர கேடகத் தடக்கையர் - சூரியன் போல் பிரகாசிக்கும் வாளைப் பற்றிய கையினராயும் கேடகத்தை அப்படியே பற்றியவராயும் ராமன அம்புகளால் வெட்டுண்டு ஆங்காங்கு நெடுந்தூரம் ரத்தப் பெருக்கில கிடந்தார்கள். குருதி நீரிடை - அந்த ரத்தப் பெருக்கில். வார்கழல்க் கொழுங்குடர் தொடக்க - ஓடப் பார்த்த தங்கள் கழல், இறந்து பட்டவர்களது பருத்த குடலில் சிக்கிக்கொள்ளும் படியாக, விருதர் ஓடினார்

அரக்கர்கள். அப்படி ராமபாணம் தைத்து நின்றவர்களைப் பார்த்த மாத்திரத்தில், அந்தத் திசையை விட்டே விலகி ஓடி விட்டார்கள் அரக்க வீரர்கள்!

கச்சும் வாளும்தம்
    கால்தொடர்ந்(து) ஈர்வன
        கா ணார்;

அச்சம் எனபதொன்(று)
    உருவுகொண் டாலென
        அழி வார்;

உச்ச வீரன்கைச்
    சுடுசரம் நிருதர்நெஞ்(சு)
        உரு வத்

தச்சு நின்றன
    கண்டனர், அவ்வழித்
        தவிர்ந் தார் (176)

---

42. கச்சும் வாளும் – அரையிலே கட்டிய கச்சும் அதில் மாட்டிய வாளும். அச்சம் எனபது ஒன்று உருவு கொண்டால என அழிவார் – அச்சம் என்கிற கண்ணுக்குத் தெரியாத தத்துவத்தைச் சிற்பத்தில் காட்டியிருக்கிறதோ என்று சொல்லும்படி மனம் உடைந்தவர்களாய்த் தோன்றினார்கள். அச்ச பாவம் அவ்வளவு அருமையாய் அவர்கள் முகத்திலும் உறுப்புக்களின நிலையிலும் இருந்தது. உச்ச வீரன் கைச் சுடு சரம்–வீராதி வீரனுயுள்ள ராமனது கையிலிருந்து வந்த கொடிய அம்பு. நிருதர் நெஞ்சு உருவத் தச்சு நின்றன – அரக்கரது மார்பை உருவி அப்புறம் தெரியும்படியாக நின்றன. கண்டனர் அவவழித் தவிர்ந்தார் – கண்ட அரக்கர்கள் அந்தத் திசையைவிட்டு விலகி ஓடினார்கள்.

43. வேறு சில அரக்கர் வெறி பிடித்தவராய் ஓடினார்கள். அவர்களுக்கு இருந்த பயத்தில், வயிறு கிழிபட்ட யானைகள் கிடக்க, ஒன்றும் தெரியாத வராய் அந்த யானைகளின் திறந்த குகைபோன்ற புண்வாய்க்குள், கையிலுள்ள வாளுடனேயே நுழையப் பார்க்கிறார்கள். பைத்தியந்தான்!

சரி, தங்களை ஒளித்துக்கொள்ள அவர்களுக்கு முடியவில்லை. பக்கத்திலே தலை அற்ற உடல்கள் சில நின்றன. அந்த உடல்களைப் பார்த்து, "நீ எனக்குச் சிநேகிதன் அல்லவா! என்னை யாராவது விசாரித் தால், காணவில்லை என்று தயவுசெய்து சொல்லி விடு' என்று கெஞ்சுகிறார்கள்.

மீண்டு ஓடினர்
சிலர், நெடுங் கடகரி
வயிற் றில்
புண்தி றந்தமா
முழையிடை வாளொடும்
புகு வார்:
தொண்டை நீங்கிய
கவந்தத்தைத் 'துணைவ, நீ
எம் மைக்
கண்டி லேன்எனப்
புகல்'எனக் கைதலைக்
கொள் வார். (177)

---

43. நெடுங் கட கரி - பெருத்த ஆண் யானை. முழையிடை - குகைபோன்ற புண் வாயில் வாளொடும புகுவார் - கையிலுள்ள வாளுடனேயே நுழையப் பார்க்கிறார்கள். கவந்தம் - தலை அற்ற உடல். துணைவ - சிநேகிதனே. புகல் என-சொல்ல வேண்டும் என. கை தலைக் கொள்வார்- கும்பிடுகிறார்கள்.

44. இந்த விதமாக முதுகுகாட்டி ஓடிக்கொண்டிருந்த அரக்கர் சேனையைக் கொஞ்சம் தடுத்துப் பேசுகிறான் தூஷணன். 'இந்த மனிதர்களுக்கு யுத்தத்துக்கான ஒரு செயலும் செய்யத் தெரியாது. இவர்களைக் கண்டு நீங்கள் பயப்படவே வேண்டாம்'' என்று சொல்லி அவர்களை நிற்கச் செய்து, ''நான் யோசனை பண்ணிச் சொல்லுகிற விஷயம் ஒன்று. அதைக் கேளுங்கள்'' என்று வீராவேசம் பொங்கப் பேசுகிறான்.

அனையர் ஆகிய
அரக்கரை, ஆண்தொழிற்(கு)
அமைந் த

வினையம நீங்கிய
மனித்தரை வெருவன்மின்
என் று,-

'நினையும் நான்உமக்(கு)
உரைப்பதொன் றுண்(டு)'என
நிலை றே,

துனையும் வாம்பரித்
தேரினன் தூடணன்
சொன் னான். (178)

---

44. அனையர் ஆகிய அரக்கரை — மேலே சொன்னபடி பயந்து ஓடிக்கொண்டிருக்கிற அரக்கரைப் பார்த்து ஆண் தொழிற்கு அமைந்த வினையம் நீங்கிய - போர்த் தொழிலுக்கான பயிற்சி கொஞ்சமுமில்லாத. மனித்தரை வெருவன்மின் - ஒன்றுக்கும் உதவாத இந்த மனிதரைப் பார்த்துக் கொஞ்சமும் பயப்படாதீர்கள் என்று - என்று சொல்லி அரக்கரை நிறுத்திய பிறகு. நினையும் - யோசனை பண்ணி. துனையும் வாம் பரித் தேரினன் — வேகமாகத் தாவிச் செல்லும் குதிரைகள் பூட்டிய தேரில் அமர்ந்துள்ளவன்.

45. தூஷணன் பேசுகிறுன் ''வீரருக்கு வசை வேறென்றும் கிடையாது. பயம் என்கிறதாக ஒன்று மனசில் இருப்பதாக எண்ணி வாழ்கிறார்களே அது தான் வசை. அந்தக் கேவலமான மக்களை வளைகள் அணிந்த பெண்கள் கூடப் பயப்படமாட்டார். நம்மைப் பாதுகாக்கும் கவசமாக நிற்பது, வெற்றி என்னும் உறுதியில் நிற்கும் மன நிலைதான்.''

'வச்சை யாம்எனும்
பயம்மனத்(து) உண்டென
வாழும்
கொச்சை மாந்தரைக்,
கோல்வளை மகளிருங்
கூசார்:
நிச்சயம்எனும்
கவசம்தான் நிலைநிறப
தன்றி,
அச்சம் என்னும்ஈ(து)
ஆருயிர்க் குறுதுணை
ஆமோ?' (179)

---

45. வச்சையாம் எனும் பயம் - வசை என்று சொல்ல வேண்டிய பயம். கொச்சை மாநதரை-கேவலமான மக்களை. கோல் வளை மகளிரும் - வேளிவு வேலை செய்த வளையல் அணிந்த பெண்களும் கூசார - பயப்பட மாட்டார். நிச்சயம் எனும் கவசம்தான் - மன உறுதி என்கிற கவசந் தான், நிலைநிற்பதன்றி. அச்சம் எனனும் ஈது - உங்களிடத் திலே காணப்படுகிற இந்தப் பயம் ஆருயிர்க்கு உறு துணையாமோ - உயிரைப் பாதுகாக்கக்கூடிய கவசம் என்று சொல்ல முடியுமா?

குறிப்பு.— கோல்வளை மகளிரும் என்பது இகழ்ச்சியைக் குறிக்க வந்த அடை.

46. மேலும் பேசுகிறான் தூஷணன். "எதோ அபாரமான வீரன் இந்திரன், அவனோடு போர் செய்தோம். நித்திய ஜீவிகளான பிரம்மா விஷ்ணு சிவன் ஆகிய தேவர்களோடு போர்செய்தோம். அந்தப் போரில் அரக்கன் என்பவன் எவனாவது முதுகுகாட்டி ஓடினானா? சொல்லுங்கள்."

'பூவ ராவுவேல்ப
புரந்தர னோடுதான்.
பொன ரு

மூவ ரோடுதான,
முன்னின் று முட்டிய
முனை யில்

ஏவர் ஓடினர்
இராக்கதர்? – நுமக்கிடைந்(து)
ஓ டும்

தேவ ரோடுகற்(று)
அறிந்துளி ராம்எனத்
திகைத் தீர்.' (180)

---

46. பூ அராவு வேல – பூ வேலை செய்து அராவிய வேலாயுதத்தை ஏந்திய. புரந்தரனோடுதான் – தேவேந்திரனோடுதான். பொனரு மூவரோடுதான் – இறப்பு என்பதில்லாத மும்மூர்த்திகளோடுதான். (சாமான்யமானவர்களா இவர்கள்?) முனனினறு முட்டிய முனையில் – எதிர்த்து நின்று செய்த போரில். ஏவர் ஓடினர் இராக்கதர் – ராக்ஷஸன் எவனாவது ஓடினது உண்டா? நுமக்கு இடைந்து ஓடும் – உங்களுக்குத் தோற்று ஓடும்,– தேவரோடு. திகைத்தீர் – யுத்தம் செய்ய வேண்டும் என்பது மறந்துபோய ஓடத் தலைப்பட்டீர்களே.

47. ''வீரர்களே, உங்களுக்குக் கண் வீரம் நிறைந்ததாய்ச் சிவந்திருக்க வேண்டுமே! அந்தச் சிவந்த நிறமெல்லாம் நீங்கி ஒரே வெளுப்பாகப் போய் விட்டது. கண்ணிலேயே அவ்வளவு பயம் இருக்கிறது. மேலும் வறண்ட காட்டுக்குள், அப்படியும் இப்படியும் நுழைந்து ஓடப் பார்க்கிறீர்கள். காட்டிலுள்ள சுள்ளிகள் உங்கள் முதுகையெல்லாம் குத்திப் பாய்ந்திருக்கிறது. இந்தச் சுள்ளிகளையா காட்டப் போகிறீர்கள் உங்கள் நாயகிகளுக்கு?''

'செம்பு காட்டிய
 கண்ணிணை பாலெனத்
  தெளிந் தீர்;
வெம்பு காட்டிடை
 நுழைதொறும் வெரிநுறப்
  பாய்ந் த
கொம்பு காட்டுதி
 ரோ,தட மார்பிடைக்
  குளித் த
அம்பு காட்டுதி
 ரோ,குல மங்கையர்க்(கு)
  அம் மா! (181)

---

47. செம்பு காட்டிய கணணிணை - சிவந்த நிறத்தைக் காட்டும் உங்கள் கண்கள். பால் எனத் தெளிந்தீர் - பயத்தினால் பால்போல் தெளியலாயிற்று. கொம்பு - முதுகில் அழுந்திப் பாய்ந்த மரக் கிளைகளின் சுள்ளிகள். வெரிந் - முதுகு. தடமார்பு - விசாலமான மார்பு. குளித்த - பாய்ந்த. குலமங்கையர்க்கு - உங்களது சிறந்த காதலிகளுக்கு. அம்மா—அடடா, என்னசெய்யப் போகிறீர்களோ?

48. கடைசியாகத் தூஷணனது வாயில் வீரம் அபாரமாய்ப் பொங்கி வருகிறது: "அரக்க வீரர் களே, இப்படி ஓட ஆரம்பித்து விட்டீர்களே? இனி மேல் என்ன செய்யப் போகிறீர்கள் என்று எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. ரொம்பக் கேவலம் உங் கள் காரியம். கொழுக்கக் கொழுக்க ஒன்றுக்கும் உதவாத வணிகராய்க் கடையில் சப்பணம் போட்டு உட்காரப் போகிறீர்களா? அல்லது, கையிலுள்ள கூர்மையான வேலையும் வீரச்செயல் செய்துள்ள வாளையும்,(அவைகளின் இரும்பைக்கொண்டுதான்,) கொழுக்கள் வடித்து, 'உழுடா உழு' என்று உழப் போகிறீர்களா? உங்கள் கையில் இப்போதிருக்கிற வாள் என்ன சாமான்யவாளா?சதா வெறிகொண்டு போர் செய்யும் தைரியமான வாழ்க்கையிலேயே வாழ்கிற பகைவரிடமிருந்து போர்க்களத்தில் பறித்த வீர வாள் அல்லவா? அடடா!"

'ஆர வாழ்க்கையின்
வணிகராய் அமைதிரோ,
அயில் வேல்

வீர வாள்க்கொடு
கொழுவடித்(து) உழுதிரோ,
வெறி போர்த்

---

48. ஆர வாழ்க்கையின் வணிகராய் அமைதிரோ - பணக் கொழுப்பும் தேகக் கொழுப்பும் கூடியவர்களாய் இருக்கிறீர்களே வணிகர்கள், அவர்களைப்போல் கடை யில் சப்பணம் போட்டு உட்காரப் போகிறீர்களா? அயில் வேல் வீர வாள்க் கொடு-நீங்கள் கையாளுவது கூர்மையான வேலும் வீர வாளும் அவைகளின் இரும்பைக் கொண்டு. கொழு வடித்து உழுதிரோ - கலப்பையிலுள்ள கொழுவாக்கி

*தீர வாழ்க்கையின்*
*தெவ்வரைச் செருவிடைப்*
*பறித்த*

*வீர வாள்க்கையிர்!*
*எங்ஙனம் வாழ்திரோ,*
*விளம்பீர்!'* (182)

---

மண்ணை உழப் போகிறீர்களா. வெறிபோர்த் தீர வாழ்க்கையின தெவ்வரை - வெறியோடு போர் செய்து தைரிய வாழ்க்கை வாழுகிற பகைவர்களிடமிருந்து. செருவிடைப் பறித்த - யுத்தத்திலேயே பறித்த. வீர வாள்க் கையிர் - வீர வாளைக் கையில ஏந்தியவர்களே எங்ஙனம் வாழ்திரோ விளம்பீர் - எப்படிப்பட்ட வாழ்க்கையை நீங்கள் நடத்தப் போகிறீர்களோ, சொலலுங்கள் பார்க்கலாம்.

## தூஷணனது தலை விழுந்தது

49. மேலே சொன்னபடி பேசிய தூஷணன், அரக்கர்களைத் தன் வசமாக்கி நிறுத்திக் கொண்டான் ''கொஞ்சம் நின்று என்னுடைய வில்தொழிலைப் பாருங்கள்'' என்றான், அப்படியே போய்ப் போர்க் கோலத்தோடு தேரில் மீள வருகிறான்.

சந்தம்
தான தன்னன
தானன தானன
தான

என்று தானும், தன்
எறிகடல்ச் சேனையை
இணக்கி,

'நின்று காண்டிர்என்
நெடுஞ்சிலை வலி என,'
நேராச்

சென்று தேர்வரத்
தேவரும் மருள்கொண்டு
திகைத்தார்:

---

49. என்று தானும் - மேலே கண்டவாறு பேசிய வனும். தன் எறிகடல்ச் சேனையை இணக்கி - அலைமோதும் கடல்போன்ற படையைத் தன வசமாக்கி நின்று காண்டிர என் நெடுஞ்சிலை வலியென - கொஞ்சம் நின்று பாருங்கள் என் வில்வலியை என்று சொல்லிவிட்டு நேராச் சென்று தேர் வர - அப்படியே சென்று தேரின் மேல ஏறி வரவும். தேவரும் மருள கொண்டு திகைத்தார் - தேவர்களும் மயக்கங் கொண்டு திகைத்து நின்று விட்டார்கள். அப்படியானால் மற்றவர் பாடு என்ன? அவன் நேரில் வருவதைப் பார்க்க அவ்வளவு பயங்கரமாயிருநதது.

'நன்று காத்தி' என்(று)
இராமனுக் கெதிர்சொலி
நடந் தான். (183)

50. இப்படியெல்லாம் ஆரவாரம் செய்து கொண்டு போகிறான் தேரில்; தேருக்குள் வில்லை ஏந்திக் கொண்டு ஒரு மலையே இருந்தது போல் இருந்தது தூஷணன் இருக்கை. பார்த்தான் ராமன். "நீ இருக்கிறது என் அம்புக்கு ரொம்ப வாய்ப்பா இருக்கிறது" என்று சிரித்தான். இந்த வார்த்தை தூஷணன் காதிலும் விழுந்தது.

சென்ற தேரையுஞ்
சிலையுடை மலையெனத்
தேர் மேல்

நின்ற தூடணன
தன்னையும் நோக்கிய
நிம லன்,

'நன்று நனறு,நின்
நிலை' எனப் பகர்ந்தனன்
நகைத் தான்;

---

49. நன்று காத்தி எனறு - நனறுய்ப் பாதுகாத்துக் கொள் உன்னை என்று. இராமனுக்கு எதிர்சொலி - ராமனுக்கு எதிராக வீர வார்த்தை சொலலிக்கொண்டு. நடந்தான - தேரைச் செலுததினான்

50. நிமலன் - ராமன். பகாந்தனன நகைத்தான் - சொல்லிச் சிரித்தான்.

என்ற காலத்(து)அவ்
வெய்யவன் பகழிஒன்(று)
எய் தான். (184)

51. அம்பு எய்ததையும் பார்த்துக்கொண்டான் ராமன். யோசனை ஏதுமில்லாமல் சமயம் தெரியாமல் வேகமில்லாமல் எய்தான் என்றும் தெரிந்து கொண்டான். சிரிப்பு வந்துவிட்டது. அப்படியே அந்த அம்பைத் தன்னுடைய அம்பு ஒன்ருல்ச் சிதைத்தான். தாமசம் என்னத்திற்கு என்று, தொடர்ந்து அம்பு தொடுத்து அரக்கனது தேரை நொறுக்கி, அவன் கையிலிருந்த வில்லை அறுத்து, அணிந்திருந்த கவசத்தையும் உடைத்து விட்டான்.

எய்த காலமும்
வலியும்நன றெனநினைந்(து)
இரா மன்,

செய்த சேய்ஒளி
முறுவலன், அக்கணை
சிதைத் தான்;

---

50 என்ற காலத்து - என்று சொல்லிச் சிரித்த நேரத்தில். அவ்வெய்யவன பகழி ஒன்று எய்தான் - அந்தக் கொடிய தூஷணன் அம்பு ஒன்றை ஏவினன்

குறிப்பு.—தேரில தூஷணன ஏறி வந்ததைப் பார்த்த ராமன் வீரா வேசம் உண்டாகிச் சிரித்தான். அவ்வளவு தான்; அரக்கன் அம்பு ஒன்றை ஏவினன் என்று போரைத் துரிதமாக ஆரம்பிக்கிற பாவம் தெளிவாய்த் தெரிகிறது.

51. செய்த சேய் ஒளி முறுவலன் - வெகுதூரம் பல்லின் பிரகாசம் தெரியும்படி சிரித்தவனுய்.

நொய்தின் அங்கவன்
நொறில்ப்பரித் தேர்பட
நூறிக்,

கையின் வெஞ்சிலை
அறுத்தொளிர் கவசமுந்
தடிந் தான். (185)

52. கவசம் உடைந்து கீழே விழுந்ததோ இல்லையோ, தேவர்களது ஆரவார முழக்கமும் முனிவர்களது வாழ்த்தொலியும், கடல் முழக்கம் போலக் கேட்க ஆரம்பித்தது. ஏன் அப்படி முழக்கம்?

தேவர் ஆர்த்தெழ,
முனிவர்கள் திசைதொறுஞ்
சிலம் பும்

ஓவில் வாழ்த்தொலி
நாற்கடல் முழக்கென
ஓங் க,

---

51. நொய்தின் - வெகு விரைவிலே. நொறில்ப் பரித்தேர் பட நூறி - படபடப்போடு விற்கும் குதிரை பூட்டிய தேரை நொறுக்கி. தடிந்தான் - உடைத்தான்.

52 தேவர் ஆர்த்து எழ - தேவர்கள் ஆரவாரத் தோடு கைகொட்டி எழுந்தார்கள். சிலம்பும் - சப்திக்கும். ஓவில வாழ்த்தொலி - விடாத வாழ்த்தொலி. நாற்கடல் முழக்கு என ஓங்க - நாலு திசைகளிலுமுள்ள கடல்களின் முழக்கம் என, வானத்தை எட்டி ஓங்க கொடுத்தலை இழந் தான் தூஷணன்.

'காஅ டாஇது
வல்லையேல் நீ'எனக்
கணை ஒன்(று)

ஏவி னான்: அவன்
எயிறுடை நெடுந்தலை
இழந் தான். (186)

---

52. 'கா அடா இது வல்லையேல் நீ' என - இதை நீ முடியுமானால் தடுத்துக்கொள் என்று. கணை ஒன்று ஏவினன - அம்பு ஒன்றை ஏவினான் ராமன்.' அவன் - பகையாளியாகிய அவனோ. எயிறுடை | நெடுந்தலை இழந்தான் - ஒரே பல் மயமாயிருந்த வாயைக் கொண்ட தலையை இழந்தான். (தலை அறுபட்டது).

53. தூஷணனுடைய தலை அற்று விழுந்தது. அதோடு, ராமன் ஏவிய சரமாரியால் தூஷணனுடைய சேனையெல்லாம் அறுபட்டு விழுந்தன.

தம்பி தூஷணனும் சேனையும் ஒழிந்ததை அறிந்தான் கரன். இதை நம்பவே முடியவில்லை அவனுக்கு. கோபம் அபாரமாய் உண்டாய்விட்டது.

சந்தம்

தான னன
தன்ன னன
தன்ன னன
தன் ன

தம்பி தலை
அற்ற படி-
யும், த யர-
தன் சேய்

அம்பு படை
யைத் து ணி-
படுத்த தும், அ
றிந் தான்

---

53. தம்பி தலை அற்றபடியும் – தம்பியாகிய தூஷணனது தலை அற்ற செய்தியையும். தயரதன் சேய் அம்பு படையைத் துணி படுத்ததும் – சக்கரவர்த்தி மகனாக வந்த ராமன் அம்பு கொண்டு படைகளை யெல்லாம் அறுத்து எரிந்த செய்தியையும்.

வெம்பு படை
விற்கை விச-
யக்க ரன்வெ
குண் டான்;

கொம்பு தலை
கட்டி ய
குலக்க ரியொ
டொப் பான். (187)

54. கரனுடைய படையென்றால் வெறுங் காலாட் படை மாத்திரமா? யானைகள் என்ன, குதிரைகள் என்ன, தேர் என்ன அளவில்லாத அத்தனையும் நாலா திசையைப் பரப்பிக்கொண்டு வந்தன. ஏதோ, மேகக்கூட்டமாம் எல்லாம் சேர்ந்து சந்திரனை முற்றுகை போட்டமாதிரி வந்தது: கண்டால் யமனும் பயந்து போய்விடுவான்.

அந்த கனும்
உட்கி டஅ.
ரக்கர் கட
லோ டும்

---

53. வெம்பு படை விற்கை விசயக் கரன் வெகுண்டான - கொடிய வீரப் படையையும் வில்லையும் கையிலேந்திச் சதா வெற்றி கொள்ளும் கரன் கோபங் கொண்டான். கொம்பு தலை கட்டிய குலக் கரியொடு ஒப்பான் - இரு பெரும் தந்தங்களைத் தலையில் வைத்துக் கட்டியது போலுள்ள பெரிய யானைக்கு ஒத்தவனாய்.

குறிப்பு:— கரனுடைய விஷயம் வந்ததும், செய்யுளுக்குத் தனியான துள்ளல் வருகிறது.

54. அந்தகனும் உட்கிட - எமனும் பயப்படும்படி. அரக்கர் கடலோடும்-காலாட் படையாகிய கருங்கடலோடு.

சிந்து ரம்வ
யப்பு ரவி
தேர்தி சைப-
ரப் பி,

இந்து வை
வளைக்கும் எழி
லிக்கு லம்எ
னத் தான்,

வந்து வரி
விஸ்க்கையின் ம
டங்க லேவ
ளைத் தான். (188)

55. மேலே சொன்னபடி ராமனை வளைத்தவர்களாய், பூமியே இழிபடும்படியாகப் பல விதமான போர் தொடங்கினர்கள் அரக்கர்கள். மதயானைகளையும் தேர்களையும் குதிரைகளையும் மும்முரமாக

---

54. சிந்துரம் - யானை. வயப்புரவி - வலிய குதிரை. இந்துவை வளைக்கும் – சந்திரனை வளைக்கும். எழிலிக் குலம் என - மேகக் குழாங்கள்போல வரி விஸ்க்கையின் - கட்டு அமைந்த வில் ஏந்திய கையனை. மடங்கலே வளைத்தான் - ஆண் சிங்கமான ராமனை வளைத்தான், – கரன்.

நடத்தினர்கள். ஆதிசேஷனது படமே தீர்ந்து போய் விடுமோ என்று சொல்லத் தோன்றியது.

அடங்க லில்கொ-
டுந்தொ ழில்அ-
ரக்கர், அவ்
அனந் தன்

படங்கி ழிதர
ரப்,ப டித-
னில்ப்ப லவி
தப் போர்

கடங்க ளுழ்த
டங்க ளிறு
தேர்ப ரிக
டா வித்

தொடங்கி னர்,
நெடுந்த கையும்
வெங்க ணைது
ரந் தான். (189)

---

55 அடங்கலில கொடுந் தொழில் அரக்கர் - யாராலும் அடக்க முடியாதபடி கொடுமையாகப் போர் செய்ய வல்ல அரக்கா. அவ அனந்தன் படங் கிழிதர - பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கிற அந்த ஆதிசேஷனது படம் கிழியும்படி; (கிலம் அங்குமிங்கும் கிறும்படி). படி - பூமி. பலவிதப் போர் - வேலாலும் வாளாலும் மறற ஆயுதங்களாலும் செய்யும் போரைத், தொடங்கினர். கடங்களும் தடங் களிறு - மத ஜலங் கொட்டும் பெரிய யானைகளையும். தேரபரி - தேர்களையும் குதிரைகளையும் கடாவி - வேக மாகச செலுத்தி. நெடுநதகையும் வெங்கணை துரந்தான் - ராமனும் கொடிய அம்புகளை ஒன்றன் பின் ஒன்ருக ஏவினன்.

56. அரக்கர்கள் பெரிய பெரிய உருவத்தின ராய் மரம் அடர்ந்த வனம்போல் நிற்கிறார்கள். அந்த வனத்திற்குள், வாளின் வனம் என்ன, வேலின் வனம் என்ன வில்லின் வனம் என்ன, இவைகளை ஏந்திய தோளின் வனம் என்ன - எல்லாம் ஒரே வனமாய் நிற்கப்பார்க்கிறோம். அப்படி வனமாகி நின்ற எல்லாவற்றையும் தூமகேது வனம் என்று சொல்லக்கூடிய அம்பின் தொகுதியால் சிதைத்து, இல்லாமல் ஆக்கிவிட்டான் ராமன்.

வாளின வனம்,
வேலின் வனம்,
வார்சி லைவ
னம், திண்

தோளின வனம்,
என்(று)இ வை
துவன்றி நிரு
தப் பேர்

ஆளின் வனம்
ஆகி அவண்
நின்ற தனை,-
அம் பரம்

கோளின் வனம்
கொண்டு கடி-
திற்கு றைப-
டுத் தான். (190)

---

56. அம்பரம் கோளின் வனம் - அம்புகள் தொகுதி தொகுதியாகச் சென்றது, ஏதோ தூமகேதுகள் தொகுதி தொகுதியாய்ச் சென்றது போலிருந்தது கடிதிற் குறை படுத்தான் – வெகு சீக்கிரத்தில் இல்லாமலாக்கிவிட்டான்.

57. இந்த விதமாக அரக்கர் அத்தனை பேரும் அழிந்ததைப் பார்க்க விரனான கரனுக்குச் சகிக்குமா? கோபம் பொங்கி வருகிறது. அவன் நிற்கிற இடம் எப்படியிருக்கிறது? ஒரே பரபரப்பாய்ப் பரந்துள்ள கொழுப்பு கலந்த இ ர த் தப் பெருக்கிடையே நிற்கிறான்.

கடுங்க ரன்என—
னப்பெ யர்
படைத்த கழல்
வீ ரன

அடங்க லும்அ
ரக்கர் அழி
வுற்றி டஅ
ழன் றான்:

ஒடுங்க லில்நி
ணக்கு ருதி
ஓதம் அதின்
உள் ளான்,

---

57. கடுங் கரன் எனப் பெயர் படைத்த - கோபங் காரணமாகவே 'கடுங் கரன்' என்ற பட்டப் பெயர் பெற்ற. கழல் வீரன் - வீரக் கழலை அணிந்த கரன். அடங்கலும்அரக்கர் - அரக்கர் அவ்வளவு பேரும். அழிவுற்றிட அழன்றான் - அழிந்து போனதைக் கண்டு கோபாவேசங் கொண்டான். ஆனால் அவன் நிற்கிற நிலை எப்படி? ஒடுங்கலில் - விரிந்துள்ள. நிணக்குருதி ஓதம் அதின் உள்ளான் - கொழுப்பு கலந்த ரத்தப் பெருக்கின் மத்தியில் உள்ளவனாய்.

நெடுங்க டலின்
மந்த ரம்
எனத்த மியன்
நின் ருன். (191)

58. சேனைகள் எல்லாம் கீழே விழுந்து கிடக்கத் தனியாய் நிமிர்ந்து நின்ற கரனுக்குக் கண்ணிலிருந்து நெருப்புப் பொறி வருகிறது. அம்புகள் பறக்கின்றன. நிற்பதோ ஒரு ரத்தக் கடலுக்குள். நெஞ்சிலிருந்து புகைவந்த மாதிரி கோபாவேசத்திலிருக்கிருன். என்ன செய்கிருன் இவன்?, ஒரு தேர் மேல் ஏறி வந்தான். அந்தத் தேரோடு கழுகுகளும் காகங்களும் ஒரே கூட்டமாய்க் கலந்து வருகின்றன.

செங்கண் எரி
சிந்த வரி
வில்ப்ப கழி
சிந் தப்

பொங்கு குரு-
திப்பு ணரி
உள்ப்பு கையும்
நெஞ் சன்,-

---

57. நெடுங் கடலின மந்தரம் என - விசாலமான கடலின் மத்தியில் மந்தரமலை நிற்பதை யொத்து. தமியன் நின்ருன் - தன்னந் தனியனுய் நின்ருன்.

58 குருதிப் புணரி - ரத்த வெள்ளம்.

கங்க மொடு
காகம் மிடை
அக்க டலின்
ஓ டும்

வங்கம் எனல்
ஆய தொரு
தேரின் மிசை
வந் தான் (192)

---

58. சங்கமொடு காகமிடை - கழுகோடு காகம் மொய்த்துப பறக்கும். அக்கடலின் ஓடும் - அந்த ரத்தக் கடலில் ஓடும். வங்கம் எனல ஆயதொரு - கப்பலை ஒத்த, தேரின்மிசை வந்தான்.

## ஏதோ கையைப் பின்னுக நீட்டினுன்

59. யுக முடிவில் உலகம் எல்லாம் வெந்து ஒழிந்து போகும்படி ஒரு பெருந் தீ வரும் என்று புராணங்கள் கூறும். அந்தப் பெருந் தீயைப்போல, கரன் இதற்கு முன் எங்குங் காணுத ஒரு கோபாவேசத்தோடு வருகிருன். கிட்டத்தில் வருவதற்கு முன்பாகவே ராமன் வாய்ப்பான கணைகளைப் பார்த்து எடுக்கிருன்.

சந்தம்

தான னன
தன்ன னன
தன்ன னன
தன் ன

செறுத்(து)இ றுதி
யில்ப்பு வனி
தீய எழு
தீ யின்,

மறத்தின் வயி
ரத்தொ ருவன்
வந்த ணுகு
முந் தைக்,

---

59. இறுதியில புவனி தீய - யுக முடிவில் உலகமெல்லாம் வெந்து போகும்படி. செறுத்து எழு தீயின் - அடர்த்தியாக எழும் பெருந்தீயை ஒத்து. மறத்தின வயிரத்து ஒருவன் - தேக திடமும் மனத்திடமும் ஒருங்கு வாய்த்த கரன். வந்து அணுகும் முநதை - கிட்டத்தில வரும் முன்னதாகவே.

கருத்த மணி
கண்டன் கட-
வுள்ச்சி லேக-
ரத் தால்

இறுத்த வனும்
வெங்க ணேதெ-
ரிந்த னன்எ-
திர்ந் தான். (193)

60. அப்படி ராமன் தேர்ந்து எடுத்த அம்புகள் ஒன்பது. ஊழித் தீயைப்போல உலகத்தையே அழிக்க வல்லவை அந்த ஒன்பது பாணங்களும், அவைகளை ஏவினன் ராமன். கரனும் ஒளி வீசும்படியான அம்புகளை எடுத்துப் பிரயோகிக்கிறான்.

ஊழி யெரி
யில்க்கொ டிய
பாய்ப கழி
ஒன் பான்,

ஏழு லகி
னுக்கும் ஒரு
நாய கனும்
எய் தான்:

---

59. கருத்த மணிகண்டன - நீலகண்டனாகிய சிவ பெருமானது. கடவுட் சிலை - தெய்வத் தன்மை பொருந்திய வில்லை. கரத்தால இறுத்தவனும - சீதையை மணப்பதற்காகக் கையால் எடுத்து ஒடித்த ராமனும். வெங்கணை தெரிநதனன எதிர்ந்தான - கொடிய அம்புகளைத் தேர்ந்து எடுத்தவனாய் எதிர் சென்றான்

60. பகழி ஒனபான - அம்புகள் ஒன்பதை. ஏழ உலகினுக்கும ஒரு நாயகன - ஏழு கண்டங்களுக்கும் சக்கர வர்த்தியாகிய ராமன்.

சூழ்சு டர்வ
டிக்க ணை
அவற்றெ திர்தொ
டுத் தே,

ஆழி வரி
வில்க்க ரனும்
அன்ன வைஅ
றுத் தான். (194)

61. அந்த ஒன்பது ராம பாணங்களையும் அறுத்து விட்டு, ஒரு தந்திரமான வேலை செய்தான் கரன். அதனால் ஏதோ சரமாரி வந்து ராமனது உருவையே மறைத்த மாதிரி தோற்றியது. ராமனுக்கு ஆபத்து வந்து விட்டதே என்று உள்ளம் உடைந்தவர்களாய்ப் பார்த்துக் கொண்டிருந்த தேவர்கள் ஓடி ஒளித்தார்கள். ராமனுக்கு, 'என்னடா வேடிக்கை

---

60 சூழ்சுடர் வடிக்கணை - எங்கும் ஒளியை வீசுகிற கூர்மையான அம்புகளை. அவற்றெதிர் தொடுத்தே - ராமனது ஒன்பது அம்புகளுக்கும் எதிர் தொடுத்து. ஆழி வரி வில்க கரனும் - சிங்கம் போன்ற வரிவில ஏந்திய கரனும். அன்னவை அறுத்தான் - அந்த ராம பாணங்களை அறுத்தான்.

பண்ணுகிறான்'' என்று முதலில்ச் சிரிப்பு வந்தது. பிறகு கோபமே வந்து விட்டது.

கள்ள அமர்
மாய வினைக்
கல்வி யின்வி-
ளைந் தான்,

வள்ளல் உரு
வைப்ப கழி
மாரி யின்ம-
றைத் தான்:

உள்ளம் உலை
வுற்(று)அ மரர்
ஓடி னர்ஒ
ளித் தார்;-

வெள்ள யி(று)இ
தழ்ப்பி றழ
வீர னும்வெ
குண் டான். (195)

61. கள்ள அமர் மாய வினைக் கலவியின் விளைந்தான - கள்ளத்தனமாகப் போர் செய்வதற்கான மாய வித்தைப் பயிற்சியில் தேர்ந்தவனான கரன், வள்ளல் உருவை-ராமனது உருவை, பகழி மாரியின மறைத்தான - சரமாரியால் மறைத்ததுபோல் செய்தான். வெள எயிறு இதழ்ப் பிறழ - முத்துப் போன்ற பற்கள் இதழைக் கடித்த வண்ணமாய் வீரனும் வெகுண்டான் - ராமனும் கோபங் கொண்டான.

62. எழுந்தது கோபம் இராமனுக்கு! ஒரு கணையினாலேயே இந்த அரக்கனை முடித்து விடுகிறேன் என்று சொல்லி ஒரு கணையைத் தொடுத்து வலது தோளைப் பொருந்தும்படி நாணைப் பலமாய் இழுத்தான்.

சந்தம்

தான தன்னன
தன்னன தன்னன

'முடிப்பென் இன்றொரு
மொய்கணை யால்' எனாத்,

தொடுத்து நின்றுயர்
தோளுற வாங்கினான்;-

பிடித்த திண்சிலை
பேர்அகல் வானிடை

இடிப்பின் ஓசை
படக்கடி(து) இற்றதே. (196)

62 முடிப்பென் இன்று ஒரு மொய்கணையால எனா - இப்போதே முடித்து விடுகிறேன் இந்த அரக்கனைப் பலத்த அம்பு ஒன்றால் என்று சொல்லி. தொடுத்து - அம்பை நாணில்த் தொடுத்து. நின்றுயர் தோளுற வாங்கினான் - பெருமிதத்தோடு விளங்குகின்ற தோளிலப் பொருந்தும்படி இழுத்தான். பிடித்த திண்சிலை - இடது கையில்ப் பிடித்திருந்த வில்லின் தண்டு. பேர் அகல வானிடை - மிக விரிவாயுள்ள வானத்தில் உண்டாகும். இடிப்பின் ஓசைபட - இடியோசையோ என்று சொல்லும்படி. கடிது இற்றதே - க்ஷணத்தில் ஒடிந்தது.

63. வில் ஒடிந்ததையும், தான் தனிமையாய் நிற்கிறதையும் சிந்திக்கவில்லை ராமன். யோசிக்கிற தற்கு விநாடிப் பொழுதாவது வேண்டும். இல்லை. பழக்கத்தினுல், ஏதோ பரிவாரம் பின்னுல்நிற்கிற தாக எண்ணிக் கையைப் பின்புறமாக நீட்டினுன் - வேண்டிய வில்லோ அம்போ உடனேகொடுத்து விடு வார்கள் என்று எண்ணி.

எனனும மாத்திரத்(து)
ஏந்திய கார்முகம்

சின்னம் என்றும்
தனிமையுஞ் சிந்தியான்

மன்னர் மன்னவன்
செம்மல்,ம ரபினுல்

பின்னு றத்தன்
பெருங்கரம் நீட்டினுன். (197)

---

68 என்னும் மாத்திரத்து - வில் ஒடிந்தது என்று சொன்ன மாத்திரத்தில். ஏநதிய கார் முகம் சினனம் என்றும் - கையில் ஏந்திய வில் பழுதாய்விட்டது என்பதையும். மன்னா மன்னவன செம்மல - ராஜாதி ராஜனுன தசரத சக்கரவர்த்தியின் மகன் ராமன். மரபினுல - யுத்த பரிவாரங் களோடு போர செய்த வழக்கம்பற்றி. பின்னுற - பின் புறமாக.

## தனித்திருந்த உடலை உயிர் சேர்ந்தது

64. வில் முறிந்த சத்தம், சீதை பக்கத்திலிருந்த லக்ஷ்மணன் காதில் விழுந்ததோ இல்லையோ, ஏதோ அண்ணன் பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தவன்போல் விஷயத்தை உணர்ந்துகொண்டான். அப்படியே ஓடி வந்து, ராமன் கையில் அந்த க்ஷணமே வேறொரு வில்லைக் கொடுத்து விட்டான். பரசுராமனிடமிருந்து வாங்கிய வில்தான் அது.

சந்தம்

தான தன்னன
தன்னன தன்னன

கண்டு நின்று
கருத்து ணர்ந் தான்என

'அண்டர் நாதன்
தடக்கையின் அத்துணை

---

64. கண்டு நின்று கருத்து உணர்ந்தான் என - மறைவில் சீதையோடிருந்தும், ஏதோ பக்கத்திலேயே நின்று பார்த்து விஷயத்தைத் தெரிந்துகொண்டவன் போல. அண்டர நாதன் தடக்கையில் - உலகத்துக்கு நாயகனான ராமனது பெரிய கையில். அத்துணை - அந்த க்ஷணமே

பண்டு போர்மழு
வாளிபால் பண்பினில்

கொண்ட வில்லையே
தம்பிகொ டுத்தனன். (198)

65. நல்ல தருணத்தில் வில்லைக் கொண்டு கொடுத்தான் தம்பி லக்ஷ்மணன். வில்லை எடுத்து இடக்கையில் பிடித்தான். வீரம் விளங்கப் பிடித்தான்.

கொடுத்த வில்லைஅக்
கொண்டல்நி றத்தினன்

எடுத்து வாங்கி
வலங்கொள் இடக்கையில்

---

பண்டு - முன்னமே. போர் மழுவாளி பால் - போருக்காக மழு வேந்திய பரசுராமனிடமிருந்து. பண்பினில் கொண்ட - யுத்த முறைப்படிக் கைக்கொண்ட. வில்லையே தம்பி கொடுத்தனன் - அந்த வில்லையே லக்ஷ்மணன் ஓடிவந்து கொடுத்துவிட்டான்.

குறிப்பு.— பரசுராமனுக்கும் ராமனுக்கும் யுத்தம் நேரப் பார்த்ததல்லவா? பரசுராமன் தன் கையிலுள்ள பெரிய வில்லை ராமனிடம் கொடுத்து, 'நாணேற்று, பார்ப்போம்' என்று சொன்னான். ராமன் வெகு அநுயாசமாய் நாணேற்றி விட்டான். பரசுராமன் எதிராளியின் பலத்தைக் கண்டு கொண்டான். அப்படியே வில்லை ராமனிடமே இருக்கட்டும் என்று சொல்லிக் கொடுத்து விட்டான்.

65. கொண்டல் நிறத்தினன் - நீல நிறத்தினனான ராமன்.

பிடித்த போது,—
நெறிபிழைத் தோர்க்கெலாம்

துடித்த வால்,இடக்
கண்ணோடு தோளுமே. (199)

66. நாணை ஏற்றினான். வாய்ப்பாக முன்னேறப் பிடித்துக்கொண்டு வளைத்தான். அம்பையும் எய்தான்.

ஏற்றி நாண்,இமை
யாமுன்எ டுத்(து)அதைக்

கூற்றி னும்
குனிக்கக்கு னித்(து),எதிர்

ஆற்றி னன்அவன்
ஆழியந் தேர்,சரம்

நூற்றி னல்நுண்
பொடிபட நூறினான். (200)

---

65. நெறி பிழைத்தோர்க் கெலாம்-நெறி தப்பி வாழும் அரக்கர்களுக்கு எல்லாம். துடித்தவால இடக்கண்ணோடு தோளுமே - துர்நிமித்தமாக இடது கண்ணும் தோளும் துடித்தன.

66. ஏற்றி நாண - நாண் ஏற்றி. இமையா முன் எடுத்து - ஒரு விநாடியில் முன்னேறத் தூக்கி. கூற்றினும் குனிக்கக் குனித்து - எமனும் சந்தோஷத்தினால் ஆடும்படி வளைத்து. எதிர் ஆற்றினன் அவன ஆழியம் தேர் - எதிரில் நின்று சமாளித்துக் கொண்டிருக்கிற கரனது பலத்த சக்கரங்கொண்ட தேரை. சரம் நூற்றினால் - நூறு அம்புகளால் (பல அம்புகளால்). நுண் பொடிபட நூறினான் - சுக்கு சுக்காய்ப் போகும்படி நொறுக்கினான்

67. தேர் அழிந்ததும், கரன் கீழே இறங்கி, ஆவேசத்தோடு ஆகாயத்தில் பெருங் கூச்சலிட்டுக் கொண்டு குதித்தான்.

எந்தி ரத்தடந்
தேர்அழிந் தான், இழிந்(து)

அந்த ரத்திடை
ஆர்த்தெழுந்(து), அம்பெலாம்

சுந்த ரத்தனி
வில்லிதன் தோளெனும்

மந்த ரத்தின்
மழையின்வ ழங்கினான். (201)

68. கரன் ஏவிய அம்பையெல்லாம் பொருட் படுத்தாதவனாய் இருந்த ராமன் என்ன செய்தான்? கரனது முதுகில் அம்பறாத்தூணி தூங்கிக்கொண் டிருந்தது. அதிலிருந்து அவன் அம்புகளை வலக்கை யால் எடுத்துப் பிரயோகித்துக் கொண்டிருந்தான்.

---

67. எந்திரத் தடந் தேர் அழிந்தான் - பலவிதமான பொறிகள் எல்லாம் வைத்த தனது தேர் அழிந்தவனாய். இழிந்து - பூமியில் இறங்கி. அந்தரத்திடை ஆர்த்து எழுந்து - பேர் ஆரவாரத்தோடு ஆகாயத்தில் குதித்து எழுந்து. அம்பு எலாம் - தன்னிடத்திலுள்ள அம்புகளையெல்லாம். சுந்தரத் தனி வில்லிதன் - அழகான ஒப்பற்ற வில் ஏந்திய ராமனது. தோள் எனும் மந்திரத்தில் - தோள் என்னும் மந்தர மலையின் மீது. மழை என வழங்கினான் - மழை பெய்தாற்போல் ஏவினான், அம்புகளை.

ராமன் ஒரு அம்பை எய்து அந்த வலக்கையைத் தோளோடு அறுத்துப் பூமியில் விழச் செய்து விட்டான்.

தூங்கி நின்ற
தயரத ராமனும்,

தூங்கு தூணி
இடைச்சுடு வெஞ்சரம்

வாங்கு கின்ற
வலக்கைஓர் வாளியால்

வீங்கு தோளொடு
பார்மிசை வீழ்த்தினன். (202)

69. வலக்கை அறுந்து விழவும், அடுத்த கையால் ஒரு பொல்லாத உலக்கையை எடுத்து வீசினன் கரன்.

வலக்கை வீழ்தலும்
மற்றைக்கை யாலவெற்றி

உலக்கை வானத்(து)
உருமென ஓச்சினன்:

---

68. தூங்கு தூணியிடை - முதுகில் தொங்கிக் கொண்டிருந்த அம்பறாத் தூணியிலிருந்து. சுடு வெஞ்சரம் வாங்குகின்ற வலக்கை - கொடிய அம்பு ஒன்றை எடுத்துக் கொண்டிருந்த கரனது வலக்கையை. ஓர் வாளியால் — ஒரு அம்பினல்.

69. வெற்றி உலக்கை - இது காறும் போரில் வெற்றியைக் கொடுத்து வந்த உலக்கையை. வானத்து உரும் என ஓச்சினன் - வானததில் பாயும் இடிதானே என்று சொல்லும்படி வேகமாய் ஓச்சினன்.

இலக்கு வந்துறு
முன்அதை, ஏந்தலும்

விலக்கி னன்ஒரு
வெங்கதிர் வாளியால். (203)

70. எப்பொழுதும் கையிலேயுள்ளது உலக்கை. அது ஒழிந்த பின் பாம்பைப்போல்ச் சீறினன் கரன். பிறகு, அந்த இடக்கையின் பலத்தினாலே மராமரம் ஒன்றைப் பிடுங்கிக்கொண்டு எதிரே வந்தான்.

விராவ ருங்கடு
வெங்கதை இற்றபின்,

அரா அ முன்ற(து)
அனையவன், ஆற்றலால்

மராம ரங்கையில்
வாங்கிவந்(து) எய்தினன்:

இராமனை அங்கொர்த-
னிக்கணை ஏவினான். (204)

---

69 இலக்குவந்துறு முன - லக்ஷியமான ராமனை வந்து அது தாக்குமுன். அதை - அந்த உலக்கையை. ஏந்தலும் விலக்கினன் - ராமனும் விலக்கினன் வெங்கதிர் வாளியால - கொடிய பிரகாசம் பொருந்திய அம்பினால்

70. விராவருமகடு வெங்கதை இறறபின - எப்பொழுதுமே கையிலுள்ள அந்தக் கொடிய உலக்கை (கதை) அறறுப போகவும். அரா அமுனறது அனையவன் - பாம்பு கோபங் கொண்டதை ஒத்தவனன அவன். ஆற்றலால - மிக்க பலத்தால். மராமரம் கையில வாங்கி வந்து எய்தினன் - மராமரம் ஒனறைக் கையில் ஏந்திக் கொண்டு எதிரே வந்தான்.

71. ராவணனுகிய அரக்கனுக்கு ஏதோ வரம் கிடைத்திருந்தது. மாயாசக்தி இருந்தது. மற்றும் சக்திகளும் இருந்தன. இது காரணமாக உலகத்தை யெல்லாம் துன்புறுத்தி வந்தான். அந்தப் பாவமே வந்து கரனைத் துண்டஞ் செய்கிறதோ என்று சொல் லும்படி யிருந்தது - ராமன் ஏவிய கணையால் கரன் துண்டுபட்டு விழுந்தது.

வரம்அ ரக்கன்
படைத்தவின், மரயையின்,

உரம்உ டைத்தன்மை
யரல்;உல(கு) ஏழையும்

பரம்மு ருக்கிய
பாவத்தி னுல்,வலக்

கரம்எ னக்,கரன்
கண்டமுற் ருன்அரோ. (205)

---

71. உரம் உடைத் தன்மையால் - சகலவித சக்தியும் தன்னிடமிருந்ததால். பரம் உருக்கிய பாவத்தினுல் - மிகுதி யாகத் துன்புறுத்திய பாவத்தினுல். வலக்கரம் என - முன்னே துண்டுபட்ட வலக்கையைப் போலவே, கரன் கண்ட முற்ருன் - கரனும் துண்டுபட்டான், ராமனது அம்பினுல்.

குறிப்பு :— வெட்டுண்டு விழுந்தான் கரன் என்ற பாவம் நாலாவது அடியில் மூன்ருவது சீர் மோனையோடு, 'கண்டமுற்ருன் அரோ' என்று ஒலிப்பதில் தெரிகிறது.

72. கரன் துண்டுபட்டு விழுந்ததை வானவர் (முனிவர்கள்) பார்த்தார்கள். ஓரே ஆவேசம் உண்டாய் விட்டது. ஆகா என்று எக்களிப்பில் ஆரவாரம் செய்தார்கள். புஷ்பங்களை யெல்லாம் எடுத்து அப்படியும் இப்படியுமாகத் தூவி ராமனிருக்கிற இடம் தெரியாமல் நிறைத்து விட்டார்கள்.

ஆர்த்தெ ழுந்தனர்
ஆடினர் பாடினர்

தூர்த்(து)அ மைந்தனர்
வானவர் தூய்மலர்;

தீர்த்த னும்பொலிந்
தான்,கதி ரோன்திசை

போர்த்த மென்பனி
போக்கிய(து) என்னவே. (206)

---

72. தூர்த்து அமைந்தனர் வானவர், தூய் மலர் - மலர்களைத் தூவி, இடந் தெரியாமல் தூர்த்து, மிக்க எக்களிப்போடு ஆசனமிட்டிருந்தார்கள் முனிவர்கள். தீர்த்தனும் பொலிந்தான் - புனிதமான ராமனும் முகத்தில் 'வெற்றி பிரகாசித்து விளங்கினன். எப்படி: கதிரோன் திசைபோர்த்த மென்பனி போக்கியது என்னவே - நாலா திசையும் போர்த்த இளம் பனியைச் சூரியன் போக்கியது போலவே, - தீர்த்தனும் பொலிந்தான்.

73. முனிவர்கள் வந்து முறையாக நின்று ராமனைச் சூழ்ந்தார்கள். ராமன் மிக்க உவகையோடு சென்றான். எங்கே?

முனிவர் வந்து
முறைமுறை மொய்ப்புற,
இனிய சிந்தை
இராமனும் ஏகினான்.
அனிக வெஞ்சமத்(து)
ஆருயிர் போகத்தான்
தனியி ருந்த
உடல்அன்ன தையல்பால். (207)

---

73. அனிக வெஞ்சமத்து - அரக்கர் சேனை வந்து செய்த போருக்கு, உயிர் போக - ஆருயிராகிய ராமன் போய்விட. தான் தனியிருந்த உடல் அன்ன தையல் பால் - உடல் மாத்திரம் தனியாய்த் தங்கியிருந்தது என்று சொல்லும்படியான சீதையிருந்த இடத்தை நோக்கி,- ராமன் சென்றான்.

குறிப்பு:— உயிர் பிரிந்த உடலாயிருந்தாள் சீதை. அந்த உடலை நோக்கித் திரும்பி வந்தது உயிர் என்பது விஷயம்.

## அப்படியே இலங்கைக்குப் போனுள்

74. இறந்துபோன அரக்கர்கள் யுத்தஞ் செய்து கொண்டிருந்த போது அவர்களுடைய தேகத்திலிருந்து துள்ளித் தெறித்த ரத்தம் பட்டு ராமனது கால்கள் கறை ஏறியிருந்தன.

அரக்கர்களை ஓடி ஓடித் துரத்திய காரணமாகத் தூசியும் படிந்திருந்தது காலில்.

சந்தம்

தான தன்னன
தனனன தன்னன

விண்ணில் நீங்கிய
வெய்யவர் மேனியின்

புண்ணின் நீரும்
பொடிகளும பேர யுக,

அண்ணல் வீரனைத்
தம்பியும் அன்னமும்

கண்ணின நீரினிற்
பாதம்க முவினர். (208)

---

74. விண்ணில நீங்கிய வெய்யவர் மேனியின் - வான நாட்டை அடைந்த அரக்கரது உடம்பிலிருந்து தெறித்த. புண்ணின நீரும் - புண் வழி வந்த ரத்தமும். பொடிகளும்- படிந்த தூசியும், பேரய் உக - அறவே நீங்கும்படியாக. அண்ணல் வீரனை - ராமனுகிய வெற்றி வீரனை. தம்பியும் அன்னமும் - லக்ஷ்மணனும் சீதையும். கண்ணின் நீரினில் - கண்ணீரைப் பொழிந்து.

75. ஒரு முகூர்த்த நேரத்தில் அரக்கர் எல்லாரும் அழிந்துபட்டார்கள். அவர்கள் உடம்பிலிருந்து சிந்திய ரத்தம் பெருக்கெடுத்து நாலா திக்கையும் முட்டியது போல்த் தோன்றியது. இதைக் கண்ட வானவருக்கு இப்படி அப்படியா எக்களிப்பு? ஒரே முழக்கமாய், சமுத்திர முழக்கம் போலவே ராமனை வாழ்த்தினார்கள்.

*மூத்தம் ஒன்றில்*
*முடிந்தவர் மொய்புணீர்*

*நீத்தம் ஓடி*
*நெடுந்திசை நேர்உறக்,*

*கோத்த வேலைக்*
*குரல்என வானவர்*

*ஏத்த, வீரன்*
*இனி(து)இருந் தான்அரோ.* (209)

---

75. மூத்தம் ஒன்றில் — ஒரு முகூர்த்த நேரத்தில் (ஒன்றரை மணி நேரத்தில்). முடிந்தவர் மொய் புண் நீர் நீத்தம் ஓடி - இறந்துபட்ட அரக்கரது சல்லடையாய்ச் செறிந்த புண்ணிலிருந்து வடிந்த ரத்தப் பெருக்கு ஓடி. நெடுநதிசை நேர் உற - தூரத்தே நாலா திசையிலும் பாய. கோத்த வேலைக் குரல என - எதிர் எதிரே பாய்ந்த சமுத்திரங்களின் கோஷிப்பைப் போல. வானவர் ஏத்த - வானவர் வாழ்த்த.

76. ராமனும் அவனுடைய வெற்றியும் இவ்வாறு இருந்தது இனி

சூர்ப்பனகை வயிறு வயிறு என்று அடித்துக் கொண்டாள். இறந்து கிடந்த கரனைத் தழுவிக் கொண்டு ரத்தத்தில் அப்படியும் இப்படியுமாகப் புரண்டாள்.

> இங்கிவ வாறென
> நின்ற(து): இராவணன்
>
> தங்கை தன் கை
> வயிறுத கர்த்தனள்;
>
> கங்குல் அன்ன
> கரனைத்த ழீஇ,நெடும்
>
> பொங்கு செங்குரு -
> திப்புரண் டாளரோ. (210)

77. புலம்புகிறாள் சூர்ப்பனகை, "மனசிலே, ஆசையை உண்டாக்கி வளர்த்துவிட்டேன். என் மூக்குப் போய் விட்டதே, அதோடு அந்த ஆசையும்

---

76. இங்கு இவ்வாறு என நின்றது - ராமனது காரியம் இப்படி முடிந்து நிற்கிறது. ராவணன் தங்கை சூர்ப்பனகையோ: தன்கை வயிறு தகர்த்தனள் - கையினால் வயிற்றில் அடித்ததை இன்னது என்று சொல்லமுடியாது கங்குல் அன்ன கரனைத தழுவி - இருள்ப் பிழம்பு போல் கிடந்தது கரனுடைய உடல்; அதைத் தழுவியவளாய். நெடும பொங்கு செங்குருதிப் புரண்டாள - விசாலமாகப் பரந்து பொங்கிப் பொங்கி வந்த ரத்தத்தில் புரண்டாள். அரோ - அடடா என்ன விதமாகப் புரண்டாள்!

தொலைந்துபோகக் கூடாதா? இன்னும் தொலைய வில்லையே அது! உங்களிடத்தில் வந்து குறை கூறவும் செய்தேனே. அடடா என்ன விளைந்துவிட்டது?''

'ஆக்கி னேன்மனத்(து)
ஆசை, அவ் ஆசைஎன்

மூக்கி னோடு
முடியமு டிந்திலேன்,

வாக்கி னால்உங்கள்
வாழ்வையும் நாளையும்

போக்கி னேன்கொடி
யேன்' என்று போயினாள். (211)

78. சூர்ப்பனகை ஓடிச் சென்றது, இத்தனை அரக்கரையும் ஒழித்தது போதாது, மிச்சமுள்ள அரக்கரையும் வேர் அறுத்துவிட வேண்டும் என்று குறித்துப் போனதுபோல் இருந்தது.

கடலையே கலக்குகிற [சூறாவளியானது சுற்றிச் சுற்றிச் அடித்துக் கடைசியில் ஒரு முகமாய்ப்

77. வாழ்வையும் நாளையும் - உல்லாசமான வாழ்க்கையையும் ஆயுளையும். போயினாள் - ஓடிப்போனாள்.

பாய்ந்து ஓடும் காற்றாகிறது. அந்தக் காற்றின் வேகம் அபாரம். அந்த வேகத்தோடு போகிறாள் சூர்ப்பனகை.

அலங்கல் வேல்க்கை
    அரக்கரை, ஆசறக்
குலங்கள் வேர்அறுப்-
    பான்குறித்(து),- ஆழ்கடல்
கலங்கு சூறையின
    வல்நெடுங் கால்என,
இலங்கை மாநகர்
    நொய்தின்சென் றெய்தினாள். (212)

---

78. அலங்கல் வேல்க்கை அரக்கர் - சதா வெற்றி மாலை தலையில் சூடிக் கையில் வேல் ஏந்திய அரக்கர். ஆசறக் குலங்களை வேர் அறுப்பான் குறித்து - ஒருவருமே இல்லாமல் துடைத்தமாதிரிக் குடும்பங்களை வேர் அறுக்க எண்ணினாள் போல. ஆழ்கடல் கலங்கு சூறையின - ஆழமான சமுத்திரமே கலங்கும்படி அடிக்கும் சூறாவளி வல் நெடுங் கால என - அபார சக்தியோடு நீண்டு ஓடும் புயல் காற்றைப் போல நொய்தின் - வெகு விரைவில்

குறிப்பு—பஞ்சவடி மேற்கே பம்பாய்ப் பக்கம் இருக்கிறது. இலங்கைத் தீவோ வெகுதூரத்தில் தெற்கே இருக்கிறது. ராமாயணத்திலுள்ள இந்த பூமி சாஸ்திரத்தை ரொம்ப நுட்பமாகக் கணக்கிட்டு விடக்கூடாது பள்ளிக்கூடத்துக் கணக்கு வேறே. இதிகாசத்துக் கணக்கு வேறே.

# 6. மாரீசன் வதைப் படலம்

## நாரதமுனிவர் தான் பாடுகிறரோ

1. ராவணன் கொலுவீற்றிருக்கும் மகா மண்டபத்துக்குப் போகிறோம் நாம். அரக்கர் முதலான பற்பல இனத்தாருக்குத் தலைவரான நாயகர் விழுந்து வணங்குகிறார்கள். பலர் பொன் முடிதரித்தவராய் ராவணனது பாதத்தில் விழுகிறார்கள். அந்த முடிகள் உராய்தலால் ராவணனுடைய கழலிலுள்ள மாணிக்கங்கள் சுடர்விட்டதுபோல் தெறித்து விழுகின்றன.

சந்தம்

தானன தானன
தான தன்னன

ஆய்வரும் பெருவலி
அரக்கர் ஆதியோர்

நாயகர் நளிர்மணி
மகுடம் நண்ணலால்,

---

1. ஆய்வரும் பெருவலி - நாளாக நாளாக சக்தியும் புகழும் வளர்ந்து வரும். அரக்கர் ஆதியோர் நாயகர் - அரக்கர் அவுணர் முதலியோருடைய தலைவரது. நளிர்மணி மகுடம் நண்ணலால் - நயமான முத்துக்கள் பதித்த முடிகள் உராய்தலால்.

தெய்வுறத் தெய்வுறப்
பெயருஞ் செஞ்சுடர்

ஆய்மணிப் பொலன்கழல்
அடிநின்(று) ஆர்ப்பவே. (213)

2. எங்கெங்கெல்லாமோ இருந்து பற்பல அரசர்கள் வந்து 'நான் முந்தி நீ முந்தி' என்று போட்டி போட்டுக் கப்பங்களைக் கொண்டுவந்து குவிக்கிறார்கள். அப்படிக் குவித்த பொன், மலையாகக் கிடக்கிறது. இதுபோல வேறு குவியல்களையும் பார்க்கிறோம்.

மூவகை உலகினும்
முதல்வர் முந்தினர்

ஓவலர் உதவிய
திறையின் ஓங்கல்போல்,-

---

1. தெய்வுறத் தெய்வுற-கழலின் பொற்கட்டுத் தேயத் தேய. பெயரும் செஞ்சுடர் ஆய்மணி-தெறித்து விழுவதான மாணிக்கங்களை அழுத்திய. பொலனகழல் - பொற்கழல் அணிந்த. அடிநின்று ஆர்ப்பவே -,வணங்குவதால் ஏற்படும் தொந்தரவு காரணமாக அடிகளைப் பின்வாங்கி மிதக்கக் கழல்கள் சப்திக்கின்றன

குறிப்பு:- ராவணனை முதல் முதலாகப் பார்க்கிறோம். அவனுடைய சாம்ராஜ்யத்தையும் பராக்கிரமத்தையும், அரசர்கள் வணங்குவதைக் கொண்டு காட்டுகிறார் கவிஞர்.

2 மூவகை உலகினும முதல்வர் -எங்கெங்கெல்லாமோ இருந்து அரசர்கள் வந்திருக்கிறார்கள். வானுலகத்திலிருந்தும் பாதாள உலகத்திலிருந்தும் பூவுலகத்தி

தேவரும் அவுணரும்
திசைதி சைநின்று

தூவிய குலமலர்க்
குப்பை துன்னவே. (214)

3. அரசர்கள் எத்தனையோ தரமாக ராவணனைச் சேவிக்க வருவார்கள். மிக்க அந்தஸ்துள்ளவர்கள் நிற்பதற்கு ராவணனை ஒட்டியே ஒரு வட்டமான துறை அமைத்திருந்தார்கள். அதற்கு அடுத்தாற் போல் அந்தஸ்துள்ளவர்களுக்கு அடுத்தபடியாக வட்டமான துறை அமைத்திருந்தார்கள். இப்படிப் பல துறைகள். அரசர்கள் அந்த அந்தத் துறையில் நின்று கையை உச்சியில் குவித்தவர்களாக, 'தங்களைக் கடைக்கண்ணால் பார்த்துவிடமாட்டானா, ராவணன்' என்று ஏக்கத்தோடும் பயத்தோடுமே அங்குமிங்குமாக உலாவி வந்தார்கள்.

அரசர்கள் என்றால் சாமான்ய அரசர்கள் அல்ல, தேவலோகத்திலிருந்து வந்தவர்களோ என்று சொல்ல

---

லிருந்தும் ஆகமூவகை யுலகத்திலிருந்தும் வந்து மொய்த்ததாகத் தெரிந்தது. முந்தினர் ஒவலர் உதவிய - போட்டி போட்டு ஓயாதபடி வந்து செலுத்திய. திறையின் ஓங்கல் போல - திறைக் குவியலான மலைகள் போல. தேவரும் அவுணரும் கல்வியில மேம்பட்டு உயர்ந்த அந்தஸ்துக்குரியவர்கள. திக்ச திசை நின்று – நாலாதிசைகளிலும் ஆங்காங்கு நின்று தூவிய நறுமலர்க் குப்பை - தூவிய வாசனை பொருந்திய மலர்க் குப்பை. துன்னவே - நெருங்கவே.

வேண்டும் : அவ்வளவு வீரமும் பெருமிதமும் கொண்டவர்கள்,

இன்னபோ(து) இவ்வழி
நோக்கும் என்பதை
உனலர், கரதலஞ்
சுமந்த உச்சியர்,
மின்னவிர் மணிமுடி
விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறைமுறை
துறையில்ச் சுற்றவே. (215)

4. அந்தத் தர்பாரில் சகலவித சக்தி வாய்ந்த, எதையுஞ் சாதிக்கவல்ல, வீரர்கள் வந்திருந்தார்கள்.

---

3. இனன போது இவ்வழி நோக்கும் என்பதை உன்னலர்- இன்ன நேரத்தில் இந்தத்திசையை திரும்பிப் பார்ப்பான் என்பதைத் தெரியாதவர்களாய். கரதலம் சுமந்த உசசியர் — கையைத் தலையில்ச் சதா குவித்தவர்களாய். மின்னவிர் மணிமுடி விஞ்சை வேநதர்கள - ஒளி வீசும் மணிமுடி விஞ்சை வேந்தர்கள், துனனினர் முறை முறை துறையில்ச் சுற்ற வே - நெருங்கியவர்களாய் முறைப்படி அந்த அந்தத் துறையில் சுற்றிக் கொண்டுவர, எந்த இடத்திலாவது தன்னைப் பார்க்க மாட்டாரு என்ற எண்ணத்தோடு

அவர்களுக்கு வீரசித்தர்கள் என்று பெயர். அவர்கள் காரியம் எப்படியிருந்தது என்று தெரியவேண்டாமா?

*மங்கையர் திறத்தொரு*
*மாற்றம் கூறினும்*

*தங்களை யாம்எனத்*
*தாழுஞ் சென்னியர்; -*

*அங்கமும் உள்ளமும்*
*குவிந்த ஆண்தகை*

*சிங்கஏ(று) எனத்திகழ்*
*சித்தர் சேரவே.* (216)

5. சரி, அரசர்களும் வீரசித்தர்களும் ஒரே பயத்தில் விலகி நிற்கிறார்கள். இந்த நிலையில் அவனுடைய வீரத்தை அற்புதமான கவியில் அமைத்து, அற்புதமான இசையிலும் அமைத்து, தும்புரு முனி தானே தேவலோகத்திலிருந்து வந்து பாடுகிறான் என்று சொல்லும்படி, பாடல் நடக்கிறது.

---

4. **மங்கையர் திறத்து ஒரு மாற்றம் கூறினும்** - பக்கத்திலுள்ள பணிப்பெண்களைப் பார்த்து, ஏதாவது வார்த்தை சொன்னாலும்; வெற்றிலைகொண்டு வாருங்கள் என்ற மாதிரி. **தங்களையாம் எனத்தாழும் சென்னியர்** - ஏதோ தங்களைத்தான் ஏவினான் என்று வேண்டாதபடி எண்ணிப் பணி ஏற்றமாதிரி தலையைக் கவிழ்வார்கள் வீரச்சித்தர்கள். **அங்கமும் உள்ளமும் குவிந்த** - அவர்களுடைய உடல் தளர்ந்திருக்கிறது. அதைப் போலவே உள்ளமுங் குவிந்திருக்கிறது. அவ்வளவு அடிமைப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் அவர்கள். உடலையும் நிமிர்க்க முடியாது உள்ளத்தையும் நிமிர்க்க முடியாது. **ஆண்தகைச் சிங்க ஏறு எனத் திகழ்சித்தர்** - வெளியிலோ ஆண் சிங்கத்துக்கு ஒப்பான வீரசித்தர் என்ற பெயரோடு அட்டகாசம் செய்பவர்கள்தான்.

அவனுடைய புகழைச் சாமான்ய வசனப் போக்கிலா அமைத்திருக்கிறது? ஏன், கற்பனைசக்தி வெகு அலங்காரமாக வானத்தையும் பூமியையுந்தொட்டுச் சுழல்கிறது.

திசை திசையாய்ப் போய்ப் போர்புரிந்து தேசங்களைக் கைப்பற்றினன்; அதாவது திக்குவிஜயம் செய்தான் அடடா! என்றெல்லாம் சொல்லுவதில் என்ன ரசம்? ஆனால் எப்படிப் பாடவேணும்·

அவனுடைய தோள்கள் என்ன என்ன செய்தன தெரியுமா? எட்டுத் திக்குகளிலுமுள்ள யானைகளைப் போன இடந் தெரியாமல்த் துரத்திவிட்டனவாக்கும்!— என்று ஆரம்பிக்கிறது பாட்டு.

திசையுறு கரிகளைச்
செற்(று);அவ் ஈசனும்

வசையுறக் கைலையை
மறித்து ; வான்எலாம்

---

5. திசையுறு கரிகளைச் செற்று – எட்டுத் திசைகளையும் வென்று உலகத்தைத் தாங்கிக்கொண்டு நிற்கின்றனவாம் அஷ்டதிக்கு யானைகள். அவைகளுடைய தும்பிக்கைகள் தொங்கிப் பாதாளத்தையே துழாவுகினறன. அப்பேர்ப்பட்ட பிரம்மாண்டமான யானைகளை வெளுத்து வாங்கி, அவ்ஈசனும வசையுறக் கைலையை மறித்து – சிவபெருமானுக்கே வசையுண்டாகும்படி, அவன் வீற்றிருக்கும் கைலயங்கிரியைச் செந்தூக்காகத் தூக்கிப் புரட்டிப் போட்டுவிட்டு. வான் எலாம் அசையுறப் புரந்தான்

அசையுறப் புரந்தரன்
அடர்த்த தோள்களின்

இசையினைத் தும்புரு
இசையின ஏத்தவே. (217)

6. கவிஞர் வந்து இப்படிப் பாடினார். பக்தருடைய கானம் எப்படி யிருந்தது - என்று தெரிய வேண்டாமா? சரசுவதியின் கடாட்சம் பெற்ற நாரத முனியே வந்து தேனொழுகப் பக்தி பூர்வமான தெய்விகப் பாடல்களைப் பாடுகிறார். இடையிடையே வீணையில் வாசித்தும் பாடுகிறார். தாளங்கள் பின்னாக நின்று, பணிந்து ஒலிக்கின்றன. தாளம், வீணை, பாடல்

---

அடர்த்த - வானுலகமெல்லாம் ஒரு அசை அசையும்படித் தேவேந்திரனையே யுத்தஞ் செய்து தோற்கடித்த. தோள களின் இசையினை - ராவணனது தோள்களின் புகழை. தும்புரு இசையின் ஏத்தவே - வானத்து இசைவல்லவரான தும்புரு முனிவர் சங்கீதத்தோடு புகழவே.

குறிப்பு :— பூர்வமாக வீரத்தைத் தோளில வைத்துப் பாடினார்கள். அப்படிப் பாடுவதறகுத் தோள் வகுப்பு என்று பெயர் தோள் வகுப்பு இன்ன முறையிலிருக்கும் என்பதைத் தெரிவதற்குக் கலிங்கத்துப் பரணியின் பாடலைப் பார்ப்போம்.

கவன நெடும்பரி வீரர்கான
காவிரி நாடுடை யான் இருதோள்

அவனி சுமந்தமை பாடீரே!
அரவு தவிர்ந்தமை பாடீரே!

பூர்வமாயிருந்த தோள் வகுப்புகளைக் கவிஞர் ரொம்ப அனுபவிக்கிறார் எனபது செய்யுளில் தெரிகிறது.

எல்லாம், நெடுநாளாக வந்த பண்பை ஒட்டியே இயங்குகின்றன.

சேணுயர் நெறிமுறை
திறம்பல் இன்றியே,

பாணிகள் பணிசெய்யப்
பழுதில் பண்ணுடை

வீணையின் நரம்பிடை
விளைந்த தேமறை

வாணியின் நாரதன்
செவியின் வார்க்கவே. (218)

---

6. சேண் உயர் – வெகு காலமாக ஆயிரக்கணக்கான வருஷமாகவே பண்பட்டு வந்த. நெறிமுறை திறம்பல இன்றியே – ஒழுங்கைவிட்டுச் சிறிதும் வழுவாதபடி. பாணிகள பணிசெயய - தாளங்கள் பின்னுக்கு ஒதுங்கி நின்று பாடலுக்கு உதவியாய் நிற்க. பழுதில் பண்ணுடை—பழுதில்லாதபடி சுருதி சேர்ந்த. வீணையின் நரம்பிடை – வீணை நரம்பின் இடையிடையே. விளைந்த தேமறை - வாய்ப்பாட்டாகப பாடிய பாடலும் ஏதோ வீணையிலிருந்து வந்ததோ என்று மயங்கும்படியான, பக்தி பூர்வமான தெய்வப் பாடல்களை. வாணியின் நாரதன் செவியின் வார்க்கவே - சரசுவதியின் கடாட்சத்தினுல் நாரதன் தேனும் பாலும் கலந்ததுபோல ராவணன் காதில் வார்க்க

குறிப்பு:— கவியையும் தெய்வப் பாடல்களையும் இன்ன முறையில் இசையில் அமைத்துப் பக்தி பாவம் நிறைந்ததாயும் தாளம் பின்னுக்கே நிற்பதாயும் பாட வேண்டும் என்று கம்பர் சொல்லுகிறுர் ஆயிரம் வருஷத்துக்குமுன் அவரது காலத்தில் போற்றிவந்த சங்கீத முறையைத்தான் எடுத்துச் சொல்லுகிறுர் அவ்வளவுதான். ஏதோ ராவண உலகம் தேவலோகம் இவைகளில் நடந்த காரியம் அல்ல.

## இலங்கையில் முதல் முதலாக அழுகுரல்

7. இப்படியெல்லாம், ராவண தர்பார் நடக்கிறது. அரசர்கள் வந்து கப்பங்கட்டுகிறது ஒரு அதிசயம். வைதிகர்கள் வந்து, ஆசையோடு மலர்கள் தூவுகிறது தனியான அழகு. பேட்டி காண வந்த மன்னாகளுடைய அடக்க ஒடுக்கம் இப்படி அப்படி யென்று சொல்லமுடியாது. இவைகளோடு அற்புதமான கவிகளைக் கவிஞர் பாடுகிறார். பக்தியிற் சிறந்தவர்கள் வந்து பக்திமயமாய்ப் பாடல்களை ராவணன் உருகும்படியாகப் பாடுகிறார்கள். இதுதான் தர்பார். தர்பார் நடக்கும்போது என்ன நேருகிறது?

சந்தம்

தானன தானன
தான தன்னன

தங்கையும் அவ்வழி
தலையில்த் தாங்கிய

செங்கையள், சோரியின
தாரை சேந்திழி

---

7. தங்கையும் அவ்வழி - சூர்ப்பனகை இலங்கையை நோக்கி. தலையிலத் தாங்கிய செங்கையள் – துயரத்தால் கையைத் தலையிலே வைத்துக் கொண்டு. சோரியின் தாரை

கொங்கையள், மூக்கினள்,
குழையில் காதினள்;

மங்குலின் ஒலிபடத்
திறந்த வாயினள்; (219)

8. "ஓ, இந்த அநியாயத்தைப் பார்த்ீர்களா!" என்று பெருங் கூச்சலிட்டுக்கொண்டு இலங்கைக் கோட்டையின் வடக்கு வாசலில் வந்துதோன்றினள்.

மூடையுடை வாயினள்
முறையிட்(டு) ஆர்த்தெழக்,

கடையுகக் கடல்ஒலி
காட்டிக் காந்துவாள்,

---

சேந்திழி கொங்கையள் மூக்கினள் - ரத்தப் பெருக்கானது ஒரே செந்நிறமாய் வடிகிற கொங்கையள் மூக்கினள். குழையில் காதினள் - அறுபட்ட காரணமாக காதில் யாதொரு நகையுமில்லாதவளாய்; மூளியாய். மங்குலின் ஒலிபட - மேகத்தின் இடிதானோ என்று சொல்லும்படி. திறந்த வாயினள் - வாயைத் திறந்து அலறினவளாய்.

8. மூடையுடை வாயினள் - மாமிசமும் அதன் வாசனையும் பற்றியிருந்த வாயினள். முறையிட்டு ஆர்த்து எழ - ஐயோ ஓ என்று பேரொலி எழ. கடையுகக் கடல ஒலி காட்டி - யுகமுடிவில் உலகத்தையெல்லாம் அழிக்கவரும் கடலின் ஒலிபோல் முழங்கி. காந்துவாள் - ஆங்காரம் கொண்டவளாய்.

குடதிசைச் செக்கரிலச்
சேந்த கூந்தலாள்,

வடதிசை வாயிலின்
வந்து தோன்றினாள். (220)

9. அரக்கர்கள் திடீரென்று சூர்ப்பனகையைத் திரும்பிப் பார்த்தார்கள். ஒன்றுஞ் சொல்ல ஓட வில்லை அவர்களுக்கு. இடியோசை தானோ என்று எண்ணும்படி கத்தினார்கள்.

பொருக்கென நோக்கினர்;
புகல்வ(து) ஓர்கிலர்;

அரக்கரும் இரைத்தனர்
அசனி யாம்என;

கரத்தொடு கரங்களைப்
புடைத்துக், கண்களை

நெருப்பெழ விழித்து,வாய்
மடித்து நிற்கின்றார். (221)

10. 'ராவணனுடைய தங்கையை இப்படிக் கேவலப்படுத்தத் தைரியமுள்ளவர்கள் யார்தான் இருக்கிறார்கள்? இந்த உலகில் யாருமில்லை. தேவ லோகத்திலுள்ள தேவேந்திரன் இந்தக் காரியத்தைச்

---

8. குடதிசைச் செக்கரிலச் சேந்த கூந்தலாள் – மேற்குத் திசையில் காணும் செவ்வானம்போல் ஒரே செம்மையான கூந்தலையுடையவளாய்.

செய்தானோ? ஏதோ அவனுக்குத்தான் கெட்ட காலம் போலிருக்கிறது'' என்று சிலர் ஒரே கோபாவேசத் தோடு அரற்றினார்கள்.

'இந்திரன் மேலதோ!
உலகம் ஈன்றபேர்
அந்தணன் மேலதோ!
ஆழி யானதோ!
சந்திர மௌலிபால்த்
தங்கு மேகொலோ,
அந்தரம்!' என்றுநின்(று)
அழல்கின் றார்சிலர். (222)

---

10. உலகம் ஈன்ற பேர் அந்தணன் மேலதோ — இந்த உலகத்தையெல்லாம் படைத்த பிரமன்தான் பொறுப் பாளியோ. ஆழியானதோ — சக்கரத்தை ஏந்திய திருமால் தானோ (அல்லது) சந்திர மௌலிபால் தங்குமேகொலோ அந்தரம் - பிறைச் சந்திரனை அணிந்த சிவபெருமான் பொறுப்பாளியோ இந்த அக்கிரமத்துக்கு அழல்கின்றார் சிலர் - ஒரே கோப வெறியில் கத்துகிறார்கள்.

*11.* "ராவணனுக்குப் பகைவர் என்று எடுத்துச் சொல்ல ஆளும் இருக்கிறதா?"

'செப்புறற்(கு) உரியவர்
தெவ்வர் யாருளர்?

முப்புறத்(து) உலகமும்
அடங்க மூடிய

இப்புறத்(து) அண்டத்தோர்க்(கு)
இயைவ தன்(று)இது:

அப்புறத்(து) அண்டத்தோ
ராம்'என் றூர்சிலர். (223)

*12.* இப்படிப் பலபல விதமாகச் சந்தேகங் கொண்ட மாதிரி பேசிக்கொண் டிருக்கிறூர்கள். இதற்கிடையில், வேறு சிலருக்குப்பட்ட அபிப் பிராயம் ஒன்று. அவர்களுக்குத் துணிவான அபிப்பிராயம்தான் அது.

"என்ன காரியமிது, ராவணனது தங்கை என்று தெரிந்தவுடனே, அன்னையே என்று அவள்

---

*11.* செப்புறறகு உரியவா தெவவர் யாருளா - பகைவர் என்று வாயெடுத்துச்சொல்ல யாரிருக்கிறூர்கள். முப்புறந்து உலகமும அடங்க மூடிய - பாதாளம் பூமி வானம் ஆக மூன்றையும் மூடியுள்ள இபபுறந்து அணடததோர்க்கு இயைவது அன்று இது - நாம் பார்க்கிற பேரண்டத்தின் இப்புறத்தில் வாழ்பவர்களால் இப்படிச் செய்ய முடியாது. அப்புறத்து அணடததோராம் என்றூர் சிலர் - பேரண்டத்துக்கு வெளியேயுள்ளவாகள்தான் இதைச் செய்திருக்கவேண்டும் என்று சிலர் சொல்லுகிறூர்கள்.

காலில் விழுந்து வணங்க அல்லவா வேண்டியது? உண்மை அப்படியிருக்க, இந்தமாதிரிச் செய்ய யாராலாவது முடியுமா? முடியாது.''

'என்னையே! இராவணன்
நங்கை என்றபின்,

அன்னையே என்(று) அடி
வணங்கல் அன்றியே,

உன்னவே ஒன்றுமோ
ஒருவ ரால்? இவள்

தன்னையே அரிந்தனள்
தான்' என் றார்சிலர். (224)

13. யாராலும் எண்ணமுடியாதபடி அங்க வீனம் ஏற்பட்டுவிட்டது சூர்ப்பனகைக்கு, என்று ஊரெங்கும் செய்தி பரவிவிட்டது. ஆடலும் பாடலுமாய் ஒரே முழக்கத்தில் அழுந்தியுள்ளது இலங்கை. இப்போது அதன் நிலையைப் பாருங்கள்:

முழவினில், வீணையில்,
முரளி யாழினில்த்,

தழுவிய குழலினில்ச்,
சங்கில்த், தாரையில், –

---

12. என்னையே – என்ன காரியமிது. உன்னவே ஒன்றுமோ – இப்படி இவளை அங்கவீனம் பண்ணலா மென்று எண்ணத்தான் முடியுமா? என்ன காரணத்துக் காகவோ, தானே தன்னை . அங்கவீனம் செய்து கொண்டாள்.

13. முழவினில் – நடனத்துக்கு உரிய மத்தளத்தில், முரளி யாழினில் – முரளியாழ் என்னும் வாத்தியத்தில். தழுவிய குழலினில் – தவில் முதலிய பக்க வாத்தியங் களோடு ஒத்து ஒலிக்கும் நாதசுரத்தில். தாரையில் – எக் காளத்தில். இவைகளிலிருந்தெல்லாம் ;

எழுகுரல் இனறியே, –
  என்றும இல்லதோர்

அழுகுரல் பிறந்த(து)அவ்
  இலங்கைக்(கு) அன்றரோ. (225)

---

13. எழுகுரல் இன்றியே – எழும் சப்தமில்லாமல். அன்று அரோ – அன்று, அடடா!

**14.** அழகிய பெண்கள் கைகளை நெரித்துக் கொண்டு ஒன்றும் விளங்காமல் ஒரே பார்வையாய்ப் பார்த்தார்கள், பேச இயலவில்லை. திரைந்து கட்டி பட்ட பாலை, ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்துக்குள் விடும்போது, அது எப்படித் தயங்கித் தயங்கி விழுமோ, அதுபோலப் பெண்களது வார்த்தைகள் திக்கித் திக்கி வெளிவருகின்றன. அவ்வளவு கவலைக்கு உள்ளாகிவிட்டார்கள் அவர்கள்,

சந்தம்

தானன தானன
தான தன்னன

கரைஅறு திருநகர்க்
கருங்கண் நங்கைமார்,

நிரைவளைத் தளிர்க்கைகள்
நெரித்து நோக்கினர்;

பிரையுறு பால்என
நிலையில்ப் பின்றிய

உரையினர், ஒருவர்முன்
ஒருவர் ஓடினர். (226)

---

14. கரை அறு திருநகர் - எல்லை இல்லையோ என்று சொல்லும்படி அவ்வளவு விசாலமான இலங்கை. கருங்கண் நங்கைமார் - அழகிய கண்களுடைய பெண்கள். பிரையுறு பால் என - திரைந்து கட்டிபட்ட பாலைப்போல. நிலையில்ப் பின்றிய உரையினர் - ஒழுங்கை விட்டு மாறிய சொல்லினராய். ஒருவர் முன் ஒருவர் ஓடினர் - சூர்ப்பனகைக்கு வந்த கேவலத்தைப் பார்த்து விட வேண்டாமா என்று ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டு ஓடின மாதிரி ஓடினார்கள்.

15. நாயகர்களோடு உல்லாசமாய்த் தோளைத் தழுவிப் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள் சில பெண்கள். சூர்ப்பனகைக்கு நேர்ந்த சங்கதியைக் கேட்ட மாத்திரத்தில், நாயகர் தோளை விட்டு அப்படியே நழுவி விழுந்துவிட்டது கை. இரு கண்களி லிருந்தும் கண்ணீர் குபுகுபு என்று சொட்ட ஆரம்பித்தது.

எழுஎன மலைஎன
எழுந்த தோள்களைத்
தழுவிய வளைத்தளிர்
நெகிழத், தாமரை
முழுமுகத்(து) இருகயல்
முத்தி ஞலிகள்
பொழிதரச், சிலருளர்
பொருமி விம்முவார். (227)

15. எழுஎன மலை என எழுந்த தோள்களை - தூண் போலும் மலை போலும் எழுந்த நாயகரது தோள்களை. தழுவிய வளைத் தளிர் நெகிழ - தழுவி நின்ற வளையலணிந்த தளிர்போன்ற கை நெகிழ்ந்து கீழே விழ. தாமரை முழு முகத்து - தாமரைபோன்ற பூரண அழகுவாய்ந்த முகத்தில். இருகயல முத்தின ஆலிகள் பொழிதர - இரு கயல்போன்ற கண்ணிலிருந்து முத்துப்போன்ற கண்ணீர்த் துளிகள் உதிர. சிலர் உளர், பொருமி விம்முவார் - சில பெண்கள் நின்றுர்கள்; அவர்கள் பொருமிப்பொருமி விம்முகிருர்கள்.

குறிப்பு:— உல்லாசமாக நின்ற காதலிகள் அப்படியே ஒரு விநாடியில்தானே துயரத்துக்கு உள்ளாகிவிட்டார்கள் என்பதைச், செய்யுளின் உருவம் நன்ருய்க் காட்டுகிறது.

16. உல்லாசமாக நின்ற காதலிகள் சிலர் நிலை இப்படி. ஊடலில் நின்ற காதலிகள் நிலை எப்படி என்று பார்ப்போம். காதலர்களிடத்தில் கோபங் கொண்டவராய் தண்டனையாக அவர்களைத் தூரத்தில் நிற்கச் செய்தவராய், ஒரே கொதிப்புடைய மனத்தினராய், ஊடல் அளவுக்கு மிஞ்சிப் போனவராய்க் கண்கள் ஒரே சிவப்பாய்ச் சிவந்துவிட்டன. ஊடல் காரணமாகச் சிவந்த கண் சூர்ப்பனகையின் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் என்ன ஆயிற்று?

நாந்தக உழவரை
நாட்டும் தண்டத்தர்,

காந்திய மனத்தினர்,
புலவி கைம்மிகச்

சேந்தகண், அதிகமும்
சிவந்து நீர்உக,

வேந்தனுக்(கு) இளையவள்
தாளின் வீழ்ந்தனர். (228)

---

16 நாந்தக உழவரை - வாள் ஒன்றுகொண்டுபகைவர் சேனையை உழவல்ல நாயகர்களை. நாட்டும் தண்டத்தர் - அப்படியே விலகி நிற்கும்படி தண்டிக்க வல்லவர்கள். காந்திய மனத்தினர் - ஒரே கொதிப்பாய்க் கொதிக்கும் மனத்தினர் புலவி கைம்மிக - ஊடல் அளவுக்கு மிஞ்சிப் போகவும் சேந்தகண் - சிவந்து போன கண்கள். அதிகமுஞ் சிவந்து நீர உக - அப்படியே அதிகமாகச் சிவந்து கண்ணீர் பொழிய வேந்தனுக்கு இளையவள் தாளின் வீழ்ந்தனர் - ராவணனுக்குத் தங்கையான சூர்ப்பனகை காலில் போய் விழுந்தார்கள் சூர்ப்பனகை என்ன பெருமையிலிருந்தாள் என்பது தெரியவருகிறது.

17. இன்னொரு காட்சியையும் பார்ப்போம். சில பெண்கள் மதுபானத்தில் திளைத்தவராய் நாயகரோடு இருக்கிறார்கள். அதையெல்லாம் அப்படியே விட்டுவிட்டு, ஓடிவந்து சூர்ப்பனகையைத் தழுவிக் கொண்டவர்களாய் நடக்கிறார்கள், சூர்ப்பனகையிடம் அவ்வளவு மதிப்பும் அனுதாபமும்.

கள்ளுடை வள்ளமும்
களித்த தும்பியும்

உள்ளமும் ஒருவழிக்
கிடக்க, - ஓடினர்—

வெள்ளமும் நாணுற
விரிந்த கண்ணினர்,—

தள்ளுறு மருங்கினர்
தழீஇக்கொண் டேகினர். (229)

---

17. கள்ளுடை வள்ளமும்- கள் நிறைந்த கிண்ணமும், களித்த தும்பியும் – கள்ளை அருந்தி அங்கே சுற்றி வந்த வண்டுகளும். உள்ளமும் ஒருவழிக் கிடக்க-காதல் வெறியில் நின்ற உள்ளமும் அப்படியே அங்கே கிடக்க, அவைகளை ஒழித்து விட்டவராய். ஓடினர் – சூர்ப்பனகை செய்தி கேட்டு ஒரே ஓட்டமாய் ஓடி. வெள்ளமும் நாணுற விரிந்த கண்ணினர் - தடாகங்களும் நாணும்படியாக அவ்வளவு விரிந்த கண்ணையுடைய அரக்கப் பெண்கள் தள்ளுறு மருங்கினர் - இடை தள்ளாட. தழீஇக்கொண்டு ஏகினர் - சூர்ப்பனகையைப் பக்கத்தில் வந்து தழுவிக்கொண்டவர்களாய் நடந்து செல்லுகிறார்கள்.

குறிப்பு :—மேலேயுள்ள ஐந்து பாடல்களிலும் அரக்கியர்களுடைய உல்லாச வெறிகொண்ட வாழ்க்கை தெரிகிறது அதைவிட, சூர்ப்பனகைக்கு நேர்ந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை அவர்களுக்கு என்பது தெரிகிறது. செய்யுள்கள் அருமையான பாவங்களோடு தெளிவுபட்டு நிற்கின்றன.

18. இப்படியெல்லாம் தாங்கமுடியாத துயரத் துக்கும் அவமானத்துக்கும் உள்ளாகி யிருக்கிறது இலங்கை நகர். நின்றுகொண்டிருந்தவர்கள் உட் கார்ந்திருந்தவர்கள் எல்லாருமாக ஓடிப்போவதற்கு வழி என்ன என்று தேடுகிறார்கள், பயத்தினால்.

சந்தம்

தான னன
தன்ன னன
தன்ன னன
தன் ன

என் றி னைய
வன் து யர்இ -
லங்கை நகர்
எய் த ;

நின் ற வர்இ
ருந்த வரோ(டு)
ஓடும் நெறி
நே ட;—

---

18. என்று இனைய வன் துயர் - மேலே சொன்ன படி இத்தகைய ஆற்றமுடியாத துயரில், இலங்கை நகர் எய்த - இலங்கை நகர் அழுந்திக் கிடக்க. நின்றவர் இருந் தவரோடு - நின்று கொண்டிருந்தவர்கள் உட்கார்ந்திருந்த வர்களை எழச் செய்து அவர்களோடு, ஓடும் நெறி நேட - ஓடிவிட வேண்டு மென்று வழிபார்க்க, என்ன தண்ட னைக்கு உள்ளாகிறோமோ என்று.

குன்றின் அடி
வந்து படி
கொண்டல் என,
மன் னன்

பொன்தி ணிபொ
லன்க ழல்வி -
ழுந்த னள்பு
ரண் டாள். (230)

---

18. குன்றின் அடி வந்து - ராவணனாகிய மலையின் அடி வாரத்தில் வந்து. படிகொண்டல என - படிகிற கரு மேகம் போல. மன்னன் பொனதிணி பொலன் கழல் - ராவணனது பொன்மயமான அழகிய கழலணிந்த காலில். விழுந்தனள் புரண்டாள்—விழுந்து புரண்டாள்,-சூர்ப்பனகை.

19. சூர்ப்பனகையின் கோரத்தைப் பார்த்தாறோ இல்லையோ, மனசு தாங்கமுடியவில்லை ராவணனுக்கு. ஒரேயடியாய் ஆங்காரம் பிறக்கிறது.

ஒவ்வொரு வாயிலும் புகை புறப்பட்டு வருகிறது. சுவாசம் வருந்தோறும் அக்கினிமயமாகத்தான் வருகிறது. பற்களைக் கடிக்கிற கடியில் மின்னல்கள் தெறித்து விழுகிறதுபோல் தீப்பொறிகள் விழுகின்றன

சந்தம்

தான னன
தன்ன னன
தன்ன னன
தன் ன

மடித்த பில
வாய்கள் தொறும்
வந்து புகை
முந் தத்'

துடித்த தொடர்
மீசை களசு
றுக்கொ ளஉ
யிர்ப் பக்,

---

19. மடித்த பில வாய்கள் தொறும் - உதடுகள் மடிந்த வாய்களிலிருந்து. வந்து புகை முந்த - புகை முன்னுக வர. துடித்த தொடர் மீசைகள் - படபடவென்று துடித்துக் கொண்டிருந்த மீசைகள். சுறுக்கொள வுயிர்ப்ப - பெருமூசசின் உஷ்ணத்தால் சுறுக்கொள்ள.

கடித்த கதிர்
வாள்எ யிறு
மின்க ஞல,
மே கத்(து)

இடித்த உரும்
ஒத்(து)உ ரறி,-
'யாவர் செயல்?'
என் ருன். (231)

20. சூர்ப்பனகை பதில் சொல்லுகிருள். 'காட்டில் வந்து இருந்துகொண்டு தங்கள் ராஜ்யத்தை ஆளுகிருர்கள், அழகில் மன்மதனையே ஒத்தவர்கள். வானத்திலாலுைம் சரி, பாதாளத்திலாலுைஞ் சரி, ஊனும் உடம்பும் உடையவர்களாயுள்ள யாரும் ஒப்பாக மாட்டார்கள் அவர்களுக்கு. ஆலுைம், அவர்கள் மனிதர்கள்தான்.''

'கானி டைஅ
டைந்து புவி
காவல் புரி
கின் ருர்;

---

கடித்த கதிர் வாள எயிறு — நெறுநெறு என்று கடித்த பிரகாசங்கொண்ட பெரிய பற்கள். மின் கஞல — மின்னல் களைப்போல் தீப்பொறிகளை வீச மேகத்து இடித்த உரும் ஒத்து உரறி — மேகத்தில் இடித்த இடியை ஒத்து அலறி. யாவர் செயல் எனருன — இப்படி உன்னைச் செய்தது யார் என்று கேட்டான்.

மீனு டைநெ
டுங்கொ டியி-
னோன்அ னையர்;
மேல் கீழ்

ஊனு டைஉ
டம்பு டைமை
யோர்,உ வமை
ஒவ் வா

மானு டர்த
டிந்த னர்கள்
வாள்உ ருவி
என் றாள். (232)

21. "ஆகா, மானுடரா செய்தார்கள் இதை!" என்று ஒரே ஆங்காரத்தோடு சிரித்தான் ராவணன். "அவர்கள் வேலை எவ்வளவு கேவலமாக இருக்கிறது! சூர்ப்பனகையே! என்ன வார்த்தை சொல்லுகிறாய்?

---

20. மீனுடை நெடுங்கொடியினோன் அனையர் – மீனக் கொடி ஏந்திய மன்மதன போன்றவர்கள். மேல் கீழ் – வானுலக மானுலுஞ்சரி, பாதாளமானுலுஞ்சரி. ஊனுடை உடம்பு உடைமையோர் – ஊன் கொண்ட உடம்பைப் படைத்தவர்கள் யாரும். உவமை ஒவ்வா மானுடர் – ஒப்பாகாத மானுடர். தடிந்தனர் – அங்கவீனம் செய்தார்கள். வாள உருவி – வாளையே உருவிக்கொண்டு, என்ன துணிவு!

ஏதோ நடவாத காரியத்தைச் சொல்லுகிருய். பயத்தை ஒழித்துவிட்டு உள்ளதைச் சொல்''

செய்த னர்கள்
மா னு டர்
எனத்,தி சைஅ
னைத் தும்

எய்த நகை
வந்த(து), எரி
சிந்தி ன கண்
எல் லாம்;

'நொய்(து)அ வர்வ—
லித்தொ ழில்,
நுவன் ற மொழி
என் னே!

பொய்த விர்,ப—
யத்தை ஒழி,
புக்க புகல்'
என் ருன். (233)

---

21. செய்தனர்கள மானுடர் என — இப்படிச் செய்தது மானுடர்களா, பேஷ் பேஷ்! என்று நகைத்து. திசை அனைத்தும் எய்த நகை வந்தது — கோபச் சிரிப்பாகக் கட கட என்று சிரித்தான். அது நாலா பக்கமும் எட்டிய வண்ணமாய்க் கேட்டது எரி சிந்தின கண் எல்லாம் — கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறந்தன. நொய்து அவர் வலித் தொழில் — அவர்கள் செய்துள்ள அந்தக் கொடுந் தொழில் ரொம்பக் கேவலமானது. நுவன்ற மொழி எனனே — நீ சொல்லுகிற வார்த்தை விஷயமற்றதாய் இருக்கிறதே! பொய் தவிர் பயத்தை ஒழி — பயததினுல்த்தான் இநத மாதிரி இல்லாத காரியத்தைச் சொல்லுகிருய். இந்தக் காரியத்தைச் செய்ய, மனுஷனுவது ஒன்ருவது! புக்க புகல் என்ருன் — நடந்ததை அப்படியே சொல் என்ருன்.

22. சூர்ப்பனகை பதில் சொல்ல ஆரம்பிக்கிருள்:

''முனிவர்கள் ராமனிடம் போய் முறையிட்டார்கள்: 'ஏதோ எங்கள் புலன்கள் அமைதி பெற்று விட்டன என்று எண்ணியிருந்தோம். ஆனுல் அந்த ஐம்புலன்களும் அரக்கர்களை நினைத்தால் அஞ்சுகின்றன.'-இப்படி முறையிட்டதைக் கேட்ட ராமன், 'நீங்கள் கவலைப்படவேண்டாம். எல்லா உலகங்களையும் வெல்ல என்னிடத்தில் சக்தியிருக்கிறது. மேலும் அரக்கர் குலத்தை வேரோடு கொன்று தீர்த்து விடுகிறேன்' என்று உறுதியும் கொடுத்திருக்கிருன்''

'ஆறு புலன்
அஞ்சி ன
அரக்க ரைஎ—
னச், சென்(று)

ஏறு நெறி
அந்த ணர்
இயம்ப, உல(கு)
எல் லாம்

---

22. ஆறுபுலன் அஞ்சின அரக்கரை — அமைதி பெற்ற புலன்கள் யாரையும் அஞ்சவேண்டாம், ஆனுலும் அரக்கரை எண்ணிய மாத்திரத்தில் அஞ்சுகின்றன. சென்று ஏறும் நெறி அந்தணர் இயம்ப — யோக மார்க்கத்தில் மேலே மேலே போய்க்கொண்டிருக்கும் உயர்ந்த நிலையிலுள்ள முனிவர்கள் முறையிட, அந்த ராம லக்ஷ்மணர்கள் உறுதி சொன்னுர்கள். உலகு எல்லாம் வேறும் என — உலகத்தை

வேறும் என,
நுங்கள் குலம்
வேரொ டும்அ—
டங் கக்

கோறும் என
முந்தை ஒரு
சூள்உ றவு
கொண் டார்.' (234)

23. ராமலக்ஷ்மணர்களுக்கும் முனிவர்களுக்கும் உள்ள இந்தச் சம்பந்தத்தைச் சொன்னாள். ராவணனும் அரக்கர்களும் அவர்களுக்குத் தீராப் பகையாளிகள் என்றும் சொல்லிவிட்டாள். இதோடு நிற்கிறதா வார்த்தை? உள்ளத்திலுள்ள காதல் தூண்ட, ராமலக்ஷ்மணர்களைப்பற்றி அபாரமாய்ப் பாராட்ட ஆரம்பிக்கிறாள்.

"ஒரே உலகத்தில் இரண்டு மன்மதர்கள் வாழ்ந்து கொண்டிருக்க நீ பார்த்திருக்கிறாயா?" என்று ராவணனைப் பார்த்து ஆரம்பிக்கிறாள்.

'மாரர் உள—
ரேஇ ருவர்
ஒரு லகின்
வாழ் வார்;

---

யெல்லாம் அரக்கரை விட்டு மீட்டோம் என்றும், நுங்கள் குலம் – உன்னுடைய அரக்க குலம், வேரொடும் அடங்கக் கோறும் என – வேரோடு அழியும்படி கொன்றுவிடுகிறோம் என்றும், முந்தைஒரு சூள் உறவு கொண்டார் – முன்னமேயே ஒரு சபதம் செய்திருக்கிறார்கள். (வேறும் – வெல்லுவோம். கோறும் – கொல்லுவோம்.)

வீரர் உள—
ரேஅ வரின்
வில்அ தனின்
வல் லார்;

ஆர்ஒ ருவர்
அன்ன வரை
ஒப்ப வர்கள்,
ஐ யா!

ஓர்ஒ ருவ
ரேஇ றைவர்
மூவ ரையும்
ஒப் பார்.' (235)

24. மேலும் சொல்லுகிறாள்: "சக்கரவர்த்தியாகிய தசரதனது மைந்தர்கள். அவர்களைப்பற்றி ஒரு குற்றமும் சொல்லமுடியாது. தந்தை சொற்படி இந்த வனத்தில் வசித்து வருகிறார்கள்."

'தாராவ லய
நேமி உழ-
வன்த யர
தப் பேர்

---

23 வீரர் உளரே அவரின் – அவரைப்போல வீரர் உளரோ. வில்லதனின் வல்லார் – வில் வித்தையில் வல்லவர்கள்.

குறிப்பு:— ஆச்சரிய பாவத்தை இசைமயமாய் வடித்திருக்கிறது இந்தச் செய்யுளில்.

24 தாராவலய நேமி உழவன் – இந்தப் பூமியாகிய வட்டத்தைச் சக்கரங்கொண்டு உழுகிறவன், சக்கரவர்த்தி.

பராவ ரும்ந
லத்தொ ருவன்
மைந்தர்; பழி
யில் லார்;

விராவ ரும்வ
னத்(து)அ வன்
விளம்ப உறை
கின் றூர்;

இராம னும்இ
லக்கு வனும
என்பர் பெயர்'
என் றூள். (236)

---

நயரதப் பேர் பராவரும் நலத்து ஒருவன் – தசரதன் என்னும் பெயரோடு யாவராலும் புகழப்பட்டு வரும் உயர்ந்த குணத்தவனது. மைந்தர் – பிள்ளைகள். பழி இல்லார் – அவர்களிடத்திலே யாதொரு குற்றமும் சொல்லமுடியாது. விராவரும் வனத்து – இந்த நெருங்கிய காட்டில். அவன் விளம்ப உறைகின்றூர் – தந்தையாகிய தசரதன் கட்டளையிட்ட காரணமாக வசிக்கிறூர்கள்.

குறிப்பு :— ராமலக்ஷ்மணர்களுடைய பெயரை மிக்க மரியாதையுடனும் அபிமானத்துடனும் பாராட்டுகிறுன் என்பது செய்யுளில் விளங்கும்.

## தோள்களும் பல!

25. ராவணனுக்கு அரசியல்க் கண் மூலமாய்ப் பார்க்கும்போது ராம லக்ஷ்மணர்கள் வெறும் மனுஷர்கள் தானே, ரொம்பக் கேவலமானவர்கள் தானே என்று படுகிறது. அவமானத்துக்கு அவர்கள் உள்ளாகலாம், ஆனால் அவர்களால் தன் வர்க்கத்தினர் எந்த விதமாகவும் அவமானத்துக்கு உள்ளாகலாகாது. அப்படி ஏதேனும் நேர்ந்து விட்டால், அவர்களையும் அவர்கள் இனத்தையுமே நிர்மூலமாக்கி விட வேண்டியது. இதுதான் அவனுக்குத் தெரிந்த சட்டம். தெரிந்த ஒழுங்கும் இதுதான்.

இந்த நிலையில், தன் தங்கை – ராஜாதி ராஜனுடைய தங்கை - அவமானத்துக்கு உள்ளாகி விட்டாள். வெறும் மனுஷர்களால் உண்டான அவமானம்! இதை சாம்ராஜ்யப் பெருமிதங்கொண்ட மனசு எப்படித் தாங்கும்!

போதாக்குறைக்கு, அந்தச் சூர்ப்பனகை என்ன பேசுகிறாள். ''அந்த ராம லக்ஷ்மணர்கள் உயர்ந்த குணம் படைத்தவர்கள் அழகு படைத்தவர்கள், அபார வீரம் படைத்தவர்கள்' என்றெல்லாம் நாணமல் பேசுகிறாள். மூக்கு அறுந்தவள் பேசின மாதிரியில்லை. வாய்தான் கூசவில்லையா அவளுக்கு என்றெல்லாம் எண்ணுகிறான் ராவணன். இதய மிடிகிறது மனமெல்லாம் கசந்து போகிறது அவனுக்கு.

இந்தக் கசந்த நிலையில் தன் வயிற்றெரிச்சலைக் கொட்டுகிறான். "இந்தச் சாம்ராஜ்யத்தை ஏதோ ஏமாற்றத்தினாலா கைக்கொண்டேன்? அல்ல. வீரச் செயல் முற்றி முற்றி என்னுடைய சக்தியினாலே கைக்கொண்டேன். அப்படியெல்லாம் கைக்கொண்ட தன் பயன் இந்த அவமானந்தானா? என்னுடைய உயர்ந்த கீர்த்தியெல்லாம் இன்றோடு தொலைந்தது. (இருக்கட்டும், ஆனால்) உலக முழுவதிலுமுள்ள தலையான வீரர்களது முடிகளெல்லாம் என்னால் அற்று விழுந்தது என்று வைத்துக் கொள்ளுவோம். அப்படி நேர்ந்தாலும் இப்போது போன கீர்த்தி மறுபடியும் வந்து சேரும் என்பது உண்டோ?"

சந்தம்

தான னன
தன்ன னன
தந்ன னன
தன் ன

'கொற்றம் அது
முற்றி வலி -
யால்அ ரசு
கொண் டேன்;

25 கொற்றம் அது முற்றி – வீரச் செயல்கள் புரிந்து அது வளர்ந்து. வலியால் அரசு கொண்டேன் – சக்தியாலே சாம்ராஜ்யத்தைப் படைத்துக்கொண்டேன்.

உற்ற பயன்
மற்றி துகொல்,
ஓங்கி சைஇ
ழந் தேன்;

முற்ற உல
கத்து முதல்
வீரர் முடி
எல் லாம்

அற்ற பொழு
தத்தும், அது
வந்து றுதல்
ஆ மோ?' (237)

26. மேலும் கோபம் மூள அலறுகிறான்:

''ஊழிகாலம் வரையும் நிற்பதான பழியை என்னிடம் செய்துள்ளவர்கள் முழு ஆளாக இருக்கிறார்கள். அவர்களது உயிர் இருக்கிறது இன்றும், என்று சொல்லும்படி, நாளும் ஒன்று இரண்டு மூன்று என்று இருக்கின்றன. அதெல்லாம் போக,

---

25. உற்ற பயன் மற்று இது கொல் – அப்படியெல்லாம் படைத்ததன் பயனு இந்த அவமானம். ஓங்கு இசை இழந்தேன் - வானுலகம் வரை எட்டிய என்னுடைய கீர்த்தியை இதோ இழந்து விட்டேனே! முற்ற உலகத்து – உலகம் முழுவதிலும் உள்ள. முதல் வீரர் – தலையான வீரர்களது. முடி எல்லாம் அற்ற பொழுதத்தும் – தலைகள் எல்லாம் என்னுடைய வீரச் செயலாலேயே அற்று ஒழிந்தன என்று ஏற்பட்டபொழுதும். அது வந்து உறுதல் ஆமோ – இழந்த கீர்த்தி இருக்கிறதே, அது என்னை வந்து சேருமா?

குறிப்பு:- மனங்கசந்த பாவத்தைச் செய்யுள் உருவத்தில் பார்க்கவேண்டும்.

ஆலகால விஷத்தையுண்ட சிவபெருமான் எனக் களித்த வாள் இருக்கிறது. அதை உபயோகிக்கத் தோள் இருக்கிறது. அடடா, நானும் நன்ருய்த் தானே இருக்கிறேன். இதைவிட அவமானம் வேறு உண்டா!''

'உளரும் உள
தாய பழி
என்வ யின்உ
றுத் தார்

ஆளும் உள,
அன்ன வர்தம்
ஆர்உ யிரும்
உண் டாம்

நாளும் உள,
கால விடம்
உண்ட இறை
நல் கு

வாளும் உள,
தோளும் உள,
நானும் உளென்
மன் னே' (238)

27. மனம் இன்னும் புழுங்குகிறது. அந்த வேதனையில்த் தன் மனசைப் பார்த்தே பேசுகிருன். எங்குமில்லாத உணர்ச்சியோடு பேசுகிருன்

---

26. குறிப்பு:— மனம் புழுங்கி வெதும்புகிற பாவம் அற்புதமாய் அமைந்திருக்கிறது செய்யுள் உருவத்தில்.

''மனமே, இதுவரை இல்லாத புதிதான உறவு ஒன்று உனக்கு வந்திருகிறது! இப்போது வந்திருக்கிற பழிதான் அது. அதற்காக நாணி ஏன் சஞ்சலப்பட வேண்டும்? தளரவேண்டாம், துயரம் என்பதே இல்லை உனக்கு. இந்தப் பழியைச் சுமக்கக் கஷ்ட மாகவா தோன்றுகிறது? கவலை வேண்டாம்.''

புத்து ற(வு) உ
றப்ப ழி
புகுந்த தென
நா ணித்

தத்து றுவ(து)
என்னை, மன
னே! த ளரல்,
அம் மா!

எத்து யர்உ
னக்கு ள(து)!
இனிப்ப ழிசு
மக் கப்

---

27. புத்துறவு உறப் பழி புகுநதது என – இதுவரை இல்லாத புதிய உறவு வீட்டுக்குள் புகுந்த மாதிரி, பழி புகுந்தது என்று. கோபா வேசத்தில் பிறந்த ஒரு எளமை. நாணித் தத்துறுவது என்னை மனனே – அவமானப் பட்டுச் சஞ்சலமடைவதேன் மனமே. தளரல் அம்மா – தளர வேண்டாம்! எத்துயர் உனக்கு உளது–என்ன துயரம் உனக்கு இருக்கப் போகிறது, இனிமேல் இந்தப் பழியோ இதற்கு மேலான பழியோ வந்தால் தாங்குவதற்கு. பத்துள தலைப்

பத்து ளக
    லைப்ப குதி,
        தோள்கள் பல,
            அன்றே!' (239)

---

பகுதி – தலைகளாகிய உறுப்புக்கள் ஒன்றிரண்டா பத்து இருக்கின்றன. தோள்கள் பல அன்றே – தோள்களும் ஒட்டிக்கு இரட்டியாய் இருபது இருக்கின்றன.

குறிப்பு:—மனக் கசப்பைப் பிழிந்து கொட்டியமாதிரி யிருக்கிறது பாவம்.

28. இப்படியெல்லாம் மனம் புழுங்கியவனாய்ப் பேசினான், சிரித்தான், கண்ணில் பொரி பறக்க விழித்தான். சிறிது நேரங் கழித்து, ''என்ன கேவலம், இந்த இரு மானுடர்களுக்கும் துணையே கிடையாது. அவர்களை அப்படியே வாளால் கொன்றுவிடலாம். ஆனால் கரன் முதலான அரக்கர் ஏன் கொல்லவில்லை?'' என்று கேட்கிறான்.

சந்தம

தான னன
தன்ன னன
தன்ன னன
தன் ன

என்று ரைசெ
யாந கைசெ-
யா,எ ரிவி
ழிப் பான்,

'வன் துணை இ
லா இ ருவர்
மானு டரை
வா ளால்க்

28. என்று உரை செயா - என்று பேசியவனாய். நகை செயா – சிரித்தவனாய். வாளால் கொன்றிலர் கொலாம் – ஏன்

கொன்றி லர்கொ
லாம்,நெ டிய
குன்று டைய
கா னில்

நின்ற கர
னேமு தலி-
னோர்நி ருதர்'
என் ருன். (240)

29. அந்த மானுடரைக் கரன் முதலியோர் கொன்றுவிடவில்லையா என்றுகேட்டதற்கு,'அத்தனை அரக்கர்களும் ராமனது அம்பால் இறந்தொழிந்து போனார்கள். நான் ஒருத்திதான் மிச்சம்' என்ருள். இதைக்கேட்டதும் ஒன்றும் ஓடவில்லை ராவணனுக்கு. அரக்கர்பாடு இப்படியா ஆய்விட்டது? சரி போகட்டும். உன்னை இப்படி அவமானப்படுத்தியதற்கு என்ன குற்றம் செய்தாய்?'' என்று ராவணன் கேட்டான். ''என்னுடைய குற்றத்தைக் கேள்' என்று சொல்ல ஆரம்பிக்கிருள்.

---

கொன்றுவிடவில்லை. நெடிய குன்றுடைய கானில் நின்ற - உயர்ந்த குன்றுடைய காட்டில அந்தக் குன்றுகளுக்குச் சமானமாக நின்ற. கரன் முதலினோர் நிருதர் - கரனும் அவனைச் சேர்ந்தவர்களான அரக்கரும்.

''அந்த ராமனோடு லக்ஷ்மிதேவி மாதிரி ஒரு பெண் வந்திருக்கிறாள். அவள் பொருட்டு ஏற்பட்டது தான் என் பொல்லாப்பு.''

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

'என்வயின் உற்றகுற் றம்,
யாவர்க்கும் எழுதொணா த

தன்மையன் இராமனோ டும்
தாமரை தவிரப்போந் தாள்

மின்வயின் மருங்குகொண் டாள்
வேய்வயின் மென்தோள்கொண் டாள்

பொன்வயின் மேனிகொண் டாள்
பொருட்டினால் புகுந்த(து)'என் றாள். (241)

---

29. என்வயின் உற்ற குற்றம் – என்னிடத்தில் உண்டான குற்றம் என்ன என்றால், ஒரு பெண்ணினால் ஏற்பட்டது. யாவர்க்கும் எழுத ஒண்ணாத தன்மையன் – ஒருவருடைய அழகைச் சித்திரத்தில் அழுத்தம் கொடுத்து எடுத்துக் காட்ட முடியும்! ஆனால் ராமனுடைய அழகோ வரம்பெல்லாம் கடந்து இருப்பதால் சித்திரத்தில் எடுத்துக் காட்ட முடியாது. தாமரை தவிரப் போந்தாள் – செந்தாமரையை விட்டு இங்கே வந்தவள்,– அழகில் லக்ஷ்மியே என்று சொல்லவேண்டும். மின்வயின் மருங்கு கொண்டாள்– இடை வேறுமே, அதை மின்னிடமிருந்து பெற்றுக் கொண்டாள். அதுபோலவே தோளை வேயிலிருந்து கொண்டாள். வேய் – மூங்கில் மேனி, பொன்னிலிருந்து கொண்டாள்.

30. சீதையை வர்ணிக்க ஆரம்பிக்கிறான் : 'வில்லை நுதல் ஒக்கும் என்று சொல்லலாம். வேலை விழி ஒக்கும் என்று சொல்லலாம். முத்தைப் பல் ஒக்கும் என்று சொல்லலாம். பவளத்தை இதழ் என்றே சொல்லிவிடலாம். ஆனால் நெற்றியையோ கண்ணையோ, பல்லையோ இதழையோ இன்னதென்று சொல்ல முடியுமா? அவைகளிடத்திலுள்ள அழகு தனியான முறையில் அல்லவா மனசைக்கவருகிறது! உவமைப் பொருள்கள் அவ்விதம் கவருவதுண்டோ? கிடையாது.

"நெல்ப் பயிர் சடைசடையாய் விளைந்து கண்ணுக்கு எட்டாத தூரம் தலை சாய்ந்து நிற்கிறது; அதை நாம் பார்த்து வியக்கிறோம். ஆனால் நெற்பயிரையே பாராத ஒருவன் கம்பம்புல்ப் பயிரை மாத்திரம் பார்த்திருக்கிறான். அங்கொன்று இங்கொன்றாய்ச் சிதறி நிற்கிற பயிர் தானே அது. அவனிடத்தில் நெல்ப்பயிர் என்றால் கம்பம் பயிர்போல் ஒன்றுதான் என்று நாம் சொல்லி விடலாம். ஆனால் அவனுக்கு நெல்ப்பயிரின் விசித்திரம் தெரியவா செய்யும்?"

'வில்ஒக்கும் நுதல்,என்றா லும்;
வேல்ஒக்கும் விழி என்றா லும்;

பல்ஒக்கும் முத்(து),என்றா லும்;
பவளத்தை இதழ்,என்றா லும்;-

சொல்ஒக்கும், பொருள்ஒவ்வா வால் :
சொல்லலாம உவமைஉண் டோ!

நெல்ஒக்கும் புல்,என்றா லும்;
நேர்உரைத் தாகவற் றோ ! (242)

---

30. நேர் உரைத்தாக வற்றோ - விஷயத்தை நேர்முகமாக சொன்னதாக ஏற்படுமோ- வற்றோ - வலி கொண்டதாகுமா.

31. மறுபடியும் மறுபடியும் சீதையினுடைய அங்கங்கள் சூர்ப்பனகையின் கண்ணுக்கு முன்னால் வருகின்றன. அவைகளின் அழகை எடுத்துச் சொல்ல மனந்தூண்டத்தான் செய்கிறது. சாத்தியப் படுகிற காரியமா அது; மனம் திகைத்துப் போய்விடுகிறது ஆனாலும் சொல்லுகிறாள்.

'தோளையே சொல்லுகேனோ!
சுடர்முகத் துலவுகின்ற

வாளையே சொல்லுகேனோ!
அல்லவை வழுத்துகேனோ!

மீளவும் திகைப்பதல் லால்த்
தனித்தனி விளம்பல்ஆற்றேன்!

நாளையே காண்டிஐய!
நான்உனக்(கு) உரைப்பதென்னோ!'
(243)

---

31. சுடர் முகத்து உலவுகின்ற வாளையே — பிரகாசத் தோடுகூடிய முகத்தில் அப்படியும் இப்படியுமாக வீசி அழகு செய்கிற வாள் போன்ற கண்ணைத்தானே. அல்லவை வழுத்துகேனோ — மற்ற அங்கங்களைப் புகழ்வேனோ. மீளவுந் திகைப்பதலலால — யோசிக்க யோசிக்கத் திகைப்புத்தான் உண்டாகிறது. நாளையே காண்டி — நாளைக்குத்தான் நேர் நேராகக் காணப்போகிறாயே நான உனக்கு உரைப்பது என்னோ — நான் உனக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியம் ஏதோ.

32. "இத்தனை அழகும் வாய்ந்த சீதையை நிச்சயமாய் நீ பெறப் போகிறாய்" என்ற தோரணையில் பேசுகிறாள்.

"அவளுக்குரிய ஸ்தானம் இன்னதென்றே உனக்குத் தெரியாது. பார்வதி தேவி என்ன, லக்ஷ்மி தேவி என்ன, சரஸ்வதி தேவி என்ன, அவர்களை எப்படிப் பாராட்டி தக்க ஸ்தானத்தில் வைத்திருக்கிறார்கள் மும்மூர்த்திகள்!"

'பாகத்தில் ஒருவன்வைத் தான்;
பங்கயத்(து) இருந்தபொன் னை
ஆகத்தில் ஒருவன்வைத் தான்;
அந்தணன் நாவில்வைத் தான்;
மேகத்தில்மி ளிரும்மின் னை
வென்றநுண் இடையைநீ யும்,
வாகைத்தோள் வீர,பெற் றால்
எங்ஙனம் வைத்துவாழ் தி?' (244)

---

32. பாகத்தில் ஒருவன் வைத்தான்—பார்வதி தேவியைப் பாகத்தில் வைத்தவன் சிவபெருமான். பங்கயத்து இருந்த பொன்னை – செந்தாமரையிலிருந்த லக்ஷ்மியை. ஆகத்தில் ஒருவன் வைத்தான் – மார்பிலே வைத்துக் கொண்டான் திருமால். அந்தணன் நாவில் வைத்தான் – சரஸ்வதியை நாவில் வைத்துக்கொண்டான் பிரமன். மேகத்தில் மிளிரும் மின்னை வென்ற நுண் இடையை – மேகத்திலிருந்து ஒளிவிடும் மின்னலை வென்ற நுண்ணிடையளாகிய சீதையை. வாகைத் தோள் வீர – தோளில் வாகை மாலை சூடிய வீரனே. பெற்றால் – நாளைப் பெறப் போகிறாய்; அப்படிப் பெற்ற போது. எங்ஙனம் வைத்து வாழ்தி – என்ன ஸ்தானம் அவளுக்குக் கொடுத்து வாழப் போகிறாயோ, தெரியவில்லை.

## எல்லாவற்றையும் மறந்தான், ஒன்றை மறக்கவில்லை

33. மேலும் சொல்லுகிறாள் · "அவளுடைய மழலைச் சொல்லைக் கேட்டு அப்படியே மயங்கிப் போய் விடுவாய். ஏராளமான செல்வத்தையெல்லாம் அவளுக்குக் கொடுத்து விடுவாய்.'

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

'பிள்ளைபோல்ப் பேச்சினைப்
பெற்றபின் பிழைக்கலாற் றாய்;

கொள்ளைபோ கின்றசெல் வம்
அவளுக்கே கொடுத்தினை ய;

வள்ளலே! உனக்குநல் லேன்;
மற்றுநின் மனைபில்வா ழும்

கிள்ளைபோல் மொழியார்க்கெல் லாம்
கேடுசூழ் கின்றேன்அன் றே.' (245)

84. கடைசியாகச் சீதையின் அழகை இன்னதென்றே சொல்ல முடியாதபடி ஓரே அதிசயத்தில் நின்றவளாய்ப் பேசுகிறாள்.

---

33. கிள்ளைபோல மொழியார்க்கு எல்லாம்—சூர்ப்பனகை ராவணனது மனைவியரோடு அன்பாகப் பழகிவந்த அருமைப்பாடு, 'கிள்ளைபோல் மொழியார்' என்ற சொல்லில் நன்றாய்த் தொனிக்கிறது.

"சீதையை, தேவலோகத்திலுள்ள பெண்களோ, பூவுலகத்திலுள்ள பெண்கள் தானோ, ஏதோ பத்து மாசம் வயிற்றில் வைத்துப் பெற்றவள் என்றெல்லாம் சொல்லிவிட முடியாது. தேவர்கள் எல்லாம் சேர்ந்து கடைந்த காரணத்தால், லக்ஷ்மி தேவியைத் தந்தது சமுத்திரம் அந்தச் சமுத்திரத்தை வெல்ல வேண்டாமா? அதற்காக நிலமானது சீதையைத் தந்தது. யாருக்குமில்லாத புகழைப் படைத்துக் கொண்டாள் நிலமகள்."

'தேர்தந்த மடியின்சீ தை,
தேவாதம் உலகோ(டு)இம் பர்

வார்தந்த கொங்கையார் தம்
வயிறுதந் தாளேஅல் லள்;

தார்தந்த கமலத்தா ளை,
தருக்கினா கடையச்சங் க

நீர்தந்த(து); அதனைவெல் வான்,
நிலம்தந்து நிரமபிற்(று)அன் றே.'

(246)

---

34. தேவாதம் உலகோடு இமபா — தேவலோகத்திலும் இந்த உலகத்திலும். தார தநத கமலத்தாளை — வரிசையான இதழ்கொணட செந்தாமரையிலுள்ள லக்ஷ்மியை. தருக்கினர் கடைய — மிக்க எக்களிப்போடு தேவர்கள கடைய. சங்கநீர் தந்தது — ஆறுகள் சஙகமமாகிற சமுததிரம தந்தது. அதனை வெல்வான் — அந்தச் சமுத்திரததை வெலலும் பொருட்டு. நிலம் — பூமாதேவி. நிரம்பிறறு அனறே — புகழால் சிறந்து விட்டது.

குறிப்பு :—அழகு, குணம் இவைகளின் பெருமிதத்தை அபூர்வமான இசைப் பணபோடு சொலவி முடிககிறான் சூர்பபனகை. செலவததின் சிறபபு, (லக்ஷ்மி) சாமான்ய மென்றும், பூமாதேவியின சிறப்பு, எணண முடியாதபடி

35. சீதையைப் பற்றிச் சொல்லியாய் விட்டது. ராவணனுக்கு அவள் உரியவளாகப் போகிருள் என்றும் சொல்லியாய் விட்டது. இனி என்ன சொல்லப் போகிருள் பார்ப்போம்.

''சமுத்திரமானது மீனைக் கொண்டு ஊடாடி விளையாடுகிறது. அப்பேர்ப்பட்ட சமுத்திரஞ் சூழ்ந்த இந்த உலகத்திலுள்ளவர்கள் உன்னைப் பார்த்துப் பாராட்டும்படி சீதையாகிய மானைக்கொண்டு ஊடாடி விளையாடப் போகிருய். ஆனல் அது போதுமா? உன் வாள்வலியை உலகத்தார் காண வேண்டாமா?''

'மீன்கொண்(டு)ஊ டாடும்வே லை
மேகலை உலகம்ஏத் த,
தேன்கொண்டு டாடும்கூந் தல்
சிற்றிடைச் சீதைஎன் னும்

---

அவ்வளவு உயர்ந்தது என்றும், அழுத்தங் கொடுத்து வருகிற பாவம் அதி அற்புதமாக இருக்கிறது. செய்யுளின் ஓசையும் தாளமும் எளிதில் நம் செவிப்புலனை விட்டு அகன்று விடாது, கவி உருவம் என்பது இதுதான்.

35. வேலை மேகலை – சமுத்திரமாகிய மேகலை சூழ்ந்த. உலகம் ஏத்த – உலகத்தவர் புகழ. தேன கொண்டு ஊடாடுங் கூந்தல் – புஷ்பம் முடிந்து நெகிழ்ந்து சுருண்ட கூந்தலுக்குள் வண்டுகள் விளையாடுகின்றனவாம். சிற்றிடைச் சீதை என்னும் மான் – சிறிய இடையோடுகூடிய சீதை என்னும்

மான்கொண்டு டாடும்நீ, - உன்
வாள்வலி உலகங்கா ண

யான்கொண்டு டாடும்வண் ணம்
இராமனைத் தருதிஎன் பால்.' (247)

36. சூர்ப்பனகை சொல்லுகிறாள் : 'நமக்கு உண்மையான வாழ்வைத் தருவது விதிதான். அதில் யாதொரு வித்தியாசமுமில்லை. ஆகையால் நீ எவ்வளவோ தவஞ் செய்திருந்தபோதிலும், உனக்கு வந்து சேர வேண்டிய பாக்கியம் ஏற்பட்ட நாளில்த்தான் வந்துசேரும், மற்றப்படி வந்துசேராது.

''உனக்குப் பத்து முகமென்றும் பரந்த மார்பு என்றும் இருக்கின்றன. உயர்ந்த மலைகள்போல் தோள்கள் இருபது இருக்கின்றன. இதுவரை இருந்து என்ன பிரயோசனம் இவைகளால்? இனி

---

மானைக்கொண்டு. ஊடாடும் நீ – உரிமைபாகக கொண்டு காதலில் திளைக்கும் நீ. உன் வாள வலி உலகங் காண – உன்னுடைய அதிசயமான வாள் வலியை உலகத்தார் வியக்கும்படி – நீ ஒருகாரியம் செய்ய வேண்டும். உலகத்தார் உன் யோகத்தை மாத்திரம் கொண்டாடினால் போதுமா – உன் வாள் வலியால் ராமனை இணக்க வேண்டும் அல்லவா? அப்போது தானே உன வீரம் உலகத்துக்குத் தெரியவரும்?

மேல்த்தான் இவைகளைக்கொண்டு காதலை அனுபவிக்கப் போகிறாய். எல்லாம் காலத்தினால் வருவது தான். யோகம் உன்னிடம் வாய்ப்பாக வருகிறது.''

'தருவது விதியேஎன் றால்
தவம்பெரி(து) உடையரே னும்.

வருவது வருநாள்அன் றி
வந்துகை கூடவற் றோ?

ஒருபது முகமும்மார் பும்,
ஓங்குயர் வரையாம்தோள் கள்

இருபதும், படைத்தசெல் வம்
எய்துவ(து) இனியே,எந் தாய்!' (248)

37. ''இப்படி அழகு வாய்ந்த பெண்ணை உன்னிடம் கொண்டு வந்து கொடுப்பதற்காக எடுக்கப் போனேன். அப்போது அந்த ராமனது தம்பி, இடையே வந்து வாளால் என் மூக்கை அரிந்து விட்டான். இனி நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?

---

36. வற்றோ – வல்லதோ. படைத்த செல்வம் – படைத்த பாக்கியம்.

இந்த விஷயத்தை உன்னிடம் சொன்ன பிறகு உயிரை விட்டுவிட வேண்டும் என்று எண்ணி விட்டேன். இந்த அவமானத்தை என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியுமா?''

'இன்னவள் தன்னைஉன் பால்
உய்ப்பல்என்(று) எடுக்கலுற்ற
என்னை,அவ் இராமன் தம்பி
இடைபுகுந்(து) இலங்குவா ளால்
முன்னைமூக்(கு) அரிந்துவிட் டான்;
முடிந்த(து)என் வாழ்வு;நின் பால்
சொன்னபின் உயிரை நீப் பான்
துணிந்தனன்' என்னச்சொன் னாள்.
(249)

38. சீதையைப் பற்றியும் அவள் அழகைப் பற்றியும் காதல் அனுபவங்களைப் பற்றியும் சூர்ப்பனகை பேச ஆரம்பித்தவுடன் காதல்வெறி ராவணனை அப்படியே பிடித்துக்கொண்டது. முன் சொன்னதோ பின் சொன்னதோ ஒன்றுங் காதில் ஏறவில்லை. கரன் இறந்துபட்டான், அவனோடு அவனது சேனைகள் எல்லாம் இறந்து பட்டன என்ற

---

37. இலங்கு வாளால் — பிரகாசிக்கும் வாளால். முன்னை — முன் வந்து. உயிரை நீப்பான் — உயிரை விட்டுவிட.

குறிப்பு:— உயிரை முடித்துக் கொள்வேன் என்று சொல்லுவதெல்லாம் வெறும் ஜம்பந்தான் · காதல்தான் அவனை விட்டபாடாக இல்லையே!

செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் எவ்வளவோ கவலை ஏற்பட்டது: ஆனால் அவ்வளவுமே மறந்து போய்விட்டது ராவணனுக்கு.

சூரனையும் மறந்தான், தங்கை
மூக்கினைக் கடிந்துநின் றான்
உரனையும் மறந்தான், உற்ற
பழியையும் மறந்தான், வெற்றி
அரனையும் கொண்டகா மன்
அம்பினால் முன்னைப்பெற்ற
வரனையும் மறந்தான், கேட்ட
மங்கையை மறந்திலா தான். (250)

38. தங்கை மூக்கினைக் கடிநது நின்றான் உரனையும் மறந்தான் - சூர்ப்பனகையின் மூக்கை அறுத்த மனிதனது துணிச்சலையும் மறந்தான் வெற்றி அரனையுங் கொண்ட காமன் அம்பினால் - சிவபெருமானையும் வெற்றிகொண்ட மன்மதனது அம்பினால். முனைப் பெற்ற வரனையும் மறந்தான் — சம்மதமில்லாமல் எந்தப் பெண்ணையாவது தொட்டால் அழிந்துவிடுவாய் என்று அரம்பை முதலிய தேவலோகத்துப் பெண்களிட்ட சாபத்தையும் மறந்தவனானான். கேட்ட மங்கையை மறந்திலாதான் - சூர்ப்பனகை வாயிலாக வருணிக்கக் கேட்ட சீதையை மறக்க இயலாதவனாயிருந்த ராவணன்.

## சீதைமுன் நின்றது மான்

**39.** ராவணனுக்குக் காதல் வெறி அபாரமாய் உண்டாய்விட்டது. இரவெல்லாம் யோசனைபண்ணி ஞன். கடைசியாக ஒரு யுக்தி தோன்றியது. மாமன் மாரீசனைக் கூப்பிட்டுவிட்டு, அவனிடம் சொல்லு கிருன் · ' தசரதன் மகன் ராமன் என்பவனும் அவன் தம்பியும் பஞ்சவடியில் தங்கியிருக்கிருர்கள். அவர்கள் சூர்ப்பனகையை அவமானம் பண்ணி விட்டார்கள். வாளை யெடுத்து மூக்கையே அரிந்து விட்டார்கள். இதற்கு நாம் பழி வாங்காமல் தீராது. ராமனது மனைவி சீதை என்பவள் அவனுடன் வந்திருக்கிருள். அவளை எப்படியாவது தூக்கிக் கொண்டுவந்து, பழி வாங்கிவிடவேண்டும். அதற்காக நீ, வேஷம் பூண்டு அற்புதமான வடிவம் படைத்த மானுக வேண்டும். சீதைக்கு, மான்மேல் அபார பிரியம். உன்னைப் பிடித்துத் தர வேண்டு மென்று ராமனைக் கேட்பாள். அவனும் பிடிக்க முயல்வான். நம்முடைய காரியமும் சித்தியாய் விடும்.''

மாரீசனுக்கோ, இது ஆபத்தான காரியம் என்று தெரியும். விஸ்வாமித்திரர் யாகத்தில், மாரீசனும் அவன் தம்பியும் போய் இடையூறு செயதார்கள். ராமனது அம்பினுல் தம்பி சுபாகு இறந்தொழிந் தான். மாரீசன் மாத்திரம் எப்படியோ தப்பி ஓடி வந்துவிட்டான். இதனுல் ராமனதுவில் வலி இன்ன தென்று தெரியும் மாரீசனுக்கு. தானுக உடன்பட வில்லை; ராவணன் சொன்ன வார்த்தையை மறுத்துச்

சொல்ல இயலாமல், சரி தனக்குக் கெட்டகாலம் என்ற எண்ணத்துடனே ராவணன் சொன்னபடி செய்யப்போகிறுன்.

சந்தம்

தான தன
தன்னன தன்னன
தன்

மேல்நாள் அவன்
வில்வலி கண்டமை
யால்,

தாளு கஅ-
மைந்துச மைந்தில
ளுல்;

'மாளு குதி'
என்றவன் வாய்மொழி
யால்ப்

போளுன் மன-
மும்செய லும்புகல்
வாம். (251)

---

39. மேல் நாள - விஸ்வாமித்திரர் வேள்வியில். அவன வில் வலி கண்டமையால - ராமனது வில் வலியை நேர் அனுபவமாகக் கண்டிருந்த காரணத்தால். தாளுக அமைந்து சமைந்திலளுல்-தாளுக ஒப்புக்கொண்டு செயல் செய்ய உடன் பட்டவன் அல்ல. மான ஆகுதி என்றவன் - தன்னை மான் வேஷம் போடச் சொன்ன ராவணனது. வாய் மொழியால் போளுன - கட்டளையால்த்தான் உடன் பட்டுச் சென்றுன் மாரீசன். மனமும் செயலும் புகல்வாம் - அவனது மனப் பான்மையும் செயலும் இன்னது என்று சொல்லுவோம்.

40. தன் தம்பி சுபாகு என்ன, கரன் முதலிய சுற்றத்தார் என்ன, எல்லாரும் அழிந்ததுபற்றி மனம் உடைகிறான்.

வெம்சுற் றம்நி-
னைந்துகும்; வீரரை
வே(று)

அஞ்சுற் று,ம-
றுக்குறும்; ஆழ்குழி
நீர்

நஞ்சுற்(று) உறும்
மீனின்ந டுக்குறு
மால்;-

நெஞ்சுற் றதொர்
பெற்றி நினைப்பரி
தால்! (252)

41. மாரீசன் அபூர்வப் பிரகாசங்கொண்ட பொன் மானின் உருவத்தை எடுத்துக் கொண்டான். அந்த மானுக்குச் சமானமாக ஒன்றுமில்லாதபடி

---

40. வீரரை வேறு அஞ்சுற்று மறுக்குறும் — ராம லக்ஷ்மணர்களை எண்ணி இன்னும் என்ன என்ன செய்யப் போகிறார்களோ என்று அஞ்சி, நடுங்குகிறான ஆழ்குழி நீர் நஞ்சுற்றுறும மீனின நடுக்குறுமால் - ஆழ்ந்ததொரு குழியில் தங்கிய நீரில நஞ்சு கலக்கவும் அது காரணமாக அங்குள்ள மீன் பதைக்கிறது வேறு போக்கில்லாமல் அப்படிப் பதைக்கிறான மாரீசன். அவன் நெஞ்சுற்றதொர் பெற்றி நினைப்பு அரிதால் - அவன நெஞ்சுபட்ட பாட்டை நினைக்கவும் முடியாது.

பிரகாசிக்கிறது மேனி. அதனுடைய உருவத்தி லிருந்து மின் போன்ற கிரணங்கள் வீசி வானத்திலும் பூமியிலும் ஒளி பாய்கிறது. இத்தகைய மான் உருவங்கொண்டு சீதையை நாடிப் போகிருன் மாரீசன்.

தன்மா னம்இ-
லாத,த யங்கொளி
சால்

மின்,வா னமும்
மண் ணும்வி ளங்குற,
ஓர்

பொன்மான் உரு-
வங்கொடு போயின
ன்,—

நனமான் அனை
யாள்தனை நாடுறு
வான். (253)

---

41. தன் மானம் இலாத - தனக்கு ஒப்பில்லாத. தயங்கு ஒளி சால் மின் — மிக்க பிரகாசங் கொண்ட மின்னல் போன்ற கிரணங்கள். வானமும் மண்ணும் விளங்குற - வானத்திலும் பூமியிலுமே ஒளி செய்ய. ஓர் பொன் மான் உருவங் கொடு போயினன் — ஒரு அழகிய பொன்னிற மான் உருவத்தை எடுத்துக்கொண்டு போகிருன். நன் மான் அனையாள் தனை நாடுறுவான் - ஒரு பயமும் அறியாத நல்ல மானைப் போன்ற சீதையைத் தேடியவனுய்.

42. திவ்வியப் பிரகாசத்தோடு மாயமான் வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் சீதை ஆசிரமத்தை விட்டு வெளியே நடந்து போகிறாள்.

பொய்யாம் என
ஓதுபு றஞ்சொலி
னால்,

நையா இடை
நோவந டந்தன
ளால்,

வைதே கிதன்
வால்வளை மென்கைஎ
னும்

கொய்யா மல-
ரால்மலர் கொய்துறு
வாள். (254)

---

42. பொய்யாம் என ஓது புறஞ்சொலினால் — இது இடை அல்ல, ஏதோ பொய்த் தோற்றந்தான என்ற ஏளனச் சொல்லால். நையா இடை நோவ — மனம் நொந்ததால் இடையானது வருந்த. நடந்தனளால் — நடக்கும்போது இடை துவண்டு வந்தது அவ்வளவு அழகாக இருந்தது. நம்முடைய உணர்ச்சியை யெல்லாம் கவரும்படி அவ்வளவு அழகாக இருந்தது நடையும் இடையின் நெளிவும். வைதேகி — விதேக ராஜனது வம்சத்திலே பிறந்த சீதை. தன வால்வளை மென்கை எனும் — வளை அணிந்த மெல்லிய கையென்னும். கொய்யா மலரால் — கொய்யவே தோன்றும் ஆனால் கொய்ய இயலாத கையாகிய மலர். மலர் கொய்துறு வாள — மலர்களைக் கொய்கிறாள்.

குறிப்பு:— சீதை வெளியே வந்தாள். மலர் கொய்தாள் என்னும் அழகிய காட்சியை இசையிலேயே வைத்துத் தந்திருக்கிறார் கவிஞர். ரொம்பவும் அனுபவிக்க வேண்டிய செய்யுள் இது.

43. மாயமான் வந்து சீதை முன் நின்று விட்டது. அவளுக்கும் அதன்மேல் அபார ஆசை யுண்டாய் விட்டது. 'இதைப் பிடித்துத் தரச் சொல்வோம்' என்று பரபரப்புடன் நடக்கிறாள்.

நெற்றிப் பிறை –
யான்முனம் நின்றிட
னும், —

முற்றிப் பொழி
காதலின முந்துறு
வாள,

'பற்றித் தரு(க)
எனபன்'எ னப்பதை
யா,

வெற்றிச் சிலை
வீரனை மேவின
ளால். (255)

---

43. நெற்றிப் பிறையாள முனம் – பிறை போன்ற நெற்றியையுடைய சீதையின் முன்னிலையில். நின்றிடனும் – மாயமான் வந்து நிற்கவும். இல்லாத ஒரு ஆசையோடு முன்னே நடந்தாள். பற்றித் தருக என்பன் என – பிடித்துத்தா என்று சொல்வேன் என்று, பதையா – பரபரப்போடு, எங்கே ஓடி விடுமோ என்ற பயத்தில்,– வெற்றிச் சிலை ஏந்திய ராமனிடம் போயச் சேர்ந்தாள்.

## மானின் பின் போகிறான் ராமன்

44. "மான் ரொம்ப அழகாக இருக்கிறது. அதைப் பிடித்துத் தரவேண்டும்" என்று ராமனிடம் சீதை சொல்லுகிறாள். ராமனும் அதற்கு இசைந்த வனாய்ப் புறப்படுகிறான். அப்போது லக்ஷ்மணனுக்கு ஒரு சந்தேகமுண்டாகிறது.

"இதில் ஏதோ வஞ்சகமிருக்கிறது. மானுக்குப் பின்னால் பகைவர்கள் பலர் நிற்கவேண்டும். ஆதலால், யோசனை பண்ணித்தான் இந்த விஷயத்தில் பிரவேசிக்க வேண்டும். பகைவர் எத்தனை பேர் இருந்த போதிலும் குற்றமில்லை, நான் போய் அம்பு எய்து மானைக் கொண்டு வருகிறேன். மாய மானாய் இல்லாமலிருந்தால் பிடித்துக்கொண்டே வந்து விடுகிறேன்" என்கிறான்.

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

'அடுத்தன எண்ணிச்செய் தல்
அண்ணலே! அமைதிஅன் றே;

விடுத்(து)இதன் பின்நின்றார் கள்
பலருளர் எனினும்,விஸ லால்த்

44. அடுத்தன எண்ணிச் செய்தல — நம்மை அடுத்த காரியங்களை யோசனை பண்ணிச் செய்தல். அண்ணலே — ராமனே. அமைதி அன்றே — பொருத்தமான காரியமல்லவா. விடுத்து இதன்பின் நின்றார்கள் பலர் உளர் — முன்னே மானை விட்டுப் பின்னே நிற்கும் பகைவர் பலர் என்று தெரிய வேண்டும். எனினும் — எனாலும்.

தொடுத்தவெம் பகழிதூ வித்
தொடர்ந்தனென் விரைந்துசென் று

படுக்குவென், அதுஅன்று யின்
பற்றினென் கொணர்வென்'என் றான். (256)

45. லக்ஷ்மணன் சொன்ன வார்த்தை சீதைக்குப் பிடிக்கவில்லை. ஏதோ நாம் கேட்டது ராமனை. அவன் பிடித்துத்தர இணங்கி இருக்கிறான். இந்த வேளை லக்ஷ்மணன் வந்து அதிகப்பிரசங்கித்தனமாய் மான் அப்படி இப்படி, பொல்லாதது என்றெல்லாம் பேசுகிறான். அவன் மானைப் பிடித்துத் தந்தால் என்ன, தராமல் போனால் என்ன' என்று கடுங் கோபம் வந்துவிட்டது சீதைக்கு.

ஆயிடை அன்னம அன் னாள்,
அமு(து)உகுத் தனையசெய் ய

வாயிடை மழலையின் சொல்
கிளியினில் குழறிமாழ் கி,

---

44 தொடர்ந்தனென் விரைந்து சென்று – தொடர்ந்து வேகமாய்ப் போய். படுக்குவென் – கொன்றுவிடுகிறேன். அது அன்று ஆயின் – மாயமானாக இல்லாவிட்டால். பற்றினென் கொணர்வென் என்றான் – பிடித்துக்கொண்டு வருகிறேன், – என்றான் லக்ஷ்மணன்.

45. ஆயிடை - அந்த நேரத்தில அன்னம் அன்னாள் – அன்னப் பறவை போன்ற சீதையானவள். அமுது உகுத்தனைய – தேவாமிர்தத்தைக் கொட்டிய மாதிரி அவ்வளவு இனிமையாக. செய்ய வாயிடை மழலையின் சொல் – சிவந்த வாயிலிருந்து மழலைச் சொல்லை. கிளியினில் குழறி – கிளியைப் போலவே குழறி. மாழ்கி – மனம் நொந்தவளாய்.

'நாயக! நீயேபற் றி,
நல்கலை போலும்?' என் று —

சேயரிக் குவளைமுத் தம்
சிந்துபு சிதறிப்போ னாள். (257)

46. வீட்டிலுள்ள சாமான்யப் பெண் ஒருத்திக்கு ஒரு பொருளின்மேல் ஆசையிருந்தால் அதைத் திருப்தி செய்ய ஆடவர் எல்லோரும் இணங்குவார்கள். ஏன் ஒருவருக்கு முன் ஒருவராகப் போட்டி போட்டு முந்துவார்கள். உண்மை இப்படி யிருக்க ஜனக மகாராஜன் புத்திரியான சீதை, நாட்டை விட்டு, அரண்மனையை விட்டு, அருமைத் தாய் தந்தையரை விட்டு காலால் நடந்து, காட்டுக்கு வந்திருக்கிறாள். இது சாமான்ய காரியமா? நாயகனும் நாயகனைச் சேர்ந்தவர்களும் எவ்வளவோ

---

நாயக நீயே பற்றி நல்கலை போலும் என்று - நாயகனே நீயே பிடித்துக் கொடுகக மாட்டாயோ என்று சொல்லி. சேயரிக் குவளை முத்தம் - செவ்வரி படர்ந்த குவளைபோலும் கண்ணிலிருந்து, முத்துப்போலும் கண்ணீர்த் துளிகளை. சிந்துபு சிதறிப் போனாள் - தலையை ஒரு அசைப்பு அசைத்ததில் நாலாபக்கமும் கண்ணீர்த் துளிகள் சிந்திச் சிதறும்படியாக, அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாள்.

குறிப்பு :— பெண்களுடைய மன நிலையையும் - அவர்களுக்கு ஏற்படும் சலனம், கோபம் எல்லாவற்றையும் - அழகாய் வருணித்திருக்கிறது செய்யுளில். சீதையின உள்ளத்தையும் செயலையும் உற்று நோக்குவோமானால், உண்மையான உணர்ச்சி ஒன்று அபூர்வமான அழகோடு நடமாடுவதைச் செய்யுளில் பார்க்கலாம். தெவிட்டாத கவியுருவம் வாய்ந்தது செய்யுள்.

பாராட்ட வேண்டிய காரியம். அவளுடைய மனசுக்கு முரணாக நடக்கத்தான் தோன்றுமா! அவளிடத்தில் எவ்வளவு பரிவு ஏற்படும்?

ராமன் சீதையின் மனம் நொந்ததைப் பார்த்தான். உடனே, 'அந்த மானை நானே இதோ போய்ப் பிடித்து வருகிறேன்' என்று சொல்லி விட்டான்.

போனவள் புலவிநோக் கிப்
புரவலன், 'பொலன்கொள்தா ராய்!

மானிது நானேபற் றி
வல்லையின் வருவென்அன் றே,

கானியல் மயில்அன்னா ளைக்
காத்தனை இருத்தி' என் று,

வேல்நகு சரமும்வில் லும்
வாங்கினன் விரையல்உற் றான். (258)

---

46. போனவள் புலவி நோக்கி – கோபித்துப் போன சீதையின் வருத்தத்தைப் பார்த்து. புரவலன் – ராமன். பொலன் கொள் தாராய் – அழகு வாய்ந்த மாலையை அணிந்த லக்ஷ்மணனே. மான் இது நானே பற்றி – நீ சொன்ன மானை நானே பிடித்து. வல்லையின் வருவென் அன்றே – சீக்கிரத்தில் வருவேன் பார். கான் இயல் மயில் அன்னாளை – வனத்தோடு வனமாய்த் திரிகிற மயிலை ஒத்த சீதையை. காத்தனை இருத்தி என்று – காத்துக்கொண்டிருப்பாயாக என்று சொல்லி. வேல் நகு சரமும் வில்லும் வாங்கினன் – வேல் தானோ என்று சொல்லும்படியாக, அத்தனை பெரிய அம்பையும் வில்லையும் கையில் எடுத்தவனாய். விரையல் உற்றான் – வேகமாய்ச் சென்றான்.

47. ராமன் போவதை லக்ஷ்மணன் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் செய்ய இயலவில்லை. இருந்தாலும், ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் இந்த விஷயத்தில் என்று ஆத்திரத்தோடு சொல்லுகிறான்.

'விஸ்வாமித்திரர் யாகஞ் செய்தபோது, மூன்று அரக்கர்கள் வந்து எதிர்த்தது உனக்குத் தெரியும். இருவர் மாண்டு, ஒருவன் தப்பி ஓடினன் என்பதும் ஞாபகமிருக்கலாம். அப்படித் தப்பி ஓடினவன் தான் மாரீசன். அந்த மாரீசனே இந்த மானுக வேஷம் போட்டுக்கொண்டு வந்திருக்கிறான் என்று சந்தேகிக்கிறேன். இது உண்மை என்றே நீ தெரியப் போகிறாய்.''

'முன்னவன் மகவாய், வந்த
மூவரின் ஒருவன போனான்;
அன்னமா ரீசன என்றே
அயிர்த்தனென் இதனை; ஐய!

---

47. முன்னவன் மகவாய்-பெரியோனாகிய விஸ்வாமித்திரர் யாகத்திலே. மகம் – யாகம். மூவரின ஒருவன் போனான – மூன்று அரக்கர்களில் ஒருவன தப்பிப் போனான். அனன மாரீசன் எனறே அயிர்த்தனென் – அப்படித தப்பிப்போன மாரீசனே இந்த மான் வேஷம் பூண்டிருக்கிறான், என்று எண்ணுகிறேன. இதனை இனனமும் காண்டி – இந்த விஷ

இன்னமும் காண்டி'வாழி
ஏ(கு) 'என இருகைகூப் பிப்.

பொன்னனுள் புக்கசாலை
காத்தனன், புறத்துநின் றே. (259)

48. நடந்து போகும்போது ராமன் யோசனை செய்கிறுன்.

''லக்ஷ்மணன் நன்றுய் யோசனை செய்துதான் சொல்லுகிறுன். விஷயம் தெரியாமல் சீதை கோபித்துக்கொள்ளுகிறுள். இதற்கு நாம் என்ன செய்கிறது? தடுக்கமுடியாத காரியமாக அல்லவா இருக்கிறது! இது ஒரு வேடிக்கைதான்'' என்று தனக்குள்ளேயே சிரித்துக்கொள்ளுகிறுன்.

மந்திரத்(து) இளையோனசொன்ன
வாய்மொழி மனத்துக்கொள் ளா,-

சந்திரற்(கு) உவமைசான் ற
வதனத்தாள் சலத்தைநோக் கிச்,-

---

யத்தை நீ நன்றுகக் காணப் போகிறுய். வாழி ஏகு என — க்ஷேமமாய்ப் போய் வருவாயாக என்று. பொன் அன்னுள் புக்கசாலை - லக்ஷ்மி ஒத்த சீதை கோபத்தோடே புகுந்த சாலையை காத்தனன் புறத்து நின்றே — வெளியிலே நின்றவனுய்க் காத்துக்கொண்டிருந்தான், ராமன் போன திசையைப் பார்த்து இரு கை கூப்பியவனுய.

48. மந்திரத்து இளையோன் சொன்ன — யோசனையோடு கூடிய தம்பி சொன்ன. வாய்மொழி மனத்துக் கொள்ளா — ஆத்திரம் கொண்ட வார்த்தையை நன்றுய் அங்கீகரித்தவனுய்; (கொள்ளா—கொண்டு). சந்திரற்கு உவமை சான்ற— சந்திரனைப் பார்த்தால், அடடா, இதுதான சீதை முகமோ என்று சொல்லும்படியான, சலத்தை நோக்கி - முகத்திலுண்டான வருத்த பாவத்தைப் பார்த்து.

சிந்துரப் பவளச்செவ் வாய்
 முறுவலன், சிகரச்செவ் விச்
சுந்தரத் தோளினன், அம்
 மானினைத் தொடரல்உற் றான். (260)

---

48. சிந்துரப் பவளச் செவ்வாய் முறுவலன் — சிவந்த பவளம் போன்ற இதழ்களுக்குள் சிரிக்கிற பலவரிசை தோன்றியவனாய். சிகரச் செவ்விச் சுந்தர தோளினன் — மலைச்சிகரமே போலும் அழகிய தோளினனான ராமன், அம்மானினைத் தொடரல் உற்றான்.

குறிப்பு :— அரக்கர்கள் என்றால் அவ்வளவு அலட்சியம் ராமனுக்கு. அதனால்தான் காரியமாக லக்ஷ்மணன் சொன்னதைக் கேளாமல் சீதைக்கு வந்த கோபத்தைப் பார்த்துச் சிரிக்கிறான்.

## பர்ணசாலைக்குத் திரும்புகிறான்

49\. மான் நின்ற இடத்தை நெருங்கி விட்டான். மான் என்ன செய்கிறது?

மெல்ல மெல்லவே கால் எடுத்து வைக்கிறது. ஓட்டமில்லை. அப்படியே வெறித்துப் பார்க்கிறது. திடீர் என்று பயந்து நிலத்தைவிட்டு மேலே குதிக்கிறது. அடுத்தாற்போல் பயங்கொண்டதாய்க் காதை நிமிர்த்து நிற்கிறது. உடனே நாலு குளம்பையும் மார்போடு ஒட்டவைத்துக்கொண்டு மேலே துள்ளுகிறது. ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்துவிடுகிறது!

சந்தம்

தானன தானன தன
தானன தானன தன்

மிதித்தது மெல்லமெல் ல,
வெறித்தது, வெருவிமீ திக்

குதித்தது. செவியைநீட் டிக்
குரபதம் உரத்திக்கூட் டி

---

49\. குரபதம் உரத்தில் கூட்டி – நான்கு குளம்புகளையும் ஒன்றாய்ச் சேர்த்து மார்பில் ஒட்டியதாய்.

உதித்தெழும், ஊதைஉள் ளம்
என்றிவை உருவச்செல் லும், —

கதிக்கொரு கதியும்வே றே
காட்டிய(து) ஒத்ததன் றே. (261)

50. மான் வேறு என்ன செய்கிறது பார்க்கலாம்.

ஏதோ மறைந்ததாகத் தோன்றியது, திடீர் என்று ஒரு குன்றின் முகட்டில் நின்று, தனியாக விளங்குகிறது. உடனே அங்கு தவழ்ந்து நிற்கும் மேகத்துக்குள் பாய்கிறது. மலை முகட்டை ஒட்டியே நாமும் போனோமானால், அது மறைந்து விடுகிறது.

---

49. உதித்து எழும் — மேலே தாவும். ஊதை உள்ளம் என்று இவை உருவச் செல்லும் - வாயு வேகம் மனோ வேகம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள்; மானின் வேகத்தைப் பார்த்தால் அவைகளை ஊடுருவி (அவைகளுக்கு முன்னால் போய்) வெற்றி அடையும் என்று சொல்லத் தோன்றும். அப்படி வேகமாய்ப் போனது மான். கதிக்கு ஒரு கதியும் வேறே காட்டியது ஒத்தது அன்றே-வேகமாகிய தத்துவத்துக்கு வேறொரு தனியான வேகத்தை அந்த மான் காட்டிய மாதிரி இருந்தது.

குறிப்பு : மானின செயலையும், பறக்கிறதோ என்று சொலலும்படி பாய்ந்தோடும் வேகத்தையும், நேர் நேராகப் பார்த்து அனுபவித்திருந்தால்த்தான் இந்தக் கவியிலுள்ள விஷயங்கள் நமக்கு விளங்கும். கம்பர் அவைகளை ரொம்ப நன்றாய் அனுபவித்திருக்கிறார்.

சற்றே நாம் தாமதித்தால், இதோ பிடித்து விடலாம் என்று தோன்றும்படி நெருங்கி நிற்கிறது. நிற்கிறது போலவே நிற்குமானாலும் அப்படியே மறைந்தும் போய்விடும்.

குன்றிடை இவரும், மே கக்
  குழுவிடைக் குதிக்கும், கூ டச்

சென்றிடில் அகலும், தா ழ்ந்த்
  திண்டலாம் தகைமைத் தா கும்,

நின்றதே போல நீங் கும், -
  நிதிவழி நேயம் நீட் டும்

---

50. குன்றிடை இவரும்--படமெடுப்பதற்காகக குன்றின் மேல் தனித்து நினற மாதிரி நிற்கும் மேகக்குழு இடைக் குதிக்கும் - பக்கத்தில் தவழ்ந்து நிற்கும் மேகக் கூட்டத்தி னிடையே பாய்ந்துவிடும். கூடச் செனறிடில் அகலும்- மேகக் குழாத்தை விட்டு, வெளியே வந்ததும், நமக்கு அதோடு ஓடிப் போகத் தோன்றும். அப்படிப் போனால் ஏதோ புதருக்குள் மறைந்து போய்விடும். தாழ்ந்த் திண்ட லாம் தகைமைத்து ஆகும் – கலைந்து போய்விட்டதே என்று எண்ணிப் பின்வாங்கி நின்றாலோ, யாதொரு கலவரமும் இல்லாத மாதிரி, நம் பக்கத்திலேயே நிற்கும். ஏன், கையி னால் தடவிக் கொடுத்து விடலாம் என்பதுபோல் நிற்கும், நின்றதேபோல நீங்கும் – தொடும்படியாக நினறது உணமை தான். நின்றதில்க் குற்றமில்லை அயல்ப பக்கம் நம்முடைய முகம் கொஞ்சம் திரும்ப வேண்டியதுதான் தாமசம், மறு படி திரும்பிப்பார்த்தால்க் காணாமலே போய்விடும் நிதி வழி நேயம் நீட்டும் – காதலிருந்த போதிலும் அதை அப்படியே லகுவாய் மறந்துவிட்டு, பண மிருக்கிற திக்கை நோக்கிச் செல்லுகிற.

மன்றலங் கோதைமா தர்
மனம்எனப் போயிற்றம் மா! (262)

51. மாரீசன் இந்த விதமாகவெல்லாம் ராமனை அலைக்கழித்தான். கடைசியில் இதற்குமேல் செய்வதற்கு ஏமாற்றம் தன்னிடம் ஒன்றுமில்லை என்று எண்ணி விட்டான். பிடிக்கிறது என்கிற காரியம் இனிக் கிடையாது. அம்பை எடுத்துத் தன்னைக் கொல்லவே எத்தனிக்கிறான் ராமன் என்றும் முடிவு கட்டிவிட்டான்.

சந்தம்

தான தன்னன
தன்னன தன்னன

'பற்று வான்இனி
அல்லன்; ப கழியால்ச்

செறறு, வானில்ச்
செலுத்தலுற் றான்'என

---

50. மன்றலம் கோதை மாதா மனம் என – பூமாலையால் அலங்கரித்த அழகிய கூந்தல் கொண்டுள்ள வேசியர் மனம் என. போயிற்று அம்மா –நீங்கிவிட்டது.

குறிப்பு.— உண்மையும் பாவமும் பாட்டில் நிறைந்திருக்கின்றன. தெவிட்டாதபடி வாசித்து வாசித்து அனுபவிக்க வேணடிய பாட்டு.

51. பற்றுவான இனி அல்லன்–இனி நம்மைப்பிடிப்பது என்கிற காரியமில்லை என்று மாரீசன் நினைக்கிறான். பகழியால் செறறு – அம்பினால் நம்மைக் கொன்று. வானில்ச் செலுத்தல் உற்றான என – வானுலகத்துக்கு அனுப்பிவிட எண்ணுகிறான் என்று.

மற்(று)அம் மாய
அரக்கன்ம னக்கொளா,

உற்ற வேகத்தின்
உம்பரின் ஓங்கினன். (263)

52. அந்த க்ஷணத்தில்த்தானே, செங்காவி பூசிய ஒரு கொடிய அம்பை எய்தான் ராமன்.

அக்க ணத்தினில்
ஐயனும் வெய்யதன்

(சக்க ரத்தில்த்)
தகை(வு)அரி தாயதோர்

செக்கர் மேனிப்
பகழிசெ லுத்தினன்;–

புக்க தேகம்புக்(கு)
இன்னுயிர் போக்கென. (264)

---

51. மற்று அம்மாய அரக்கன மனக் கொளா – அந்த மாரீசன் நிச்சயங் கொண்டவனாய், உற்ற வேகத்தில்–அந்தப் பயங் காரணமாக ஏறபட்ட வேகத்தில், உம்பரின் ஓங்கினன்– ஒரு குதி குதிததான ஆகாயத்தில்,–தப்பி ஓடிவிட.

52. தன் சககரத்தில தகைவு அரிது ஆயதோர் – தடுத்தற்கரிய ஒரு. வெய்ய தன் செக்கர் மேனிப் பகழி செலுத்தினன் – கொடுமையான சிவநத நிறத்தோடு கூடிய அம்பை விட்டான், ஒரு வார்த்தை சொல்லிக்கொண்டு. புக்க தேகம் புக்கு – இந்த மான் தோலுக்குள புகுந்துள்ள அரக்கனது தேகத்துக்குள் புகுந்து இனனுயிர் போக்குஎன – .இதுவரைக காததுவந்த அருமையான உயிரைத் தீர்ப்பாயாக என்று.

குறிப்பு :– கடைசி அடியில ஒரு ஹாஸ்ய பாவம். அரக்கர்களைத் தொலைப்பது அவ்வளவு சாமான்யம் என்ற அலட்சியத்திலிருந்து வந்த ஹாஸ்யம்.

53. ராமனுடைய அம்பு நெஞ்சில் தைத் ததோ இல்லையோ, வாயைத் திறந்து ஒரு பெருங் கூக்குரல் இட்டான், மாரீசன்.

நெட்டி லைச்சரம்
வஞ்சனை நெஞ்சுறப்

பட்ட(து): அப்பொழு—
தேபகு வாயினல்

அட்ட திக்கினும்
அப்புற மும்புக

விட்(டு)அழைத்து, ஒரு
குன்றென வீழ்ந்தனன். (265)

54. மாரீசன் தன் சுயரூபத்தோடு பூமியில் விழுந்ததைப் பார்த்தான் ராமன்.

---

53. நெட்டிலைச் சரம — நீண்ட இலை முகத்தோடு கூடிய அம்பு. வஞ்சனை நெஞ்சுறப்பட்டது — மாரீசனது நெஞ்சில் அழுத்தமாயத் தைத்தது. அபபொழுதே பகு வாயினை — தைத்த மாத்திரத்திலேயே தன் அகன்ற வாயி ஞல். அட்டதிக்கினும் அப்புறமும் புக — எட்டுத் திசையிலும் அதற்கு அப்பாலுமே கேட்கும்படி. விட்டு அழைத்து — ஒரு கூக்குரலிட்டு அலறி. ஒரு குன்று என வீழ்ந்தனன் — ஒரு மலை விழுந்ததுபோல் விழுந்தான்.

''அடடா, இந்த மான் ஒரு அரக்கன்தான். இதில் மோசடி இருக்கிறதென்று லக்ஷ்மணன் சொன்னானே! எவ்வளவு துள்ளியமாகச் சொல்லி விட்டான்!''

வெய்ய வன், தன்
உருவொடு வீழ்தலும்,

செய்ய(து) அன்றெனச்
செப்பிய தம்பியை,

'ஐயன் வல்லன்! என்
ஆருயிர் வல்லன்! நான்

உய்ய வந்தவன்
வல்லன்!' என்(று)உன்னினான். (266)

---

54. வெய்யவன் தன் உருவொடு வீழ்தலும் — கொடிய சிந்தையோடு வந்த மாரீசன் (மான் வேஷம் அகல) சுயரூபத்தோடு கீழே விழவும். செய்யது அன்று எனச் செப்பிய தம்பியை — மோசடியான காரியம் என்று சொன்ன லக்ஷ்மணனை எண்ணினவனுப. ஐயன் வல்லன் — லக்ஷ்மணன் எவ்வளவு திறமை வாய்ந்தவன். என் ஆருயிர் வல்லன் — எனக்கு உயிருக்கு உயிரான லக்ஷ்மணன் எவ்வளவு அறிவாளி. நான் உய்ய வந்தவன் வல்லன் — என்னைக் காப்பாற்றும்படி உடன் வந்த லக்ஷ்மணன், அடடா, எவ்வளவு அறிவாளி என்று உன்னினான் - என்று எண்ணி வியந்தான்.

குறிப்பு :— அன்பும் வியப்பும் கலந்த பாவம் பின் இரண்டு அடிகளில் வெகு லாகவமாக வெளிவந்திருக்கிறது. உணர்ச்சி அபார வேகங்கொண்டதாய் இருக்கிறது.

55. அரக்கன் இட்ட கூக்குரல் திசைகளை முட்டும்படியாக அவ்வளவு உரத்த குரலோடு எழுந்தது.

ஆசை நீளத்(து)அ-
ரற்றினன் வீழ்ந்தஅந்

நீசன் மேனியை
நின்றுடன் நோக்கினுன்:

மாசில் மாதவன்
வேள்வியின் வந்தமா-

ரீச னே இவன்
என்பதும் தேறினுன். (267)

---

55. ஆசை நீளத்து - திசைகளை முட்டும்படியாக. அரற்றினன - அரற்றினவனுய் வீழ்ந்த அந்நீசன் மேனியை - கீழே விழுந்த அந்த அரக்கன் மேனியை. நின்று உடன் நோக்கினுன்-நினறு அப்படியே திகைத்தவனுய்ப் பார்த்தான். இனம் தெரிந்து கொணடான் ராமன். மாசில் மாதவன் வேள்வியின் வந்த - குற்றமற்ற விஸ்வாமித்திரர் யாகஞ் செய்தபோது வந்த. எனபதும் தேறினன் - என்றும் தெரிந்து கொண்டான்.

56. அப்போது ராமன் யோசிக்கிறன்: "என்னுடைய அம்பு இவன் மார்பில்த் தைத்ததும், ஒரு மாய வித்தையினல் என்னுடைய குரலிலேயே வாய் விட்டு ஒரு விதமாய்க் கூவினனே!"

'உழைத்த வாளி
உரம்புகப், புல்லியோன்

இழைத்த மாயையின்
என்குர லால்இசைத்(து)

அழைத்த துண்(டு), அது
கேட்(டு)அயர்(வு) எய்துமால்,

மழைக்கண் ஏழை!'என்(று)
உள்ளம்வருந்தினன். (268)

---

56. உழைத்த வாளி உரம் புக - வேதனையைக் கொடுக்கும் அம்பு மார்பில்த தைக்கவும். புல்லியோன் இழைத்த மாயையின் - இந்த அற்பன் செய்த மாய வித்தையால். என் குரலால் இசைத்து அழைத்தது உண்டு - என் குரல்போல் ஒலிக்கும்படியாக, குரலை மாற்றிக்கொண்டு, ஏதோ துணை வேண்டுமென்று கூவியமாதிரி அலறினன். அதுகேட்டு அயர்வு எய்துமால் - அப்படிக் கூவியதைக் கேட்டு மயங்கி வருந்துவாளே. மழைக் கண் ஏழை - நீர் மேகத்தின் நிறத்தை ஒத்த கண்ணையுடைய சீதை.

57. அதன் பேரில் ராமன் தனக்குள்ளேயே சொல்லிக் கொள்கிறான்.

'இந்த மான் மாரீசன்தான் என்று சரியானபடி முன்கூட்டியே தெரிந்துகொண்டான் லக்ஷ்மணன். அப்படியானால் என்னுடைய சக்தி இன்னதென்று தெரியாதா அவனுக்கு? சீதையின் மனம் தியங்காத படி பக்கத்தில் நின்று அவளைத் தேற்றிக்கொண்டு தானே இருப்பான்!'

> 'மாற்றம் இன்னது,
> மாயமா ரீசன்என் (று)
>
> ஏற்ற முன்உணர்ந்-
> தான்எனின், என்னுடை
>
> ஆற்றல் தேறும்
> அறவினன் ஆதலால்,
>
> தேற்று மால்,இளை-
> யோன்'எனத் தேறினன். (269)

---

57. மாற்றம் இன்னது — மாறுவேஷமான இது. மாய மாரீசன் என்று — மாயம் வல்ல மாரீசன்தான் என்று. ஏற்ற முன் உணர்ந்தான — வாய்ப்பாக முன்னமேயே தெரிந்து கொண்டான். எனின — இந்த விஷயத்தையே உணர்ந் திருக்கும்போது. என்னுடை ஆற்றல் தேறும் அறிவினன் — நிச்சயமாக என்னுடைய வித் திறந்தை அறிந்துதானே இருப்பான். ஆதலால் தேற்றுமால் இளையோன் — ஆகையினால் நிச்சயமாக லக்ஷ்மணன் சீதை பககத்தில் நின்றுகொண்டு தேறுதல் சொல்லிக் கொண்டிருப்பான், அவளை விட்டு விட்டு இங்கே வரமாட்டான்.

58. நடந்த விருத்தாந்தத்தைப் பார்த்தபோது, ராமனுக்குச் சில யோசனை தென்படுகிறது. "என்ன காரணத்தினாலோ இம்மாரீசன் உயிரைவிட இங்கு வந்திருக்கிறான். உயிர் விடுவது மாத்திரம் அல்ல அவனுடைய நோக்கம். வேறொரு மோசமான காரியத்தைச் சாதிப்பதும் இவன் நோக்கமாக இருக்கிறது. இவனுடைய கூக்குரலினால் ஏதோ கேடு விளையப்போகிறது."

'மாள்வ தேபொரு -
ளாகவந் தான்அலன்.

சூழ்வ தோர்பொருள்
உண்(டு),இவன் சொல்லினால்

மூள்வ(து) ஏதம்:
அதுமுடி யாமுனம்

மீள்வ தேநலம்'
என்றவன் மீண்டனன். (270)

---

58. சூழ்வதோர் பொருள் உண்டு - ஏதோ மோசடியான நோக்கமிருக்கிறது. இவன் சொல்லினால் மூள்வது ஏதம் - இவன் கூக்குரலினால் ஏற்படப் போவது ஒரு பெருங் கேடு. ஏதம் - கேடு. அது முடியா முனம் - அது பூர்த்தியாகிறதற்கு முன்பே.

## 7. சடாயு உயிர்நீத்த படலம்

### இதோ அக்கினியில் விழுகிறேன்

1. மாரீசன் பல்லைக் கடித்துக்கொண்டு குகை போன்ற வாயைத் திறந்து ஏங்கிய வார்த்தை சீதையின் காதில் பட்டது. அவ்வளவுதான்: ஏதோ குயில் ஒன்று, மரத்தின் உச்சியிலிருந்து விழுந்து நொந்ததுபோல் அலறினாள்.

சந்தம்

தான தன்னன
தன்னன தன்னன

எயிற லைத்து
முழைதிறந்(து) ஏங்கிய
செயிர்த லைக்கொண்ட
சொல்,செவி சேர்தலும்,–
குயில்த லத்திடை
வீழ்ந்ததோர் கொள்கையாள்,
வயி(று)அலைத்து
விழுந்துமயங்கினாள், (271)

---

1 எயிறு அலைத்து முழை திறந்து - பல்லைக் கடித்துக்கொண்டு குகைபோன்ற வாயைத் திறந்து. ஏங்கிய - உயிர்போவதான ஏக்கத்துடன் செயிர் தலைக் கொண்ட சொல் - அக்கிரமச் செயலை நோக்கமாகக் கொண்ட சொல். செவி சேர்தலும் - சீதையின் செவியில் பட்டதும். குயில் தலத்திடை வீழ்ந்ததோர் கொள்கையாள் - குயில் ஒன்று நிலத்தில் விழுந்து இறகைகளை அடித்துக்கொண்ட பான்மையளாய். வயிறு அலைத்து விழுந்து மயங்கினாள் - வயிற்றில் அடித்துக்கொண்டு மண்ணில் விழுந்து புரண்டாள்.

2. 'மானைப் பிடித்துத் தரவேண்டுமென்று சொல்லி நாயகனுக்குக் கேடு செய்துவிட்டேனே'' என்று புலம்புகிறாள்.

'பிடித்து நல்(கு)இவ்
உழையெனப் பேதையேன்

முடித்த னென்முதல்
வாழ்(வு)'என்று, மொய்அழல்

கொடிப்ப டிந்த(து)
என,நெடுங் கோளஅரா

இடிக்கு டைந்த(து)
எனப்புரண்(டு) ஏங்கினாள். (272)

3. சீதைக்கு உண்டான துயரம் பயம் ஆகிய இரண்டின் காரணமாக, லக்ஷ்மணனைப் பார்த்துப் பேச ஆரம்பிக்கிறாள்.

'குற்றம் வீந்த
குணத்தின்எங் கோமகன,

மற்றை வாள்அரக்-
கன்புரி மாயையால்,

---

2. மொய் அழல் கொடிப் படிந்தது என - நெருங்கிய அக்கினியில்ப் பூங்கொடியொன்று வதங்குவது போலவும். நெடுங்கோள அரா இடிக்கு உடைந்தது என - பெரிய பாம்பு ஒன்று தலையில் இடி விழ அதுகாரணமாக இப்படியும் அப்படியுமாகத் துடித்துப் புரள்வது போலவும், புரண்டு ஏங்கினாள்.

3. குற்றம் வீந்த குணத்தின் எம் கோமகன் - குற்றம் என்பதே இல்லாதவன் அல்லவா என் நாயகன். வாள் அரக்கன் புரி மாயையால - அந்த முரட்டு அரக்கன் செய்த மாய விதத்தையால்

இற்று வீழ்ந்தனன்
என்னவும, என் அயல்

நிற்றி யோ? இளை
யோய்ஒரு நீ!' என்றாள். (273)

4. லக்ஷ்மணன் சீதையினுடைய பதைபதைப்பைப் பார்த்து இரக்கங் கொண்டவளுய்ச் சொல்லுகிறான்:

''உலகத்தில் வீரர் என்று சொல்லுகிறவர்களைப் பார்த்தால், ராமனுக்கு எதிரில் எல்லாரும் சாமான்யப் பட்ட வெறும் ஆட்கள்தான். ராமனை வெல்லுவதற்கு உலகத்தில் வேறொருவர் உண்டா?

சந்தம்

தானன தானன
தான தன்னன

'எண்மையார் உலகினில்
இராமந்(கு), ஏற்றமாம்

திண்மையார் உளர்எனல்
செப்பல் பாலதோ?

---

3. இற்று வீழ்ந்தனன என்னவும் — வலி அற்று விழுந்து விட்டான நாயகன் என்பதைத் தெரிந்தும். என்அயல் நிற்றியோ இளையோய் ஒரு நீ - என் பக்கத்திலேயே நின்று கொண்டிருப்பாயா, நீயும் ஒரு மனுஷனு.

4. எண்மையார் உலகினில — வீரத்தில் எளிமைப்பட்ட உலகத்தில். இராமற்கு ஏற்றமாம் — ராமனுக்கு ஒப்பான. திண்மையார் உளர் எனல் — வீரம் பொருந்தியவர்கள் உண்டு எனல். செப்பல் பாலதோ — வெளியில் எடுத்துச் சொல்லக்கூடிய காரியமா.

பெண்மையால் உரைசெயப்
பெறுதி ரால்' என

உண்மையான் அனையவட்(கு)
உணரக் கூறினன். (274)

5. மேலும் சொல்லுகிறான் லக்ஷ்மணன்: "அரக்கர்களுக்கு ராமன் வலியற்றவனாகிறதுண்டோ? அந்த அரக்கர்களால் இடுக்கண் நேரிடுகிறதும் உண்டோ? அப்படியே நேரிட்டாலும் துணை வேண்டுமே என்று அழைக்கிறதும் உண்டோ? அப்படி அழைக்கிறது என்று ஏற்பட்டால், அதற்குள் பேர் அண்டங்களே தகர்ந்து போகும். பிரமன் முதலிய சகல உயிர்களும் தீர்ந்து போகும் அல்லவா? ஏன் உமக்கு இந்தக் கலவரம்?"

'இடைந்துபோய் நிசிசரற்(கு)
இராமன் எவ்வம்வந்(து)

அடைந்தபோ(து) அழைக்குமே:
அழைக்கு மீர் எனின்,

---

4. பெண்மையால் உரைசெயப் பெறுதிரால் – இராமனுடைய வீரத்தை அறிகிறதற்குப் பெண்களுக்குச் சந்தர்ப்பம் ஏது, அது காரணமாகத்தான் நீ இப்படிச் சொல்லுகிறாய். உண்மையான் – ராமனது வீரத்தை உண்மையில் உணர்ந்த லக்ஷ்மணன். அனையவட்கு உணரக் கூறினன் – அந்தச் சீதைக்கு மனசில் பதியும்படியாகவே சொன்னான்.

5. இடைந்து போய் நிசிசரற்கு – அரக்கர்கள் எதிர்த்து அதுகாரணமாக வலிகெட்டு. ராமன் எவ்வம் வந்து அடைந்தபோது அழைக்குமே–துன்பம் வந்து அடைந்தபோது

மிடைந்தபேர் அண்டங்கள்
மேல கீழன

உடைந்துபோம், அயன்முதல்
உயிரும் தீயுமால்!' (275)

6. லக்ஷ்மணன் இன்னும் வாதாடுகிறான்'' விரிவாக வேறு என்ன சொல்லக் கிடக்கிறது எனக்கு? வில்வித்தையில் கை தேர்ந்து பண்பட்டவனான

---

ராமன் கூக்குரல் போடுகிறதும் உண்டாம்? அழைக்குமாம் எனின் — அப்படியும் கூக்குரல் போடுகிறது ஏதோ உண்டென்று வைத்துக் கொள்வோமானால். மிடைந்த பேர் அண்டங்கள் — ஆகாயத்தில் நெருங்கிக் கிடக்கிற பேர் அண்டங்கள் எல்லாம் மேலகீழன - வான் முகட்டிலானாலும் பாதாளத்திலானாலுஞ்சரி. உடைந்து போம் - தகர்ந்து போம். அதுமாத்திரம் அல்ல. அயன் முதல் உயிரும் தீயுமால்- பிரமனும், அவனால் ஆக்கப்படும் உயிர்வர்க்கங்களும், வெந்து அழிந்து போம்.

குறிப்பு:— ராமனது வில்த்திறத்தையும் வீரத்தையும் ரொம்பவும் அனுபவித்தவன் லக்ஷ்மணன். அரக்கர்களால் ராமனுக்கு ஏதேனும் அபாயம் நேரிடும் என்பது எந்த விதத்திலும் இயலாத காரியம் என்பது தெரியும்: இந்த உறுதி பாவம் செய்யுளில்ப் பிறக்கிறது.

கம்பர் காலத்தில வில்த்திறத்தால் சாதிக்கக் கூடிய காரியம் வேறொன்றாலும் சாதிக்க முடியாததுதான். தமிழ் நாட்டில்க் கண்ட கம்பரது அனுபவம் இது.

ராமன் அம்பை எய்தான், அந்த அம்பு பாய்ந்த அரக்கன் கூக்குரலிட்டிருக்கிறான்; அவ்வளவுதான்.''

'பரக்களன் பகர்வது,
பகழி பண்ணவன்

துரக்க, அங்(கு) அதுபடத்
தொலைந்து சோர்கின்ற

அரக்கன்அவ் உரைஎடுத்(து)
அரற்றி னான்:அதற்(கு)

இரக்கமுற்(று) இரங்கலிர்;
இருத்திர் ஈண்(டு)' என்றான். (276)

7. மிக்க ஆத்திரத்தோடு லக்ஷ்மணன் சொன்னான். சீதைக்கோ மனசிலப் படவில்லை அது. கோபந்தான் மூண்டது தன்னைக் கொலைக்கு உள்ளாக்கின மாதிரிக் கஷ்டததுக்கு உள்ளாகிவிட்டாள்; உள்ளம் எப்படியெல்லாமோ கொதிக்க ஆரம்பித்துவிட்டது.

ஏனறவன் இயம்பலும்
எடுத்த சீற்றத்தாள்,

கொன்றன இன்னலள்,
கொதிக்கும் உள்ளத்தள்,

---

6. பகழி – அம்பு. பண்ணவன் – ராமன். துரக்க – எய்ய. அங்கு அதுபட – அப்போது அது தைக்கவும் அரக்கன் அவவுரை எடுத்து அரற்றினான் – மாரீசன் அப்படிக் கூக்குரல் இட்டு அலறினான், அவ்வளவுதான், ராமனது சத்தமே அல்ல அது அதற்கு இரக்கமுற்று இரங்கலிர் – அந்தச் சத்ததுக்காகக் கிலேசமுறறு வருந்த வேண்டாம். இருத்திர் ஈண்டு என்றான் – இங்கேயே இருக்க வேண்டும் என்றான்.

'நின்றநின் நிலைஇது
நெறியிற்(று) அன்(று)'என
வன்தறு கண்ணினள்
வயிர்த்துக் கூறுவாள். (277)

8. காட்டுக்குள் பர்ணசாலை இருக்கிறது. பர்ண சாலை கட்டுவதில் லக்ஷ்மணன் ரொம்பவும் கைதேர்ந்தவன் என்பது தெரியும். பர்ண சாலையை எப்பொழுதும் துப்புரவாய் வைத்திருக்கிறான். அதோடு, சுற்றியுள்ள இடத்தையும் துப்புரவாக வைத்திருக்கிறான் என்பதை எடுத்துச் சொல்லவேண்டாம். காடு அடராதபடி செடிகளையும் ஆங்காங்கு வெட்டிப் பர்ண சாலைக்குச் சிறிது தூரத்தில் எரியவிடுவது வழக்கம். எப்பொழுதும்போல அன்றைக்கும செடி கொடிகளையெல்லாம் ஒரு மூலையில் குவித்து எரியவிட்டிருந்தான். அது ஒரு பெருங் காட்டுத் தீப்போல் விசாலமாகவும் அடர்ந்தும் எரிந்துகொண்டிருந்தது.

லக்ஷ்மணனிடம் கோபவெறி கொண்டவளாய்ப் பேசுகிறாள் சீதை - 'ஒரு நாள் பழகினாலே அன்பு ஏற்பட்டு அதற்காக உயிரை விடுவார்களே! உண்மை அப்படியிருக்க, மக்களில் ராமன் சாமான்யப் பட்டவனா? அவனைப் போல் வேறு மனுஷருண்டா? அவனுக்கு உயிராபத்து ஏற்பட்டுவிட்டது என்பதைத்

---

7. நின்ற நின் நிலை இது - லக்ஷ்மணா! ஒரு வருத்தமுமில்லாமல நிற்கிறாயே இந்த நிலையானது. நெறியிற்று அன்று - சன்மார்க்கத்தைச் சேர்ந்ததாக இல்லை என்று. வன் தறு கண்ணினள் - தாக்ஷிண்யம் சிறிதுமில்லாதவளாய். வயிர்த்துக் கூறுவாள் - ஒரே படியாய்ப் பகைத்துப் பேசுகிறாள்.

தெரிந்தும், யாதொரு கிலேசமும் இல்லாமல் இருக்கிருய். சரி சரி, வேறு என்ன எண்ணக் கிடக்கிறது?''

'ஒருபகல் பழகினர்
உயிரை சவராஸ்;

பெருமகன் உலைவுறு
பெற்றி கேட்டும்நீ

வெருவலை நின்றனை ;
வேறென்?' யான்இனி

எரியிடை வீழ்ந்(து)உயிர்
துறப்பல் சண்(டு)'என. (278)

---

8. பெருமகன் உலைவுறு பெற்றி – ராமனுக்கு உயிர் போகும் நிலையை. கேட்டும் - அவனுடைய கூக்குரலைக் கேட்டும். வெருவலை நின்றனை – பயங் கொள்ளாது நிறகிருய். வேறு என் – சரி சரி உன்னைப்பற்றி வேறே என்ன நினைக்க இருக்கிறது யான் இனி எரி இடைவிழ்நது உயிர் துறப்பல – இனிமேல் எனக்கு என்ன இருக்கிறது. இதோ எரிந்து கொண்டிருககிற நெருப்பில் விழுந்து உயிரை இந்த க்ஷண மே விட்டு விடுகிறேன் என்று சொலலிககொண்டு தானே.

குறிப்பு·— வேறு என் : சீதைக்கு ஏறபட்ட கைபற்ற நிலையில் அறிவு கலங்கியவளாய்ச் சொன்ன சொல் இது. 'உன்னுடைய எண்ணம் கெட்ட எண்ணம்' என்பதை வெகு நாகரிகமாகச் சொலலுகிற வார்த்தை இது. அடங்காத ஆங்காரத்தையும் சோகத்தையும் காட்டுகிற பாவம், 'வேறு என' என்ற வார்தனதயில்க் கிடககிறது. வார்த்தையோடு நிற்கவில்லை காரியம். வார்த்தைக்குள் கிடக்கிற உணர்ச்சி வேகம், செயலையும் நோக்கிச் செல்லுகிறது அதாவது, அக்கினிப் பிரவேசம் செயயவும் துணிந்து விட்டாள்.

## உள்ளே வரவேண்டும் என்று அழைக்கிறாள் சீதை

9. புகையும் சுவாலையுமாகச் சிவந்து எரிந்து கொண்டிருந்த நெருப்பைப் பார்த்து ஓடுகிறாள் சீதை.

சந்தம்

தானன தானன
தான தன்னன

தாமரை வனத்திடைத்
தாவும் அன்னம்போல்

தூமவெங் காட்(டு)எரி
தொடர்கின் றாள்தனைச்,

சேமவில்க் குமரனும்
விலக்கிச் சீறடிப்

பூமுக நெடுநிலம்
புல்விச் சொல்லுவான். (279)

---

9. தாமரை வனத்திடை தாவும் அன்னம்போல — செந்தாமரைக் காட்டுக்குள் உல்லாசமாக ஓடிப் புகும் அன்னம் போல தூம வெங் காட்டு எரி — புகையோடு காந்தி எரியும் சிவந்த நெருப்பை நோக்கி. சேம வில்க் குமரனும் — காப்பதற்காக வில்லைக் கையில் கொண்டிருந்த லக்ஷமணனும். விலக்கி — குறுக்கே விழுந்து விலக்கி. சீறடிப் பூமுக நெடுநிலம் — அவளுடைய சிறிய அடியான புஷ்பததின் முன்னே கிடந்த நெடுநிலத்தை. புல்லி — நிலத்தோடு நிலமாய்ப் படிந்து,— சொல்லுவான்.

குறிப்பு:— சரஸ்வதி கடாக்ஷம் என்றும், ஆங்கிலத்தில் 'இன்ஸ்பிரேஷன்' என்றும், கவி சம்பந்தமாகச் சொல்லுவதுண்டு. எரியிடை வீழ்ந்து உயிர் துறப்பல என்று சொன்னவுடன், 'தாமரை வனத்திடைத் தாவும் அன்னம் போல், தூமவெங்காட்டு எரி தொடர்கின்றாள்தனை' என்று சொல்ல வருகிறதென்றால், கடாக்ஷம்தான், இன்ஸ்பிரேஷன் தான்.

10. லக்ஷ்மணன் சொல்லுகிறான்: "இது என்னது, நீர் உயிரை விடவாவது? நீர் சொன்ன சொல் என்னைப் பயப்படுத்துகிறதே! உமக்கு மாறாக நான் ஒன்றும் சொல்லவில்லை, செய்யவில்லை. இது உறுதி. மனசிலுள்ள துயரத்தை நீக்கி இங்கேயே இரும். நான் இதோ போகிறேன்."

'துஞ்சுவ தென்னை! நீர்
சொற்ற சொல்லையான்

அஞ்சுவென்; மறுக்கிலென்;
அவலம் தீர்ந்(து) இனி

இஞ்சிரும்; அடியனேன்
ஏகு கின்றனென்;—

வெஞ்சின விதியினை
வெல்ல வல்லமோ?' (280)

11. சீதையை அங்கேயே விட்டு விட்டுப் போய்விடவா முடியும் லக்ஷ்மணனுக்கு?

---

10 துஞ்சுவது என்னை — உயிரை விடுகிறது என்ன காரியம்? வேண்டாத காரியமல்லவா. நீர் சொற்ற — நீர் சொன்ன. அவலம் — துன்பம். இஞ்சிரும் — இங்கேயே இரும். வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ — என்ன ஆங்காரம காட்டுகிறது விதி நம்மிடம்? அந்த விதியை வெல்ல முடியுமா சீதையைச் சமாதானப் படுத்துவதற்காக அந்த இடத்தை விட்டுப் போகவே துணிந்து விட்டான். போகிறேன் என்றும் சொல்லிவிட்டான். ஆனாலும் மனசு கேட்கவில்லை 'அடடா, விதி என்னபாடு படுத்துகிறது? அதை யாரால் வெல்ல முடியும்?' என்ற வார்த்தை அவனுக்குத் தெரியாமலே வாயைவிட்டு வருகிறது.

"இதோ போகிறேன்—அடடா, கேடானது எப்படி வந்து நம்மை வளைத்துக் கொள்கிறது! ராமனது ஆணையை நீர் மறுத்து என்னைப் போ என்கிறீர். நீர் இருக்கிறதை எண்ணினால் யாதொரு துணையு மில்லாத தனிமை அல்லவா?"

'போகின்றேன் அடியனேன்,
பொருந்தி வந்துகே(டு)

ஆகின்ற(து)! அரசன்தன்
ஆணை நீர்மறுத்(து)

ஏகென்றீர்! இருக்கின்றீர்
தனியிர்!' என்றுபின்

வேகின்ற சிந்தையான்
விடைகொண்(டு) ஏகினான். (281)

12. சீதையை விட்டுத் திரும்பியவனாய் நடக்கிறான் லக்ஷ்மணன்.

போகும்போது தனக்குள்ளேயே சொல்லிக் கொள்கிறான் · 'இங்கேயே இருக்கிறதென்றால் நெருப்பில் வீழ்ந்து இறந்துபோவாள் சீதை.

---

11. பொருந்தி வந்து கேடு ஆகின்றது – காலத்தை எதிர் பார்த்து உடன் வந்த கேடானது பொருந்திய காலம் வந்துவிட்டது என்று தொழில் செய்கிறது. இப்போது அரசன் தன் ஆணை நீர் மறுத்து ஏகு என்றீர் – இந்தக் காட்டில நமக்கு அரசனாயுள்ள ராமனது ஆணையை மறுத்து என்னைப் போ என்றீர். இருக்கின்றீர் தனியிர் – தனியாக இருக்கின்றீர். என்று பின் – என்று சொல்லிச் சிறிது தாமதித்து, மறுபடியும் ஒருதடவை, போகிறேன என்று சொல்லிக்கொண்டு போகிறான்.

ராமனைப் பார்த்துப் போகிறேன் என்று ஏற்பட்டாலோ, சாமான்யம் அல்லாத பெருங்கேடு வந்து தீரும் போலிருக்கிறதே!''

'இருப்பனேல் எரியிடை
இறப்ப ரால்இவர்;
பொருப்பனை யானிடைப்
போவெ னேயெனின்,
அருப்பமில் கேடுவந்(து)
அடையும்; ஆருயிர்
விருப்பனேன் என்செய்கேன்!'
என்று விம்மினான். (282)

13. சிறிது தூரம் போன லக்ஷ்மணன், மறுபடியும் சீதையிடம் திரும்பி வந்து சொல்லுகிறான். ''எப்படியும் நான் போய்விடுகிறேன். ஆனாலும், அபாயம் ஏதாவது நேர்ந்தால் சடாயு பார்த்துக் கொள்வான். தன்னால் இயன்ற மட்டும் தடுக்கவும்

12. பொருப்பனையானிடை – இந்த இடத்தைவிட்டு ராமனை நோக்கி அருப்பமில கேடு – சாமான்யமில்லாத கேடு. இருதலைக் கொள்ளி நிலையிலிருக்கும் எனக்கு என்ன செய்ய இருக்கிறது. இந்த அக்கினியில் விழுந்து உயிரை விடவேண்டியதுதான். ஆனால் ஏன் செய்யவில்லை? உயிரில் எனக்கு அவ்வளவு ஆசை. ஐயோ!

குறிப்பு:— ஒன்றுஞ் செய்ய இயலாது இருக்கும் போது, உயிரை விட்டு விடுதல் நல்லது என்றுதானே தோன்றும். லக்ஷ்மணனது மனசு துன்புறுவதைப் பளிங்கில் வைத்துக் காட்டுவது மாதிரி காட்டுகிறார் கவிஞர்.

செய்வான்'' என்று சீதையிடம் பணிவோடு தெரிவித்துவிட்டுப் போய்விடுகிறான்.

'போவது புரிவல்யான்;
புகுந்த(து) உண்டெனின்

காவல்செய் எருவையின்
தலைவன் கண்ணுறும,

ஆவது காக்கும் என்(று)
அறிவித்(து), அவ்வழி,

தேவர்செய் தவத்தினுல்ச்
செம்மல் ஏகினன். (283)

---

13. போவது புரிவல யான் – எப்படியும் போகிறேன் நான. ஆனாலும் ஒரு வார்த்தை. புகுநதது உண்டு எனின – அபாயம் ஏதாவது நேர்நதால். காவல் செய் எருவையின் தலைவன-நம்மைக் காததுக்கொணடே இருக்கிற, கழுகுகளுக் குத் தலைவனான சடாயு. கண்ணுறும் – பார்த்துக்கொள்வான் (தூரதிருஷ்டி உடைமையினால்). ஆவது காக்கும் எனறு அறிவித்து – வரும் ஆபததைத தனனால இயன்ற மட்டும் தடுப்பான என்று தெரிவித்து விட்டு. அவ்வழிச் செம்மல் ஏகினன – குறித்த வழியில் லக்ஷ்மணன் சென்றான்.

குறிப்பு.- சீதையைவிட்டுச் செல்லத்தான் தோன்றுமா என்ற கேள்விக்குக் காரணம் சொல்ல இயலாது: ஏதோ தேவர்கள் தவஞ் செய்தார்கள். அவர்களுக்காக ராவணனை வதம் செய்யவேண்டும், அப்படி வதம் செய்வதறகாகவே லக்ஷ்மணன் அந்த இடத்தை விட்டுச் செல்லும்படி செய் கிறது விதி, என்றுதான் சொல்லவேணடும்.

14. லக்ஷ்மணன் போய்விட்டான். எப்போது அவன் போவான் என்று சமயம் பார்த்த வண்ணமாய் இருந்தான் ராவணன். காரியத்தைச் சாதிப்பதற்காக அரக்கன் வருகிற வரத்தைப் பாருங்கள் :

இளையவன் ஏகவும்,
இறவு பார்க்கின்ற

வளையிற்(று) இராவணன்
வஞ்சம் முற்றுவான், –

மூளைவிரித் தண்டொரு
மூன்றும், முப்பகைத்

தளையரி தவத்தவர்
வடிவும், தாங்கினன். (284)

15. ராவணனுடைய வேஷம் மிக அதிசயிக்கத் தக்கதாகவே இருந்தது. நடிகக் கலையில் அவன் அபார சக்தி வாய்ந்தவனாய் இருந்திருக்கிறான். அபார திட காத்திரமாயுள்ள தேகத்தை ஒருவிதமாய் ஒடுக்கி,

---

14. இளையவன் ஏகவும் – லக்ஷ்மணன் அந்த இடத்தை விட்டுப் போகவும் இறவு பார்க்கின்ற– லக்ஷ்மணன் நீங்கும் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த. (இறவு–நீங்குதல்). வளையிற்று இராவணன் – வளைந்த பலலையுடைய ராவணன். வஞ்சம் முற்றுவான் – வஞ்சனையான தன் காரியத்தைச் சாதிக்கும் பொருட்டு. மூளை விரி தண்டு ஒரு மூன்றும் – இளம் மூங்கில் தண்டு மூன்றைக் கட்டிக் கையில் ஏந்தியவனாய். முப்பகைத் தளை அரி தவத்தவர் வடிவும் – காமம் வெகுளி மயக்கம் ஆகிய மூன்று பகையாகிய கட்டுக்களை அரிந்த சன்னியாசிகளின் வேஷமும், – தாங்கினன்.

ஏதோ நெடுநாளாகப் போதுமான ஆகாரமில்லாமல் உடல் மெலிந்ததாகத் தோற்றுகிறான். வெகுதூரத்திலிருந்து நடந்துவந்த காரணமாக ஏற்படும் வருத்தத்தையெல்லாம் நடிக்கிறான். ஆனால் நடிப்பென்று யாருமே சொல்லமுடியாது. உண்மை பாவம் அவ்வளவிருக்கிறது

ஊண் இல னும்என
உலர்ந்த மேனியன்,

சேண்நெறி வந்ததோர்
வருத்தச் செய்கையன்,

பாணியின் நடத்திடைப்
படிக்கின் றான்என,

வீணையின் இசைபட
வேதம் பாடுவான். (285)

---

15. ஊண் இலனும் என — போதுமான ஆகாரம் நெடு நாள் இல்லாதவன் போல. சேண் நெறி வந்ததோர் வருத்தச் செய்கையன்-வெகு தூரத்திலிருந்து வந்த களைப்பை மெய்ப்பாடுகளினால் காட்டுகிறான். பாணியின் நடத்திடை — தாளத்தோடு கூடிய நடனம் ஒன்று நடக்க, அதனிடை படிக்கின்றான் என்று தோன்றும்படியாக. வீணையின் இசைபட — வீணையின் இசையும் ஒத்து பாவங்களைக் காட்டி வாசிக்க. வேதம் பாடுவான் - பக்தி மயமாகப் பாடல்களைப் பாடிக் கொண்டு வருகிறான்.

குறிப்பு — ஆயிரக்கணக்கான . வருஷங்களாகத் தமிழ் நாட்டுக் கோயில்களில் அபூர்வமான பக்தி பாவங் கொண்ட நடனத்தோடு பாடலைப் பாடி வந்திருக்கிறார்கள். அவை கம்பருடைய மனக்கண்முன் சதா நிற்பவை.

*16.* சவுக்க தாளத்தில் பாடிக்கொண்டு வந்த தால், நடையும் அந்தத் தாளத்தை ஒட்டியே ரொம்பவும் மெதுவாக நிகழ்கிறது. புஷ்பம் எப்படி மெதுவாக மலர்கிறதோ அவ்வளவு மிருதுவாய் இருந்தது நடை. ஆனல், பூமியில் பட்டதும் காலே உடனே எடுத்து வைக்கிருன், தாளத்தோடு ஒட்டு வதற்காக.

பூப்பொதி அவிழ்ந்தன
நடையன், பூதலம்

தீப்பொதிந் தாம்என
மிதிக்குஞ் செய்கையன்,

காப்பரு நடுக்குறுங்
காலன், கையினன்,

மூப்பெனும் பருவமும்
முனிய முற்றினன். (286)

---

அப்படி அனுபவித்த பக்தி மயமான பாடலகளேயும் அபி நயங்களேயும் ராவணன் மூலமாகச் சித்தரித்துக் காட்டுகிருர். தமிழ் நாட்டு இசைக்கலே உணமையான பாவம் நிறைந்த தெனறு செய்யுளில்த் தெரிகிறது.

*16.* பூப்பொதி – பூமொட்டு. பூதலம் தீப்பொதிந் தாம் என - பூமியானது ஏதோ தியால் மூடப்பட்டிருக்கிறது என்று சொல்லும்படி யிருநதது அவன் மிதிக்குஞ் செயல். காப்பு அரும் நடுக்குறும் காலன் கையினன - எவ்வளவு முயன்ருலும் தடுகக முடியாதபடி யிருந்தது, காலின் நடுக்க மும் கையின் நடுககமும். மூப்பு எனும் பருவமும் முனிய முற்றினன் - மூப்பின் அதிதேவதையே வெறுச்கும்படி யிருந்ததாம், நரை திரை தளர்ச்சி யெல்லாம்.

17. தவத்துக்குரிய மாலைகளை அணிந்திருக்கிறான். தாமரை மணி துளசி மணி ருத்திராக்ஷ மணி இவைகளாலான மாலைகளை அணிந்திருக்கிறான். தியானம் செய்வதற்காக ஒரு ஆசனம் எடுத்து வருகிறான்.

தாமரைக் கண்ணொ(டு)ஏர்
　　தவத்தின் மாலையன்,

ஆமையின் இருக்கையன்,
　　வளைந்த ஆக்கையன்,

நாமநூல் மார்பினன
　　நணுகி னான்அரோ!

தூமனத்(து) அருந்ததி
　　இருந்த சூழல்வாய். (287)

17. தாமரைக்கண — தாமரைமணி. ஏா தவத்தின் மாலையன் — தவத்துக்குரிய அழகிய மாலை அணிந்திருக்கிறான். ஆமையின் இருக்கையன — ஆமை ஓட்டை ஆசனமாக எடுத்து வருகிறான் நாம நூல மார்பினன — பூணூலை அணிந்திருக்கிறான். தூ மனத்து அருந்ததி இருந்த சூழல் வாய் — பரிசுத்தமான அருந்ததியை ஒத்த சீதை இருந்த இடத்துக்கு. நணுகினான் அரோ — வந்தே விட்டான்.

குறிப்பு :— வனத்துள் வாழும் தவத்துக்குத் தக்கவாறாகவே மாலையும் ஆசனமும் கைக்கொண்டிருக்கிறான் ராவணன்

18. புனிதமான பர்ணசாலையின் வாசலை அடைந்தான். ஏதோ குழறி நடுங்கிய சொல்லோடு கேட்டான்· 'இந்த வீட்டிலிருப்பவர் யார்?'' என்று.

தோமறு சாலையின்
வாயில்த் துன்னினன்,

நாமுதல்க் குழறிட
நடுங்கு சொல்லினன்,

'யாவிர்இவ் இருக்கையுள்
இருந்து ளீர்' என்றான்,—

தேவரும் மருள்கொளத்
திரிந்த மேனியான். (288)

---

18. தோமறு சாலையின — புனிதமான பர்ணசாலையின். தோம் — குற்றம் வாயிலத் துன்னினன் — வாசலை அடைந்தவனாய். நாமுதல் குழறிட — இசையிலும் பேச்சிலும் திருந்திய நாவானது வேண்டுமென்று குழறவும். நடுங்கு சொல்லினன் — நடுங்கிய சொல்லினனாய். யாவிர் இவ இருக்கையுள் இருநதுளீர — இந்த வீட்டிலிருக்கிறது யார். தேவரும் மருள் கொளத் திரிந்த மேனியான் — தேவர்கள் மேலே இருந்து சதா ராவணனைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவன வேஷம் போடுகிறதையும் பார்த்துக் கொணடுதான் இருக்கிறார்கள். ஆனாலும் இனங் கணடுகொள்ள முடிய வில்லை. அவ்வளவு மாறுபாட்டை உணடாக்கி விட்டது. தேவர்களுக்கே இவ்வளவு ஏமாற்றம் என்றால், மற்றவர் களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

19. அந்தச் சமயத்தில் சீதை அங்கு வருகிறள். வந்துகொண்டிருந்த சன்னியாசியைப் பார்த்துப் பரி சுத்தமான சிந்தனை உள்ளவன் என்றும், குற்றமற்ற நோன்புடையவன் என்றுமே எண்ணுகிறள்.

தோகையும் அவ்வழித்,
தோமில் சிந்தனை,

சேகறு நோன்பினர்,
என்னும் சிந்தையாள்;

பாகியல் கிளவியாள்
பவளக் கொம்பர்போன்(று)

'ஏகுமின் ஈண்(டு)' என
எதிர்வந்(து) எய்தினள். (289)

20. சீதையைக் கண்ட மாத்திரத்தில், ராவண னுக்கு ஒரு வெலவெலப்பே உண்டாய் விட்டது. மலைக்கே மதம்பொழிதல் ஏற்பட்ட மாதிரி, மேனி யெல்லாம் வியர்வை கொட்டுகிறது. மனசு ஆசைக்

---

19. தோகையும் அவ்வழி–சீதையும் அந்தச் சமயத்தில். தோமில் சிந்தனை சேகறு நோனபினர் – குற்றமற்ற மனமும், குற்றமற்ற நோன்பும் உடையவன் எனனும் அபிப்பிராயம் கொண்டவளாய். பாகியல கிளவியாள – தேன் போலும் இனிய சொல்லை உடைய சீதை. பவளக் கொம்பர் போன்று– பவளக் கொடியில் புஷ்பங்கள் பூத்திருந்ததுபோல். எதிர் வந்து எய்தினள் – சன்னியாசிக்கு எதிரே வந்தாள். ஏகுமின் ஈண்டு என – இங்கே வாருங்கள் என்று சொல்லிக்கொண்டு.

கடலாய் மாறிவிட்டது. அந்த ஆசைக் கடலில் கூட்டங் கூட்டமாகக் காதல் அலைகள் எழுந்து புரள்கின்றன.

வெற்பிடை மதமென
  வியர்க்கு மேனியன்,

அற்பினத் திரைபுரள்
  ஆசை வேலையன்,-

பொற்பினுக்(கு) அணியினைப்
  புகழின் சேக்கையைக்

கற்பினுக்(கு) அரசியைக்
  கண்ணின் நோக்கினன். (290)

21. குயில் போன்ற சீதையின் சொல் அவன் காதில் விழுந்தது முதலில், பிறகு, எங்குமில்லாத அவளது அழகு அவன் கண்ணுக்குத் தென்பட்டது.

---

20. அற்பு இனத் திரை புரள் - காதலாகிய கூட்டமான அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து புரளும். பொற்பினுக்கு அணியினை - அழகுத் தெய்வம் தனக்கு அலங்காரமாக அணிந்து கொள்ளக் கூடிய சீதையை. புகழின் சேக்கையை - பெண் தன்மையைப் புகழ்கிறதென்றால சீதையைத் தான் புகழவேண்டும். அந்தப் புகழுக்கு யாதொரு பழுதும் ஏற்படாது. ஆம், கவலையில்லாமல் புகழ் அவளிடம் பொருந்தியிருக்கலாம். சேக்கை - படுக்கை.

காமுகனாய் நின்ற ராவணனுடைய மனநிலையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

தூங்கலின் குயில்கெழு
சொல்லின், உம்பரும்

ஓங்கிய அழகினாள்
உருவங் காண்டலும்,

ஏங்கினன் மனநிலை
யாதென்(று) உன்னுவாம்;-

வீங்கின மெலிந்தன
வீரத் தோள்களே, (291)

22. தனக்குள்ளேயே சொல்லிக் கொள்கிறான் ராவணன்:

---

21. தூங்கலின் குயில கெழு – ஸ்வரம் மேலும் கீழும் ஏறி இறங்குகிற குயிலை ஒத்துப் பேசும் உம்பரும் ஓங்கிய அழகினாள் - தேவலோகத்திலும் ஒப்பற்று உயர்ந்தது என்று சொல்லும்படியான அழகிய சீதையின் ஏங்கினன் – ஒரே ஏக்கம் கொண்டவனான ராவணனது. மனநிலை யாதென்று உன்னுவாம் - மன நிலையை இப்படி யென்று எடுத்துச்சொல்ல முடியாது, நினைக்கவே முடியாது. ஆனால் அவனுடைய தோள்களின் மூலம் தெரியவருகிறது. மலை போல் பருத்திருந்த தோள்கள் அப்படியே மெலிந்துவிட்டன.

''தாமரை மலரைவிட்டு இங்கே வந்தமாதிரி இருக்கிறது இவளுடைய அழகைப் பார்த்தால்.''

'சேயிதழ்த் தாமரைச்
சேக்கை நீர்ந்(து)இவண்

மேயவள் மணிநிற
மேனி காணுதற்(கு)

எயுமே இருப(து)இங்(கு)—
இமைப்பில் நாட்டங்கள்

ஆயிரம் இல்லை' என்(று),
அல்லல் எய்தினன். (292)

23. ''சரி, சரி. தேவர்களும் அவுணர்களும் தங்கள் மனைவிமார்களுமாக இவளுக்கு ஏவல்

---

22. சேயிதழ்த தாமரைச் சேக்கை நீர்ந்து - செந்தாமரையில் தங்குவதை விட்டுவிட்டு. இவண்மேயவள் — இங்கே வந்துள்ள இவளது. மணிநிற மேனி காணுதற்கு - பவள மேனியைக் கண்டு கண்டு களிப்பதற்கு. எயுமே - போதுமோ. இருபது இமைபபில் நாட்டங்கள - இமை கொட்டாத கண்கள் ஏதோ இருபது போதுமோ அடடா. ஆயிரம் இலலை - நமக்கு ஆயிரங் கண்ணில்லையே என்று. அல்லல் எய்தினன் - வருந்தினன்

செய்யப் போகிறார்கள். சக்கரவர்த்தினியாயிருந்து மூன்றுலகத்தையுமே இவள் ஆளப்போகிறாள்.''

'தேவரும் அவுணரும்
தேவி மாரோடும்

கூவல்செய் தொழிலினர்
குடிமை செய்திட,

மூவுல கம்இவர்
முறையின் ஆள,யான்

ஏவல்செய்(து) உய்குவென்
இனி'என்(று) உன்னினான். (293)

24. ராமன் காரணமாகக் கிலேச முற்றிருக்கிறாள் சீதை என்பது அவனுக்குத் தெரியும். போதாததற்கு லக்ஷ்மணனையும் வேண்டாதபடி கோபித்துப் பேசியிருக்கிறாள். மனசில் கலக்கமும் துயரும் இருப்பது இயல்புதானே? மனசிலுள்ள துயரம் முகத்திலும் தெரிகிறது. முகத்திலுள்ள

---

23. கூவல்செய் தொழிலினர்-கூப்பிட்டபோதெல்லாம் குற்றேவல் செய்பவராய். குடிமை செய்திட - வீட்டோடு ஒட்டி வேலை செய்ய மூவுலகமும் இவர் முறையின் ஆள - மூவுலகத்தையுமே சக்கரவர்த்தினி பதவியிலிருந்து இவள் ஆள. யான் ஏவல் செய்து உய்குவென் இனி என்று உன்னினான்— நான் சும்மாவா இருக்கப் போகிறேன்? அவளுக்கு ஏவல் செய்து ஜன்ம சாபல்யம் அடையப் போகிறேன், என்றெல்லாம் நினைக்கிறான்.

துயர பாவத்தையும் கண்டு கொண்டான் ராவணன். அவன் எண்ணம் எப்படிப்போகிறது பாருங்கள்.

'உளைவுறு துயர்முகத்(து)
ஒளிஇ தாம்எனில்,
முளைஎயி(று) இலங்கிடு
முறுவல் என்படும்!
தளையவிழ் குழலிவள்க்
கண்டு தந்தஎன்
இளையவட்(கு) அளிப்பென்என்
அர(சு)'என் றெண்ணினான். (294)

---

24. உளைவுறு துயர் — உள்ளேயிருந்து துன்புறுத்திக் கொண்டிருக்கிற துயர் படர்ந்த. முகத்தின ஒளி இதாம் என்னில் — முகத்தின் பிரகாசமும் அழகும் இப்படி என்றால். முளை எயிறு இலங்கிடும முறுவல என்படும் — சின்னஞ்சிறு பற்கள் தெரிய புன்முறுவல் பூத்து விட்டால் அழகு எப்படியிருக்கும்! நூற்றையிட்டுப் பெருக்கவா, ஆயிரத்தையிட்டுப் பெருக்கவா! தளையவிழ் குழலிவள்க் கண்டு தந்த - பூவிதழ் சூடிய கூந்தலோடு கூடிய இவளை முதலிலே கண்டு பிறகு எனக்கு அளித்திட்ட — என் அருமைத் தங்கையான சூர்ப்பனகைக்கு என் அரசை அளித்து விடுகிறேன்.

குறிப்பு:— முந்தின செய்யுளில் சீதையின் அழகைப் பார்த்த வெறியில் ராஜ்யத்தைச் சீதைக்கே கொடுத்துவிடுகிறதாக எண்ணினான். இந்தச் செய்யுளில, நம்முடைய தங்கை அல்லவா, இத்தகைய பெண்ணை நமக்குத் தந்திருக்கிறாள், என்று ஒரு ஆனந்தவெறி உண்டாகிறது. இந்த ஆனந்த வெறியில் ராஜ்யத்தைத் தங்கைக்கே கொடுக்க வேண்டுமென்று எண்ணுகிறான். இதெல்லாம் உணர்ச்சி வெறியிலிருந்து உண்டாகும் இயல்பான வார்த்தைகள். இவைகளின் உண்மை பாவத்தைக் கவனிக்க வேண்டும். முரண்பாட்டை அல்ல.

25. இவ்விதமான எண்ணங்களோடு காத லானது மேலும் மேலும் மனசில் எழுந்து கொண் டிருக்கிறது அரக்கனுக்கு, சீதைக்கு என்ன தெரியும்? விருந்தினர்களை உபசரிக்கும் முறைப்படி, தனக் குள்ள துயரத்தை மறைக்கிறாள் அவள்.

ஆண்டையின், அனையன
உன்னி ஆசைமேல்

மூண்டெழு சிந்தனை
முறையி லோன் தனைக்

காண்டலும, கண்ணின் நீர்
துடைத்த கற்பினள்,

'ஈண்டெழுந்(து) அருளும்' என்(று)
இனிய கூறினாள். (295)

---

25 ஆண்டையின் – அந்த வேளையில். அனையன உன்னி – மேலே சொன்னபடி யெல்லாம் எண்ணி. ஆசை மேல் மூண்டெழு – காதல் எண்ணம் மேலும் எழுந்து கொண்டிருக்கும். சிந்தனை – சிந்தனையுடையவனை. முறையி லோன் – ஒழுங்கீனனான ராவணனை. ஈண்டு எழுந்து அருளும் என்று இனிய கூறினாள் – இங்கே தயவுசெய்து வரவேண்டும் என்று இனிய பண்புடனேயே சொன்னாள். – நாயகன் காரணமாக மனசிலுள்ள துயரத்தை மறைத்தவளாய்.

**26** பக்தி பூர்வமான பாடலை அல்லவா உணர்ச்சி பாவந்தோன்றப் பாடிக்கொண்டு வந்திருக்கிறான். அதைக்கேட்ட சீதைக்கு அபார மரியாதை உண்டானதில் அதிசயம் இல்லை. அதனால், முனிவனை ரொம்பவும் பாராட்டுகிறாள். அவன் பர்ணசாலைக்குள் வரவும், "இங்கே உட்கார்ந்தருளவேண்டும்" என்று பிரம்பினால் செய்த பாய் ஒன்றை மிக்க மரியாதையோடு விரித்தாள்.

சந்தம்

தானன தானன
தான தன்னன

ஏத்தினள், எய்தலும்
'இருந்திர் ஈண்(டு)'என

வேத்திரத்(து) ஆசனம்
விதியின் நல்கினாள்,—

மாத்திரி தண்(டு)அயல்
வைத்து வஞ்சனும்,

பூத்தொடர் சாலையின்
இருந்த போழ்தினே. (296)

---

**26.** ஏத்தினள் — வந்த முனிவனை ரொம்பவும் பாராட்டிப் பேசினாள். (அவன்) எய்தலும் - பர்ணசாலையண்டை வரவும் இருந்திர் ஈண்டு என - தயவுசெய்து உட்காருங்கள் என. வேத்திரத்து ஆசனம் விதியின் நல்கினாள் — பிரம்பினால் செய்த பாயை ஆசாரத்துக்கு உரியவிதமாகப் போட்டாள். மாத்திரி தண்டு அயல வைத்து - புனிதமான திரிதண்டத்தைப் பக்கத்தில் வெகு ஜாக்கிரதையாக வைத்து. வஞ்சனும் - ராவணனும். பூத்தொடர்சாலையின் இருந்த போழ்தினே — பூங்கொடிகள் படர்ந்த சாலையில் உட்கார்ந்து கொண்டபோது.

27. ஆசனத்தில் இருந்தவனாய் ராவணன் சீதையைப் பார்த்து ஒன்றும் தெரியாதவன் போல் கேட்கிறான்: ''இந்த ஆசிரமம் எதற்காக ஏற்பட்டது? இங்கே இருக்கும் முனிவர் யார்? நீர் யார்?'' என்று கேட்கிறான். சீதையும், இந்த விருந்தினர் இங்குள்ள விஷயம் ஒன்றும் தெரியாத வைதிகர் என்று எண்ணிச் சொல்ல ஆரம்பிக்கிறாள்.

இருந்தவன், 'யாவ(து)இவ்
இருக்கை? இங்குறை

அருந்தவன் யாவன்? நீர்
யாரை?' என்றலும்,

விருந்தினர் இவ்வழி
விரகி லார்எனப்,

பெருந்தடங் கண்ணவள்
பேசல் மேயினாள். (297)

---

27. இருந்தவன் - ஆசனத்திலிருந்த ராவணன். யாவது இவ் இருக்கை - எதற்காக ஏற்பட்டது இந்த ஆசிரமம்? இங்கு உறை அருந்தவன யாவன் - இங்கு தங்குகிற முனிவர் யார்? நீர் யாரை - நீர் யார்? விருந்தினர் இவ்வழி விரகிலார் - இந்த விருநதினருக்கு இங்குள்ள விஷயம் ஒன்றும் தெரியாது போலிருககிறது. பெருந்தடங் கண்ணவள - சீதை. பேசல் மேயினள் – ஒரு உற்சாகத்துடனேயே சொல்ல ஆரம்பித்தாள்.

28. சீதை சொல்லுகிறாள். "தசரதன் என்ற சக்கரவர்த்தி ஒருவர். அவர் காலமாய் விட்டார். அவருடைய பூர்வமான குலத்துக்குத் தலைவரா யுள்ளவர், தன் தம்பியோடு இங்கே தங்குகிறார். இங்கே தங்குகிற அரசர்தான் என் நாயகர்."

'துயரதன் தொல்குலத்
தலைவன் தம்பியோ(டு)

உயர்குலத்(து) அன்னைசொல்
உச்சி ஏந்தினன்,

அயர்விலன் இவ்வழி
உறையும் மன்னவன்

பெயரினைத் தெரிகுதிர்,
பெருமை யீர்'என்றாள். (298)

---

28. உயர் குலத்து அன்னை சொல் உச்சி ஏந்தினன் — உயர்குலத்துப் பிறந்த தாயானவள் இட்ட கட்டளையைத் தலையில் ஏந்தியவனாய் (அங்கீகரித்து). அயர்விலன் — யாதொரு கவலையும் இல்லாதவனாய். இவ்வழி உறையும் மன்னவன் - இவ்விதமாகச சூரியகுலத்து மன்னவன் இங்கே உறைகிறார். பெயரினைத் தெரிகுதிர் — பெயரைத் தெரிந்து கொள்ளும்.

29. ராவணன் பேசுகிறான்: "வாஸ்தவம், நான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், நேரில் பார்த்த தில்லை. கங்கை பாயும் கோசல நாட்டில் நானும் ஒரு தடவை வந்து தங்கியிருக்கிறேன்."

'கேட்டனென் கண்டிலென்;
 கெழுவு கங்கைநீர்

நாட்டிடை ஒருமுறை
 நண்ணி னேன்;மலர்

வாள்த்தடங் கண்ணினீர்
 யாவன் மாமகள்,

காட்டிடை அரும்பகல்
 கழிக்கின் றீர்' என்றான். (299)

---

29. கேட்டனென்கண்டிலென் – தசரதனைப் பற்றியும் ராமனைப்பற்றியும் நான் கேட்டிருக்கிறேன். ஆனால் நேரில்ப பார்த்ததில்லை. கெழுவு கங்கை நீர் நாட்டிடை – நிறைந்த கங்கை நீர் பாயும் உங்கள் நாட்டில். ஒருமுறை நண்ணினேனை – ஒருமுறை வந்து தங்கியிருக்கிறேன், என்னுடைய யாத்திரையில். மலர் வாள்த்தடங் கண்ணின நீர் – விரிந்து விசாலமாய் வாளை ஒத்துள்ள கண்ணையுடைய நீர். யாவன மாமகள – யாருடைய புத்திரி. காட்டிடை அரும் பகல் கழிக்கின்றீர் – இந்த ஏகாந்தமான காட்டில் வாழ் நாளைக் கழிக்கிறீரே, ஏனோ.

30. ''சொல்லுகிறேன் கேளுங்கள்'' என்று அதிகமான உற்சாகத்துடனேயே பேசுகிறாள் சீதை: ''உம்மைப் போன்ற ரிஷிகள் அல்லாமல் வேறு தெய்வம் இல்லை என்று எண்ணும் ஜனக மகாராஜனுடைய மகள் நான். என் பெயர் ஜானகி. காகுத்தனுக்கு நான் மனைவி.''

'அனகமா நெறிபடர்
அடிகள்! உம்மலால்

நினைவதோர் தெய்வம்வே(று)
இலாத நெஞ்சினன்

சனகன்மா மகள், பெயர்
சனகி, காகுத்தன்

மனைவியான், என்றனள்
மறுவில் கற்பினாள். (300)

---

30. அனக மா நெறி படர் அடிகள — தவ ஒழுக்கத்தில் ஒழுகும் முனிபுங்கவரே. உம் அலால் — உம்மைப் போன்ற முனிவர்கள் அல்லாமல். நினைவதோர் தெய்வம் வேறு இலாத நெஞ்சினன்' நினைப்பதற்குத் தெய்வம் வேறொன்று இல்லாத பக்தி நிறைந்த உள்ளத்தவனான ஜனகமகாராஜனது புத்திரி. பெயா சனகி — என் பெயர் ஜானகி. காகுத்தன் மனைவியான — ககுஸ்தன் என்ற வீர மன்னனது வம்சத்தவனான .காகுத்தனது (ராமனது) மனைவி நான். என்றனள மறுவில் கற்பினள் — என்று எக்களிப்புடனேயே சொன்னாள் சீதை.

31. தன்னையே பற்றித் தந்தை இன்னார் தன் பெயர் இன்னது கணவன் இன்னார் என்றெல்லாம் பேச ஆரம்பித்த பிறகு, கேட்டுக்கொண்டிருந்த சன்னியாசியிடம் சீதைக்குப் பரிதாபம் உண்டாய் விட்டது.

அவ்வழி அனையன
உரைத்த ஆயிழை,

'வெவ்வழி வருந்தினிர்
விளைந்த மூப்பினிர்,

இவ்வழி இருவினை
கடக்க எண்ணினிர்

எவ்வழி நின்றும்இங்(கு)
எய்தி னிர்?,என்றாள். (301)

---

31. அவ்வழி அனையன உரைத்த ஆயிழை - அப்படி யெல்லாம் பேசிய சீதை. அனையன - மேலே சொன்ன விஷயங்களை. ஆயிழை - பெண். வெவ்வழி வருந்தினிர் - வெப்பமாகிய காட்டின் வழி வந்து கஷ்டப்பட்டீர். விளைந்த மூப்பினிர் - வயசோ மிகவும் தள்ளாடிய பருவம். இவ்வழி இருவினை கடக்க எண்ணினிர் - இகத்திலேயே பூர்வமான நல்வினை தீவினை ஆகிய இரண்டையும் கடந்து முத்தி அடைய எண்ணினவராய் இருக்கிறீர். எவ்வழி நின்றும் இங்கு எய்தினிர் - எந்த இடத்திலிருந்து புறப்பட்டு இங்கே வர நேர்ந்ததோ, தயவுசெய்து சொல்லவேண்டும்.

32. "சன்னியாசியாய் இருக்கிறாரே; எந்த முனிவர் ஆசிரமத்திலிருந்தோ, தீர்த்த கட்டத்திலிருந்தோ வருகிறார். அதையெல்லாம் பற்றி விஸ்தாரமாகப் பேசுவார்" என்று எதிர் பார்த்தாள். ஆனால் சன்னியாசி எடுத்த பேச்சு வேறுவழியில் போகிறது.

'இந்திரற்(கு) இந்திரன்,
எழுத லாகலாச்

சுந்தரன், நான்முகன்
மரபில் தோன்றினான்,

அந்தரத் தோடும்எவ்
உலகும் ஆள்கின்றான்,

மந்திரத்(து) அருமறை
வைகும் நாவினான்.' (302)

---

32. இந்திரற்கு இந்திரன் - ஒரு சக்கரவர்த்தி - இந்திரனுக்கு இந்திரன். எழுதலாகலாச் சுந்தரன் – சித்திரத்தில் எழுதமுடியாத அவ்வளவு அழகு வாய்ந்தவன். நான்முகன் மரபில் தோன்றினான் – பிரமனது குலத்தைச் சேர்ந்தவன். அதாவது சகல கலைகளிலும் வல்லவன். அந்தரத்தோடும் எவ்வுலகும் ஆள்கின்றான் – எல்லாக் கண்டங்களையும் ஆள்கின்றான் என்று சொன்னால் போதாது. வான் உலகத்தையுமே உட்படுத்தி ஆளுகிறான் என்று சொல்ல வேண்டும். (அந்தரம் – வானம்.) மந்திரத்து அருமறை வைகும் நாவினான் – மந்திரத்தைச் செபித்தமாதிரி பக்தி மயமான பாடல்களைப் பாடிக்கொண்டே இருப்பவன்.

33. இன்னுங் கேள் · ''சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கைலயங்கிரியைச் சில்லு வேருடன் சேர்த்துப் பறித்தெடுக்கும் சக்திவாய்ந்தவன். அஷ்டதிக்கு யானைகளின் பிரமாண்டமான தந்தங்களைப் பொடி செய்யக்கூடிய தோள் பலம் உடையவன்.

'ஈசன் ஆண்(டு) இருந்தபேர்
இலங்கு மால்வரை

ஊசிவே ரொடும்பறித்(து)
எடுக்கும் ஊற்றத்தான் ;

ஆசைகள் சுமந்தபேர்
அளவில் யானைகள்

பூசல்செய் மருப்பினைப்
பொடிசெய் தோளினன்.' (303)

---

33. ஈசன் ஆண்டு இருந்த – சிவபெருமான் வீற்றிருந்த. பேர் இலங்கு மால் வரை – வானத்தை அடைத்து விளங்கும் வெள்ளியங்கிரியை. ஊற்றத்தான் – சக்தி வாய்ந்தவன் ஆசைகள் சுமந்த – எட்டுத் திசைகளிலும் நின்று, பூமியைச் சுமந்துள்ள. பேர் அளவில் யானைகள்—பெரிய பிரமாணடமான யானைகளது. பூசல் செய் மருப்பினை – எதிர்த்து யுத்தஞ் செயவதற்கான தநதங்களை.

34. "அவனைப் பேட்டி காணுவதற்காக ஆசார வாசலில் மொய்த்து நிற்பவர் யார் தெரியுமா? தேவர்களே. அவனுடைய பெருமையைச் சொல்லப் புகுந்தாலோ, பாஷையே பழுது பட்டுவிடும். அவனது கையில் என்ன இருக்கிறது தெரியுமா? கற்பக தரு. சங்க நிதி, பதும நிதி இவைகள் தான்.

'நிற்பவர் கடைத்தலை
நிறைந்து, - தேவரே;

சொல்பபகும், - மற்றவன்
பெருமை சொல்லுங்கால்;

கற்பகம் முதலிய
நிதியம, - கையன;

பொற்பக மான நீர்
இலங்கை, - பொன் நகர்.' (304)

---

34. நிற்பவர் கடைத்தலை நிறைந்து — ஆசாரவாசலில் மொயத்து நிற்பவர். மற்று அவன் பெருமை சொல்லுங்கால் — அவனுடைய பெருமைபைச சொல்ல ஆரம்பித்தால். சொல்பகும் — சொலலானது பழுது பட்டுப் போய்விடும் - அதாவது வார்த்தையினுல் எடுததுச் சொலல முடியாதது. கற்பகம் முதலிய நிதியம் கையன - கற்பக தரு, சங்க நிதி, பதுமநிதி இவைகள் அவன கைக்குள் அடங்கி நிறபன. அதாவது, அவனுடைய வள்ளன்மை அவ்வளவு அபாரம். பொற்பகமான நீர் இலங்கை — அழகு மயமான நீர் வளங் கொண்ட இலங்கைதான் அவனுக்குத் தலை நகரம்.

குறிப்பு:— செய்யுளில நல்ல ஜதியும் பாவமும் இருக் கின்றன.

35. "அவனுடைய தேக திடகாத்திரத்தைப் பார்த்தால் சிரஞ்சீவியான வாழ்க்கையைப் பிரமனே கொடுத்திருக்கிறுன். என்றுதான் சொல்லவேணும். அவனுடைய வீரச் செயல்கள் சாமான்யப்பட்டவையா? சிவபெருமானுடைய வாளையல்லவா கையில் ஏந்தியிருக்கிறுன். அவனுடைய கிரீடத்தைப் பார்த்தால் நவக்கிரகங்களையும் நக்ஷத்திரங்களையுமே வாரிச் சிரசில்க் குவித்து வைத்த மாதிரியிருக்கிறது. இதெல்லாம்போக, அவனுடைய நற்குணங்களைக் கருதிஞல் ஒரு குணக்குன்றுதான் அவன்."

'தாளுடை மலருளான்
 தந்த அந்தமில்

நாளுடை வாழ்க்கையன்,
 நாரி பாகத்தன்

வாளுடைத் தடக்கையன்,
 வாரி வைத்தவெங்

கோளுடைச் சிரசினன்,
 குணத்தின் குன்றனுன்.' (305)

---

35. தாளுடை மலர் உளான் - தண்டு பொருந்திய தாமரை மலரிலுள்ள பிரமன். தந்த அந்தமில் நாளுடை வாழ்க்கையன் - கொடுத்த இறுதியில்லாத வாழ்வையுடையவன்; தீர்க்க ஆயுள் அவனுக்கு. நாரி பாகத்தன் - சிவபெருமானது. வாரிவைத்த வெம்கோள் உடைச் சிரசினன் - மிக்க பிரகாசங் கொண்ட நவக்கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் வாரிக் குவித்து வைத்த மாதிரியுள்ள கிரீடத்தைத் தலையில்ச் சூடியவன். குணத்தின் குன்று அன்னுன் - அபாரமான குணச்சிறப்பு வாய்ந்தவன்; ஈகை கருணை நட்பு பக்தி இவைகளை அளந்து சொல்லமுடியாது.

36. ராவணன் என்று பெயர் சொல்லாமலே, அவன் தனக்கு உற்ற நண்பன் என்று சொல்லிக் கொள்கிறான் - ஒரு சூழ்ச்சியை எண்ணியே.

'ஆண்டையான் அரசுவிற்
றிருந்த அந்நகர்

வேண்டியான் சில்பகல்
உறைய வேண்டினேன் :

நீண்டனென் இருந்(து)அவற்
பிரிந்த நெஞ்சினேன்,

மீண்டனென்' என்றனன்,
வினையம் உன்னுவான். (306)

37. மேலே சொன்ன விஷயங்களைக்கேட்டதும் சீதைக்குத் திகைப்பு உண்டாய்விட்டது: '' அரக்கர்கள், அடடா, பெரிய பாதகர்கள் அல்லவா. வேதத்தை விரோதிக்கிறவர்கள். வேதங்கற்கிறவர்களையும்

---

36. ஆண்டையான் - மேலே சொன்ன பரம புருஷன். அரசுவிற்றிருந்த அந்நகர் - அரசு செலுத்தும் அந்த நகரத்திலேயே. வேண்டி யான் சில் பகல் உறைய வேண்டினேன் - நானே விரும்பித் தங்கவேண்டும் என்று அரசனிடம் தெரிவித்தேன். நெடுநாள் தங்கும்படி எப்படியோ ஏற்பட்டுவிட்டது. அவற் பிரிந்த நெஞ்சினேன் - கடைசியில் அவனை விட்டுப் பிரிய மனமில்லாமல்தான். மீண்டனென்- இங்கே வர நேர்ந்தது. வினையம் உன்னுவான் - சூதடியான எண்ணத்தைக் கொண்டவனாய்.

விரோதிக்கிறவர்கள் தானே. அதனாலே அறிவோடு கூடிய மக்களைத் தின்னக்கூடியவர்கள் அல்லவா! அப்படிப்பட்டவர்களுடைய ஊரில் நீர் தங்குவதற்கு என்ன காரணம், தெரியவில்லையே! உடம்பே மிகை யென்று எண்ணி விரதங்களைச் சதா அனுஷ்டித்துக் கொண்டிருப்பவர் அல்லவா நீர்!''

'வேதமும் வேதியர்
அருளும் வெஃகலாச்
சேதன மன்னுயிர்
தின்னும் தீவினைப்
பாதகர் அரக்கர்தம்
பதியின் வைகுதற்(கு)
ஏதுஎன்? உடலமும்
மிகையென்(று) எண்ணுவீர்.' (307)

38. ''நீர் தங்குவதற்குத் தகுதியான இடம் வனத்தில் வாழும் மாதவர் பக்கம் அல்லவா! தர்ம வான்கள் வசிக்கிற நீர்வளமுள்ள நாட்டில் தங்க மனமில்லாது, கொள்ளை கொலையெல்லாம் செய்கிற

---

37. வெஃகலா – விரும்பாத : விரோதிக்கும் சேதன மன்னுயிர் தின்னும் – மிக்க அறிவு படைத்த மக்களையே தின்னும்.

இனத்தவரோடு தங்கவும் மனம் வந்ததே' என்ன காரியத்தைச் செய்துவிட்டீர்?''

'வனத்திடை மாதவர்
மருங்கு வைகலிர்,
புனல்த்திரு நாட்டிடைப்
புனிதர் ஊர்புக
நினைத்திலிர், அறநெறி
நினைக்கி லாதவர்
இனத்திடை வைகினிர்!
என்செய் தீர்!' என்றாள். (308)

39. அரக்கர்கள் பழி பாவத்துக்கு அஞ்சாதவர்கள் தீயவர்கள் என்றெல்லாம் வெளிப்படையாய்ச் சொல்லி விட்டாள் சீதை. தன்னுடைய செல்வம்

---

38. வனத்திடை மாதவர மருங்கு வைகலிர் – வனத்தில் வசிக்கிற ரிஷிகள் பக்கத்தில் அல்லவா தாங்கள் தங்க வேண்டும்: அப்படிச் செய்யவில்லையே. புனல்த் திரு நாட்டிடை – நீர்வளம் பொருந்திய வசதியான நாட்டில். புனிதர் ஊர் புக நினைக்கிலிர் – புனிதர்கள் வாழும் ஊரில் தங்க உமக்கு விருப்பமிருக்கிறதாகத் தெரியவில்லை. ஆனால்: அறநெறி நினைக்கிலாதவர் இனத்திடை – தர்ம நெறி ஒன்று உண்டு என்று சிந்திக்கக்கூடச் செய்யாத கூட்டத்தார் இடை. வைகினிர் – தங்கிவிட்டீரே. என செய்தீர் – அடடா, என்ன செயதுவிட்டீர்.

குறிபபு.— நீர்வளமுள்ள நாட்டில் ஆகார மிகுதியால் திருட்டு முதலிய செயல்கள் கிடையாது. நீர்வளமில்லாத நாட்டில்தான் கொள்ளை கொலையெல்லாம் நிகழும் எனபது பொதுப்படையான உண்மை.

பராக்கிரமம் ஒன்றையும் அவள் பாராட்டமாட்டாள் என்பதையும் தெரிந்துகொண்டான் ராவணன், இனி பேச்சுக்கு இடமில்லை.

சந்தம்

தான தன
தன்னன தன்னன
தன்

ஆண்(டு)ஆ யிடைத்
தீயவன் ஆயிழை
யைத்

தீண்டான், அயன
முன்னுரை சிந்தைசெய்
வான்,

தூண்தான் என—
லாம்உயர் தோள்வலி
யால்க்

---

39. ஆண்டு ஆயிடை – அந்தத் தருணத்தில. தீயவன ஆயிழையைத் தீண்டான – ராவணன் சீதையைத் தீண்டவில்லை. (தீண்டான்-தீண்டாதவனாய்.) அயன முன்உரை சிநதை செய்வான–பிரமன முன்னமேயே கொடுத்த சாபத்தைச் சிந்தனை பண்ணினான். அப்படிச் சிந்தனை பண்ணினதால் ஒரு வேலை 'செய்யத் .தொடங்கினான். தூண்தான எனலாம உயர்தோள் ,வலியால் – பெரிய தூண என்று சொலலும்படி

கீண்டான் நிலம்,
யோசனை கீழுற
வே! (309)

---

யான தன் தோள்பலத்தைக் கொண்டு, கீண்டான நிலம் யோசனை கீழ்உறவே - ஒரு யோசனை தூரம் என்று அதிசயித்துச் சொல்லும்படியாக அவ்வளவு ஆழமாய்க் கீழ் நோக்கிப் பூமியைத் தோண்டினான்:— சீதையின் மேனியைத் தொடக்கூடாதல்லவா.

குறிப்பு:— பூர்வமான இதிகாசத்தின் பாத்திரங்கள் கட்டங்கள் கட்டுக்கோப்புகள் இவைகளுக்கு, நெடுநாள்ப் பட்ட உறுதியொன்று அமைந்திருக்கிறது. அவைகளை, ஏதோ காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறுகப் பிற்காலத்தவர் கையாளும்போது, மாற்றவேண்டியிருக்கிறது, அதுதான் இதிகாசமுறை, காவியமுறை, அதற்காக அசாதாரண சம்பவங்களையும், ஊடே சேர்த்துக் கொள்ளுவது பரம்பரையான வழக்கம்.

கம்பரும், அவர் காலத்து இலக்கிய நாகரிகத்துக்குத் தக்கவாறுக, விஷயத்தைக் கொஞ்சம் மாற்றுகிறுர். சீதையைத் தொடக்கூடாது என்ற ஒரு அம்சத்தை வருவித்துக் கொள்கிறுர். பூமியைத் தோண்டி அந்தத் தரையுடனே தூக்கிக்கொண்டு போகிறுன் என்கிற அம்சந்தான் அது. உயர்ந்த லக்ஷயங் கொண்டு நல்லொழுக்கத்தில் நிற்பவனுக்கு அபூர்வமான சக்தி ஏற்படும் என்பதும் ராவணனது செயலால் அறியக்கிடக்கிறது.

40. சீதையைப் பூமியோடு தூக்கித் தேர்த் தட்டின்மேல் வைத்துவிட்டான் ராவணன். தேர்ப் பாகனைப் பார்த்துத் தேரை விடு என்றும் சொல்லி விட்டான். அப்பாவி சீதை என்னசெய்வாள்?

'விடுதேர்' என,
வெங்கனல் வெந்தழி
யும்

கொடிபோல் புரள் –
வாள், குலை வாள், அயர்
வாள்

துடியா விழு –
வாள், சுருள் வாள், எழு
வாள், –

'கடிதா அற –
னே இது கா' என
மால். (310)

---

40. விடு தேர் என – தேரை விடு என்று ராவணன் சொன்ன மாத்திரத்தில வெங்கனல் வெந்து அழியும் கொடி போல் புரள்வாள – வெங்கனலில் வெந்து வதங்கும் பூங்கொடி போலத் தேர்த் தட்டின்மேல் அப்படியும் இப்படியும் புரள் கிருள. குலைவாள – உறுப்புக்கள் எல்லாம் குலைந்தமாதிரி சோருகிருள். அயர்வாள – உணர்ச்சியற்றுக் கிடக்கிருள். துடியா விழுவாள – உட்கார்ந்திருந்தவள தேகம் துடிதுடித்து அப்படியே விழுகிருள். சுருள்வாள – கைகால்களை மடக்கிச் சுருண்டு கிடக்கிருள். எழுவாள – திடீர் என்று எழுந்து நிற்கிருள். கடிதா அறனே கா எனுமால் – தர்மதேவதையே! சீக்கிரமாக வந்து, இநதச் செயலைத் தடுகக வேண்டும் என்று அலறுகிருள்.

41. தேர் போகிற வேகத்தில் காட்டிலுள்ள மலைகளையும் மரங்களையும் பிராணிகளையும் பார்த் தாள். (மனுஷர்களைக் காணமுடியாது தானே!) சோகவெறியில் அலறுகிருள்.

'மலையே மர -
னே,மயி லே,குயி
லே!

கலையே, பிணை -
யே,களி றே,பிடி
யே.!

நிலையா உயி -
ரேன்,நிலை தேறினிர்
போய்

உலையா வலி
யார்உழை நீர்உரை
யீர்! (311)

---

41. மரனே – மரமே. கலையே – ஆண் மானே. பிணையே – பெண் மானே. களிறே பிடியே – ஆண் யானையே பெண் யானையே. நிலையா உயிரேன் நிலை தேறினிர் போய் – என்னுடைய உயிர் நிலைகுலையப் போகிறது, இநத என் நிலையைப் பார்த்துக் கொண்டீர்கள், நீங்கள் போய். உலையா வலியார் உழை நீர் உரையீர் – எது காரணமாகவும் அசையாத வீரம் படைதத என் நாயகரிடம் போயச் சொல்லுங்கள். உங்களுக்குத்தான் என் நிலை தெரியுமே

42. "அரக்கர்கள் என்ன, அவுணர்கள் என்ன, எல்லாரும் வந்து தாக்கினூர்களே. அவர்கள் ஒருவரும் மிஞ்சாதபடி சரமாரியைத் தொடுத்தீர்களே. இப்போது இஙகே வரக்கூடாதா, ராமனே! லக்ஷ்மணனே! பரதனே! சத்துருக்கனே!"

'நிருதா ரியர்
வேர்அற, நீள்முகில்
போல்

சரதா ரைகள்
வீசினிர் சார்கிலி
ரோ!

வரதா! இளை
யோய்! மறு ஏதுமி
லாப்

பரதா! இளை
யோய் பழி பூணுதி
ரோ?' (312)

---

42. நிருதாரியர் வேர் அற — அரக்கர் முதலானவர் குலம் வேர் அற. நீள முகில்போல் — பெரிய மழை மேகம் போல. சர தாரைகள் வீசினிர் – சரமாரி கொட்டினீர்களே. சார்கிலிரோ – இப்போது ஏன் இங்கு வரவில்லை. வரதா இளையோய் – என் செல்வனே, லக்ஷ்மணனே. மறு ஏதும் இலாப் பரதா இளையோய் - குற்றம் ஏதும் இல்லாத பரதனே, சத்துருக்கனே. பழி பூணுதிரோ — என்னைக் காப்பாற்ற விட்டால், எத்தகைய பழி உங்களைச் சாரும் தெரியுமா!

## தன்னை மறந்து சோர்ந்து கிடந்தாள்

43. தேர்த் தட்டின்மேல் இவ்வாறுகச் சீதை துடித்துக்கொண்டும் அலறிக்கொண்டும் இருக்கிறுள். ஆகாயத்தின் வழியாக வேகமாகப் போகிறது தேர். தேரையும் சீதையையும் ராவணனையும் பார்த்துக்கொண்டான் சடாயு.

சீதையைப் பார்த்து, ''பயப்பட வேண்டாம். அம்மா'' என்று ஆறுதல் சொன்ஞன். பிறகு யோசனை பண்ணிஞன். சரி. இவளைத் தீண்டவில்லை இவன் என்று அறிந்துகொண்டான். உள்ளிருந்து மூண்டு எழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டு, சமாதான முறையில் பேச ஆரம்பிக்கிறுன், ராவணனைப் பார்த்து.

சந்தம்

தான தன
தன்னன தன்னன
தன்

ஆண்டுற் றஅ-
ணங்கினை 'அஞ்சல்'
என,

தீண்டுற் றிலன்
என்றுணர் சிந்தையி
னன்,

43. ஆண்டு உற்ற அணங்கினை – அங்கே சந்திக்க நேர்ந்த சீதையை. அஞ்சல் என – பயப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டு. தீண்டுற்றிலன் என்று உணர் சிந்தையினன் – ராவணன் சீதையைத் தீணடவிலலை என்று

மூண்டுற் றெழு
வெங்கதம் முற்றில
னாய்,

மீண்டுற் றுரை –
யாடலை மேயின
னால். (313)

44. ராவணனைப் பார்த்துச் சொல்லுகிறான் சடாயு :

'பேதாய்! பிழை
செய்தனை: பேருல
கின்

மாதா அனை–
யாளை,ம னக்கொடு
நீ

யாதா கநி
னைத்தனை: எண்ணமி
லாய்!

ஆதா ரம்நி
னக்கினி யார்உள
ரோ? (314)

---

எண்ணிய காரணத்தால, சமாதானம் ஏற்பட்டது சடாயுவுக்கு. மூணடு உற்று எழு வெங்கதம் முற்று லனுய–கோபத்தை மேலே போகாமல் அடக்கிக் கொணடவனுய. மீண்டு உற்று உரையாடல் மேயினனுல் – ராவணனிடம் வந்து பேச ஆரம்பிக்கிருன.

44. மனக்கொடு - மனப்பூர்வமாக விஷயம் தெரிந்து இருந்தும். ஆதாரம் நினக்கு இனி யார உளரோ – இப்பேர்ப்பட்ட தெயவததை (சீதையைத்) தவிர்த்து உன்னுடைய வாழ்க்கைக்காக வழிபடக்கூடிய வேறு தெயவம் உண்டா?

45. ''உன்னுடைய மரபினரான கரன் முதலிய வர்கள் யார்க்கும் தோற்றவர் இல்லை. அவர்களில் ஒருவர் பிழைக்காதபடி மாண்டுபோன காரியம் உனக்குத் தெரியும்.''

'உய்யா மல்ம—
கலந்(து)உமர் ஆருயி
ரை,

மெய்யா கஇ—
ராமன்வி ருந்திட
வே

கையா ரமு—
கந்துகொ(டு) அந்தக
ர்

ஐயா' புதி(து)
உண்ட(து)அ றிந்திலை
யோ?' (315)

---

45. உய்யாமல் மலைந்து உமர் ஆருயிரை — ஒருவர் கூடப் பிழைக்காமல் போர் செய்யும் காரணமாக, கரன் முதலான உனது இனத்தார் உயிரை. மெய்யாக இராமன் விருந்திடவே – நான் பார்க்கும்படி உண்மையாகவே ராமன் விருந்திட்டான். கையார முகந்து கொடு — அந்த உயிர்களைக் கையால் எடுத்து எடுத்து. அந்தகனுர் — எமனுர், ஐயா புதிது உண்டது - அடடா, புது விருந்து உண்டதை, - அறிந்திலையோ.

46. எதற்காக ராவணன் இந்தத் தொழில் செய்தான் என்று சடாயுவுக்கு விளங்கவில்லை. "இந்தப் பிறப்பில் உறவினரோடு இறந்து நிர்மூலமாக வேண்டுமானால், அதற்கு இந்தத் தொழில் மாதிரிப் பாதகத்தொழில் வேறு ஏதும் கிடையாது."

'இம்மைக்(கு) உற—
வோடும்இ றந்தொழி
யும்

வெம்மைத் தொழில்
இங்(கு)இதன் மேலில்லை
யால்

அம்மைக்(கு) அரு—
மா நர கந்தரு
மால்;

எம்மைக்(கு) இத—
மாகஇ(து) எண்ணினை
நீ?' (316)

---

46. இம்மைக்கு – இப்பிறப்பில். உறவோடு-உறவினரோடு. அம்மைக்கு – பிறவிக்கு அப்பாலோ. அருமாநரகந்தருமால் – பெரிய நரகத்தைத் தந்துவிடும். உண்மை இப்படி யிருப்பதால், எம்மைக்கு – எந்தப் பிறவிக்குப் பிரயோசனம் என்று, அப்பா, – இப்படித் தொழில செயய எண்ணினுப்.

47. தனியான வீரம்படப் பேசுகிறான் சடாயு· ''சிவபெருமானுடைய வரம் இருக்கிறது உனக்கு. மற்றும் எத்தனையோ வித்தைகள் உன்னிடத்தி லிருக்கின்றன. அவைகளுக்கு ஏதோ வலியுண் டென்று சொல்லாம். எதுவரை வலியுண்டு தெரியுமா?''

'புரம்பற் றிய
போர்விடை யோன்அரு
ளால்,

வரம்பெற் றவும்
மற்றுள விஞ்சைக
ளும்,

உரமபெற் றன
ஆவன,- உண்மையன
ான்

சரம்பற் றிய
சாபமவி டுந்தனை
யே.' (317)

---

47. புரம் பற்றிய போர - திரிபுரம் அழியும்படியாகப் போர் செயத. விடையோன அருளால் - ரிஷப வாகனத்தி லுள்ள சிவபெருமான தந்த வரம் பெற்றவும் - வரமாகப் பெற்றவைகளும், மறறுள விஞ்சைகளும - மற்றக் கலைகள் கைவந்ததனுல் ஏற்பட்ட சக்தியும். உரம் பெற்றன ஆவன — ஆம், உறுதி கொண்டுள்ளவைதான. எதுவரை? உண்மை யன்னுன-சத்தியத்தையே போல உறுதியான விரம் படைத்த ராமனுடைய. சரம் — அம்பானது பற்றிய சாபம் விடுந் தனையே — பற்றியுள்ள வில்லை விட்டு விலகும் வரையுமே.

48. கடைசியாக ராவணனைப் பார்த்துச் சொல்லுகிறான் சடாயு: ''என்னுடைய ஆப்தநண்பன் வானுலகம் சேர்ந்து விட்டான். அவனுடைய அருமைப் புதல்வன் ராமன் இருக்கிறான். வில்லை வளைத்துக்கொண்டு அவன் இங்கே வந்துவிட்டால், யாராலும் தடுக்க முடியாது.''

'வானுள் பவன்
மைந்தன்வ ளைத்தவி
லான்

தானே வரின்
நின்றுத டுப்பரி
தால்; -

நானே அவண்
உய்ப்பென்இந் நல்நுத
லை ;

போநீ கடி(து)'
என்றுபு கன்றிட
லும். (318)

---

48. வான் ஆபவன் மைந்தன் – காலஞ் சென்ற தசரதன் புதல்வனான ராமன் வளைதத வில்லான் – வளைத்த வில்லைக் கையில ஏந்தியவனாய. தானே வரின – அவனே வந்து விட்டால். 'நின்று தடுபபரிதால – எதிர் நின்று சமாளிகக முடியாது அதனால் ஒரு காரியம் செய்கிறேன், நானே அவண உய்ப்பென இந நலநுதலை – இந்தச் சீதையைக் கொண்டுபோய் ராமனிடம் நானே ஒப்பிதது விடுகிறேன். போ நீ கடிது – இபபடியே நீ தப்பிப் போயவிடு. என்று புகன்றிடலும் – என்று சடாயு சொன்ன மாததிரத்தில்.

49. சடாயு சொன்ன வார்த்தைகள் ராவணனுக்கு ஏற்கவில்லை. அதன் பேரில் இருவருக்கும், யுத்தம் நடந்தது. சடாயு எவ்வளவோ எதிர்த்துப் போர் செய்தான். கடைசியில் ராவணன் தன் கையிலுள்ள வாளைக்கொண்டு சடாயுவின் இரண்டு இறக்கைகளையும் வெட்டிவிட்டான். அப்படியே, மூர்ச்சித்துத் தரையில் வீழ்ந்தான் சடாயு.

இவ்வளவையும் பார்த்துக்கொண்டிருந்த சீதையின் பாடு என்ன ஆகும்? புலம்புகிறாள் அவள்:

சந்தம்

தானன தானன
தான தன்னன

'வன் துணை உளன் என
வந்த மன்னனும்

பொன்றினன்: எனக்கினிப்
புகல்என்' என்கின்றாள்; -

இன் துணை பிரிந்(து)இரிந்(து)
இன்னல் எய்திய

அன்றில்அம் பெடைஎன
அரற்றினாள்அரோ. (319)

---

49. வன் துணை உளன என வந்த மன்னனும் – வலிமை கொண்ட துணையாகவந்த சடாயு. பொன்றினன் – இறந்து போய்விட்டான். எனக்கு இனிப புகல என? – எனக்குப் புகலிடம் வேறே என்ன இருக்கிறது! இன் துணை பிரிந்து இரிந்து இன்னல் எயதிய – ஆண் அன்றிலைப் பிரிந்து நீங்கி வருத்தமுற்ற. அன்றில அம்பெடை என – பெண் அன்றில்ப் பறவைபோல.

50 சீதை புலம்புகிறாள்: ''லக்ஷ்மணன் சொன்ன வார்த்தையை மறுத்தேன். அவனைக் கடுமையான வார்த்தை பேசி, இருந்த இடத்தை விட்டுப் போகச் சொன்னேன். இது போதாதா! சடாயுவின் சிறகு அறும்படியாகவும் நான் இங்கே வந்தேன்.''

'பின்னவன் உரையினை
மறுத்துப், பேதையேன்

அன்னவன் தனைக்கடிந்(து)
அகற்றி னேன்;பொரு

மன்னவன் சிறையற
வந்து ளேன்.விதி

இன்னமும் எவ்வினை
இயற்று மோ?'எனா. (320)

---

50. பின்னவன் - லக்ஷ்மணன். அன்னவன் தனை - அந்த லக்ஷ்மணனை. கடிந்து அகற்றினேன் – கடுமையாகப் பேசி அகற்றினேன். பொரும் மன்னவன் சிறை அற வந்துளேன – போர்செய்த சடாயுவின் சிறகு அறும்படியாய் இங்கே வந்து சேர்ந்தேன, ரொம்ப நன்றாக இருக்கிறது. விதி இன்னமும் எவ்வினை இயற்றுமோ – விதி இன்னும் என்ன என்ன காரியத்தைச் செய்யுமோ தெரியவில்லையே. எனா – என்று அரற்றினவளாய்.

51. "கஷ்டத்துக்கு உள்ளான என்னை அஞ்ச வேண்டாம் என்று ஆறுதல் சொல்லிய இந்தத் தர்மவான் தோற்கிறதா? அந்தப்பாவி வெல்வதா?"

'அல்லல்உற் றேனைவந்(து)
அஞ்சல் என்றஇந்

நல்லவன் தோற்பதோ!
நரகனை வெல்வதோ!

வெல்வதும் பாவமோ!
வேதம் பொய்க்குமோ!

இல்லையோ அறம?'என
இரங்கி ஏங்கினாள். (321)

52. மேலும் சீதை புலம்புகிறாள்: "ராம லக்ஷ்மணர்களே! தர்மவான்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக உள்ள சடாயுவை, உங்கள் தந்தைக்கு

---

51. அல்லல் உற்றேனை - துன்பத்துக்கு உள்ளானவளான என்னை. அஞ்சல் என்ற - பயப்படவேண்டாம் என்ற இந்நல்லவன் தோற்பதோ - இந்தத் தர்மவான் யுத்தத்தில் தோற்பதோ நரகன் வெல்வதோ - நரகத்துக்கு உரியவனை ராவணன் வெல்வதோ.

உற்ற நண்பனை, பார்க்க வாருங்கள்! என்ன நிலையி லிருக்கிறான் என்று பார்க்க வாருங்கள்."

'நாணிலேன் உரைகொடு
நடந்த நம்பிமீர்!

நீள்நிலை அறநெறி
நின்று ளோர்க்கெலாம்

ஆணியை, உந்தையர்க்(கு)
அமைந்த அன்பனை,

காணிய வம்!' எனக்
கலங்கி விம்மினாள். (322)

---

52. நாணிலேன் உரை கொடு நடந்த நம்பிமீர் - பெண்களுக்குரிய நாணம் என்பது எனக்கு இல்லையே அப்படியிருந்தால் உங்களை இப்படியெல்லாம் பேசியிருப்பேனா? அப்படி நாணமில்லாது பேசிய காரணத்தினால் அல்லவா நீங்கள் பர்ணசாலையை விட்டுப் போனீர்கள். ஓ வீரர்களே! நீள் நிலை அறநெறி - உறுதியோடு நிற்கும் தர்ம நெறியில். நின்றுளோர்க்கெலாம் - இருப்பவர்களுக்கெல்லாம் ஆணியை - எடுத்துக் காட்டாய இருப்பவனை உந்தையர்க்கு அமைந்த அன்பனை - உங்கள் தந்தை தசரதனுக்கு உற்ற நண்பனாகிய சடாயுவை. காணிய வம் - காண இங்கே வாருங்கள்.

53. இப்படியெல்லாம் ஏக்கமுற்றிருந்த சீதையின் தன்மையையும் சடாயுவின் தன்மையையும் பார்த்தான் ராவணன். இனிமேலும் தேரில்ப் போனால் இடையூறு வரலாம் என்று எண்ணிச் சீதையை அவள் இருந்த பூமியோடு தேரைவிட்டு வெளியே எடுத்தான்.

*ஏங்குவாள் தன்மையும்,*
*இற(கு)இ முந்தவன்*

*ஆங்குறு தன்மையும்,*
*அரக்கன் நோக்கினான்;-*

*வாங்கினன் தேரின்நின்(று)*
*அவளை; மண்ணொடும்*

*வீங்குதோள் மீக்கொடு*
*விண்ணின் ஏகினான்.* (323)

---

53. வாங்கினன் தேரின்நின்று அவளை மண்ணொடும் - தேரிலிருந்து சீதையை அவளிருந்த பூமியோடு அகற்றியவனாய். வீங்குதோள் மீக்கொடு விண்ணின் ஏகினான் - விசாலமான தோளில் வைத்துக்கொண்டு ஆகாயத்தின் வழியே, சென்றான்.

54. ஆகாயத்தில் ராவணன் போன வேகங் காரணமாகச் சீதைக்குக் கண்ணும் மனமும் சுழன்று விட்டன. உணர்வெல்லாம் அழிந்து போய்விட்டது. ஒன்றும் தெரியவில்லை அவளுக்கு.

விண்ணிடை வெய்யவன்
ஏகும் வேகத்தால்
கண்ணொடு மனம்அது
சுழன்ற கற்பினாள்,
உள்நிறை உணர்வழிந்(து)
ஒன்றும் ஓர்ந்திலள்,
மண்ணிடைத் தன்னையும்
மறந்து சாம்பினாள். (324)

---

54. உளநிறை உணர்வு அழிந்து - உள்ளத்திலுள்ள நிலையான உணர்ச்சி அழிந்து. ஒன்றும் ஓர்ந்திலள் — ஒன்றும் அவளுக்குத் தெரியவில்லை. மண்ணிடைத் தன்னையும் மறந்து சாம்பினாள - ராவணன் தூக்கிக்கொண்டு போனபோது தான் இருந்த ஆசிரமத்துத் தளத்திலேயே கிடக்கிறோம் என்ற நினைவுகூட இல்லாமல் கிடந்தாள்.

## சிறைவைத்தான் அசோக வனத்தில்

55. சீதையைத் தூக்கிக்கொண்டு அரக்கன் போகிறான். அந்தநிலையில், சடாயு கொஞ்சம் மனத்துயர் ஓய்ந்தவனாய், ஆகாயத்தை எட்டிப் பார்த்தான்.

சந்தம்

தானன தானன
தான தன்னன

ஏகினன் அரக்கனும்;—
எருவை வேந்தனும்

மோகவெந் துயர்சிறி(து)
ஆறி மூசுற,

மாகமேல் நோக்கினன்,—
வஞ்சன் வல்லையிற்

போகுதல் கண்(டு)அகம்
புலர்ந்து சொல்லுவான். (325)

---

55. ஏகினன் அரக்கன் — அரக்கன் ஆகாயத்தில் போகிறான். எருவை வேந்தனும் — கழுகு வேந்தனான சடாயுவும், மோக வெந்துயர் சிறிது ஆறி மூசுற — மூர்ச்சித்துப் போம்படியான கொடும் துயரத்தை விட்டுச் சிறிது ஓய்ந்து, சுவாசம் கொஞ்சம் வந்தது சுவாசம் வரவும், மாகமேல் நோக்கினன் — ஆகாயத்தின் மீது பார்வையைச் செலுத்தினான். வஞ்சன் வல்லையிற் போகுதல் கண்டு — ராவணன் வேகமாகப் போவது கண்ணுக்குத் தென்பட்டது. அகம் புலர்ந்து சொல்லுவான் - மனம் வெந்தவனாய்ச் சொல்லுகிறான்.

56. "அரக்கனைப் பின்தொடர இறகில்லையே அடடா, நம் அருமை மக்கள் இங்கில்லையே. நம்முடைய மருமகளுக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கினேன் என்னும் புகழ் இல்லாமலல்லவா போகிறது எனக்கு! தர்மத்துக்கு வேலியாய் இருக்கும் பாதுகாப்பை விதி தொலைக்கிறதே!"

'வந்திலர் மைந்தர்; நம்
மருகிக்(கு) எய்திய
வெந்துயர் துடைத்துளேன்
என்னும மெய்ப்புகழ்
தந்திலர்; விதியினூர்
தரும வேலியைச்
சிந்தினர்; மேல்இனிச்
செயல்என் னுங்கொலோ?' (326)

---

56. வந்திலர் மைந்தர் – ராமலக்ஷ்மணர் இங்கிலலையே, இங்கிருந்தால் ராவணனைக் கொன்று சீதையை மீட்டுவிடலாமே. நம் மருகிக்கு எய்திய வெந்துயர் துடைத்துளேன் என்னும் மெய்ப்புகழ் .தநதிலர் – நம்முடைய மருமகள் சீதைக்கு ஏறபட்ட துயர் எனனுல் நீங்கியது என்று அவர்கள் சொல்லுவார்களே, அது இல்லாமலப் போய் விட்டதே.எனக்கு. விதியினூ தரும வேலியைச் சிந்தினர் – தருமத்துக்காக ஏற்பட்ட வேலியை அல்லவா விதி சிதைக்கிறது.

57. சடாயு யோசனை பண்ணுகிறான் : "சீதை பக்கத்தில் ராமலக்ஷ்மணர்கள் இருந்திருந்தால் இந்தக் காரியம் நடந்தா இருக்கும்?"

'வெற்றியர் உளர்எனின்
மின்னின் நுண்ணிடைப்

பொற்றொடிக்(கு) இந்நிலை
புகுதற் பாலதோ?

உற்றதை இன்னதென்(று)
உணர கிற்றிலேன்;-

சிற்றவை வஞ்சனை
முடியச் செய்ததோ!' (327)

58. "ராமன் சாமானியப்பட்டவனா? அவனது சக்திதான் என்ன! ஆதிசேஷ சயனத்தில் பள்ளி

---

57. வெற்றியர் உளர் எனின் - ராம லக்ஷ்மணர்கள் ஆகிய வீரர்கள் பக்கத்திலிருந்திருந்தால். மின்னின் நுண்ணிடைப் பொற்றொடிக்கு - மின் போலும் இடையுடைய சீதைக்கு. (பொற்றொடி - பொன் வளையம் தோளில் அணிந்த பெண்.) இந்நிலை புகுதற் பாலதோ - இந்த ஆபத்து வந்திருக்குமா? ஒருக்காலும் வந்திராது உற்றதை இன்னது எனறு உணரகிற்றிலேன் - இன்ன விதம் இது நேர்ந்தது எனபது என் யோசனைக்கு எட்டவில்லையே. சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ - கைகேசியே உளவாய் இருந்து இதைச் சாதிக்கச் செய்தாளோ! வேறுவிதத்தில் காரணம் கண்டு பிடிக்க முடியவில்லையே!

கொண்ட திருமால் அல்லவா! இந்த அரக்கன் ராமனை வெல்லுகிறது என்று உண்டா?"

'பஞ்சணை பாம்பணை-
யாகப் பள்ளிசேர்

அஞ்சன வண்ணனே
இராமன ஆதலால்,

வெஞ்சின அரக்கனல்
வெல்லற் பாலனே.

வஞ்சனை இழைத்தனன்
கள்ள மாயையால்.' (328)

59. இப்படி யெல்லாம் சடாயு புலம்பிக்கொண்டிருக்கும்போது, அறுபட்ட இறக்கைகளிலிருந்து இரத்தம் மிகுதியாக வழிந்து உடல் மிக்க சோர்வு அடைந்து விட்டது. அதோடு, சீதையை மீட்கவில்லையே என்கிற அவமானமும், ராம லஷ்மணர்கள் என்ன பாடு படுவார்கள் என்ற பரிவும் சேர்ந்து

58. பஞ்சு அணை பாம்பணையாக - பஞ்சு மெத்தை ஆதிசேஷ சயனமேயாக. பள்ளிசேர் - பள்ளி கொண்டுள்ள. அஞ்சன வண்ணனே இராமன் ஆதலால் - கருநிற வண்ணனை திருமாலே ராமனதலால்.

அவன் இதயத்தைத் தாக்கின. அப்பாவி சடாயு என்ன செய்வான்?

அஞ்சிறைக் குருதியால்
அழிந்து சோர்வுற,

வஞ்சியை மீட்கிலேன்
என்னும் மானமும்,

செஞ்செவே மக்கள்பால்ச்
சென்ற காதலும்,

நெஞ்சுறத், துயினறனன்
உணர்வு நீங்கலான். (329)

60. ராவணன் சீதையை அவளிருந்த தளத்தோடு தூக்கிக்கொண்டு போகிறான். அவளுடைய தூய்மையான மேனியைத் தீண்ட அஞ்சுகிறான். இலங்கைக்குக் கொண்டுபோய் அரக்கியர்களைக்

---

59. அஞ்சிறைக் குருதியால — அழகான இறக்கையின் அடிகளிலிருந்து வடிந்த இரத்தப் பெருக்கால். அழிந்து சோர்வுற - உடல் வலியிழந்து சோர்வுற. வஞ்சியை - சீதையை. செஞ்செவே மக்கள்பால்ச சென்ற காதலும் — மிகச செம்மையான குணம் வாய்ந்த ராமலக்ஷ்மணர்களைக் குறித்துச் சென்ற பரிவும் நெஞ்சு உற — இதயத்தைத் தாக்க. துயினறனன — உறங்கிவிட்டான்: உணர்வு நீங்கி விட்ட காரணத்தால்.

குறிப்பு .— உணர்ச்சி நீங்கிக் 'கிடக்கிறான்,' சடாயு எனபதாக விஷயத்தை முடித்துக் கொள்கிறார் கவிஞர். இனி வேறு விஷயம்.

காவல் காக்கும்படியாக அமைத்து, அசோக வனத்திடைச் சிறை வைத்து விடுகிறான்.

வஞ்சியை அரக்கனும்
வல்லை கொண்டுபோய்ச்,

செஞ்செவே திருவுருத்
தீண்ட அஞ்சுவான்,

நஞ்சியல் அரக்கியர்
நடுவண் ஆயிடைச்,

சிஞ்சுப வனத்திடைச்
சிறைவைத் தான்அரோ. (330)

---

60. வஞ்சியை அரக்கனும் வல்லை கொண்டுபோய் - சீதையை அரக்கன் வேகமாகக் கொண்டுபோய். செஞ்செவே திருவுருத் தீண்ட அஞ்சுவான் - தூய்மையான சீதையின் மேனியைத் தீண்ட அஞ்சுவான். நஞ்சியல் அரக்கியர் நடுவண் - நஞ்சைப் போன்ற கொடிய அரக்கியர் மத்தியில். ஆயிடை - வாய்ப்பான இடத்தில் சிஞ்சுப வனத்திடை - சிஞ்சுப மரங்கள் அடர்ந்த அசோக வனத்தின் ஒரு பக்கத்தில். சிறை வைத்தான் அரோ - சிறைவைத்து விட்டான்.

## உடலைக் காணவில்லை உயிர்!

61. ராவணன் செயலைச் சொல்லி முடித்தோம். இனி, ராமனைத் தேடிப் போன லக்ஷ்மணனது நிலை எப்படி யிருக்கிறது பார்ப்போம்.

இந்நிலை இளையவன்
செயல்இ யம்பினும்;
'பொன்னியல் மானின்பின்
தொடர்ந்து போகிய
மன்நிலை அறி'கென
மங்கை ஏவிய
பின்னவன் தன்நிலை
பேசு வாம்அரோ. (331)

62. கடலில் பாய்கட்டிய மரக்கலம் போவது போல, லக்ஷ்மணன் விரைவாய்ப் போகிறான்.

---

61. இந்நிலை இளையவன் செயல் இயம்பினும - இந்த விதமாக ராவணன் செயலைச் சொன்னோம். பொன் இயல் மானின் பின் தொடர்ந்து போகிய — பொன்மயமான மானின் பின் தொடர்ந்து போன. மன்நிலை அறிக என - ராமனது நிலைமையை அறிவாயாக என்று. மங்கை ஏவிய - சீதை ஏவிய. பின்னவன் தன்நிலை பேசுவாம் அரோ — லக்ஷ்மணனது நிலையைப்பற்றி இனிமேல் சொல்லுவோம்.

ராமனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற சந்தேகம் அவன் உள்ளத்திலில்லாமலில்லை. இந்த நிலையில், ராமன் எதிரே வருவதைக் கண்டு கொண்டான்.

தெண்திரைக் கலம்என
விரைவில்ச் செல்கின்றான்,

புண்டரீ கத்தடங்
காடு பூத்தொரு

கொண்டல்வந்(து) இழிந்தன்ன
கோலத் தான்தனைக்

கண்டனன், மனம்எனக்
களிக்கும் கண்ணினான். (332)

63. ராமனுக்கோ, மனசு ஒரு நிலையில்லாமல் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. மாரீசன் கூக்குரலைக்

---

62. தெண்திரைக்கலம் என - அலைகளோடு கூடிய கடலில பாயும் மரக்கலம் என. புண்டரீகத்தடங்காடு பூத்து- செந்தாமரை மலர்களை நிறையப் பூத்த. ஒரு கொண்டல் - ஒரு நீலமேகம். வந்து இழிந்தன்ன – குன்றிலிருந்து கீழே இறங்கியதுபோலும். கோலத்தான் தனைக் கண்டனன் - அழகு மயமான ராமனைக் கண்டு கொண்டான். மனம் எனக் களிக்கும் கண்ணினான் - லக்ஷ்மணனுக்கு உள்ளத்தில் ஆனந்த வெறியுண்டாயது. இந்த ஆனந்த வெறி இரண்டு கண்ணுக்குள்ளும் போய் இன்பத்தை ஊட்டியது.

கேட்டு, விஷயம் தெரியாமல் வேண்டாத மயக்கத்துக்கெல்லாம் உள்ளாகிச் சோர்ந்து கிடப்பாளே சீதை என்ற எண்ணத்தினால்.

'துன்எனும் அவ்வுரை
தொடரத் தோகையும்

பெண்எனும் பேதைமை
மயக்கப் பெற்றியால்

உள்நிறை சோரும்'என்(று),—
ஊசல் ஆடும்அக்

கண்ணனும், இளவலைக்
கண்ணுற் றான்அரோ. (333)

64. தம்பியைக் கண்டு கொண்டதில் ஒரு ஆறுதல்தான். ஆனாலும், அவனிடத்தில் கருத்துச்

---

63. துன் எனும் அவ்வுரை தொடர - அச்சத்தை விளைவிக்கத்தக்க மாரீசனது கூக்குரல் - எட்டவும். தோகையும் - சீதையும். பெண் எனும். பேதைமை மயக்கப் பெற்றியால் - பெண்ணாய் இருப்பதால் ஒன்றும் தெரியாமல் மயக்கத்துக்கு உள்ளானவளாய் உள்நிறை சோரும் என்று - அவளுக்கு இயல்பாயுள்ள மனத்திட்பம் போயவிடத் தானே செய்யும் என்று ஊசலாடும் அக் கண்ணனும் - மனசு உலைந்துள்ள ராமனும். இளவலைக் கண்ணுற்றான் - தம்பியைக் கண்டு கொண்டான்.

செல்லாதவனாய், அப்படியே ஓடிவந்தான் பர்ண சாலைக்கு.

சந்தம்

தான தன்னன
தானன தானன
தா ன

ஓடி வந்தனன்;
சாலையிற், சோலைதான்
உத வும்

தோ(டு)இ வர்ந்தபூஞ்
சுரிகுழ லாள்தனைக்
கா ணான்;—

கூடு தன்னையே
பிரிந்துள ஆருயிர்
குறி யா,

தேடி வந்தது
கண்டில தாம்என
நின் றான். (334)

---

64. சோலைதான் உதவும் தோடு இவர்ந்த பூஞ்சுரி குழலாள்தனை - அங்குள்ள சோலையில் பூத்த புஷ்பங்களைக் கொய்து அலங்காரமாக அணிந்துள்ள சுருண்ட கூந்தலாளான சீதையை. காணான் - காணாதவனாய். பிரிந்துள ஆருயிர் - உடலைவிட்டுப் பிரிந்து, உயிரானது எங்கெங் கெல்லாமோ போகும், மறுபடியும் அந்த உடலையே தேடி வந்து அதற்குள் புகுந்துகொள்ளும், என்பதாக ஒரு சித்தாந்தம். அப்படிப் பிரிந்த உயிரானது, கூடு தன்னையே குறியா தேடி வந்தது - தன் உடலைக்குறித்துத் தேடி வந்தது; ஆனால், கண்டிலதாம் - உடலைக் காணவில்லை. (அழிந்து போயவிட்டது உடல்.) அப்போது, அந்த உயிரின் நிலை எப்படியிருக்கும்? அந்த நிலையில் நின்றான் ராமன். உணர்ச்சியை அபூர்வமாய் வெளிப் படுத்துகிறது உவமானம்!

## நிற்கிறேன் நெடுமரம் போல்!

65. ஒன்றும் உணராதவனாய், ராமன் ஏதோ அங்கே போய்ப் பார்த்தான். இங்கே போய்ப் பார்த்தான். தென்படவில்லை சீதை. அப்போது லக்ஷ்மணன் சொல்லுகிறான், தேர்த்தடம் ஒன்று இருப்பதாக. தேர்த்தடத்தைப் பற்றியே, தள்ளாடித் தள்ளாடிப் போகிறார்கள் ராமலக்ஷ்மணர்கள். லக்ஷ்மணன் என்ன எல்லாமோ சொல்லிக்கொண்டு வருகிறான். ஒன்றும் ராமன் காதில் விழுந்தபாடாக இல்லை. கடைசியாக, காட்சி ஒன்று, ராமன் கண்ணுக்குத் தென்பட்டது. கண்ணிலிருந்து, தீப்பொறி பறக்க, விரைந்து செல்லுகிறான் அவன்.

சந்தம்

தான தன்னன
தானன தானன
தான

மடலுள் நாட்டிய
தார்இளை யோன்தனை
மதி யான்;

மிடல்உண் நாட்டங்கள்
தீயுக நோக்கினன்
விரை வான்,—

---

65. மடல் உள நாட்டிய - புஷ்பங்களை உள்ளே திணித்துக் கட்டிய. தார் இளையோன தனை மதியான் - மாலையைச் சூடிய தம்பி சொல்லுகிற வார்த்தைகள் காதில் விழாதவனாய். மிடல உண் நாட்டங்கள் — திடமுள்ள அழகான கண்கள் தீ உக நோக்கினன விரைவான் - நெருப்புச் சிந்தும்படியாக நோக்கி முன்னேறி நடக்கிறான்.

உடலுள் நாட்டிய
குருதிஅம் பரவையின்,
உம் பர்க்

கடலுள் நாட்டிய
வரைஎனத் தாதையைக்
கண் டான். (335)

66. சடாயுவைக் காணவும், கண்ணிலிருந்து கண்ணீர் குபுகுபு என்று சொரிகிறது ராமனுக்கு.

துள்ளி யோங்கிச்சொ-
ரிந்திட நயனநீர,
சொல் லைத்

தள்ளி ஓங்கிய
அமலன்,தன் தனிஉயிர்த்
தந் தை

---

65. உடலுள நாட்டிய குருதி அம் பரவை - உடலுள் நிறைத்து வைத்துள்ள இரத்தமானது சிந்திக் கடல்போல் பெருகி நிற்க, அதற்குள், தாதையைக் கண்டான - சடாயு தோய்ந்து கிடக்கக் கண்டான். உம்பர்க் கடலுள நாட்டிய வரை என - தேவர்கள் பாற்கடலுள் நாட்டிய மந்தர கிரியைப்போல.

குறிப்பு — எல்லாம் எதிர்பாராதபடி நடந்த காரணத்தால் லக்ஷ்மணனது அலங்காரம் (மாலை சூடியது) அப்படியேதான் இருக்கிறது

66. சொலலைத் தளளி ஓங்கிய அமலன - புகழ் வார்த்தையை யெல்லாம் கடந்துசெல்லும் 'குணக்குன்றாகிய ராமன். அமலன் — யாதொரு குற்றமுமில்லாத குணவான். தன் தனி உயிர்த் தந்தை — உயிர்க்கு உயிரான தந்தையாயும்

வள்ளி யோன்திரு
　　மேனியில்த்,– தழல்நிற
　　　வண் ணன்

வெள்ளி ஓங்கலில்,
　　அஞ்சன மலையென
　　　வீழ்ந் தான். (336)

67. சடாயுவின்மேல் விழுந்த ராமனுக்குச் சுவாசமே நின்றுவிட்டது உணர்ச்சியும் இல்லைதான். லக்ஷ்மணன் பார்த்தான். பக்கத்திலிருந்த அருவியி லிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து முகத்தில் தெளித்தான்.

உ யிர்த்தி லன் ஒரு
　　நாழிகை: உணர்விலன்
　　　கொல் என்(று)

அயிர்த்த தம்பி,புக்(கு)
　　அங்கையின் எடுத்தனன்
　　　அரு விப்

---

66. வள்ளியோன் திரு மேனியில் – வள்ளலாயும் உள்ளசடாயுவின்மீது. (சடாயுவினுடைய கழுத்துக்குகீழ்ப் பட்ட பாகம் எல்லாம் ஒரே வெணமையாய் இருநதது.) விழுந்தான் – நீல மேக வண்ணனான ராமன் வீழ்ந்தான். அது எதுபோலிருந்தது? தழல நிற வண்ணன வெள்ளி ஓங்கலில் – அக்கினி சொரூபமான சிவபெருமான் வீற்றி ருக்கும் வெள்ளியங்கிரிமீது. அஞ்சனமலை என வீழ்ந்தான் – மைபோன்ற கருமலை வீழ்நதது போல் வீழ்ந்தான்.

67. உயிர்த்திலன் ஒரு நாழிகை – ராமனுக்கு ஒரு நாழிகை நேரம் சுவாசமே இல்லையென்று சொல்லும் படியாக இருந்தது. அவ்வளவு தளர்ச்சி. உணர்விலன் கொல் என்று தம்பி – இன்னும் உணர்வு வரவில்லையே என்று கிலேசங் கொண்ட லக்ஷ்மணன். புக்கு அங்கையின்

புயல்க்க லந்தநீர்
தெளித்தலும் புண்டரீ
கக் கண்

வியத்துப், பைப்பைய
அயர்வுதீர்ந்(து) இனையன
விளம் பும் (337)

68. "தங்கள் தந்தையர்களைக் கொலைசெய்த மக்களும் உலகத்திலுண்டா? அவர்களைப்பற்றிக் கேட்டிருக்கிறோமா?'

சந்தம்

தானன தன்னன
தன்னன தன்னன

'தம்தா தையரைத்
தனயர் கொலைநேர்ந்தார்

முந்தாரே உள்ளார்!
முடிந்தான் முனைஒருவன்:

---

எடுத்தனன் - பக்கத்தில் விழுந்து கொண்டிருந்த அருவி அண்டைபோய்த் தன் இரண்டு கைகளில் தண்ணீரை ஏந்திக் கொண்டுவந்து. அருவிபுயல கலந்த நீர் தெளித்தலும் - வெண்நுரை கலந்த அந்த அருவி நீரை முகத்தில் தெளித்தலும். புண்டரீகக் கண் வியத்து - தாமரைபோன்ற கண் சிறிது விரிந்து. பைப்பைய அயர்வு தீர்நது - சிறிது சிறிதாக மயக்கமும் தீர்ந்து இனையன விளம்பும் - இந்த விதமாக அலறினன் ராமன்.

68. தம் தாதையரை - தங்கள் தந்தையரை தனயர் கொலை நேர்நதார் - கொலை செயதவர்களான பிள்ளைகள். (தனயர் - பிள்ளைகள்) முநதாரே உள்ளார் - முன்னமே யாராவது உண்டா. ஆனல் இப்போது பாருங்கள் முடிந்தான் முனையொருவன - நானே காரணமாக முன்னொரு தந்தை இறந்தான்.

எந்தாய், ஓ! எற்காக
நீயும் இறந்தனையே!

அந்தோ! வினையேன்
அருங்கூற்றம் ஆனேனே! (338)

69. ''என்னுடைய மனைவியை ஒருவன் பற்ற நீ எதிர்த்தாய். உன்னுடைய தியாகத்தை என்ன என்று சொல்ல? உன்னைக் கொன்றவனும் ஒரு இடத்தில் உயிரோடு நிற்கத்தானே செய்கிறான். நீயோ கொலையுண்டு கிடக்கிறாயே, அடடா!''

'என்தாரம் பற்றுண்ண,
ஏன்றாயைச், சான்றோயைக்

கொன்றானும் நின்றான்;
கொலையுண்டு நீகிடந்தாய்:

வனதாள்ச் சிலைஏந்தி
வாளிக் கடல்சுமந்து

நின்றேனும் நின்றேன்,
நெடுமரம்போல் நின்றேனே! (339)

---

68. எந்தாய் ஓ - என் அப்பனாகிய சடாயுவே. எற்காக நீயும் இறந்தனையோ - எனக்காக நீயும் இறந்தனையோ. அந்தோ வினையேன் – அடடா, தீவினை யெல்லாம் பூர்வத்தில் செய்துள்ள நான். அருங்கூற்றம் ஆனேனே - எமனுக்கும் எமனாய் வாய்த்து விட்டேனே.

69. என்தாரம பற்றுண்ண - என்னுடைய மனைவியை எவனோ ஒருவன் பற்றிக் கொண்டு போக. ஏன்றாயை – எதிர்த்த உன்னை. சானறோயை - உயர்ந்த தியாக குணமுள்ள உன்னை. கொனறானும் நினறான - கொன்றவனும் ஒரு இடத்தில் நிற்கத்தானே செயகிறான் வனதாளச் சிலை ஏந்தி – வலிமை பொருந்திய வில் ஒன்றை ஏந்திக் கொண்டு. அதோடு; வாளிக்கடல் சுமந்து-வற்றாத அம்பறாத் தூணியையும் சுமந்து கொண்டு.

70. மேலே சொன்னவிதமாக என்னவெல்லாமோ சொல்லி அழுதான், அயர்ந்தான் ராமன். லக்ஷ்மணனும் அப்படியே அழுது புலம்பினான். ஒன்றும் விளங்காதவர்களாய் இருவரும் யோசனையிலிருக்கிறார்கள். இந்த நிலையில் ராமன் தன்மீது விழுந்த காரணத்தினாலும் லக்ஷ்மணன் கொண்டு வந்த தண்ணீர் கொஞ்சம் தன் மேல்பட்ட காரணத்தினாலும், சடாயுவுக்குக் கொஞ்சம் உள்ளே உணர்ச்சி ஏற்பட்டது.

சந்தம்

தானன தன்னன
தன்னன தன்னன

அனை பலபலவும்
பன்னி, அழும்மயங்கும்

தன்னேர் இலாதானும்;
தம்பியும்அத் தன்மையனாய்

---

70. அன்ன பல பலவும் பன்னி - மேலே சொன்ன விதமாக, பல பல விஷயங்களையுஞ் சொல்லிச் சொல்லி. அழும் மயங்கும் - அழுவான் மயங்குவான். தன்னேர் இலாதான்—தனக்குச் சமானமில்லை, கடவுள் அம்சந்தான், என்று சொல்லக் கூடிய ராமனும் தம்பியும் அத்தன்மையனாய் - லக்ஷ்மணனும் அதே மாதிரி அழுது அயர்ந்து

உன்னு உணர்வுசிறி
துளமுளைப்பப் புள்ளரசும்

இன்னு உயிர்ப்பான்
இருவரையும் நோக்கினன். (340)

71. ராமலக்ஷமணர்களைக் கண் எடுத்துப் பார்த்தான், ஆனாலும் இனம் தெரியவில்லை சடாயுவுக்கு. உயிரே போய்விடுமோ என்று சொல்லும்படி பெருமூச்சு எறிகிறான். சிறிது நேரங் கழித்துத் தான் ராமனை இனங் கண்டு கொள்ள முடிகிறது.

உற்ற(து) உணரா(து)
உயிர்உலைய வெய்துயிர்ப்பான்;

கொற்றவனைக் கண்டான், தன்
உள்ளங் குளிர்ப்புற்றான்;

---

70. உன்னு – யோசனை வந்தவர்களாய் நிற்க. புள் அரசும் – சடாயுவும். உணர்வு சிறிது உள் முளைப்ப – உணர்ச்சி சிறிது உள்ளே உண்டாகி. இன்னு உயிர்ப்பான் – கஷ்டப்பட்டுச் சுவாசம் வந்தவனாய். இருவரையும் நோக்கினன் – கண்ணை விழித்து ராம லக்ஷ்மணர்களைப் பார்த்தான. ஏதோ இனம் தெரியாத இரண்டுபேரைப் பார்த்தது போலப் பார்த்தான; அவ்வளவுதான்

71. உற்றது உணராது – ராம லக்ஷ்மணா வந்து நிற்கும் விஷயத்தை உணர முடியாமல். உயிர் உலைய வெய்துயிர்ப்பான் – உயிர் போகிற நிலையில் பெருமூச்சு எறிபவனாய். உள்ளங் குளிர்ப்புற்றான் – மனசுக்குச் சமாதானம் ஏற்பட்டுச் சொல்லுகிறான்.

'இற்ற இருசிறகும்
இன்உயிரும் ஏழுலகும்
பெற்றனனே ஒத்தேன்
பெயர்த்தேன் பழி'என்றான். (341)

72. மேலும் சொல்லுகிறான் சடாயு: ''நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி பாருங்கள். ஒன்றுக்கும் உதவாத பழிச்சுமையாகி என் உடம்பை எவ்வளவு நல்ல காரியத்தின் பொருட்டுப் போக்கும்படியாகக் கிடைத்திருக்கிறது. உங்களைப் பார்க்கக் கிடைத்து விட்டதல்லவா எனக்கு! இங்கே வாருங்கள், கிட்ட வாருங்கள்'' என்று சொல்லுகிறான்.

'பாக்கியத்தால், இன்றென்
பயனில் பழியாக்கை
போக்குகின்றேன்: கண்ணுற்றேன்,
புண்ணியரே வம்மின்'என்று;

---

71. இற்ற இரு சிறகும் - அறுந்து போன இரண்டு சிறகுகளையும். இன்னுயிரும் – நழுவுகிற உயிரையும். ஏழ் உலகும் - திக்குவிசயஞ்செய்து, ஏழு உலகங்களையும். பெற்றனனே ஒத்தேன்-பெற்றது போலவே ஆகிவிட்டேன். பெயர்த்தேன் பழி என்றான் – எனக்கு நேர்வதான பழியையும் தீர்த்து விட்டேன்.

72. கண்ணுற்றேன் - பார்த்துக்கொண்டேன் உங்களை. புண்ணியரே வம்மின் என்று – புண்ணியரே வாருங்கள் என்று சொல்லி.

தாக்கி அரக்கன்
மகுடத் தலைதுமித்த

மூக்கினால் உச்சி
முறைமுறையே மோக்கின்றான்.
(342)

73. சடாயு ரொம்ப ஆயாசத்தோடு மேலும் சொல்லுகிறான்.

'வஞ்சனையால் வந்த
வரவென்ப(து) என்னுடைய

நெஞ்சகமே முனமே
நினைவித்த தாலும்,

---

72. தாக்கி அரக்கன மகுடதத‌லை துமித்த - அரக்கனது கிரீடந்தரித்த தலையைத் தாக்கிச் சிதற அடித்த. மூக்கினால் - அத்தகைய வலிமை பொருந்திய மூக்கினால். உச்சி முறை முறையே மோக்கின்றான் - ராம லக்ஷ்மணர்களை ஒருவர் மாற்றி ஒருவராய்த் திரும்பத் திரும்ப உச்சி மோந்தான்.

குறிப்பு — சடாயுவின் மூக்கு அபாரமாகக் கடினம் கொணடது. ஆனாலும் உச்சி மோப்பதில எவ்வளவு இதம் காணகிறது!

73. வஞ்சனையால் வநத வரவு எனபது-ஏதோ வஞ்சனை யால் நோந்த காரியம் என்பதை. என்னுடைய நெஞ்சகமே முனமே நினைவித்தது - என்னுடைய மனம் முன்னமேயே எனக்கு ஒருவகையாய் எடுத்துக்காட்டியது. ஆனாலும் விஷயம் எனக்குத் தெளிவிலலை.

அஞ்சொல் மயிலை
அருந்ததியை நீங்கினிரோ,

எஞ்சலிலா ஆற்றல்
இருவிரும்' என்றுரைத்தான்,(343)

74. 'சீதையைத் தனித்திருக்கும் படியாகச் செய்துவிட்டீர்களோ'' என்று சடாயு கேட்டதற்கு லக்ஷ்மணன் பதில் சொல்லுகிறான்.

சந்தம

தானன தானன
தான தன்னன

என்றவன் இயம்பலும்
இளைய கோமகன்,

ஒன்றும்ஆண்(டு) உறுபொருள்
ஒழிவு றுவகை,

---

73. நீங்கினிரோ - சீதையைத் தனித்திருக்கும்படி யாக விட்டு விட்டு எங்கேயாவது அகன்றீர்களோ. எஞ்சல் இலா ஆற்றல் இருவிரும் - யார்க்கும் அடங்காத சக்திவாய்ந்த நீங்கள் இருவரும்.

குறிப்பு - அஞ்சொல் மயிலை அருந்ததியை என்பதில் அருமை பாவம் நன்றாய் வெளியாகிறது:? சடாயுவின் இதயம்.பேசுகிற பேச்சு இது.

74. என்றவன இயம்பலும்-மேலே சொன்னபடி சடாயு கேட்கவும். இளைய கோமகன் - லக்ஷ்மணன். ஒன்றும் ஆண்டு உறு பொருள ஒழிவுறுவகை - ஆங்கு நடந்த விஷயம் ஒன்றையும் விட்டுவிடாமல்.

வனதிறல் மாயமான்
வந்(து)அவ் ஆயிடை

நின்றதும் நிகழ்ந்ததும்
நிரப்பி ஞன்அரோ. (344)

75. லக்ஷ்மணன் எல்லா விஷயங்களையும் திறமையொடு எடுத்துச் சொன்ஞன். சடாயு மிக்க ஆதரவோடு கேட்டு விஷயத்தை மனசில் வாங்கிக் கொண்டான்.

ஆற்றலோன் அவ்வுரை
அறைய, ஆசையால்

ஏற்றுணர்ந்(து) எண்ணிஅவ்
எருவை வேந்தனும்,

மாற்றரும் துயர்அவர்
மனக்கொ ளாவகை,

தேற்றுதல் நன்றென
இனைய செப்புவான். (345)

---

74. வனதிறல்மாய மான் வந்து அவ ஆயிடை நின்றதும்– அந்தப் பொல்லாத மாயமான் வந்து அங்கே நின்றதும். நிகழ்ந்ததும் – அதன்பின் நிகழ்ந்த காரியங்களையும். நிரப்பினை அரோ - சொல்லி முடித்தான்!

75. ஆற்றலோன் அவ்வுரை அறைய – பேசுந் திறமை வாய்ந்த அந்த லக்ஷ்மணன் அப்படிச் சொல்ல. ஆசையால் ஏற்றுணர்ந்து எண்ணி–மிக்க ஆவத்தோடு யோசனைசெய்து மனதில் வாங்கி. அவ எருவை வேநதனும் – அந்தச் சடாயுவும். மாற்றரும் துயர் - மாற்றமுடியாத கடுந் துயரம். அவர் மனக் கொளாவகை – ராம லக்ஷ்மணர்களது மனசில் ஏறிவிடாதபடி, மனசு சிதைந்து போகாதபடி தேற்றுதல் நன்றென – தேற்றுதல் நல்லது என்று. இனைய செபபுவான் –பின்வருவனவற்றைச் சொல்லுகிருன.

## பிழை உங்களதே!

76. "அற்புதம் எதையாவது ஒருவன் இந்த உலகத்தில் செய்துவிட முடியுமா, முடியாது. நம்முடைய பிறவியைப் பற்றி அவ்வளவாகப் புகழவும் முடியாது. இந்தப் பிறவியில் இன்ப துன்பங்கள் எத்தனையோ வந்து நேருகின்றன. அந்த இன்ப துன்பங்கள் எல்லாம் விதி ஏற்படுத்தியதே யொழிய வேறு யாரும் செய்தது அல்ல என்பது உண்மை. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவது நமது கடமை.'

சந்தம்

தானன தானன
 தான தன்னன

'அதிசயம் ஒருவரால்
 அமைக்க லாகுமோ?

துதிஅறு பிறவியின்
 இன்ப துன்பந்தான்,

விதிவயம் என்பதை
 மேற்கோ ளல்கடன்;-

மதியினால் விதிஅதை
 வெல்ல வல்லமோ.' (346)

---

76. அதிசயம் - காரண காரிய நியதிப்படி சகல காரியங்களும் நடக்க, அதை மீறிச் செய்வதாகச் சொல்லும் அறபுதச் செயல். துதி அறு பிறவியின் - பாராட்டுக்கு உரியது அலலாத இந்தப் பிறவியின. மேற்கோளல் கடன - மனசிலப் பதிய வைத்தல கடன். மதியினால விதியதை வெல்ல வல்லமோ—எவ்வளவு யோசனையிருந்தாலும் விதியை வெலல முடியுமா நமக்கு; முடியாது.

77. ''யார்க்கும், கெட்ட காலம் வருவது இயல்பு தான். சூரியனையே விழுங்கிவிட்டுப் போகவில்லையா ஒரு பாம்பு?'

'பொங்குவெங் கோள்அரா,
விசும்பு பூத்தன்ன

வெங்கதிர்ச் செல்வனை
விழுங்கி நீங்குமால்:

அங்கண்மா ஞாலத்தை
விளக்கும் ஆய்கதிர்த்

திங்களும் ஒருமுறை
வளரும் தேயுமால்.' (347)

---

77. பொங்கு வெங்கோள் அரா - வாயைத் திறந்து வருகிற அந்தப் பொல்லாத பாம்பு. விசும்பு பூத்தன்ன வெங் கதிர்ச் செல்வனை - ஆகாயத்தில் செந்தாமரை பூத்தது போல் உதித்த சூரியனை. விழுங்கி நீங்குமால - விழுங்கி விட்டுப் போகவில்லையா. அங்கண் மா ஞாலத்தை விளக்கும் - இந்தப் பரந்த பூமியில் இருளை நீக்கி ஒளியைப் பரப்பும். ஆய்கதிர்த் திங்களும் - தெளிந்த நிலவை வீசும் சந்திரனும். ஒரு முறை - நிச்சயமாக.

78 "வெகுதூரம் போவானேன்? சம்பரன் என்ற அவுணனால் வச்சிராயுதம் ஏந்திய அந்த இந்திரனுக்கு அவமானம் வந்த காரியம் உனக்குத் தெரியுமே. அந்த அவமானத்தை நீக்க முடிந்தது, உன் தந்தையின் தோள் வலியால்த் தானே?"

'தடைக்கரும் பெருவலிச்
சம்ப ரப்பெயர்க்

கடைத்தொழில் அவுணனால்க்,
குலிசக் கையினன்

படைத்தனன் பழிஅது.
பகழி வில்வலாய்!

துடைத்தனன் உந்தை,தன்
குவவுத் தோளினால்.' (348)

---

78. தடைக் கரும் பெருவலி - தடுக்கமுடியாத பெருஞ் சக்தி வாய்ந்த. சம்பரப் பெயர்க் கடைத்தொழில் அவுணனால் - சம்பரன் என்ற ஏதோ ஒரு பெயரோடு, கேடான தொழில் செய்து வந்த அரக்கனால். குலிசக் கையினன் படைத்தனன் பழி - வச்சிராயுதத்தையே ஏந்திய அந்த இந்திரன் அல்லவா அவமானத்துக்கு உள்ளானான். அந்த அவமானத்தை. பகழி வில்வலாய் - அம்பு எய்தலில் சிறந்த வில்த் தொழிலில் வல்ல ராமனே! துடைத்தனன் உந்தை, தன் குவவுத் தோளினால் - உன் தத்தையாகிய தசரதன் தன் தோள் வலியால் நீக்கினான் - இந்திரனது அவமானத்தை.

குறிப்பு:— 'யாருக்கும் அவமானம் ஏற்படக்கூடும்; ஆனால் அதைத் துடைக்கவுங் கூடும். உன் தந்தை துடைக்கவில்லையா. ரொம்ப வருத்தத்துக்கு உள்ளாக வேண்டாம்!' என்பது பாவம்.

79. தான் கண்ட காட்சியை, அதாவது சீதையை ராவணன் தூக்கிக்கொண்டு போன காட்சியை, ராமனிடம் சொல்லச் சடாயுவுக்கு மனம் துணியவில்லை, யாருக்குத்தான் துணிவு வரும்! உள்ளம் ரொம்பத் தயங்குகிறது. எப்படியோ மனதைத் திடப்படுத்திக்கொண்டு ஒரு சாய்வான போக்கில் பேசுகிறான் ஜடாயு. ''சீதையைப் பிரிந்தற்கான காரணம் தெரிகிறது எனக்கு. தர்மம் சிதைவுண்டு போய்விட்டது, தேவர்கள் துயரத்துக்கு உள்ளாகி விட்டார்கள், பின்னே என்ன? அந்த தர்மமும் தேவர்களது துயரமும் சேர்ந்துதான் இந்தத் துன்பத்தை விளைத்திருக்கின்றன. சரி, அரக்கர்களை உலகத்தைவிட்டுக் களையவேண்டியது தான். அதன்பிறகு நல்லவாழ்வு ஏற்படும்.''

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

'பிள்ளைச்சொல் கிளிஅன்னாளைப்
பிரிவுறல் உற்றபேற்றி,
தள்ளுற்ற அறமுமதே வர்
துயரமும் தந்ததே யால்:

79. பிள்ளைச சொல் கிளி அன்னாளை — குழந்தை போலும் சொல்லுடைய கிளிபோலும் சீதையை. பிரிவுறல உற்ற பெற்றி - பிரியும்படி நேர்ந்த காரியம். தள்ளுற்ற அறமும் -புறக்கணிக்கப்பட்ட தர்மமும். தேவர் துயரமும்— அரக்கர்களால் தேவர் படுகிற துன்பமும் சேர்ந்து. தந்ததேயால் — செய்த காரியந்தான்.

கள்ளப்போர் அரக்கர்என் னும்
கனையினைக் களைந்துவாழ் தி!
புள்ளிற்கும் புலனில்பேய்க் கும்
தாயனன புலவுவே லோய்!' (349)

80. மேலே சொன்ன மாதிரி, திக்கித் திக்கி விஷயத்தைச் சொன்னான் சடாயு. ஒரு அரக்கன் தான் சீதையை எடுத்துக்கொண்டு போய் விட்டான் என்றும் சடாயுவின் சிறகை அறுத்தவன் அந்த அரக்கனே என்றும் சொல்லவில்லை. ஆனாலும், ராமன் அனுமானித்துக் கொண்டான். கோபம் அப்படியே மூண்டுவிட்டது. குமுறுகிறான் ராமன்:

'பெண்தனி ஒருத்தி தன்னைப்
பேதைவாள் அரக்கன்பற் றிக்
கொண்டனன் ஏக, நீ இக்
கோளுறக், குலுங்கல்செய் யா

79. கள்ளப்போர் அரக்கர் என்னும் - கள்ளத்தனமாகவே போர் செய்து வருகிற அரக்கர் என்னும். களையினைக் களைந்து வாழ்தி - உலகத்துக்குக் களையாயிருக்கிற அவர் களைக் களைந்து வாழ்வாயாக. புள்ளிற்கும் புலனில் பேய்க்கும் - போர்க்களத்தில் வந்து மொய்க்கும் பருந்து கழுகு முதலிய பறவைகளுக்கும் பகுத்தறிவிலாத பேய் களுக்கும் தாயனன புலவு வேல - தாய் ஊட்டுவதுபோலப் பிணங்களைக் கொண்டு ஊட்டும் வேலாயுதம். வேலோய்- அத்தகைய வேலைக் கையில் ஏந்திய வீரனே.

80. பெண்தனி ஒருத்தி தன்னை - தனியாக இருக்க நேர்ந்த ஒரு பெண்ணை பேதைவாள் அரக்கன் - மிக்க கீழானவனான வாள் ஏந்திய யாரோ ஒரு அரக்கன். பற்றிக் கொண்டனன் ஏக - எடுத்துக் கொண்டு போக நீ இக் கோள் உற - நீயும் இந்த மரணாவஸ்தைக்கு உள்ளாக.

எண்திசை இறுதியா ன
உலகங்கள் இவற்றை இன் னே,

கண்டவா னவர்களோ டும்,
களையுமா(று) இன்றுகாண் டி.' (350)

81. பார்த்தான் சடாயு: 'அடடா, இந்த ராமனுக்குக் கோபவெறி எப்படி யுண்டாய்விட்டது! மூளை கொதித்துவிட்டதே! இதை எப்படித் தணிக்கிறது?, என்று திகைத்தவனாய் அப்படியே இருந்து விட்டான். சிறிது நேரங் கழித்து ஒரு யோசனை தென்பட்டுப் பேச ஆரம்பிக்கிறான்:

"உலகத்தி லுள்ளவர்களையோ தேவர்களையோ யாரையோ குற்றஞ் சொல்ல என்ன இருக்கிறது? நம்மைத்தான் நொந்துகொள்ள வேண்டும்."

'வம்பிழை கொங்கைவஞ் சி
வனத்திடைத் தமியள்வை கக்,

கொம்பிழை மானின்பின் போய்க்
குலப்பழி கூட்டிக்கொண் டீர்!

---

குலுங்கல் செய்யா எண்திசை இறுதியான-குலுங்கி நொறுங்கிப் போயிருக்க வேண்டும்: அப்படிப் போகாத எட்டுத் திசைகளையும் முட்டியுள்ள. உலகங்கள் இவற்றை - இதோ தெரிகிற உலகங்களை. இன்னே - இந்தக்ஷணமே. கண்ட வானவர்களோடும் - இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தேவர்கள், அவர்களையுஞ் சேர்த்து. களையுமாறு இன்று காண்டி - இதோ களைந்துவிடுகிறேன் பார்,- அரக்கர்களை மாத்திரந்தானே நீ களையச் சொன்னாய்! எல்லாம் ஜன்னிக் கோளாறுதான்!

81. வம் பிழை கொங்கை வஞ்சி — வார் அணிந்த கொங்கையோடு கூடிய பூங்கொடி போன்ற சீதை. வனத்திடைத் தமியள் வைக - காட்டில் தனியாக இருக்க. கொம்பிழை மானின் பின் போய் - அழகாகக் கொம்பைச் சீவி அமைந்த மானின் பின்போய். குலப்பழி கூட்டிக் கொண்டீர் - உங்கள் குலத்துக்கே பழியை உண்டாக்கிக்

அம்பிழை வரிவில்ச்செங் கை
ஐயன்மீர்! ஆயுங்கா லை

உம்பிழை என்பதல் லால்,
உலகஞ்செய் பிழையுமுண்டோ?' (351)

---

கொண்டீர்கள் நீங்கள் இருவருமேதான். அம்பு இழை வரிவில்ச் செங்கை ஐயன்மீர் - அம்பு தொடுக்கும் வில் ஏந்திய வீரர்களே, அரசகுமாரர்களே. ஆயுங்காலை - கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால். உம்பிழை என்பது அல்லால் - நீங்கள் செய்த பிழை என்று தானே ஆகும். அப்படிக்கு அல்லாமல் உலகத்தார் பிழை செய்தார்கள் என்று ஏற்படுமா?

குறிப்பு:— ராமனுடைய கோப வெறியைத் தீர்ப்பதற்கு வேறு வழியில்லாமல் கடுமையான இந்த வார்த்தைகளைச் சடாயு சிரமப்பட்டு உபயோகிக்கிறான். இந்த வார்த்தையால் ராமன் மனது புண்படும் என்பது தெரியும். தெரிந்தாலும், அதுதான் கோப வெறிக்கு மருந்து என்று எண்ணிச் சொல்லுகிறான். மிக்கத் துணிவும் தந்திரமும் கலந்துள்ள பாவமிது. வார்த்தையிலுள்ள காரத்தை இதப்படுத்துவதற்காக, ராமன் ஒருவனைப் பார்த்துச் சொல்லாமல் இருவரையும் பார்த்துப் பேசுகிறான். லக்ஷ்மணனையும் சேர்த்துச் சொன்னது ஒரு நல்ல உபாயம்.

## அடடா செய்தி தெரியவில்லையே

82. சடாயுவின் கடுஞ்சொல் ராமனது இதயத்தில் போய்த தைத்து விட்டது. அதன் மூலமாகக் கோபவெறி இறங்குகிறது.

கோப வெறியைத் தணிப்பதற்காகவே சடாயு இவ்வாறு சொன்னான் என்று ராமனும் தெரிந்து கொண்டான். சடாயுவைப் பார்த்துச் சொல்லுகிறான் ராமன்:

''ஐயனே! உன் அருமை வாயால் கோபங் கொள்ளாதே என்று சொல்லுகிறாய்· அப்படியே செய்வது அல்லது எனக்கு மற்றொரு செயல் ஏதாவது இருக்கிறதா?

இவ்வாறு சொல்லிவிட்டு, மெள்ளக் கேட்கிறான் ராமன்· கொஞ்சம் பயந்தே கேட்கிறான்.

**சந்தம்**

தானன தானன தன்
தானன தானன தன்

**ஆயபின் அமலனு தானும்,**
**'ஐய! நீ அமைதிஎன் ன**
**வாயிடை மொழிந்ததன் றி**
**மற்றொரு செயலும்உண் டோ!**

---

82. ஆயபின் - கோபத்தை விடப்பா என்று சடாயு சொல்லவும், அப்படியே ராமனுக்குக் கோபந்தணிந்தபின். அமலன தானும் – ராமனும். ஐய' நீ அமைதி எனை – ஐயனே, என்னைப் பாாத்து நீ கோபங் கொள்ளாதே எனறு. வாயிடை மொழிந்ததனறி - வாய்திறந்து சிரமத்தோடு சொன்னதையலலாமல். மற்றொரு செயலும் உணடோ - செய்வதறகு வேறொரு செயலும் உண்டா.

போய(து)அவ் அரக்கன்எங் கே
புகல்'எனப்,- புள்ளின்வேந் தன்

ஓய்வினன் உணர்வுந்தே ய,
உரைத்திலன், உயிரும்தீர்ந் தான்.
(352)

83. விஷயத்தைச் சொல்லவேண்டும் என்று அதாவது ராவணன் வந்து சீதையை இலங்கைத் திவுக்கே எடுத்துக் கொண்டு போய்விட்டான் என்று சொல்லச் சடாயு எண்ணியதில்க் குறைவில்லை. ஆனாலும், அதைச் சொல்ல மனசு துணியவில்லை. கோப வெறியிலிருந்த ராமனுடைய மனசை, தந்திரமாய்ப் பக்குவப் படுத்திக்கொண்டு மெள்ளச் சொல்லலாம் என்று எண்ணியிருந்தான். விதி என்ன செய்தது? அப்படிச்சொல்லி முடிப்பதற்குள் அவனது உயிரை வாங்கிவிட்டது. ராமலக்ஷ்மணர்களுக்கு, விஷயம் ஒன்றும் தெரியாமல் போய் விட்டது. விதியின் கொடுமையா கேலியா இது!

சடாயு உயிர் நீங்கினான் என்பதை அறிந்தான் ராமன். அப்படியே மூர்ச்சையாகி விழுந்தான். லக்ஷ்மணன் ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னான். அதன்பேரில் ராமனுக்கு அயர்வு நீங்கிற்று. பிறகு பேசுகிறான்.

---

போயது அவ அரக்கன் எங்கே புகல் என - நீ சொன்ன அரக்கன் எங்கே போனான் என்பதைத் தயவு செய்து சொல்ல வேண்டும் என்று மெள்ளச் சொன்னமாத்திரத்தில். என்ன நேர்ந்தது? புளளின் வேநதன் ஓய்வினன உணாவும்தேய - சடாயு மிக்க அசதியுற்று உணர்வும் கழிந்தவனாய். உரைத்திலன் – பேசமுடியாமல்ப் போய்விட்டது உயிரும் தீர்ந்தான் - உயிருமே போய்விட்டது.

"இப்படியெல்லாம் நம்முடைய கஷ்டங்களை எண்ணித் துன்புறுவது, ஆம், சரியல்லதான்" என்று சொல்லி, வடிந்துகொண்டிருந்த தன் கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுகிறான் ராமன்.

அவ்வழி இளவல்கூ றி,
அறிவனும் அயர்வுநீங் கி,

இவ்வழி இனையஎண் ணின்
ஏழைமைப் பாலதென் று,

வெவ்வழி பொழியுங்கண் ணீர்
விலக்கினன்; 'விளிந்ததா தை

செவ்வழி உரிமையா வும்
திருத்துவம் சிறுவ!'என் றான் (353)

83. அவ்வழி இளவல் கூற - ஆறுதலான வார்த்தைகளை லக்ஷ்மணன், சொன்னான்; அதனால், அறிவனும் அயர்வு நீங்கி - விஷயத்தை அறிந்து கொள்ளக்கூடிய ராமனும் அயர்வு நீங்கி. இவ்வழி இனைய எண்ணின் ஏழைமைப் பாலது - வாஸ்தவந்தான் அப்பா, இந்த மாதிரியான காரியங்களை எண்ணிக்கொண்டேயிருந்தால் பிசகுதான் என்று - என்று சொல்லி வெவ்வழி பொழியுங்கண்ணீர் விலக்கினன் - மிக்க கொதிப்போடு பொழியும் தன கண்ணீரைத் துடைத்தவனாய் லக்ஷ்மணனைப் பார்த்து விளிந்த தாதை செவ்வழி உரிமையாவும் - இறந்த இந்தச் சடாயுவாகிய தந்தைக்கு முறைப்படி ஈமக்கடன்களையெல்லாம். திருத்துவம் - செய்வோம். சிறுவ என்றான - தம்பியே என்று சொன்னான்.

குறிப்பு — அப்படியே செய்தும் முடித்தார்கள். பறவையைப் பறவையாகக் கொள்ளாமல் மனுஷனிலும் மனுஷனாகச் செய்து காட்டும் கவிஞர் திறம் அதிசயிக்கத் தக்கது.

ஆரணிய காண்டம் முற்றும்

# கிஷ்கிந்தா காண்டம்

# கடவுள் வாழ்த்து

எத்தனையோ சக்திகளை இந்த உலகத்தில் கண் கூடாகப் பார்க்கிறோம்.

தும்பைச் செடியைப் பார்ப்போம்.

1. கடுகிலும் சிறிய வித்திலிருந்து பூண்டு உண்டாகி விடுகிறது. வித்து, பூண்டை உண்டாக்கியது என்பது நம் அறிவுக்கு எட்டாத ஒரு அற்புதந்தான்.

2. அப்படி உண்டான பூண்டு சிலகாலம் தனக்கான உணவுப் பொருள்களை ஆக்கிக்கொண்டு குறிப்பிடத்தக்க ஒரு காலத்துக்கு நிலைத்து நிற்பதும் அதிசயந்தான்.

3. கால வரையறை தீர்ந்தவுடன் அந்த வர்க்கத்துப் பூண்டுகள் எல்லாமே மடிந்து போகிறதைப் பார்க்கிறோம். எல்லாம் ஒத்துப்பேசி மடிந்ததாகத் தோன்றும். இதுவும் நம் அறிவுக்கு எட்டாத அற்புதந்தான்.

ஆகவே உண்டாவது என்றும், நிலைத்திருப்பது என்றும், மடிந்து போவது என்றும் மூன்று தத்துவங்கள் நிகழ்கின்றன. இந்த நிகழ்ச்சிகளை உயிர் வர்க்கம் என்று சொல்லப்படும் எல்லா வஸ்துக்களிலுமே காண்கிறோம். அவைகளை முத்தொழில்கள் என்று சொல்லலாம்.

ஒவ்வொரு தொழிலுக்கும் கர்த்தாவாக உருவத்தோடு ஒரு அதிதேவதை தங்கி நிற்கிறது என்றும் சொல்லத் தோன்றும். எப்பேர்ப்பட்ட அற்புதம் இதெல்லாம்! கடவுள் ஒருவன் இருக்கிறான் என்று எடுத்துச் சொல்ல வேறு சாட்சியமும் வேண்டுமா?

இன்னொரு விஷயத்தைப் பார்க்கலாம்: கண்ணுக்குத் தோன்றுவது மேகம். மேகமாகத் தோன்றுவதற்கு முன் கண்ணுக்குத்தோன்ருத வாயு ரூபமாக இருக்கிறது அது. இன்னும் எட்டி யோசிப்போமானுல், வானத்தில்த் தோன்றுகிற நக்ஷத்திரக் கூட்டங்கள் என்ன, சூரியன் சந்திரன் என்ன, பூமியிலேயே தோன்றுகிற எண்ணிறந்த வஸ்துக்கள்தான் என்ன, எல்லாம் ஆதியில் கண்ணுக்குத் தோன்ருத அதி நுட்பமான ஒரு வஸ்துவிலிருந்தே உண்டாயின என்று சொல்ல வேண்டியிருக்கும். ஏனெனில், சூன்யத்திலிருந்து ஒன்றும் உண்டாவதில்லை.

ஆகவே கண்ணுக்குத் தோன்றும் சகல வஸ்துக்களுமே எப்படியோ ஒரு அற்புதமான முறையில்க் கண்ணுக்குத் தோன்ருத மூலப் பொருளாகிய 'முத'லில் இருந்தே தோன்றியவை. கடவுள் தத்துவத்துக்கு இதுவும் ஒரு சாட்சியந்தான்.

மூன்றுரு எனத்தொழில்
மும்மை ஆனவும்,
தோன்றுரு எவைக்குமாம்
முதலும்,

மூன்று தொழில்களும் கடவுளை நிரூபிக்கின்றன. அப்படியே ஆதியாகிய மூலப்பொருளும் நிரூபிக்கிறது. இவை இரண்டும் கண்ணுக்குத் தோன்ருத படி தொழில் செய்வன.

கண்ணுக்குத் தோன்றாத இவைகளை எண்ணிணாலே சாட்சியம் சொல்வதுபோல் இருக்கின்றன. அப்படியானால் கண்கூடாகப் பார்க்கும் புல்ப் பூண்டுகளைப் பற்றியும், ஓடியாடித் திரியும் பிராணிகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லவா வேண்டும்? எல்லாம் ஓரே அற்புதந்தான்! கடவுளுடைய எண்ணிறந்த அற்புத சக்திகளை நமக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டே யிருக்கின்றன அவை.

இத்தனை சாட்சியங்கள் இருந்தாலும் கடவுள் நம்முடைய உணர்வுக்கு அப்பால் தாவிவிடுகிறான். அதாவது, நம்முடைய ஆணவ அறிவுக்கு எட்டாத பொருள் அந்தக் கடவுள்.

சந்தம்

தானன தானன
தான தன்னன

மூன்றுரு எனத்தொழில்
மும்மை ஆனவும்,

தோன்றுரு எவைக்குமாம்
முதலும், சொல்லுதற்(கு)

---

1. மூன்று உரு என - உருவங்கள் மூன்று என்று சொல்லும்படியான. தொழில் மும்மை ஆனவும் – ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில் விசேஷங்களும். தோன்றுரு எவைக்குமாம் முதலும் - கண்ணுக்குத் தோன்றும் பொருள்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாயுள்ள —

ஏன்றுரு அமைந்தவும்
இயங்க நின்றவும்,

சான்றுரு வாயுளான்,—
உணர்வு தாயினுன்! (354)

---

கண்ணுக்குத் தோன்றாத மூலப் பொருளும். சொல்லுதற்கு ஏன்று உரு அமைந்தவும் - பெயரிட்டுச் சொல்லுவதற்கான உருவம் அமைந்து நிற்கும் தாவர வர்க்கங்களும். இயங்க நின்றவும் - இடம் பெயர்ந்து செல்லக்கூடிய பிராணி வர்க்கங்களும் — எல்லாம் சேர்ந்து. சான்று உருவாய் உளான் - சாட்சியத்துக்கு ஏற்ற உருவம் படைத்தவன்தான் கடவுள்; ஆனாலும். உணர்வு தாயினுன் —. உணர்ச்சியைத் தாண்டிவிடுகிறான் — அதாவது நம்முடைய ஆணவ அறிவுக்கு எட்டாதவனாய் இருக்கிறான்.

## பூர்வ கதை

பஞ்சவடியில் ராமன் சீதை லக்ஷ்மணன் ஆகிய மூவரும் ஆனந்தமாய் வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் பொன்மான் ஒன்று அங்கு வந்தது. அதன் மேல் சீதைக்கு ஆசை உண்டாய்விட்டது. அதைப் பிடித்துத் தந்துவிட வேண்டும் என்று ராமனை வேண்டிக்கொண்டாள். 'உண்மை மான் அல்ல; மாய மான்' என்று லக்ஷ்மணன் சொன்னான். சீதைக்கு அதனால் மிக்க மனவருத்தம் உண்டாய் விட்டது.

அந்த வருத்தத்தைத் தணிப்பதற்காக ராமன் மானைப் பிடிக்கப் போனான். மானையும் அம்பு எய்து கொன்றான். மான் வேஷம் போட்டிருந்த மாரீசன் உயிர்போகும் தறுவாயில் ராமனது குரலில் ஏதோ ஆபத்தில் இருப்பதுபோல் கூக்குரலிட்டான்.

பர்ணசாலையிலிருந்த சீதையின் காதில் அந்த சத்தம் விழவும் அவளுக்குத் தாங்கமுடியாத பயம் ஏற்பட்டுவிட்டது.

லக்ஷ்மணனை இராமன் இருந்த இடத்துக்குப் போகும்படியாகச் சொன்னாள். "அந்தச் சத்தம் மாயச் சத்தம், யாதொரு ஆபத்தும் ராமனுக்கு இல்லை" என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தான் லக்ஷ்மணன்.

சீதை கேட்பதாக இல்லை. வேண்டாத கடுஞ் சொல் அவள் சொல்ல, அதன் காரணமாக லக்ஷ்மண னும் பர்ணசாலையை விட்டுப்போய்விட்டான்.

இப்படி ராமனும் லக்ஷ்மணனும் அகன்று இருந்த சமயம் பார்த்து, ராவணனும் சந்நியாசி வேஷம் பூண்டவனாய் வந்து, சீதையை அவளிருந்த தளத்தோடு தூக்கிக்கொண்டு போய்விட்டான்

போகிற வழியில் கழுகரசனாகிய ஜடாயு ராவணனை எதிர்த்துப் போர்செய்தான். ராவணனைச் சமாளிக்க முடியவில்லை ஜடாயுவுக்கு. அவனது இறக்கைகளை வாளால் அறுத்து வீழ்த்திவிட்டு, சீதையை கொண்டு போய்விட்டான் அரக்கன்.

பர்ணசாலைக்கு ராமனும் லக்ஷ்மணனும் வந்த போது சீதை இல்லை! நாலா பக்கமும் தேடினார்கள். காணவில்லை. அப்படியே அறிவு மயங்கினவர்களாய் மெள்ள நடந்து சென்றார்கள்.

போகும் வழியில் ஜடாயு உயிர் துறக்கும் நிலையில் கிடப்பதைக் கண்டார்கள். ஆற்றமுடியாத துயரத்தினால் ராமன் ஜடாயுவின்மேல் ஓடிப்போய் விழுந்தான். விழுந்ததின் காரணமாக ஜடாயுவுக்குக் கொஞ்சம் உணர்ச்சி வந்தது. ராம லக்ஷ்மணர்களைப் பார்த்தான். பார்த்ததும் ரொம்பவும் திருப்தி உண்டாயிற்று. ''சீதையை விட்டுப் பிரிந்து போனீர்களோ?'' என்று கேட்டான். நடந்த விருத்தாந்தத்தை லக்ஷ்மணனும் சொன்னான்.

ஜடாயு ஏதோ ஆறுதல் வார்த்தைகளைச் சொன்னான். செய்தியை முழுதும் சொல்லுமுன் உயிர் போய்விட்டது. சீதையைப் பற்றிய விவரமும் ஜடாயுவின் உயிரோடு போய்விட்டது.

இவ்வளவும் ஆரணிய காண்டத்தில் பார்த்தோம். இனி:

## 2. மராமரப் படலம்

### தர்ம தேவதைகள் இவர்கள்தானே!

1. என்ன செய்வார்கள், அப்பாவி! ராம லக்ஷ்மணர்கள்?, துயரத்தில் மூழ்கினவர்களாய் நடந்து செல்லுகிறார்கள். ராமன் தள்ளாடித் தள்ளாடி நடக்கிறான். போகிற வழியெல்லாம் ஒரே புலம்பல். மரத்தைப் பார்த்தாலும் மலையைப் பார்த்தாலும் 'சீதையைக் கண்டீர்களா' என்று கேட்கிறான். கடைசியில் பம்பை என்னும் தெளிந்த நீருள்ள தடாகத்தைக் கண்டார்கள். தடாகத்தின் பக்கம் சில நாள் தங்கிவிட்டு மறுபடியும் புறப்பட்டார்கள்.

கிஷ்கிந்தைக்குப்பக்கமான மலைச்சாரலில் நடந்து வருகிறார்கள். அப்படி வந்து கொண்டிருப்பதைக் கேட்டு அனுமன் எதிர்கொண்டு செல்லுகிறான் உலகத்திலேயே காணாத ராம லக்ஷ்மணர்களுடைய உருவத்தையும் அழகையும் கண்ட மாத்திரத்தில், அவர்கள் ஏதோ தேவலோகத்திலிருந்து வந்தவர்களோ என்று வியக்கும்படியாக இருந்தது அனுமனுக்கு.

இவ்விதம் அதிசயத்தில் மூழ்கிய அனுமனது கண்களுக்குக் கண்ட பொருள் எல்லாம் மாறுபட்டுத் தோன்றுகின்றன. ராம லக்ஷ்மணர்கள் பாதம் பட்ட காரணமாக வெம்மையாய் இருந்த கற்கள் எல்லாம் புஷ்பங்களாக மாறி இதஞ் செய்கின்றன என்று தோன்றுகின்றன.

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

காய்எரி கனலுங்கற் கள்
கள்ளுடை மலர்களே போல்த்,

தூயசெங் கமலபா தம்
தோய்தொறும், குழைந்துதோன் றும்;

---

1. காய் எரி கனலும் கற்கள் – ஏதோ அக்கினியைக் கொப்புளிப்பது போல்த் தோன்றும் கூழாங கறகள். களளுடை மலர்களே போல்த் தூய செங்கமல பாதம் தோய் தொறும் – ராம லக்ஷ்மணர்களுடைய செந்தாமரை போன்ற பாதங்கள் பதியுந்தொறும். குழைந்து தோன்றும் – ஏதோ அந்தக் கற்கள் குழைந்து மலர்கள் ஆயின என்று தோன்றும்.

போயின திசைகள்தோ றும்
மரனொடு புல்லும்எல் லாம்

சாய்வுறுந் தாழ்வபோல் இங்(கு):
இவர்களோ தருமமா வார்! (355)

---

**போயின திசைகள தோறும்** — வளைந்து வளைந்து போன பாதைகளில் எவலாம். **மரனொடு புல்லும் எல்லாம்** — மரம் புல் செடிகள் எல்லாம். **சாய்வுறும் தாழ்வபோல்** — பாதங் களை வணங்குவது போல் மெள்ளச் சாய்கின்றன. **இவர் களோ தருமம் ஆவார்** — தருமதேவதை என்று சொல்லுகிறார் களே, அவர்கள்தான் இவர்களோ!

குறிப்பு — ஒரு மகான் ஓர் இடததில் தங்கியிருக்க நேர்ந்தால், அந்த இடமும், சுற்றியுள்ள இடமுமே புனித மான தனித்தபணபுடையதாக பகதர்களுக்குத் தோன்றுவது இயல்பு. இன்றைக்கும் இது உண்மை.

கம்பர் அத்தகைய பக்தர்களது நிலையிலிருந்து சாமா னியக கல்லையும், மணலையும் பார்த்து அனுபவித்தவர். தாம் அனுபவித்ததை அனுமனது வார்த்தைகளாகச் சொல்லுகிறார்.

அனுமனது அபூர்வமான உள்ளத்தைப் பார்த்தால் செய்யுளில்ச் சொல்லிய விஷயங்கள் எல்லாம் உணமைகளே— அதாவது உண்மையான, உணர்ச்சிகளே என்பது தெரிய வரும்.

## அரசனது கட்டளைப்படி வந்தேன்

2. ராம லக்ஷ்மணர்களைப் பார்த்ததும் அனுமனது மனசு அவர்களிடத்தில் அளவில்லாதபடி ஈடுபட்டுவிட்டது. தர்ம தேவதையாய்த் தோன்றுகிறார்கள். பக்தி மயமாகவே ஆகிவிடுகிறான் அனுமன்.

நம்முடைய முன்னோர்கள் முக்திநிலையை அடைவதற்கு அறநூல், சாஸ்திரம் இவை எல்லாம் அவ்வளவாகப் பயன்தருவதில்லை யென்றும் ஞானிகளோடு தங்குவோமானால் அவர்கள் கடவுள் உண்மையை எளிதில் புகட்டிவிடுவார்கள் என்றும் கண்டிருக்கிறார்கள். துன்பத்தை நீக்கி, பூர்வ வினையினால் வரும் மயக்கங்களை நீக்கி, இறப்பு என்பது பொருட்படுத்த வேண்டாத காரியம் என்பதைக் காட்டி, கடவுளோடு நம்மை ஒன்றச் செய்து ஜீவன் முக்தர்களாகவே ஆக்குவார்கள் என்றெல்லாம் சொல்லி யிருக்கிறார்கள். அத்தகைய ஞானிகளை 'தேவர்கள்' என்று சொல்லுவது நம்மவர் மரபு.

அனுமன் சொல்லுவதைக் கேட்கலாம்.

துனபினைத் துடைத்துமா யத்
தொல்வினை தன்னை நீக் கித்

தென்புலத்(து) அன்றிமீ ளா
நெறிஉய்க்கும தேவரோ தாம்!

---

2. தெனபுலத்து அன்றி - நம்மை ஒட்டிய ஆணவம் தென் திசையிலுள்ள எமன் மூலமாகததான் சாதாரணமாய் அழிகிறது எனறு சொல்லுவாகள். ஆனால் ஜீவன் முக்தர்கள் எனபவர்கள் இந்த உடலுடனேயே, உயிர்தத்துவங்களுடனேயே நித்தியதுவத்தை அடைநதுள்ளார்கள்

என்பெனக்(கு) உருகுகின் ற(து)!
இவர்கின் ற(து) அளவில்கா தல்!

அன்பினுக்(கு) அவதியில் லை!
அடைவென்கொல், அறிதல்தேற் றேன்.
(356)

3. இவ்விதமாக எண்ணி நிற்கிறான் அனுமன். அந்த இடத்தை நெருங்கி வருகிறார்கள் ராம லக்ஷ்மணர்கள். அவர்கள் கண்ணுக்குப் படும்படியாக அனுமனும் எதிர்சென்று முறைப்படி, "உங்கள்

---

என்பதும் உண்டு. இதைக் குறித்துத்தான் 'தென்புலத் தன்றி, மீளா நெறி உய்க்கும் தேவரோ!' என்று, அனுமன் சொல்லுகிறான். இவர்கின்றது அளவில காதல் – ராம லக்ஷ்மணர்களிடத்தில் அளவில்லாத மோகம் அல்லவா மேலிடுகிறது; (இவர்கின்றது — மேலிடுகிறது). அன்பினுக்கு அவதியில்லை – உடல பொருள் ஆவி எல்லாம் இவர்களுக்குத் தத்தம் பண்ணும்படியான அன்பொன்று கரை கடந்தவாறாக என் உள்ளததில் பிறககிறதே. அடைவென் கொல்அறிதல தேற்றேன – நான் அவர்களை அடைந்து, எனனை அவர்கள் அங்கீகரிககும்படியான பாக்கியம் எனக்குக் கிட்டுமா? எனககேது கிட்டப் போகிறது!

வரவு நல்வரவாகுக!'' என்று மிக்க பணிவோடு உபசரிக்கிறான்.

இவ்வழி எண்ணி, ஆண்(டு) அவ்
இருவரும் எய்தலோ டும்,
செவ்வழி யுள்ளத்தா னும்,
தெரிவுற எதிர்சென்றெய் திக்
'கவ்வையின் றாகநுங் கள்
வரவெ'னக்;—கருணையோ னும்,
எவ்வழி நீங்கியோய்? நீ
யார்?' என, இயம்பலுற் றான். (357)

4. ''நீ யார்?'' என்று ராமன் கேட்டதும், அனுமனுக்கு எவ்வளவோ திருப்தி உண்டாய் விட்டது. மிக்க உற்சாகத்தோடு பேசுகிறான்.

---

3. இவ் வழி எண்ணி - பிரிந்தவர்களாக கண்டமாதிரி மன முருகியவாறாக எணணி எண்ணி. ஆண்டு — அனுமன் நின்ற இடத்தை நோக்கி. செவவழி உள்ளத்தானும் — உயர்ந்த நெறியிலேயே இயல்பாகச் செல்லும் உள்ளம் படைத்த அனுமனும். தெரிவுற எதிர்சென்று எய்தி - ராம லக்ஷ்மணர்களது கண்ணுக்குத் தெரியும்படியாகவே எதிர் சென்று அவர்களைக் கிட்டி. கவவை யினறாக நுங்கள் வரவு என — உங்கள் வரவு எந்தவிதமான துன்பமும் இல்லாது இருப்பதாக எனறு சொல்லவும் கருணையோனும்— ராமனும். எவ்வழி நீங்கி யோய் — எங்கிருந்து புறப்பட்டு வருகிறாய். நீ யார் — உனனைத்தெரியவில்லையே சொல்ல வேண்டும். என இயம்பலுற்றான் - என்று ராமன் சொல்ல, பேச ஆரம் பித்தான் அனுமன்

'நீலமேகம் போன்ற மேனியனே! செந்தாமரையை யொத்த கண்ணனே! உன் கண்ணைப் பார்த்தால் யாருக்குமே ஆசை உண்டாகும். பெண்கள் பார்த்தால் அவர்கள் என்னபாடு படுவார்கள் என்று சொல்லவா வேண்டும்!'' என்றெல்லாம் மனமார வாயாரப் புகழ்கிருன்.

''மஞ்செனத் திரண்டகோ ல
மேனிய! மகளிர்க்கெல் லாம்

நஞ்செனத் தகையவா கி,
நளிர்இரும் பனிக்குத்தேம பாக்

கஞ்சமொத்(து) அலர்ந்தசெய் ய
கண்ண! யான காற்றின் வேந்தற் (கு)

அஞ்சனை வயிற்றின்வந் தேன்
நாமமும் அனுமன்'' என்ருன. (358)

---

4. மஞ்சு எனத் திரண்ட கோல மேனிய-நீலமேகம் போலத் திரண்ட அழகிய உருவத்தை யுடையவனே, மஞ்சு-மேகம். மகளிர்க்கெல்லாம் நஞ்சு எனத் தகையவாகி – பெண்களுக்கு மிக்க காதல் நோயை உண்டாக்கும்படியாய. நளிர இரும் பனிக்குத் தேம்பாக் கஞ்சம் ஒத்து – மிகவுங் குளிர்ந்த பனி பெய்தபோதும் வாடாத ஒரு அரிய தாமரை புஷ்பத்தை ஒத்து. செய்ய கண்ண - விரிந்த சிவந்த கண்களையுடையவனே. யான் காற்றின் வேந்தற்கு அஞ்சனை வயிற்றில் வநதேன் – வாயு பகவானைப் பிரார்த்தித்ததின் காரணமாக என் அன்னை அஞ்சனை என்பவள என்னைப் பெறருள்.

குறிப்பு:- அனுமனது ஜாதி ஒரு தனிப்பட்ட ஜாதி. அந்த ஜாதியின் வழக்கம் தாயையே முதன்மையாகக் கொள்ளுவது. எந்த தெய்வத்தை ஆராதித்துக குழந்தை பிறககிறதோ அந்த தெயவத்தையே தந்தையென்று உபசரிப்பது அவர்கள் மரபு. அந்த மரபை ஒட்டியே அனுமன் பேசுகிருன். இதைப்போலவே சுக்ரீவனைச் சூரியனது மகன என்றும், வாலியை இந்திரனது மகன் என்றும் சொல்லிவந்தார்கள்.

5. தன்னுடைய பெயர் அனுமன் என்று சொல்லியாய்விட்டது. பிறகு தன்னுடைய அரசனைப் பற்றிச் சொல்லுகிறான். ''சூரிய புத்திரனை சுக்ரீவன் என்ற எங்கள் அரசன் இந்த மலைப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறான். அவனுடைய ஏவலாளன் நான். உங்கள் வருகையை ஆசையோடு எதிர்பார்க்கிறான். உங்களை வரவேற்று விசாரிப்பதற்காக என்னை அனுப்பியிருக்கிறான்'' என்று மிக்க அன்போடும் மரியாதையோடும் சொல்லுகிறான்.

'இம்மலை யிருந்துவா ழும்
எரிகதிர்ப் பரிதிச்செல் வன்

செம்மலுக்(கு) ஏவல்செய் வேன்
தேவ! நும் வரவு நோக்கி

விம்மலுற்(று) அனையான் ஏவ
வினவிய வந்தேன்' என்றான்:

---

5. எரிகதிர்ப் பரிதிச் செல்வன் – பிரகாசம் கொண்ட கிரணங்களை வீசும் சூரியனாகிய தேவதையின். செம்மலுக்கு ஏவல் செய்வேன் – புத்திரனான சுக்ரீவ மன்னனுக்கு ஏவலாளன் நான். தேவ நும் வரவு நோக்கி விம்மலுற்று – தேவரீர்களாகிய உங்கள் வரவை எதிர்பார்த்து மிக்க ஆசை கொண்டு. அனையான் ஏவ – அந்தச் சுக்ரீவன் கட்டளையிட. வினவிய வந்தேன் – உங்களை விசாரிப்பதற்காக இங்கே வந்தேன்.

எம்மலைக் குலமுந்தா மூ
இசைசுமந்(து) எழுந்ததோ ளான்.
(359)

---

5. எம் மலைக குலமும் தாழ – எத்தனை மலைக் கூட்டங்களைச் சேர்த்தாலும் பருமன் போதாது என்று சொல்லும்படி. இசை சுமந்து எழுந்த தோளான - புகழாகிய சுமையைச் சுமந்து விம்மிய தோளையுடைய அனுமன்; இசை சுமந்த தோள் – சக்தியாலும் வீரத்தாலும் புகழ் பெற்ற தோள்.

குறிப்பு:— ராம லக்ஷ்மணர்களைப் பார்க்க நேர்ந்த ஒருவன் சுக்ரீவ மன்னனிடம் வந்து ''உயர்ந்த ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்கவேண்டும். வெகு தூர தேசத்திலிருந்து பாதசாரிகளாய் நடந்து வருகிறார்கள், யாரோ தெரியவில்லை!'' என்று சொல்லி வைத்தான். சுக்ரீவனுக்கு வந்தவர்களிடத்தில பரிவு உண்டாகி, அவர்களை யார் என்று விசாரித்து அழைத்து வரும்படியாக அனுமனை ஏவினன் என்பது தெரியவருகிறது.

உயர்ந்த குடிப் பிறப்பு, நாகரிகம், வீரம் எல்லாவற்றையும் ராம லக்ஷ்மணர்களுடைய திவ்ய உருவங்கள் விளக்குகின்றன. அவர்களைக் கண்ட மாத்திரத்தில் ஈடுபட்ட அனுமனது வார்த்தைகள் இவை. ராமன் எப்படி அனுமனைப் பார்க்கிறான் என்பதை இனி பார்க்கலாம்.

## அரசனைக் காட்டுவாயாக!

6. அனுமான் ராம லக்ஷ்மணர்களைப் பார்த்து ஒரே பக்தியில் மூழ்கி விட்டான்.

அனுமனுடைய பேச்சைக்கேட்ட மாத்திரத்தில் ராமனுடைய உள்ளம் என்ன ஆயிற்று, பார்க்கலாம்.

ராமனிடத்தில் ஏதோ சில வார்த்தைகள் தான் பேசினான் அனுமன். தன்னுடைய தாய், அஞ்சனை என்றும், வந்தவர்களை விசாரித்து வரும்படியாக அரசன் கட்டளை யிட்டான் என்றும் சொன்னான். சொன்னது அவ்வளவுதான். ஆனாலும் அந்த வார்த்தைக்குள் அவனுடைய உயர்ந்த பண்பாடெல்லாம் தெள்ளத் தெளியக் கிடந்தது. ராமன் பார்த்தான். அவ்வளவையும் நன்றாக அறிந்து கொண்டான்

சிலருக்கு உடம்பு (ஆற்றல்) திடகாத்திரமாயிருக்கும், ஆனால் மனசு திடமாய் இருக்காது. வேறு சிலரைப் பார்க்கும்போது எத்தனையோ விஷயங்களைக் (கல்வி அமைதி) கற்று முடிவு கட்டி யிருப்பார்கள். ஆனால் இயற்கை அறிவு குன்றியே இருக்கும். ஒன்று இருந்தால் மற்றையது இராது. அது தான் சாமான்ய மக்களிடத்தில் காண்பது.

அனுமனைப் பார்த்து ராமன் என்ன எண்ணுகிறான்.

மாற்றம்அஃ(து) உரைத்தலோ டும்
வரிசிலைக் குரிசில்மைந் தன்

தேற்றம்உற்(று) இவனின் னங் குச்
செவ்வியோர் இன்மைதே றி,—

ஆற்றலும் நிறைவும்,கல் வி
அமைதியும அறிவும்,என் னும்

வேற்றுமை இவனோடில் லை,
ஆம்!என விளம்பலுற் றான். (360)

---

6. மாற்றம் அஃது உரைத்தலோடும் — அனுமன் மேலே சொன்னவாறு பேசியதும். வரிசிலைக் குரிசில் மைந்தன் — வில்லேந்திய வீரனான ராமன். தேற்றம் உற்று - அனுமனது குணங்களை நன்றாய அறிந்து கொண்டு. இவனின் ஙனங்கு செவ்வியோர் இன்மை தேறி - இவனை விடச் சிறந்த புருஷன் உலகத்தில் இல்லை என்பதை நன்கு உணர்ந்து, (தனக்குள்ளே எண்ணிக் கொள்ளுகிறான்). ஆற்றலும் நிறைவும் — தேக திடமும் மனோ திடமும். கல்வி அமைதியும் அறிவும் - கல்வியினால் ஏறபட்ட உறுதியும் இயறகை அறிவும். என்னும வேற்றுமை இவனோடு இலலை ஆம் - இப்படிக் குணங்கள் பிரிந்து நிறகும் காரியம் இவனிடத்திலில்லை, இது உறுதிதான், என விளம்பலுற்றான — இப்படி எண்ணினவனாய்த் தம்பி லக்ஷமணனைப் பார்த்துப் பேசுகிறான்.

7. இந்த அனுமனது அதி அற்புதமான சக்தி களையும் பண்புகளையும் பார்க்கும்போது அளவிட முடியாதனவாகவே இருக்கின்றன. எங்கும் காணாத மிக உயர்ந்த பண்பாடு இவனிடம் காணக் கிடக்கிறது. உலகமெலாம் இவனை இனிமேல்த்தான் அறியப்போகிறது. ஜன சமுதாயம் இப்போது உள்ள உலகத்தை விட்டு வேறொரு உலகத்துக்குப் போய்க் குடியேறின போதிலும் அந்த உலகத்தார் இவனது புகழைப் பாராட்டாமல் இருக்க முடியாது. பிறவியிலே வந்த, இவனது அறிவு நுட்பமெல்லாம் அளவிடற்கரியது. கற்றுத் தேர்ந்த விஷயங்களும் கடல்போல் விரிந்து கிடக்கின்றன. இபபடி விரிந்த கலையும் பண்பாடும் நம் கண முன் தெளிவாய்த் தெரி கின்றன. எல்லாம் ஏதோ சில வார்த்தைகள் சொன்னதன் மூலமாகத் தெரிகின்றன. "இந்தச் சொல்வல்லான் யாரோ தெரியவில்லையே!" என்று ஓரே யடியாய் தன் உள்ளத்தில் உண்டான அதிசயத்தைக் கொட்டுகிருன் தம்பியினிடம்.

'இல்லாத உலகத்தெங் கும்
ஈங்கிவன் இசைகளகூ ர,

கல்லாத கலையும்வே தக்
கடலுமே என்னுங்காட் சி

---

7. இல்லாத உலகத்து எங்கும் - இப்போது இல்லாமல், இனிமேல் உணடாகக் கூடிய உலகதடுதெங்கும் 'ஈங்கிவன் இசைகள் கூர - இதோ இருக்கிற அனுமனது புகழ் 'நிறை யும்படியாக உள்ள, கல்லாத கலையும் - பிறவியோடு வந்த உணர்ச்சி வளமும் வேதக் கடலுமே - நூல்களைக் கற்று

சொல்லாலே தோன்றிற்(று)அன் றே
யார்கொல்இச் சொல்லின்செல் வன்?

வில்லார்தோள் இளைய வீர,
விரிஞ்சனோ விடைவல்லா னோ!' (361)

8 அதிசயத்தில் மூழ்கியவனாய் ராமன் அனுமன் முன்னிலையிலேயே ஒரே ஆவேசத்தோடு பேசிவிடுகிறான். மனசு தன் வசம் ஆகவும், கவிக்

---

வந்த ஞானக் கடலுமே. என்னும் காட்சி - என்று சொல்லக்கூடியதான விளக்கமெல்லாம். சொல்லாலே தோன்றிற்று அன்றே - இப்போது இவர் பேசிய சொல்லின் மூலமாகவே தெளிவாயின. யார் கொல் இச்சொல்லின் செல்வன் — இந்தச் சொல்வல்லானை யார் என்று சொல்லு கிறது. வில்லார் தோள இளைய வீர - வில்லேந்திய தோள் கொண்ட தம்பியே. விரிஞ்சனோ விடை வல்லானோ - சகல தத்துவங்களுக்கும் சிருஷ்டிகர்த்தாவாகவுள்ள பிரமன் தானோ! அல்லது இறைவனாகிய சிவபெருமான் தானோ!'

குறிப்பு:— அற்புத ரஸம் இங்கு வாய்விட்டுப் பேசு கிறது. அந்த ரஸத்தின் தனியான தொனி ''இல்லாத'' ''கல்லாத'' ''சொலவாலே'' என்ற முழக்கங்களோடு வந்து விழுகிறது!

குலத்து அரசனுன சுக்ரீவனைப் பற்றி அனுமனிடம் விசாரிக்கிறான்.

'எவ்வழி இருந்தான்சொன்ன
கவிக்குலத்(து) அரசன்:யாங்கள்

அவ்வழி அவனைக்காணும்
அருத்தியால் அணுகவந்தேம்;

இவ்வழி நின்னையுற்ற
எமக்குநின் இன்சொல்அன்ன

செவ்வழி உள்ளத்தோனைக்
காட்டுதி தெரிய'என்றான். (362)

---

8. எவ்வழி இருந்தான் சொன்ன கவிக் குலத்து அரசன்- நீ சொன்ன உங்கள் குலத்து அரசன் எங்கே இருக்கிறான். அவ்வழி அவனைக் காணும் அருத்தியால் – அங்கே போய் அவனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால். அணுக வந்தேம் – நட்புக் கொண்டு வந்தோம். இவ்வழி நின்னை உற்ற எமக்கு – இங்கே உன்னைச் சந்திக்கக் கிடைத்த எங்களுக்கு. நின் இன் சொல் அன்ன செவ்வழி உள்ளத்தோனை–உனது சொல்லைப்போலவே அரசனது உள்ளமும் சிறந்த பண்பு வாய்ந்ததாய்த்தான் இருக்கவேண்டும்.

குறிப்பு:— ராமலக்ஷ்மணர்கள் அரசகுமாரர்கள், இப்போது அவர்களது நிலைமை பரிதாபமான நிலைமை. இந்த நிலைமையைப் பூரணமாய் உணரக்கூடியவர்கள் அரசர்கள் தானே. ஆகவே ராம லக்ஷ்மணர்கள் சுக்ரீவனைப் பார்க்க ஆத்திரப்படுகிறார்கள்.

## காலிலே விழுந்தான்!

9. ராம லக்ஷ்மணரது உருவத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர்கள் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் உயர்ந்த குணம் படைத்தவர்கள் என்றும் தெரிந்துகொண்டான் அனுமன். ஆனால் இனனார் என்று தெரியவில்லைதான். அதன் பேரில் கேட்கிருன்.

'யார்என விளம்புகேன் நான்
எங்குலத் தலைவற்கும் மை
வீர நீர் பணித்திர்'என் றுன்,
மெய்ம்மையின் வேலிபோல் வான்;-
வார்கழல் இளையவீ ரன
மரபுளி வாய்மையா தும்
சோர்விலன் நிலைமையெல் லாம்
தெரிவுறச் சொல்லலுற் றுன். (363)

10. லக்ஷ்மணன் அனுமனைச் சிறிது தூரம் எட்டி அழைத்துப் போய்ப் பேச ஆரம்பிக்கிறுன்.

---

9. வீரநீர் பணித்திர் எனருன—வீரர்களே சொல்லி அருள வேண்டும். மெய்ம்மையின் வேலி போலவான் - உலகத்தில் லக்ஷ்யங்கள் அடிக்கடி மறைந்து போகப் பார்க்கின்றன. அவைகளைச் சுட்டிககாட்டி உறுதிப் படுததுவதறகாக இடை இடையே மகானகள் பிறக்கிறுர்கள, சததியத்தை உறுதிப் படுததுவதறகாக அவ்வகையில் பிறந்தவன் அனுமன் வார்கழல இளைய வீரன - பெரிய வீரக்கழலை அணிந்த லக்ஷ்மணன மரபுளி வாயமை யாதும் - வரிசைக் கிரமமாக நடந்த காரியத்தை யெலலாம் ஒனறு விடாமல். சோர்விலன - சோர் விலலாதவனை லக்ஷ்மணன, மறந்து எதையும்விட்டு விடாதபடி சொல்லத் தொடங்கினுன்.

சூரிய குலத்திலப் பிறந்தவன் சக்கரவர்த்தியாக விளங்குபவன், உயர்ந்த பண்புடையவன், தேவர்களுக்காக அசுரர்களை ஹதம் செய்தவன் என்றெல்லாம் தந்தையைப்பற்றிப் புகழ்கிருன்.

'சூரியன் மரபில்த்தோன் றி
சுடர்நெடு நேமியாண் ட
ஆரியன், அமரர்க்கா கி
அசுரரை ஆவியுண் ட
வீரியன், வேள்விசெய் து
விண்ணுல கோடும்ஆண் ட
காரியன், கருணைஅன் ன
கண்ணகன் கவிகைமன் னன்'. (364)

11. தந்தையாகிய சக்கரவர்த்தியைப் பற்றி மாத்திரம் சொன்னுல்ப் போதாது என்று மூதாதையரைப் பற்றியும் பேசுகிருன் லக்ஷ்மணன்.

---

10. சூரியன் மரபில்த் தோன்றி—சூரிய வம்சத்தில் வந்து. சுடர் நெடு நேமி ஆண்ட - ஒளி பொருந்திய பெரிய சக்ராயுதத்தைக் கையாண்ட. ஆரியன் - உயர்ந்த பண்புடையவன். வேள்வி செய்து விண்ணுலகோடும் ஆண்ட காரியன் — தாராளமாக விருந்தும் அன்னதானமும் செய்து அது காரணமாக மிக்கப் புகழ் படைத்தவன; விண்ணுலகத்தவரை அவனது ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள் என்று சொல்லும் படி புகழ் படைத்தவன. காரியன் - எந்தக் காரியத்தையும் சாதிக்கக்கூடியவன். கருணை அன்ன கண்ணகன கவிகை மன்னன்-குடிகளை ஒப்பற்ற கருணையோடு காத்து வந்தான்; அந்தக் கருணையின் சின்னமாக இருந்தது மன்னனது வெண் கொற்றக் குடை. கண் அகன் - விசாலமான பூமி முழுவதையுமே கவித்து நின்றது குடை என்பது விஷயம்.

சூரிய குலத்துக்கு ஆதி மூர்த்தியான மனுச் சக்கரவர்த்தி சாமானியப் பட்டவன் அல்ல. மகா வீரன். அவனே யானை மீதிருந்து யுத்தஞ் செய்து அசுரர்களை வென்றான். இத்தகைய வீரத்தோடு கல்வியிலும் இணையற்றவன், அவனுடைய தர்மத்தை ஒட்டியே அரசு செலுத்திய மன்னர்கள் எத்தனையோ பேர் எங்கள் மூதாதைகள்.

'புயல்தரும் மதத்திண்கோட் டுப்
புகர்மலைக்(கு) இறையையூர்ந் து
மயல்தரும் அவுணர்யா ருய
மடிதர வரிவில்க்கொண் ட
இயல்தரும் புலமைசசெங் கோல்
மனுமுதல் யாரும்ஒவ் வாத்
தயரதன் கனகமா டத்
தடமதில் அயோத்திவந் தான்' (365)

11. புயல் தரும் மதத்திண் கோட்டு-மேகத்தையே போல மதநீரைக் கொட்டுவதாயும் நீண்ட பெரும் தந்தங்களை யுடையதாயுமுள்ள. புகர் மலைக்கு இறையை ஊர்ந்து – வெள்ளைப் புகர்ப் படலம் பெய்த மலையோ என்று சொல்லும் படியான பட்டத்து யானை மீது தானே இருந்து கொண்டு. மயல் தரும் அவுணர் யாரும் மடிதர - அறிவு கெட்ட அரக்கர்கள் யாவரும் இறந்தொழிய. வரிவில்க்கொண்ட-வலிய வில்லேந்திப் போர் செய்த வீரன். இயல் தரும்புலமைச் செங்கோல் - மரபுக்கு ஒதத நீதி முறையை அறிந்து செங்கோல் செலுத்திய. மனுமுதல யாரும் - மனுச் சக்கரவர்த்தியும் அவன பின்னோர்களான சக்கரவர்த்திகள் யாருமே. ஒவ்வாத் தயரதன் - வீரததிலும் புகழிலும் ஒப்பாகாத தசரதன் என்பவன். கனக மாடத் தடமதில அயோத்தி வந்தான்-பொன் மயமான மாளிகைகளின் வலிய மதில் சூழ்ந்த அயோததிமா நகரத்தில் அவதரித்தான்.

12. தசரதனைப் பற்றி வாயார மனமார எடுத்துச் சொல்லி விட்டான் லக்ஷ்மணன். ராமனைப் பற்றிச் சொல்ல வருகிறான் இனி.

'அன்னவன் மைந்தனும் இவ்
ஆண்தகை, அன்னைஏ வத்

தன்னுடை உரிமைச்செல் வம்
தம்பிக்குத் தகவின்நல் கி,

நன்நெடுங் கானஞ்சேர்ந் தான்
நாமமும் இராமன்என் பான்

இந்நெடுஞ் சிலைவலா னுக்(கு)
ஏவல்செய் அடியன்யா னே.' (366)

---

12. இவ ஆண் தகை-இதோ இருக்கிற வீரன். அன்னை ஏவ-சிற்றன்னையின் ஏவுதல்கள் காரணமாக. தகவின நல்கி-மிக்க ஆர்வத்தோடு கொடுத்து. நல் நெடுங்கானம் சேர்ந்தான் — நாட்டுக்கும் நகரத்துக்கும் உரிய, பொறாமை முதலிய துர்க்குணங்கள் நீங்கியுள்ள காட்டில் வசிக்கலானான். தன்னை ஏவலாளன என்று சொல்லிக்கொள்ளுகிறான்; இப்படிச் சொன்னால ராமனது தம்பி, தான என்பதை யாரும் அறிந்து கொள்ளுவார்கள்.

13. இந்த விதமாக ராமனது பரம்பரையைச் சொல்லிவிட்டு அரக்கன் மாயமாகச் செய்த காரியங்களையெல்லாம் ஒன்று விடாமல் சொல்லி முடித்தான். இதையெல்லாம் கேட்டு நின்ற அனுமனது மன நிலையை என்னவென்று சொல்லுவது!

என்றவன் தோற்றம்ஆ தி
அரக்கன்அங்(கு) இழைத்தமா யப்

புன்தொழில் இறுதியா கப்
புகுந்துள பொருள்கள்எல் லாம்

ஒன்றும்ஆண்(டு) ஒழிவுறா மல்
உணர்த்தினன்: உணர்த்தக்கேட் டு

நின்றஅக் காலின் மைந் தன்
நெடியவன் அடியில்த்தாழ்ந் தான்.
(367)

---

13. என்று அவன் தோற்றம் ஆதி - மேலே சொன்னபடி ராமனது பிறப்பு முதலான. புகுந்துள பொருள்கள் எல்லாம்- சம்பவித்துள்ள விஷயத்தை யெல்லாம். ஒன்றும் ஆண்டு ஒழிவுறாமல் உணர்த்தினன் - ஒன்றையும் விடாமல் எடுத்துச் சொன்னான். காலின் மைந்தன் நெடியவன் அடியில்த் தாழ்ந்தான் – அனுமன் ராமன் நின்ற இடத்துக்குப் போய் அவன் காலில் அப்படியே விழுந்தான்.

'இத்தகைய தியாக மூர்த்திக்கா இந்தத் துன்பம் நேர வேண்டும்!' என்று எண்ணிய மாத்திரத்தில் அனுமனுக்கு நிலை கொள்ளவில்லை. ஓடிப்போய் ராமன் காலில் விழுகிறான். வேறு என்ன செய்யக்கூடும்?

## பரமபதமே போலும் இந்த உருவம்!

14. ராமனிடம் அவன் வரலாறு இன்னது என்று தெரியவேண்டும் என்று கேட்டுக்கொண்டான் அனுமன். ராமன் ஒன்றும் சொல்லவில்லை.

லக்ஷ்மணன் பேசினான்: சிற்றன்னையின் கட்டளைக்கிணங்கி, தம்பி பரதனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டுக் காட்டுக்கு வந்ததையும், அங்கே சீதையை இழக்க நேர்ந்ததையும் எடுத்துச் சொன்னான். அப்படியே அனுமன் ராமன் காலில் விழுந்து விட்டான். தன் காலில் அனுமன் விழுந்தது பெரிய அபசாரம் என்று எண்ணுகிறான் ராமன்.

''வேதங்களுக்கெல்லாம் உறைவிடமாகவுள்ள நீ, என் காலில் விழுவது தருமமா?'' என்றெல்லாம் கூறுகிறான்.

தாழ்தனும், 'தகாதசெய் த(து)
என்னை நீ! தருமம்அன் றால்:

கேள்விநூல் மறைவலா ளர!'
என்றனன்; என்னக்கேட் ட

---

14. தாழ்தலும்—அனுமன் ராமனது காலடியில் விழவும். தகாத செய்தது என்னை நீ – தகாத இந்தச் செயலை எப்படி நீ செய்யலாம். தருமம் அன்றால் – இது தருமமா? கேள்வி நூல் மறைவலாளர – உயர்ந்த நூல்களைக் கேட்டுக் கேட்டு வேதங்களையும் கரைகண்ட பெரியோய்.

பாழியந் தடந்தோள்வீ ரன்
மாருதி, 'பதுமச்செங் கண்

ஆழியாய்! அடியேன்தா னும்
அரிக்குலத் தொருவன்'என் றான்.(368)

*15.* அனுமன் தன்னைக் குரங்கென்று பணிவாகச் சொல்லிக் கொள்ளுகிறான். பார்த்தாலும் சாமானிய மனுஷ உருவமாகத்தான் இருக்கிறது. எப்படியோ அனுமனது மனோ சக்தியும் தேக சக்தியும் அபாரமாய் இருக்கின்றன — என்று ராம லக்ஷ்மணர்கள் கருதுகிறார்கள். அவைகளையெல்லாம் தங்களுக்குத்தெரிவிக்கும்படி விரும்பிக்கேட்கிறார்கள். அவர்களுடைய வார்த்தைக்கு இணங்க அனுமனும் தன்னுடைய சாதனங்களால் வளர்ந்தேறிய சக்தி வாய்ந்த தோற்றத்தைக் காட்டுகிறான். யோக சக்தியால் உடலை, நம்பமுடியாதபடி ஒடுக்கலாம் விரிக்கவும் செய்யலாம்.

---

**14.** பாழியந் தடந்தோள வீரன் மாருதி - விசாலமாய்த் திரண்ட தோள் வீரனான அனுமன். பதுமச் செங்கண் ஆழியாய் - செந்தாமரைக் கண்ணனான திருமாலை ஒத்தவனே. அரிக்குலத்து ஒருவன் - குரங்கின் இனத்தைச் சேர்ந்தவன் தானே நான்.

ராமலக்ஷ்மணர்களுக்கு ஓரே வியப்பாய்ப் போய் விடுகிறது.

மின்னுருக் கொண்டவில் லோர்
வியப்புற; வேதநன் னூல்
பின்னுருக் கொண்டதென் னப்,
பெருமைஎப் பொருளும்தா ழப்,
பொன்னுருக் கொண்டமே ரு
புயத்திற்கும் உவமைபோ தாத்,
தன்னுருக் கொண்டுநின் றான்
தருமத்தின் தனிமைதீர்ப் பான். (369)

---

15. மின்னுருக் கொண்டவில்லோர் வியப்புற – மின்னல் போல் வில்லைத் தோளில் வைத்த ராமலக்ஷ்மணர் அதிசயிக்கும்படி. வேதநன்னூல் பின்னுருக் கொண்டது என்ன – வேதத்தில் சொல்லிய அரிய உண்மைகளுக்கு ஒரு உருவம் அமைத்தது போல. பெருமை எப்பொருளும் தாழ – பெருமைக்கு எடுத்துக் காட்டான கடல், மலை, வானம் போன்றவைகள் எல்லாம் அனுமனுடைய உருவத்துக்கு ஒப்பிட்டால் சாமானியம் என்று தோன்றும்படியாக. பொன்னுருக் கொண்ட மேரு புயத்திற்கும் உவமை போதா – பொன் மயமான மேரு பர்வதமும், புயத்தின் அளவு இல்லை என்று சொல்லும்படியானால் முழு உருவத்தை எப்படி மேரு ஒக்கும். தன் உரு கொண்டு நின்றான் – ஆத்ம சக்தி பூரணமாய் நிறைந்துள்ள தனது பேர் உருவத்தைக்கொண்டு நின்றான். தருமத்தின் தனிமை தீர்ப்பான் – பூர்வத்தில் தரும தேவதை ஒன்று என்றே இருந்தது; அனுமன் பிறந்த பிறகு தரும தேவதைகள் இரண்டு என்று சொல்லும்படி ஆய்விட்டது.

16. அனுமன் சில வார்த்தைகள் பேசவும் அது காரணமாக அவனது கல்வி, பண்பாடு இவைகளின் பெருமையைக் கண்டு ராமன் அபாரமாக வியந்தான் என்பது நமக்குத் தெரியும். இப்போது ராமனுடைய வியப்பைச் சொல்லவா வேண்டும்? அளவையெல் லாம் கடந்துவிட்டது அந்த வியப்பு!

முக்தி நிலே என்பது, இறுதியில்லாத எங்கும் நிறைந்ததாயுள்ள பரம்பொருளின் சொரூபத்தோடு ஒன்றி விரிந்து நிற்கும் நிலே. அந்த நிலேயில் கீழான ஜட தத்துவங்கள் எல்லாம் தாமாக ஒழிந்து நின்று விடும். வேதங்களாலும் தத்துவ ஞானத்தாலும் வரையறுத்துக் கொள்ள முடியாதது அது: இந்த விஷயம்தான் ஞாபகத்துக்கு வருகிறது ராமனுக்கு.

தாழ்ப்படாக் கமலம்அன் ன
  தடங்கணுன் தம்பிக்(கு)அம் மா!

'கீழ்ப்படா நின்றநீக் கி,
  மேர்படா தாகி,என் றும்

---

16. தாழ்ப்படாக் கமலம் அன்ன தடங்கணுன் தம்பிக்கு - மூடுதல் என்பது இல்லாத செந்தாமரை போன்ற கண்ணனை ராமன், தம்பியைப் பார்த்து. கீழ்ப்படா நின்ற நீக்கி - கீழான ஜட உணர்ச்சிகளே யெல்லாம் ஒழித்து. மேர்படாதாகி - இதற்குமேல் விரிதலுக்கு இடமில்லே என்னும்படி பூரணமாய். என்றும் நாள்ப்படா மறை

நாள்படா மறைகளா லும்
நலைபடா ஞானத்தா லும்
கோள்படாப் பதமே, ஐய!
குரக்குருக் கொண்ட(து)' என்றான்.
(370)

---

களாலும் - நாள்ப்பட்டது, பழையது என்று சொல்ல முடியாது, புதிய விஷயங்களை எக்காலத்திலும் வெளியிட்டுக் கொண்டிருக்கும் மறைகளாலும். நவைபடா ஞானத்தாலும் - ஆணவ மயக்கம் சிறிதுமில்லாத ஞானத்தாலும்; (நவை – குற்றம்). கோள்படாப் பதமே – வரையறுக்கப் படாத நிலையே, கோள்படுதல் – அடங்கியிருத்தல். ஐய – லக்ஷ்மணா. குரக்குருக் கொண்டது – குரங்கின் உருவை ஏதோ எடுத்துக் கொண்டது. கடவுள்த் தத்துவத்தோடு ஒன்றிய ஞானியே அனுமன் என்பது விஷயம்.

குறிப்பு:— அதிசய பாவத்தின் தொனி செய்யுளில் நிறைந்து ஒலிக்கிறது. 'ஐய' என்று சொன்ன பிறகு, வார்த்தை நிற்கிறது அது காரணமாக அதிசயத்துக்கு வேகம் உண்டாகிறது.

இதிகாசத்தில் அனுமன் எவ்வளவு உயர்ந்த பாத்திரமாக விளங்கப்போகிறான் என்பதைக் கவி எடுத்துக்காட்டுகிறது கவிஞரின் உள்ளத்தில் உண்டாகும் அதிசயம் அப்படியெல்லாம் பெருகிப் பாயவேண்டியிருக்கிறது.

## கண்டு கொண்டான்!

17. அனுமனுடைய கல்வியின் பெருமை தேக சக்தியின் பெருமை எல்லாம் அளவிடுவதற்கு அரிதாய் இருக்கின்றன என்று கண்டு கொண்ட ராமனுக்கு அடக்க முடியாத சந்தோஷம் உண்டாகி விட்டது ஆஹா! இத்தகைய மகானைப் பார்க்க நேர்ந்தது எவ்வளவு நல்ல சகுனம் பார்த்தாயா, தம்பி?'' என்கிறான்.

'நல்லன நிமித்தம்பெற் றேம்;
நங்கையைப் பெற்றேம், நம் பால்

இல்லையே துன்பமா ன(து)
இன்பமே எய்திற்(று)அன் றே!

வில்லினாய், இவனேபோ லாம்
கவிக்குலக் குரிசிலவி ரன்

சொல்லினால் ஏவல்செய் வான்! —
அவன் நிலை சொல்லப்பாற் றே!' (371)

---

17 நல்லன நிமித்தம்பெற் றேம்: — நல்ல சகுனங்கள் நமக்குக் கிடைத்து விட்டன. நங்கையைப் பெற்றேம் — ஆம், சீதையையே பெற்றுவிட்டது. வில்லினாய் - லக்ஷ்மணனே. இவனே போலாம் - அரசனது ஏவலாளனே இப்படி உயர்ந்த அறிவும் ஆற்றலும் படைத்தவனாய் இருக்கிறான. கவிக் குலக் குரிசில் விரன — குரங்கினத்துக்கு அரசனான சுக்ரீவனது சொல்லினால் ஏவல செய்வான் — கட்டளைப்படி ஏவிய வேலையைச செய்கிறவனும், விஷயம் எப்படி இருக்கிறது! அவன் நிலை சொல்லப் பாற்றே — அந்தச் சுக்ரீவனது தன்மை எப்படித்தான் இருக்குமோ; சொல்ல முடிகிற காரியமா!

குறிப்பு — அனுமனிடம் சென்ற ராமனது அன்பும் மதிப்பும், இனிக் காணப்போகும் சுக்ரீவனிடத்திலும் சென்று விட்டன!

18. மனம் தளர்ந்து வாடியிருந்த ராமலக்ஷ்மண ரது முகம் இப்போது தனியான உத்ஸாகம் பெற்றுப் பொலிவுற்றது. அனுமன் அதைப் பார்த்தான்; ரொம்பவும் களிப்படைந்தான்.

என்றகம் உவந்து, கோல
முகமலர்ந்(து) இனிது நின்ற

குன்றுறழ் தோளினோரை
நோக்கி, அக் குரக்குச் சீயம்

'சென்(று), அவன் தன்னை இன்னே
கொணர்கின்றேன் சிறிது போது

வென்றியீர் இருத்திர்' என்று
விடைபெற்று விரைவில் போனான்.
(372)

---

18. கோல முகம் - அழகிய முகம். குன்றுறழ் தோளி னோரை நோக்கி – குன்றைப் போன்ற தோள் கொண்ட ராம லக்ஷ்மணரை ஆர்வத்தோடு பார்த்து. அக்குரக்குச் சீயம் – குரங்குகளிற் சிங்கம் என்று சொல்லக் கூடிய அனுமன். சென்று அவன் தன்னை இன்னே கொணர்கின்றேன் – இதோ போய் அவனை இப்போதே அழைத்து வருகிறேன். வென் றியீர் - வெற்றிக்கே உரிய நீங்கள். சிறிது போது இருத்திர் – சிறிது நேரம் இங்கேயே இருங்கள்.

குறிப்பு:— "சுக்ரீவனே வந்து ராம லக்ஷ்மணரைப் பார்க்க வேண்டும், அதுதான் மரியாதை" என்று எண்ணு கிறான் அனுமன்.

19. அனுமன் சுக்ரீவனை அடைந்து ராமனது உயரிய பரம்பரை இன்னதென்றும், தியாகம் இன்னதென்றும், அவனுக்கு நேர்ந்த கஷ்டம் இன்னதென்றும் சொல்லுகிறான். சுக்ரீவனுக்கு அப்படியே உள்ளம் இளகிவிட்டது. ராமனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாகிவிட்டது. உடனே புறப்படுகிறான். வளைந்து வளைந்து போகும் மலைப் பாதையின் வழியாக ஏறிச் செல்லுகிறான். மரம் செடிகள் அடர்ந்த இடம் ஒன்றில் பாதை மடங்கித் திரும்பியது. அந்த இடத்தை அடைந்ததும் கொஞ்ச தூரத்தில் உட்கார்ந்திருந்த ராமனது உருவம் கண்ணுக்குத் தென்பட்டது.

கண்டனன் என்பமன் னோ
கதிரவன் சிறுவன், காமர்

குண்டலந் துறந்தகோ லக்
குரிசிலை! குளிர்க்குங்கண் ணும்

---

19. கண்டனன் என்ப மன்னோ கதிரவன் சிறுவன் - சூரிய புத்திரனான சுக்ரீவனது கண்ணுக்கு நன்றாய்த் தெரிந்து விட்டது. காமர் குண்டலங்களை துறந்த கோலக் குரிசிலை - அழகிய குண்டலங்கள் அணிந்து சோபிக்க வேண்டிய ராமனை, ஆனாலும் இப்போது குண்டலங்கள் கழற்றிய காரணத்தாலேயே ஒரு தனியான சோபை ஏற்படுகிறது. குளிர்க்கும் கண்ணும் - பார்த்தால் யாருக்கும் சாந்தி உண்டாக்கக் கூடிய கண்கள், ராமனுடைய உருவத்தைப் பார்த்தால் ஏதோ மரகத மலை என்றும், அதில் செந்தாமரைப் புஷ்பங்கள் பூத்தன என்றும், சிகரத்தில் கருமேகம் தழுவிய சந்திரன் உதயமானதோ என்றும் சொல்லத் தோன்றும்.

புண்டரீ கங்கள்பூத் து
புயல்தழீ இப் பொலிந்ததிங் கள்
மண்டலம் உதயஞ்செய் த
மரகதக் கிரியனை னை! (373)

---

புண்டரீகங்கள் பூத்து - செந்தாமரைகள் மலர்வது போல் கண் புயல் தழீஇப் பொலிந்த — கருமேகம் போன்ற முடியானது உச்சியில் அழகு செய்ய. திங்கள மண்டலம் உதயம் செய்த - சந்திர மண்டலம் உதித்தது என்று சொல்லும்படியாக. மரகதக் கிரியனை — மரகத மலை என்று சொல்லும்படியான உருவத்து ராமனை—' கண்டனன் என்ப மன்னோ.'

குறிப்பு:— எந்த வஸ்துவின் அழகும் மனித உருவத்தின் அழகுக்குப் பின்தான். அழகோடு வீரமும் தியாகமும் சேர்ந்து விட்டால்க் கேட்கவா வேண்டும்! ராமனது அழகில் சுக்ரீவன் ஈடுபட்டு விடுகிறான் — கண்ட மாத்திரத்திலேயே!

20 ராமனது உருவம் சுக்ரீவனது கண்ணுக்குத் திடீரென்று தென்பட்டது

அடுத்த நிமிஷமே லக்ஷ்மணனது உருவமும் கண்ணில் பட்டது

கண்கள்பாடு என்ன ஆயிற்று?

ஒரேயடியாய்க் கண்கள் பூத்துப் போகும் வண்ணம் பார்த்துக்கொண்டே இருந்து விட்டன.

கால்களும் மேலே பெயர முடியாமல் அப்படியே நின்று விட்டன

தனக்குள்ளே சொல்லிக்கொள்ளுகிறான் அவன்

"ஆதி அந்தமில்லாத பிரமன் எத்தனையோ உலகங்களைப் படைத்திருக்கிறான் அந்த உலகங்களில் நெடுகிலும் எத்தனையோ உத்தம ஆன்மாக்கள், எத்தனையோ புண்ணியங்களை ஆங்காங்கு செய்திருக்கின்றன இல்லை என்று சொல்ல முடியுமா?"

நோக்கினான் நெடிது;நின் றான்;—
'நொடிவரும் கமலத்தண் ணல்

ஆக்கிய உலகம்எல் லாம்
அன்றுதொட் டின்றுகா றும்

---

20. நோக்கினான் நெடிது – ஈடுபட்டு நெடுநேரம் பார்த்துக்கொண்டே இருந்தான் சுக்ரீவன். நின்றான் – அப்படியே நின்றுவிட்டான். நொடி வரும் கமலத்து அண்ணல் – அழியாத் தன்மை பெற்றுள்ள பிரமன். ஆக்கிய

பாக்கியம் புரிந்தஎல் லாம்
குவிந்(து)இரு படிவம்ஆ கி,

மேக்குயர் தடந்தோள்பெற் று,
வீரராய் விளைந்த'என் பான். (374)

21. முதலில் ராமனைக் கண்டான். பிறகு லக்ஷ்மணனையும் சேர்த்து ஒரே பார்வையாய்ப் பார்த்து அதிசயிக்கிறான். இனி அவன் தெளிகிற காரியம்!

தேறினன்:- 'அமரர்க்கெல் லாம்
தேவராம் தேவர்அன் றே

'மாறிஇப் பிறப்பில்வந் தார்
மானுட ராகிமன் னோ!

---

உலகமெல்லாம் - படைத்த உலகங்களிலே. பாக்கியம் புரிந்த எல்லாம் - செய்துள்ள புண்ணியங்கள் எல்லாம். குவிந்து இரு படிவம் ஆகி - திரண்டு உருவமாகி. மேக்கு உயர் தடந் தோள் பெற்று - மேலே ஓங்கும் தோள்களையும் பெற்று. வீரராய் விளைந்த - இந்த இரண்டு வீரராய் உருவெடுத்தன. என்பான் - புண்யங்கள் எல்லாம் சேர்ந்து, ராம லக்ஷ்மண ராய் உருவெடுத்தன என்று அதிசயிக்கிறான்.

21. தேறினன்-நிச்சயம் பண்ணிவிட்டான். அமரர்க்கு எல்லாம் தேவராம் தேவர் அன்றே - வானுலகத்திலுள்ள தேவர்களுக்கு எல்லாம் தேவர் என்று கருதக்கூடியவர்கள் தாமே. மாறி இப்பிறப்பில் வந்தார் மானுடராகி மன்னோ'- தேவலோகத்தை விட்டு மனுஷ உருவம் எடுத்து வந்திருக் கிறார்கள். மன்னோ - நன்றாக, சந்தேகத்துக்கு இடமில்லாத படி.

ஆறுகொள் சடிலத் தா னும்
அய னும்என் (று) இவர்களா தி

வே றுள குழுவைஎல் லாம்
மா னுடம் வென்றதம் மா!' (375)

22. மேலே சொன்னபடியாக ராம லக்ஷ்மணர்களின் திருமேனியில் ஈடுபட்டு நின்ற சுக்ரீவன் ஒரு

---

21. ஆறுகொள சடிலத்தானும் – கங்கையைத் தலையில் அணிந்த சிவபெருமானும். அயனும் என்று இவர்கள் ஆதி – பிரம்மா என்று சொலலப்படுகிறவர்கள் முதலான வேறுள குழுவை எல்லாம் – மனுஷ வர்க்கத்தினின்று பிரிந்து நிற்கிற கூட்டங்களை எல்லாம். மானுடம் வென்றதம்மா – மனுஷ வர்க்கம் வென்றுவிட்டது.

குறிப்பு :– இதோடு முடிகிற மூன்று செய்யுள்களும் ஒரு தொடராய நிற்கின்றன, — முதலில்க் கண்டான். அதாவது காண நேர்ந்தது, இரண்டாவதாக ஈடுபட்டு நோக்கினான்; கடைசியாகத் தெளிந்துகொண்டான்; (தேறினன்.) 'கண்டனன்' என்று ஆரம்பிதது, மூன்ருவது பாட்டில் 'அம்மா' என்று முடிவது வரை, அற்புத ரஸம் நிறைந்து தொட்ட தொட்ட இடமெல்லாம் ஊற்றெடுக்கிறது.

வாறு உணர்ச்சி வந்தவனாய்க் கால் எடுத்து வைத்து நடந்து ராமன் இருந்த இடத்தை அடைகிறான்.

எனநினைந்(து), இனையஎண் ணி,
இவர்கின்ற காதலொ தக்
கனைகடல்க் கரைநின்றே றிக்,
கண்இணை களிப்பநோக் கி,

அனகனைக் குறுகினன்; அவ்
அண்ணலும அருத்திகூ ரப்

புனைமலர்த் தடக்கைநீட் டிப்,
'போந்தினி(து) இருத்தி என் றான்.
(376)

---

22 இவர்கின்ற காதல் ஓதக் கனைகடல்க் கரை நின்று ஏறி – மேலும் மேலும் பொங்கிவரும் ஆசைப் பெருக்கா லாகிய கடலிலிருந்து கரை ஏறி. காதல ஓத – அன்பாகிய அலை மேலும் மேலும் வீசும். கனைகடல – சப்திக்கின்ற கடலின். கண் இணை – இரண்டு கண்ணும். அனகனை – குற்றமே இல்லாத ராமனை. குறுகினன – அடைந்தான். அவ் அண்ணலும் – அந்த ராமனும. அருத்திகூர – ஆர்வ மிகுந்து. புனைமலாத் தடக்கை நீட்டி – ஏதோ அழகு செய் வதறகாகச செந்தாமரை மலரைப் பொறுத்தி வைத்தாற் போலுள்ள அழகிய கையை நீட்டி. போந்தினிது இருத்தி என்றான – இங்கே வந்து உட்கார வேண்டும், என்று அருமையாய்ச் சொன்னான்.

குறிப்பு :— ராமனுக்கும் சுக்ரீவனுக்கும் இடையே வளரவேண்டிய சிறந்த உத்தம நட்புக்கு வித்து இப்படி இட்டாகிறது !

## உன் துன்பம் எனதே!

23. சுக்ரீவனை ராமன் உட்காரச் சொன்னான். ஆம், உட்கார்ந்தான். ஆனால் பேச வாய் எழவில்லை. அத்தனை உள்ளக்களிப்பு! சிறிது நேரம் கழித்துச் சமயம் பார்த்துப் பேச ஆரம்பிக்கிறான்.

''பாவமெல்லாம் தொலையும்படி நோன்புநோற்றவர் என்னைப்போல் யார் இருக்கிறார்கள்? சகல செல்வத்துக்கும் உரிய சக்கரவர்த்தித் திருமகன் அல்லவா நீ! அத்தகைய உன்னை, உலகுக்கே நாயகமாகிய உன்னை, அடைந்து விட்டேனே நான்!'

ஆயதோர் அவதியின் கண்,
அருக்கன்சேய் அரசைநோக் கித்

'தீவினை தியநோற் றார்
எனனியார்; செல்வ! நின் னை,—

நாயகம் உலகுக்கெல லாம்
என்னலாம் நலமிகோ யை,—

மேயினன! விதியேநல் கின்
மேவல்ஆ காதென்?' என் றான். (377)

---

23. ஆயதோர அவதியின் கண - நல்ல சமயத்தில். அருக்கன் சேய அரசை நோக்கி - சூரிய புத்திரனான சுக்ரீவன் ராமனைப் பார்த்து தீவினை தீய நோற்றார் - பூர்வத்தில் செய்த தீவினையெல்லாம் மிச்சமே இல்லாமல் போகும்படி தவம் இயற்றியவர். எனனின யார் - என்னைப்போல யார் இருக்கிறார்கள். செல்வ நின்னை - செல்வனே உன்னை. நலம்மிக்கோயை - சகல சம்பத்தும் உடைய உன்னை. மேயினன - அடைந்துவிட்டேன. விதியே நல்கின் மேவல் ஆகாது என - விதியே ஒன்றைக் கொடுக்கிறது என்று ஏற்பட்டுவிட்டால அடையக் கூடாத காரியம் ஒன்று இருக்கவா செய்கிறது?

24. ராமனிடத்தில் இந்தவிதமாகத் தன்னுடைய சந்தோஷத்தைத் தெரிவித்து விட்டு, அடுத்தாற்போலத் தன் அனுதாபத்தை மிக்க பரிவோடு சொல்லுகிறான். அதன் பிறகு தன்னுடைய சொந்தக் கஷ்டத்தை வெளியிடுகிறான்.

"என்னுடைய தமையன் ஒருவன் இருக்கிறான். அவனுடைய அதிகாரத்தையும் பலத்தையும் கொண்டு, என்னை எப்படியெல்லாமோ துன்புறுத்தி இருள் மூடிய பாதாள லோகம்தான் புகலிடம் என்று எண்ணும்படியாக எங்கெங்கெல்லாமோ தொடர்ந்து துரத்தினான். கடைசியில் இந்த மலை எனக்கு அரணாக வாய்த்தது. எப்படியோ பிழைத்தேன். ஒவ்வொரு நிமிஷமும் என் உயிருக்கு ஆபத்துத்தான்!"

'மூரணுடைத் தடக்கைஓச் சி
முன்னவன், பின்வந்தேனை

இருள்நிலைப் புறத்தின்கா றும்
உலகெங்கும் தொடர, இக் குன்(று)

---

24. மூரணுடைத் தடக்கை ஓச்சி - மிக்க வலிமை கொண்ட பெரிய கையை ஓங்கி; அதாவது அதிகாரத்தை எல்லாம் செலுத்தி. முன்னவன பின்வநதேனை — அண்ணனாகிய வாலி தம்பியாகிய என்னை. இருள நிலைப புறத்தின் காறும்-சதா இருள் குடியிருக்கின்ற பாதாளம் வரைக்கும்

அரணுடைத் தாகிஉய்ந் தேன்,
ஆருயிர் புரக்கலாற் றேன்,

சரண்உனைப் புகுந்தேன்'என் னைத்
தாங்குதல் தருமம்'என் ருன். (378)

25. 'சரணடைந்தேன்!'' என்று சுக்ரீவன் சொன்ன வார்த்தை ராமனை உருக்கி விட்டது. இதயம் உருகினவனுய்ச் சொல்லுகிருன் ராமன்.

---

உலகு எங்கும் தொடர - உலகத்திலப் போன போன இடம் எல்லாம் தொடர. இக்குன்று அரணுடைத்தாகி உய்ந்தேன் - கடைசியில் இந்த மலையைக் கோட்டையாக வைத்துக் கொண்டு எப்படியோ தப்பினேன. ஆருயிர் புரக்கல ஆற்றேன் - ஒவ்வொரு நிமிஷமும் என் உயிருக்கு ஆபத்துத் தான். இனி எப்படித் தப்புவது என்பது தெரியவில்லை. சரண்உனைப புகுநதேன - உன்னுடைய பாதமே எனக்குப் புகலிடம். என்னைத் தாங்குதல் தருமம் - என்னைக் காப் பாற்றுவது பெரிய தருமம்.

குறிப்பு — எவ்வளவோ கஷ்டப் படுத்தலாம் அதிகாரம் ஒருவன் கையில் இருக்கும்போது. கஷ்டத் துக்கு உள்ளானவன் சுக்ரீவனைப் போல்த்தான் பேசுவான். பாதாளம் வரைக்குமே துரத்தித் துரத்தி அடித்தான் என் றெல்லாம் கஷ்டத்தை எடுத்துச் சொல்லத் தோன்றும். கஷ்டத்தை அப்படித்தான் அளக்க வேண்டும்

''யாருக்கும் துன்பங்கள் உண்டு. உனக்கும் உண்டு. இதுவரை அனுபவித்தது போகட்டும். இனிமேல் உண்டாகும் துன்பங்கள் எல்லாம் (தீர்ந்து போகாது மிஞ்சி நிற்பன) எனக்கும் உனக்கும் ஒத்தவையே'' என்று சொல்லுகிறான்.

என்றஅக் குரக்குவேந் தை
இராமனும் இரங்கிநோக் கி

'உன்றனக் குரியஎன் று
துனபங்கள உளளமுன் னுள்

சென்றன போகமேல் வந்(து)
உறுவன, - தீர்தவின் றி

நின்றன, - எனக்கும்நிற் கும்
நேர்'என மொழியுமநே ரா. (379)

---

25. எனற அக்குரக்கு வேந்தை - என்று பேசிய குரங்குகளுக்கு அரசனான சுக்ரீவனை. துனபங்கள் உளள - ஏற்பட்டுள்ள துனபங்கள். முன்னுள் சென்றன போக - முனனமே கழிந்து போன துனபஙகள போக. மேல வநது உறுவன - இனிமேல் உணடாகும் துன்பங்கள். தீர்தலின்றி நின்றன - இதுவரை தீர்கக முடியாதபடி மிஞ்சியுள்ள துனபஙகள். எனக்கும் நிற்கும் நேர் - எனக்கும உனககும் ஒத்தவைகளே, அவைகள் விஷயமாக நமக்குள் விததியாசம் இல்லை. மொழியும் நேரா - நோக்து, அதாவது இதயம் ஒத்து மொழியும்.

குறிப்பு:— துன்பப்பட்ட ஆன்மா என்று தெரிந்த மாத்திரத்தில் சுக்ரீவன மேல் ராமனுககு அப்படியே இரக்கம் உண்டாய் விட்டது. ராமன என்றால் இரக்கத்தை ஒழிக்க இயலாதவன் என்று சொல்ல வேண்டும்.

## வீடு தங்களுடையது!

26. சுக்ரீவன் தன் தமையனால் துன்புறுத்தப் பட்டான் என்றதைக் கேட்ட மாத்திரத்தில் அவனிடம் ஒரே இரக்கம் உண்டாய் விட்டது ராமனுக்கு. 'இனி உனக்கு ஏற்படும் கஷ்டமெல்லாம் எனக்கும் ஏற்பட்டவைதான், வேறல்ல'' என்று உணர்ச்சியோடு சொன்னான் ராமன்.

மேலும் ஆவேசத்தோடு பேசுகிறான்:

''வானத்திலானாலும் சரி இந்த உலகத்திலானாலும் சரி, யாராவது உன்னைத் துன்புறுத்தினார்கள் என்றால் என்னையே துன்புறுத்தினவர்கள் தான் அவர்கள்.''

'மற்றினி உரைப்பதென் னே!
வானிடை மண்ணில் நின்னைச்

செற்றவர் எம்மைச்செற் றார்;
தீயரே எனினும் உன்னோ(டு)

உற்றவர் எமக்கும் உற்றார்;
உன்கிளை எம(து), எம்காதல்

சுற்றம்உன் சுற்றம்; நீ என்
இன்னுயிர்த் துணைவன்' என்றான்.
(380)

---

26 வானிடை மண்ணில்-வானவரானாலும்சரி, மக்களே யானாலும்சரி. நின்னைச் செற்றவர் – உன்னைத் துன்புறுத்தியவர். உன்னோடு உற்றவர்-உனக்குச் சிநேகமாக உள்ளவர்.

27. உள்ளத்திலிருந்து வந்த அந்த உறுதி மொழியைக் கேட்ட மாத்திரத்தில் பக்கத்திலிருந்தவர்கள் எல்லாருக்கும் ஒரே ஆனந்தவெறி உண்டாய் விட்டது. குரங்குக் கூட்டம் எல்லாம் ஒரே படியாய் ஆரவாரம் செய்தன. அஞ்சனையின் மகனான அனுமனது மேனியெல்லாம் புளகாங்கிதமடைந்தது. மரங்களிலிருந்து புஷ்பங்கள் உதிர்ந்தன — வானத்திலிருந்து விழுந்த மாதிரி.

ஆர்த்தது குரக்குச்சேனை,
அஞ்சனை சிறுவனமேனி

போர்த்தது பொடித்தரோமப்
புளகிதம், பூவின்மாரி

---

உன் கிளை எமது – உன்னுடைய சுற்றத்தார் என்னுடைய சுற்றத்தார் ஆவர். எம் காதலைச் சுற்றம் – என்னிடத்தில் அன்பு பாராட்டுகிற சுற்றத்தார். இன் உயிர்த் துணைவன் – உயிருக்கு உயிரான நண்பர்.

குறிப்பு:— செய்யுளில், உள்ளம் திடீர் என்று பொங்கிய காரணத்தால் தன்னை ஒருமைப்படுத்தி 'எனக்கு' என்று சொல்ல நேர்ந்தது ராமனுக்கு. உள்ளத்தின் வேகம் கொஞ்சம் குறையவும் விஷயந் தெரிந்தவனாய் லக்ஷ்மணனையும் சேர்த்து 'எம்மை' என்று சொல்லுகிறான், —'நின்னைச் செற்றவர் எம்மைச் செற்றார்.

27. ஆர்த்தது குரக்குச் சேனை – குரங்குகளாலாகிய படை சந்தோஷத்தினால் ஆரவாரித்தது. அஞ்சனை சிறுவன் மேனி – அனுமனது மேனி. போர்த்தது – போர்த்துக் கொண்டது. பொடித்த ரோமப் புளகிதம் – நிமிர்ந்து நின்ற

தூர்த்தனர் விண்ணோர்,மேக
வண்ணனுங்(கு) அருளிச்சொன்ன

வார்த்தைஎக் குலத்துளோர்க்கும்
மறையினும் மெய்யென்(று)உன்னு.
(381)

28. அனுமனும் அப்படியே எழுந்து சென்று ராமன் பாதத்தில் வணங்கியவனைக் கைகளைக் கூப்பிக்கொண்டு சொல்லுகிறான் -

ஆண்டெழுந்(து) அடியில்த்தாழ்ந்த
அனுமனும் தடக்கைகூப்பி,

'தூண்திரள் தடந்தோள்மைந்த,
தோழனும் நீயும்வாழி!

---

ரோமம் புளகிதத்தால். பூவின்மாரி தூர்த்தனர் விண்ணோர் - தேவர்கள் சொரிந்தார்கள் என்று சொல்லும்படி மரங்களி லிருந்து பூமாரி சிந்தின. மேக வண்ணன் ஆங்கு அருளிச் சொன்ன வார்த்தை - மேக வண்ணனான ராமன் உள்ளங் கனிந்து சொன்ன வார்த்தை. எக்குலத்துளோர்க்கும் மறை யினும் மெய் என்று உன்னு - வேதமானது எப்படி ஜாதி பேதங்களைக் கடந்து உண்மை பேசுகிறதோ, அப்படியே ராமன் சொன்ன வார்த்தையும் ஜாதி பேதங்களைக் கடந்து சொன்ன வார்த்தை என்று எண்ணி—ஆர்த்தது குரக்குச் சேனை.

28. தூண் திரள் தடந்தோள்மைந்த - தூண போன்ற திரண்ட தோளையுடைய ராமனே. தோழனும் நீயும் வாழி - உனக்கு உயிர்த் தோழனாய் அமைந்திருக்கின்ற சுக்ரீவனும்

ஈண்டுநும் கோயில்எய்தி
இனிநின்உடம் இருக்கைக்காண
வேண்டும்நும் அருள்என்?'என்றான்
வீரனும் 'விழுமி(து)'என்றான். (382)

---

நீயும் என்றென்றும் வாழ்க. ஈண்டு நும் கோயில் எய்தி — உங்கள் இருவருக்கும் சொந்தமான அரண்மனைக்கு இப்போது போய். இனிநின் நும் இருக்கை காணவேண்டும் — உனக்கு ஸ்திரமான வாசஸ்தலம் இருக்கிறது. அதில்க் குடியேறும்படி எழுந்தருளவேண்டும், நும் அருள் என் — உன்னுடைய திருஉள்ளம் எப்படியோ என்றான். வீரனும் 'விழுமிது' என்றான் - ரொம்பச் சரி என்று சொன்னான் ராமனும்.

குறிப்பு:— 'நும்' என்று சொன்னது சுக்ரீவனது அரண்மனை உனக்கும் சொந்தமானது என்று சொல்லும் உபசாரம்.

## ராமபாணம்!

**29.** அனுமனது வேண்டுகோளுக்கு இணங்கி ராம லக்ஷ்மணர் சுக்ரீவனது அரண்மனைக்குப் போகிருர்கள். அங்கே அவர்களுக்குச் சகலவித உபசாரமும் விருந்தும் நடக்கிறது. அத்தனை உபசாரத்திலும் விருந்திலும் ஒரு குறையைக் கண்டான் ராமன். சுக்ரீவனது மனைவி வந்து உபசரிக்கவில்லை ஏதோ ஒரு காரணத்தினுல் அந்தக் குறை என்பதைக் கண்டுகொண்டான். விசாரித்தான். அனுமன் நடந்த வரலாற்றைச் சொன்னுன்:

'வாலி என்பவன் சுக்ரீவனுடைய தமையன். அவன் கிஷ்கிந்தைக்கு ராஜாவாக இருந்து ஆண்டு வந்தான். அறிவிலும் கல்வியிலும் புஜபலத்திலும் அவனுக்கு ஈடானவர் உலகத்தில் இல்லை என்று சொல்லலாம்.

மாயாவி என்ற பகையரசன் வாலியை எதிர்த்து வந்தான். வாலி அவனோடு போராடி வென்று துரத்தினுன். கடைசியாக அந்த மாயாவி வெகு தூரம் போய் யாருக்கும் தெரியாத ரகசிய வழியாக எங்கேயோ ஓடிவிட்டான் வாலியும் அந்த வழியாக அவனைத் தொடர்ந்து போனுன். போகும்போது கணவாயில் சுக்ரீவனை இருந்து காத்துக்கொண்டிருக்கும்படியாகச் சொல்லிவிட்டுப் போனுன்

தமையன் சொன்ன கட்டளைப்படி சுக்ரீவனும் காத்துக்கொண்டே இருந்தான். நாட்கள் சென்றன. மாதங்கள் சென்றன வாலி திரும்பவில்லை.

தமையன் ஏதோ காரணத்தால் உயிர் இழந்து விட்டான் என்று எண்ணி, கணவாயை ஒரு பெரும் பாறையைக் கொண்டு மூடிவிட்டான்.

ஊருக்கு வந்து பெரியோர்களைக் கலந்ததில் அவர்களும் சொன்னார்கள் - 'தமையன் இனி வருவதற்கில்லை, சுக்ரீவனே இனி ராஜ பதவியை ஏற்று நாட்டை ஆள வேண்டும்' என்பதாக. அப்படியே சுக்ரீவனும் ஆண்டுவந்தான். குடிகள் எல்லாருக்கும் திருப்தி உண்டாகும் முறையில் ஆண்டு வந்தான்.

இப்படி அரசியல் நடந்துகொண்டிருக்கும்போது, வாலி எங்கெங்கெல்லாமோ போய்விட்டு மீண்டும் கணவாயை அடைந்தான். பாறையை வைத்து வழியை அடைத்திருந்தது. பாறையைத் தள்ளிவிட்டு வெளியே வந்தான். அங்கே நின்றவர்களை விசாரித்தான். நின்றவர்கள் புதிய வேலையாளர். சுக்ரீவ ராஜாவின் கட்டளைப்படி காவல் காக்கிறோம் என்றார்கள். வந்துவிட்டது கோபம் வாலிக்கு. தன்னைக் கொல்ல வேண்டுமென்றே சுக்ரீவன் பாறையை வைத்து வழியை அடைத்தான், ராஜ்யத்தையும் கைப்பற்றிக்கொண்டான் என்ற விஷயத்தை எண்ண எண்ண ஆங்காரம் மூண்டது. 'அப்படியா? சுக்ரீவனை இப்போதே கொன்றுவிடுகிறேன்' என்று ஆரவாரித்துக் கொண்டு சென்றான்.

சுக்ரீவன் உயிர் தப்புவதற்காக எங்கெல்லாமோ ஓடினான். கடைசியாக இந்த இடத்தைப் புகலிடமாகக் கொண்டு தங்க நேர்ந்தது.

ராஜ்யம் மீண்டும் வாலி வசம் போய்விட்டது. ஆனால் அதோடு நிற்கவில்லை விஷயம். சுக்ரீவனது அருமை மனைவியையும் கைப்பற்றிக்கொண்டான். இன்னும் வாலியின் கொடுமை தணிந்ததாக இல்லை.

சுக்ரீவனுக்கு வேண்டியவர்களாய் நாங்கள் சிலர் இங்கே உடன் வசிக்கிறோம்."

இப்படியாக சுக்ரீவனது வரலாற்றைச் சொல்லி முடித்தான் அனுமன்.

பொய்யி லாதவன்
வரன்முறை இம்மொழி
புக ல—

ஐயன், ஆயிரம்
பெயருடை அமலர்க்கும்
அம லன்,

வையம் நுங்கிய
வாயிதழ் துடித்தது,
மலர்க் கண்

செய்ய தாமரை
ஆம்பலம் போதெனச்
சிவந் த. (383)

---

29. பொய்யிலாதவன் – அனுமன். வரன்முறை இம் மொழி புகல – சுக்ரீவனது வரலாறான இந்த வார்த்தைகளைச் சொல்ல. ஐயன் ஆயிரம் பெயருடை அமலர்க்கும் அமலன் – எம்பெருமானான ராமன், அதாவது ஆயிரம் நாமங்களுக்கு உரியவனும், புனித தேவதைகளுக்கெல்லாம் புனித தேவதையுமான விஷ்ணு மூர்த்தியின். வையம் நுங்கிய வாயிதழ் துடித்தது – உலகத்தையே அமுது செய்த வாய் இதுதானோ என்று சொல்லக்கூடிய அழகிய செவ்வாயின் இதழ் துடித்தது. மலர்க்கண் செய்ய தாமரை – விரிந்த கண்களான செந்தாமரைகள். ஆம்பல் அம்போது எனச் சிவந்த – செவ்வாம்பல் போலவே சிவந்துவிட்டன.

30

30. ராமன் என்றால் யார்; ஏதோ சிற்றன்னை ஒரு வார்த்தை சொன்னாள். அதற்காகத் தனக்கு உரிமையான, நிலையான ஒரு பெரும் ராஜ்யத்தையே தம்பிக்குக் கொடுத்தவன். அந்த ராமனது காதில் அல்லவா விழுகிறது அனுமன் சொன்ன வார்த்தை!

ஈரம் நீங்கிய
 சிற்றவை சொற்றனள்
  என்ன,

வாரம் நீங்கலா(து)
 இளவற்கு மன் அர(சு)
  உரி மைப்

பாரம் ஈந்தவன்,—
 பரிவிலன் ஒருவன், தன்
  இளை யோன்

தாரம் வெளவினன்
 என்றசொல் தரிக்குமா(று)
  உள தோ! (384)

---

30. ஈரம் நீங்கிய சிற்றவை - இரக்கம் இல்லாத கைகேசி. சொற்றனள என்ன - ஏதோ சொன்னாள் என்ற காரணத்தினால. வாரம் நீங்கலாது இளவறகு - அன்பு குறையாமல் பரதனுக்கு. மன் அரசு உரிமைப பாரம் ஈந்தவன் - நிலையான ராஜ்ய பாரத்தைக் கொடுத்த ராமன். பரிவிலன் ஒருவன தன் இளையோன் தாரம் வெளவினன் - இரக்கமற்ற ஒரு பாவி தன் தம்பியின் மனைவியை அபகரித்தான்.

31. ராமனுக்குத் தம்பிகள் என்றால் உயிர், தனக்கு என்ன கேடு வந்தாலும் சகித்துக் கொள்ளக் கூடும்; ஆனால் தம்பி ஒருவனுக்குக் கஷ்டம் வந்து விட்டால் சகிக்க முடியாது.

இப்பேர்ப்பட்ட ராமனுக்கு மனைவியை இழந்ததனால் உண்டான கடுந் துன்பம் இதயத்தைக் குத்திக் கிளரிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் ஒருவன் தன் தம்பியின் மனைவியை அபகரித்தான் என்று கேட்டால் மனசு என்ன ஆகும்? ஒரே கொதிப்பாய்க் கொதித்து விட்டது; கோபம் ஒரு வெறியாக மாறிவிட்டது.

சுக்ரீவனிடத்தில் இரக்கமும், அவன் தமையன் வாலியினிடத்தில் கோபமும் சேர்ந்து பொங்கிப் புரண்டு வெளிவருகின்றன.

உலகம் ஏழினோ(டு)
ஏழும்வந்(து) அவன்உயிர்க்(கு)
உதவ
விலகும் என்னினும்,
வில்லிடை வாளியின்
வீட்டித்,

---

31. உலகம் ஏழினோடு ஏழும் வந்து-பதினாலு உலகத்திலுள்ளவர்களுமே வந்து. அவன் உயிர்க்கு உதவ விலகும் என்னினும் - அந்தப் படுபாவியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இடம்பெயர்ந்து வந்து போர்செய்த போதிலும். வில்லிடை வாளியின் வீட்டி - என் வில்லிலிருந்து புறப்படும் அம்புகளால் எல்லாரையும் கொன்று.

தலைமை யோடுநின்
தாரமும் உனக்கின்று
தரு வேன்,
புலமை யோய்!அவன்
உறைவிடம் காட்டெனப்
புகன் ருன். (385)

---

81. தலைமையோடு நின் தாரமும் உனக்கு இன்று தருவேன்—அரசுரிமையோடு உன் மனைவியையும் நான் உனக்குத் தருகிறேன். புலமையோய் – அறிவில் சிறந்த சுக்ரீவனே!

குறிப்பு;— தம்பிக்குக் கொடுமை செய்தான் வாலி என்றதும், கோபாவேசமும் வீர வெறியும் ஒன்று சேர்ந்து ராமனது தோள்களைத் திமிரும் தினவும் கொள்ளச் செய்தன. ஏதோ வாலி எதிரில் நிற்கிறதாக உருவெளித் தோற்றம் காணவும், அப்படியே ஒரு பாணத்தை எடுத்து வில்லில் வைத்து வேகமாக எய்தான். அவ்வளவுதான்; எதிரில் வரிசையாக நின்ற மராமரங்கள் ஏழையும் ஊடுருவி அப்பால்ச் சென்றது பாணம். ராமபாணம் என்ருல் இன்னது என்று சுக்ரீவனும் அனுமனும் தெரிந்து கொண்டார்கள்.

## 3. வாலி வதைப் படலம்

### குன்று அதோ தகருகிறது!

1. ''வாலி இருக்கும் இடத்தைக் காட்டு இப் போதே!'' என்று ராமன் சொன்னானோ இல்லையோ, அப்படியே புறப்பட்டுவிட்டான் சுக்ரீவன். ராமனும் பின் தொடர்ந்தான்.

வாலி இருந்த குன்றின் பக்கமாகப் போனார்கள். அங்கே ஒரு சமவெளியான மைதானம். சுற்றிலும் மரங்களும் புதர்களும் அடர்ந்திருந்தன. ராமனும் லக்ஷ்மணனும் புதர் அடர்ந்த ஒரு இடத்தில் இருந்து கொண்டார்கள். சுக்ரீவன் மாத்திரம் வாலியின் வீட்டு முற்றத்துக்கு ஏறிப்போய் அங்கு நின்று கொண்டு, வீர வார்த்தைகள் பேசி வாலியைப் போருக்கு அழைத்தான். அவனுடைய வீர ஆர வாரம் பெரிய முழக்கமாய் இருந்தது. அந்த முழக்கம் வீட்டுக்குள் படுத்திருந்த வாலியின்காதில் விழு கிறது. ஏதோ யானை, மதயானைதான் கத்துகிறது என்று வைத்துக்கொள்வோம். அதைக் குகைக்குள் இருக்கிற சிங்கம் எப்படிப் பொருட்படுத்தாது ஏற்குமோ அப்படித்தான் ஏற்கிறான் தம்பியின் ஆர்பாட்டத்தை, வாலி.

> மால்பெரும் கடகரி
> முழக்கம், வாள்அரி
>
> ஏற்பது செவித்தலத்(து)
> என்ன, ஓங்கிய

---

1. மால்பெரும கடகரி முழக்கம் - அச்சத்தைத் தரும் படியான பெரிய மதயானையின் முழக்கத்தை. வாள அரி ஏற்பது செவித்தலதது என்ன — பெருவலி படைத்த ஒரு

*ஆர்ப்பொலி கேட்டனன்,*
*அமளி மேல்ஒரு*

*பாற்கடல் கிடந்ததே*
*அனைய பான்மையான். (386)*

2. ஏதோ கோபங் கொண்டவனாய், போர் செய்யவே வந்திருக்கிறான் தம்பி என்று தெரிந்து கொஞ்சம் யோசனை பண்ணினான் வாலி.

*உருத்தனன் பொரஎதிர்ந்(து)*
*இளவல் உற்றமை,—*

*வரைத்தடந் தோளினான்*
*மனத்தின் எண்ணினான்;*

---

சிம்மம் காதில் ஏற்ற மாதிரி. *ஓங்கிய ஆர்ப்பொலி கேட்டனன்* – சுக்ரீவனது ஆரவாரத்தைக் கேட்டான். *அமளி மேல் ஒரு பாற்கடல் கிடந்ததே அனைய பான்மையான* – கட்டிலின் மேல் ஒரு பாற்கடல் கிடந்ததோ என்று சொல்லும் படியான வாலி—வாலியின் நிறம் ஒரே வெண்மை.

2. *உருத்தனன் பொர எதிர்ந்து இளவல் உற்றமை* – கோபங் கொண்டவனாய்ப் போர் செய்யவே வந்திருக்கிறான் தம்பி என்பதை. *வரைத்தடத் தோளினான்* – மலையை ஒத்த தோள் கொண்ட வாலி. *மனத்தின எண்ணினான்* – கொஞ்சம் யோசனை செய்தான். யோசனை செய்ததில் சிரிப்புத்தான் வந்தது!

சிரித்தனன்: அவ்வொலி
திசையின் அப்புறத்(து)

இரித்த(து)அவ் உலகம்ஓர்
ஏழொா(டு) ஏழையே. (387)

3. அப்படியே படுக்கையை விட்டு எழுந்தான் வாலி. ஒரே கோபமாய்க் கையோடு கையைப் புடைத்தான். பூமியை எட்டுத்திக்குகளிலும் நின்று தாங்கிக் கொண்டிருக்கும் மதயானைகளே அச்சத்தினால் சோர்ந்து போயின என்றால், கேட்பானேன் மற்றவைகளின் பாடு!

கைக்கொடு கைத்தலம்
புடைப்பக்,— காவலின்

திக்கயங் களுமமதச்
செருக்குச் சிந்தின,

---

2. அவ்வொலி – அந்தச் சிரிப்பின் முழக்கமானது. திசையின அப்புறத்து – நாலு திசைகளுக்கும் அப்பால் கிடந்துள்ள. உலகம் ஏழொடு ஏழையே – பதினாலு உலகங்களையுமே. இரித்தது – அஞ்சி நடுங்கச் செய்தது.

3. காவலின திக்கயங்களும் – பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிற அஷ்ட திக்கு கஜங்களும், மதச் செருக்குச் சிந்தின– மதத்தினால் உண்டாகிய வீரமும் பெருமிதமும் அவைகளை விட்டு நீங்கின. சிந்தின – இழந்தன. உக்கன உகும்

உக்கன உரும்இனம்,
உலைந்த உம்பரும்,

நெக்கென நெரிந்தன
நின்ற குன்றமே, (388)

---

இனம் — இடியினங்கள் நாலா பக்கமும் சிதறுண்டு விழுந்தன. உலைந்த உம்பரும் - வான் முகடும் உடைந்து போய் விட்டது. நெக்கென நெரிநதன நின்ற குன்றமே - நிலையாய் நின்றுள்ள குன்றுகள் தூள் தூளாய்த் தகர்ந்து போய் விடுமோ என்று தோனறியது.

குறிப்பு:— வாலியின் அளவிறந்த ஆற்றலையும் வீரத்தையும் எடுத்துச் சொல்ல வருகிறார் கம்பர். கைகளைப் புடைத்த அதிரொலியால் நடுங்கின என்று கண்ணுக்குப் புலனாகாத திக்கஜங்களில் ஆரம்பித்து, இடியென்றும் வான்முகடு என்றும் சொல்லிவிட்டுக் கடைசியாகக் கண் முன் நிற்பதான குன்றைக் காட்டி, அதுவும் 'அதோ தகருகிறது! என்று சொல்லுகிறார். பெருமிதத்துக்கு உரிய பாவம் அபூர்வமாய் அமைந்திருக்கிறது செயயுளில்.

## யாரோ துணைவன் வந்திருக்கிறான்

4. போருக்கு அழைத்த சுக்ரீவன்மீது உண்டான வாலியின் அடங்காப் பெருங் கோபத்தைப் பார்த்தாள் அவன் மனைவியாகிய தாரை. முன் வந்து அவனை வெளியே போகாமல் விலக்குகிறாள்,

ஆயிடைத் தாரைஎன்(று)
அமிழ்தில் தோன்றிய

வேயிடைத் தோளினாள்
இடைவி லக்கினாள்;—

வாயிடைப் புகைவர
வாலி கண்வரும்

தீயிடைத் தன்நெடும்
கூந்தல் தீகின்றாள். (389)

---

4. ஆயிடை - அந்தச் சமயத்தில். தாரை என்(று) அமிழ்தில் தோன்றிய வேயிடைத் தோளினாள் - பாற்கடலில் தேவாமிர்தத்தோடு ஒத்துப் பிறந்தாள் லக்ஷ்மி; லக்ஷ்மியின் அழகு வாய்ந்த வேய் போன்ற தோள்கொண்ட தாரை என்பவள் இடை விலக்கினாள் - வாலியை முன்னே நின்று தடுத்தாள். வாயிடைப் புகைவர - வாலியின் வாயிலிருந்து புகை வருவதுபோல் பெருமூச்சு வருகிறது, கண்ணிலிருந்து அக்கினிச் சுவாலை வருகிறது, அந்தச் சுவாலையில் தாரையின் நீண்ட கூந்தல் தீயகிறதுபோல்த் தோன்றுகிறது.

5. தாரை தடுத்தாள், வாலி என்ன செய்கிறான்?

'விலக்காதே விடுவிடு! போருக்குக் கூப்பிடு கிறானே, அவனுடைய மார்பை இதோ நொறுக்கி விடுகிறேன், பார்!'' என்கிறான்.

'விலக்கலை விடுவிடு
விளித்து ளான்உரம்,—

கலக்கிக்க டல்கடைந்(து)
அமுது கண்டென,—

உலக்குவித்(து) உயிர்குடித்(து)
ஒல்லை மீள்குவல்

மலைக்குல மயில்!' என,
மடந்தை கூறுவாள். (390)

---

5. விளித்துளான் உரம்—போருக்கு அழைத்த சுக்ரீவனுடைய நெஞ்சை. கலக்கிக கடல கடைந்து அமுது கண்டென - அந்தப் பால்க்கடலை மலையினால் கலக்கிக் கடைந்து அமுதை எடுத்தேனே, அதே மாதிரி. உலக்குவித்து உயிர் குடித்து - நெஞ்சைச் சிதைத்து உயிரை உண்டு. ஒல்லை மீள்குவல் — சீக்கிரத்தில் திரும்பி வந்துவிடுவேன். மலைக்குல மயில் — மலையில்ச் சஞ்சரிக்கும் உயர்ந்த ஜாதி மயிலை யொத்தவளே! என, மடந்தை கூறுவாள்— என்று வாலி சொல்ல, மறுபடியும் தாரை பேசுகிறாள்.

6. தாரை சொல்லுகிறதைப் பார்ப்போம்.

"வீரம் எல்லாம் படைத்தவனே! உன்னுடைய தோள் வலிக்கு எதிர்நிற்க முடியாமல் ஓடிப்போய் விட்டான் உன் தம்பி. இப்பொழுது அவனுக்குப் புதிதாய் பலம் வந்துவிட்டதா?—இல்லைதான். பின் ஏன் மறுபடி போர்செய்ய வருகிறான்?"

'கொற்றவ! நின்பெருங்
குவவுத் தோள்வலிக்(கு)

இற்றனன் முன்னைநாள்
ஈ(டு)இன்று ஏகுவான்,

பெற்றிலன் பெருந்திறல்,
பெயர்த்தும் போர்செயற்(கு)

உற்றது, நெடுந்துணை
உடைமை யால்' என்றாள். (391)

---

6. கொற்றவ - வீரனே. தோள வலிக்கு இற்றனன் - உன்னுடைய தோள்வலி காரணமாகத்தோற்று இளைத்துப் போனான். ஈடு இன்று ஏகுவான் - எதிர்த்து நிறக பல மில்லாமல் ஓடிவிட்டான். பெற்றிலன் பெருந் திறல் - பெரிய பலம் ஏதாகிலும் பெற்றுவிட்டானா? — இல்லை. பெயர்த்தும் போர் செயற்கு உற்றது - மறுபடியும் போர் செய்ய வந்து நிறபது. நெடுந்துணை உடைமையால் - பெரிய துணை பலம் ஏற்பட்டதால்.

குறிப்பு:— தம்பி சுக்ரீவனுக்குப் புதிதாய் பலம் ஏற்படக் காரணமில்லை. பெண்கள் மூலமாகக் கேட்ட விஷயத்தைத் தாரை தன் கணவனிடம் சொல்லுகிறாள். வெகு அழகான சுபாவம்!

## தோழிகள் சொன்னார்கள்

7. சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைத்ததைப் பார்த்தோம். வாலியின் மனைவி தாரை பயப்படுகிறாள். அப்படி பயப்படுவதற்குக் காரணமில்லை என்று வாலி பேசுகிறான்.

'ஆற்றலின் அமரரும்
அவுணர் யாவரும்

தோற்றனர்; ஏனையர்
சொல்லற் பாலரோ;

கூற்றம்என் பெயர்சொலக்
குலையும்; ஆரினி

மாற்றலர் ஆகிவந்(து)
எதிரும் மாண்பினோர்?' (392)

---

7. ஆற்றலின் அமரரும் அவுணர் யாவரும் - அபாரமான பலம்படைத்த தேவர்கள் அசுரர்கள் ஆகிய எல்லாரும், கூற்றம் என் பெயர் சொலக் குலையும் – எமனே என் பெயரைச் சொல்ல நடுங்கிப் போவான். ஆர் இனி மாற்றலர் ஆகி வந்து எதிரும் மாண்பினோர் – என்மேல் பகைவராக வந்து என்னோடு எதிர்க்கும் திறம் உடையவர் யார்?

8. 'என் அருமை மனைவியே! இன்னொரு விஷயம் கேள்: பைத்தியக்காரத் தனமாய்;யாராவது என்னை எதிர்க்கிறார்கள் என்று வைத்துக்கொள். அதனால் என்ன ஏற்படும் தெரியுமா? அந்த எதிரி சம்பாதித்த வரங்கள், இயல்பாக உள்ள பலம், எல்லாவற்றிலும் பாதி என்னிடம் வந்து சேர்ந்து விடும், தெரிகிறதா!'

'பேதையர் எதிர்குவர்
எனினும், பெற்றுடை

ஊதிய வரங்களும்
உரமும் உள்ளதில்ப்

பாதியும் என்னதால்;
பகைப்ப(து) எங்ஙனம்?

நீ துயர் ஒழி'கென
நின்று கூறினான். (393)

---

8. பெற்றுடை ஊதிய வரங்களும் – ஏதோ தவத்தால் பெற்ற தனிச் சிறப்பு வாய்ந்த வரங்களும். ஊதிய வரம் – தனியான லாபம் என்று கருதவேண்டிய வரங்களும். உரமும் – பலமும். உள்ளதில் பாதியும் என்னதால் – ஏற்பட்டுள்ளதில் பாதி என்னுடையதாகிவிடும்- அதாவது, ஒரு வெற்றி கிடைத்தால் அடுத்த வெற்றிக்கு ஆதாரமாகிறது அது — இன்றைக்கும் நாம் பார்க்கிற காரியம் தான். பகைப்பது எங்ஙனம் – காரியம் இப்படியிருக்கும் போது பகைவன் என்று எப்படி ஒருவன் வருவான். நீ துயர் ஒழிக என நின்று கூறினான் – நீ வருத்தம் கொள்ள வேண்டாம் என்று அமைதியாய் நின்று சொன்னான்.

9. அப்படிச் சொன்னவனுக்கு, தான்கேட்ட சமாச்சாரத்தைச் சொல்லுகிறாள் தாரை·

' சுக்ரீவனுக்கு ராமன் என்கிற ஒரு சிநேகிதன் வந்திருக்கிறானும், அவனும் உன்னைக் கொல்லவே உடன்பட்டு வந்திருக்கிறானும்.''

அன்னது கேட்(டு)அவள்,
'அரச! ஆயவற்(கு)

இன்னுயிர் நட்பமைந்(து)
இராமன் என்பவன்

உன்னுயிர் கோடலுக்(கு)
உடன்வந் தான்,எனத்

துன்னிய அன்பினர்
சொல்லி னார்'என்றாள். (394)

---

9. அன்னது கேட்டவள் – வாலி சொன்ன சொல்லைக் கேட்ட தாரை. அரச – அரசனே. ஆயவற்கு – அந்தச் சுக்ரீவனுக்கு. உன் உயிர் கோடலுக்கு – உன் உயிரைப் பறித்துக் கொள்ளுவதற்கு. உடன் வந்தான என – கூடவே வந்திருக்கிறான் என்று. துன்னிய அன்பினர் – எனக்கு ரொம்பவும் வேணடிய பெண்கள்.

குறிப்பு:— வாலி என்ன பதில் சொல்கிறான் என்பதை இனிப் பார்க்கலாம்.

## ராமனை வாழ்த்த அல்லவா வேண்டும்!

10. சுக்ரீவனோடு போர் செய்வதற்கு வீட்டை விட்டு வாலி புறப்பட்ட போது அவன் மனைவி தாரை தடுத்தாள் — ராமன் என்று ஒருவன் துணையாக வந்திருக்கிறான் சுக்ரீவனுக்கு என்பதாகச் சொல்லி.

வாலி சொல்லுகிறான்·

''ஏதோ பெண்கள் சொன்னார்கள், அதைக் கேட்டுக்கொண்டு நீ தெரியாத்தனமாய்ச் சொல்லுகிறாய். ராமன் யார், அவன் தன்மை எத்தகையது என்பதெல்லாம் உனக்குத் தெரியவா செய்யும்? நான் சொல்லுகிறேன் கேள்· உலகத்தில் பிறந்தவர்களுக்கெல்லாம் பூர்வ வினையால் எவ்வளவோ கஷ்டம். அந்தப் பூர்வ வினையை நிவர்த்திக்க முடியாதபடி உலகத்தார் எல்லாரும் அலறுகிறார்கள், அயர்ந்து போகிறார்கள். அத்தகைய மக்களுக்கெல்லாம் தர்ம மார்க்கம், அதாவது நித்தியமான இன்பத்தைக் கொடுக்கக்கூடிய மார்க்கங்களையெல்லாம் எடுத்துக் காட்டியவன் அல்லவா ராமன்?''

'உழைத்தவல் இருவினைக்(கு)
ஊறு காண்கலா(து)
அழைத்(து)அயர் உலகினுக்(கு)
அறத்தின் ஆறெலாம

---

10. உழைத்த – செய்து செய்து வரும். வல் இருவினைக்கு – நீக்கமுடியாத நல்வினை தீவினை ஆகிய இரண்டுக்கும். ஊறு காண்கலாது – முடிவு காணாதபடி. அழைத்து அயர் உலகினுக்கு – வாழ்நாள் எல்லாம் 'அரற்றியும் அயர்ந்தும் கஷ்டப்படும் மக்களுக்கு. அறத்தின் ஆறெலாம்

இழைத்தவற்(கு) இயல்பல
இயம்பி என்செய்தாய்!—

பிழைத்தனை பாவி,உன்
பெண்மை யால்'என்றான். (395)

11. "ராமன் என்றால் இந்த இக வாழ்க்கைக்கு உரிய சத்காரியங்களில் கண்ணும் கருத்துமாய் இருப்பவன். அதே சமயத்தில் பர தத்துவத்திலும் ஈடுபட்டு நிற்கிற யோகி. அப்பேர்ப்பட்ட நிலையி

---

**இழைத்தவற்கு** – இதுதான் நேரான மார்க்கமென்று பல வழிகளிலும் எடுத்துக் காட்டியவனுக்கு — ராமனுக்கு. **இயல் பல' இயம்பி என் செய்தாய்** - எவ்விதத்திலும் ஒவ்வாத காரியத்தைச் சொல்லி அடடா! என்ன செய்துவிட்டாய். **பிழைத்தனை** – பெரிய பிழையையே செய்துவிட்டாய். **பாவி** - அடி பாதகி.

குறிப்பு:— உண்மையில் நன்மை தீமை என்ற பாகுபாடு கிடையாது. பூர்வத்தில் செய்துவந்த வினைகளின் பயனாகத்தான் அந்த வேறுபாடு. நல்வினை, தீவினை இரண்டும் ஒன்றுதான் என்ற தெளிவு வந்தாலொழிய யோகநிலை தென்படாது. இந்த விஷயத்தைக் குறித்துத் தான் 'உழைத்தவல் இரு வினைக்கு ஊறு காண்கலாகாது' என்கிறார் கவிஞர்.

ளுள்ளவனுக்குச் சுக்ரீவனோடு சேருவது ஒரு பெருமையா ?''

'இருமையும் நோக்குறும்
இயல்பி னோர்க்(கு)இது
பெருமையோ! ஈங்கிதில்ப்
பெறுவ(து) என்கொலோ!
அருமையின் நின்(று)உயிர்
அளிக்கும் ஆறுடைத்
தருமமே தவிர்க்குமோ
தன்னைத் தானரோ!' (396)

12. ''தாரையே! ராமனுடைய சரித்திரம் உனக்குத் தெரியாது. சக்கரவர்த்தித் திருமகனாகவே பிறந்தான். ராஜ்ய மெல்லாம் அவன் கைக்கே வந்தது. மாற்றாந் தாயாகிய கைகேசி சொன்னாள்,

---

11. ஈங்கு இதிற் பெறுவது என்கொலோ – இவ்விடம் வந்து நீ சொல்லுகிறமாதிரி நடப்பதில் என்ன லாபம் இருக்கிறது அவனுக்கு. அருமையின் நின்று உயிர் அளிக்கும் ஆறுடைத் தருமமே – ஏதோ ஒரு அற்புதமான முறையில் உயிர் வர்க்கத்தில் எல்லாம் ஆங்காங்கு நின்று அவைகளைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிற தரும தேவதையானது. தவிர்க்குமோ தன்னைத்தான் அரோ – தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளுமோ — ராமன் அக்கிரம வழியில் பிரவேசிப்பது என்பது எவ்விதத்திலும் கருத முடியாத காரியம்.

'என் மகன் பரதனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து விடு' என்பதாக. அவ்வளவுதான்; ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டான். அத்தகைய ராமனை நீ வாழ்த்த அல்லவா வேண்டும்?''

'ஏற்றபேர் உலகெலாம்
எய்தி, ஈன்றவள்

மாற்றவள் ஏவ,மற்(று)
அவள் தன் மைந்தனுக்(கு)

ஆற்றரும் உவகையால்
அளித்த ஐயனைப்

போற்றலை, இன்னன
புகல்தல் பாலையோ?' (397)

---

12. ஏற்றபேர் உலகெலாம் எய்தி – பிறப்புரிமை பற்றி இயல்பாக வந்த ராஜ்யம் முழுவதையும் அடைந்து. ஈன்றவள் மாற்றவள் ஏவ – மாறாந் தாயான கைகேசி கட்டளையிட. ஆற்றரும் உவகையால் அளித்த – மிக்க மகிழ்ச்சியோடு கொடுத்த தாங்கமுடியாத மகிழ்ச்சியோடு என்றே சொல்லவேண்டும்; ஆற்றரும் – இதயம் தாங்க முடியாத. போற்றலை – வாழ்த்த வில்லையே நீ. இன்னன புகல்தல் பாலையோ – தம்பியுடன் சேர்ந்துகொண்டு தமையனைக் கொல்ல வந்தவன் என்று எப்படி உனக்குச் சொல்ல நா வந்தது?

குறிப்பு:— எவ்வளவு உன்னத நிலையில் ராமனை வைத்துப் பார்க்கிறான் வாலி!

## பெண்தானே: என்னத்தைப் பேச!

13. ' ராமன் தியாகமூர்த்தி. தன் கைக்கு வந்த ராஜ்யத்தை அப்படியே தம்பிக்கு ஈந்த தியாக மூர்த்தி அல்லவா!

' இத்தகைய ஐயனையா, அயோக்கியன் சுக்ரீவனோடு சேர்ந்து எனக்கு எதிராக வந்திருக்கிறான் என்று சொல்லுகிறாய்?'' என்பதாக மனைவி தாரையை வாலி கண்டிக்கிறான். அவன் மேலும்.

''ராமனுடைய பராக்கிரமம் எப்படி என்று உனக்குத் தெரியாது. உலகத்திலுள்ளவர்கள் எல்லாருமே ஒன்று சேர்ந்து எதிர்த்து வந்தாலும் அவனுக்குத் துணை என்பது ஒன்று வேண்டுமா! வேண்டாம்'' என்கிறான்.

' நின்றபேர் உலகெலாம்
  நெருக்கி நேரினும்
வென்றிவெம் சிலையலால்
  வேறு வேண்டுமோ!
தன்துணை ஒருவரும்
  தன்னின் வேறிலான்—
புன்தொழில் குரங்கொடு
  புணரும் நட்பனோ!' (398)

---

13. நின்றபேர் உலகெலாம் – சக்தி வாய்ந்து நிறகும் நாடுகள் எல்லாம். நெருக்கி நேரினும் – ஒன்று சேர்ந்து எதிர்த்த போதிலும். தன் துணை ஒருவரும் தன்னின் வேறிலான்– தனக்குத் துணை—தன்னை அன்றி வேறு ஒருவரும் இல்லை: அப்பேர்ப்பட்ட ராமன். குரங்கொடு புணரும் நட்பனோ – குரங்கோடு சினேகம் வைத்துக்கொள்ள வேண்டியவனோ.

14. "தேர்ப் படை, யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை என்ற படையெல்லாம் படையல்ல. வில் ஒன்றுதான் படை. அரசர் துணை உண்டோ என்றால் கிடையாது. தனக்குத் துணை தான்தான். அத்தகைய ராமனுக்கு உயிர் என்பது எது தெரியுமா?"

'தம்பியர் அல்லது
தனக்கு வேறுயிர்
இம்பரின் இல(து)என
எண்ணி ஏய்ந்தவன்:
எம்பியும் யானும்உற்(று)
எதிர்ந்த போரினில்
அம்பிடை தொடுக்குமோ,
அருளின் ஆழியான்!' (399)

---

14. வேறு உயிர் இம்பரின் இலது என - உயிர் என்று சொல்லுவதற்கு வேறொன்றும் இகத்தில் இல்லை என்று. எண்ணி ஏய்நதவன் - நிலையான எண்ணத்தில் வாழ்ந்து வருபவன். எம்பியும் யானும் உற்று எதிர்நத போரினில் - எனக்கு தம்பி என்று வாயந்திருக்கிறானே, அவனும் நானுமாக எதிர்த்துப் போர் செய்யும்போது. அம்பு இடை தொடுக்குமோ - அம்பு ஒன்றை எடுத்து என்மேல் எய்யவும் செய்வானா. அருளின் ஆழியான் - கருணை சமுத்திரமாகிய ராமன்.

குறிப்பு:— தன்னை எவ்விதத்திலும் பகைக்கமாட்டான் ராமன் என்ற அபாரமான உறுதி வாலியின் உள்ளத்தில் இருக்கிறது. அதைத் தாரைக்கு விளக்க வேண்டியதற்காகவே ராமனுக்குத் 'தம்பியரல்லது வேறு உயிர் இல்லை' என்று சொல்லுகிறான் அந்த வாக்கியத்துக்கு வேகம் கொடுக்க, 'விலலன்றிப படையில்லை' 'தான் அன்றித் துணையில்லை' என்று தோற்றுவாய் கொடுத்தது அருமையான பாவத்தில் வாய்ந்திருக்கிறது.

15. வாலி தாரையைப் பார்த்து, "சிறிது நேரம் பொறுத்துக் கொண்டிரு; ஒரு விநாடியில் திரும்பி வந்துவிடுகிறேன். மனங் கலங்கவேண்டாம்" என்று ஆறுதலாய்ச் சொன்னான்,

'இருத்திநீ இறைஇவண்,
இமைப்பில் காலையில்

உருத்தவன் உயிர்குடித்(து)
உடன்வந் தாரையும்

கருத்தழித்(து) 'எய்துவன்,
கலங்கல்' என்றனன்;

விரைக்குழல் பின்னுரை
விளம்ப அஞ்சினாள்.

---

15. இருத்தி நீ இறை இவண் – இங்கேயே சிறிது நேரம் நீ இரு. இமைப்பில் காலையில் – கண் இமைக்கும் நேரத்துக்கு முன்னதாகவே. உருத்தவன் உயிர் குடித்து – கோபத்தோடு வந்துள்ள அந்தச் சுக்ரீவனது உயிரை மாய்த்து. கருத்து அழித்து எய்துவன – ஏதோ எண்ணிக் கொண்டிருக்கிறார்களே—அதாவது என்னைக் கொன்றுவிடலாம் என்று அந்த எண்ணததையும் மாய்த்துத் திரும்பி வருவேன். கலங்கல் என்றனன் – கலங்கவேண்டாம் என்று ஆறுதலாய்ச் சொன்னான். விரைக்குழல் பின் – தாரையானவள் அதற்குப் பிறகு. உரை விளம்ப அஞ்சினாள் – வேறு வார்த்தை சொல்ல பயந்து சும்மா இருந்துவிட்டாள்.

குறிப்பு:— தாரை பெண்தானே, அவளால் வேறு என்ன செய்ய முடியும்?

## யாருடைய பாணம்?

16. வாலி வீட்டை விட்டு அப்படியே முற்றத்துக்கு வந்தான். அங்கிருந்து சுக்ரீவன் நின்ற போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தான். சுக்ரீவனும் எதிர்த்து வந்தான்; இருவரும் கை கலந்து போர் செய்தார்கள், வெகு நேரம் போராடினார்கள். என்றும் இல்லாத சக்தியோடும் வீரத்தோடும் சுக்ரீவன் போர் செய்தான். ஆனாலும் கடைசியில் வலியற்றவனாய் வாலியின் கையால் நொறுக்குண்டு உயிர் துறக்கும் தறுவாயில் இருந்தான்.

அந்தச் சமயத்தில் எட்டியிருந்த புதரிலிருந்து ஒரு பாணம் வேகமாய் வந்து வாலியின் மார்புக்குள் பாய்ந்தது.

பாணம் வந்து பாயவும் சுக்ரீவன் விலகி விட்டான். வாலி அப்படியே நின்றான். மலைபோல் நின்ற மார்பிலிருந்து இரத்தம் அருவிபோல் நிலத்தில் விழுந்தது. இரத்தம் மிகுதியாய்த் தரையில் சொட்டிய காரணத்தால் சப்தம்கூடக் கேட்டது. இந்த இரத்தப் பெருக்கைப் பார்த்தான் சுக்ரீவன்.

வாசத் தாரவன்
மார்பெனும் மலைவழங்(கு)
அருவி

ஓசைச் சோரியை
நோக்கினன்; உடன்பிறப்(பு)
எனும்

---

16. வாசத்தாரவன் - வாசனை பொருந்திய மலர்மாலையைக் கழுத்தில் அணிந்திருந்த வாலியின். ஓசைச் சோரியை நோக்கினன் - சப்தத்தோடு விழுந்த இரத்தப் பெருக்கைப்

பாசத் தாஸ்ப்பிணிப்(பு)
உண்டஅத் தம்பியும்
பசுங் கண்

நேசத் தாரைகள்
சொரிதர நெடுநிலம்
சேர்ந் தான். (401)

---

பார்த்தானோ இல்லையோ. தம்பியும் - சுக்ரீவனும். பசுங் கண் நேசத் தாரைகள் சொரிதர - கலங்கிய கண்களிலிருந்து அன்புருவமாய்ப் பெருகிய கண்ணீர்த் துளிகள் பொழிய. நெடு நிலம் சேர்ந்தான் - மூர்ச்சித்து அப்படியே நிலத்தில் விழுந்தான் சுக்ரீவன்.

குறிப்பு :— வாலி மகா வீரன். பக்தியுள்ளவன், நேர்மை யுள்ளவன். பகைவர்களைத் தாக்குவதற்காக வெகுதூரம் போய்விட்டான். பல மாசங்களாகத் திரும்பி வரவில்லை. பகைவர்களுடைய வாளுக்கே இரையாகி விட்டான் என்பதாக நாட்டிலுள்ளவர்கள் எண்ணினார்கள்.

சுக்ரீவன் தமையனிடத்தில் உண்மையான பற்றுதல் உடையவன். தமையன் இறந்தது பற்றி வருந்தினான். நாட்டுப் பிரமுகர்கள் கேட்டுக்கொண்டதின் மூலம் சிம்மாசனம் ஏறினான். திறம்பட ராஜ்ய காரியங்களை நிர்வகித்தான். பகைவர், நாட்டுக்குள் பிரவேசிக்காதபடி பாதுகாப்பைத் திருத்தமாய்ச் செய்து வைத்திருந்தான். யாரும் நாட்டுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. தன் அனுமதியில்லாமல் யாரும் உள்ளே வராதபடி ஆங்காங்கு காவல் படைகளை அமைத்திருந்தான.

இந்த நிலையில் சில வருஷங்கள் கழித்து வாலி திரும்பி வந்தான். காவற படைகள் புதிதாய் அமைத்திருந்த காரணத்தால் வாலியை இனம் தெரியாது தடுத்து விட்டார்கள்.

வாலிக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்? தன்னுடைய சைன்னிய பலத்தோடு காவற் படையை நிராகரித்துவிட்டு, ஊருக்குள்ப் பிரவேசித்தான். தம்பி சுக்ரீவன் மேல் ஆங்காரம் பிறந்துவிட்டது; அவனை இதோ கொன்று விடுகிறேன் என்று புறப்பட்டான். வேண்டியவர்களாய் உள்ளவர்கள் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை

சுக்ரீவனது வீடு, மனைவி எல்லாவற்றையும் கைப் பற்றிக் கொண்டான். உயிர் தப்பிப் பிழைப்பதற்காகச் சுக்ரீவன் தூரமான இடத்தில் போய் இருந்து கொண்டான்.

ஊரிலுள்ள பெரியவர்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. வாலியிடம் போய்ச் சமாதான வார்த்தை பேசுவதே ஆபத்தாய்ப் போய்விட்டது. தங்களையே துரோகிகள் என்று அவன் எண்ணும்படியாய் இருந்தது. எல்லாம் விதி வசம் என்று இருந்து விட்டார்கள்.

ஆனால் குடும்பத்தோடு ஒட்டியவர்களாய், குடும்ப க்ஷேமத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்த ஒருவர் இருவர், ஆதரவற்ற சுக்ரீவனுக்குத் துணையாய்ப் போய் நின்றார்கள். அப்படிப்போன புண்ணிய ஆத்மாக்களில் அனுமன் ஒருவன்.

இந்த விருத்தாந்தத்தையெல்லாம் யோசனை பண்ணிப் பார்த்தோமானால் குறறஞ் சொல்லுவதற்கு ஆளே இல்லை. சுக்ரீவன மேலும் குற்றமில்லை; வாலியின் மேலும் குற்றமில்லை. எல்லாம் விதி செய்த காரியம் என்றுதான் சொல்ல வேணடி யிருக்கிறது. விதியின விளையாட்டுத் தான்!

பூர்வமாய், அன்யோன்யமாய் நேசித்து வந்த அன்பு அப்படி எளிதில் போய்விடவா செய்யும்? கொடுமைக் குள்ளும் கஷ்டத்துக் குள்ளும் ஊடுருவி வந்த சகோதர வாஞ்சையானது வாலியின மார்பிலிருந்து இரத்தம் பெருகக் கண்ட மாத்திரத்தில் தம்பியின் உள்ளத்தைத் தாக்கி விட்டது. மூர்ச்சை அடைந்து நிலத்தில் விழுந்தான். இனி, வாலியைப் பார்ப்போம்:

17. இரத்தம் சிந்திய காரணத்தால் சோர்வு ஏற்பட்டு நிலத்தில் விழுந்து விட்டான் வாலி. அப்படி விழுந்த வாலிக்கு, வேதனை காரணமாக ஆங்கார வெறி உண்டாய்விட்டது. அப்படியே அம்பை மார்பிலிருந்து பறித்தான். அம்பானது மிக்க வலிமைகொண்டதாய் இருந்தது. இந்த அம்பை முறித்து விடுகிறேன் என்று அந்த வெறியில் எழுந்தான். 'மேரு மலையை இரண்டாய் முறிக்க வேண்டுமென்று எண்ணினால், அது முறியாமல் என்ன செய்யும்' என்று குமுறிக்கொண்டு, 'அம்பில் யாருடைய பெயர் பொறித்திருக்கிறது பார்ப்போம்' என்று பார்க்க ஆரம்பித்தான்.

பறித்த வாளியைப்
பருஉவலித் தடக்கையால்ப்
பற்றி

இறுப்பென்[3] என்றுகொண்(டு)
எழுந்தனன்; 'மேருவை
இரண் டாய்

17. பறித்த வாளியை – மார்பிலிருந்து வெளியே உருவிய உறுதியான அம்பை. பருஉவலித் தடக்கையால்ப் பற்றி–பருத்த வலிய திரண்ட கையால்ப் பறறிக் கொண்டு. இறுப்பென் என்று கொண்டு எழுந்தனன் – இதோ முறித்து

முறிப்பென் என்னினும்
முறிவதன் றே'என
மொழி யாப்,

பொறித்த நாமத்தை
அறிகுவான் நோக்கினன்
புக ழோன். (402)

---

விடுகிறேன் என்று எழுந்து உட்கார்ந்தான். மொழியா - சொல்லி. பொறித்த நாமத்தை - எழுதியுள்ள பெயரை. அறிகுவான் நோக்கினன் புகழோன் - அறிந்து கொள்வதற்காக உற்றுப் பார்த்தான் வாலி.

குறிப்பு :— தர்மமும் வீரமும் ஒன்றாய் வாலியின் உள்ளத்தில்த் தங்கி யிருந்தன. திடீர் என்று பாணம் வந்து தைக்கவும் ஆங்காரம் பிறக்கிறது. அதன் வேகத்தை அற்புதமாய்க் காட்டி யிருக்கிறது செய்யுளில்.

## என்ன பரிதாப நிலை!

**18.** புதரிலிருந்து ஒரு அம்பு வந்து வாலியின் மார்பில்த் தைத்தது, அந்த அம்பை அப்படியே உருவி அதில் யார் பெயர் பொறித்திருக்கிறது என்று உற்றுப் பார்த்தான்.

எழுதியிருந்த எழுத்து என்ன என்று பார்க்கலாம்:

உயர்ந்த லக்ஷியமுள்ள மகான் ஒருவர் இருந்தார். அவரால் உலகத்தாருக்கு எத்தனையோ விதத்தில் நன்மை உண்டாயிற்று. ஆயிரக்கணக்கான வருஷங்களாகத் தொடர்ந்து மனித வாழ்க்கையைப் புனிதப்படுத்தி வந்தது அந்த மகானுடைய நினைவு. இது நாம் சரித்திரத்தில் கண்டறியும் உண்மை. இனி;

ராமன் என்றால் உயர்ந்த லக்ஷியத்தில் நிற்பவன். கடவுள் தத்துவத்தில் திளைப்பவன். அது காரணமாகத் தியாகம் என்பதும் சாமான்ய காரியமாய்ப் போய்விடுகிறது.

தியாகத்தை தியானித்தாலே ஆணவம், பிறவியினால் உண்டாகும் மயக்கம் எல்லாம் எளிதில் நம்மை விட்டுக் கழன்று போய் விடுகின்றன. ஆனந்த மயமான பரம்பொருளோடும் கலந்து விடலாம்.

எல்லாம் ராமனது லக்ஷியத்தையும் வாழ்க்கையையும் மனசில் பதித்த மாத்திரத்தில் சாத்தியமாகிற காரியம். இந்த உண்மையைக் கவிஞர் தமது அபூர்வமான பாஷையில் வெளியிடுகிருர்.

மும்மைசால் உலகுக்கெல் லாம்
மூலமந் திரத்தை,முற் றும்

தம்மையே தமர்க்குநல் கும்
தனிப்பெரும் பதத்தை,மா யத்(து)

இம்மையே எழுமைநோய்க் கும்
மருந்தினை, இராமன்என னும்

செம்மைசேர் நாமம்தன் னைக்,
கண்களில் தெரியக்கண் டான். (403)

---

18. மும்மை சால உலகுக்கு எலலாம் - வானம், பூமி, பாதாளம் என்று உலகங்களை விசாலமாக வகுத்து—அவைகளில் பலதிறப்பட்ட மக்கள் வாழ்வதாகவும் வைத்துக் கொண்டால், அவர்கள் எலலாருக்குமே கடவுளைப் பறறிய ஞானத்தைக் கொடுப்பதாகும். ராமன் என்ற மந்திரம். மூல மந்திரம் - அடிப்படையான உண்மைகளை விளக்கி விடும் ராமனது தியானம். முற்றும் தம்மையே தமர்க்கு நல்கும் தனிப பெரும் பதத்தை - ராமன என்று நினைத்த மாத்திரத்திலேயே, எங்கும் நிறைந்த ஆனந்தமயமான கடவுள் நிலை தான் ஞாபகத்துக்கு வரும். அநதப்பதவியை முழுவதுமே நமக்கு அளிககவல்லது ராம நாமம். தனிப்பெரும் பதத்தை - ஏகமாய எங்குமாய் ஆனந்தமாய் நிறைந்துள்ள மோக்ஷ நிலையையே 'ராமன' என்று உபசரித்து இருக்கிறது. மாயத்து இம்மையே எழுமை நோய்க்கும் மருநதினை - இந்த ஒரு பிறவியில் ஏற்படும் ஆணவச் செயலினல், நாம் ஒரே மயக்கத்தில் இருககிறோம்; முனனுள்ள ஏழு பிறவிகளில் ஏற்பட்டுள்ள

19. வீட்டிலிருந்து புறப்படும்போது, வாலியின் மனைவி "உன் தம்பிக்கு ராமன் என்று ஒருவன் துணையாக வந்திருக்கிறான். நீ வெளியே போகவேண்டாம்" என்று சொன்னாள். வாலியோ, "நீ சுத்தப் பைத்தியக்காரி! ராமன் என்றால் தியாகமூர்த்தி அல்லவா! கடவுள் அம்சம் என்றல்லவா சொல்ல வேண்டும்! இந்த அயோக்கியன் சுக்ரீவனுக்குத் துணையாகவும் வருவானா ராமன்?" என்று வாலி சொன்னான்.

அம்பில் எழுதி யிருந்த ராம நாமத்தைப் பார்த்தவுடன், வீட்டில் நடந்த சம்பாஷணை ஞாபகத்தில் வந்து விட்டது வாலிக்கு. எப்படி யிருக்கும் அவனுக்கு! ஒரே ஏமாற்றம்!

இப்படியும் உண்டா! அரண்மனை வாழ்க்கையை யெல்லாம் துறந்து விட்டு, வனவாசம் செய்ய வந்த ராமன் இப்போது என்ன செய்திருக்கிறான்!

---

ஆணவச் செயல்களுக்கு எவ்வளவு அழுத்தம் ஏற்பட்டிருக்கும்,—அவ்வளவையும் சேர்த்தால் இந்தப் பிறப்பில் ஏற்படும் மயக்கம் எவ்வளவு திண்மையாக இருக்கும், அவ்வளவு மயக்கத்தையும் தீர்க்ககூடிய மருந்தாக இருக்கிறது ராம நாமம். செம்மை சேர் நாமந் தன்னை — புனிதமாகவுள்ள நாமத்தை. கண்களின் தெரியக் கண்டான் — தனக்குக் காணக் கிடைக்காத அத்தனை அரிய நாமத்தை நேர் முகமாகக் கண்டு கொண்டான் வாலி.—ராமனை அவ்வளவாக மதித்திருந்தான் வாலி என்பது நமக்குத் தெரியும்

குறிப்பு:— ராமன்என்ற திரு நாமம் வாலிக்கு அபூர்வமான உணர்ச்சியை உண்டாக்கி விட்டது. கவிஞருக்குமே உண்டாக்கி விட்டது. அப்படி உண்டான உணர்ச்சியிலிருந்து அபூர்வமான பாவ உருவத்தோடு செய்யுள் பிறந்து விட்டது. பக்தி பரவம் தெள்ளத் தெளிந்து விடுகிறது கவியில்.

சாமான்யக் குரங்குகளுக்காக தன் குலத்துக்கு உரிய உயர்ந்த போர் முறையைக் கைவிட்டு விட்டு மறைவிலிருந் தல்லவா அம்பை எய்திருக்கிறான். என்ன வெட்கக் கேடு!

இல்லறம் துறந்தநம் பி
எம்மனோர்க் காகத்தங் கள்
வில்லறம் துறந்துநில் றான்
என்றலால், வேதநன் னூல்ச்
சொல்லறம் துறந்திலா த
சூரியன் மரபும்தொல் லை
நல்லறம் துறந்த(து)என் று
நகைவர நாண்உட்கொண் டான். (404)

---

19. இல்லறம் துறந்த நம்பி - இல்லற வாழ்க்கையை விட்டு வனவாசத்தை மேற்கொண்ட மகான். எம்மனோர்க்காக - எம் இனத்தாராகிய குரங்குகளுக்காக. தங்கள் வில்லறம் துறந்து நின்றான் என்றலால்-தன் குலத்தாருக்கு உரிய க்ஷத்திரிய தர்மத்துக்கு மாறான செய்கையைச் செய்திருக்கிறான் என்பது இப்போது தெளிவாய் விட்டதால். வேத நன்னூல்ச் சொல்லறம் துறந்திலாத சூரியன மரபும் - அடிப்படையான நீதிகளை எடுத்துச் சொல்லும் நூல்களில்க் கண்ட நீதிகளினின்று சிறிதும் வழுவாத சூரிய குலமே (ராமனது குலம்). தொல்லை நல்லறம் துறந்தது என்று - தனக்குப் பூர்வமாக ஏற்பட்ட முறைமையை ஒழித்துவிட்டது என்று சொல்லி. நகை வர நாண் உட்கொண்டான் - முகத்தில்ச் சிரிப்பு வந்தது, அடுத்த நிமிஷத்தில் உள்ளத்தில் நாணம் ஏற்பட்டது;— காரணம், வாலி தன் குலத்துக்கு ஏற்பட்ட உயர்ந்த லக்ஷியத்தில நிறபவன். அதனால் ராமனையும் தன் குலத்துக்கு ஏற்ற லக்ஷியத்தில் நிற்பான் என்று எதிர்பார்த்தான். அவன் சறுக்கி விழுந்தது வாலிக்கே அவமானமாக இருக்கிறது — நாண் உட்கொண்டான்.

20. ராமனது செயல் வாலியையே வெட்கப் படும்படி செய்துவிட்டது. அந்த வெட்கத்திலிருந்து பல உணர்ச்சிகள் எப்படியெல்லாமோ பிறக்கின்றன.

வெள்கிடும், மகுடஞ்சாய்க் கும்,
வெடிபடச் சிரிக்கும்,மீட் டும்
உள்கிடும், இதுவும்தான் ஓர்
ஓங்கற மோஎன்(று)உன் னும்;—
முள்கிடும் குழியில்புக் க
மூரிவெங் களிநல்யா னை
தோள்கொடுங் கிடந்ததென் னத்
துயர்உழந்(து) அழிந்துசோ ரும். (405)

---

20. வெள்கிடும் மகுடஞ் சாய்க்கும் — வெட்கமுற்றவனாய். தலையைச் சாய்த்துச் சிறிது நேரம் அசைவற்று இருக்கிறான்; பிறகு, வெடிபடச் சிரிக்கும் — ஹஹ்ஹா என்று பெரும் சிரிப்புச் சிரிக்கிறான். மீட்டும் உள்கிடும் — சிரிப்பு அப்படியே நின்றுபோய் மறு விநாடியில் ஒரே யோசனையில் ஆழ்ந்துவிடுகிறான் இதுவும்தான் ஓர் ஓங்கு அறமோ என்று உன்னும் — பேஷ்! இதுவும் ஒரு பெரிய தர்மமோ என்று கசந்த உள்ளத்தோடு எண்ணுகிறான். முள்கிடும் குழியில் புக்க — சறுக்கி விழுவதற்காகத் தோண்டிய கொப்பத்தில விழுந்து அகப்பட்ட. மூரி வெங்களி நல்யானை — அபாரமான வலியோடு மதவெறியுங் கொண்ட யானை. தோள் கொடுங் கிடந்தது என்ன — குழியில் போட்டிருந்த வலைக் கயிறுகளில் சிக்குண்டு கிடந்ததுபோல்; தொள்கு — வலை. துயர் உழந்து அழிந்து சோரும் — துயரத்துக்கு உள்ளாய் வேறு புகல் இல்லாமல் மனம் இடிந்து சோர்வான்.

குறிப்பு — அதர்மம் எதிர்பாராத இடத்திலிருந்து வரும்போது உடலையும் உள்ளத்தையும் நிலை கலங்கச் செய்துவிடுகிறது. வாலியின் நிலை என்ன பரிதாப நிலை!

## அடடா, என்னத்தைச் செய்து விட்டாய்!

21. வாலி ஒரு வீரன், நேர்மையில் நிற்பவன். ராமனை அவனுடைய லக்ஷ்ய புருஷனாக மனசில் வைத்திருந்தான். ராம பாணத்தைப் பார்த்த உடன் 'இவ்வளவு தானா நம்முடைய லக்ஷ்ய புருஷனுடைய காரியம்'! என்று நாணத்துக்குள்ளானான். சிரித்தான். மறுபடியும் வெட்கிப் போனான். சிறிது நேரம் கழித்துப் பிரலாபிக்கிறான். "ராஜாவே நீதியினின்று தவறி விட்டான். அப்படியானால் நீதி வரம்பில்லாத கேடானவர்கள் செயல் எப்படி இருக்கும் என்று சொல்லவா வேண்டும்?"

'இறைதிறம் பினனால்! என்னே
இழிந்துளோர் இயற்கை? என் பால்

முறைதிறம் பினனால்!' என்று
மொழிகின்ற வாயான் முன்னர், -

மறைதிறம் பாதவாய்மை
மன்னர்க்கு மனுவிற்சொல் லும

துறைதிறம் பாமல் காக்கத்
தோன்றினன் தோன்றினால்! (406)

---

21. மொழிகின்ற வாயான் முன்னர் - வாலியினுடைய வாய், பேசிக்கொண்டிருக்கிறது, அப்போது அவன முன்பாக - தோன்றினானல. மறை திறம்பாத வாய்மை மன்னர்க்கு — நீதி நூலைவிட்டு வழுவாத சத்திய தர்மத்தைக் கைக்கொண்ட அரசர்களுக்காகவே. மனுவிற் சொல்லும் துறை திறம்பாமலக் காக்கத் தோன்றினான் — மனுதர்ம சாஸ்திரததில்ச் சொல்லும் நீதிகளைப் பழுதுபடாமல் காக்க அவதரித்தவனான ராமமூர்த்தி. தோன்றினால் - வாலி முன் வந்து தோன்றினன்.

22. புதருக்குள் நின்ற ராமன் வாலியின் மார்பிலிருந்து ரத்தம் சொட்டுவதைப் பார்த்தான். சுக்ரீவன் மூர்ச்சித்து விழுவதையும் பார்த்தான். தன்னைப் பற்றி வாலி சொல்லுகிற வார்த்தைகளும் காதில் விழுந்தன. 'அடடா! என்ன காரியத்தை செய்துவிட்டோம்!' என்று மனம் நொந்தவனாய்ப் புதரை விட்டு வெளியே வந்து புலம்பிக் கொண்டிருக்கிற வாலியை நோக்கி நடந்து போகிறான் ராமன்.

ராமன் வருவதை வாலியும் பார்த்துக் கொண்டான். ராமனுடைய உயர்ந்த குணங்களை அனுபவித்த வாலிக்கு ராமன் எப்படிக் காட்சி அளிக்கிறான் பாருங்கள்!

கண்ணுற்றான் வாலி, நீ லக்
கார்முகில் கமலம்பூத் து
மண்ணுற்று வரிவிலேந் தி
வருபெற்றி யானை! வா னம்

---

22. கண்ணுற்றான் வாலி – வாலி பார்த்தான். நீலக் கார்முகில் கமலம் பூத்து, மண்ணுற்று வரிவிலேந்தி வருபெற்றி யானை – இருண்ட நீல மேகம் ஒன்று செந்தாமரைகளைத் தன்னிடத்தில் புஷ்பித்துக் கொண்டு அப்படியே பூமிமேல் இறங்கி ஒரு வில்லையும் கையில் ஏந்தி வருவது போல் இருந்தது ராமனது திருமேனி; அந்தத் திருமேனியைக்

32

புண்ணுற்ற தனையசோரி
பொழிதர விம்முவான் 'என்
எண்ணுற்றாய் எனசெய்தாய்!' என்று
எங்ஙனன் இயம்பலுற்றான். (407)

---

கண்டான் வாலி. வானம் புண்ணுற்றது அனைய சோரி பொழிதர விம்முவான் — வானமே புண்பட்டு இரத்தம் பொழிந்தது போல் வாலியின் மேனியிலிருந்து இரத்தம் பொழிகிறது. இந்த நிலையில் ராமனைப் பார்த்துப் பரிவுடனேயே பேசினான்.

குறிப்பு :— ராமனது நீலமயமான திருமேனியில் வாலி ஈடுபடுகிறான் என்பது தெரிகிறது காரணம், ராமனது திவ்ய குணங்களில் முன்னமேயே ஈடுபட்டிருந்தது மாத்திரம் அல்ல; ராமனது முகத்தில் பரிவும் துன்பமும் ததும்பியிருந்ததை வாலி பார்த்துக்கொண்டது தான்.

## இனி யாரைப் புகழ!

**23. ராமனைப் பார்த்ததும் ராமனுக்காகவே வாலி அனுதாபப்படுகிறான்.**

"எப்படியோ என்னத்தையோ எண்ணி அதர்மமான காரியத்தைச் செய்துவிட்டாயே! மறைவிலிருந்து நிராயுதபாணியின்மேல் பாணம் விடுதல் உனக்குத் தகுமா?

"உன் தந்தையின் குணந்தான் என்ன, சத்தியத்தைக் காத்தான். உலக தர்மத்தைக் காத்தான். அவைகளுக்காக உயிரையும் விட்டான். உன் தம்பி பரதனும் நீதியை விட்டுச் சற்றும் விலகாத புண்ணிய ஆத்மா அல்லவா? அப்படியிருக்க இவ்வாறு நடந்து கொள்ள எப்படி முடிந்தது உனக்கு?"

'வாய்மையும் மரபுங்காத் து
மன்னுயிர் துறந்தவள் ளல்த்
தூயவன மைந்தனே! நீ
பரதன்முன் தோன்றினா யே!

---

23. வாய்மையும் மரபும் காத்து – சத்தியத்தையும் குல தர்மத்தையும் காத்து. மன்னுயிர் துறந்த வள்ளல் – தன் அரிய உயிரை விட்ட தசரதன்.

தீமைதான் பிறரைக்காத் துத்,
தான்செய்தால் தீங்கன்றோ மோ!

தாய்மையும் அன்றிநட் பும்
தருமமும் தழுவிநின் ருய்!' (408)

*24.* நாணம் அனுதாபம் இரண்டும் உண்டா கிறது. பிறகு மெள்ள ஆங்காரம் பிறக்கிறது. அதைக் கவிஞர் எப்படி வெளியிடுகிருர் பார்க்கலாம்:

"க்ஷத்திரியர்களுக் கென்று உயர்ந்த தர்மங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தத் தருமங்கள் உன் குலத்தில் உதித்தவர்களுக்கெல்லாம் உரிமைதானே? உன்னிடத்தில் ராஜ லக்ஷணம் எவ்வளவு அழகாகப் பொருந்தியிருக்கிறது. இதையெல்லாம் யோசிக்கும்

---

*23.* *தீமைதான் பிறரைக் காத்து* – பிறர் தீமை செய்யாமல் பாதுகாத்து. *தான் செய்தால் தீங்கன்றோமோ* – நீயே அந்தத் தீமையைச் செய்தால் அது தீமையாகாது என்று சாஸ்திரமுண்டா. *தாய்மையும் அன்றி நட்பும் தருமமும் தழுவி நின்ருய்* – அடடா, உன் குணந்தான் என்ன! அன்பு, நட்பு, இரக்கம் எல்லாவற்றிற்கும் புகலாக நிற்பவன் அல்லவா நீ? — நீயா இந்த அநீதியைச் செய்ய வேண்டும்?

போது உன் செயலுக்குக் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை.''

'கோவியல் தருமம் உங் கள்
குலத்துதித் தோர்கட்கெல் லாம்

ஓவியத்(து) எழுதஒண் ணா
உருவத்தாய் உடைமைஅன் றோ?

ஆவியைச் சனகன்பெற் ற
அன்னத்தை அமிழ்தின்வந் த

தேவியைப் பிரிந்தபின் னைத்
திகைத்தனை போலும்செய் கை! (409)

---

24. கோவியல் தருமம் - அரசர்கள் அனுஷ்டிக்க வேண்டிய நீதி. ஓவியத்து எழுதஒண்ணா உருவத்தாய் - பொதுவாக ஒருவர் முகத்திலும் உடல அமைப்பிலும் அழகின் அம்சங்கள் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும். சாமான்யமாகப் பார்ப்பவர்களுக்கு அவை தென்படாமலே போய்விடலாம். ஆனால் சித்திரக்காரன் என்ன செய்கிறான்; அந்த அம்சங்களை மாத்திரம் எடுத்து அவைகளுக்கு அழுத்தங் கொடுத்து விடுகிறான். இந்தத் தெளித்தல் காரணமாக இயற்கையில் உள்ள அழகைவிட சித்திரத்தில் அழகு அதிகமாகி விடுகிறது. ஆனால் ராமனிடத்திலோ எல்லா அம்சங்களும் அழகுடன் நிறைகின்றன. தெளிப்பதற்கு இடமில்லை. சித்திரக்கலை தெளிப்பதனாலேயே குறைபட்டு விடுகிறது. ராமனது இயற்கை யழகு அவ்வளவு பூரணமாக இருக்கிறது என்பது பொருள். உடைமை அன்றோ - கையாளவேண்டிய காரியமல்லவா. ஆவியை - உயிருக்குச் சமானமான மனைவி சீதையை. அமிழ்தின் வந்த தேவியை - தேவாமிர்தம் எவ்வளவு அருமையாக வந்தது, அப்படி அருமையாய்க் கிடைத்த சீதையை. திகைத்தனை போலும் செய்கை - உன் சுபாவத்துக்கு ஒவ்வாதபடி தாறுமாறாய் நடந்துகொண்டாய், — வேறு என்ன காரணத்தைச் சொல்ல?

25. ராமன் லக்ஷியத்தை விட்டுத் தவறி விட்டானே என்று மேலும் மேலும் வருந்துகிறான் வாலி. அவனுக்கு ராமனிடத்தில் இன்னும் ஒரு இரக்கந்தான்!

"அரக்கர் ஒரு அக்கிரமம் செய்து விட்டு ஓடிப் போய் விட்டால் அதற்காகச் சம்பந்தமில்லாதவர்களைக் கொல்லுவது எந்த விதத்தில் பொருத்தம்.'

'அரக்கர்ஓர் அழிவுசெய் து
கழிவரேல், அதற்குவே றோர்
குரக்கினத்(து) அரசைக்கொல் லை
மனுநெறி கூறிற்றுண் டோ!
இரக்கம்எங்(கு) உகுத்தாய்என் பால்
எப்பிழை கண்டாய்? அப் பா?
பரக்கழி இதுநீ பூண் டால்
புகழையார் பரிக்கற்பா லார்? (410)

---

25. அரக்கர் ஓர் அழிவுசெய்து கழிவரேல் - யாரோ ஒரு அரக்கன் வந்து மனைவியை எடுத்துக் கொண்டுபோய் விடுவானானால். குரக்கினத்து அரசை - குரங்குகளுக்கு அரசனான என்னை. பரக்கழி இது நீ பூண்டால் - பெரும் பழியாகிய இதை உத்தம புருஷனான நீ கொண்டு விட்டால். புகழை யார் பரிக்கற் பாலார் - புகழ்வதற்கு உரியவர் யார் இருக்கப் போகிறார்கள் உலகத்தில். பரிக்கல் - தாங்குதல்.

குறிப்பு:— இதுவரையும் வாலியின் உடம்பில் ரத்தமும் வலிமையும் கொஞ்சம் இருந்து கொண்டிருந்தது. அதனால் இயல்பான முறையில மனசு தொழிற்பட்டது. ராமனிடத்தில் அது காரணமாக மதிப்பும் பரிவுங் கொண்டு பேசினான் வாலி.

## இதுவா வில் வித்தை!

26. ராமனுடைய உயர்ந்த குணமும், தியாக குணமும், வீரமும் வாலியின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்து கிடந்தன. ராமனுடையஅம்பே வந்து மார்பில் பாய்ந்தும்கூடக் கொள்கை மாறவில்லை. ராமனை நேரில் கண்டபோது அவனிடத்தில் வாலிக்குப் பரிவுதான் இருந்தது என்பதைப் பார்த்தோம்.

இரத்தம் மிகுதியாய்ச் சிந்தவும், இயல்பான அடக்கத்தை மீறி ஒரு வெறி (ஜன்னிக் கோளாறு) பிறக்கிறது. அந்த வெறியிலிருந்து வார்த்தைகள் வேறு பாவத்தோடு வெளி வருகின்றன

இப்போது கடுகடுப்புடனே வாலி பேசுகிறான் 'நீ செய்திருக்கிற காரியம் வீரச் செயல் அல்ல. தந்தை தாயார் விதித்த காரியமா? அல்ல. அது போகட்டும்; உன் தந்தை சத்தியத்துக்காக உயிரை விட்டானே, அந்தச் சத்தியத்தைச் சேர்ந்ததா இந்தப் பாழாய்ப் போன செயல்?'

'வீரம் அன்று, வி
தியன்று மெய்ம்மையின்

வாரம் அன்று, நின்
மண்ணினுக்(கு) என்னுடல்

---

26. வாரம் – பகுதி.

பாரம் அன்று,ப-
கையன்று, பண்பொழிந்(து)

சரம் அன்றிது!-
என்செய்த வாறுநீ!' (411)

27. ஆங்காரம் மேலிடுவதை இப்போது பார்க்கிறோம்.

''களங்கம் என்று சொல்லுகிற மறு ஒன்று வானத்தில் ஊர்கிற சந்திரனுக்கு இருக்கிறது என்பது நமக்குத் தெரியும்'' என்று ஆரம்பிக்கிறான் வாலி.

'கார்இ யன்றக-
ளங்கம தாம்மறு,

ஊர்இ யன்றம-
திக்குள தாம்எனச்,-

26. பண்பு ஒழிந்து - உனக்கு ஏற்பட்ட நற்குணத்துக்கு மாறாய். சரம் அன்று இது - ஒளிந்து நின்று பாணம் எய்யும் இந்த இரக்கமற்ற செயல். என் செய்தவாறு நீ - என்ன செயலைச் செய்து தொலைத்தாயோ!

குறிப்பு :— பரிவு போய் ஆங்காரம பிறந்து விட்டது — என்ற பாவம் 'நின் மண்ணினுக்கு என்னுடல பாரம் அன்று' என்று பல்லைக் கடித்துச் சொல்லுகிறதில் கிடக்கிறது.

27. கார்இயன்ற களங்கமதாம் மறு - கருநிறம் பொருந்திய களங்கம் என்று சொல்லும் மறு. ஊர் இயன்ற - வானத்தில் ஊர்தல் செய்கிற. மதிக்கு உளதாம்

சூரி யன்மர—
புக்கும்ஓர் சொல்மறு

ஆரி யன்பிறந்(து)
ஆக்கினை யாமரோ!' (412)

28. ராமனுடைய செய்கையால் உலகத்துக்கே கேடு வந்து விட்டது என்று எண்ணுகிறான் வாலி. "நீதி நூலின் தன்மையையும் உங்கள் குலத்தவரது செங்கோலின் தன்மையையும் வீரவாழ்க்கையையும் நீ கவனித்த பாடாக இல்லை!" என்கிறான்.

'நூல்இ யற்கையும
நும்குலத்(து) உந்தையர

கோல்இ யற்கையும்
கொற்றமும் போற்றலை!

---

என — சந்திரனுக்கு இருப்பதுபோல. சூரியன மரபுக்கும் — உன்னுடைய புகழ்பெற்ற சூரிய வம்சத்துக்கும். ஓர் சொல் மறு — அழியாத பழியாகிய ஒரு மறுவை. ஆக்கினையாம் அரோ — உண்டாக்கி விட்டாயே, அடா! ஆரியன — சீலம் படைத்தவன்.

28. கொற்றம் — வீரம்.

வாலி யைப்படுத்
தாய்அல்லை! மன்அற

வேலி யைப்படுத்
தாய்விறல் வீரனே!' (413)

29. ஜன்னிக் கோளாறு மேலிடுகிறது; ஆங்காரம் உச்சத்தை அடைகிறது.

''இந்த வில் எத்தனையோ காரியங்களைச் சாதித்தது என்று சொல்லுகிறார்கள். ஆனாலும் யாரோ ஒருவன் உன் மனைவியைக் கொண்டு போய் விட்டான். வில்லுக்கு இதைவிட அவமானமான காரியம் ஒன்றுண்டா?'

'தாரம் மற்றொரு—
வன்கொளத், தன்கையின்

பார வெஞ்சிலை
தானும் பழுதுற,

---

28. வாலியைப் படுத்தாய் அல்லை - நீ தொலைத்தது வாலியை அல்ல, மன் அற வேலியைப் படுத்தாய் - ராஜதர்மம் என்ற இன்றியமையாத பாதுகாப்புத் தத்துவத்தையே தொலைத்துவிட்டாய். விறல் வீரனே - திறமையெல்லாம் வாய்ந்த வீரனே.

29. பார வெஞ்சிலை தானும் பழுதுற - பெரிய வீர வில்லுக்கும் கெட்டபெயர் உண்டாகும்படி.

நேரின் அன்றிம—
றைந்துநி ராயுதன்

மார்பின் எய்யவோ
வில்த்தொழில் வந்ததே!' (414)

---

29. நேரின் அன்றி மறைந்து — எதிர் எதிரேயில்லாமல் ஒளிந்து நின்று. நிராயுதன் மார்பின் எய்யவோ — ஆயுதமில்லாத ஒருவன் மார்பினில் எய்வதற்காகவோ. வில்த்தொழில் வந்ததே — உனக்கு அபூர்வமாக வில்த்தொழில் கை வந்தது, பேஷ், பேஷ்!—நிராயுதன் மார்பின் எய்யவோ!

குறிப்பு:— ஆங்காரம் கொதிப்பாய்க் கொதித்து எதிரியைப் பஸ்மீகரம் ஆக்குகிறது. தமிழ்வாக்கின் வேகம் இது.

30. மௌனமாக நிற்கும் ராமன் முன்பு, வாலி தன்னுடைய கோபத்தையும் மனக்கசப்பையும், பல்லை நெறு நெறு என்று கடித்துக்கொண்டு கண்ணிலிருந்து நெருப்புப் பொறி சிந்த, சொல்லி முடித்தான்.

என்று தானும்
எயிறுபொ டிபடத்

தின்று, கான்று
விழிவழித் தீயுக,

வென்றி வாலி
இனைய விளம்பினன்;—

நின்ற வீரனும்
தன்சொல் நிகழ்த்தினன். (415)

---

30. என்று தானும் - மேலே சொன்னபடி. எயிறு பொடிபடத் தின்று – உதிர்ந்து போகும்படியாகப் பல்லைக் கடித்து. கான்று விழிவழித் தீயுக – கண் வழியாகத் தீப் பொறி சிதறி விழ. வென்றி வாலி இனைய விளம்பினன் – வெற்றிக்குரிய வாலி இவ்வாறு எல்லாம் பேசி நிறுத்தினன். நின்ற வீரனும் தன் சொல நிகழ்த்தினன் - எதிரில நின்ற ராமனும் தான் சொல்லவேண்டியதைச் சொல்ல ஆரம்பித்தான்.

31. ''அப்பா வாலியே! எனக்கு ஒன்றும் பேசத் தெரியவில்லை. நீ பேசியதில் யாதொரு குற்றமும் இல்லை. உனக்குப் பெரிய பாதகத்தையே செய்து விட்டேன். நீ சொன்னது முற்றிலும் உண்மை. என் குலத்துக்குத் தீராப் பழியை உண்டாக்கி விட்டேன். இப்போது உன்னையும் உன் உயரிய சீலத்தையும், தெரிந்து கொண்டேன். நீ உயிர் துறக்கும் தறுவாயில் இருக்கிறாய். செய்த தீங்கை அழிக்க வழி இல்லையே. என்னத்தை நான் செய்ய! நீ என்னை மன்னித்தருள வேண்டும்'' என்று திக்கித் திக்கிச் சில வார்த்தைகள் ராமன் சொன்னான். ராமனுடைய முகத்தில் ஒரே துன்பமும் ஆற்றாமை யும் நிறைந்து நிற்கின்றன.

வாலி ராமனது முகத்தைப் பார்த்தான். இதயம் இடிகிற நிலையையும் உணர்ந்தான், வாலிக்கு இரக்கம் வந்துவிட்டது. அவனுடைய மதிப்பில் முன்னிலும் அதிகமாக உயர்ந்துவிட்டான் ராமன்.

இந்தத் தறுவாயில் அனுமனும் வேறு சிலரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அனுமன் சில வார்த் தைகள் பேசினான்:

''எல்லாம் விதி செய்த காரியம். வாலி, தம்பியை எவ்வளவோ அன்பாகப் பார்த்து வந்தான். அப்படியே தம்பி சுக்ரீவனும், தமையன்மேல் அளவில்லாத அன்பைச் செலுத்தி வந்தான். ஒன்றிலும் குறைவில்லை.

''ஏதோ விதி வசத்தால் வாலி நாட்டைவிட்டு, தூர தேசம் போக நேர்ந்தது. சுக்ரீவன் அரசியல்ப்

பொறுப்பை வகிக்க நேர்ந்தது. முன்னதாக யாதும் சொல்லிவிடாமல்த் திடீர் என்று தமையன் திரும்பி வந்தான். வந்தபோது சில வினையாளர்கள் இனந் தெரியாமல் வாலியை மதியாமல் இருந்து விட்டார்கள்.

''வாலிக்குக் கோபம் வந்தது இயல்புதான். எல்லாம் சுக்ரீவனது செயல் என்றே எண்ணி விட்டான். தம்பிமேல் ஒரே ஆங்காரம் பிறந்து விட்டது. அந்த ஆங்கார வெறியில் தம்பியைத் தொலைத்துவிட எண்ணி வேலை செய்தான். யார் சொல்லியும் வாலியின் செவியில் உண்மை ஏற வில்லை. சுக்ரீவன் ஓடி ஒளிந்து பல கஷ்டங்களுக் கெல்லாம் உள்ளானான். என்னவானாலும் தமையன் மேலிருந்த இயற்கையான அன்பு இதயத்தைவிட்டுப் போய்விடவில்லை. இதோ மூர்ச்சித்து : விழுந்து கிடக்கிறானே! உண்மையை இது புலப்படுத்த வில்லையா!,'' என்பதாக மிக்க உருக்கத்தோடு பேசி முடித்தான் அனுமன்.

ராமனுக்கும் வாலிக்கும் உண்மை விளங்கி விட்டது. என்ன உண்மை? விதியின் கொடுமையே எல்லாம் என்ற உண்மைதான்.

தேக வலிமை நீங்கிய வாலிக்கு ''அனுமன் சொல்லியதெல்லாம் உண்மைதான்; தம்பி சுக்ரீவனைப் பகைத்ததெல்லாம் பிசகுதான்'' என்று உணர முடிந்தது.

ராமனிடம் அனுமனைச் சுட்டிக்காட்டி ''இவன் உண்மையில் மகா மேதாவி. உயர்ந்த ஆன்ம சக்தி

வாய்ந்தவன். இவனைப்போன்ற உண்மையான துணை உலகத்தில் வேறு யாரும் உனக்கு இருக்கமுடியாது. அனுபவத்தில் நீயும் அறிந்துகொள்ளுவாய்'' என்றான் வாலி.

அடுத்தாற்போல் மூர்ச்சை தெளிந்து துயரத்தில் மூழ்கி நின்ற சுக்ரீவனைப் பார்த்தான். அவனிடத்திலும் பரிவு உண்டாய் விட்டது வாலிக்கு. அவனிடம் பேசுகிறான்:

''ராமனைச் சாமான்யமாக எண்ணிவிடாதே. தெய்வம் என்றே எண்ணவேண்டும். அவனது கருணையைப் பார்த்தாயா? அவனை வழி காட்டியாகக் கொண்டு காரியங்களை நடத்தினால் உனக்கு மாத்திரம் அல்ல நன்மை; நம் இனத்தார் எல்லோருக்குமே நன்மைதான். நம்முடைய முன்னோர் செய்த புண்ணியத்தாலே நம்மிடை வந்தான் ராமன்.''

இந்த விதமாகப் பல உறுதி வாக்கியங்களை, ஏங்கி ஏங்கி அழுதுகொண்டு நின்ற தம்பி சுக்ரீவனுக்கு வாலி சொன்னான்.

என்னஇத் தகையவா ய
உறுதிகள் யாவும்,ஏங் கும்
பின்னவர்(கு) இயம்பி,நின் ற
பேர்எழி லானை நோக் கி

31. என்ன இத்தகைய வாய உறுதிகள் யாவும் — மேலே சொன்ன நன் மொழிகளையெல்லாம், ஏங்கும் பின்னவற்கு இயம்பி — ஆற்ற முடியாத துயரத்தில் ஏங்கி நின்ற தம்பி சுக்ரீவனுக்குச் சொல்லிவிட்டு, நின்றபேர் எழிலானை நோக்கி — அடுத்து நின்ற பேரழகுடைய ராமனை நோக்கி.

'மன்னவர்க் கரசன் மைந்த
மற்றிவன் சுற்றத் தோடும்

உன்னடைக் கலம்'என் றுய்த் தான். —
உயர்கரம் உச்சிவைத் தான். (416)

---

31. மன்னவர்க்கு அரசன் மைந்த - சக்கரவர்த்தித் திருமகனே. மற்றிவன் சுற்றத்தோடும் உன் அடைக்கலம் என்றுய்த்தான்-சுற்றத்தார் எல்லாரோடுமே, இந்தச் சுக்ரீவன் உன்னுடைய அடைக்கலப் பொருளாக அமைகிறான் — என்று ராமனிடம் ஒப்பித்தான். உயர் கரம் உச்சி வைத்தான் - அப்படியே தலைமேல் கைகளைக் குவித்தவனாக.

குறிப்பு:— ராமன் இனிமேல் செய்யப்போகும் உதவிக்காக வாலி கைகூப்பி நன்றி செலுத்துகிறான். ராமனது கருணையை எப்படி அளக்கிறான் வாலி!

## இனம் தெரியாது வந்தான் எமன்!

32. சுக்ரீவனையும் சுற்றத்தாரையும் ராமனிடம் அடைக்கலமாக ஒப்படைத்தான் வாலி, — கைகளைச் சிரமேல் வைத்தவனாக.

பிறகு, தன் அன்புள்ள தம்பி சுக்ரீவனைப் பார்த்து ' உன்னுடைய அருமை மகனை உடனே இங்கே அழைத்து வா!'' என்று சொன்னான்.

வைத்தபின் உரிமைத்தம் பி
மாமுகம் நோக்கி'வல் லே

உய்த்தனை கொணர்திஉன் றன்
ஒங்கரும் மகனை' என் ன;

அத்தலை அவனை ஏ வி
அழைத்தலின் அணைந்தான்அன் றே.

கைத்தலத்(து) உவரிநீ ரைக்
கலக்கினான் பயந்தகா ளை! (417)

---

32. வைத்த பின் - கையைத் தலையில் கூப்பிச் சேவித்த பின்பு. உரிமைத் தம்பி மாமுகம் நோக்கி — அன்பிற்குரிய தம்பி சுக்ரீவன் முகத்தை நோக்கி. வல்லே உய்த்தனை கொணர்தி - உடனே இங்கு கொண்டு வருவாயாக. உன்றன் ஒங்கரும் மகனை என்ன - உன்னுடைய பெறுதற்கரிய மகனை என்று சொல்லவும். அத்தலை அவனை ஏவி அழைத்தலின் — அந்த இடத்துக்கு அவனை ஆள்விட்டுக் கூப்பிடவும். அணைந்தான அன்றே - வந்து சேர்ந்தான்; யார்? கைத்தலத்து உவரி நீரைக் கலக்கின பயந்த காளை - தன் இரு கைகளா லேயே சமுத்திரத்து நீரைக் கடைந்தவனான வாலி பெற்ற பிள்ளையான அங்கதன்.

குறிப்பு :— வாலிக்கு சுக்ரீவனிடத்தில் பூர்வமாக உள்ள அன்பும் பரிவும் உண்டாய் விட்டது. ' உரிமைத்

33. அங்கதன் சிவந்த மேனியன். சிறு பையன். கஷ்டமே அனுபவியாதவன். ஒருவர் கஷ்டப்பட்டார் என்று சொன்னால் உணர முடியாதவன். அவ்வளவு செல்வமாக வளர்ந்தவன். தந்தையைச் சுகமான வாழ்க்கையில் பார்த்தவன். அழகான புஷ்பம் ஆகிய சப்ர மஞ்சத்தில் படுக்க அவன் பார்த்திருக்கிறான். இப்போது எப்படிப் பார்க்கிறான்!

சுடருடைப் பரிதிஎன் னத்
தோன்றினன்; தோனறி,யாண் டும்

இடருடை உள்ளத்தோ ரை
யெண்ணினும் உணர்ந்திலா தான்;

மடலுடை நறுமெய்சேக் கை
மலரின்றி, உதிரவா ரிக்

கடலிடைக் கிடந்தகா தல்த்
தாதையைக் கண்ணிற்கண் டான். (418)

---

தம்பி' என்பது சுக்ரீவனைக் குறிக்கிறது. 'உனறன் ஓங்கரும் மகனே' என்று சொல்லும்போது சுக்ரீவனுக்கு மகன் இருந்ததாக எண்ணலாம். அப்படி ஒன்றும் கிடையாது. அங்கதனையே தன் மகனாக எண்ணி அன்பு பாராட்டி வந்தான் சுக்ரீவன். அந்த அருமைப் பாட்டை எலலாம் குறித்தே 'உன் மகன்' என்று சொல்லுகிறான் வாலி. வாலி, சுக்ரீவன், அங்கதன் இவர்களுக்கிடையே இருந்த குடும்ப உறவு, அருமையாக வெளியாகிறது கவியில.

33. சுடருடைப் பரிதி என்னத் தோன்றினன் – பிரகாசமுள்ள சூரியனைப் போல் தோன்றினான். மடலுடை நறுமென் சேக்கை மலரின்றி – இதழ்களைப் பரப்பிய வாசனையுள்ள மிருதுவான படுகையாகிய மலரில் அல்லாமல் உதிர வாரிக் கடலிடை கிடந்த – இரத்த வெள்ளம் பெருகிய கடலிலே இருந்த. காதல்த் தாதையைக் கண்ணிற் கண்டான் – அருமைத் தந்தையான வாலியைப் பார்த்தான்.

34. அங்கதன் மலைச் சரிவிலிருந்து ஓடி வருகிறான். கண்களிலிருந்து கலங்கிய வாறாகக் கண்ணீரும் ரத்தமும் பொழிகின்றன. அழகிய குண்டலம் தோளைத் தொட்டு ஆடிக் கொண்டிருக்கிறது. பூமேதளத்தில் வெண்மையான பரந்த மேனியோடு கிடக்கிறான் வாலி. அவன்மேல் வந்து விழுந்தான் அங்கதன்.

> ஆண்டகண் கலுழிநீ ரும்
> குருதியும் கால,மா லைக்
>
> குண்டலம் அலம்புகின் ற
> குவவுத்தோள்க் குரிசில்,திங் கள்
>
> மண்தலம் கிடந்ததென் னக்
> கிடந்தஅவ் வாலிமீ து,
>
> விண்தலம் தன்னின்நின் றோர்
> மின்விழுந் தென்னவீழ்ந் தான். (419)

---

34. கலுழி நீரும் குருதியும் கால — குழம்பாய்க் கண்ணீரும் இரத்தமும் வடிய. மாலைக் குண்டலம் அலம்புகின்ற - சின்னஞ் சிறு ஆரமாகச் செய்த ரத்ன குண்டலம் தொட்டு அசைந்து ஆடுகின்ற. குவவுத்தோளக் குரிசில் — பருத்த தோள் கொண்ட அங்கதன். திங்கள் மண்தலங் கிடந்ததென்ன - சந்திரனது பூமி மேல் வந்து கிடப்பது போல. கிடந்த அவ் வாலி மீது — செயலற்றுக் கிடந்த வாலியின் மார்பின் மேல். விண்தலம் தன்னின் நின்று - வானத்திலிருந்தே (மலைச் சரிவில் இறங்கியது குறிக்கும்.) ஓர் மின் விழுந்தென்ன வீழ்ந்தான் - ஒரு மின்னல் விழுந்தது என்று சொல்லும்படியாக விழுந்தான் — வெண்மையான சந்திரன் மேல் மின்னல் விழுந்ததுபோல்.

85. வாலியின் மார்பில் வந்து விழுந்த அங்கதன் புலம்புகிறான்.

தந்தையின் அரிய குணமும் பரோபகார சிந்தையும்தான் முதலில் ஞாபகத்துக்கு வருகின்றன. உடனே அவன் வீராதி வீரன் என்னும் விஷயமும் ஞாபகத்துக்கு வந்துவிட்டது.

'எந்தையே! எந்தையே! இவ்
எழுதிரை வளாகத்(து)யார்க் கும்

சிந்தையாச் செய்கையால் ஓர்
தீவினை செய்திலா தாய்!

நொந்தனை! அதுதான் நிற் க-
நின்முகம் நோக்கிஎங் ஙன்

வந்தனன் அஞ்சான்கூற் றம்:
வாலிஎன்(று) அறிந்திலன் கொல்!'
(420)

---

85. எழுதிரை வளாகத்து - ஏழு சமுத்திரங்களாலும் சூழப்பட்ட இந்த விரிவான உலகத்தில். நொந்தனை - கஷ்டத்துக்குள்ளாகி விட்டாய்; அது போகட்டும். வந்தனன் அஞ்சான் கூற்றம் - அஞ்சாதபடி வந்தானே எமனும். வாலி என்று அறிந்திலன் கொல - வாலி என்று தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டான். ஏதோ இனம் தெரியாமல்தான் வந்தான்போலிருக்கிறது.

குறிப்பு:— ஆற்றாமையின் உண்மையான பாஷை எப்படியெல்லாமோ குதித்தோடி வருகிறது!

## மலரடி சுமந்து வாழ் !

36. உயிர் போகும் தறுவாயில் இருக்கும் வாலியைப் பார்த்து மகன் அங்கதன் புலம்பினன். முதலில் தயாள குணத்தை எண்ணிப் புலம்பினன். இனி :

ஒரு பெரிய விஷயத்தில் ஒருவர் ஈடுபட்டு வேலை செய்தால் பிரம்மப் பிரயத்தனம் என்றும், பகீரதப் பிரயத்தனம் என்றும் புராணக் கதைகளை யொட்டி இன்றும் பேசுகிறோம்; முன்னோர்களும் அப்படியே பேசி வந்தார்கள்.

சமுதாயத்தில் சச்சரவும் குழப்பமும் மலிந்திருந்தது — உண்மை ஒன்றைக் காண முடியாத காரணத்தினால்த் தான். அப்போது வாலி என்ன செய்தான்? எல்லாரையும் அழைத்து, கட்சியும் கட்சியும் கலந்து கொள்ளச் செய்து உண்மையைத் தெளிவு படுத்திச் சமாதானத்தை உண்டாக்கினன். இதனல் சகல கட்சிகளுக்கும் க்ஷேமம் உண்டாயிற்று. எல்லா விதத்திலும் பயன் அடைந்தது சமுதாயம். இதைப் பற்றி எப்படிப் பேசினர்கள்! ''வாலியானவன் பாற் கடலையே கடைந்து அமுதத்தையே வழங்கினன்'' என்று உல்லாசமாய்ச் சொன்னர்கள். இந்தப் புகழுரை வாலியோடு ஒட்டிக்கொண்டது. இவ்வளவு பெரிய காரியத்தைச் சாதிப்பதற்கு அபாரமான அறிவு இருக்க வேண்டுந்தானே. இனி;

வாலியின் பராக்கிரமம் எப்படி இருக்கிறது? பூமியைச் சுற்றிலும் பெரிய பெரிய பர்வதங்கள் பெரியபெரிய சிகரங்களோடு நிமிர்ந்துகிடக்கின்றன: — அதாவது சக்கரவாளகிரி. அந்த சிகரங்களைப் பொருட் படுத்தாமலே மிதித்து மிதித்துப் பாய்வான் வாலி. அதனால் எல்லாச் சிகரங்களும் தழும்பேறிக் கிடந்தன.

'குலவரை நேமிக்குன் றம்
என்றுவான் உயர்ந்தகோட் டின்

தலைகளும் நின்பொற்தா ளின்
தழும்பினித் தவிர்ந்தஅன் றே!

மலையுடன் அரவும்மற் று
மதியமும் பலவுமதாங் கி

அலைகடல் கடையவேண் டின்
ஆர்இனிக் கடைவர்ஐ யா! (421)

37. இப்படி யெல்லாம் அழுது அரற்றிக் கொண்டிருந்தான் அங்கதன். இயல்புதானே அது! பார்த்தான் வாலி. அருமை மகனிடம் என்று

---

36 குலவரை - மகா பர்வதமாகிய சக்கரவாளகிரிகள். வான் உயர்ந்த கோட்டின தலைகளும் — வானளாவிய சிகரங்களின் முகடுகளும். நின் பொன்தாளின் தழும்பு-உன் அருமையான கால் பட்டு ஏற்பட்ட தழும்புகள். தவிர்ந்த அன்றே - இனி அந்த முகடுகளுக்கு இல்லை தான். மலையுடன் அரவும் மற்றும், மதியமும் பலவுநதாங்கி-பாற்கடலைக் கடையும் போது தாழியாகிய பூமியைக் காலில் வைத்துப் பிடித்துக்கொண்டு, மந்தர கிரியை மத்தாக வைத்து, வாசுகி என்னும் பாம்பைத் தாம்பாகச் சுற்றி சந்திரனை அடை தாணாக நட்டு இரு கையாலும் கடைந்தான் வாலி என்பது புராண வரலாறு.

யில்லாத பரிவு உண்டாய் விட்டது. பேசுகிறான் : "அப்பா நீ சிறு பையன். நான் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்க வேண்டும். இதோ நிற்கிற ராமன் யார் தெரியுமா?"

'பாலமை தவிர் நீ;என் சொற்
பற்றுதி யாயின்,தன் னின்

மேலொரு பொருளும்இல் லா
மெய்ப்பொருள் வில்லும்தாங் கிக்

கால்தரை தோயநின் று
கட்புலக்(கு) உற்றதம் மா!

மால்தரும் பிறவிநோய்க் கு
மருந்திவன் கண்டாய்மைந் த!' (422)

---

37. பாலமை தவிர் நீ - குழந்தைப் பருவத்துக்குரிய இந்த அழுகையையும் அரற்றலையும் நீ விட்டொழிக்க வேண்டும். என்சொல் பற்றுதியாயின் - என்னுடைய சொல்லைக் கேட்டு நடக்கிறதென்றால. தன்னின் மேலொரு பொருளு மில்லா மெய்ப் பொருள்-தனக்கு மேல ஒரு வஸ்து, ஞானமயமான வஸ்துவோ ஆனந்த மயமான வஸ்துவோ இல்லை யென்று சொல்லும்படியான பரம் பொருள் தானே. வில்லும் தாங்கிக் கால் தரை தோய நின்று - வில்லை எடுத்து, காலும் பூமியிற் தோயந்து. கட்புலக்கு உற்றதம்மா- அடடா, நம்முடைய கட்புலனுக்கே தெரியும் படியாக வந்துள்ளது மால்தரும் பிறவி நோய்க்கு மருந்து இவன் கண்டாய் - ஏதோ பிறவி ஒன்று உண்டென்றும், அது காரணமாகச் சாவு ஒன்று உண்டென்றும், நினைத்துக் கொண்டிருக்கிற மயக்கம் தீர வேண்டுமானால் இந்த ராமனது வாழ்க்கையை முற்றும் உணரவேணடும் அது தானப்பா நமக்கு வாயத்த மருந்து. மைந்த - செல்வக் குமாரனான அங்கதனே!

குறிப்பு — ஞானிகளை எப்படிப் பாாக்க வேண்டும், மதிக்க வேண்டும் என்ற விஷயத்தைத் தெளிவுபட வாலியின் மூலம் சொல்லுகிறார் கம்பர்.

38. உள்ளத்திலிருந்து வருகிற வார்த்தைகளாதலால், அங்கதனைப் பாதித்து விட்டது வாலி எடுத்துச் சொன்ன உண்மை.

இனி விஷயத்தை நேர்முகமாகச் சொல்ல வேண்டியதுதானே!

"ராமன் காரணமாக என்னுடைய உயிர் நீங்கியது என்று கொஞ்சமும் கருதக் கூடாது. ஆனால் உன்னுடைய வாழ்க்கைக்கு உரிய லக்ஷ்யமான காரியத்தையே நீ கருத வேண்டும். அதைத்தான் உனக்குச் சொல்லப் போகிறேன்."

'என்னுயிர்க்(கு) இறுதிசெய் தான்
எனபதை இறையுள்என் ணே(து)

உன்னுயிர்க்(கு) உறுதிசெய் தி;
இவற்(கு)அமர் உற்றதுண் டேல்

---

38. உன்னுயிர்க்கு உறுதி செய்தி - உன்னுடைய ஜன்ம சாபல்யத்தை நோக்கியே இனி நடந்து கொள்வாயாக. இவற்கு அமர் உற்றது உண்டேல போதுதி - இந்த ராமன் யாரோடாவது போர் செய்கிறது என்று ஏற்பட்டால் அவனுடன் போய்ப் போர் செய்ய வேண்டும்.

பொன்னுயிர்த்(து) ஒளிரும்பூணாய்
போதுதி. நிலைமைநோக்கி

மன்னுயிர்க்(கு) உறுதிசெய் வான்
மலரடி சுமந்துவாழ்தி.' (423)

---

38. பொன்உயிர்த்து ஒளிரும் பூணாய் - பொன்னின் ஒளி சதா வீசிக்கொண்டிருக்கும் ஆபரணங்களை அணிந்த அருமைப் புதல்வனே. போதுதி - இங்கே வா. நிலைமை நோக்கி மன்னுயிர்க்கு உறுதி செய்வான மலரடி சுமந்து வாழ்தி - மக்களின் பக்திக்கு ஏற்றவாறெல்லாம் பதவி அளிக்கும் ஈசனான இந்த ராமனது திருவடிகளை வணங்கி வாழ்வாயாக!

குறிப்பு:— வாலிக்கு ராமனது செயல், எங்கும் நிறைந்து எல்லாமாய் நிற்கும் ஈசன் செயல்தான் என்று தெளிவாகப்படுகிறது. அப்படிப் படுவதை, மகனுக்குச் சொல்லும் சொல் ரூபிக்கிறது.

## வேறொரு வாலியா!

39. வாலி தன் மகன் அங்கதனிடம் ராமனைப் பற்றிச் சொன்னான்: "என்னுடைய உயிர் இந்த ராமன் காரணமாக நீங்கியது என்று எண்ணாதே. பரம்பொருளே வில்லைத் தாங்கிக்கொண்டு இங்கே வந்தது என்று எண்ணுவாயாக. இந்த உலகில் உனக்கு உறுதி வேண்டும் என்றால், ராமபிரானது திருவடியைச் சதா வணங்கியவனாய் வாழ்வாயாக" என்று உயர்ந்த உண்மை மனப் பாங்கோடு சொன்னான்.

அங்கதனிடம் இவ்வளவும் சொல்லிவிட்டு, ராமனைப் பார்த்துப் பேசுகிறான் வாலி:

"அரக்கர்களானாலும் சரி, வேறு எந்தப் பகைவர்களானாலும் சரி அங்கதன் முன் நிற்கமுடியாது. செயலிலும் பரிசுத்தமான லக்ஷ்யத்தையே கொண்டவன்."

'நெய்அடை நெடுவேல்த்தானை
நீல்நிற நிருதர்என்னும்
துய்அடை கனலிஅன்ன
குரிசில்காண்! தொழிலும்தூயன்;

---

39. நெய்அடை நெடுவேல்த் தானை — நெய் பூசிய நெடிய வேல் ஏந்திய படை வீரர்களான. நீல் நிற நிருதர் என்னும் துய் — கருநிறமான அரக்கர்கள் என்னும் பஞ்சுப் பொதியை. அடை கனலி அன்ன குரிசில் காண் — நிர்மூலமாக்கக்கூடிய அக்கினிக்குச் சமானமான வீரன்.

பொய்அடை யுள்ளத் தார்க் குப்
புலப்படாப் புலவ!மற் றுன்

கைஅடை யாகும்'என்(று) அவ்
இராமற்குக் காட்ட,மைந் தன்: (424)

40. அங்கதனை அடைக்கலப் பொருள் என்று சொன்னதும் அங்கதன் என்ன செய்கிறான்.

தன்அடி தாழ்தலோ டும்,
தாமரைத் தடங்கண் ணும்

பொன் னுடை வாளை நீட் டி
'நீ இது பொறுத்தி' என் றான்;—

என்ன லும் உலகம்ஏ ழின்
ஏத்துற வாழ்ந்தவா லி

அந்நிலை துறந்துவா னுக்(கு)
அப்புறத்(து) உலகன்ஆ னான். (425)

---

39. பொய் அடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவ – சத்தியத்திலேயே நாட்டங்கொண்டிருக்கிற ஞானிகள் அல்லாத மற்றவர்களுக்குத் தென்படா அறிவு மயமான தெய்வமே. மற்றுன் கையடையாகும் என்று அவ் இராமற்குக் காட்ட–உன்னுடைய அடைக்கலப் பொருள் ஆகிறான்என்று ராமனுக்குக் காட்ட. மைந்தன் – அங்கதன்.

40. தன்அடி தாழ்தலோடும் – அங்கதன் ராமனுடைய அடியை வந்து வணங்கினான்: அதன் பேரில் ராமனும்: பொனனுடை வாளை நீட்டி நீ இது பொறுத்தி என்றான் – பொன் மயமான தன் வாளை அங்கதனிடம் நீட்டி, 'நீ இதை எடுத்துக் கொள்வாயாக' என்று சொன்னான் ராமன். (இந்தச் செயல், அபயங் கொடுப்பதற்கு அக்காலத்து அடையாளம்). என்னலும் – என்று ராமன் சொல்லி முடிக்கவும். உலகம் ஏழின ஏத்து உற வாழநதவாலி – இந்த உலகத்து ஏழு கண்டங்களிலுமுள்ளவர்களது புகழை யெல்லாம் பெற்று வாழ்ந்த வாலி. அந்நிலை துறந்து – இகஉலகத்து அந்த நிலையை விட்டு. வானுக்கு அப்புறதது உலகன் ஆனான் – வானுக்கும் அப்பாலுள்ள பரலோக வாழ்க்கைக்கு உரியவனானான்.

41. வாலி மகா வீரன், மகாஞானி, பக்திமார்க்கத்தில் நின்ற புனிதன்; அத்தகைய வாழ்க்கைக்குத் தக்கவனுக, சாந்த மூர்த்தியாய் விளங்குகிருன். பரலோக சாந்தியும் அடைகிருன்.

பெரிய விஷயம்; அது முடிந்தது. ஆனுல் அதோடு மனுஷ விஷயம் போய்விடுகிற காரியமா! அல்ல. வாலியாகிய வீரன், மகா வீரன், உத்தம புருஷன்–போய்விட்டான். மகன் அங்கதனுக்கு ஒரு வகையான சமாதானம் ஏற்பட்டதாகச் சொல்லிக் கொள்ளலாம். ஆனுல் உத்தம பத்தினியாகிய தாரை ஒருத்தி இருக்கிருளே, அவளுக்கு யார் என்ன சமாதானத்தைச் சொல்ல? தாரை புலம்புகிருள்

''உன்னுடைய மலை போன்ற தோளிடை நித்தியவாசம் பண்ணினவள் அல்லவா நான்? அப்படியெல்லாம் இருந்தது. இந்தத் துயரத்தைக் காணத் தானு!''

சந்தம்

தான தன்ன தன்
தன்ன தன்ன தன்

'வரைசேர் தோளி டை
நாளும் வைகு வேன்

கரைசே ராஇ டர்
வேலை காண்க வோ!

---

41 வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன் – மலை போன்ற தோளோடு சதா முயங்கிக் கொண்டிருந்தவள் அல்லவா நான் கரைசேரா இடர்வேலை காண்கவோ – கரையில்லாத இந்தத் துன்பக் கடலைக் காண்பதற்குத் தானு.

உரைசேர் ஆரு யி
    ரே!என் உள்உ றை

அரசே! யான்இ து
    கரண அஞ்சி னேன்!' (426)

42. ''ஆம், என்னுள்ளத்தில் சதா நீ இருந்தாய். அதுமாத்திரமா? நானும் உன்உள்ளத்தில் சதா இருக்கத்தானே செய்தேன்: ஆனாலும் என்ன விபரீதம்!''

'செருவார் தோளா! நின்
    சிந்தை யேன்எ னின்,

மருவா வெஞ்ச ரம்
    எனையும் வவ்வு மால்!

ஒருவேன் உள்உ ளை
    ஆகின் உய்தி யால்!—

இருவேம் உள்இ ரு
    வேம்இ ருந்தி லேம்.' (427)

---

41. உரைசேர் ஆருயிரே - உரைத்துப் பார்க்கப் பார்க்க மாற்றுயரும் என் அரிய உயிரே. என் உள்ளுறை அரசே - என உள்ளத்தில் உறைகின்ற அரசே.

குறிப்பு:— செய்யுளின் தாள இயலில் அபூர்வமான சோகம் பிறக்கிறது. சீர்களில் நின்று நின்று பாட வேண்டும்.

42. செருவார் தோளா - யுத்தத்துக்கு என்று வாய்த்த தோள் கொண்ட வீரனே. நின சிந்தையேன் எனின் - உன் உள்ளத்தில்தான் தங்குகிறேன் என்று இருந்தால். எனையும் வவ்வுமால்— நெஞ்சை ஊடுருவிய பகைவர்களது பாணம் என் நெஞ்சையும் ஊடுருவவேண்டியதுதானே: என்னைகொல்ல வேண்டியதுதானே — இது போகட்டும். ஒருவேன் உள் உளையாகின் — இப்போது தனித்திருக்கிற என் உள்ளத்தில் நீ தங்கி இருப்பது உண்டாயின். உய்தியால் - அம்பு என்னைப் பாய்ந்து தானே உன்னைக் கொல்ல வேண்டும்.

43. வாலியினுடைய செயல் எல்லாம் உயர்ந்த லக்ஷ்யத்தோடிருந்தன. உயர்ந்த லக்ஷ்யங்கள் எல்லாம் அவனால் காப்பாற்றப் பெற்றன—தேவர் களுக்கு உபகாரம் செய்கிறது என்றால் அதுதானே! அவ்வளவும் தாரையின் நினைவுக்கு வருகிறது. தேவர்கள் கூறுவதாக விஷயத்தைச் சொல்லும் போது எவ்வளவு வேகம் உண்டாகிறது!

'எந்தாய்! நீய மிர்(து)
ஈய யாமெ லாம்

உய்ந்தேம்' என்று ப—
காரம் உன்னு வார்,

நந்தா நாண்ம லர்
சிந்தி நண்பொ டு

வந்தா ரோஎ திர்
வானு ளோர்எ லாம்!' (428)

---

என்னைத்தான் பாயவில்லையே அம்பு, நீ இறக்க வேண்டிய தில்லைதானே; ஆனால் இறந்து போய் விட்டாயே நீ; என்ன ஏற்படுகிறது இதனால். இருவேம் உள் இருவேம் இருந்திலெம் - நம்மிருவருக்குள்ளும் இருவரும் மாறிப் புகுந்து இருந்தோம் என்பது வெறும் வீண் வார்த்தை.

43. எந்தாய் — என் அப்பனே என்று தேவர்கள் சொல்லுகிறார்களாம் நீ அமிர்து ஈய யாம் எலாம் உய்ந்தேம். பாற்கடலைக் கடைந்து தேவாமிர்தத்தை எடுத்து எங்களுக் குக் கொடுத்தாய்; நாங்களும் அதை உண்டு நித்திய ஜீவர் களாக இருக்கிறோம். என்று உபகாரம் உன்னுவார் - என்பதாக நன்றி பாராட்டிக் கொண்டு, நந்தா நாண் மலர் சிந்தி — வழியெலாம் வாடாத புஷ்பங்களைத் தூவி. நண்பொடு வந்தாரோ எதிர் — ஆசையோடு எதிர்வந்தார் களோ. வானுளோர் எலாம் — தேவர்கள்தான்.

**44.** அறிவு மயங்கினவளாய் சோக வெறியில் ஏதேதோ சொல்லுகிருள்.

"கையில் வைத்து நீ கசக்கிஞல் தூளாய்ப் போய் விடுமே மேருகிரி. அப்படியிருக்க யாரோ பகைவர்களாம், அவர்களது அம்பு உன் மார்பைக் கிழித்து விட்டதாம், இது நடக்கிற காரியமா?"

'நீறும் மேரு வும்
நீநெ ருக்கி ஞல்,

மாருேர் வாளி உன்
மார்பை ஈர்வ தோ!

தேறேன் யான்,இ து
தேவர் மாய மோ!

வேருேர் வாலி கோ—
லாம்வி ளிந்து ளான்!' (429)

---

44. நீறும் மேருவும் நீ நெருக்கிஞல் - நீ கசக்கிஞல் மேருவும் தூளாய்விடும். நீறு - தூள். மாருேர் வாளி — எதிரிகளின் அம்பு. தேறேன் யான் - எனக்கொன்றும் தெரியவில்லையே. இது தேவர் மாயமோ - தேவர்கள் ஏதோ வந்து விளையாட்டுச் செய்கிற காரியமா இது—பிரியத்திஞலே தான். வேருேர் வாலிகோலாம் விளிந்துளான்- இதோ இறந்து கிடக்கிற இவன் வாலியல்ல—வாலியின் சாயலிலுள்ள வேருெருவன் தானே.

குறிப்பு:— இந்த இடத்தில் படுதா விழுகிறது, வாலி வதை இத்துடன் முடிகிறது. ஒரு தனி இதிகாசமாகவே விளங்குகிறது வாலி வதை.

கிஷ்கிந்தா காண்டம்
முற்றிற்று.

# அனுபந்தம் - 1

## கதைக் குறிப்பு

ராமன் லக்ஷ்மணன் சீதை ஆகிய மூவரும் சித்திர கூட பர்வதத்தை விட்டு நேராகத் தண்டகாரண்யத்துக்குப் போனார்கள் என்று சொன்னதில் கதைப் பொருத்தம் இருக்கிறது. வேறு கதைகளையும் விஷயங்களையும் புகுத்தி வின்னியாசப் படுத்துவது அவசியம் அல்லாதகாரியம். அவை இதிகாசத்தின் கட்டுக்கோப்புக்குப் பலவீனத்தையே கொடுத்துவிடுகின்றன.

ஆரணிய காண்டத்தை ஆரம்பிக்கிற விராதன் வதைப் படலம், சரபங்கர் படலம் இவைகளைப் பார்த்தால் அது தெரியவரும்.

## விராதன் வதை

ராமன் அத்திரி மகரிஷியின் ஆசிரமத்துக்கு முதலில் போகிறான். அங்கே மிக்க உபசாரம் நடக்கிறது. மகரிஷியின் மனைவி, அனுசூயை, சீதைக்கு ஆபரணங்கள் பூட்டி மாலை அணிந்து அலங்காரஞ் செய்கிறாள். மகரிஷியிடம் ராமன் சீதை லக்ஷ்மணன் மூவரும் விடை பெற்றுக்கொண்டு வனத்தின் வழியாகச் செல்லுகிறார்கள். போகிற வழியில் பிரம்மாண்டமான உருவத்தோடுகூடிய விராதன் என்கிற அரக்கன் வருகிறான். அவன் பதினாறு யானைகளையும் முப்பத்திரண்டு சிங்கங்களையும் ஒரு கையில் தூக்கிக் கொண்டு வருகிறான். அடுத்த கையில் ஆகாயத்தையே

குத்தும்படியான சூலம் ஒன்றைத் தாங்கி வருகிறுன். வந்து என்ன செய்கிறுன்?

அப்படியே சீதையை ஒரு கையாலே தூக்கிக் கொண்டு ஆகாயத்தின் வழியாகப் போகிறுன். சீதை 'ஓ'என்றுஅலறுகிருள். பார்த்தார்கள் ராமலக்ஷ்மணர்கள். பின் தொடர்ந்து ஓடிப்போய் ஓரே குதியாய்க் குதித்து விராதனது இரண்டு தோள்களிலும் ஏறிக் கொண்டார்கள். அவர்களையும் தாங்கிக்கொண்டு சுற்றிச்சுற்றிஓடுகிறுன் அரக்கன். ராமன் இதையெல்லாம் வேடிக்கையாக அனுபவித்துக் கொண்டிருக்கிறுன். என்னவேடிக்கை என்று லக்ஷ்மணன் கண்டிக்கவும், ராமன் தன் கையிலுள்ள வாளால் அரக்கனது தோள்களை அறுத்தெறிந்தான். அரக்கனும் கீழே விழுந்தான். ஆனால் தோள்கள் ராமலக்ஷ்மணர்களைத் தொடர்ந்தன. இதையெல்லாம் பார்த்து, அரக்கனை வெட்டிப்புதைத்தாலொழியக் காரியம்சாயாதுஎன்று எண்ணி ஒரு பெரிய குழியை வெட்டச் சொன்னுன் ராமன். லக்ஷ்மணன் அப்படியே வெட்டினுன். அரக்கனது உடலைத் தன் பாதத்தால் உதைத்துக் குழியில் தள்ளினுன்.

பாதம் பட்ட மாத்திரத்தில் விராதனுக்குப் பூர்வமான உருவம் வந்தது. வந்ததும், ராமனைத் துதித்துவிட்டுத் தான் ஆதியில் தேவலோகத்தில் வீணை வாசிக்கும் தும்புருவாய் இருந்ததாகவும், அரம்பை நிமித்தமாகத் தேவேந்திரன் இப்படி அரக்கனுகும்படி சபித்ததாகவும் அந்தச் சாபம் ராமன் பாதம் பட்டுத் தீர்ந்துவிட்டதாகவும் சொல்லுகிறுன்.

## சரபங்கர்

ராமன் முதலிய மூவரும் மாலை நேரத்தில் சரபங்க முனிவருடைய ஆசிரமத்துக்குப் போய்ச் சேருகிறார்கள். அன்று காலையிலேயே, சரபங்கரிடம் தேவேந்திரனே வந்திருக்கிறான். பிரும்மாவே அனுப்பி வந்திருக்கிறான். மேனகை முதலான தெய்வ மகளிரும் மற்றப் பரிவாரங்களும் வெகு ஆடம்பரமாகச் சூழ்ந்து நிற்கிறார்கள். முனிவரைப்பார்த்துத் தேவேந்திரன் கூறுகிறான். "நீர் செய்துவருகிற தவமோ யாராலும் அளக்க முடியாது. உம்முடைய தவத்தை மெச்சி, பிரும்மா தம் உலகத்துக்கு உம்மை அழைத்து வர என்னை அனுப்பியிருக்கிறார். நீர் அங்கே வந்தால் பிரும்மாவே எதிர்கொண்டு வரவேற்பார். தயவு செய்து புறப்படவேண்டும்" என்று சொல்லிக்கொண்டிருக்கிறான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ராமன் முனிவரது ஆசிரமத்துக்குப் போய்ச் சேருகிறான். தேவேந்திரன் ராமனைக் கண்டு, தேவாதிதேவன் என்று புகழ்ந்து, கிடையாப் பேறு கிடைத்தது என்று சொல்லித் தன்னுடைய உலகத்துக்குத் திரும்பிப் போகிறான், முனிவரை அங்கேயே விட்டுவிட்டு.

ராம லக்ஷ்மணர் சீதை மூவரும் முனிவரைப் போய் வணங்குகிறார்கள்.

முனிவர் ராமனைப் பார்த்து, "நீ எனக்கு விடை தரவேண்டும்" என்று சொல்லிப் பெருந்தீயை வளர்க்க ஆரம்பித்தார். ராமன், "ஏன் தீயை வளர்க்கிறீர்கள்?" என்று கேட்டான். "நான் அக்கினிப்

பிரவேசம் செய்யப் போகிறேன்'' என்றார் முனிவர். ''நான் வந்த சமயம் பார்த்து அக்கினிப் பிரவேசம் செய்வது என்ன'' என்று ராமன் கேட்க, ''நீ இங்கே வந்த காரணத்தினால் எனக்கு நல்வினை தீவினையாகிய இரண்டும் நீங்கிவிட்டன. மேலான பதவியை அடையப் போகிறேன் நான்'' என்று சொல்லித் தான் வளர்த்த பெருந்தீயில் தானும் பத்தினியுமாக விழுந்து பரமபதமடைந்தார்கள்.

# அனுபந்தம் — 2. திருத்தங்கள்

## ஆரணிய காண்டம்

| செய்யுள் எண் | அடி | திருத்தம் |
|---|---|---|
| 2 | 2 | முனிவரும் என |
| 4 | 2 | வாய்வர |
| | 3 | விட்டு |
| 6 | 1 | ஓடினர் |
| 7 | 3 | பின்னர்த் தாபதர் |
| 9 | 2 | உளர் பலர் |
| | 4 | துறையின் நீங்கினேம் |
| 16 | 1 | அமைந்துள |
| 17 | 1 | ஆசியின |
| | 2 | கூறி முனிவரர் நின்றிட |
| 22 | 2 | ஒரும் |
| | 3 | உணர்வினை |
| 27 | 1 | கூற |
| 28 | 2 | விழுந்தவண்; இருந்தான் |
| 29 | 3 | பெற்றிலர் யான் |
| 33 | 4 | நின் அருள் என் |
| 34 | 1 | சொற்றனை நீ |
| | 4 | குழுவு நிறை |
| 36 | 1 | கழை ஓங்கி மலை ஓங்கி |
| | 3 | தூயதொரு சூழல் |
| 37 | 1 | இனி(து) அவவயின் |
| 39 | 2 | சந்திரனோடு ஒளி |
| 40 | 1 | தூய்மைய |

| செய்யுள் எண் | அடி | திருத்தம் |
|---|---|---|
| 41 | 1 | கூற்றினுக்கு |
| 48 | 4 | பலப் பல |
| 48 | 4 | வருகிலன் |
| 67 | 3 | பொலன்கழல் |
| 68 | 3, 4 | துன்பின் வரம்பெலாம்<br>ஓத ஓத ஒழிந்த உணர்வினன் |
| 73 | 4 | இனிது புக்கு |
| 77 | | முதலடியை மூன்றுவது அடியாக மாற்றியிருக்கிறது. |
| | 3 | மேவி உண்மையின் |
| 78 | 4 | காணுவான் |
| 81 | 3 | உரம்களி உயர் திசை |
| 85 | 3 | செய்யவாய் |
| 87 | 1 | வானின் |
| | 2 | வெறியூட்டும் |
| | 3 | தேனின் இதழ் பெற்று திகழ் |
| 88 | 2 | பொன் |
| | 3 | செய்கின்ற |
| 91 | 1 | தனில் ஆழ்ந்துடைய |
| | 2 | முகத்தண்ணல் அடி |
| 92 | 1 | இவண் |
| 93 | 3 | தாங்கும் |
| 94 | 1 | என்பதொன்று |
| | 2 | வகுத்துக் கூறும் |
| 96 | 2 | அனரே |
| 97 | 1 | உம்பர் |
| 99 | 4 | என்னில் |
| 101 | 2 | வாழ்வுடையன் |
| 103 | 1 | நங்காய் தன்னை |

| செய்யுள் எண் | அடி | திருத்தம் |
|---|---|---|
| 105 | 1 | அன்னம் அன்னாள் |
| 106 | 4 | நங்காய் |
| 107 | 1 | இன்னும் |
| 113 | 3 | வான்மதி வீசிய |
| 115 | 1 | கதித்துள |
| 116 | 1 | அழல் கான்றிட |
| 124 | 1 | ஆண்டு |
| | 3 | அவள்க் கரந்திவண் |
| 127 | 4 | வல்வயிற்று: வாளினை உருவி |
| 137 | 3 | ஆர்சொல் |
| 140 | 1 | நோக்குறில் |
| | 3 | பேதையேன் |
| | 4 | நோக்கிய சொல்லருங் |
| 146 | 2 | நம்பும் எம் |
| 165 | 1 | அன்னான் |
| 166 | 1 | குலைந்து |
| 167 | 1 | தானைருழ் |
| 171 | 1 | காஅனான் |
| 172 | 2 | வெங்கதம் இழந்திலன் |
| 174 | 3 | பரியா |
| 178 | 3 | உரைப்பதொன் றுண்டு |
| 179 | 4 | ஆருயிர்க் குறுதுணை |
| 182 | 2 | கொழுவடித்து |
| 183 | 1 | சேனையை இணக்கி |
| | 3 | தேர்வர |
| | 4 | இராமனுக்கு எதிர்சொனி |
| 184 | 3 | பகர்ந்தனன் நகைத்தான் |
| | 4 | பகழி ஒன்று |
| 185 | 2 | அக்கணை சிதைத்தான் |

| செய்யுள் எண் | அடி | திருத்தம் |
|---|---|---|
| 185 | 4 | தடிந்தான் |
| 188 | 4 | கையின் மடங்கலை |
| 190 | 3 | வனம் ஆகி அவன் நின்றதனை அம்பரம் |
| | 4 | கொண்டு கடிதிற் |
| 198 | 3 | வாளிபால் பண்பினில் |
| | 4 | வில்லையே தம்பி |
| 199 | 2 | வலங்கொள் |
| 200 | 1 | எடுத்து அதை |
| 203 | 3 | இலக்கு வந்துறுமுன் அதை ஏந்தலும் |
| 204 | 1 | வெங்கதை இற்றபின் |
| | 2 | அனையவன் |
| 210 | 1 | இங்கிவ் வாறென நின்றது |
| 212 | 3 | சூறையின வல்நெடும் |
| 213 | 3 | பெயருஞ் |
| 214 | 1 | முந்தினர் |
| | 2 | திறையின் |
| | 3 | திசை திசை நின்று |
| 216 | 3 | அங்கமும்; ஆண்தகை |
| | 4 | திகழ் |
| 217 | 1 | செற்றுஅவ் ஈசனும் |
| 218 | 2 | பண்ணுடை |
| 225 - 230 | | வரிசை மாறி அமைத்திருக்கிறது |
| 230 | 4 | பொலனகழல் |
| 233 | 3 | என்றோ |
| 234 | 3 | வேறும் என |
| 237 | 2 | மறறிதுகொல் ஓங்கிசை இழந்தேன் |
| | 4 | பொழுதத்தும் அது வந்துறுதல் ஆமோ |
| 238 | 1 | ஊழும்; உறுத்தார் |

| செய்யுள் எண் | அடி | திருத்தம் |
|---|---|---|
| 238 | 2 | அன்னவர்தம் |
| | 3 | நாளுமுள கால விடம் உண்ட இறைநல்கு |
| | 4 | வாளுமுள |
| 242 - 243 | | வரிசை மாற்றி அமைத்திருக்கிறது |
| 244 | 3 | மிளிரும் மின்னே |
| | 4 | வாகை |
| 246 | 1 | மடியின்; உலகொடிம்பர் |
| | 2 | வயிறு தந்தாளே அல்லள் |
| 248 | 3 | ஓங்குயர் வரையாம் தோள்கள் |
| | 4 | இனியே |
| 249 | 3 | நின்பால் |
| 253 | 2 | விளங்குற ஓர் |
| 256 | 1 | அடுத்தன |
| 259 | 1 | முன்னவன் |
| 260 | 1 | கொள்ளா |
| 261 | 2 | உரத்தில்க் கூட்டி |
| | 4 | கதியும் |
| 271 | 3 | வீழ்ந்ததோர் கொள்கையாள் |
| 272 | 2 | வாழ்(வு) என்று மொய்யழல் |
| 274 | 1 | ஏற்றமாம் |
| 278 | 4 | துறப்பல் |
| 305 | 4 | சிறசினன் குணத்தின் குன்றனுன் |
| 309 | 4 | கீழுறவே |
| 310 | 3 | சுருள்வாள் |
| 313 | 3 | முற்றிலனாய் |
| 316 | 1 | இறங்தொழியும் |
| 317 | 3 | உண்மையன்னுன் |
| 320 | 2 | தனைக்கடிந்து |
| 320 | 3 | வந்துளேன் |

| செய்யுள் எண் | அடி | திருத்தம் |
|---|---|---|
| 323 | 3 | தேரின் நின்று அவனை |
| 324 | 2 | மனம் அது |
| 325 | 2 | மூசுற |
| 326 | 2 | துடைத்துளேன் |
| 331 | 2 | பொன்னியல் |
| | 4 | பின்னவன்தன் |
| 333 | 2 | பெற்றியால் |
| 335 | 1 | மதியான் |
| 336 | 1 | ஓங்கிச் சொரிந்திட நயனநீர் சொல்லை |
| 337 | 4 | வியத்து |
| 338 | 3 | இறந்தனையே |
| 344 | 3 | வந்து அவ் ஆயிடை |
| 345 | 1 | ஆசையால் |
| 346 | 3 | மேற்கொளல் கடன் |
| | 4 | மதியினால் விதி அதை |
| 350 | 2 | செய்யா |

## கிஷ்கிந்தா காண்டம்

| | | |
|---|---|---|
| 354 | 1 | தொழில் மும்மை ஆனவும் |
| | 2 | எவைக்குமாம் முதலும் |
| | 3 | இயங்க |
| | 4 | வாயுளான் உணர்வுதாயினன் |
| 355 | 4 | தாழ்வபோல் |
| 358 | 4 | என்றான் |
| 362 | 3 | நின் |
| 364 | 4 | கண்ணகன் |
| 365 | 4 | வந்தான் |
| 366 | 1 | மைந்தனும் |
| 367 | 1 | அரக்கன் அங்கு |

| செய்யுள் எண் | அடி | திருத்தம் |
|---|---|---|
| 367 | 4 | நெடியவன் |
| 368 | 2 | வீரன் |
| 369 | 1 | கொண்டதென்ன, எப்பொருளும் |
| 371 | 1 | நங்கையை |
| | 2 | இன்பமே எய்திற்று அன்றே |
| | 3 | இவனே |
| 373 | 2 | குரிசில, கண்ணும் |
| 375 | 4 | அம்மா |
| 376 | 2 | ஏறி |
| 378 | 3 | புரக்கல் |
| 379 | 2 | என்று |
| | 3 | போக, தீர்தவின்றி |
| 380 | 2 | எம்மை |
| | 3 | எமக்கும், எமது, எம் |
| | 4 | நீ எம் |
| 381 | 2 | போர்த்தது, புளகிதம் |
| | 3 | வண்ணனுங்கு அருளிச் |
| 382 | 1 | அனுமனும் தடக்கைகூப்பி |
| | 3 | உம் |
| 384 | 2 | வாரம் நீங்கலாது இளவற்கு மண் அரசு |
| 385 | 1 | உதவ |
| | 2 | வில்லிடை |
| | 4 | எனப் |
| 390 | 2 | கலக்கிக்கடல் |
| | 3 | உலக்குவித்து |
| 391 | 2 | இற்றனன் முன்னைநாள் ஈடு இன்று |
| | 3 | பெருந்திறல் |
| 392 | 1 | ஆற்றலின் |
| | 2 | பாலரோ |

| செய்யுள் எண் | அடி | திருத்தம் |
|---|---|---|
| | 3 | கூற்றம் |
| | 4 | மாற்றலர் ஆகி |
| 398 | 2 | வேறு |
| 399 | 3 | போரினில் |
| 402 | 2 | இரண்டாய் |
| | 3 | அன்றோ |
| 403 | 2 | தமர்க்கும், மாயத்து |
| 404 | 2 | துறந்து நின்றான் என்றலால் |
| 405 | 1 | வெள்கிடும் |
| | 4 | உழந்து |
| 406 | 1 | என்பால் |
| | 2 | வாயான் |
| | 3 | மனுவிற் |
| | 4 | தோனறினால் |
| 407 | 2 | வருபெறறி யானை வானம் |
| | 3 | பொழிதர விம்முவான் என் |
| | 4 | ஏங்கினன் |
| 409 | 1 | நுங்கள் |
| 412 | 1 | களங்கமதாம் மறு |
| | 3 | சொல் |
| 413 | 2 | கோல், கொற்றமும் |
| 414 | 2 | தானும் பழுதுற |
| | 3 | நேரின் அனறி |
| | 4 | வில்த் தொழில் வந்ததே |
| 415 | 3 | வென்றி, இனைய விளம்பினான் |
| | 4 | வீரனும் தன் சொல் நிகழ்ததினான் |
| 416 | 4 | என்றுய்த்தான் |
| 417 | 3 | அன்றே |
| 418 | 1 | பரிதி |

| செய்யுள் எண் | அடி | திருத்தம் |
|---|---|---|
| | 3 | மலரின்றி |
| 419 | 1 | கால |
| | 3 | கிடந்த தென்னக் கிடந்த அவ்வாளி மீது |
| | 4 | மின் |
| 420 | 1 | எங்ஙன் |
| | 4 | வந்தனன் அஞ்சான் கூற்றம் வாளி என்று அறிந்திலன் கொல். |
| 421 | 2 | இனித் தவிர்ந்த |
| | 3 | மலையுடன் |
| 422 | 1 | ஆயின் தன்னின் |
| | 4 | இவன் கண்டாய்மைந்த |
| 424 | 2 | குரிசில்காண் |
| | 4 | மைந்தன் |
| 425 | 3 | ஏழின் ஏத்துற வாழ்ந்த |
| 426 | 2 | காண்கவோ |
| | 3 | உள் உறை |
| 427 | 1 | சிந்தையேன் |
| | 2 | மருவா |
| 429 | 1 | நெருக்கினல் |

## பாட்டு முதற்குறிப்பு அகராதி

முந்திய காண்டங்கள் போலவே இக்காண்டத்து முதற் குறிப்பகராதியும் எதுகை வரிசையில் அமைத்திருக்கிறது.

[ எண் - பக்க எண் ]


க்

அக்கணத 332
புக்கபின் 143
ஆக்கினேன 255
னாக்கி 164
பாக்கியத் 401
வாக்கிற் 174
நோக்கினன் 451
கைக்கொடு 471

க

கைகளால 151
புகல்புகுங் 18
வைகலும் 104
ஆகக்கொங்கை 155
பாகத்தில் 297
யோகம்உறு 28

கி

ஏகிஇனிது 57
ஏகினன் 384
போகின்றேன் 339

கை

தோகையும் 347

ங்

அங்கரக்கர் 192
இங்கிவ் 254
செங்கண்எரி 235
தங்கையும் 265
பங்கயச் 115
பொங்குவெங் 406
மங்கையர் 261
ஏங்குவாள் 382
ஓங்குமரன் 55
ஓங்குயர் 65
தாங்கிகின்ற 247
தூங்கலின் 349
வாங்கி 189

ச்

கச்சும்வாளும் 216
வச்சையாம் 219

ச

ஈசன் 361
மூசரவு 32
வாசத்தாரவன் 486

சை

திசையுறு 262
நசையாலே 169
ஆசைநீளத் 325

ஞ்

அஞ்சிய 139
அஞ்சிறை 388
துஞ்சுவ 338
பஞ்சணை 387
வஞ்சனைக் 156
வஞ்சனையால் 402
வஞ்சியை 389
வெஞ்சுற்றம் 307
மஞ்செனத் 429

ட்

நெட்டிலைச் 323
கேட்டனன் உரை 179
கேட்டனென் 857
விட்டிவான் 62

ட

அடங்கவில் 232
நடந்தனர் 59
மடலுள் 394
தாடகைக் 147
சடருடை 514

டி

பிடித்துகல் 330
ம்டித்தபில 278
முடிப்பென் 241
விடியல் 159
ஓடிவந்தனன் 393

டு

அடுத்தன 311
கொடுத்த 244

கடுங்கரன் 217
விடுதேர் 335
காடுதுன்றி 195

டை

இடைந்து 332
தடைக்கரும் 407
முடையுடை 266

ண்

எண்தகும் 106
எண்மையார் 331
கண்டனன் 40
கண்டனன் என்ப 449
கண்டுஒருகை 28
கண்டுநின்று 243
கண்டுநோக்கி 178
தண்டக 48
துனஎனும் 302
தெண்திரை 381
பணடயன் 7
பண்டவுணர் 26
பண்புற 188
பெண்தனி 409
மண்டிஓடினர் 217
மண்ணில் 177
விண்ணருள 119
விண்ணிடை 131
விணணிடைவெய்யவன் 383
விண்ணில்நீங்கி 252
விண்ணினில் 35
கண்ணுற்றான் 497
ஆண்டவன் 84
ஆண்டாயிடை 367
ஆண்டுற்ற 372
ஆண்டையான் 364
ஆணடையின் 353

ஆணடெழுந்து 461
ஆண் தகையர் 23
ஈண்டுறைதி 49
ஊண் இலனும் 348
கண்டகண் 515

ணி

நாணிலேன் 381

ணு

சேணுயர் 264

த்

அத்தலைத் 204
மூத்தம்ஒன்றி 253
வைத்தபின 513
ஏதினள் 854
ஏத்துவாயமை 188
புத்துறவு 290

த

மாதவத்து 15
வேதமும் 365

தா

பேதாய் 378

தி

அதிசயம் 405
மிதித்தது 318
ஓதிமம் 101
தீதில்வர 124
பேதியாதுயிர் 4
வேதியர்கள் 44

தை

உதைத்தவாளி 294
தாதைகூறலும் 93
பேதையர் 477

ந்

அந்தகனும் 230
இந்திரற்கு 360
இந்திரன் 16
இந்திரன்மேல 268
இந்நிலை 390
உந்தை 94
எந்தையே 516
எந்தாயநீ 526
எந்திரத் 246
ஐந்தும் 21
சிந்தையின் 107
தநதாதையரை 397
மந்திரத்து 316
முந்தொரு 60
வந்ததுசேனை 198
வந்திலர் 385
வந்துகார் 153
வந்துநோக் 160
காந்தர்ப்பம் 127
நாந்தக 274
வேநதன்விண் 91
வேந்தன்வீயவும் 19

ப்

இப்புவனம் 54
செப்புறற்கு 269
பூப்பொதி 344

பு

நூபுரமும் 118

ம்

இம்மலே 430
இம்மைக்கு 875
செம்புகாட்டிய 221
தம்பிதலே 229
தம்பியர் 484
வம்பிழை 410
வெம்புவேலேக் 188
மும்மைசால் 492

ம

காமன்என் 70
தாமரைக்கண் 345
தாமரைவன 337
தோமறு 346

மி

துமிலப் 186

ய்

நெய் அடை 522
காய் எரி 424
உய்ந்தனர் 39
உய்யாமல 874
உய்விடத்து 88
எய்தகாலமும் 226
எய்திய 14
செய்தனர்கள் 281
பொய்யாம் 309
வெய்யவன் 324
பொய்யிலா 465
ஆய்வரும்பெருவலி 9
ஆய்வரும்பெருவலி அரக்கர் 257
தூய்மைய 61
வாய்மையும் 499

ய

தயரதன் 356
ஆயகுழல் 98
ஆயபின் 412
புயல்தரும் 489
ஆயதோர் 455

யி

உயிர்த்திலன் 396
எயிறலேத்து 329
எயிறுடை 114
தயிர் உடைக்கும் 80
ஆயிடைஅமு 188
ஆயிடைஅன் 312
ஆயிடை 473
சேயிதழ் 350
தாயின் 89

ர்

யார் என 437
ஆர்த்தது 460
கார் இயன்ற 504
ஆர்தெழுந்த 250
தேர்அழிந்து 207
தேர்தந்த 299
பேர்உழைய 121
போர்ப்பெரும் 194
வார்ப்பொற 99

ர

அரக்கா 502
இரக்கமென் 14
முரணுடை 456
ஈரம் நீங்கிய 466
உரம்நெறிந்து 168
கரணியும் 304

தரங்களின் 109
பரக்களன் 3}4
தாரம் மற்று 506
பரவல் 78
புரந்தரன் 69
புரம்பற்றிய 376
மரங்கள் 190
மரன்படர் 199
வரம்அரக்கன் 249
வீரம் அன்று 503
ஆரவாழ்க்கை 222
மாரர் உள 283
வீரன்மேனி 154

ரா

தராவலய 284
விராவரும் 248

ரி

திரிசிரா 214
தெரிஞ்சுற 10
பெரிதுநன் 97
சூரியன் 438
பேரியோசை 193

ரு

அருணன்தன் 81
இருந்தமாக்கர 172
இருந்தவன் 355
இருப்பனேல் 340
இருவர் 175
இருமையும் 481
இருத்தி 485
உருளுடை 17
ஒருபகல் 306
கருமலை 72
செருக்கடை 51

தருவதுவிதி 302
செருவார் 525
நிருதர்தம் 129
நிருதாதியர் 371
பொருக்கென 267
உருத்தரன் 470
பொருதிறத் 184
பொருந்த 45
மருவினிய 85
வருகதேர் 181
வரும் இவள் 186

ரை

இறைக்தமறை 37
உரைத்தலும் 75
கரை அறு 271
வரைசேர் 524

ல்

அல்லல்உற் 380
நால் இயற்கை 505
இல்லறம் 491
இல்லாத 434
அல்லித்தாமரை 94
கல்லீரும் 171
நில் அடி 168
நலலன 447
மால்ப் பெரும் 469
வில் இயல் 103
வில் இழந்தனன 209
வில்ஒக்கும் 295

ல

உலகம் 467
விலக்கலை 474
குலவரை 518
பாலமை 519
அலங்கல் 256

உலகொரு 71
வலக்கை 247
குலம்வாள் 182

லை

அலைக்கும் 149
அலைவுறு 313
கலைஉவா 148
தலையின் 196
மலையே 370

வ்

அவ்வயின் 122
அவ்வழிஅணையன 359
அவ்வழி இளவல் 411
இவ்வழி 428
எவ்வழி 483

வ

எவன்செய 111
தேவர்ஆர்த் 227
தேவர்தான 92
தேவரும் 351
பூவராவு 220
போவதுபுரிவ 341
மூவகை 258

வி

காவியோ 157
கோவியல் 501
தாவியசர 205
பூவிலோன் 125

வெ

பூவெலாம் 150

ழ

தாழ்தலும் 442
தாழ்ப்படா 445
முழவினில் 270

ழி

அழிந்த 146
வழியும் 22
ஊழியெரி 288
ஊழிவெங் 156

ழு

அழுங்குநாள் 173
எழுந்தனர் 12
எழுந்துநின்று 180
எழுஎன 278
எழுவதோர் 82
தழுவினர் 77
விழுமியது 52
ஊழும்உள 289
வாழும்மறை 50

ழை

அழை 198
உழைத்த 326
உழைத்தவல் 479
குழையுறு 208

ள்

ஒள்ளிதுன் 187
கள்ள அமர் 240
கள்ளுடை 275
துள்ளியோங்கி 395
பிள்ளைச்சொல் 408
பிள்ளைபோல் 298
ஆள் இரண்டு 210

வெள்கிடும் 495
கோள் இரு 63
மாள்வதே 328

ள

மீளருஞ் 201

ளி

அளிக்கும் 152
ஒளிறுவேல் 191
வாளின்வனம் 238

ளு

தாளுடை 363

ளை

இளையவன் 342
உளைவுறு 352
வளைஎயிற் 140
தோளையே 296

ற்

அற்றதாளொடு 212
உற்றது 400
மற்றினி 459
உற்றுமிக்க 154
எற்றுவாம் 187
ஒற்றும் 165
கற்றைபஞ் 108
குற்றம்வீந்த 330
மாற்றம் அஃ 483
கொற்றவ 475
ஆற்றலின் 476
கொற்றம்அது 287
சொற்பங்கம் 64

நிற்பவர் 362
நெற்றிப்பிறை 310
பற்றுவான் 321
வெற்பிடை 348
வெற்றியர் 386
ஆற்றலோன் 404
ஊற்று 166
ஏற்றிநாண் 215
ஏற்றியநுதலி 208
மாற்றம் 327
ஏற்றபேர் 482

ற

மறங்கமுற் 76
நீறும் 527

றி

தறியின் 195
தேறினன் 452
பறித்த 489

று

இறுதியை 67
செறுத்துஇறு 287
ஆறுபுலன 282

ன்

அன்றியும் 206
அன்னது 20
இறைதிறம் 498
தன் அடி 523
என்ன இத் 511
அன்னவன் 440
அன்னதுகேட்டு 478
அன்றுபல 399
இன்னபோது 230
இன்னவள் 308

| | |
|---|---|
| மின்னுரு | 444 |
| என்தாரம் | 878 |
| என்வயின் | 294 |
| என்னுயிர்க்கு | 520 |
| என்றகம் | 448 |
| என்றசொல் | 90 |
| என்றமுனி | 47 |
| இளைய என்றவன் இய | 403 |
| என்றவன் இயம்பலும் | 834 |
| என்றவன் | 441 |
| என்ற அக் | 458 |
| நின்றபேர் | 483 |
| மூன்றுரு | 419 |
| என்றுகாணும் | 508 |
| துன்பினை | 426 |
| என்றனன் | 202 |
| என்றினைய | 276 |
| என்றுதானும் | 224 |
| என்றுரைசெயா | 292 |
| என்றுரைத்த | 87 |
| என்னலோடும் | 185 |
| என்னும் | 242 |
| என்னையே | 270 |
| ஒன்று | 176 |
| குன்றிடை | 820 |
| சென்றதேரை | 225 |
| தன்மானம் | 808 |
| தனனொடும் | 142 |
| நன்றுசொல்வி | 184 |
| நினறவனை | 42 |
| நினறனள் | 118 |
| நின்றிலன் | 145 |
| பின்னரும் | 96 |
| பின்னவன் | 879 |
| பொன்னைப் | 135 |
| முன்னவன் | 815 |
| வன்துணை | 378 |
| ஆன்றகாதல் | 158 |
| ஊன்சுட | 132 |
| மீன்கொண்டு | 800 |
| வான்தனில் | 112 |

ன

| | |
|---|---|
| அனகமா | 358 |
| எனப்பல | 73 |
| என நினைந்து | 454 |
| வனத்திடை | 366 |
| வினவிய | 74 |
| கானம்அதின் | 170 |
| போனவள் | 314 |

னு

| | |
|---|---|
| மேனுள் | [illegible]06 |
| வானுள் | 877 |
| இனிபதேர் | 13 |
| தனி இருந் | 161 |
| முனிவர்வந்து | 251 |
| முனிவரோடு | 128 |
| கானிடை | 279 |
| வானின்உயர் | 116 |

னை

| | |
|---|---|
| அனையர்ஆகிய | 218 |
| கனைவரு | 8 |
| வனைகழல் | 68 |


ஹிலால் பிரஸ், திருநெல்வேலி.—4–'54.

பொதிகைமலைப் பதிப்பு
திருக்குற்றாலம்